மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அரசு பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் 12, 13, 14 வருடங்கள் பணியாற்றியும், தலைமை ஆசிரியர் பதவி கிடைக்காமல் இருக்கிறார்கள். ஆனால் ஜில்லா போர்டு பள்ளிகளில் பணியாற்றியவர்கள் 5 ஆண்டுகளில் கூட தலைமை ஆசிரியராக வந்திருக்கிறார்கள். இவர்கள் இரு சாரரையும் இணைக்கும்போது அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத்தான் ப்ரமோஷன் வாய்ப்பு அதிகமாக இருக்கும். அவர்களுக்கு சர்வீஸ் அதிகமாக இருப்பதால். ஜில்லா போர்டு ஆசிரியர்கள் இதை விரும்பவில்லை. ஆகவே, இப்போது இருக்கின்றவர்கள் இப்படியே இருக்கட்டும் என்று விட்டு விட்டு, பின்னால் ஒரு காலகட்டத்தில் இருசாராரும் ஒன்றாக இணைவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இருப்பவர்களின் பணியை வேறுபடுத்திக்காட்டுவதற்காக "ஏ விங்" "பி விங்" என்று பிரித்து, இருவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் செய்யப்பட்டிருக்கிறது. பணிதான் வேறுபடுத்தப்பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் நடத்தப்படும் முறை ஒரே மாதிரியாகவே இருக்கிறது. இவர்கள் இருசாராரும் இப் பொழுதே கூட இணைந்துகொள்கிறோம் என்று சொல்வார்களே யானால், அதிலே அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளிலே, வேலை பார்த்த ஆசிரியர்கள் அரசாங்கப் பள்ளிக்கு மாறும்போது, அவர்களுடைய முந்திய பணி கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். சர்க்கார் பள்ளிகளிலே வேலை பார்க்கும் சர்வீசை தான் எடுத்துக் கொள்வதாகச் சொல்கிறார்கள். ஆகவே அவர்கள் மாறி வரும்போது, தனியார் பள்ளிகளில் வேலை செய்த பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன் தனியார் பள்ளி
களுடைய சம்மதத்தின்பேரில் அரசாங்கப் பள்ளிக்கு மாற்றமாகி வருவார்
களானால் அவர்களுடைய முந்திய பணி கணக்கிலேள் எடுத்துக்
கொள்ளப்படுகிறது. தனியார் பள்ளிகளிலிருந்து அவாக விலக்கப்
பட்டாலோ, அல்லது அவர்கள் ராஜிநாமா செய்து விட்டு வந்தாலோ
அந்தப் பணிக்காலத்தைச் சேர்த்துக் கொள்வதில்லை. தனியார் பள்ளிகளின்
ஒப்புதலோடு வருகிறவர்களுக்கு, அந்தப் பணிக்காலத்தையும் சேர்த்துக்
கொள்வதற்கு இப்போது விதிகள் இருக்கின்றன.

மு. ப. திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எ விங்
9-30. பி விங் என்று இருக்கிற இரண்டு பிரிவையும் ஒருங்கிணைப்பதற்கு
எதாவது காலகெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் எத்தனை
வருஷங்களில் இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு ஒன்றும்
காலக்கெடு வைக்கவில்லை. சொல்லப்பட்டிருக்கிற கணக்குப்படி பார்த்தால்,
இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்படுவதற்கு பத்துப்பனிரெண்டு ஆண்டுகள்
ஆகலாம். இந்த இரண்டு பிரிவு ஆசிரியர்களிலும் சிலர் உடனடி
யாக ஒருங்கிணைக்க வேண்டும் என்கிறார்கள். சிலர் கூடாது என்கிறார்
கள். ஆகவே இந்த இரண்டு பிரிவினரும் சேர்ந்து உட்கார்ந்து
ஆதியில் சர்வீசில் சேர்ந்த தேதிப்படி சீனியாரிடி அமைத்துக்
கொள்ள ஒருமித்த கருத்துக்கு வருவார்களானால் அரசாங்கத்தைப்
பொறுத்தவரை அந்த இரண்டு பிரிவுகளையும் உடனடியாக ஒருங்
கிணைத்துவிடுவதில் ஆட்சேபணை இல்லை. அதை அந்த ஆசிரியர்
களிடமும் சொல்லியிருக்கிறோம். இதனால் அரசாங்கத்திற்குச்சில
சங்கடங்கள் கூடக் குறையும்.

*Books on elective subjects in Telugu.*

* 85 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the Government have made any arrangements for publishing Text Books for Elective subjects in Telugu for the use of Telugu students in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தெலுங்கு மொழியில்
விருப்பப்பாடங்களை (10, 11 வகுப்புகளில்) பயில்வோர் எண்ணிக்கை
மிகக் குறைவே. அவர்களுக்கு அப்பாடங்களுக்கான பாடங்கள்
தெலுங்கு மொழியில் கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகள்
ஆய்வு செய்யப்பட்டுள்ளன, செய்தபின், தற்போதைக்கு எந்த
நடவடிக்கையும் எடுக்க இயலாது என்று தெரிகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, for want of text-books for electives in Telugu there is no uniform teaching in schools. There are 15 or 16 schools in Hosur and Denkanikotta taluks and each teacher





is following his own way. Some are teaching in English and some others are teaching in Telugu. The medium of instruction is Telugu. The number of failures in electives is increasing and I represented the matter to the Hon. Minister one year ago. So may I know whether the Government will take steps to see that books are printed at least this year and boys are helped ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இங்கே 77 மாணவர்
கள், 95 மாணவர்கள், 136 மாணவர்கள் என்று எலெக்டிவ்ஸ்
எடுத்துப் படிக்கிறார்கள். இவர்களுக்கு என்று புத்தகம் அச்சிடுவது
என்றால் அது கட்டுப்படியாகக் கூடியதாக இருக்காது என்று குறிப்பிட்டி
ருக்கிறார்கள். ஆகவேதான் ஆந்திரா மாநிலத்தில் விருப்பப்
பாடங்களுக்கு என்று அங்கே என்ன புத்தகங்கள் வைத்திருக்கிறார்
களோ அந்தப் புத்தகங்களையே இங்கும் வைக்கலாமா என்பது
பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Andhra Government have not produced books in this subject and therefore we are not able to get any text-books from that area. Even though the number is small, in the interest of the boys, will the Government take up this work and help the boys ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆந்திர மாநிலத்தில்
வெளியிடப்படுகிற புத்தகங்களைப் பரிசீலனை செய்து பார்த்து நமக்குத்
தேவையான புத்தகங்கள் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்படுமானால்
வேறு எந்த வகையில் அது ஈடு செய்யப்படலாம் என்பதுபற்றி ஆராயப்
படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, even though the number is small, the boys suffer a lot for want of Telugu books. No book from the Andhra Government is available. So, may I know whether a separate Committee would be formed for this purpose and whether the Government would do something about it ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே
அங்கே கிடைக்கலாம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. கிடைக்க
வில்லை என்றால் வேறு எந்த வகையில் ஈடு செய்துகொள்ளலாம்
என்பதுபற்றி ஆராயப்படும். தமிழ்நாடு புத்தக வளர்ச்சி கழகத்தோடு
கலந்து கல்வித்துறையினர் இதுபற்றி ஒரு முடிவு எடுப்பார்கள்.

திரு கா. வேழவேந்தன் : இந்த நிலைமைக்கு மாறாக தமிழக எல்லை
யோரப் பகுதியில் உள்ளவர்கள் எல்லாம் வேலைவாய்ப்பை நாடி தமிழ்
எடுத்துப் படித்து வருகிறார்கள். இதனால் தெலுங்கு ஆசிரியர்களுக்கு
வேலை இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இருக்கிற நிலைமைக்கேற்ப
தெலுங்கு ஆசிரியர்கள் தமிழ் பயின்று தமிழ் சொல்லிக் கொடுக்க முன்
வந்தால் அவர்களுக்குத் தக்க பயிற்சி அளித்து அதற்கான வழிவகைகளை
ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

திரு ஆர் பொன்னப்ப நாடார் : கண்ணொளி மங்குவதற்கு சத்
துணவுக் குறைவு ஒரு காரணமாக இருக்கிறது என்றார்கள். சத்துணவுக்
குறைவைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் தீட்டியிருக்கிறதா
என்று அறிய விரும்புகிறேன். அப்படியிருந்தால் அதன் விவரத்தைத்
தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : கேர் நிறுவனத்தார் கொடுக்கிற
உதவியுடன் 10 வயது, 5 வயது, 3 வயது உடைய குழந்தைகளுக்குச் சத்து
உணவு வழங்கும் திட்டம் உள்ளது. அவர்களில் ஒரு பகுதி மாணவர்
களுக்குத்தான் இந்த உணவு கிடைக்கிறது. அந்தச் சத்து உணவும்
கூட

It is only to rectify the deficiency that is created in the natural
diet of the children"

என்கிற முறையில் அவர்கள் உண்கிற இயற்கையான உணவில் உள்ள
சத்துக் குறைவை கொஞ்சம் ஈடு செய்யக்கூடியதாக இருக்கிறதே தவிர
இதுவே நிறைவான உணவு அல்ல. எத்தகைய சத்து உணவு தேவை
என்பது பற்றிய பொது அறிவு பெரும்பாலானவர்களிடையே இல்லாத
ஒரு குறைபாடும் இருக்கிறது. அதற்காகத்தான் மதுரை டாக்டர் வெங்கட
சாமி அவர்கள் ஆலோசனையில் குழந்தைகளுக்கு எத்தகைய சத்து உணவு
வழங்கப்பட வேண்டும் என்கிற ஆலோசனையே மக்களுக்கு வழங்குவதற்
காக பயிற்சி கொடுக்கிற ஒரு திட்டமும் ஏற்பட்டு இருக்கிறது. பொது
மக்களும் எந்த அளவுக்கு இதில் நல்ல அறிவும், அனுபவமும் பெற்றுத்
தெளிவு அடைகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் இந்தத் திட்டம்
வெற்றிபெற முடியும்.

*Specialists for taluk hospitals.*

* 87Q.— THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the
Minister for Public Health be pleased to state whether steps have
been taken for the appointment of eye specilists and E. N. T. specialists
in the taluk Headquarters Hospitals in this State ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இச்சிறப்புப்
பிரிவுகளை மாவட்ட, வட்ட, வட்டமல்லாத மருத்துவ மனைகளில் மூன்று
காலகட்டங்களில் திறக்கும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில்
உள்ளது. முதலில் மாவட்ட மருத்துவமனைகளும் பிறகு வட்ட மருத்துவ
மனைகளும் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.



திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை
எப்பொழுது அமுல் செய்ய உத்தேசம் என்று கனம் அமைச்சர் அவர்கள்
அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது பொதுவான கேள்வி.
எந்தத் திட்டமும் படிப்படியாகத்தான் அமுல் செய்யப்படும். இது
பொதுவான பதில்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, வட்ட மருத்துவ மனைகளில்
கூட இப்பொழுது எக்ஸ்ரே பிரிவு இல்லாமல் இருக்கிறது. அந்தக்
குறையைத் தீர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி ஈ.என்.டி.
ஸ்பெஷலிஸ்ட்ஸ் பற்றியது ; காது, மூக்கு, தொண்டை பற்றியது. ஆனால்,
எக்ஸ்-ரே பிரிவு ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் இதேபோல் திட்டம்
தீட்டி இருக்கிறது. வருகிற ஆண்டிலே கூட, 3, 4 வட்ட மருத்துவ
மனைகளிலும் வேறு சில மருத்துவ மனைகளிலும் இப்பிரிவை ஏற்படுத்து
வதற்குத் திட்டம் இடப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ
மனைகளிலே மாவட்டம், வட்டம் என்ற முறையில் திட்டத்தை அமுலுக்குக்
கொண்டு வரவிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை
விட எந்த எந்தப் பகுதியிலே இந்த நோய்கள் அதிகமாக இருக்கின்றன
வோ அந்த அந்தப் பகுதியிலே ஆராய்ந்து அந்தப் பகுதிகளுக்கு
முதன்மை அளிப்பதற்கு ஆலோசனை செய்வார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த
காது, மூக்கு, தொண்டைப் பகுதி (ஈ. என்.டி.) நோய் அங்கிங்கெனாதபடி
எங்கும் நிறைந்து பரவி இருக்கிற ஒன்றாகும். இது எல்லா இடத்திலும்
எதிர்பார்க்கக்கூடிய நோயேயாகும்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, ஈ.என்.டி. ஸ்பெஷல்
டாக்டர்களை நியமனம் செய்யும்போது கூடவே, சிகிச்சைக்குத் தேவையான
நவீன கருவிகளையும், நல்ல மருந்துகளையும் மருத்துவ மனைகளுக்கு
வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப்
பிரிவுகளை ஏற்படுத்துகிறபொழுதே அதற்குத் தேவையான கருவிகள்,
மருந்துகள் இவைகளையும் சேர்த்துக் கொடுப்பதன்மூலம்தான் திட்டம்
நிறைவு பெறும். வெறும் டாக்டர்களை மட்டும் நியமிக்காமல், படிப்
படியாக ஏற்பாடுகளைச் செய்து மாவட்ட மருத்துவ மனைகளிலே அதற்கான
இடம் அமைத்து, கருவிகள் அமைத்து, டாக்டர்கள் இடம் பெறாத
இடத்திலே இடம் பெறச் செய்து, அப்படி வரிசையாகவே செய்யப்படும்.

## Regional Family Planning Training Centre, Egmore

* 88—Q. THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state the total expenditure on the running of the Regional Family Planning Training Centre at Egmore, Madras ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 1—3—1966 முதல் 1972 அக்டோபர் முடிய ரூ. 8,54,894.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இந்த பயிற்சி முகாம் எந்த முறையிலே நடத்தப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நாடு முழு வதும் குடும்பநலத் திட்டம் நல்ல முறையிலே நிறைவேற்றப்படுவதற்கு டாக்டர்களாக உள்ளவர்களும் அதிலே குறிப்பாக பெண்மணிகளும், செவிலி யர்களாக உள்ளவர்களும், மக்களிடத்திலே இந்த குடும்பநலத் திட்டத்தை எடுத்துச் சொல்லி மக்களை இதிலே ஈடுபடுத்துகிறவகையில் பணியாற்ற, இந்தத் துறையிலே சில பயிற்சி பெறவேண்டியிருக்கிறது. இந்தப் பயிற்சி அளிக்கிற குடும்பநலத்திட்டப் பயிற்சி நிலையத்தில் ஆண்டுதோறும் 100-க்கு மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதற்கான செலவை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு த. சோனையா : தலைவர் அவர்களே, குடும்பநலத் திட்டத்தில் பெண்களுக்குக் கருப்பப் பையை மாற்றி விடுகிறார்கள். உலகத்தில் விஞ்ஞானம் எவ்வளவோ அளவுக்கு வளர்ந்திருக்கிறது. எனவே, இதே போல், உணவுப் பஞ்சத்தைப் போக்குகின்ற முறையில் உணவுப் பையை மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் அந்தச் சோதனைக்குத் தயாராக இருந்தால் தமிழ்நாடு டாக்டர்களைக் கொண்டு முயற்சி செய்யலாம்.

## உணவுப் பொருட்களில் கலப்படத்தினைக் கண்டுபிடிக்க நிறுவனங்கள்

* 89—வினா : திரு என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

தமிழகத்தில் உணவுப் பொருட்களில் கலப்படத்தினைக் கண்டு பிடிக்க தற்போது எங்கெங்கு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன ?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் ;—தலைவர் அவர்களே, சென்னையி லுள்ள கிண்டி, கிங் நிறுவனத்திலும், சென்னை மாநகராட்சியிலுள்ள ஒரு நிலையத்திலும் கோயமுத்தூரிலுள்ள தலைமை நல்வாழ்வு ஆய்வுக் கூடத்திலும் 1954-ம் ஆண்டு உணவுப் பொருள் கலப்பட தடைச் சட்டத்தின்கீழ் உணவுப் பொருள் மாதிரிகளை பகுப்பாய்வு செய்யும் ஆய்வுக் கூடங்கள் உள்ளன.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, உணவுப் பொருள் களிலும் மருந்து வகைகளிலும் கலப்படம் செய்வது வியாபாரக் கலையிலே ஒன்றாகிவிட்டது. அரிசியைப் போல் கற்களைச் செய்யவும், சர்க்கரையிலே மணலைக் கலக்கவும், கடுகு, மிளகு போன்றவைகளைப் போன்று களி மண்ணிலே செய்வதற்கும் மஞ்சளிலே ஈயத்தைக் கலப்பதற்கும், இப் பொழுது புதிதாக மிஷின்களைக் கண்டுபிடித்து, அதுவும் தென் மாவட் டத்திலே ஓரிடத்திலே இது தீவிரமாக நடைபெறுவதாக அறிகிறோம். பண்டித ஜவகர்லால் நேரு குறிப்பிட்ட மாதிரி, அப்படிப்பட்ட சண்டாளர்களை நடுரோட்டில் வைத்துச் சுடுவதற்கு இந்த அரசாங்கம் சட்டம் இயற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதல் கேள்விக்குப் பதில், பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுடைய மகள் தான் அப்படிப்பட்ட சட்டம் இயற்ற வேண்டும். இப்படிப்பட்டவர்களை நடுத்தெருவிலே வைத்துச் சுடுகிற சட்டத்தை அவர்கள் நிறைவேற்றினால், அதை எந்த அளவுக்கு அமுலாக்க வேண்டுமோ, அதில் ஒத்துழைக்க இந்த அரசு முயற்சிக்கும். அடுத்தது, ஒரு ஊரிலே இப்படி செய் கிறார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது பல ஊர்களிலே அப் படிச் செய்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். மூன்றாவது, நடுத்தர சில்லரை வியாபாரிகள் அவ்வாறுச் செய்வதில்லை. செல்வாக்கு பெற்றவர்கள் எந்தத் துறையிலேயும் தவறு செய்கிறார்கள். இப்படி செல்வாக்குப் பெற்றவர்களை அதிகாரிகள் சோதனை செய்யும்போது, அவை மறைக்கப்படுவதற்கு வழி இருக்கிறது. ஆகவே, அவற்றைப் பொது மக்களும் சேர்ந்து கண்டுபிடித்து ஒப்படைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, கலப்படம் பல பொருள் களிலே இருக்கிறது. குறிப்பாக, பாலில் தண்ணீர் கலப்பவர்கள்தான் பெரிய அளவிலே தண்டிக்கப்படுகிறார்கள். மற்ற அளவிலே சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். பெரிய கம்பெனிகளை நடத்துகிறவர்கள் சிறிய விற்பனையாளர்களுக்கு கொடுக்கிறார்கள், ஆனால் தண்டனை அடைவது சிறிய விற்பனையாளர்கள். ஆகவே, பெரிய கம்பெனிகள், பெரிய முதலாளிகள் இருக்கிற இடங்களிலேயே சோதனை செய்து அவற் றைத் தடுக்க அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அவர்களிடம் இருந்து விண்ணப்பம் வந்தால் கல்வித்துறை இதுபற்றி ஆராயும்.

(திரு நா. வீராசாமி தலைமை)

*Advisory Committee for Eye Camp Fund.*

* 86*Q*.— THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of the compostion of the panel set up to administer the 'Eye Camp Fund' in this State ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் "முதல்வர் கண் சிகிச்சை முகாம் நிதி"யைப் பராமரிக்க ஆலோசனைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அவ்வாலோசனைக் குழுவிலிருக்கும் அரசு அலுவலர்கள் மற்றும் அரசு சார்பற்றவர்கள் பின்வருமாறு :—

1 மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—தலைவர்.

2 திரு எம். ஏ. எம். ராமசாமி, ஷெரீப், சென்னை—உறுப்பினர்.

3 திரு எஸ். முத்து, மதுரை நகரத் தந்தை—உறுப்பினர்.

4 திரு என். மகாலிங்கம், தொழிலதிபர், பொள்ளாச்சி—உறுப்பினர்.

5 திரு ஏ. ஆர். ராமசாமி, கும்பகோணம்—உறுப்பினர்.

6 செயலர் மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை—உறுப்பினர்.

7 இயக்குநர், மருத்துவக் கல்வித்துறை—உறுப்பினர்.

8 இயக்குநர், மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை—உறுப்பினர்.

9 துணைச் செயலாளர், நிதித்துறை,—உறுப்பினரும் பொருளாளரும்.

10 துணைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை, செயலர்—உறுப்பினர்.

திரு வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, கண் ஒளி பெற வேண்டியவர்கள் தமிழகத்தில் பத்து லட்சம் பேர் இருக்கிறார்கள் என்பது வரையறுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு எல்லாம் கண்ணொளி வழங்கு கிற திட்டம் எத்தனை ஆண்டுகளில் இந்த அரசினால் பூர்த்தி செய்யப் படும்? இதற்கு ஏராளமாகச் செலவாவதனால் மத்திய சர்க்காரிடம் இருந்தும் இதற்கான உதவியைப் பெற நமது அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?



மாண்புமிகு திரு க. அன்பழகன் : தமிழகத்தில் 6 லட்சம் பேர் இரண்டு கண்களிலும் மங்கிய ஒளி உடையவர்களாகவும், 4 லட்சம் பேர் ஒரு கண் மங்கிய ஒளி உடையவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதாக ஒரு புள்ளி விவரம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ ஒரு லட்சம் பேர்களுக்கு கண்ணொளி வழங்கப்படுகிறது என்றாலும் இவர்கள் அத்தனை பேர்களுக்கும் கண்ணொளி வழங்க ஒரு பத்தாண்டுக் காலமாவது ஆகக்கூடும். புதியதாக ஆண்டு ஒன்றுக்கு பல ஆயிரம் பேர்களாவது கண்ணொளி மங்கிய நிலையில் இந்தப் பட்டியலில் வந்து சேர்ந்துகொள்ள நேரும். ஆகவே இந்தத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துகிற பெரு முயற்சியின் காரணமாக, பொதுமக்கள் பெறவேண்டிய அறிவையும், அனுபவத்தையும் பெறச் செய்வதன் மூலமாகவே ஐந்தாண்டு, எட்டாண்டுக்குள் இந்தத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்திவிட முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் உலகத்திலேயே ஏறத்தாழ பத்து சதவிகிதத்தினர்கள் போதுமான சத்து உணவு இல்லாத காரணத்தினால் கண்ணொளி பாதிக்கப்பட்டவர்களாகிறார்கள் என்றும், வயதின் காரணமாக காட்டராக்ட் காரணமாக கண்ணொளி இழந்தவர்கள், கண்ணிழந்தவர்களில் பாதிப்பேர் இருக்கிறார்கள் என்றும் புள்ளிவிவரம் தருகிறது. நம்முடைய பெரு முயற்சியின் காரணமாக பத்துப் பேர்களில் 2 பேர்களுக்காவது கண் பார்வையை மீண்டும் பெற நிச்சயமாக வசதி ஏற்படும்.

திரு ஜே. ஜேம்ஸ் : கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு நிதி வசூல் செய்வதில் முறைகேடான போக்கு இருக்கிறது. முறைகேடு இல்லாத முறையில் நிதி வசூல் செய்ய.......

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எதை எடுத்தாலும் முறைகேடு என்று பேசுவது முறைகேடான பேச்சாகும். இதிலே எது முறைகேடு என்பதை குறிப்பிட்டுத் தெரிவிக்க வேண்டும். முறைகேடு என்று பொதுவாகச் சொல்வதனால் பயன் இல்லை. குறிப்பிட்ட முறைகேடு இன்னது என்று அவருக்குத் தெரிந்திருந்தால், அதைச் சொல்லாமல் மறைத்த குற்றத்திற்கும் ஆளாகி அதை வெளியிடத் தவறிவிட்டவரும் ஆவார். எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் யாரும் தாமே வலிய வந்து உதவி செய்வது கிடையாது. கோயில் திருப்பணியாகட்டும், மற்ற வேறு எந்த நல்ல காரியங்கள் ஆகட்டும், போய்க் கேட்டேதான் நிதி திரட்ட வேண்டியிருக்கிறது. கேட்பவர்களுக்குக் கொடுத்துவிட்டு, பிறகு கொடுத்தேன், கொடுத்தேன் என்று சொல்லிக் கொள்ள விரும்பிக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். ஒரு நல்ல காரியத்திற்காக கேட்டுப் பெற வேண்டிய முயற்சியை உற்சாகப்படுத்தாது, முறைகேடு என்று குற்றம் சாட்டுவது மனிதாபிமானத்தையே சந்தேகிக்க வைப்பதாக இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு நா. வீராசாமி) கேள்வி நேரத்தில் கேள்விதான் கேட்க வேண்டும். குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது என்று ஏற்கனவே பல தீர்ப்புகள் இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படி
மக்களிடத்திலே பண்டங்களை விற்கிற சிறு வியாபாரிகள் அந்தப் பண்டங்
களை விற்றவுடன் அந்த பண்டங்கள் பரிசோதனைக்கு வருகிற காரணத்தால்,
அவர்கள் கண்டுபிடிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் எந்த இடத்
திலே பண்டம் வாங்கினார்கள் என்று நிரூபித்துத் தீரவேண்டும். அப்
பொழுதுதான் பெரிய வியாபாரிகளைக் கண்டுபிடிக்க முடியும். இவர்கள்
விலை மலிவாக வாங்குவதற்காக கலப்படம் செய்த பொருள்களை வாங்கி
இருப்பினும், அதை விற்றவர்களை அதிகாரிகள் போய் சோதிக்கின்ற
நேரத்தில் நல்லவகையான பொருள்களை வைத்திருக்கிற இடத்தைக்
காண்பிக்கிறார்கள். ஆகவே, இதைக் கண்டுபிடிப்பது சற்றுக் கடினமாக
இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு இந்தக் கோரிக்கையைப் பற்றி
மேலும் ஏதேனும் செய்யவேண்டுமென்று நாங்கள் கோரி இருக்கிறோம்.
ஆனால் அவர்களால் சரியான முடிவு செய்ய முடியவில்லை. இதைப்
போக்க, சிறு வியாபாரிகள் தங்களுக்குள் சங்கம் வைத்துக்கொண்டு
கலப்படம் செய்யும் பெரு வணிகரின் பண்டங்களை வாங்கக் கூடாது
என்று பகிஷ்கரிக்க வேண்டும். அதற்கு அரசாங்கமும் பொது மக்களும்
ஒத்துழைக்க பல்வேறு வகையிலும் ஆதரவு தர முடியும் என்று தெரி
வித்துக்கொள்கிறேன். அப்படிச் சிறு வியாபாரிகள் சங்கம் அமைத்து
அதைத் தவிர்க்க வேண்டும். அடுத்து, பொருள்களை வாங்குபவர்கள்,
கன்ஸ்யூமர் கவுன்சில், வாங்குவோர் சங்கம் அமைத்து எந்த
எந்த வியாபாரிகளிடமிருந்து வாங்கக் கூடாது என்று அறிவித்து பகிஷ்
கரிக்க வேண்டும். வாங்குவோர் சங்கம் மூலமாக பொது மக்கள்
பொருள்களை வாங்கலாம். இப்படிப்பட்ட சங்கம் அமைக்க சட்டமன்ற
உறுப்பினர்கள் ஒவ்வொரு நகரிலேயும் உறுதுணையாக இருக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

## இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்

*66—வினா : திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலங்கையில் இருந்து 1970–71, 1971–72 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட இலங்கை பிரஜா உரிமையில்லாதவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களை குடியமர்த்த தமிழ்நாடு அரசு என்ன ஏற்பாடுகள் செய்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து :

(அ) 1) 1970–71 — .. 12,938 பேர்கள்.

(2) 1971–72 .. .. 29,396 பேர்கள்.



(இ) அகதிகள் வியாபாரம் தொடங்குவதற்குக் கடன் வழங்குதல் வேளாண்மை நிலங்களில் குடியேற்றுதல், தனியார் நிலங்களை வாங்கி வேளாண்மையை மேம்படுத்துவதற்கான கடன்கள், தொழிற்சாலைகளில் அகதிகளுக்குப் பயிற்சிவேலை வாய்ப்பு அளித்தல், சொந்தமாகத் தொழில் தொடங்குதல், தேயிலை, இரப்பர் தோட்டங்களில் அகதிகளைக் குடியமர்த்து தல் ஆகியவை குறித்து திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டு இந்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரு கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, ஏறத்தாழ 40,000 பேருக்கு மேல் வந்திருப்பதாகச் சொன்னார்கள். வந்திருப்பவர்களிலே எவ்வளவு பேர் இந்த அரசாங்கத்தினுடைய உதவியைப் பெற்று பலன் அடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கடன் கேட்கிறபொழுது நீண்ட காலதாமதம் ஆவதாகவும் மற்றும் பல அதிகார இடையூறுகள் ஏற்படுவ தாகவும் சொல்கிறார்கள். இதை இனியாவது போக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இதுவரையில் எத்தனை பேர் உதவி பெற்றிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் இல்லையென்றாலும் கேட்பவர்களுக்கு தகுதி படைத்தவர்களாக இருந்தால் உரிய முறையிலே பரிசீலனை செய்யப்பட்டு கொடுக்கப்படுகிறது. சிலர் அதைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பலர் அதை சரியான முறையிலே பயன்படுத்திக் கொள்வதில்லை. எத்தனை பேர் என்று தனிக்கேள்வி போட்டால் விளக்க மாக விவரம் தர முடியும்.

திரு கே. டி. கே. தங்கமணி : சார், சிலோனிலிருந்து வரக்கூடிய தமிழ் மக்கள் எல்லாம் இராமேஸ்வரம் துறைமுகத்திற்குத்தான் வரு கிறார்கள். வந்த இடத்திலேயே அவர்களுடைய விவரங்களைச் சேகரித்து யார் யாருக்கு உதவி செய்யமுடியும், முடியாது என்ற ஏற்பாட்டை இராமேஸ்வரம் தீவிலேயே செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்லா அகதிகளும் வந்து சேருகின்ற முகாம்களிலேயே தான் அவர்கள் என்ன என்ன தகுதிகள் படைத்தவர்கள் என்றெல்லாம் முடிவு செய்ததற்குப் பிறகுதான் அவர்கள் விரும்புகிற இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்பொழுது இலங்கையிலிருந்து வந்த அகதிகள் கடன் கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுத்தால், அந்த ரீபேட்ரியட்ஸ் லோன் அப்ளிகேஷனை பரிசீலனை செய்து மூன்று மாதம், அல்லது 6 மாதத்திற்குள் முடிவு தெரிவிக்க வேண்டுமென்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு [illegible] அரசாங்கம் முன்வருமா ? நீலகிரி தேயிலைத் தோட்டத்தில் [illegible]

களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக் கூடிய திட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்கு மேல் வேலை கொடுக்கக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்படுகிறதே, அந்த நிபந்தனையைத் தளர்த்தி வேலை வாய்ப்பை அதிகமாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாசில்தார்கள் மூலமாக அவற்றைப் பரிசீலனை செய்து கடன் கொடுக்கிறார்கள் கடன் வேண்டுவோர்கள் சான்றிதழ்கள் தயாரித்துக் கொடுப்பதிலே தகராறுகள் ஏற்படுகின்றன. இலங்கையிலிருந்தோ அல்லது பர்மாவிலிருந்தோ வரக்கூடியவர்கள் சான்றிதழ்களைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதனால் காலதாமதம் ஏற்படலாம். மேலும் சிலர் தாங்கள் வந்தபிறகு ஒரு நிதியுதவியைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இரண்டாவது நிதியுதவியைப் பெறுவதற்கு விண்ணப்பித்தாலும் முன்னாலேயே தாங்கள் பெற்ற நிதியுதவிக்கான சான்றிதழ்களைத் தராமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையினால்தான் தாமதம் ஏற்படலாமே தவிர அலுவலகங்களிலே எந்தவிதமான தாமதமும் இல்லை. தேயிலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்புபற்றி, அடுத்த கேள்விக்கு நான் விரிவாகப் பதில் சொல்ல இருக்கிறேன். குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்குத்தான் வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலேதான் மத்திய அரசு கொடுத்த அந்த திட்டத்தின் அடிப்படையிலேதான் செய்து வருகிறோம். எனவே அதிலே நாம் எந்தவிதமான மாறுதலையும் செய்யமுடியாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்கிறபோது புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். சிலோனிலிருந்து அதில் இந்தியாவிலும் வந்து குடியமர்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள் என்று மத்திய அரசாங்கம் எதாவது புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறதா ? அவர்களைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் நம்முடைய அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, அவர்களைப் பல்வேறு மாநிலங்களிலே குடியமர்த்தி புனர்வாழ்வு கொடுத்தாலும், நம்முடைய மாநிலமே அவர்களைப் பொறுப்பாகக் கவனிக்க தயாராக இருக்கிறதா ? ஏன் என்றால் புகார்கள் வந்திருக்கின்றன. சில மாநிலங்களில் சரியாக அவர்களையெல்லாம் கவனிக்கவில்லையென்று நான் ஏற்கனவே கூட சொன்னேன். எனவே நம்முடைய இந்த அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வருகிறவர்களை எப்படி எப்படிக் கவனிக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கம் திட்டம் கொடுத்திருக்கின்றதோ அந்த அடிப்படையிலேதான் கவனித்து வருகிறோம். அந்த வகையிலேதான் அவர்களைக் குடியமர்த்துகிற பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக ஆகும் செலவுகளை எல்லாம் மத்திய அரசு மானியமாகவும், கடனாகவும் வழங்குகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஆயிரக் கணக்கிலே இலங்கையிலேயிருந்து வருகிற அகதிகளை அந்தமான் தீவிலே குடியேற்றவேண்டும் என்று ஒரு நோக்கம் இருந்ததே. இப்பொழுது



அங்கே சில தீவுகளை சர்வே செய்யப்படாமல் இருக்கின்றன. இப்பொழுது ஒரு தமிழர் அந்தமான் தீவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் மத்திய அரசிலே அமைச்சராக இருக்கிறார். இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அகதிகளை அந்தமான் தீவிலே குடியமர்த்த மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படித்தான் மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதியிருக்கிறது. அந்தமான் தீவு என்றாலே கைதிகளை அனுப்புகிற இடம் என்று அகதிகள்கூடத் தெரிந்துகொண்டு இருக்கிறார்கள். அங்கே செல்வதற்கு எத்தனை பேர்கள் விரும்புகிறார்கள் என்று கேட்டு மத்திய அரசு எழுதியிருக்கிறது. நாம் புள்ளிவிவரங்களைத் தயார் செய்துகொண்டிருக்கிறோம்.

• 67. வினா திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலங்கையிலிருந்து தமிழகம் திரும்பும் அகதிகளை குடியமர்த்துவதற்காக நீலகிரி மாவட்டத்தின் சில பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளை குடியமர்த்திப் புது வாழ்வு அளிக்கும் பொருட்டு, நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், குன்னூர் வட்டங்களில் 3,750 எக்கர் பரப்பில் தேயிலைத் தோட்டம் வளர்ப்பதற்காகப் பெரும் திட்டம் ஒன்று இவ்வரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியிலே இலங்கையிலிருந்து வருகிறவர்களைக் குடியமர்த்துகிறார்கள். அதைப் போலவே தாளவாடிப் பகுதியிலும் பர்கூர் பகுதியில், மைசூர் பகுதியின் எல்லைப் பகுதியிலே டீ, காபி வளரக்கூடிய சீதோஷ்ணஸ்திதி இருக்கின்றது. எனவே அங்கே டீ, காபி தோட்டங்களை உண்டாக்குகிற சூழ்நிலையை ஏற்படுத்தி அவர்களை அங்கேயும் குடியமர்த்துவதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுவரையிலும் கடலூர் பகுதியில், குன்னூர் பகுதியில்தான் தேயிலைத் தோட்டங்களை ஏற்படுத்தி வேலைவாய்ப்புக் கொடுத்து வருகிறோம். அப்படிப்பட்ட திட்டத்தைத்தான் மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. 3,750 எக்கர் அளவுக்கு தேயிலைத் தோட்டம் ஏற்படுத்தி வேலைகொடுக்க ஏற்பாடு இருந்தாலும், இதுவரையிலும் 848.33 எக்கர் வரையில்தான் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இன்னும் ஆயிரக்கணக்கான எக்கர்கள் இருக்கின்றன. எனவே இவற்றை முறையாக நாம் ஒழுங்குபடுத்தி, வருகிற அகதிகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கலாம். வேறு திட்டங்களை எடுத்துக்கொள்ளும் உத்தேசம் இப்பொழுது இல்லை.

திரு மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் மக்களுக்கு நல்வாழ்வு கொடுப்பதற்கு அரசுத் துறையிலே ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அந்தக் கமிட்டி கூட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒரு கமிட்டி அமைக்கப் பட்டு இருக்கிறது. எப்பொழுது கூடும் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. செ. கந்தப்பன்: துணைத் தலைவர் அவர்களே, இலங்கை யிலிருக்கின்ற தமிழர்களை இந்தியாவிற்கு ஏற்பதற்கு, இலங்கை—இந்தியா நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி அங்குள்ள மக்கள் இங்கு வராத நிலையில், இந்தியாவில் மிக நல்ல வாழ்வு பெற்றுத்தருகிறோம் என்று அங்கே இருக்கின்ற இந்தியத் தூதுவராலயத்தின் மூலம் கவர்ச்சியாகப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. அப்படி அவர்களுக்கு என்ன என்ன செய்வோம் என்று வாக்குறுதி அளித்தார்களோ அவற்றை நிறைவேற்றுகின்ற பொறுப்பு இந்திய அரசுக்கு உண்டு. எனவே வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற நிலையில் அப்படிப் பட்ட வாக்குறுதிகளைத் தரக்கூடாது என்று தமிழக அரசு இந்திய அரசை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தருகின்ற வாக்குறுதிகளை ஏற்றுக்கொண்டுதான் மத்திய அரசு மாநில அரசிடம் பொறுப்பை ஒப்படைக்கிறது. ஆனால் ஒப்பந்தத்தின்படி முழுமையாக அவர்கள் அங்கிருந்து வந்துசேரவில்லை. இப்பொழுது வருகிறார்கள், அப்பொழுது வருகிறார்கள் என்று தான் நிலைமை இருக்கிறதே தவிர இன்னும் முழுமையாக வந்து சேரவில்லை. வந்துவிடுவார்கள் என்று இலங்கை அரசும் அவ்வப்பொழுது அறிவித்துக்கொண்டிருக்கிறது. கவர்ச்சிகரமான திட்டங்கள் இல்லாத காரணத்தினாலேதான் இலங்கையிலிருந்து தாயகத் திற்குவர விரும்பவில்லை என்று கூறுவது அவ்வளவு சரியானதல்ல.

திரு கே. என். குமாரசாமி : இலங்கையிலிருந்து வருகிற அகதி களுக்கு இலங்கை அரசாங்கம் நஷ்டஈடு ஏதாவது கொடுக்கிறதா ? இது சம்பந்தமாக அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்தி நஷ்ட ஈடு பெற்று அதன்மூலம் அவர்களுக்கு ஒத்தாசை செய்வார்களா ? தனியாக அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடு செய்து புனர்வாழ்வு கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏறத்தாழ பத்தா யிரம் ரூபாய் வரையிலும் இந்திய கரன்ஸியாக அவர்கள் கொண்டு வரலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் பலர் அந்தத் தொகைகூட இல்லாத அளவுக்குத்தான் வந்திருக்கிறார்கள். எனவேதான் மத்திய அரசு கூறுகின்ற திட்டங் களையெல்லாம் மாநில அரசு செயல்படுத்திக்கொண்டு வருகிறது.



பெற்றவர்கள் அதைப் பயன்படுத்தி தங்களுடைய வாழ்க் கடன் செப்பனிட்டுக்கொள்ளாமல், வாங்கிய கடனைத் திருப்பிக் கையைச் தராமல் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. கூடத் அந்தக் கடனை மத்திய அரசும், மாநில அரசும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதப்பட்டு இருக்கிறது.

திரு ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, மற்ற நாட்டு மக்களின் உரிமைக்காக அதிகமாக வாதாடிய மத்திய அரசு இலங்கையிலிருந்து அதிகமாக வெளியேறுகிறவர்களைப்பற்றிச் சரிவர வாதாடாமல் இருக்கிறது. இந்த நிலையில் இனியாவது வற்புறுத்தி அவர்களை அங்கேயே குடியமர்த்திக்கொள்வதற்கு வற்புறுத்தவேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது முடிந்துபோன கதை. மறைந்த பிரதமர் சாஸ்திரி அவர்களும், இலங்கைப் பிரதம ராக இருந்த திருமதி பண்டாரநாயகா அவர்களும் ஏற்கனவே பேசி ஒப்பந்தம் வரையறுக்கப்பட்டது. அவர்கள் வர வேண்டியவர் கள்தான். இனிமேல் அவர்களை அங்கே வைப்பதைப்பற்றி புதிதாகப் பேச்சு ஆரம்பிக்க வழியில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், 3,750 ஏக்கர்களை அவர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்று திட்டமிருந்தும்கூட 800 ஏக்கர் கள்தான் இதுவரையில் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். மீதி இருப்பதையும் கொடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? நீல கிரியிலே குடிபுகும் அகதிகளுக்கு வீடு கட்டும் திட்டமிருக்கிறதா ? அங்கே குடியிருப்பவர்கள் இளப்பப்படுகிறார்கள் என்று புகார்கள் வரு கின்றனவே, அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இலங்கையிலிருந்து வந்து குடியமர்த்தப்பட்டவர்களில் இப்பொழுது யாரும் வெளியிலே அனுப்பப்படுவதாகப் புகார் எதுவும் வரவில்லை. அவர்களுக்கு ஒரு திட்டம் தீட்டி வனத்துறை பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. அதன்மூலம் எப்படிக் கடன் தருவது, இருக்கிற குறைபாடுகள் என்ன என்று தேயிலை வாரியத்தைப்பற்றியும் கலந்து ஆலோசித்து, தேயிலை வாரியம் தேயிலைப் பயிற்சியை எந்த அடிப்படையிலே அளிப்பது, பயிர் எப்படிச் செய்வது என்பதைப்பற்றியெல்லாம் வனத் துறை ஏற்றுச் செய்கிறது. இரண்டுக்கும் மத்திய அரசு தருவதை மாநில அரசு இந்தத் துறையின்மூலம் பெற்றுத் தருகிறது. இலங்கை யிலிருந்து வந்த இலங்கைத் தொழிலாளர்களை அரசோ, தனிப்பட்ட மற்றவர்களோ யாரையும் எந்த இடத்திலேயிருந்தும் வெளியே போகச் செய்யவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, சாஸ்திரி-பண்டாரநாயகா ஒப்பந்தத்தின்படி பல இந்தியர்கள் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப் படவேண்டுமென்ற அடிப்படையிலே இன்றைக்குத் திருப்பி அனுப்பப் படுகிருர்கள். சாஸ்திரி-பண்டாரநாயகா ஒப்பந்தத்தின் அடிப்படையில் பல இந்தியர்கள், குறிப்பாக பல தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுகிருர்கள். ஆனால் அப்படித் திருப்பி அனுப்பப்பட வேண்டுமென்று யார் யார் நிர்ணயிக்கப்பட்டார்களோ அவர்கள் தோட்டத் தொழிலில் திறமையுள்ளவர்களாகக் கருதப்பட்டு இலங்கை அரசினரே மறைமுகமாக அவர்கள் இங்கு வருவதைத் தடுக்கிருர்கள் என்று கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்டவர்களுக்குப் பிரஜா உரிமை தரவேண்டும் அல்லது உடனடி யாக அனுப்ப வேண்டும், அவர்களை இக்கட்டான நிலையில் வைக்கக் கூடாது என்று மத்திய அரசிடம் சொல்லி, இலங்கை அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் வற்புறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கிட்டத்தட்ட $5\frac{1}{4}$ இலட்சம் பேர் வர வேண்டுமென்று சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தில் முடிவெடுக் கப்பட்டது. கிட்டத்தட்ட 49,000 அல்லது 50,000 பேர்கள்தான் இதுவரையில் வந்திருக்கிருர்கள். அவர்கள் வரத்தான் வேண்டும். ஆனால் அவர்கள் வருவதற்கு இருக்கின்ற தாமதங்கள், தகராறுகள் இவைகளைத் திட்டவட்ட மாகச் சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போலப் பல புகார்கள் வந்திருக்கலாமே தவிர அரசுக்கு எந்தவிதமான புகாரும் வரவில்லை, இங்கே நாங்கள் பெறவில்லை. இங்கே குடியமர்த்த வேண்டிய முழுப்பொறுப்பையும் மாநில அரசு ஏற்றிருக்கிறது. முறையாகச் செய்கிறது. தேயிலைத் தோட்டம் 3,750 ஏக்கர் நிலங்களிலே 848·33 ஏக்கர் இதுவரையிலே பயிர் செய்ய ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் வரும்வரையிலே, யார் யார் இருக்க வேண்டுமோ, அந்தக் குடும்பத்திலே இரண்டு பேர்கள்தான் எடுத்துச் செல்ல முடிகிறது. வருகின்றவர்களின் விருப் பத்தை அறிந்து, 3,750 ஏக்கர்களில் 1,875 அகதிகள் குடும்பங்களுக்கு அந்த வேலையைத் தரலாம். வந்திருப்பவர்களில் யார் யார் வருகிருர் களோ அவர்களைத் தேர்ந்தெடுத்துத்தான் அனுப்புகிருேம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தைச் சிறிது நேரம் நீடித்துக் கொள்கிறேன். உறுப்பினர்கள் இதைக் கவனத்திற்கொண்டு துணைக் கேள்விகளைக் குறைத் துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## தீண்டாமை ஒழிப்பு.

*68 வினு : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில், 1971–72-ம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்பு தடைச் சட்டத்தின் கீழ் எத்தனை பேர்கள் மீது வழக்குத் தொடரப் பட்டது ?

(இ) அதில் சட்ட ரீதியாகத் தண்டிக்கப்பட்டவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர் ?



மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து :

(அ) 198.

(இ)

| | | |
|---|---|---|
| 1. | வட ஆற்காடு | 22 |
| 2. | தென் ஆற்காடு | 19 |
| 3. | தஞ்சாவூர் | 9 |
| 4. | திருச்சிராப்பள்ளி | 3 |
| 5. | மதுரை | 1 |
| 6. | ராமநாதபுரம் | 1 |
| 7. | திருநெல்வேலி | 30 |
| 8. | கோயம்புத்தூர் | 6 |

ஆக 91 வழக்குகள்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்தத் தீண்டாமை ஒழிப்பு பற்றிய இளைய பெருமாள் கமிஷனின் அறிக்கையை இந்த மாநிலத்திலே சரிவரப் பரிசீலிக்கவில்லை என்று அரசியல் கண்ணோட்டத்திலே பேசிக் கொண்டிருப்பதை அரசு அறியுமா ? அதற்கு அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : இதைப்பற்றி இளைய பெருமாள் கமிஷன் கொடுத்த அந்த சிபாரிசை அகில இந்தியாவிலேயே நமது மாநிலம்தான் அதனை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்டு தீண்டாமை ஒழிப்பிற்காக வாரியங்களை அமைத்து செயல்படுத்த முன்வந்திருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : இந்த வழக்குகள் என்னென்ன காரணங் களுக்காகப் போடப்பட்டிருக்கின்றன ? தீண்டாமையைப் போக்கும் நட வடிக்கையிலே அரசு ஆமை வேகத்திலேதான் செல்கிறது, முயல் வேகத் திலே செல்லவில்லை. கேரளத்திலேயும், கர்நாடகத்திலேயும்...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேரளம், கர்நாடகம் எல்லாம் வேண்டாம். நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். கேரளம், கர் நாடகத்தைப் பற்றியெல்லாம் விவாதித்துவிட்டு எப்பொழுது கேள்விக்கு வருவது.? நேரடியாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ். வடிவேல் : இப்படி ஒரு நிலைமை வந்து தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கையிலே துரிதமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. எந்தெந்த வழக்குகள், எந்தெந்த காரணங்களைக் கொண்டு போடப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தீண்டாமை என்பது டீக் கடைகள், ஹோட்டல்கள், சுடுகாட்டிலே புதைக்கின்ற இடம், இப்படிப்பட்ட இடங்களில் அரிசன மக்களை வரவிடாமல் செய்வதைத் தடுப்பதற்காக இந்தச் சட்டம் அமல்படுத்தப்படுகிறது. அதன்மூலம் வழக்குகள் தொடரப் பட்டு விசாரிக்கின்றபொழுது அதற்குச் சாட்சிகள் வரவேண்டும். சாட்சிகள் கிடைத்து, இந்தத் தீண்டாமை அனுஷ்டிக்கப்பட்டது என்று நிரூபிக்கப் பட்டபிறகு அவர்களுக்குத் தண்டனை தரப்படுகிறது. எத்தனையோ வழக்கு கள் வழக்குமன்றத்திற்குச் செல்வதற்கு முன்பே திருப்பப் பெறப்படு கின்றன. பல வழக்குகள் நீதிமன்றத்திற்குச் சென்றபிறகு போதுமான சாட்சிகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் தீர்ப்பு வழங்க முடியாமல் போகின்றன. எனவே வழக்கும் உறுதியாகி, சாட்சிகளும் ஒழுங்காகச் சொல்லப்பட்டு, குற்றம் நடந்ததாக நிரூபிக்கப்பட்ட சிலவற்றை நான் இப்பொழுது உங்கள் முன்பு சொன்னேன். பலவிடங்களில் நிரூபிக்கப்பட முடியாமல் விடுபட்டுப்போவதும் உண்டு.

திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, போலீஸ்துறையிலே ஒரு பிரிவை, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லிய குற்றத்திற்காக நம் முடைய தமிழக அரசு ஈடுபடுத்தி வருவதைப்போல் இந்திய உபகண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலாவது கையாளப்படுகிறதா ? அப்படியென்றால் எந்தெந்த மாநிலங்களில் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இது வரையிலும் நான் அறிந்தவரையில் சொல்கிறேன், நமது மாநிலம்தான் அந்தத் தனியான போலீஸ் ஸ்குவாடைப் போட்டிருக்கிறது. மற்ற மாநிலங் களில் அவர்கள் துறையிலே பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்று கருது கிறேன். நான் இதைப்பற்றி அவர்களிடம் சொல்லும்பொழுது அவர்கள் ஆச்சரியமாகக் கேட்கிறார்கள். இங்கே புதிதாகப் போட்டிருக்கிறோம் என்று உறுப்பினர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அறி வித்த வழக்குப் பதிவுகளில் நெல்லை மாவட்டத்தில்தான் மிகவும் அதிக மான வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இதன் காரண மாக, நெல்லை மாவட்டத்திலேதான் தீண்டாமை ஒழிப்பிற்கு விரோத மானவர்கள் இருக்கிறார்களா அல்லது நடவடிக்கை எடுப்பதிலே போலீசார் அங்கேதான் தீவிரம் காட்டியிருக்கிறார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்திலே 32 வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. 30 வழக்கு களில் தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. இதிலேயிருந்து குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலே போலீஸ் முறையாகச் செயல்படுகின்றது என்பது, * தெரிகிறது.

## House sites for Harijans

*90. Q.—Thiru N. K. PALANISwAMY : Will the Honourable the Minister for Harijan Welfare be pleased to state whether house sites have been provided for the Harijans in Ganapathipalayam, Vaduha-

**பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



palayam, Kasthuripalayam, Samiyarpalayam, Vamalaigoundenpalayam, Thottapalayam (Nadupatti), Thottiapalayam (Kakuthampalayam) in Uthukuli firka of Erode taluk ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

கணபதிப்பாளையம்—

4 (1) பிரிவின்கீழ் அறிவிப்பு ஏற்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6-ன் கீழ் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சி யரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

வடுகப்பாளையம்—

இவ்வூரில் இருக்கும் ஒரே ஒரு அரிசன காலனியில் இட நெருக்கடி இல்லாததாலும், போதுமான காலி இடம் இருப்பதாலும், தனியாக வேறு நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

கஸ்தூரிப்பாளையம்—

உரிமைப்பட்டயம் (tit'e deeds) விரைவில் வழங்கப்படும்.

சாமியார்பாளையம்—

இவ்வூரில் இருக்கும் அரிசனகாலனியில் வசிக்கும் அரிசனங் களுக்குப் போதுமான காலி இடம் இருப்பதால் தனியாக வேறு நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

வாமலைக்கவுண்டன்பாளையம்—

மாற்று இடத்திற்கு 4 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு மாவட்ட ஆட்சியரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

தொட்டப்பாளையம் (நடுப்பட்டியைச் சேர்ந்தது)—

4 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள பிரிவு 6-ன் கீழ் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரிட மிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

தொட்டியாப்பாளையம்—(காக்குத்தம்பாளையம்)

4 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு மாவட்ட ஆட்சியரிடமிருந்து எதிர் பார்க்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, மாவட்டவாரியாக அரிசனங்களுக்கு எங்கெங்கெல்லாம் வீடுகள் கட்டுவதற்கு இடம் கொடுக்கப் பட்டது என்பதை அரசு அறிக்கை ஒன்று முன் வைக்க வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனியான கேள்வி போட் டால் மாவட்டவாரியாக கணக்கெடுத்துக் கொடுக்கலாம்.

போனாலும் 5 செண்ட், 3 செண்ட் எனபதற்குப் பதிலாக 2 செண்ட்டாவது நல்ல இடத்தில் ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். இப்போது அந்தக் கஷ்டங்கள் ஏற்படவில்லை.

*92 வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், தோட்டக்குறிச்சியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்க வீட்டு மனை இன்றி சிரமப்படுவது உண்மையா ?

(இ) அவர்களுக்கு வீட்டு மனை வழங்க நிலம் எதாவது கையகப் படுத்தப்பட்டதா ?

(உ) ஆம் எனில், தடைப்பட்டதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) கரூர் தாலூகா புஞ்சை தோட்டாக்குறிச்சி கிராமத்தில், சுமார் 22 குடும்பங்கள் நெருக்கடியாக வும், ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒரே வீட்டில் வசிக்கும் நிலைமையி லும் வாழ்ந்து வருகின்றனர். மேலும், மழை காலங்களில் இங்கு குடியிருப்பது கொஞ்சம் சிரமமானதுதான்.

(இ) இக்குடும்பங்களுக்கு வீட்டு மனைகளை வழங்கும் பொருட்டு, கரூர் வட்டம், புஞ்சை தோட்டாக்குறிச்சி கிராமம் புல எண். 789/பில்ல 1. செ. 82 விஸ்தீர்ண புஞ்சை நிலத்தை, ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கான வரைவு விளம்பர அறிக்கை (Dr .ft notification) அரசு உத்தரவு எண் 1827, சமூக நலத்துறை, நாள் 17—9—1971-ல் அங்கீகாரம் செய்யப்பட்டு, 6—10—1971-ந் தேதிய தமிழ்நாடு அரசு கெஜட்டில் விளம்பர அறிக்கையும் பிரசுரமாகியுள்ளது.

(உ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் பொருட்டு, நில ஆர்ஜித நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டது. அதற்கான விரைவு விளம்பர அறிக்கை (Uraft notific :tion) அரசால் அங்கீ காரம் செய்யப்பட்டு, நில ஆர்ஜித சட்டங்களின்படி, நடவடிக்கையில் உள்ளது. இதில் மேலும் துரித நடவடிக்கையை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாவட்டாட்சியர் கட்டளையிட்டுள்ளார். பிரிவு 6 விளம்பரம் கிடைத்ததும் நடவடிக்கை எடுத்து அரசிதழில் வெளியிட வகை செய்யப் படும்.

*Surplus lands in Tamil Nadu.*

* 93 Q. :—Thiru N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Revenue be pleased to state :

(*a*) whether the Government of India have addressed this Government during 1972 on the quantum of land that would be rendered surplus with the enforcement of the new land ceiling laws ; and

(*b*) if so, the details of the reply sent to the Centre ?



The Honourable Thiru P. U. SHANMUGAM :

(*a*) Yes. The Government of India requested this Government by a telegram on 20th April 1972 to furnish particulars of ceiling surplus land available on 1st April 1971 and the extent of land distributed from April 1971 to date and the approximate number of beneficiaries and also the cumulative figures of land distributed.

(*b*) The following particulars were furnished to the Government of India.

| (1) | (2) ACRES. |
|---|---|
| 1. Surplus extent taken possession up to 1st April 1971 : | 22,375 |
| 2. Extent of lands assigned out of column (1) above up to 31st March 1971. | 18,342 |
| 3. Extent of lands assigned out of column (1) above during the period from 1st April 1971 to 31st March 1972. | 2,089 |
| 4. Cumulative total (i.e.) total extent assigned up to 31st March 1972. | 20,431 |
| 5. Extent available for assignment on 1st April 1972. | 118 |
| 6. Balance [item (1)— (items (4) (5)] .. .. | 1,826* |

(* This extent is covered by stay and pending notices preliminary to assignment).

திரு. என். கே. பழனிசாமி : 1961-ம் வருடம் உச்ச வரம்புச் சட்டம் ஏற்படுத்துகிற நேரத்தில் 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று விதிக்கப்பட்டு, பலரும் 30 ஸ்டாண்டர்டு எக்கராகப் பிரித்துக் கொண்டார்கள். இப்போது அதை 15 ஸ்டாண்டர்டு எக்கராகக் குறைத்ததால் கிட்டத்தட்ட 10,000 பட்டாதாரர்களிடமிருந்து ஒன்றரை லட்சம் எக்கர் மிச்சமாகக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் இங்கே கொடுக்கப்பட்ட கணக்கைப் பார்க்கும்போது குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் படித்தது பழைய சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நிலங்களின் அளவாகும். புதிய சட்டம் 1970-க்கு பிறகு, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நிலச் சீர்திருத்தத்தில் மாறுதல் செய்து கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 60,500 எக்கர் சர்ப்ளஸ் நிலம் கிடைக்குமென்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, முன் கேள்விக்கு விடை அளிக்கும்போது

* * *

என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்மிபுகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன நேரத்தில் [ * ] என்று சொன்னார்கள். அந்த வாசகத்தை சபையின் நடவடிக்கைக் குறிப் பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

*91 வினு திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

பென்னலூர்ப்பேட்டைத் துணை வட்டத்தில் உள்ள அரிசனக் காலனி களான (1) கன்னிகைப்பேர், (2) நெய்வேலி, (3) பெரியவண்ணன் குப்பம், (4) பாகல்மேடு, (5) ஆமிதாநல்லூர், (6) அன்னதான காக்க வாக்கம், (7) புன்னப்பாக்கம், (8) திருக்கண்டலம், (9) பூரிவாக்கம், (10) அழிஞ்சிவாக்கம் ஆகிய ஊர்களின் ஏழை அரிசன மக்களுக்கு வீட்டு மனைக்குரிய நிலங்களை ஆர்ஜிதம் செய்து அளிப்பதில் மேன்மேலும் கால தாமதம் ஏற்படுவதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அன்னதான காக்கவாக்கம் புன்னப்பாக்கம், திருக்கண்டலம், பூரிவாக்கம், அழிஞ்சிவாக்கம் முதலிய ஊர்களில் அரிசனங்களுக்கு விட்டுமனை வசதி அளிப்பதற்காக நிலத்தைக் கையகப்படுத்தும் குறிப்பேதும் இல்லை.

பெரிய வண்ணன்குப்பம் கிராமத்தில் அரிசனங்களுக்கு மார்ச்சு 1972-ல் பட்டாக்கள் கொடுக்கப்பட்டன. பாகல்மேடு கிராமத்தில் மார்ச்சு மாதத்தி லும், ஆமிதாநல்லூர் கிராமத்தில் ஜனவரி மாதத்திலும் அவார்டுகள் பாஸ் பண்ணப்பட்டிருக்கின்றன.

கன்னிகைப்பேர், நெய்வேலி கிராமங்களில் அரிசனங்களுக்கு நிலத்தை கையகப்படுத்துவதற்கான குறிப்புகள் திருவள்ளூர் அரிசன நல தாசில் தாரின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன் : அரிசன மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் கொடுக்கப்பட்டிருப்பதில் உரிய அதிகாரிகளுக்குக் கொடுக்கப் பட்ட பிறகும் அவை பரிசீலிக்கப்பட்டு அந்த இடத்தை இன்ஸ்பெக்ட் செய்து வேலைகள் நடைபெற போதிய அதிகாரிகள் இல்லை என்று கூறப்படு கிறது. அதனுல் ஆண்டுக் கணக்கில் பிரச்சினைகள் நீட்டிக்கப்படுகின்றன. ஆகவே, கிராமப் புறங்களில் இருக்கும் அரிசன மக்களுக்கு விரைவாக

[*] மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



வீட்டு மனை வழங்குவதற்கு வகை செய்யும் பொருட்டு ஒவ்வொரு வட்டத்திற்கும் அதிகமான அதிகாரிகளை நியமித்து வீட்டு மனை வழங்கும் திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : அதிகாரிகள் போதுமான அளவு இல்லாத காரணத்தால் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்ல முடியாது. நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது நிலச் சொந்தக்காரர்கள் தகராறு செய்வதன் காரணமாக, அதிகாரிகள் புள்ளி விவரங்களைச் சேகரிக்கும்போது உண்மையான புள்ளி விவரங்களைத்தர மறுப்பதன் காரணமாக பல தடைகள் ஏற்பட்டு தாமதம் ஏற்படுகிறதே தவிர, போது மான அதிகாரிகள் இல்லை என்ற நிலை இல்லை. அரிசனங்களுக்காக நில ஆர்ஜிதம் செய்வதற்காக தனித் தாசில்தாரே போடப்பட்டிருக்கிறார். அதிகாரிகள் போதுமான அளவு இல்லை என்று சொல்வது சரியல்ல.

திருமதி.த. ந. அனந்தநாயகி : அரிசனங்களுக்கு மனைகள் வழங் கப்பட்டும் பல ஆயிரக் கணக்கான மனைகளில் வீடுகட்டாமலே இருக்கிறார்கள். பல வருஷங்களாக இந்த நிலைமை இருக்கிறது. அந்த நிலங்களை ஒன்று வீடு கட்டுவதற்காவது பயன்படுத்த வேண்டும் அல்லது விவசாயத்திற்காவது மறுபடியும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதைச் செய்வதற்கு ஒரு கமிட்டி போட்டு இந்த நிலைமைகளை ஆராய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "பல வருஷங்களாக" என்று சொன்னார்கள். உண்மைதான். 1967-க்கு முன்னால் கிட்டத்தட்ட 80,000 வீட்டு மனைகள் எடுக்கப்பட்டு வீடுகள் கட்டாமலே போட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் பல இடங்களில் நஞ்சைகளை எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். குறைந்த பட்சம் மூன்று அடி பள்ளம் இருக்கிறது. அந்தப் பள்ளத்தை தூர்த்தால்தான் அதிலே வீடு கட்ட முடியும். இதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய் செலவாகி இருக்கிறது. வேறு சில நூதனமான காரியங்களும் நடைபெறுகின்றன. சில நிலச் சொந்தக்காரர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு நிலத்தைக் கொடுத்தவர்கள் அரிசன மக்கள் வீடு கட்ட முன்வரும்போது பழைய தீண்டாமையை அனுசரித்து விரட்டி அடிக்கிறார்கள். ஆனால் 1967க்குப் பிறகு அந்த நிலங்களில் எல்லாம் வீட்டை கட்டி முடிக்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் திருப்பி எடுத்துக் கொள்வோம் என்று சொல்லி அந்தப் பள்ளத்தைத் தூர்த்துத் கொடுப்பதற்கு கூட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி எல்லாம் செய்த பிறகு சிலர் வீடு கட்டியிருக்கிறார்கள். இன்னும் பல பேர் கட்டாமல் இருக்கிறார்கள்.

திரு. என். இராஜாங்கம் : 1967-க்கு முன்னால் எடுக்கப்பட்ட நிலங்கள் பள்ளமும் படுகுழியுமான வீடு கட்டப் பயன்படுத்த முடியாத நிலங்கள் என்பது உண்மையா ? இப்போது அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாகாமல் நிலங்களை எடுக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதைத்தான் முன்னமே சொன்னேன். இப்போது எடுக்கிற நிலங்கள் அரிசன மக்கள் விரும்புகிற நிலங்களாகப் பார்த்து எடுக்கப்படுகின்றன. கொஞ்சம் விலை அதிகமாகப்

திரு. ஜே. ஜேம்ஸ் : கடத்தல் அரிசி பறிமுதல் செய்யப்படும்போது அதற்கான ரசீதைப் பறிமுதல் செய்கிற அதிகாரிகள் கொடுப்பதில்லை. அகவே அதற்கான கணக்குகள் இந்தந அரசாங்கத்திடம் இல்லை. எனவே இனிமேலாவது பறிமுதல் செய்கிற அரிசிக்கு உடனடியாக ரசீது வழங்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அரசு நாக்கிறு அறைப்புமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தக் கேள்விக்கும் அவர்கள் சொல்வதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் சொல்வது வேறு. காய்ந்த கருப்பந்தோகையின் அடியில் மறைத்து அடுக்கி வைக்க பட்டிருந்ததாக இலாகாவிற்கு அறிவித்து அவர்கள் சென்று சோதனை செய்து எடுத்திருக்கிறார்கள். அந்த மூட்டைகள் குறித்து எவரும் உரிமை கோராத தால், அவை யாருக்குச் சொந்தம் என்று தெரியாததால் யாருக்கு ரசீது கொடுப்பது என்று தெரியவில்லை. வழக்குப் போட முடியாமல் மூட்டைகளை மட்டும் பறிமுதல் செய்து வைத்திருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir.

MR. DEPUTY SPEAKER : No point of Order, during question-hour. Honourable Members must realise the importance of the question hour and should have the reduced the number of questions in the beginning itself. I have to allow 25 or 30 supplementaries for every question.

*Sales centres of Food Corporation.*

* 97. Q. : THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Honourable the Minister for Food be pleased to state :

(a) whether the Government is aware of the plan of the Food Corporation to open (1) wholesale and (2) Retail shops in this State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி : (அ) &(இ) : வெளிச்சந்தையில் நிலவுகின்ற விலைகளைக் கருத்திற்கொண்டு இந்திய உணவுக் கழகம் வரையறுக்கும் விலைகளில் கோதுமை, சோளம், பருப்பு வகைகள் ஆகிய வற்றை விற்பனை செய்ய அக்கழகம் சென்னை நகரில், மொத்த விற்பனை நிலையம் ஒன்றினைத் தொடங்கியிருந்தது.

*Tourist Traffic Advisory Committee.*

* 98. Q. : THIRU K. T. K. THANGAMANI : Will the Honourable the Minister for Backward Classes be pleased to state :

(a) whether it is a fact that a Tourist Traffic Advisory Development Committee has been formed in Tiruchirappalli,

(b) if so, the names of its members ; and

(c) whether a statement will be laid on the Table of the House on the working of similar Committees in Madurai and Ooty ?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ)—ஆம்.

(இ) & (உ) : ஓர் அறிக்கை* அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தஞ்சை, திருச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் அந்தக் குழுக்கள் எந்த முறையில் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருச்சியில் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு பொங்கல் வாரத்தை சுற்றுலா வாரமாகக் கொண்டாடு கிறார்கள். எப்படி எப்படி சுற்றுலாவின் தரத்தை வளர்ப்பது, எப்படி எப்படி. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது என்பதற்கான ஆலோசனைகளை இந்தக் குழு அடிக்கடி கூறி ஆலோசனைகள் நல்குகிறது.

திரு கே. டி. கே. தங்கமணி : இதில் பொது மக்களுடைய பிரதிநிதி யாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட இல்லையே, அதற்கு எதாவது காரணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா இராசாராம் : அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் கள் ஒரு குழுவை உருவாக்கிக்கொள்கிறார்கள். அதில் உள்ளூரிலுள்ள ஹோட்டல்காரர்கள், அல்லது சுற்றுலாப் பயணத்தில் விருப்பமுள்ளவர்கள் இவர்களைச் சேர்த்து அந்தக் காரியம் நடைபெறுகிறது. அதில் சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்து கொள்ளாததற்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டு காடுகளிலுள்ள யானைகள்.

* 99 வினா—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா?

(அ) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான காடுகள் அனைத்திலும் உள்ள யானைகள் கணக்கிடப்பபட்டுள்ளனவா,

(இ) ஆம் எனில், அவற்றைப் பராமரிக்க அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு ஓ.பி. இராமன் : (அ) & (இ) : தமிழக அரசுக்குச் சொந்தமான காடுகள் அனைத்திலும் உள்ள யானைகள் கணக்கிடப்பட வில்லை. யானைகளை வேறுபாடின்றிக் கொல்லுவதினின்றும் காப்பதற்காக, 1873-ஆம் ஆண்டின் தமிழ்நாடு காட்டு யானைகள் பாதுகாப்புச் சட்டம் தமிழ்நாடு முழுவதிலும் அமுலிலுள்ளது.

---

* 105–109-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த சர்ப்ளஸ் லாண்ட் எவ்வளவு இருக்கிறது என்று இந்திய அரசு நம்மிடம் கேட்ட காரணம் என்ன? பப்ளிக் டிரஸ்ட், ரிலிஜியஸ் டிரஸ்ட்களெல்லாம் 20 ஏக்கருக்கு மேல் விளை நிலங்களை வைத்திருக்கக் கூடாது என்ற பிரிவு இருக்கிறது. அதை அமுல் செய்வதில் கஷ்டங்கள் ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசாங்கம் ஓர் ஆலோசனைக் குழு அமைத்து, குழுவின் கொள்கைகளை மாநில அரசு எந்த அளவுக்கு அமல் செய்திருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்வதற்காக விவரம் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் உரிமையோடு கேட்கவில்லை. நாமும் அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. மத்திய அரசு அதைப் பற்றி விவரம் அறிந்து கொள்ள வேண்டுமென்ற முறையில் கேட்டதால் அனுப்பப்பட்டிருக்கிறது. ரிலிஜியஸ் டிரஸ்டுகளைப் பொறுத்த வரை 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் சொந்தப் பயிர் வைக்கக்கூடாது என்ற விதி இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இது வரையில் யாருக்கும் அப்படி 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் சொந்தப் பயிர் வைக்க விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. ஆனால் இதற்கு முன்னால் இருந்த அரசு பல பேருக்கு நூற்றுக் கணக்கான ஏக்கருக்கு, ஆயிரக் கணக்கான ஏக்கருக்குக்கூட சொந்தப் பயிர் வைப்பவர்களுக்கு விதி விலக்கு அளித்திருக்கிறது. விதிவிலக்கு அளிக்க சட்டத்தில் இடம் இருக்கிறது.

## மேற்கு இராமநாதபுரம் பகுதியில் புதிய தொழில்கள்.

*94 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேற்கு இராமநாதபுரத்தையும் தொழில் துறையில் பின்தங்கிய பிரதேசமாக அறிவிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிதி வழங்கு நிறுவனங்களிடமிருந்து சலுகை வீதங்களில் நிதி உதவி பெறுவதற்காக, இராமநாதபுரம் மாவட்டம் முழுவதையும் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக மத்திய அரசின் திட்ட ஆணைக்குழு முன்னரே அறிவித்துள்ளது.

புதிய தொழில்களைத் தொடங்குவதற்காக 10 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுள்ள பகுதிகளில் மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்த்துக் கொள்ளலாம் என இந்திய அரசின் திட்ட ஆணைக்குழுவிற்கு இந்த அரசு பரிவுரை செய்துள்ளது.

## துணி ஆலைகளுக்கான அன்னிய செலாவணி.

*95 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவுளி மில்களை நவீனமயமாக்கும் திட்டத்தினை அமுல்படுத்துவதற்குத் தேவைப்படும் அன்னிய செலாவணி குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : ஜவுளி மில்கள் நவீனமயமாக்கப்பட்டால் இப்போதுள்ள இந்தக் கஷ்டங்களும் வேறு பல சிக்கல்களும் குறையும் என்று நிபுணர் குழு ஆலோசனை சொல்வதாக அறியப்படுகிறது. அப்படியானால் அதுபற்றி இனியாவது அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசு நடத்துகிற ஆலைகளைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்டதொரு முயற்சி நடத்தப்பட்டு வருகிறது, மாடர்னைசேஷன் ஆஃப் தமிழ்நாடு டெக்ஸ்டைல் மில்ஸ். ஆனால் கூட்டுறவு மில்லைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அது புதிய ஆலைகளாக இருக்கின்றன. தனியார் துறையைப் பற்றி தகவல் இல்லை.

## *Rice seized at Pichanur.*

*96. Q.—THIRU N. DENNIS : Will the Honourable the Minister for Food be pleased to state :

(*a*) whether it is a fact that a large quantity of smuggled rice as been seized from the Rice Mills at Pichanur area in Coimbatore istrict during August 1972 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) அண்டு (இ) : காய்ந்த கருப்பந் தோகையின் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 அரிசி மூட்டைகளும் (ஒவ்வொரு மூட்டையும் சுமார் 75 கிலோ கிராம் எடையுள்ளது) 56 அரிசி அரை மூட்டைகளும் (ஒவ்வொரு மூட்டையும் சுமார் 40 கிலோகிராம் எடையுள்ளது) பிச்சானூரில் திரு. மயில்சாமி கவுண்டரின் அரிசி ஆலைக்கு அண்மையில் அவரது வளவிற்குள்ளிருந்து 10—8—1972-ல் கைப்பற்றப்பட்டன. மேற்படி மூட்டைகள் குறித்து எவரும் உரிமை கோராத காரணத்தால், மேற்படி மூட்டைகள் உரிமை கோரப்படாத பொருள்கள் என அறிவிக்கப்பட்டு பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. என். டென்னிஸ் : என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? அவை என்ன ஸ்டேஜில் இருக்கின்றன?

மாண்புமிகு திரு மன்னை பா. நாராயணசாமி : பறிமுதல் செய்யப்பட்டு. யாருடைய ப்ராப்பர்டி என்று தெரியாததால் சர்க்கார் சரக்கை எடுத்துக் கொண்டு விட்டுவிட்டார்கள்.

The management declared the lock-out on 25—1—1973 அந்தத்
தேதியிலிருந்து லாக்-அவுட் நடந்து இருக்கிறது. மதிப்பிற்குரிய
அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களிடத்தில் அந்தத் தொழிலாளர்கள்
ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள்
வந்த நேரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இல்லை என்ற
காரணத்தால் அந்த அமைச்சரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். சிம்சன்
கன்சர்னில் உள்ள தகராறும் இன்னும் முடிவாக வில்லை. இது குறித்து
ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அங்கே 180 பேர் பாதிக்கப்பட்
டிருக்கிறார்கள். அடிக்கடி முதலமைச்சர் அவர்கள் மேனேஜ்மெண்டிற்குச்
சொல்கிறேன். என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இருப்பினும்
இந்த சிம்சன், அடிசன் கம்பெனி பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இதனால்
நாளைய தினம் ஒரு பெரிய பயங்கரமான நிலைமை, தொழிலாள
தோழர்களின் ஒரு பெரிய ஊர்வலம் நடத்தும் நிலைமை ஏற்படலாம்.
ஆகவே, முன்கூட்டியே அமைச்சர் அவர்களும், அந்த இலாகாவைச்
சேர்ந்த அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து, அந்த லாக்-அவுட்டை விரை
விலேயே லிப்ட் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக, நாளையதினம் தொழிலாளர்கள்
மனதில் ஏற்படும் வருத்தத்தையும் கவலையையும் நிச்சயமாக நாம்
குறைக்கலாம். ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கவும்,
என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி
விளக்கவும், இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது
குறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு என். வி. நடராசன்: தலைவரவர்களே, சென்னை
அடிசன் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 1,650 தொழி
லாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையில் இரும்பு
வார்ப்புகளும் பொறியியல் தொழிலுக்கு வேண்டிய வெட்டும் கருவிகளும்
தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலையில் மூன்று அங்கிகாரம்
பெற்ற தொழிற்சங்கங்கள் இருக்கின்றன.

1. தமிழ்நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன்,
சென்னை-14.

2. சிம்சன் அண்ட் குரூப் கம்பெனிஸ் ஒர்க்கர்ஸ், யூனியன்
சென்னை-2.

3. சிம்சன் அண்ட் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன், சென்னை-2

தமிழ்நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன் தொழில்
துறையில் ஒழுங்கு முறை விதிகள் அடிப்படையின்படி 15-2-1972 முதல்
நிர்வாகத்தினரால் அங்கீகாரம் பெற்றதிலிருந்து இன்னும் இரண்டாண்டு
காலம் முடிவடைய வில்லை. சிம்சன் குரூப் கம்பெனி தொழிலாளர்கள்
சங்கம் மற்றும் சிம்சன் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன் ஆகிய
இரண்டு சங்கங்கள் அங்கீகாரம் கேட்டு கோரிக்கை எழுப்பியுள்ளது. மேலும்
1,000 தொழிலாளர்களிடமிருந்து அவர்கள் இச்சங்கங்களைச் சேர்ந்தவர்கள்



என்று கடிதங்கள் பெற்று அவற்றை அனுப்பியுள்ளனர் இக்
கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்கள் சரியானவையா என்று
பரிசிலிக்கப்படுகிறது.

அடிசன் கம்பெனி லிமிடெட் நிர்வாகம் கீழ்க்கண்ட ஆறு தொழி
லாளர்களைச் சட்ட விரோதமான வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுதல்,
நிர்வாகத்தினரைப் பயமுறுத்தல், நிறுவனத்தின் சொத்தை சேதப்
படுத்துதல் ஆகிய குற்றங்களுக்காக வேலை நீக்கம் செய்தது.

1. திரு. மோகன்.
2. திரு. ஸ்ரீதரன்.
3. திரு. சங்கரலிங்கம்.
4. திரு. தசரதன்.
5. திரு. ஏகாம்பரம்.
6. திரு. சங்கரன்.

மேற்சொன்ன 6 தொழிலாளர்களுடைய வேலை நீக்கத்தை ஆட்சேபித்து சில அலுவலர்களைத் தாக்கிய குற்றத்திற்காகக் கீழ்க்கண்ட தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

1. திரு. முனுசாமி.
2. திரு. சுப்பிரமணியம்.
3. திரு. மணி.
4. திரு. கந்தசாமி.

வேலை நீக்கம் செய்யப்பட்ட பத்து தொழிலாளர்களில் திரு. கந்தசாமி
என்பவர் கணக்குத் தீர்த்துக் கொண்டு சென்றுவிட்டார். மீதமுள்ள
9 தொழிலாளர்கள் சென்னை-2வது தொழிலாளர் துறை அலுவலரிடம்
தொழிற் தகராறு சட்டம் பிரிவு 2 (எ) யின் கீழ் மனுச் செய்துள்ளனர்.
இத்தொழிற் தகராறுகள், விசாரணையில் இருந்து வருகின்றன.

இந்தக் கட்டத்தில் 18—1—1973 அன்று திரு. முத்துகிருஷ்ணன்
என்னும் தொழிலாளியை ட்ரில் தயார் செய்யும் இயந்திரம் ஒன்றிலிருந்து
அது போன்ற மற்றொரு இயந்திரத்தில் உற்பத்தியின் அவசியத்தை ஒட்டி
வேலை செய்யக் கோரியதை அவர் மறுத்தார். அதன்பேரில் அவர்
தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து சிம்சன் அண்டு
குரூப் கம்பெனிஸ் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள்
வேலைநிறுத்தம் செய்தனர். இதன் விளைவாக நிறுவனம் முழுவதும்
இயங்காமல் நின்று விட்டது. 24—1—1973, 25—1—1973 தினங்களில்
வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் நிறுவனத்தில் உள்ள
தொலை பேசிகள், கண்ணாடி ஜன்னல்கள், முக்கியமான தஸ்தாவேஜுகள்,
சில இயந்திரங்களின் சில பாகங்கள் இவற்றைத் தாக்கி பலத்த சேதம்
விளைவித்ததாக நிர்வாகத்தினர் கூறி, 25—1—1973 அன்று முதல்
கதவடைப்புச் செய்தனர். 2—2—1973 அன்று சென்னை தொழிலாளர்
துறை துணை ஆணையர் நிறுவனத்திற்குச் சென்று சேதத்தினால் ஏற்பட்ட
நிலைமையைப் பார்வையிட்டு சேதம் நடந்தது பெரும்பாலும் உண்மை
யென்று அறிக்கை அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில் ஒரு முடிவு காண நிர்வாகத்தினர் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

சென்னை 2-வது சரகத் தொழிலாளர் துறை அலுவலர் பேச்சு வார்த்தை நடத்தியதில் பயனளிக்கவில்லையாதலால் சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்துவார்.

இந்த சமயத்தில் நான் மற்றொன்றையும் கூற விரும்புகிறேன். நமது மாநிலத்தில், கழக அரசு ஏற்பட்ட உடனேயே, தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் பிரச்னை, அல்லது அவர்களின் மற்ற பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் அவைகளை உடனடியாகத் தீர்த்து வைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கிறது. ஆனால், நாட்டிலுள்ள சில தொழிற்சங்கத் தலைவர்கள் இங்கே நிலவுகின்ற அமைதியைக் குலைக்க வேண்டுமென்பதற்காக, ஒரு பிரச்னையை இனிதே தீர்ந்தது என்று எண்ணி உட்காருகிற நேரத்தில் கதவைத் தட்டி இதோ நான் இருக்கிறேன் என்று சொல்வது போல்—தொழிலாளர்கள் மத்தியில் அடிக்கடி வேலை நிறுத்தம் போன்றவற்றைத் தூண்டிவிடுகிறார்கள். இதைத் தொழிலாள நண்பர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வேலை நிறுத்தம் போன்றவற்றால் அவர்களுக்கு மட்டும் நஷ்டம் ஏற்படவில்லை, சமுதாயத்திற்கும் நஷ்டம், நாட்டின் வளர்ச்சிக்கும் தடை ஏற்படுகிறது. எனவே அப்படிப்பட்ட தலைவர்கள் வலையில் தொழிலாளர்கள் சிக்காமல் இருக்கவேண்டுமென்று எடுத்துக் கூறி இந்தப் பிரச்னை குறித்து அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால், இந்தச் சபையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இது குறித்து விவாதிக்க இந்தச் சபையை ஒத்திவைக்கத் தேவையில்லை, ஆகவே இத்தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

MR. DEPUTY SPEAKER: Under Rule 41 of the Assembly Rules, the Honourable Member, Thiru N. Dennis, will call the attention of the Honourable Minister for Education and Local Administration to an urgent matter of public importance..........

## 5. நடை முறைக் கேள்விகள்.

(அ) ஒற்றிவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது குறித்து.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order I gave notice of an adjournment motion under rule 42 of the Assembly Rules re.........

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அது குறித்து நீங்கள் என் சேம்பரில் வந்துகேட்க வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, there should not any

* * * *

THIRU N. GANAPATHY: Sir, that is a reflection on the Chair and we cannot tolerate it.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது எச்சரிக்கையாகப் பேசுவது நல்லது. தலைமை வகிப்பவரைப் பார்த்து, * * * என்று சொல்வது அவ்வளவு நல்லதல்ல. அந்த வார்த்தையை சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். உறுப்பினர் அவர்கள் கோர்ட்டிற்குச் சென்று, நீதிபதிகளுக்கு மதிப்பு கொடுத்துப் பேசிப் பழக்கப்பட்டவர். அதை விட ஒரு படி மேலாக இங்கே மதிப்புக் கொடுத்து பேசுவது நல்லது என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: Sir there are very important things concerning Madurai and there was some fight between the workers and other things. Therefore, I request the Chair to be more considerate in taking up issues which concern our areas........

MR. DEPUTY SPEAKER: I do not remember properly what adjournment motions have been taken up and what rulings have been given. I would like the Honourable Member to come and discuss the matter in my chamber. That will always be a very good practice. Thiru Dennis............

## (4) கவனஈர்ப்பு (தொடர்ச்சி)

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் காலவரம்பின்றி ஒத்திவைக்கப் படுவது குறித்து.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Honorable Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the indefinite postponement of the Madras Corporation elections that are due already.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த மற்றும் பதவியை நீட்டும் சட்டம்) 39-வது பிரிவின் கீழ் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 1—11—1973 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைய சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 31—10—1973-ல் தான் முடிவு அடைகிறது. மாநகராட்சித் தேர்தலை குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. மாநகராட்சித் தேர்தலை காலவரையறையின்றி ஒத்திப் போடுவது என்ற பிரச்னை இப்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

---

*மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

சுருளியாறு நீர் மின் திட்டம்.

* 100. வினா—திரு பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மின்
சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா?

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள சுருளி
நீர் வீழ்ச்சியில் நீர் மின்சார நிலையம் ஒன்றை நிறுவும் செயற் குறிப்பு
ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டின் நான்காவது திட்டத்தில் சுருளியாறு புனல் மின்
திட்டத்தைச் சேர்த்துக் கொள்ளத் திட்ட ஆணைக்குழு கொள்கையளவில்
ஒப்புக்கொண்டுள்ளது. திட்டத்தின் தொடக்கப்பணிகளை எடுத்துக்கொள்
கொள்ளவும் மாநில அரசிற்கு திட்ட ஆணைக்குழு அனுமதி வழங்கி
யுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடுகளுக்குத் திட்ட ஆணைக்குழுவின்
ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இடையே, இந்த நீர் மின் திட்டத்தின்
துவக்கப்பணிகள் தமிழக மின்வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. மு. சுருளிவேல் : சென்ற மாதம் 14-ந் தேதி அன்று இந்த
சுருளி நீர் வீழ்ச்சியில் நீர் மின்சார நிலையம் நிறுவும் திட்டத்தை அமல்
செய்யும் இடத்திற்குச் சென்று பார்த்தேன். அங்குள்ள தொழிலாளர்
கள் வேலையில்லாமல் தாங்கள் ஊதியம் பெறுவதாக ஒரு குறைபாட்
டினை பொறுப்புணர்ச்சியோடு கூறினார்கள். அதற்குக் காரணமாகக் கூறி
யது பல்வேறு திட்டங்களைப் பார்க்க ஒரே மேல் அதிகாரி இருப்பதால்
இத்திட்டத்தில் அவருடைய முழுக் கவனத்தையும் செலுத்த முடியா
வில்லை. ஆகவே வேலை தாமதப்படுகிறது என்று கூறினார்கள். அந்தத்
தண்ணீரில் மின்சாரம் உற்பத்தியான பிறகு வைகை அணைக்கு வரு
வதற்குப் பதிலாக ராஜபாளையத்திற்குத் திருப்பி விடப்படுகிறது என்ற தவ
றான பிரசாரத்தைத் திட்டமிட்டு சில பகுதியினர் அங்கு எழுப்பி வருகி
றார்கள். எனவே அந்த மக்களின் நியாயமான பயத்தைப் போக்க என்ன
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தவறான பிரசாரத்தை நம்பத்
தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரம் ஒரு வழி
யாக முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்
தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக்
குறிக்கும்.]



வினா 69-க்கு போடப்பட்ட துணை வினாவிற்கான விடையைத்
திருத்தி வருவாய்த்துறை அமைச்சர் அறிக்கை

(2) அமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : நேற்றைய தினம் நான் மது
பானக் கடைகளில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற மது
பானங்கள் விற்கப்படுகிறதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு (வினா 69)
பதில் சொல்லும்போது "இந்தியன் மேட் பாரின் லிக்கர் தான்" விற்கப்
படுகிறது என்று சொன்னேன். விசாரித்ததில் இப்போது ஒன்றைத் தெரி
வித்துக் கொள்கிறேன். நேற்று சொன்ன பதிலை வெளிநாட்டிலிருந்து
இறக்குமதி செய்யப்படுகிற மதுபானங்களும் கூட ஓரளவிற்கு விற்கப்
படுகிறது என்று திருத்திக் கொள்கிறேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

(அ) அடிசன் கம்பெனி கதவடைப்புக் குறித்து.

MR. DEPUTY SPEAKER :—I have also received notice of
an adjournment motion from Dr. Hande to discuss a matter of
urgent public importance i.e. dispute between the management
and workers of Addison and Co. which had led to Lock-out in the மு.ப. 10–30
factory.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத்
தலைவரவர்களே, அடிசன் கம்பெனியில் மீண்டும் சில பிரச்சினைகள் வந்
திருக்கின்ற காரணத்தால் இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை
ஒத்தி வைத்து, அது குறித்து விவாதிக்க வேண்டுமென்று உங்கள் மூல
மாகக் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கம்பெனியில் ஏற்கெனவே 10
பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, அதற்குப் பிறகு முத்துக்கிருஷ்ணன் என்பவர்
18–1–1973 அன்று சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர் ஒரு
இலாகாவில் வேலை செய்து கொண்டிருந்த போது, வேறு ஒரு இலாகா
விற்குச் சென்று வேலை பாருங்கள் என்று....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "லாக்-அவுட்" செய்யப்
பட்டிருப்பதால் அந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்
தது என்பதைச் சொல்லவேண்டும்.

The honurable Member need not go into detais. அது ஒரு
டிஸ்கஷன் மாதிரி ஆகிவிடும்.

டாக்டர் எச் வி. ஹாண்டே : லாக் அவுட் நடந்து இருக்கிறது என்பதைப்
பற்றிப் பேசுவது என்றாலும், ஓரிரு கருத்துக்களைச் சொன்னால் அது அமைச்
சர் அவர்கள் பதில் கூறுவதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால்
கூற விரும்புகிறேன். நான் 3 நிமிடங்களுக்கு மேல் எடுக்க மாட்டேன்
முத்துக்கிருஷ்ணன் ஒரு இலாகாவில் வேலை செய்து கொண்டிருந்தபோது
அவரை வேறு ஒரு இலாகாவிற்குச் சென்று வேலை செய்யுங்கள் என்று
சொன்ன நேரத்தில், அவர் செய்து கொண்டிருக்கிற வேலையை முடித்து
விட்டு அதற்குப் பிறகு அங்கே சென்று வேலைசெய்கிறேன் என்று சொன்னார்
என்ற காரணத்திற்காக, மேனேஜ்மேண்ட்டாரால் சஸ்பெண்ட் செய்யப்
பட்டார். இதையும் 10 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதை எதிர்த்தும்,
போராட்டமாக ஸ்டிரைக்கில் ஈடுபட்டார்கள். அந்த ஸ்டிரைக்குக்குப் பிறகு,
மேனேஜ்மெண்ட் லாக்-அவுட் செய்திருக்கிறார்கள்.

(5) நடைமுறைக் கேள்விகள்—(தொடர்ச்சி).

(ஆ) போதுமான அவகாசமின்றி சட்ட முன்வடிவு எடுத்துக்கொள்ளப் படுவது குறித்து.

Dr. H. V. HANDE : On a point of Order, Sir, The Hon. Minister is likely to introduce this Bill to-day. We have not yet been given a copy of the Bill. Actually when the Ordinance was issued, it was said that it was going to be converted into a Bill and then it s going to be brought here as an enactment. My submission is, it is likely to be taken up for discussion on Monday. There are only two days. Today is Friday. We have not yet been given copy of the Bill. Unless we go through the clauses, we cannot properly discuss the subject. This is nct the Ordinance. The Government has brought it in a Bill form and we have not been supplied with copies to enable us to come prepared for a discussion. The department ought to have supplied us with a copy of the Bill.

Secondly the object of the ordinance has been challenged in a Court of Law. I am not going into the merits or demerits. That Ordinance has been challenged in Court. The Bill is a replica of the Ordinance. Can we proceed with a discussion of the same in the House? Is it in order ? On these two points I would like the Deputy Speaker to give his ruling.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 'சாதாரணமாக இந்த பில்களுக் கெல்லாம் ஐந்து நாட்களாவது இடைவெளி இருக்க வேண்டுமென்ற ஒரு விதிமுறை இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், இந்த சட்ட மன்றத்திலே சட்டங்கள் செய்வதிலே நாம் துரிதப்பட்டுக்கொண்டே போகிறோம் என்று நாங்கள் எல்லாம் ஆத்திரப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். அதிலேயும், குறிப்பாக இந்த ஒரு முக்கியமான சட்டம்— பொங்கல் பரிசாக தரப்பட்டச் சட்டம் ஒன்றை இப்பொழுது நாம் விவாதிக்கப் போகிறோம். வழக்கறிஞர்கள் பலரும் இந்தச் சட்டமன்றத்திலே உறுப் பினர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சட்டத்தை படிப்பதற்கும், அதற்கு திருத்தம் கொடுப்பதற்கும் போதிய அவகாசம் வேண்டும். அது மட்டுமல்லாமல் இதிலே ஆர்டினன்ஸ் பிறப்பிக்கப்பட்டு அதை "ரிபிலேஸ் மெண்ட்" செய்கிற முறையிலே சட்ட வடிவத்திலே இங்கே வரவிருக்கிறது. இந்த விதிமுறைகளை பின்பற்றாமல், போதிய அவகாசம் உறுப்பினர் களுக்குத் தரப்படாமல் இம்மாதிரி சட்டங்கள் நாம் செய்வதால் வழக்கு மன்றத்திற்கு பாதிக்கப்பட்டவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இது ஒரு கஷ்டமான நிலையாக இருப்பதால், இத்தகைய முறையை தவிர்க்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதை எல்லாம் சட்ட இலாக்கா மேற்கொள்ள வேண்டும். முன்பு சட்ட அமைச்சர் அவர்கள் எதிர் கட்சி வரிசையிலே இருக்கும் பொழுது, சட்டங்களை எல்லாம் துரிதமாக ஆளும் கட்சியினர் கொண்டு வந்து விடுகிறார்கள் என்று குறை கூறினார்கள். அன்றைக்கு நான் இந்தச் சட்ட மன்றத்திலே ஆளும் கட்சி தரப்பிலே இருந்தேன். அதே வாதத்தைதான் நான் இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அதற்குப் போதிய அவ காசம் உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டும். இந்த பில்லை உடனடியாக ார்க்குலேட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



Thiru K. T. K. THANGAMANI : இந்த ரூல் 88-ன் பிரகாரம் ny member desiring to move for leave to introduce a Bill shall give ve days' notice of his intention and shall together with the notice, ıbmit to the Secretary, etc........

திில் என்ன நடைமுறை இங்கே வருகிறது என்று சொன்னால், வர்கள் நேரடியாக நோட்டீஸ் கொடுத்தால் போதும் என்ற முறை லேயும் அது எங்களுக்கு தெரியவேண்டாம் என்ற நிலை இருக்கிறது. னால் லோக் சபையிலே இருக்கும் பிராக்டிஸ் என்னவென்றால் அந்த பில் இங்கே இண்ட்டிரடேஸ் பண்ணுவதற்கு முன்பாகவே சில சமயத்திலே"

We may oppose the very introduction of the Bill.

ன்றைக்கு 5 நாள் நோட்டீஸ் கிடைக்காமல் இருக்கிறது. இனி சோதாக்கள் வரும்பொழுது அது இண்ட்டிரடேஸ் பண்ணுவதற்கு ன்னால் எங்களுக்குக் கிடைக்கும்படி செய்தால் அது மிகவும் உதவிகர ாக இருக்கும். எனவே, தலைவர் அவர்கள் இதிலே ஒரு டைரக்டிவ் காடுத்தால், பின்னாலாவது மசோதாக்கள் சம்பந்தமாக தீர்க்கமாக யாசித்து விவாதிக்க உதவிகரமாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த ஒரு முக்கியமான சட்டம்—அவசர சட்டத்தின் மூலமாக பொங்கல் பரிசு என்று 4-ஆம் தேதி அறிவித்தார்கள். ஆனால், அந்த அவசரச் சட்டம் 19-ஆம் தேதி இரவு தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கிடைத்தது. மற்றவர் ளுக்கு 14-ஆம் தேதியே அந்தச் சட்டம் கிடைத்தது. 16-ஆம் தேதி தனித்தனியாக 1,000 மனுக்கள் நீதி மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அவர்களுக்கு எவ்வளவு செலவாகும் என்பதை இந்த அரசாங்கம் சற்று யோசிக்க வேண்டும். இதை பொங்கல் பரிசு என்று கூறுகின்றவர்கள் சற்று நிதானித்து அந்த சட்டத்திலேயுள்ள சிக்கல்கள் எல்லாம் போகும் வகையில் கொண்டு வந்து, அதன் மீது மற்றவர்கள் நீதி மன்றத்திற்குப் போகாமல் இருக்கும் நிலைமையினை உருவாக்கி இருக்கலாம். அதைவிட்டு, இப்படி திடீரென்று செய்வது, அதுவும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே சரியாக அதை அனுப்பாமல் செய்வது சரியல்ல. மற்றவர்கள் கையிலே அந்தச் சட்டங்கள் முன்னாலேயே கிடைக்கிறது என்றால், இந்தச் சட்ட மன்ற உறுப்பினர் களுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கூட இந்த அரசாங்கம் கொடுக்க மறுக்கிறது என்றுதான் சொல்லுவேன். .. ... ..

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றத் தலைவர்களும் இங்கே எழுப்பிய பிரச்னை இந்த மசோதா தங் களுக்கு உடனடியாகப் படித்துப் பார்க்கத் தரப்பட்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே பேசினார்கள். ஆனால், அம்மையார் அவர்கள் கிட்டத்தட்ட இதைப் பற்றி பேசத் தொடங்கி, தன்னுடைய விளக்கங்களை இதன் மீது பேச ஆரம்பித்து விடுவது நல்லதல்ல. ஏனென்றால், எந்த ஒரு சட்டத்தையும் எதிர்த்து அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத் திற்குச் செல்லலாம். அவர்களுக்கு அப்படிச் செய்ய உரிமை இருக்கிறது. அம்மையார் அவர்களுடைய கட்சிதான் டெல்லியிலே ஆட்சி செய்கிறது. அந்தக் கட்சிச் சார்பிலே கொண்டு வந்த ராஜமானிய ரத்து சட்டம் [illegible] மன்றத்திற்கு சென்றதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. [illegible]

டத்தைக் கொண்டு வந்ததும், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்கு போகாமல் இருக்கும் வகையிலே அதை நல்ல முறையிலே கொண்டு வந்திருக்க வேண்டும்; எனவே, நீங்கள் முன்கூட்டியே அதிலே எச்சரிக்கையாக இருக்கவில்லை என்று கேட்பது சரியில்லை. இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று பரிகாரம் பெற உரிமை பெற்றவர்கள் என்பதை அம்மையார் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: மக்கள் பாதிக்கப்படும் நிலையிலே இல்லாமல், அந்தச் சட்டத்திலே ஓட்டை உடைசல் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். சட்டங்கள் சட்டசபை உறுப்பினர்களுக்கு முன்னால் வருவதில்லை. அந்த ஆர்டினன்ஸ் அறிவிக்கப்பட்டது 14-ஆம் தேதி. எங்களுக்கு 19-ஆம் தேதி தான் வருகிறது. இவ்வளவு கால தாமதம் ஏற்படுகிறது. நான் கூட இரண்டுமுறை பில்ஸ் செக்‌ஷனிலே வந்து கேட்டுவிட்டுப் போனேன். எங்களுக்கே வரவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். ஏன் இப்படி காலதாமதம் ஆகிறது என்று தெரியவில்லை. நீதி மன்றத்திற்குப் போவது என்பது வழக்கறிஞர்களுக்கும் கட்சிக்காரர்களுக்குமுள்ள பிரச்னை. இதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நல்லது சொன்னேன், இதை எல்லாம் தவிர்த்திருக்கலாம் என்பதற்காக. கேட்கவில்லை என்றால், அதைப்பற்றிக் கவலையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்னை கொண்டு வந்ததின் முக்கிய கருத்து, ஐந்து நாட்கள் இதிலே அவகாசம் தரப்படவில்லை என்பதுதான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது "சப் ஜுடிஸ்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "நோ சப் ஜுடிஸ்".

திரு என். கணபதி: மத்திய அரசாங்கம் கொண்டு வந்த பாங்க் நேஷனலைசேஷன் ஆர்டினன்ஸை எதிர்த்து ஒரு வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு பம்பாயைச் சேர்ந்த ஆர். எஸ். கூப்பர் என்பவர் எடுத்துச் சொல்லுகிறார். அந்த வழக்கு அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது, இந்திய பாராளுமன்றத்திலே அது சட்டமாக நிறைவேறப்பட்டது. அப்பொழுது, இந்திய தலைமை நீதி மன்றம் கருத்துச் சொல்லக் கடமைப்பட்டு, இந்த ஆர்டினன்ஸ் சம்மந்தமாக கோர்ட்டிலே கேசு நடக்கும்பொழுது அதைச் சட்டமாக நிறைவேற்றுவது சட்ட விரோதமில்லை, நீதி மன்ற விதிகளுக்கு புறம்பானதில்லை என்று சொன்னதாக நான் அறிகின்றேன். ஆகவே, அந்த வகையிலே இது சப்-ஜுடிஸ்ஸா அல்லது இதிலே சட்ட சிக்கலோ இருக்காது என்று சொல்லிகொள்கிறேன்.

**Thiru M. A. Latheff**: The question has been raised here that sufficient time must be given to the Members to go into the various provisions of the intended Bill to be introduced so that the Members can get sufficient time to give serious consider ation and to get a proper



knowledge about the Bill that is to be introduced. So far as the Bill is concerned, the question is that an Ordinance that was promulgated; a copy of it was circulated to all Members. I too received a copy of the Ordinance. When that copy of the Ordinace was circulated to all Members, it was given to understand that the Ordinance would be converted into an Act after introducing a Bill in the House and getting it passed. That communication was given to all Members. The question is whether communication was there communicating the decision of Government to convert the Ordinance into a Bill and bring the same to the House or not. I submit that sufficient time was given to all Members. I have received the same copy of the Ordinance, as the intended Bill to be introduced in the House. That fulfilled the necessary rules that govern the introduction of the Bill. That is my submission. The intention of the Government is there. The established convention, Mr. Deputy Speaker, is that as soon as an Ordinance is issued a copy has to be provided to all members and a copy of the Ordinance, i.e., the intended Bill, is to be circulated to all Members. That is the convention. Therefore the necessary formalities have been observed in this matter. There cannot be obvious difficulties for Members because the Members have been given a copy of the Ordinance. The present Bill is the same as Ordinance. Copy has been circulated to members. That is my submission.

**Thirumathi T. N. Anandanayaki**: Sometimes what is found in the Ordinance may not find a place in the Bill. There may be variation of some clauses. So it is not enough if we are provided only with copy of the Ordinance. That is not at all enough. My point is that the present Bill ought to have been circulated before, in time, so that we might come to the House prepared and so t h ae might know what changes had been made from that of the Ordinance.

**Thiru M. A. Latheef**: Mr. Deputy Speaker, I can understand the Hon. Lady Member's contention but that question arises only when the Hon. Minister introduces the Bill and the Hon. Members find any difference between the Ordinance and the Bill . Only then the Hon. Member is entitled to express her grievances..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே முதலாவதாக, நீதி மன்றத்தில் ஆர்டினன்ஸ் பொறுத்து வழக்கு இருப்பதுபற்றி எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, பல தடவைகளில் நீதி மன்றத்தில் ஆர்டினன்ஸ் குறித்து வழக்கு தொடரப்பட்டு இருந்தும், பாராளுமன்றத்தில் கூட சட்டமுன்வடிவுகள் வந்திருக்கின்றன. ஆக, அது ஒரு ஒழுங்குப் பிரச்சினையாகாது என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

அடுத்து, ஐந்து நாட்கள் அவகாசம் வேண்டும் என்று சொன்னார்கள். இதற்கு முன்னால் நம்முடைய மாமன்றத்தில் பல சட்டமுன் [illegible] களுக்கு 5 நாள் அவசாகம் தேவை என்ற விதியை தளர்த்தி [illegible]

முகப்படுத்தியிருக்கிறோம். குறிப்பாக, தனியார் கொண்டு வருகிற சட்ட முன்வடிவுகளைக் பொறுத்துக் கூட நம்முடைய உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக் கிணங்க, அதற்கென்று ஒதுக்குகின்ற நேரத்தில் அந்த விதியை தளர்த்தி நாம் அதைக் கூட எடுத்து விவாதித்திருக்கிறோம். இதிலே ஒருநாள், அல்லது 8 மணி நேரம் நான் அவகாசம் இருக்கிறது என்று கூட இல்லை. 3 நாட்கள் அவகாசம் இருக்கிறது. இதற்கு ஒரு வேளை இந்த மசோதாவினுடைய முக்கியத்துவமோ அல்லது வேறு ஏதா வது காரணமாகவோ இருக்கலாம், எனக்குப் புரியவில்லை. இது வரையில் இல்லாத அளவிற்கு இந்த விதியை தளர்த்தியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. இதைப்பற்றி மேலும் விவாதத்தின்பொழுது புரிந்து கொள்ளலாம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் 5 நாட்கள் அவகாசம் குறித்து எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையில் இருந்த உள்ளக் கிடக்கையை நான் என்னுடைய கருத்தில் எடுத்துக்கொள்கிறேன். மேற்கொண்டு இதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை தம் தீர்மானத்தை முன்மொழிய அழைக்கிறேன்.

**Thiru R. PONNAPPANADAR**: Sir am I to take it that the notic' for five days is waived.

**Mr. DEPUTY SPEAKER** ; Yes, that is understood.

6. சட்ட முன் வடிவு :

தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

**Thirumathi T. N. ANANDANAYAKI** : Sir, on a point of order The Chair must take the consent of the House for the waiver of the notice. Is the Chair going to suspend Rule 88?

* மாண்புமிகு திரு செ. மாதவன் : இதுபோன்ற மசோதாக்கள் கொண்டு வருகிறபொழுது அங்கத்தினர்களுக்கு முன்கூட்டியே கொடுக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. இப்பொழுதும் அப்படித் தான் செய்கிறோம் . சில மசோதாக்களை அவசரமாகக் கொண்டு வருகிற நேரத்தில், பொருளாதாரக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட மசோதாக்களை அவசரமாகக் கொண்டு வருகிற நேரத்தில் அவ்வப் பொழுது தலைவர் அவர்களுடைய அனுமதியை நாங்கள் கேட்கிறோம். 5 நாட்களுக்கு அறிவிப்பு கொடுக்கவேண்டும் என்ற விதியை தளர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். அம்மாதிரி விதியைத் தளர்த்து வதற்கு தலைவர் அவர்களுக்கே உரிமை இருக்கிறது. அது சபைக்கு வரவேண்டியதில்லை. இந்த மசோதாவைப் பொறுத்தவரையில்



இன்றைக்கு உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். ஸப்ஸ் டன்லில் பார்க்கப்போனால் இந்த கிரிடிஸிஸம் உதவாது. காரணம், ஏற்கனவே ஆர்டினன்ஸ் வந்திருக்கிறது. அதிலுள்ள கருத்துக்களை யெல்லாம் பார்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதை உடனே சர்குலேட் செய்வதற்கும் நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் 138-வது விதியைப் பார்க்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

(Thiru M. A. LATHEEF ROSE.)

**Mr. DEPUTY SPEAKER** ; The Hon. Minister has already sought the leave of the House and every day we are creating so many prceedents....

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் இந்த சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடரும். திரு. இ. எஸ். தியாகராஜன் அவர்கள் நேற்று தன்னுடைய பேச்சை முடிக்க வில்லையாதலால், அவர் இப்பொழுது தொடர்ந்து பேசுவார்.

திரு. இ. எஸ். தியாகராஜன் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது என்னுடைய நேற்றைய பேச்சைத தொடர்கிறேன். இன்றைக்கு சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் உரையில் குறிப்பிட்டதுபோல, உரம் கிடைப்பது மிகவும் நெருக் கடியாக இருந்துகொண்டிக்கிறது. விவசாயிகள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள், சிரமப்படுகிறார்கள் என்பதை அறிந்து தான் நேற்றைய தினம் இந்திய அரசிலிருந்து வந்திருக்கிற அமைச்சர் ஷிண்டே அவர்களிடத்தில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் கலந்து பேசி நம்முடைய மாகாணத்திற்கு வேண்டிய உரத்தைப் பெறு வதற்கான ஒரு நல்ல வாய்ப்பினை உண்டாக்கித் தந்திருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன் அதற்காக நான் முதல்வர் அவர்களுக்கும், உணவு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு நம்முடைய தமிழகத்திலே இன்றைய தினம் மின்சக்தி பற்றாக்குறை இருந்து வருகிறது. சில இடங்களில் மிகவும் பாதகமான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. எனது திருத்தணித் தொகுதியில் கடந்த 2, 3 வாரங்களாக தொடர்ந்து சிலசில நேரங்கள் மின்சாரம் தவிர்க்கப்படுவது மிகவும் தொந்தரவு அளிக்கிறது. உடனடியாக அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதில் தலையிட்டு எந்த நேரத்தில் அதை நிறுத்துவது, எந்த நேரத்தில் அதைத் தொடர்ந்து விடுவது என்ற நிலையை உண்டாக்கும்படியாக அவர்கள் கவனம் செலுத்தி, நக்கதோர் ஆணையை இடவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

அதோடு என்னுடைய திருத்தணித் தொகுதியில் பகட்டூர்பேட்டை என்ற கிராமத்தில் ஒரு செக்ஷன் ஆபீஸ் வைக்கப்படவேண்டும் என்று பன்முறை நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இனியாவது இங்கே ஒரு செக்ஷன் அலுவலகத்தை திறக்கும்படியாக உத்தரவிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெசவாளர்கள் நிலையைப் பற்றி நான் ஒருசில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். நெசவாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய நூலுக்கு விலை அண்மையில் கடந்த ஒன்றிரண்டு மாதங்களாக மிக அதிகமாக உயர்ந்து, நெசவாளர்கள் மிகவும் அவதிக்குள்ளாகி யிருக்கிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இந்த நிலைமையை சமாளிக்கவேண்டி நான் ஒரு யோசனையை சொல்லிக் கொள்கிறேன். யார்ன் சப்ளை கார்ப்பரேஷன் என்ற ஒரு வாரியத்தை தமிழகத்தில் உண்டாக்கினால், அதன் பயனாக நம்முடைய நாட்டில் இருக்கக் கூடிய நெசவாளர்களுக்குக் குறைந்த விலையிலே தேவையான நூல்களை வாங்கித் தருவதற்கு அரசுக்கு நல்லதோர் வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தினால், இம்மாதிரி ஒரு வாரியத்தை அமைக்கவேண்டும் என்று நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கினே்.

அடுத்தபடியாக நம்முடைய தமிழகத்தில் நெசவாளர்களுக்காக இருக்கக் கூடிய, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் கடந்த இரண்டு ஆண்டு காலமாக தனி அதிகாரியின் நிர்வாகத்தில் இருந்து கொண்டிருக் கிறது. விரைவிலே ஜனநாயக முறையிலே அது செயல்படுவதற்கான நிலைமையை உண்டாக்கித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேலையற்ற நிலை தமிழகத்தில் மாத்திரமல்ல, இந்தியத் தாயகம் முழுவதும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தவிர்க்க எந்தெந்த நடவடிக்கைகள் பொதுவாக எடுக்கப்படவேண்டுமோ, அந்தந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பட்டதாரி ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பல பேர்கள் இன்று வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்ரெண் டிஸ் டீச்சர்ஸ் என்ற முறையை மீண்டும் இரண்டு ஆண்டு காலத்திற்குத் தொடர்ந்து அமுல் நடத்தினால், மேலும் சில ஆசிரியர்களுக்கு வேலை தருவதற்கு வாய்ப்பாக இருக்கும். இம்மாதிரி வேலையில்லாமல் தவிக்கின்ற ஆசிரியர்களுக்கு ஒரு வாய்ப்பை உண்டாக்கித் தரவேண்டும் என்று நம்முடைய கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக நம்முடைய நாட்டிலே தொழில் வளர்ச்சியைப்பற்றி ஆளுநர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழில் வளர்ச்சி விஷயமாக நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அண்மையில் டெல்லியில் முதல்வர்கள் மகாநாட்டில் எடுத்துச் சொன்னது போன்று வருமான வரி திட்டத்தை மாற்றி அமைத்தால், தமிழகத்தில் மட்டுமல்ல,. இந்தியா பூராவும் பல தொழில் நிலையங்கள் உண்டாவதற்கு நல்லதோர் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, நம்முடைய முதல் அமைச்சர் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தினை மத்திய அரசு மீண்டும் பரிசீலனை செய்து விரைவிலே ஒரு முடிவு எடுக்க வேண்டும், அது நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு நல்ல தோர் வாய்ப்பை உண்டாக்கும் என்று வேண்டி கேட்டுக்கொண்டு, இந்தப் பேருந்துகளை தேசியமயமாக்குவதை மனமாற வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலே நான் சில கருத்துக்களைச் சொல்லி, என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலே சமீபத்தில் ஏற்பட்ட பெரிய வெள்ளத்தில், தமிழ் நாட்டில் ஏற்பட்ட நஷ்டங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஏறத்தாழ 40 கோடி ரூபாய்க்கு மேல் தமிழ் நாட்டில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டி, நாம் மத்திய அரசிடம் ரூ. 25 கோடி கேட்டிருக் கிறோம். இந்த நிலைமைகளையெல்லாம் நம்முடைய அமைச்சர்களும், முதல்வர் அவர்களும் நேரில் சென்று பார்த்ததற்குப் பின்னாலே தமிழக அரசின் கஷ்டமான நிலையிலே கூட ரூ. 5 கோடி ஒதுக்கியிருக் கிறார்கள். மத்திய அரசினிடமிருந்து ஒரு கமிட்டி வந்தது. அதோடு நம்முடைய தமிழகத்து அமைச்சரான திரு சி. சுப்பிரமணியம் அவர்களும், மற்றுமுள்ள அமைச்சர்களும் இந்தப் பகுதிகளுக்கு வந்து பார்த்து விட்டுப் போனார்கள். போனவர்கள் போனவர்கள் தான். கடந்த இரண்டு மாத காலமாக எந்தவிதமான பதிலும் அதற்குக் கிடைக்க வில்லை. நிவாரணம் என்பது உடனடியாக தரக்கூடிய ஒன்றே தவிர, 6 மாதம் ஒரு வருஷம் கழித்துத் தந்தால், செத்தவனுக்கு வாய்க்கரிசி போடுவது மாதிரி தான் ஆகுமே தவிர, உண்மையான பலன் மக்களுக்கு கிடைத்ததாக அர்த்தம் இல்லை.

11-00 மு.ப

மத்திய அரசாங்கம் — நேற்று கனம் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டது போல — சென்ற ஆண்டு 5 கோடி தேவை என்று கேட்டால் 20 கோடி தருகிறேன் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு 25 கோடி தேவை என்று கேட்டால், ஒன்றும் கேளாதவர்கள்போல் பேசாமல் இருக் கிறார்கள். அவர்கள் மெத்தனப் போக்கிலே இருக்கிறார்கள். "நமது ஆட்சியிலே பலம் இருக்கிறது, நம்மை யார் கேட்கமுடியும்?" என்று இப்போது நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் உதவி கேட்டால் திடீர் திடீர் என்று அது, இது என்று எதை எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, நாட்டு மக்களின் தேவையை உணர்ந்து அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய முன்வரவில்லை.

இந்த நிவாரண வேலையைப் பொறுத்தவரையில் என்னுடைய கருத்தை இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன். இப்படி வெள்ளம், புயல் ஏற்படுகின்ற நேரங்களில் எல்லாம் நிவாரணம் அளிப்பதை விட

அவைகளுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரத்தைக் காணவேண்டும். அப்பொழுதுதான் இந்த அபாயத்தைத் தடுக்க முடியும். அதற்கு, பெய்கின்ற மழை நீரை ஒரு சொட்டு கூட வெளியே போக முடியாமல் "பாண்ட் ஸ்கிம்"களை போட்டு நிறைவேற்ற வேண்டும். அடுத்து, தேக்கப்பட்ட நீரை சீராக, முறையாகப் பயன்படுத்த "ஸ்ட்ரீம் ஸ்கீம்"களைப் போட்டு, ஓடைகள், அணைகளைக் கட்டினால் இத்தகைய அபாயங்களை நிரந்தரமாக நம்மால் தடுக்க முடியும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். இதுவரையிலும் இந்தியா முழுவதிலும் எந்த மாநில அரசும் செய்யாத அறிவிப்பை நம்முடைய தமிழக அரசு செய்திருக்கிறது. தமிழகத்திலே இருந்த அன்றைய அரசாங்கம்கூட செய்யாத ஒன்றை இன்றைக்கு நமது கழக அரசு செய்திருக்கிறது. அதாவது, வெள்ளத்தால் அழிந்துபோன நிலங்கள் எல்லாம் அரசாங்கச் செலவிலேயே "ஃப்ரீ"யாக ரெக்ளமேஷன் செய்து தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பணியை மேற்கொள்கையில் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். மணல் மேடிட்ட பகுதிகளை ரெக்ளமேஷன் செய்வதற்கு அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் வெள்ளம் பாய்ந்து பள்ளம் தோண்டப்பட்ட இடங்களை தூர்ப்பதற்கு அதிகாரம் இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, முதலமைச்சரவர்கள் பள்ளங்களையும் தூர்த்துக் கொடுப்பதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு இந்த நேரத்தில் நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், கைத்தறி நெசவாளர்களுக்குக் கூட உதவியளிக்கும் அறிவிப்பு ஒன்று வந்திருக்கிறது. ஒவ்வொரு கைத்தறி நெசவாளருக்கும் பாதிக்கப்பட்ட சாமான்கள் வாங்கிக் கொள்வதற்கு 100 ரூபாய் வீதம் இனாமாகத் தந்திருக்கிறார்கள். அதைக் கூட இந்தியாவிலேயே இந்த அரசு ஒன்றுதான் செய்திருக்கிறது ; இதுவரையிலே வேறு எந்த அரசும் செய்யவில்லை. அதற்காகவும் நான் அரசாங்கத்தையும், டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

பொதுவாக, வெள்ளம் — புயல் இவைகளினால் வீடிழந்தவர்களுக்கு நமது அரசாங்கம் இதுவரையிலும் 40 ரூபாய் வீதம் உதவித் தொகை அளித்து வந்தது. இப்போது 80 வீதம் ரூபாய் வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல, கடனாக 250 ரூபாய் வீதம் கொடுப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். நமது அரசின் இந்தச் செய்கையை ஏழை எளிய மக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். இதிலே இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாம் இன்று நகரப் புறங்களிலே குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தருகிறோம். அதே நேரத்தில் கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள், அரிசனங்கள் இவர்களின் நிலைமையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்கள் எல்லாம் இன்றைக்கு இருக்க இடம்



இல்லாமல், பல இடங்களிலே — தண்ணீர் கசிந்து வரும் இடங்களில் குடிசைகட்டி, கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு ஆர்டினன்ஸ் பிறப்பித்தாவது புறம்போக்கு நிலங்களை அல்லது பட்டா நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுக்க வேண்டும். அதோடு அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு குறைந்தது ஒரு நபருக்கு 500 ரூபாயாவது தருவதற்கு, இப்போது இல்லாவிட்டாலும் அடுத்த பட்ஜெட்டிலாவது முதலமைச்சரவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தோமானால், ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள் எல்லாம் இந்த அரசுக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள், இந்த அரசை மனமாரப் பாராட்டுவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கிணறுகள் மூடிக்கிடக்கின்றன. மோட்டார் பம்புசெட்டுகள் எல்லாம் கெட்டுப்போய் கிடக்கின்றன. பவர் கட்டும் இருப்பதால் ஆயில் பம்புசெட்டுகளைத்தான் பயன்படுத்துகின்ற நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். அதனால் ஆயில் விலை அதிகமாகும். அதனால் சென்ட்ரல் கவர்ன்மெண்டிலே சொல்லி, எண்ணெய் விலையைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தூர்ந்துபோன கிணறுகளைச் சரி செய்வதற்காக ஆலங்குளம் சிமிண்ட் தொழிற்சாலையிலிருந்து சிமிண்ட்டை பெற்று, பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக குறைந்த விலையில் சிமிண்ட் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

அடுத்து, கெமிக்கல் உரங்களை எடுத்துக்கொள்வோமானால் நமக்கு கிட்டத்தட்ட 6 லட்சம் டன் நைட்ரஜன் தேவைப்படுகிறது. ஆனால் 1·30 இலட்சம் டன்கள் தான் கிடைத்திருக்கிறது. நமது நாட்டிலே ரசாயன உரங்கள் உற்பத்தியாகாமல் இல்லை. நமது நாட்டில் உற்பத்தியாவதே நமக்குப் போதும். நெய்வேலி, எண்ணூர், மணலி போன்ற இடங்களில் யூரியா ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கே உற்பத்தியாகும் உரங்கள் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்பட வேண்டியிருப்பதால், நமக்கு பற்றுக்குறை ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் வெளி மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறது. "மாநிலச் சுயாட்சி" என்று முதலமைச்சரவர்கள் கேட்கின்றபோது பலருக்கு கோபம் வருகிறது. மாநில சுயாட்சி கிடைத்தால் நமது தேவைக்குப் போக மீதமுள்ளவற்றை மட்டும் கொடுத்தால் போதும். இப்போது வெளியே போவதைத் தடுக்க நமக்கு அதிகாரம் இல்லை.

அடுத்து நீர்வளங்களை சீரிய முறையில் பயன்படுத்துவதற்காக மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைப்பது குறித்து ஆளுநர் உரையில் அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு பாசன மேம்பாடு செய்யும் திட்டமாகும் (மணியடிக்கப்பட்டது). இதன் மூலம் நீர்நிலைகளை எல்லாம் ஒருங்கிணைத்து, நீரினைத் தேக்கி வைத்து, சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அர்பன் லாண்ட்..............(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, மத்திய சர்க்காரிடம் பஞ்ச நிவாரணமாக 5 கோடி கேட்டோம், 15 கோடி கொடுத்தார்கள் என்று ஏதோ சொன்னார்கள். அதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அதைப்பற்றி முதலமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது விளக்குவார்கள்.

திரு. கோவை செழியன் : நான் பேசும்போது என்ன சொன்னேன் என்பதை விளக்கி விடுகிறேன். சென்றமுறை வெள்ள நிவாரணம் என்று சொன்னவுடன், நாம் என்ன கேட்டோமோ அதற்கு அதிகமாகவே கொடுத்தார்கள். 5 கோடி கேட்டோம், 20 கோடி கொடுத்தார்கள். இப்போது கெஞ்சிக் கெஞ்சிக் கேட்கிறோம்; பேசாமல் இருக்கிறார்கள். இதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்ற முறை ஏற்பட்டது வறட்சி. இப்போது ஏற்பட்டது வெள்ளம்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

DR. H. V. HANDE : In support of the amendments given by my party, I want to state, Mr. Deputy Speaker, a few things. At the very outset I would like to say that the Governor's Address is full of platitudes and claims, which have absolutely no relationship to the dismal siteeation obtaining in the State. I shall briefly state a few points. What a shame the State Government which has been indulging in frequent vizhas எலக்ட்ரிசிட்டி முழுமையாக்கும் விழா—of extending electricity is about to plunge the entire state into total darkness. I put the entire blame on the Government for the gross mismanagement by the Electricity Board. The Chief Minister was probably more concerned three months ago about the power crisis in his party rather than the power crisis in the State. There is total victimisation of opposition parties. Industries are coming to a halt. Agricultural operations have come to a standstill. A few colleges are still closed. The State is threatened with political instability. Almost all the municipalities have failed even to keep the towns and cities clean. They are infact replete with a highly insanitary condition full of mosquitoes, flies and infectious diseases. There is great disquiet in labour front. Because of the maladminstiration of the D.M.K. labour is ridden with factional fight. Teachers are totally dissatisfied. Prices are soaring sky high, unemployment problem is becoming worse day by day. Yet we have a Governor's Address which tries to paint a rosy picture of our state of affairs. It is totally blind to facts. There is wilful and deliberate plan to suppress unpleasant facts. This is so far as Governor's Address is concerned.



With regard to victimisation of political parties, I wish to me ntion certain instances. The Hon. Chief Minister may ask, where is the proof. I will mention a few instances which will clearly bear out the facts which I am going to state. Let me come to my own constituency. In Ashta Bhujam Road, there is a gentleman called, Thiru Abdul Rahim. He belongs to Anna Dravida Munnetra Khazhagam. Many members of the ruling party also know him very well. On 4th February 1973 at about 11-15 a.m. his house was raided by a number of police constables from G-1 Vepery Police Station, Madras. On that day they told Thiru Rahim that three persons, Thiruvalargal Hameed, Hussain and Rashid were wanted by the Sub-Inspector of Police, G-1, Vepery, for certain crimes purported to have been committed by them. Thiru Rahim told them that one of them, Thiru Hussain was at Pondicherry and the other two were not there and as soon as they came they would be produced. Subsequently he telephoned to the police station but the Sub-Inspector was not there and for that matter no responsible person was there to receive his message. Someone asked him to come to the police station. As he had gone to the hospital to see his sister who was hospitalised for delivery, he could not go to the police station before 2-30 p.m. Then at about 11-15 p.m. they were awakened by a loud knock on the main gate of his house. Before they could open the gate some 40 police constables in mufti and in uniform trespassed into his house by climbing over the gate and started beating everybody who came on the way and forcing the doors open in every room, where there were gosha women also. They dragged away all the male members and children from each and every room. When he asked them with what authority they had entered into his house, they closed his mouth with a blow on his mouth. Then they had broken the window, doors, big photographs and threw all the belongings in a pellmell. I have taken the permission of the Chair to show a few photographs. Thes first photograph shows the family photos being torn. Another photo shows the doors coming out of the hinges, etc. Another photo also show the family members. It is with a great a mount of anguish that I am telling this tragic tale of woe. Why this has happened ? The Inspector is directly responsible for this. The entire G-1 Police is in the hands of one or two persons belonging to the ruling party and I can mention the names of those persons. They are constantly dictating to the police people that this should be done and that should be done. I want to know why such violence should be unleashed on the innocent people. This is definitely an important matter and unless the police is instructed to behave in a disciplined manner, the entire Government will be blamed by the public. I am striking a note of warning that if this state of affairs continues there will be lot of difficulty to the Government and they will notbe able to control the law and order. Not only that. The Government. will create lakhs and lakhs of enemies among the innocent public.

Then I come to the Dindigul incident. At Dindigul a drama was conducted on 7th January 1973. There was confusion in the drama when Thiru M. R. Radha uttered a few words about opposition Party leaders. This irritated the local D.M.K. members. On the same night at about 2 a.m. a group of D.M.K. men with deadly weapons went to the house of Mr. V. M. U. Subbaraman, a Swatantra Councillor. They were told that Mr. Subbaraman was out of station. Then the group of men had beaten up his brother and son. A number of Opposition party members' houses were attacked with stones. A complaint was lodged with the police. No action has been taken. I am mentioning these things so that the Government can rectify the situation. Otherwise, the situation will get out of their control.

Then I come to the Alangudi incident. On 7th January 1973 the Hon. Minister for Education had come to Alangudi to address a public meeting. While he was coming for the meeting black flag was shown to him. While addressing the meeting the Hon. Minister said : 'போலீஸ்காரர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள்' I do not know in what context he told it.

Then the Police mistaking the Minister's words beat them mercilessly, at about 12-30 a.m. The same night a group of D.M.K. goondas with deadly weapons like iron rod, knife, etc.. and also with police went to the House of Ramachandran, Congress (Organisation) worker. He was not in the house. Then the group went to a number of opposition party members' houses. The panicky stricken people locked their houses inside. But the D.M.K. group climbed the roof and removed the tiles and got into the houses. ஓடுகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

Then they beat the inmates including women. What a tragic situation ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் மட்டும் நான் கூற விரும்புகிறேன். அன்றையதினம் இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. கரம்பக்குடிக் கூட்டத்திற்கும் சென்றேன், ஆலங்குடி கூட்டத்திற்கும் சென்றேன். கரம்பக்குடி கூட்டத்தில் கறுப்புக்கொடி காட்டப்பட்டது. அதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. அந்தக் கூட்டத்திற்கு இடையிலேயும் குழப்பம் விளைவித்தார்கள். வழியிலேயே கறுப்புக்கொடி காட்டினார்கள். ஆனால் அவர்களுடைய ஊர்வலத்தை வேறு பக்கமாகத் திருப்பி விட்டார்கள். கரம்பக்குடியிலே கறுப்புக்கொடி காட்டிய இடத்திற்கும் கூட்டம் நடந்த இடத்திற்கும் 2



பர்லாங் தூரம் இருக்கும். நான் அந்த இடத்தைத் தாண்டி பாதிக்
கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது கூட்டத்திற்கு வந்துவிட்டேன். நான்
வந்ததற்குப் பின்னால் 2 பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தக்
கூட்டம் நடந்த இடத்திற்கு எதிரிலே ஒரு மைதானம் இருக்கிறது. அந்த
மைதானத்திற்குப் பக்கத்திலே ஒரு கால்வாய் இருக்கிறது. அதற்குப்
பக்கத்திலே பெருவழிச்சாலை ஒன்று இருக்கிறது. கறுப்புக்கொடி காட்டிய
வர்கள் அவர்கள் கறுப்புக்கொடி காட்டிய இடத்திலிருந்து கூட்டம் நடக்
கிற இடத்திற்கு வந்து அந்தக் பெருவழிச் சாலையண்டை நின்றுகொண்டு
பெரும் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூச்சலுக்கு இடை
யிலே எங்கள் கூட்டத்திலிருந்தவர் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது
அந்தப் பக்கம் இருந்தவர்கள் கற்களை எறிந்தனர். கூட்ட அளவிற்கு கற்கள்
வரவில்லை. ஆனால், போலீசார் நின்ற இடத்திற்கு கற்கள் வந்தன.
கூச்சலும் போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் பேசும்போதும் கூச்சல்
போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் பேசிக்கொண்டே இருந்தேன். கூட்
டத்திலே இருந்தவர்கள் பாய்ந்துகொண்டு, விரைந்துகொண்டு போகக்
கிளம்பினார்கள். நான் காவல் துறையினர் அமைதியாக இருக்கிறார்கள்,
அவர்கள் பார்த்துக் கொள்வார்கள், நீங்கள் அமைதியாக இருங்கள்
என்று சொன்னேன். நீங்களும் போய் தாக்குங்கள், அங்கே உங்கள்
கை வரிசையைக் காட்டுங்கள் என்று சொல்லமுடியும் ? ஆனால் ஒரு
கல் கூட கூட்டத்திற்கு வரவில்லை. ஆனால், போலீசாரில் 9 பேருக்குக்
காயம். ஒரு ஹெட் கான்ஸ்டபிள் அங்கேயே சுருண்டு விழுந்து விட்டார்.
அதற்குப் பிறகு ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு அவர்களை அப்புறப்படுத்தி
விட்டார்கள். நான் ½ மணி நேரம் பேசிவிட்டு புதுக்கோட்டைக்குச் சென்று
விட்டேன். அதற்குப் பிறகு அங்கு கலவரம் நடந்திருக்கிறது, கண்ணீர்
புகை விட்டிருக்கிறார்கள், இரண்டு தரப்பிலும் கைது செய்யப்பட்டிருக்
கிறார்கள், வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, போலீஸ்காரர்கள்
பார்த்துக் கொள்வார்கள் என்றால், கண்டவர்களை எல்லாம் அடியுங்கள்
என்பதற்காகவா நான் சொன்னேன். அந்த இடத்திலே கழகத்தவர்
களைப் பார்த்து, நீங்கள் திருப்பித் தாக்காதீர்கள், நீங்கள் அங்கு போகாதீர்
கள், நீங்கள் அமைதியாக இருங்கள், போலீசார் பார்த்துக் கொள்வார்கள்
என்று சொன்னேன். போலீசார் பார்த்துக் கொள்ளாமல் யாரைவிட்டுப்
பார்த்துக் கொள்ளச்சொல்வது? நிலைமையை அவர்கள் பார்த்துக் கொள்
வார்கள், நீங்கள் அமைதியாக உட்காருங்கள் என்று சொல்வது தூண்டுவ
தாகாது. ஏற்கனவே அன்றைக்கு 9 பேர் அடிபட்டு வீழ்ந்து, ஒரு
ஹெட் கான்ஸ்டபிள் சுருண்டு விழுந்ததற்குப் பிறகும் அவர்கள் தாக்கி
இருக்கிறார்கள். அவர்கள் அடித்தது, 9 பேர்கள் அடிபட்டு வீழ்ந்தது,
இவற்றை எல்லாம் ஹாண்டே அவர்கள் ஆதரிக்கிறார்களா ? அதற்குப்
பிறகு அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டதையெல்லாம் ஹாண்டே
அவர்கள் ஆதரிக்கிறார்களா ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : போலீஸ்காரர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று பொதுவாக நீங்கள் சொல்லி, அதனுடைய விளைவாக போலீஸ்காரர்கள் அவர்களை அடிக்க வேண்டுமென்ற அந்த முறையிலே அவர்கள் அர்த்தம் எடுத்துக் கொண்டார்கள் என்பதுதான் என்னுடைய

குற்றச்சாட்டு. எனக்கு வந்திருக்கிற தகவல், மேல்சபை உறுப்பினர் சாமிநாதன் அவர்களை அங்கு அனுப்பி, அவைகளையெல்லாம் பார்த்து சேகரித்தவைகளை வைத்துத்தான் பேசுகிறேனே தவிர வேறல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநிலம் முழுவதும் எத்தனையோ நூற்றுக் கணக்கான ஊர்களுக்குப் போகிறோம். எல்லா இடங்களிலும் எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். பல ஊர்களிலே பல அரசியல் கட்சிகள் இருந்தும் கூட்டங்கள் அமைதியாக நடந்திருக்கின்றன. சில இடங்களில் தான் இவ்வாறு நடைபெறுகிறது. ஆகவே, போகிற இடங்களிலே போலீஸ்காரர்கள் பார்த்துக் கொள்வார்கள், யார், யார், எதிர்க்கிறார்களோ, அவர்களை அடியுங்கள் என்று சொல் கிறோம். போலீஸ்காரர்கள் பார்த்துக் கொள்வார்கள், நீங்கள் அமைதி யாக இருங்கள். 'taking the law into their own hands' என்ற அந்த நிலைக்குக் கழகத் தோழர்கள் போகவேண்டாம், போலீசார் பார்த்துக் கொள்வார்கள் என்று சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர்கள் கறுப்புக்கொடி காட்டியதாலே உங்களுக்கு ஆத்திரம் வந்திருக்கலாம், வராமலிருக்கலாம்.........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கறுப்புக்கொடி காட்டிய தைப்பற்றி குறிப்பிடுகிறார்கள். கரம்பக்குடியிலே கறுப்புக்கொடி காட்டினார் கள், பல ஊர்களிலே கறுப்புக்கொடி காட்டியிருக்கிறார்கள். 40, 50 இடங்களிலே அனுமதித்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் எங்கள் கட்சிக் கொடியிலே பாதி கறுப்பு. அதை ஏற்றுக்கொள்வதிலே எங்களுக்கு மகிழ்ச்சி. கரம்பக்குடியிலே காட்டினார்கள், அதை ஏற்றுக் கொண்டோம். அதிலே ஏற்பட்ட ஆத்திரமல்ல. அதோடு நிற்கவில்லை அவர்கள். அவர்கள் கல்லெறிந்தது அதையெல்லாம் உறுப்பினர் அவர் கள் ஒப்புக்கொள்கிறார்களா ? கல்லெறிந்ததனால் 8 அல்லது 9 போலீசார் அடிபட்டு விழுந்ததை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கறுப்புக்கொடி உங்களுடைய கொடியாக இருக்கலாம். அது வேறு விஷயம். அது வந்தால் நீங்கள் எப்படி அமைதியாக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அவர்களை எல்லாம் சிறையிலே வைக்கக் கூடிய அளவுக்கு அல்லது அப்புறப்படுத்தக் கூடிய அளவுக்கு காரியங்கள் நடக்கும். பாதி கொடி, அது, ஆகவே, ஒன்றும் செய்யாதீர்கள் என்று போலீசாருக்கு உத்தரவு போடுங்களேன். பாதி கொடி தானே அது. அதல்ல நான் சொன்னது. உங்களுடைய பேச்சை தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். அது மட்டுமல்ல, அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் சென்ற பிறகு அன்று இரவு நடந்திருக்கக் கூடிய சம்பவங்கள் அதைப்பற்றி அங்கு சொல்லியிருக்கிறார்கள். ஆதாரபூர்வமாக, தைரியமாக அறிக்கை தயார் செய்து சுப்பையா உடையார் அவர்கள்..............

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். தலைவர் அவர் களே, இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் எந்தக் குற்றச் சாட்டானு லும் எந்தப் புகாரானாலும் அமைச்சர்கள் ஒரு பதில் சொல்லிவிட்டால்,



(குறுக்கிடு). இந்த மன்றத்தைப் பொறுத்து சம்பந்தப்பட்ட அமைச்சரோ அல்லது உறுப்பினரோ அதற்குத் தகுந்த பதில் சொல்லிவிட்டால் அதைத் தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விதிமுறைகளிலே இருக்கின்றன. எங்கேயோ ஒரு ஊரிலே இருக்கிறவர் எழுதிய கடிதத்தை வைத்துக் கொண்டு அது தான் சரி என்று சொல்வது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன். அங்கத்தினருக்கு இருக்கிற உரிமையைப்பற்றி தங்கள் தீர்ப்பைக் கோருகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் சொன்னதை நான் ஏற்றுக் கொள்ளவே தயாராக இல்லை. அமைச்சர் சொன்னது முழுக்க முழுக்க வேறு ஒரு தன்மையில் இருக்கக்கூடிய காரணத்தால், அதை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. நான் எதிர்க்கட்சியிலே இருக்கிறேன். We do not at all accept so many things that the Minister says. நியாயமாக இருந்தால் ஒத்துக் கொள்ளலாம். இங்கு வந்து என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம் என்பது அவர்களுடைய உரிமையே தவிர, வேறு ஒன்றுமில்லை. (குறுக்கீடு). அமைச்சர்கள் வாயிலே வந்தது என்ற காரணத்திற்காக ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று அல்ல. (குறுக்கீடு). நியாயமாக இருந்தால் ஒத்துக் கொள் கிறோமே தவிர, வேறு ஒன்றுமல்ல.

அடுத்து செஞ்சி. அங்கேயும் இதைப்போல் ஒன்று நடந்திருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், இப்பொழுது பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய இராமமூர்த்தி அவர் இப்பொழுது பிரசிடெண்ட் ஆப் தி கோவப்பரேடிவ் சொஸைட்டி (குறுக்கீடு) பூரா விவரங்களையும் வைத் திருக்கிறேன். ஸ்தாபனக் காங்கிரஸைச் சேர்ந்த இராமமூர்த்தி சொன்ன விஷயங்களெல்லாம் விவாதத்திற்குரிய விஷயங்களாக இருந்தன. அந்த அளவுக்கு ஸ்தாபனக் காங்கிரஸ்காரர்கள் தாக்கப்பட்டதை அவர்கள் வேதனையோடு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு அறிக்கை தயார் செய்திருக்கிறார்கள்.

My conclusion is so far as law and order situation is concerned there is total failure. There is wilful positive victimisation against the opposition party members. That is very very strong. If this is going to continue, there is serious danger. This will definitely bring the whole State into a tremendous state of discontentment. That is what is going to happen. I would request the Hon. Chief Minister to realise this. Of course he will get report from the Inspector-General of Police and District Superintendents of Police. He will be fed with police reports. Let me say that I have totally lost confidence in the reports, police reports that are fed to the Chief Minister repeatedly by the police officials. I have seen this on several occasions. I have lost confidence in those reports. I therefore want the Chief Minister to give serious consideration to the points of view expressed by different members here with regard to victimisation of political parties. Let him not believe in police re alone.

Mr. DEPUTY SPEAKER : The Hon. Member has taken 23 minutes.

Dr. H. V. HANDE : I have just started. You must give time for interruption by the Hon. Minister.

Mr. DEPUTY SPEAKER : For that I will give 5 minutes. There are number of other speakers.

Dr. H. V. HANDE : From my party, only two members have spoken.

Mr. DEPUTY SPEAKER : I think hereafter leaders of parties should confine their speeches to 20 or 30 minutes.

Dr. H. V. HANDE : I have just covered only marginal points. Let us not waste time on this. I shall finish quickly.

11·30 மு.ப. Now, again, I want to say about the Government which say that they are believers in 'Manila Suyatchi'. Almost in every municipality where the Opposition Members are running, whether it is Tiruchirappalli Municipality headed by Dr. Ranganathan or the Suramangalam Town Panchayat headed by Thiru S. S. Raghavachari or the Gudiyattam Municipality headed by Thiru M. G. Amurthalingam, there is step-*motherly* treatment shown by the Government. If more time is given, I will quote a lot of such instances. Thiru S. S. Raghavachari is the President of the Suramangalam Town Panchayat and he belongs to the Congress (O). He had sent a memorandum to the highest authority of the State. There is one gentleman, who is the Panchayat Executive Officer. The people of Suramangalam are *suffering from* the atrocities of the Executive Officer who is kept there at the behest of the Hon. Minister for Education. As mentioned in the memorandum, the District Collector and all the officials are made ineffective and their orders inoperative by the Hon. Minister for Education who passed fresh orders to protect the Executive Officer.

In September 1971 the then Executive Officer was transferred and an officer from Mallasamudram Block was posted to Suramangalam, by the District Collector. Before he joined duty here, orders came from Madras, presumably under instructions from the concerned Minister that one local citizen who was Extension Officer (Panchayats) at Puduchath-rum was posted to Suramangalam. This, Mr. R. Govind, the present Executive Officer, has been objected to by the Panchayat Council and a number of allegations have been made against him. Now this gentleman has become so powerful that the Panchayat Council can do nothing. Every order passed by the Panchayat Coucil or the President is rescinded or revoked by the Executive Officer. The President who has been



elected by about 25,000 people has absolutly no power but the officer appointed by the Hon. Minister against the orders of the Collector, has got a lot of powers. What does it mean? If time is given, I will give full details........

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, ஒரு அமைச்சர் பார்த்து ஒருவரை வைத்தார் என்று சொல்வது கடுமை யான குற்றச்சாட்டு. குற்றச்சாட்டுகள் இருந்தால் அவற்றைச் சொல்ல வேண்டும். தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். அவர்கள் வேண்டுமென்றால் குற்றச்சாட்டுகளைக் கொடுக்கலாமே தவிர, அந்தக் தலைவர் அந்த எக்ஸிகியூடிவ் அதிகாரி மீது குற்றங்கள், இருந்தால், அரசாங்கத்திற்கோ அல்லது மேலதிகாரிக்கோ அனுப்பினால், தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பார்கள். அதை விட்டு விட்டு ஆதாரமில்லாமல் குற்றம் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, on 28th April 1972 the Collector seeing the 'Kuttrachattugal' passed oredrs of transfer, transferring him to Panamarathupatti and posting one Mr. Chickannan to Suramangalam. On 29th April 1972 and subsequent days, Mr. Chickannan came to the Panchayat Office and asked for the charge to be handed over. Mr. Govind did not hand over charge....

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : ஒரு அதிகாரியை மாற்றுவதற்கும் போட்ட அதிகாரியை மாற்றுவதற்கும் உரிமை இருக் கிறது. அதன்படி செய்கிறார்கள். குற்றம் இழைத்தவர்களுக்குப் பதவி கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருது கிறார்களா ?

Dr. H. V. HANDE : A few days later, due to the intervention probably by the Hon. Minister for Education, the orders of transfer were kept in abeyance; and still the orders of transfer were kept in abeyance; and still the orders of transfer have not been carried out and Mr. R. Govind continues to further spoil the Panchayat and the civic affairs by continuing to be the Executive Officer in spite of the orders passed by the Collector in April 1972.

This Executive Officer is very corrupt. About forty specific instances of corruption and receiving of graft money by this Executive Officer have been reported to the concerned authorities. Still no action has been taken. . . .

Thiru M. A. LATHEEF : The Hon. Member is just having some document from which he is reading. I would like to know the source of information from which he got that document and also whether it is an authentic document. Also whether he has taken the prior permission of the Chair to read from it. . .

MR. DEPUTY SPEAKER : I do not think it is a document. He is having some notes to refresh his memory and to have cogency. He may refer to it here and there and the total contents should not be read out.

DR. H. V. HANDE : Sir, my contention is that....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே, உங்கள் பேச்சைப் பற்றி குறைச் சொல்ல எனக்கு உரிமையில்லை. ஆனால் நான் கவலைப்படுவதெல்லாம் இந்த அவையினுடைய நேரம்பற்றித்தான். அரசாங்கத்திற்கு ஒரு பிரச்னை இருக்கலாம், உங்களுக்கு ஒரு பிரச்னை இருக்கலாம். அதே நேரத்தில் இந்த அவையினுடைய நேரத்தையும் நீங்கள் பார்க்க வேண்டும். நீங்கள் கிட்டத்தட்ட 11-05க்கு ஆரம்பித்தீர்கள். இப்பொழுது கிட்டத்தட்ட 11-35 ஆகிறது. இன்னும் 5 நிமிடங்களிலாவது முடித்துவிடுங்கள். மற்றவர்களுக்கும் பேசுவதற்கு நேரம் கொடுக்க வேண்டும். இதைப்பற்றியெல்லாம் நீங்கள் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் டிமாண்டிலே பேசலாம். இப்பொழுது ஜெனரலாகப் பேசலாம்.

DR. H. V. HANDE : Sir, now I come to the most important aspect of the matter. A book containing the reply to the Memoranda presented to the President of India by the Honourable Chief Minister has been laid on the table of the House... Most of the answers contained in the book are not at all satisfactory and convincing and a number of loopholes are there. First of all, let me refer to charge No. 9 relating to D.M.K. Party and Private Trusts (page 237). In the reply it is stated—

'Thus, a fund of Rs. 10,50,000 was created in four of the said Charitable Trust.'

My charge is that the said Trust was created in favour of the Chief Minister primarily and Mr. Nedunchezhian secondarily as per the confession [page 242 (3) (*b*)]. The two authors of the Trust, Thiru M. Karunanidhi and V. R. Nedunchezhian shall be permanent Trustees who shall hold office for their life-time. I would consider it as a farcical thing. It is stated [page 242 (5)] that the "majority decision shall prevail among the trustees. The quorum of the meeting of the Trustees shall be two". Does anybody still have any doubts about the objectives and the *modus operandi* of this Trust(?) Now let us take clause 12. "The Trustees shall have the power to accept contributions in money or property, movable or immovable either by way of additions to the Trust funds generally or for any or all of the more specified objects of the Trust such contributions being treated as part and parcel of the Trust Fund'.



Who shall operate this mighty trust ? Who is the Managing Trustee? The answer is in your own book [page No. 246 in (*c*)] of supplementary deed which says as follows: "Thiru M. Karunanidhi who is the Chairman of the Trust shall also be designated as the Managing Trustee who shall have the power of management of the Trust". Is there any restraint ? No. (c) says: "The Managing Trustee is empowered to represent or act for the Trust in any matter concerning the properties funds, investments, borrowings and the making or cancellation of any instruments for any of these purposes." There is no restraint whatsoever. Of course (2) on page 245 is there. It says: "The trustee shall not in any way be responsible or liable for any loss resulting to the Trust by reason of any or more of the acts of trustees in relation to the properties of the trust while dealing with them in the manner authorised herein".

Then what is the point in creating the trust ? What shall we call such a Trust ? I shall call them as "Karunanidhi and Nedunchezhian trust"– a trust of them, by them, for them.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஒரு பார்ட்டிக்கு டிரஸ்ட் இருக்கிறதோ, என்ன செய்கிருர்களோ, அது வேறு விவகாரம். தி.மு.க. விற்கு டிரஸ்ட் ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு யாரைப் போட்டிருக்கிருர்கள் என்பதைப்பற்றிப் பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமையிருக்கிறதா ? முதலமைச்சர் என்ற அந்தப் பதவிக்கும், பார்ட்டி டிரஸ்டிற்கும் ஏதேனும் சம்பந்தமிருக்கிறதா ? அவர்கள் என்ன முதலமைச்சர் பதவியிலேயே எப்பொழுதும் இருக்கப் போகிருர்களா? அதற்காக மேனேஜிங் டிரஸ்டியாக இருக்கக்கூடாது என்று பார்ட்டிக்கு அட்வைஸ் செய்ய இவர்களுக்கு என்ன உரிமையிருக்கிறது ? இது இந்த மன்றத்திலே இல்லாத ஒரு புதுமையாக இருக்கிறது.

DR. H. V. HANDE : I have mentioned clearly in my opening paragraphs. If only the Honourable member had followed my earlier speech, he would have understood the position. I again say that this trust, the 'Karunanidhi and Nedunchezhian trust' is a trust of them, by them, for them.

Then I come to Thanjavur Co-operative Urban Bank.

(The Deputy Speaker sounded the gong.)

DR. H. V. HANDE : I shall finish quickly.

MR. DEPUTY SPEAKER : The Hon. Member must know that he has taken more time. There are other Honourable Members to speak.

Dr. H. V. HANDE : I must be given some more time. Other than this opportunity, we may not have time.

Mr. DEPUTY SPEAKER : On this Co-operative Bank, you can bring a motion and talk. Please confine to the points in the Governor's Address.

Dr. H. V. HANDE : I have not even covered major points.

Mr. DEPUTY SPEAKER : You should have covered the point in the beginning.

Dr. H. V. HANDE : It is stated with regard to Thanjavur Co-operative Urban Bank as follows :—

"The charge that a sum of Rs. 2 lakhs was taken by one Rajamanickam, Advocate belonging to the D.M.K. Party has not been denied except that there has been no misappropriation of funds by Thiru Rajamanickam". This is there in 14-B of Page 276.

திரு. கோ. இளங்கோவன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். தஞ்சை கூட்டுறவு நகர வங்கியில் நான் தலைவராக இருந்திருக்கிறேன். வழக்கறிஞர் இராஜமாணிக்கம் உறுப்பினராகக்கூட இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருப்பதாக அவர்கள் நிரூபிக்கத் தயாரா? இப்படிப்பட்ட தவறான செய்திகளைச் சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு சவாலெல்லாம் விடக்கூடாது.

Dr. H. V. HANDE : I am only reading from your book.

Mr. DEPUTY SPEAKER : But the hon. Member says that there is no such "Rajamanickam" in that bank.

Dr. H. V. HANDE : I am quoting only from your book.

இந்தப் புத்தகத்திலே போட்டதைச் சொல்கிறேன். இராஜமாணிக்கம் என்பவர் இருக்கிறாரா இல்லையா என்பதற்கு நான் வரவில்லை. பக்கம் 276-ஐ எடுங்கள். அதில் கிளியராக இருக்கிறது.

There is no misappropriation of funds by Rajamanickam. That is what is stated in your answer. I am putting a further question and trying to elicit an answer from the Hon. Chief Minister ? Was this amount withdrawn ?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : இராஜமாணிக்கம் என்று ஒருவர் இல்லை என்று சொன்னால் உடனே "அமௌண்ட்டை" ப்பற்றிச் சொல்கிறார்கள். வேறொரு அமௌண்டைப்பற்றிச் சொல்வது என்றால் அது என்ன ஆராய்ச்சியா, கற்பனையா அல்லது ஜோசியமா? வேறு யாராவது செய்திருந்தால், அதைப்பற்றிச் சொன்னால் பரிசீலிக்கலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : உங்கள் ஆன்சரிலேயே க்ளியராக இருக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குற்றச்சாட்டைப் பொறுத்த வரையில் இல்லாத ஒருவரை இருப்பதாகக் கற்பனையாகச் சொல்லப்பட்டது. ஆளே இல்லாமல் இருப்பவர்மீது குற்றஞ்சாட்டியது தவறு.

திரு கோ. இளங்கோவன் : பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன், கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்கிலே ஒரு உறுப்பினர் இரண்டு லட்சம் ரூபாய் டிரா பண்ண முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, கூட்டுறவில் 5,000 ரூபாய்க்குமேல் கடன் வாங்க முடியாது. இரண்டு லட்சம், இராசமாணிக்கம் என்று சொல்வது கதை, அவ்வளவும் கொஞ்சம் கூட உண்மை கிடையாது.

Dr. H. V. HANDE : I have asked another specific question. I have also got some facts. I am asking the Chief Minister a question and I want a specific answer from him. I am trying to elicit information from him. What all I have quoted is from your own book ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்களுடைய புத்தகத்திலே இருக்கிறது, உங்களுடைய புத்தகத்திலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். குற்றச்சாட்டிலே இராஜமாணிக்கம் என்று இருக்கிறது. ஆனால் பதில் என்ன இருக்கிறது? அதை விட்டுவிட்டு உங்கள் புத்தகத்திலே இருக்கிறது, உங்கள் புத்தகத்திலே இருக்கிறது என்று சொன்னால் என்ன பொருள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் முழுவதையும் படிக்க மாட்டார்கள். ஆனால் நான் படித்துக் காட்டுகிறேன்.

The charge is that in the Thanjavur Urban Bank, a sum of Rs. 2 lakhs was taken by one Rajamanickam, Advocate, belonging to the D.M.K. party and that a criminal case is pending against him.

பிறகு எது "வேஃக்" என்பதை மன்றத்திலேயும் படிக்கிறேன். முடிவு கட்டட்டும்.

[திரு. செ. மாதவன்] [1973 பிப்ரவரி 9

There are two Co-operative Urban Banks in Thanjavur, one is the Karunthattankudi Dravidian Co-operative Urban Bank and the other is the Nicholson Co-operative Town Bank. Both the banks are working well and there has been no report of misappropriation of funds by Thiru Rajamanickam or any other person to the extent of Rs. 2 lakhs or any other sum, in either of these two Co-operative Banks, as alleged.

இதைவிட விளக்கமாக எப்படிச் சொல்வது என்று புரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் பு. கருணாநிதி: தலைவர்களே, அடுத்த குற்றச்சாட்டையும், அதற்கு இந்த அரசு அளித்த பதிலையும் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அடுத்த குற்றச்சாட்டு,

The charge is that the President of the Thanjavur Central Co-operative Bank by name Thiru B. Manickavasagam has " swindled Rs. 2 lakhs."

அதற்குப் பதில்,

The said Manickavasagam has been arrested and criminal proceedings are pending against him and the matter is under investigation.

ஆகவே, இந்த அரசு தவறு செய்தவர்களின் மீது யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கும் என்பதற்கு இரண்டாவது பதில். அதைப் பாராட்டிப் போற்றுவதற்கு முடியாத ஹாண்டே அவர்கள் இல்லாத குற்றச்சாட்டைக் கொடுத்ததற்கும் அதற்குத் தந்திருக்கிற பதிலையும் வைத்துக் கொண்டு இரண்டும் உங்களுடைய புத்தகத்தில் இருக்கிறது, ஆம் உயிரோடு இருக்கிறான் என்று சொன்னால் அது வேடிக்கையாக இருக்கிறது.

Dr. H. V. HANDE . Sir, I am only asking the question .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த பாயிண்டுக்கு போகலாம்.

Dr. H. V. HANDE : Then I come to the " Nagerwala case " of Tamil Nadu relating to the Dharmapuri Co-operative Central Bank Ltd. " The charge that this Bank has given benami loans under D.M.K. President's orders to the tune of Rs. 52 lakhs " has not been contradicted. Instead, the answer is only " There is absolutely no basis for the allegation that there had been benami loans ". May be, there had been no benami loans, but were not loans given at the specific dictates of the D.M.K. President. Please go through the answer.



1973 பிப்ரவரி 9] [Dr. H. V. Hande]

Thiru V. R. Ganapathy, an officer of Tamil Nadu State Co-operative Bank Ltd., carried out the inspection in February/March 1969 and his inspection report revealed the serious irregularities. I want to know, when was the previous inspection made and what are the findings. What exactly were the periods during which this vast sum of money was let down the drain. As things stand, it is not Rs. 52 lakhs but " Rs. 97 lakhs that is reported to be bad and doubtful debts after intensive verification (page 279). I accused that there has been an irresponsible squandering of public money. (The Hon. Thiru P. U. Shanmugam : Rubbish). Is the squandering of public money rubbish ?

Thiru R. PONNAPPA NADAR : Sir, we shall not make quarrels and use the expression " rubbish ".

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பத்திரிகையில் " நகர்வாலா பற்றி ஹாண்டே சொன்னார் " என்று வரலாம். நகர்வாலாவுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?.

Thiru LATHEEF Sir, on a point of order. How it is relevant to the Governor's Address. I will also take one hour for My speech.

திரு. கு. காமாட்சி: பாயிண்ட் ஆப் ஆர்டர். ஹாண்டே அவர்கள் பத்திரிகையில் வருவதற்காக இப்படி இல்லாததை எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்களா ?

திரு. இராம. அரங்கண்ணல்: பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த விவாதம் கவர்னர் பேருரையின்மீது நடைபெறுகிற விவாதம். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் அரசு அளித்த புத்தகத்தைக் கையில் கொண்டு வந்தி ருக்கிறார்கள். என் கையில் புத்தகம் இல்லை. அவர் பேசும்போது " நகர்வாலா " என்று சொன்னார். அது என்ன என்று தெரியவில்லை. சபையில் இல்லாத ஒருவரைப்பற்றி எழுப்புவது, இல்லாத பிரச்சினையைப் பற்றிப் பேசுவது உகந்ததா ? " நகர்வாலா " என்ற வார்த்தையை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Dr. H.V. HANDE : I will explain..............

Thiru RAMA ARANGANNAL : Let the hon. Member go to Mrs. Indra Gandhi.

திரு. என். கணபதி: நகர்வாலா என்றால் என்ன என்று தெளி வாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்கெல்லாம் ஒன்றுமே புரியவில்லை.

திரு. நா. வீராசாமி: எங்களுக்கு ப்ரொட்டக்ஷன் வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : "நகர்வாலா" என்ற வார்த்தையை எடுக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. தங்களுடைய பதில் என்ன ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நகர்வாலா என்று யாரைச் சொல்லுகிறீர்கள் ?

DR. H.V. HANDE : Sir, I will explain... ........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதோ புகாருக்கு அளித்த பதில் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு "இதுதான் முக்கியமாக நான் பேச வேண்டியது" என்று பேச்சின் இறுதியில் எடுத்துக் கொண்டு பேச "நேரமாகி விட்டது" என்று நீங்கள் மணியடிக்க மற்றவர்களின் நேரத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு ஹாண்டே அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் அதற்குப் பதில் சொல்லப் பயந்துவிட்டார்கள் என்று கருதிக் கொள்ள வேண்டாம். எது முக்கியம் என்று கருதுகிறாரோ அதை அவர் கடைசியில் எடுத்துப் பேசுகிறார். பிறகு வெளியிலே போய் மேடையிலே 2½ மணி நேரம், 3 மணி நேரம் பேசினேன் என்று சொல்லுவது உவருடைய வாடிக்கையாகப் போய்விட்டது. இதை அவர் முக்கியமாகக் கருதி இருப்பா ராகுல் அவருடைய தொகுதிப் பக்கத்தில் போலீசார் அத்துமீறி தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்பதைப்பற்றியெல்லாம் பேச அவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவற்றையெல்லாம் பேசிவிட்டு கடைசியாக முக்கியமானது என்று இதற்கு வருகிறார். ஒரு மணி நேரம் பேசினால், நீண்ட நேரம் பேசினார் என்று பத்திரிகையில் வெளிவர வேண்டுமென்பதற்காகப் பேசுகிறார். உவருடைய பேச்சை இதோடு நிறுத்த வேண்டுமென்று சொன்னால் உவர் சொல்லுகிற குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் ஏதோ பதில் சொல்ல பயந்து விட்டோம் என்ற அர்த்தம் ஏற்படும். ஹாண்டே அவர்கள் இதைப்பற்றி யெல்லாம் பட்ஜட் விவாதத்திலோ, வேறு நாள் விவாதத்திலோ பேசு வதுதான் முறை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : முதலமைச்சர் அவர்கள் என்னைக் குறிப் பிட்டு இப்படி நான் மேடையில் பேசுவது வாடிக்கை என்று சொன்னார்கள். மேடையில் யார் யார் எப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது முதலமைச்சருக்கே தெரியும். இங்கு ஒரு மாதிரி பேசுவது, மேடையில் வேறு மாதிரி பேசுவது, நாடகம் நடிப்பது......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேசியதாகக் கேள்விப்பட்டேன். பத்திரிகையில் பார்த்தேன். "ஹாண்டே பேச ஆரம்பித்தால் முதல் வருக்கு வேர்க்க ஆரம்பித்து விடுகிறது—முதல்வருக்கு என்று கூட அல்ல 1-ம் நம்பருக்கு வேர்க்க ஆரம்பித்து விடுகிறது. 2-ம் நம்பர் தலை குப்புற விழுந்து விடுகிறார்" என்று பத்திரிகையில் வருகிறது. ஏதோ முதல் வருக்கு வேர்த்துவிட்டவுடன் இவர்கள்தான் துடைத்து விடுவதுபோல் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.



டாக்டர் எச். வி. ஹாண்டே : உங்களுக்கு வேர்த்து விடுகிறதோ இல்லையோ, இவ்வளவு சின்ன விஷயத்தைச் சொல்லுவதற்குள்ளேயே இவ்வளவு கவலைப்படுகின்றீர்கள். நான் சட்டசபையில் 2 மணி நேரம் பேசினேன் என்று பொதுமக்களிடத்தில் சொல்லிக் கொள்வதற்காகப் பேசவில்லை. தைரியம் இருந்தால் சொல்லுங்கள்....................

(மாண்புமிகு அமைச்சர்கள் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்களும், திரு. மன்னை நாராயணசாமி அவர்களும் எழுந்து நின்றனர். மாண்பு மிகு உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்றனர்—பல குறுக்கீடுகள்.)

THIRU R. PONNAPPA NADAR : Sir, Opposition Members should be protected..........

(பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற குரல்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் எழுந்து நிற்பதுதான் ஆர்டர். அதற்கு மேல் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் கிடையாது.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : ஹாண்டே அவர்கள் தைரியத்தைப்பற்றி அடிக்கடி குறிப்பிடுகிறார்கள். தமிழ் நாட்டில் அவருக் கிருக்கின்ற தைரியத்தில் இங்கிருப்பவர்கள் குறைந்தவர்கள் அல்ல. இங்கி ருப்பவர்கள் எல்லாம் பரம்பரையாக தைரியம் கொண்டவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் புத்தகத்தைப்பற்றி விவா திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். புத்தகத்தை எங்கும் கொண்டு போய் விடவில்லை. இந்தப் புகாரைக் கொடுத்த வீராதி வீரர்கள் இங்கு வந்து உட்கார்ந்து இதைப்பற்றி விவாதிக்கத் தயாராக இருப்பார் களானால், நாங்களும் அதைப்பற்றி விவாதிக்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் புத்தகத்தில் உள்ள குற்றச்சாட்டுகளில் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கே நம்பிக்கை இல்லை என்பது அவர்களுக்கே தெரியும். மோசமான லாங்வேஜில் அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாக அவரே வருத்தப்பட்டார்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : கற்பனை உலகத்தில் இருக்கிறார்கள். லாங் வேஜ் சரியாக இல்லையென்று நான் சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் விவாதத்திற்கு ஏற்பாடு செய்யட்டும். இதிலே என்ன குறிப்புகளைச் சொல்ல வேண்டுமோ, அதைச் சொன்னால் அரசாங்கம் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்த முடியும். அதைத்தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் செய்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப்பற்றி விவாதிக்க நேரம் இருக்கிறது. அதைக் கொண்டு போய்க் கொடுத்தவர்கள் தயார் என்றால், அதைப்பற்றி இங்கே விவாதிக்க நேரம் இருக்கிறது. திரு. தங்கமணி அவர்

களை ராஜமன்னார் குழு அறிக்கையை விவாதிக்க வேண்டுமென்பதிலே காட்டுகின்ற ஆர்வத்தை இதிலே காட்டவில்லை. புகாரைக் கொண்டு போய் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் கொடுத்தார்கள். கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கமணி அவர்கள் கொடுத்தார்கள். எல்லோரும் இந்த அவைக்கு வந்து இதை விவாதிக்க நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்பார்களானால் நிச்சயமாக இதைப்பற்றி விவாதிக்க அரசு தயாராக இருக்கிறது. அதற்கிடையிலே இதைப்பற்றி பேசுவதைப்பற்றிப் பயப்படுகிறோம், தைரியம் இல்லை என்றெல்லாம் சொல்லுவது தவறான காரியமாகும். ஹாண்டே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தைப் பார்க்க வேண்டும். பல உறுப்பினர்கள் பேச வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்கள் பேச வேண்டும். நாளைக்கு நான் பதில் சொல்ல வேண்டும். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் சொல்லுகிறேனே தவிர இது தைரியத்தின்பாற்பட்ட விஷயமல்ல. தைரியம் யாருக்கு இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளாமல் விடப் போவதில்லை.

ந. ப. 12-00 DR. H. V. HANDE: Next is Charge No. 32.... ...

THIRU R. PONNAPPA NADAR: I should also be given one hour.

திரு. கு. காமாட்சி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இங்கு சாட்டப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளித்து அந்தப் புத்தகத்தை இங்கே வைத்து அதுபற்றித் தனியாக விவாதிக்கலாம் என்று முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லிய பிறகும் அதே விவாதத்தை எடுத்துக் கொள்வது பொருந்துமா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : எதிர்கட்சிக்காரர்கள் பேசும்போது உங்கள் கட்சியைச் சார்ந்த நாலைந்து பேர்கள் எழுந்து ஆர்டர், ஆர்டர் என்று கேட்டால் நாங்கள் எப்படிப் பேசுவது ? நாங்கள் பேசும்போது குறுக்கிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அப்படிச் செய்வது என்றால், அது நல்லதல்ல. கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்தை பாதியை இப்படி எடுத்துக் கொண்டால் எங்களுக்குப் பேசுவதற்கு எப்படி நேரம் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவர்னர் அவர்களின் உரை மீதான விவாதத்தில் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று ஓரளவிற்கு முறையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அது அவ்வளவு நல்லதல்ல. கவர்னர் அவர்களது உரையில் குறிப்பிட்டுள்ளதைப்பற்றி, அதற்கு தொடர்புள்ளதாகப் பேசுவதுதான் நல்லது. முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேண்டுமானாலும் தனியாக நாள் ஒதுக்கலாம் என்று. அப்படி நாள் ஒதுக்கி விவாதிப்பதில் எந்த விதமான தவறும் இல்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு மணி நேரம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நேரமாகிறது என்று சொன்ன பிறகு, முக்கியமான பாயிண்டுகளை ஆரம்பிக்கிறேன் என்று சொல்கிறார்கள். இப்படிப் போனால் இன்னும் நாலைந்து நாட்களுக்கு விவாதத்தை நீட்டித்துக் கொண்டு போக



வேண்டியிருக்கும். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டியிருக்கிறது. ஹாண்டே அவர்களுக்கு ஒரு மணி நேரம் கொடுத்திருக்கிறீர்களே, எங்களுக்கு அரை மணி நேரமாவது கொடுங்கள் என்று மற்ற உறுப்பினர்கள் கேட்பார்கள். ஹாண்டே அவர்களுக்கு இவ்வளவு நேரம் கொடுத்திருப்பதால் எங்களுக்கும் அதே அளவிற்கு நேரம் ஒதுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கோரமாட்டார்கள் என்று நம்புகிறேன். தயவுசெய்து டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு நிமிடத்தில் வைண்ட் அப்செய்யுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நாங்கள் அச்சவாலை ஏற்றுக் கொள்கிறோம். எப்போது வேண்டுமானாலும் இது சம்பந்தமான முழு விவாதத்திற்கும் நாங்கள் தயாராயிருக்கிறோம். கொடுத்தவர்கள் வந்து பேச வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப் பேசுவதற்கு தேவை இல்லை. இந்த மன்றத்தில் அதை வைத்தவுடன் அது மன்றத்தின் பொருளாகி விடுகிறது. தமிழ்நாட்டிற்குச் சொந்தமாகி விடுகிறது. திரு. தங்கமணி அவர்கள் அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். கவர்னர் அவர்களது உரையில் இது சம்பந்தமாக குறிப்பிடப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அமென்ட்மென்டாகக் கொடுத்திருக்கிறார்கள். எதை எதைச் சேர்க்கவில்லை என்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. இந்தச் சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன். எப்போது வேண்டுமானாலும் முழுமையாக இதைப்பற்றி விவாதிக்க நாங்கள் தயாராகயிருக்கிறோம். அவ்வளவு நோட்ஸை நான் தயாரித்து வைத்திருக்கிறேன். நீங்களும் நோட்ஸ் தயாரித்துக் கொள்ளுங்கள். இந்த கவர்னர் உரையைப் பொறுத்தவரையில், என் கட்சி சார்பில் சொல்கிறேன், இந்த உரை முழுக்க முழுக்க தமிழ்நாட்டில் நடந்துள்ள பல பயங்கரச் சம்பவங்களுக்குச் சம்பந்தமில்லாத உரையாக இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள லா அண்ட் ஆர்டரைப் பொறுத்தவரையில் ஒரு வார்த்தைகூடக் குறிப்பிடாமல், மக்களின் நல்லெண்ணங்களைப்பற்றிப் பிரதிபலிக்கக்கூடிய யோக்கியதை இல்லாமல் இந்த கவர்னர் உரை இருக்கிறது. முழுக்க முழுக்க இதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறி எனது திருத்தத்தைதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : கவர்னர் அவர்களது உரை யோக்கியதை இல்லாமல் ................

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் கவர்னரைப்பற்றிச் சொல்லவில்லை. உரைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறேன். கவர்னர் உரைபற்றிச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது.

திரு. துரை முருகன் : இந்த மன்றத்தில் எனக்குத் தெரிந்தவரையில் வழக்கமாக எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் கடைசிநாள்தான் பேசுவார்கள். விளம்பரத்திற்காக முன்னாலேயே.......

THIRU R. PONNAPPA NADAR: No aspersion need be cast on another honourable Member.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் முன்னால் பேசுவது அவர்களது விருப்பம். ஒரு நிமிடம் அமைதியாக இருப்போம். மாண்புமிகு கட்சித் தலைவர்கள் தங்களுக்குத் தாங்களே ஒரு முறையை வகுத்து அரைமணி நேரத்திற்குள் பேசி முடித்துக் கொள்ள வேண்டும். அப்படியானால்தான் நாளை முதல் அமைச்சர் அவர்கள் பேசி இந்த விவாதத்தை முடித்துக் கொள்ள முடியும்.

திரு. கே.டி.கே. தங்கமணி : எனக்கு நாளைக்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அட்ஜர்ன்ட் செஷன் வைத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் ஒரு நாள் தள்ளிப்போட்டால் சௌகரியமாக இருக்கும்.

திருமதி த.ந. அனந்தநாயகி : ஒரு நாள் கூடுதல் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

Mr. DEPUTY SPEAKER : I have no objection to that. What is the necessity ? I am afraid we are artificialy creating the necessity.

*திரு. ஏ. ஆர். பெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களது உரைமீது பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பில் அந்த உரையை வரவேற்று பாராட்டி எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன். இன்றையதினம் எனக்கு முன்னால் பேசிய சுதந்திரக் கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏறத்தாழ ஒரு மணி நேரம் இங்கு பேசினார்கள். விவாதத்தில் கலந்து கொள்ள இது போன்ற முக்கியமான நேரங்களில் பேசுவதற்கு பெயர்கொடுத்தால் நாங்கள் பேச எழுந்திருப்பதற்கு எவ்வளவு நேரமாகும் என்று சொல்லமுடியாதிருக்கிறது. முன்னால் ஒரு தடவை கூட டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றரை மணி நேரம் பேசினார்கள். இந்த மன்றத்தின் நிகழ்ச்சிக் குறிப்புக்களை எடுத்துப் பார்த்தால், ஏறத்தாழ அதிகப்படியான நேரத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நேரம் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று நான் கூறவில்லை. எவ்வளவு நேரம் அவர்கள் அதிகமாக எடுத்துக் கொண்டு பேசினாலும் கூட அப்புறமும் அவர்களுக்கு திருப்தியாக இல்லை. இன்னும் கொஞ்சம் நேரம் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இனிமேல் நமது துணைத் தலைவர் அவர்கள்—இதை ஆலோசனையாகச் சொல்கிறேன்—நேரம் பங்கீடு செய்வதில் ஒரு முறையை வகுத்து அந்த நேரத்தை வீணாக்காத முறையில் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன். ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பாக இயற்கையின் சீற்றத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில் இயற்கை யின் சீற்றம் மட்டுமல்ல செயற்கையின் சீற்றமும் சேர்ந்துள்ளது. இந்த அரசாங்கம் இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட வெள்ளத்தையும்



புயலையும் சமாளித்ததோடு மட்டுமல்லாமல் செயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட வஞ்சக வெள்ளத்தையும், பொருமைப் புயலையும் சமாளித் திருக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் எவ்வளவு சேதங்கள் ஏற்பட்டதோ, அதேபோல் செயற்கையின் சீற்றத்தாலும் பல சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. தொடர்ந்து மூன்று நான்கு நாட்களாக ஆளுகிற கட்சிக்கு எதிர்ப்பாக இருப்பவர்கள்— எங்களை அவர்கள் எதிர்க் கட்சியாக ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. காரணம் நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தோழமைக் கட்சியாக இருப்பதால், எங்களை அவர்கள் எதிர்கட்சி என வைத்துக் கொள்ளத் தயாராயில்லை. நாங்கள் தோழமைக் கட்சிக்காரார்கள் என்பதை உண்மையிலேயே ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதே நேரத்தில் எதிர்கட்சிக்காரர்களுக்கு இன்றையதினம் ஒரு புதுத் துணிவு வந்திருக்கிறது என்றால், அந்தத் துணிவு ஒரு அசட்டுத்தனமான துணிவாகும். திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மக்கள் ஆதரவு குறைந்துவிட்டது. கலைஞர் அவர்களின் அரசாங்கம் இங்கு இருக்கக் கூடாது என்று பெரும்பகுதியான மக்கள் விரும்புகிறார்கள் என்று அதற்கு அவர்கள் காட்டுகிற ஆதாரம் அமைச்சர்கள் கூட்டங்களில் பேச முடியவில்லை, அமைச்சர்களின் கூட்டங்களுக்கு ஆள்கள் கூடுவதில்லை என்ற ஆதாரம்தான் மக்கள் நம்பிக்கையை இந்த அரசு இழந்து விட்டது என்று அவர்கள் சொல்வதற்கு உரிய ஆதாரம். சமீபத்தில் சென்ற மாதம் 28-ந் தேதி அன்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மதுரை மாநகரத்திற்கு வந்திருந்தார்கள். நேதாஜி பிறந்த தின விழாவில் கலந்து கொள்ள அவர்கள் வந்திருந்தார்கள். ரயில்வே நிலையத்தில் ஏறத்தாழ 15,000 பேர்கள் கூடியிருந்து அவர்களை வரவேற்றார்கள். பல சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு மாலை அணிவித்தார்கள். பல்வேறு தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் அவர்களுக்கு மாலை அணிவித்தார்கள். அதற்குப் பிறகு அந்த வரவேற்பு மேடையிலிருந்து அவர்கள் ஏறத்தாழ 20 நிமிடங்கள் கலைஞர் அவர்கள் பேசினார்கள். அதற்கு மேல்தான் அவர்கள் சர்கூட் ஹவுஸ்க்கு சென்றார்கள். ஒரு பத்திரிகையில் எழுதப்பட் டிருந்தது. ரயில்வே நிலையத்தில் ஆள்களே இல்லை, போலீஸார்தான் மாலை போட்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் நாலைந்து பேர்கள்தான் மாலை அணிவித்தார்கள், ரெயில்வே நிலையத்திற்கு வெளியே எந்தவிதமான ஜனங்களும் நிற்க வில்லை, அங்கு மேடை போடவும் இல்லை, வரவேற்பு நடைபெறவும் இல்லை, அங்கு முதல் அமைச்சர் அவர்கள் பேசவும் இல்லை என்று எழுதப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. திலகர் சவுக்கத்தில் மாலையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஏறத்தாழ 60,000 மக்கள் கூடியிருந் தார்கள். திலகர் சவுக்கம், பின் பி. 4 போலீஸ் ஸ்டேஷன், அப்பால் ஆட்டோமாட்டிக் சிக்னல், பின் ராமநாதபுரம் ரோட் என்று மக்கள் கூடியிருந்தார்கள். அந்தக் காட்சியை நான் பார்த்தேன். ஆனால் அந்தப் பத்திரிக்கையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் கலைஞர் பேசினார். மைதானம் முக்கால் பகுதி காலியாக இருந்தது. இப்படிப்பட்ட தவறான பிரசாரத்தின் மூலம் மக்கள் ஆதரவு தங்களுக்கு இருக்கிறது என்று காட்டுகிறார்களே தவிர, நியாய

மான முறையில் இந்த அரசு மக்கள் ஆதரவை இழந்து விட்டது என்று சொல்லவரவில்லை. இந்த அரசு மக்கள் ஆதரவை இழக்கும் வகையில் இந்தக் காரியத்தைச் செய்தது, இந்தத் தவறைச் செய்தது என்று சொல்லவில்லை. இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்ட பின்னால், அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டார்கள், இந்த அரசு எடுத்துக்கொண்ட திட்டத்தால், முயற்சியால் எவ்வளவு பெரிய பாதகம் ஏற்பட்டிருக்கிறது அதனால் இந்த அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்து இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. காரணம் அவர்கள் கூறியதெல்லாம், இன்றையதினம் திராவிடமுன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து புதிதாக ஆரம்பித்திருக்கிறார்களே அண்ணா தி.மு.க. என்று அவர்கள் நாடு முழுவதும் செய்யக்கூடிய சாதாரண மான கிளர்ச்சிகளை மையமாக வைத்துக்கொண்டு, அதையே மக்கள் ஆதரவு தங்கள் பக்கம் இருக்கிறது என்பதற்குச் சான்றாகக் காட்டி, தங்களுக்கு தெம்பாகக் கருதி பேசுகிறார்களே தவிர வேறு அல்ல. திண்டுக்கல் நாடாளுமன்றத் தேர்தல் தங்கள் வலுவை தெம்பைக் காட்டும் என்று சொன்னார்கள். வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு அங்கே எந்த அளவுக்குத் தெம்பு இருக்கிறது என்று எனக்குத் தெரியும். அவர்களுக்கும் அது தெரியும். வலதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் திருச்சியில் சொன்னதாக எனக்கு நினைவு—சட்டமன்றத் கூட்டத்தொடரில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், நாங்களும் நிச்சயமாகக் கலந்து கொள்வோம் என்று சொன்னார்கள். சொல்லுகின்றவர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சேர்த்துச் சொல்லி யிருக்கிறார்கள். நான் அன்றைக்கே சொன்னேன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொல்லி யிருக்கிறார் ஆகையால் நிச்சயமாக வருவார்கள் என்று. அவர்களும் வந்தார்கள். ஆனால் வந்தவுடனே வெளியே போய் விட்டார்கள். அவர்கள் குற்றச் சாட்டுகளை எடுத்துச்சொல்லி இந்த சட்ட மன்றத்தில் அதை நிரூபிப்பார்கள் என்று கருதினேன். அதன் மூலம் இந்த அரசு மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் துரதிஷ்ட வசமான அந்தக் கட்சித் தலைவர் "சட்டமன்றம் செத்து விட்டது என்று" சொல்லும் அளவுக்குச் சென் றிருக்கிறார். சட்டமன்றத்தின் மீது நம்பிக்கை இழக்கும் அளவுக்குச் சென்றிருக்கிறார். சட்டமன்றம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்த மானது அல்ல. இன்று திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே இருக்க லாம். நாளைக்கு இன்னொரு கட்சி வரலாம். நேற்று காங்கிரஸ் கட்சி ஆண்டது, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிறது. ஜனநாயக நாட்டில் எந்த ஒரு கட்சியும் ஆட்சிக்கு வரலாம். எந்த ஒரு அரசியல் கட்சியும் மக்களுடைய பிரச்னைகளை சட்டமன்றத்தின் மூலமாகத் தான் தீர்த்துக்கொள்ள விரும்புவார்கள். ஆனால் இவர்கள் சீசனுக்கு ஒரு பிரச்னை சொல்வார்கள். முதலில் லஞ்ச ஊழல் சீசன். லஞ் ஊழல் சீசனுக்குப் பிறகு புகார் பட்டியல் சீசன். புகார் பட்டியல் சீசனுக்குப் பிறகு விசாரணைக் கமிஷன் சீசன். விசாரணைக் கமிஷன் சீசனுக்குப் பிறகு இடு இடு போராட்ட சீசன். இடு இடு போராட்ட சீசனுக்குப் பிறகு கள்ள ஓட்டுப் பதிவு சீசன் இப்போது கடைசியாக வந்திருக்கிறது. திண்டுக்கல் தொகுதியில் இட்டத்தட்ட 1½ லட்சம்



ஓட்டுகள்—கள்ள ஓட்டுகள் பதிவு செய்கிறார்கள். இந்த கள்ள ஓட்டுப் பதிவை நிறுத்தாவிட்டால் போராட்டம் வரும். ஒரு பொதுத் தேர்தலுக்குப் பின்னால், ஒரு தொகுதியில் இடைத் தேர்தல் வந்தால், அந்த இடைத்தேர்தல் வரும் நேரத்தில் புதிதாக ஓட்டுப் பதிவு செய் வார்கள். இது திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு செய்கிற காரியம் அல்ல. அந்த வேலையைச் செய்வது இந்த அரசு அல்ல. தேர்தல் கமிஷன் அந்தப் பொறுப்பை செய்து வருகிறது. ஒரு பொதுத் தேர்தலுக்கு ஓட்டு பதிவு செய்கிறபோது, யாருக்கெல்லாம் 21 வயது ஆகவில்லையோ, அவர்களெல்லாம் ஓட்டுப்பதிவில் இடம் பெறுவதில்லை. ஆனால் இடைத்தேர்தல் நடக்கிற நேரத்தில் அதிலே சிலர் அந்த வயதை அடைந்து இருக்கலாம். அவர்கள் தங்கள் பெயரைச் சேர்த்துக்கொள்ளச் சொல்லி விண்ணப்பிக்கலாம். அவர் களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இந்த முறை தொடர்ந்து நடந்து வருகிறது. புதிதாக ஒன்றும் இன்று நடக்கவில்லை. எதற்காக இப்படி ஆயிரம் ஆயிரம் ஓட்டுகளைச் சேர்க்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள். வீருப்பு பேசினார்கள், திண்டுக்கல் நாடாளுமன்ற தேர்தல் நடந்தால், திண்டு எங்களுக்கு கல் தி.மு.க.விற்கு என்று. இன்று அவர்களுக்குத் தெரிந்து விட்டது, திண்டு தி.மு.கவிற்கு கல் தங்களுக்குக் கிடைக்கும் என்று. இதை மனதில் வைத்துக் கொண்டு, மக்களுடைய எண்ணத்தை திசை திருப்புவதற்காக, தங்களுடைய தோல்வியை மறைப்பதற்காக இப்போதிருந்தே திட்டமிட்டு லட்சத்திற்கும் அதிக மான கள்ள ஓட்டுக்களை சேர்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப் போதுதான் அவர்கள் தோல்வி அடைந்த உடனே சொல்ல முடியும், நாங்கள் ஆரம்பத்திலேயே சொல்லவில்லையா, கள்ள ஓட்டுப்பதிவு செய்தார்கள் என்று. அந்தப் பிரசாரத்தைப் பின்பு செய்வதற்காகத் தான் இப்போதிருந்தே அந்த முறையில் சொல்லி வருகிறார்கள்.

உண்மையிலேயே மக்கள் ஆதரவு தங்கள் பக்கம் இருக்கிறது, மக்கள் நம்பிக்கை தங்களுக்கு இருக்கிறது, மக்கள் தங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற—புதிதாக கட்சி துவங்கியிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் திண்டுக்கல் நாடாளுமன்ற தேர்தலிலிருந்து விலகி விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் மேல் மட்டத்தில் பேசிக்கொள்கிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் திண்டுக்கல்லில் விட்டுக் கொடுக்கப்போகிறார்கள். இந்திரா காங்கிரஸ் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆதரவோடு அங்கே போட்டியிட இருக்கிறது என்று பேசுகிறார்கள். தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆதாவு இருக்கிறதா இல்லையா ? என்ற பிரச்னை எழவில்லை.

**THIRUMVTHI .T N. ANANTHANAYAKI :** On a point of order, Sir, the Is mumber speaking on Governor's Address or on Dindigal Bye Electien.

**Mr. DEPUTY SPEAKER :** This is not a point of order.

பி.ப. *திரு வ. ஆர். பெருமாள் : திண்டுக்கல் நாடாளுமன்றத்
12 30 தேர்தலில் 3 அணிகள் போட்டியிடயிருக்கின்றன. ஸ்தாபன காங்கிரஸ் போட்டியிடப்போகிறது. திராவிட முன்னேற்றக்கழக அணி போட்டியிடப்போகிறது. அண்ணா தி.மு.க., வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி அணி போட்டியிடப்போகிறது. ஆக, மூன்று அணிகளும் அபேட்சகர்களை நிறுத்தப்போகிறார்கள்.

திரு க. சுப்பு : வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி என்று இங்கே சொல்லாமல் இருந்தால் நல்லது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். **

திரு வ. ஆர். பெருமாள் : இப்படி மும்முனைப் போட்டி வரப் போகிறது. அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சார்ந்தவர்கள் "தி.மு.க. அரசை ராசினாமா செய்யுங்கள், தேர்தலில் நில்லுங்கள் போட்டியிட்டுப் பாருங்கள், நாங்கள் முறைப்படி உங்களுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்பதை நிரூபிக்கிறோமா" என்று சொன்னார்கள். நீங்கள் ராசினாமா செய்யுங்கள், ராசினாமா செய்யுங்கள் என்று சொல்வதை விட்டு விட்டு, யாருமே ராசினாமா செய்யாமல், தானாகவே ஏற்பட்டுள்ள இந்த இடைத்தேர்தலில்—ஒரு சட்டமன்றத்திற்கான தேர்தல் அல்ல, 6 சட்ட மன்றத் தொகுதியை உள்ளடக்கிய தேர்தலில்—அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் போட்டியிட்டால்—6 லட்சம் வாக்காளப் பெருமக்களுடைய தொகுதி அது—மக்கள் ஆதரவு அவர்களுக்கு இருக்கிறதா இல்லையா என்பது தெரிந்து விடும். இதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு எம்.ஜி.ஆர். அங்கே போட்டியிடவேண்டும். அந்தத் தேர்தலிலிருந்து அவர்கள் ஒதுங்கி விடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் ஒன்றைச் சொல்வார்கள். எவ்வாறு சொல்வார்கள். நாம் பஸ்களை நாட்டுமையாக்கப்போகிறோம் என்ற உடனே சொன்னார்கள். 1 கோடி ரூபாய்க்கு பேரம் பேசுகிறார்கள் என்றார். எப்படிச் சொன்னார். 1 கோடி ரூபாய்க்கு நஷ்ட ஈடு கொடுப்பதில் பேரம் பேசப்படுகிறது என்று கேள்விப்படுகிறேன். அந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால் வருத்தப்படுகிறேன் என்று சொல்வார்.

அதுபோல எல்லோரும் பேசலாம். "தி.மு.க. பிளவுபட்டதற்கு புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் 25 லட்சம் ரூபாய் பேரம் பேசி வாங்கிக்கொண்டார் என்று நான் கேள்விப்படுகிறேன், அது உண்மையாக இருக்குமானால் நான் வருத்தப்படுகிறேன்." என்று நானும் பேசலாம். இப்படியா பேசிக்கொண்டிருப்பது ? அவர் மாத்திரம் தங்களுக்குத் தான் மக்கள் செல்வாக்கு இருக்கிறது. தங்களுடைய தி.மு.க. தான், உண்மையான தி.மு.க. என்று மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று வீராப்புப் பேசிவருவது உண்மையாக இருக்குமானால் வருகிற திண்டுக்கல் இடைத்தேர்தலிலிருந்து அண்ணா தி.மு.க. விலகி ஓடிவிடக் கூடாது. இந்திரா காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது. எனக்குக் கிடைத்த தகவல்படி சொல்கிறேன். இந்திரா காங்கிரஸ் கட்சியினர் இன்றைக்குப் பேசுகிற முறை, 4 5 நாட்களாக பேசுகிற முறையைப் பார்த்தால், ஏதோ தாங்கள் தான் இந்தியாவை

** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப்பட்டது.



ஆளுகின்ற கட்சி, தங்களுக்கு உட்பட்டது இந்தத் தமிழ்நாடு, மத்திய அரசினுடைய எடுபிடி மாநில சர்க்கார், தாங்கள் கோடிட்ட இடத்தை தாண்டாமல் நடத்தக்கூடியது மாநில அரசு என்று ஒரு திமிரோடு பேசுகிறார்கள். நமது நாட்டை பிரிட்டிஷார் ஆண்டபொழுது லண்டன் மாநகரத்திலிருந்து ஒரு சாதாரண வெள்ளையன் இந்தியாவுக்கு வந்தால் கூட தாங்கள் இந்தியாவை ஆளுகின்றவர்கள் என்ற திமிரோடு பேசுவான். லண்டன் மாநகரத்தில் தெருக்கூட்டிக்கொண்டிருக்கிற ஒரு சாதாரண வெள்ளைக்காரன் இந்தியாவுக்கு வந்தால் "நாங்கள் இந்தியாவை ஆளுகின்றவர்கள்" என்ற திமிரோடு பேசுவான். அதேமாதிரி இங்கே இருக்கக் கூடிய இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் "நாங்கள் இந்தியாவை ஆளக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள்" என்ற ஒரு ஆணவத்தோடு, திமிரோடு பேசுகிறார்கள். அந்த அடிப்படையிலே அவர்களுடைய பேச்சு அமைந்திருக்கிறது. அப்படிப் பேசுவது நல்ல ஜனநாயகப் பண்பு ஆகாது. மத்திய அரசு, மாநில அரசு என்பதைப்பற்றி யெல்லாம் அரசியல் சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் உள்ள அதிகார வரையறைகள் கூட்டாட்சித் தத்துவம் என்ற முறையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்டு ஆப் ஆர்டரா ?

திரு. வ. ஆர். பெருமாள் : நான் இடம் கொடுத்தால் தானே ?

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார், பாயிண்டு ஆப் ஆர்டர் என்றால் எல்லா அங்கத்தினர்களும் ஈல்டு செய்யவேண்டும். ஒரு வேளை நான் சொன்னது அவர்கள் காதில் விழவில்லையோ, என்னவோ ? என்னைப் பொறுத்த மட்டில் அவர் இந்திரா காங்கிரஸ் என்று சொல்வது தப்பு, காங்கிரஸ் என்று சொல்வதற்கு முதலில் கற்றுக்கொள்ளவேண்டும். மேலும், உறுப்பினர் அவர்கள் ஆணவத்தோடு, திமிரோடு பேசுகிறார்கள் என்ற வார்த்தைகளையெல்லாம் உபயோகித்தார்கள். அந்தமாதிரி வார்த்தைகளை அவர்கள் திரும்பி வாங்கிக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்களா ? அந்தமாதிரி பேசுவது நல்லது அல்ல. அந்த வார்த்தைகளை தயவு செய்து எடுத்துவிட வேண்டும்மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வ. ஆர். பெருமாள் : திரும்பி வாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தால் என்று சொல்லக்கூடியவர்கள் திரும்பி வாங்கிக்கொள்வதற்கு தயாராக இருந்து கொண்டு அந்த வார்த்தைகளைச் சொல்லவேண்டும். இந்திரா காங்கிரஸ் என்று சாதாரணமாகச் சொல்கிறேன். இனிமேல் வேண்டுமானால் ஆளும் காங்கிரஸ் என்று சொல்கிறேன். திருத்திக்கொள்கிறேன். பொறுப்புள்ள ஆளும் காங்கிரஸ்காரர்கள் பேசுகிற பேச்சு எப்படி இருக்கிறது என்றால், எந்தத் தோரணையில் இருக்கிறது என்றால் இங்கே நடக்கும் தி.மு.க. ஆட்சி எப்படியோ, எங்கேயோ இருந்து வந்தது போல் பேசுகிறார்கள். இந்திரா காந்தி அம்மையார் எப்படி மக்களின் வாக்கு

களைப் பெற்று, அவர்களுடைய கட்சி பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று, ஆளும் காங்கிரஸ் நியூ காங்கிரஸ், மத்திய அரசில் ஆட்சி பீடத்தில் உட்கார்ந்திருக்கிறதோ, அதைப்போலவே தமிழ் நாட்டு மக்கள், பெரும் பகுதி மக்கள், தி.மு.க. ஆட்சிக்கு வாக்குகளைக் கொடுத்து, கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் நாட்டில் ஆட்சிபீடத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். இதைத் தெரிந்து கொள்ளாதது ஜனநாயகத் தன்மையை மதிப்பதாகாது, ஜனநாயகத் தன்மையை மறுப்பதாகும். இப்படிச் செய்தால் ஜனநாயகம் இருக்குமா ? அவர்கள் பேசுவது எப்படி இருக்கிறது என்றால், அவர்கள் தான் மத்திய சர்க்காருக்குச் சொந்தக்காரர்கள் போலவும், மத்திய சர்க்காரின் பிரதிநிதிகள் போலவும், அந்த எண்ணத்தில் பேசுகிறார்கள். மத்திய அரசு என்பது மாநில நிர்வாகத்திற்கு மேலே இருந்து ஏற்படக்கூடிய ஒரு கூட்டாட்சித் தத்துவம். இந்திரா காந்தி அம்மையாரின் கட்சி பெரும் பகுதி மத்திய அரசு நிர்வாகத்தில் இருக்கிறது என்ற காரணத்தினால், அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே ஆளுகின்ற கட்சியைப் பார்த்து எடுபிடி சர்க்கார் இங்கே நடப்பது போல, அந்த முறையிலே பேசுவதை நான் கண்டிக்கிறேன். அது நல்ல ஜனநாயகப் பண்பு ஆகாது.

திண்டுக்கல் தேர்தல் வருகிறது. அந்தத் தொகுதியில் புதியதாக வோட்டர்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது தேர்தல் கமிஷன் செய்யக்கூடிய வேலை. அது தேர்தல் கமிஷனின் பொறுப்பு. அந்தக் கமிஷன் அதனுடைய வேலையை ஒழுங்காகச் செய்துகொண்டிருக்கிறது. அந்தத் தொகுதியில் எங்கேயாவது யாராவது வந்து புதியதாக குடிசை போட்டுக்கொண்டு 6 மாதங்கள், 180 நாட்களுக்கு அந்தத் தொகுதியில் ஒரு மனிதன் ஒரு இடத்தில் வசிப்பானேயானால், தொடர்ந்து 180 நாட்களுக்குக் குடியிருந்தால்தான் அந்தப் பகுதி வாக்காளர் பட்டியலில் அவன் சேர்த்துக்கொள்ளப்படலாம். இதுதான் சட்டம், ஆக, 180 நாட்களுக்கு முன்னதாக யாராவது வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தால், அதுபற்றி முறையாக புகார் கூறப்பட்டு, வாக்காளர் பட்டியலிலிருந்து அவர் பெயர் நீக்கப்படலாம். அது தான் முறை. அப்படியில்லாமல் அதற்காக ஒரு போராட்டம். எதற்கெடுத்தாலும் ஒரு போராட்டம். வாக்காளர் பட்டியலில் ஒரு லட்சம் பேர்களை புதியதாக சேர்க்கிறார்கள் என்று கேள்விப்படுவதாகச் சொல்கிறார். நான் கேள்விப்படுகிறேன். அந்த நாடாளுமன்றத் தொகுதி 6 சட்டமன்றத் தொகுதிகள் சேர்ந்தது. 8,000 சொச்சம் வாக்காளர்கள் புதியதாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். புதியதாக வாக்காளர்களாக சேர்க்கப்பட்டவர்கள் என்றால், அவர்களுக்கு 21 வயது ஆகியிருக்கும். அவர்களை சேர்த்திருப்பார்கள். இளைஞர்கள் வோட்டுகள் எங்கள் பக்கம், கிழவர்கள் வோட்டுகள் உங்கள் பக்கம் என்று சொல்கிறீர்களே ? இப்படிச் பேசுபவர்கள் ஏன் பயப்படவேண்டும் ? புதியதாக சேர்க்கப்பட்ட இளைஞர்களின் வோட்டு உங்களுக்குத் தானே வரப்போகிறது ? ஒரு தொகுதிக்கு 1,500 வோட்டு என்ற கணக்கில் தான் வருகிறது. 1971-ம் ஆண்டு தேர்தலின் போது 19, 20 வயது வந்தவர்கள் இப்பொழுது 1973-ல் ஆண்டு தேர்வு நடக்கும்பொழுது 21 வயது வந்தவர்கள் ஆகிவிடமாட்டார்களா ? அவர்களை வோட்டர்களாக சேர்த்திருக்கிறார்கள். தொகுதிக்கு 1,500 பேர்கள் வீதம், 8,000 சொச்சம் பேர்களை வோட்டர்களாக சேர்த்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது லட்சக்கணக்கான வோட்டர்களைச் சேர்த்துவிட்டார்கள், கள்ள வோட்டுகளை சேர்த்து



விட்டார்கள். இப்படி எதையாவது மக்கள் மத்தியிலே ஒரு பரபரப்பை உண்டாக்குவதற்காகச் சொல்லிக்கொண்டேயிருப்பதால், அம்மாதிரி ஒரு அரசியல் கட்சியை நடத்துவது என்றால், அது அரசியல் நாகரிகம் ஆகாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். பெருமாள் : அடுத்து இங்கே பேசுகிறபொழுது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்கிறேன். கோவில் சொத்துக்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன். காரணம், கோவில் சொத்துக்கள் எந்தக் காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் காரியங்களுக்குப் புறம்பாக அந்தச் சொத்துக்கள் உபயோகப்படுத்தப்படாமல், அந்தக் காரியங்களுக்கே முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்று சரி பார்க்கும் பொறுப்பை மட்டும் அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அடுத்து, திரைப்பட அரங்குகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை என்னுடைய கட்சியின் சார்பாக நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த அரசில் ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு சிறிய மாற்றத்தின் காரணமாக, இப்பொழுது சினிமாத் துறையை நாட்டுடைமையாக்கிவிட்டால், அதன் மூலம் அந்த அரசியல் கருத்து மாறுபாடு கொண்டவர்களை அடக்குவதற்கு பயன்படும் என்று சிலர் தவறாக நினைக்கிறார்கள். அது அல்ல காரணம், சினிமாத் துறை என்பது எல்லோரையும் கவரக்கூடியது. சினிமாக் கலை மூலம், மக்களையெல்லாம் எளிதாகக் கவர்ந்து விட முடியும். 10 வருஷங்களுக்கு ஒருவர் சினிமா படத்தில் நல்லவராக நடித்துக் கொண்டிருந்தால், நிச்சயம் அவரை நல்லவர் என்று மக்கள் நம்பி விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு துறையாக இருக்கிற காரணத்தினால் அந்தத்துறை பாதுகாக்கப்படவேண்டிய ஒன்றாகும். மக்கள் உள்ளத்தில் நல்ல கருத்துக்களை அந்தத் துறையினால் பதிக்க முடியும், அதனால் தீய கருத்துக்களையும் பதிக்க முடியும். மக்கள் உள்ளத்தில் தீயவர்களை சினிமாத் துறை நல்லவர்களாகக் காட்டிவிடும், நல்லவர்களைத் தீயர்வர்களாகக் காட்டிவிடும். சமுதாயத்தில் நெஞ்சலைகளை நிர்ணயிக்கக்கூடியது சினிமாத் துறை. அந்த சினிமாத் துறை முழுவதையும் நாட்டுடைமையாக்க வேண்டும். முதல் கட்டமாக திரைப்பட அரங்குகளை நாட்டுடைமையாக்க வேண்டும் அரசு. அதற்கு முதன் முதலாக மாவட்டத் தலைநகரங்களில், சென்னை, தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை, நெல்லை போன்ற மாநகரங்களிலும், முதல் தர முனிசிபாலிட்டி உள்ள நகரங்களிலும் உள்ள சினிமா கொட்டகைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதில் எந்தவிதமான தவறும் கிடையாது. அதைப்போலவே பஞ்சாப் மாகாணத்தில் கூட செய்திருக்கிறார்கள். மற்றொன்றும் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு திரைப்பட அரங்கைத் திறந்து வைத்துப் பேசும்பொழுது முதல்வர் அவர்கள் இம்மாதிரி கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, நான் சொன்னமாதிரி சினிமா அரங்குகளை விரைவாக நாட்டுடைமையாக்க வேண்டும். அவைகளை விரைவில் நாட்டுடைமையாக்க அரசாங்கம் [illegible] முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று [illegible] கிறேன்.

பி.ப.
12.30 திண்டுக்கல் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக யாரை நிறுத்தினாலும், அவர் தோற்பார் என்று இங்கே வீராப்பு பேசினார்கள். அவர்களுக்கு ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். மக்களை சந்தித்துவிட்டுச் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நிறுத்தக்கூடிய வேட்பாளர் யாராக இருந்தாலும் அவர் ஏறத்தாழ ஒரு லட்சம் ஓட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதி என்று அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓட்டு வித்தியாசத்தில் வேண்டுமானால் சற்று கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். ஆனால் வெற்றி உறுதி என்பதில் சந்தேகப்பட வேண்டாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தத் தேர்தல் வரப்போகின்ற ஒன்று. தேர்தல் வருவதற்கு முன்னால் முடிவைப்பற்றி சொல்வது பொருத்தமாக இருக்காது. அதுமட்டுமல்ல. அவர் (திரு. எ. ஆர். பெருமாள்) இங்கே ஒரு கட்சிக்குத் தலைவராக இருப்பவர். அவர் இந்த மன்றத்திலே சவால் விட்டால், எல்லா கட்சியினரும் பதில் சவால் விடவேண்டிய நிலைமை ஏற்படும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தேர்தல் முடிவைப் பற்றி முன்கூட்டியே தேர்தல் அதிகாரி அறிவித்தால் தவறு ; அரசியல் கட்சிக்காரர்கள் சொல்வதில் தவறு இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர் ஒரு லட்சம் ஓட்டு வித்தியாசத்திலே வெற்றி பெறுவதாகச் சொன்னார். அதிலே கொஞ்சம் குறைவு ஏற்பட்டால் பின்னால் என்ன செய்வார் என்பதை அறிவிப்பாரா ?

திரு. எ. ஆர். பெருமாள் : ஓட்டு வித்தியாசத்தில் குறைந்தால் என்ன செய்வீர்கள் என்று அம்மையார் அவர்கள் கேட்டார்கள். அப்படியானால் நாங்கள் வெற்றி பெறுவது உறுதி என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா ? அதை ஏற்றுக்கொள்ளத் தயாரா ? மக்கள் எங்களை ஆதரிக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : என்னைப் பொறுத்தவரையில் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. நாங்கள்தான் ஜெயிப்போம்; இவ்வளவு வித்தியாசத்தில் ஜெயிப்போம் என்று தேர்தல் அதிகாரி ஓட்டுக்களை எண்ணி அறிவிப்பது போல சொல்கிறீர்களே ! நீங்கள்தான் தேர்தல் அதிகாரியா ?

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த மன்றத்தை எலெக்ஷன் மேடையாக மாற்றிக்கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். பெருமாள் : அங்கே வாழ்கின்ற மக்களுடைய உள்ளங்களை பார்த்துவிட்டு, அவர்கள் எந்த நோக்கத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்துவிட்டுத்தான் நான் இப்படிச் சொல்கிறேன். மக்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால் ஓட்டுக்களை எண்ணிப்



பார்த்துவிட்டுத்தான் வெற்றி பெறுவோம் என்று சொல்லவேண்டியதில்லை. தேர்தலுக்கு முன்னாலே கூட தெரிந்து கொள்ளலாம். சட்டப்படி ஓட்டுப் போடுவது என்பது பின்னால் நடைபெறும். அவ்வளவுதான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. அம்மையார் அவர்கள் பேசும் போது திட்டவட்டமாக இவ்வளவு ஓட்டுக்கள் என்று குறிப்பிடக்கூடாது என்று சொன்னார்கள். அப்படியானால் தோராயமாக சொல்லலாம் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன் திண்டுக்கல் தேர்தலில் ஆளும் காங்கிரஸ் கட்சி தோராயமாக எவ்வளவு ஓட்டுக்கள் பெறும் என்பதை அறிவிப்பார்களா? நான் அதை அறிய விரும்புகிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : ஆளும் காங்கிரஸ் கட்சி தேர்தலில் நிற்பதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். முடிவு செய்வதற்கு முன்னால் ஓட்டுக்களைப்பற்றிச் சொல்வதற்கு நாங்கள் தயாராக இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆளும் காங்கிரஸ் கட்சியின் தயவில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது என்று சொல்லும்போது, திண்டுக்கல் தேர்தலைப்பற்றி மட்டும் யோசித்துக் கொண்டிருக்கிறீர்களாக்கும் !

திரு. எ. ஆர். மாரிமுத்து : தேர்தலைப்பற்றி தீர ஆலோசித்து மெதுவாகத்தான் முடிவெடுக்கப்படும், அவசரம் அவசரமாக முடிவு செய்வதில்லை.

*திரு. எ. ஆர். பெருமாள் : திராவிட முன்னேற்றக் கழகம் டெப்பாசிட் இழக்கும் ; டெப்பாசிட் இழக்கும் ; வெற்றிபெற முடியாது ; ஜாமீன் தொகையை இழக்கச் செய்வோம் என்றெல்லாம் அங்கே பிரச்சாரம் செய்யப்படுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் எவ்வளவு பலம் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். அதைப் போல ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு எவ்வளவு ஓட்டு கிடைக்கும் என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். இவர்களுடைய அமைப்புக்கள் அங்கே எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதைப் பார்த்துவிட்டுத்தான் இந்த விவரங்களைச் சொல்கிறேன். அங்கே இருக்கக் கூடிய மக்கள் எங்கள் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள் ; அவர்கள் வழிவந்தவர்கள் ; எங்களை நம்பி இருக்கக்கூடியவர்கள். திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி எங்களுக்கு பலம் வாய்ந்த இடம். ஆகவே, அங்கே ஆளும் காங்கிரஸ் கட்சியிலிருந்து எவர் போட்டியிட்டாலும் சரி, அல்லது அ. தி. மு. க. கட்சியைச் சேர்ந்த எவர் போட்டியிட்டாலும் சரி, அவர்களில் எவரும் வெற்றிபெற முடியாது. அதுமட்டுமல்ல. இப்போது வந்திருக்கிற புரட்சி கட்சி என்று சொல்கிற அண்ணா தி.மு.க. தலைவரான இந்த இராமச்சந்திரன் அல்ல, அந்த அயோத்தி இராமச்சந்திரனே வந்து போட்டியிட்டாலும் திண்டுக்கல் தேர்தலில் தோற்பது உறுதி. (கைதட்டல்) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றி உறுதி, உறுதி என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. மு. இரத்தினசபாபதி: பேரவைத் தலைவர் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூற எனக்கு வாய்ப்பளித்தமைக்கு, முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இருக்கிற இந்த அரசு, தமிழகத்தில் இருக்கின்ற மக்களை— அவர்கள் எந்தப் பிரிவினராக இருந்தாலும் அவர்களை—முன்னேற்ற வேண்டுமென்ற முறையில் பல பல நல்ல திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றி வருகிறது. அதே நேரத்தில் அவர்களுக்கு ஏற்படுகின்ற ஆபத்தைத் துடைப்பதற்கும், அவர்கள் எதிர் பார்ப்பதற்கு முன்பே சென்று அவர்களுக்கு இந்த அரசு பல அரிய செயல்களைச் செய்து கொண்டிருக்கிறது. இன்று தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, விவசாயத்திலே பல தீவிரத் திட்டங்களைச் செயல்படுத்தி, அதன் பயனாக இந்த நாட்டில் உணவு பற்றாக்குறை இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இப்படிப் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, அவ்வப்போது ஏற்படுகின்ற இயற்கையின் கோளாறுகளால்—வறட்சியானாலும் சரி, புயலானாலும் சரி—பெரும்பாலும் பாதிக்கப்படக் கூடியவர்கள் விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களிலே இந்த அரசு அவர்களுக்கு உதவி செய்ய என்றும் தயங்கியதுமில்லை; தவறியது மில்லை. சென்ற ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட புயலாலும் வறட்சி யாலும் மக்கள் அவதிப்பட்டபோது, அவர்களை அமைச்சர்கள் ஓடோடி சென்று பார்த்து, ஆறுதல் கூறியது மட்டுமல்ல; அவர்களுக்கு வேண்டிய நிவாரணப் பணிகளையும் செய்தனர். வீடுகளை இழந்தவர் களுக்கு உதவித் தொகையாக 40 ரூபாய் கொடுப்பது என்பதை மாற்றி 80 ரூபாயாக உயர்த்தியது இந்த அரசு. அதுவும் அந்த அந்த இடங் களிலே உடனுக்குடன் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் பயன டைந்த மக்கள் இந்த அரசை நோக்கி தங்கள் உள்ளம் நிறைந்த பாராட்டு தலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அரிய திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றிக்கொண்டிருப் பதைப் பார்க்கப்பொறாத மாற்றுக்கட்சியினர் குறைபட்டுக் கொள்கிறார்கள். தொழிலாளர்களுக்குக் குறை என்றால் இவர்கள் ஓடோடிச் செல்கிறார்களே, விவசாயிகளுக்குக் குறை என்றால் ஓடோடிச் சென்று கேட்கிறார்களே, அவர்களை எல்லாம் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்கிறார்களே என்ற பொறாத எண்ணத்தினால், இப்படிப்பட்ட நிவாரணப் பணிகளைச் செய்வ தற்கு சகலக் கட்சிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று ஒரு கருத்தை உள்ளத்திலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்போது ஏற்பட்ட இந்த புயலால் பல துறைகளிலுமாக 40 கோடி ரூபாய்க்குமேல் நஷ்டம் ஏற்பட்டு, அதைச்சரிக்கட்ட இந்த அரசு மத்திய அரசை 25 கோடி ரூபாய் நிவாரணப் பணிக்காக கடனாகவும் மானிய மாகவும் கேட்டுக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் பணம் ஒதுக்குகிறார்களோ, இல்லையோ என்றாலும் இன்று தமிழக அரசு 5 கோடி ரூபாயை ஒதுக்கி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளித்து வருகிறது.





அதே நேரத்தில் விவசாய பெருங்குடி மக்கள் வேளாண்மை உற்பத்தி யில் முன்னேற, உறுதியான பாசனவசதி ஏற்படுத்த நிலத்தடி நீரினை சிறந்த முறையில் பயன்படுத்தும் வகையில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை தீட்டி, அதற்கு நிதி உதவிக்காக மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது விவசாயிகள் மேலும் பயனடைவார்கள்.

விவசாய மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் பயன்படும் வகையில் இந்த அரசு பலபல நல்ல திட்டங்களைத் தீட்டி செயல்படுவதை நாம் அறிவோம். நொடிந்த பஞ்சாலைகளில் வேலையின்மை காரணமாக தொழிலாளர்கள் வேலை இல்லாதிருந்த நேரத்தில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் 13 ஆலைகளை எடுத்து நடத்தி, அதனால் 9962 தொழிலாளர் களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதையும் நாம் அறிவோம்.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படும் தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் 3 கோடி ரூபாய் அளவில் கிராம வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டம் ஒன்றை இந்த அரசு தொடங்கியுள்ளது. அதேபோன்று 3 கோடி ரூபாய் அளவிலான கிராம சாலைகள் திட்டம் ஒன்றையும் அரசு தொடங்கியுள்ளது. அதைப்போன்று வறட்சியால் பீடிக் கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் அளிக்கும் திட்டம் ஒன்று 1.31 கோடி ரூபாய் மதிப்பில் தீட்டப்பட்டு, வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசு வழிவகை செய்திருக்கிறது. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்த 61 லட்சம் ரூபாய் செலவில் இளைஞர் அணித் திட்டம் ஒன்றையும் நமது அரசு தொடங்கியுள்ளதை நாம் அறிவோம்.

அதைப்போலவே, மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு ஊழியர்களுக்கும் உள்ள ஊதியத்தில் வேறுபாடு இருக்கக்கூடாது; இரண்டு பேருக்கும் ஊதியத்தில் ஒரு சமன்பாடு இருக்க வேண்டும். மாநில அரசுக்கு இருக்கும் நிதிநிலைமை அதற்கு இடங்கொடுக்காது. எனவே, மத்திய அரசே இதற்குரியத் தொகையை ஊதியம் சீர் செய்யும் மானிய மாக கொடுக்க வேண்டுமென்று நமது அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அதன்படி பல பல முறைகளிலே இங்கே இருக்கின்றவர்கள் எல்லாம் முன்னேற வேண்டும் என்று செயல்பட்டு வருகிறது இந்த அரசு. இந்தத் தமிழகத்தை ஒட்டு மொத்தமாக நல்ல முறையிலே முன்னேற்றுவிக்க வேண்டும், இங்கே இருக்கும் மக்களிடையே இல்லாமையை ஒழிக்க வேண்டும், எல்லோரும் நன்றாக வாழ வேண்டும் என்று 10 ஆண்டு கால திட்டத்தை அமைத்து, மாநில திட்டக் கமிஷன் என்ற ஒன்றையும் அமைத்து திட்டங்களை செயல்படுத்தி வருவதை நாம் அறிகிறோம். இப்படி இந்த அரசு பல பல திட்டங்களை செய்து கொண்டு வரும் பொழுது, இயற்கை இடர்ப்பாட்டால் இன்று மின்சார தட்டுப்பாடு நாட்டிலே இருந் தாலும் அவைகளையும் ஓரளவு கட்டுப்படுத்தி அவைகளை எல்லாம் நீக்க நல்ல திட்டங்களை வைத்துக் கொண்டுதான் இருக்கிறது. இத[illegible]

இந்த மின்சாரத் தட்டுப்பாட்டை 4, 5 மாதங்களுக்கு நாம் சந்தித்து தீரவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த மின்சார தட்டுப்பாடு சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று பற்பல தொழிற்சாலைகளுக்கும், மற்றவற்றிற்கும் மின்சார வெட்டு செய்திருக்கும் நிலையில் இன்று தமிழகத்தில் 1,000 டென்ட்டு சினிமாக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளிலே ஒரு காட்சி மட்டும் தான் நடத்தவேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும். அப்போது போதுமானவர்களுக்கு இட வசதி காணாது என்று சொன்னாலும், அவர்களுக்கு இப்பொழுது எவ்வளவு இடவசதி கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதிலே கூடுதலாக 25 சதவிகிதமோ அல்லது 30 சதவிகிதமோ கொடுத்து, அங்கே ஒரு காட்சிதான் நடத்த வேண்டும் என்று சொல்வதன் மூலம் அவைகளிலே மீதப்படும் மின்சாரத்தை எடுத்து கிராமப்புற விவசாய பம்ப் செட்டுகளுக்கு கொடுக்கலாம்.

அடுத்தபடியாக இந்தக்கூட்டத் தொடரிலே தமிழகத்தைப் பொறுத்த வரையில் பயணிகள்-பேருந்துகளை நாட்டுடமையாக்கும் சமதர்ம திட்டத்தை உருவாக்குவதற்கான நிலையிலே பலதிட்டங்களை இந்தஅரசாங்கம்நிறைவேற்க் முன் வந்திருக்கிறது. ஆனால்அதே நேரத்திலேஇங்கே இருக்கும் மாற்று கட்சியினர் ஏதாவது சிறு குற்றம் ஏற்பட்டாலும், சிறு சம்பவங்கள் நிகழ்ந்தாலும் அவைகளை எல்லாம் மிகைப்படுத்தி ஏதோ இந்த அரசின் நிர்வாகத்திலே கறை கண்டுவிட்டதாக பேசியதைப் பார்க்கிறோம். உதாரணத்திற்கு ஒன்றை நான் கூறவேண்டுமானால், கடந்த ஆண்டு டிசம்பர் திங்களிலே நடைபெற்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு முதல் அமைச்சரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கைத் தீர்மானத்தின் பொழுது எதிர்க்கட்சித் தலைவர் பேசும் பொழுது எனது தொகுதியிலே நடந்த ஒரு சம்பவத்தை வைத்து இந்த அரசின் மீது குறை கூறினார். அது என்னவென்றால், விளாத்திக்குளம் போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் இரண்டு வாலிபர்களை திருட்டுச் சம்பந்தமாக கூப்பிட்டு விசாரிப்பதற்காக, அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு கூப்பிட்டு வரச் சொல்லி இருக்கிறார்கள். அந்த நேரத்திலே பெரிய போலீஸ் அதிகாரி வந்து இன்ஸ்பெக்ஷன் செய்ய வந்ததன் காரணமாக அவர்கள் இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியே இருங்கள் என்று அந்த சப்-இன்ஸ்பெக்டர் கூறிவிட்டு, உள்ளே பல காரியங்களைக்கவனித்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். அந்த சப்-இன்ஸ்பெக்டர் அந்த ஊருக்கு வந்ததும், தவறான வழியில் அந்த போலீஸ் ஸ்டேஷனை பயன்படுத்திக் கொள்வதற்கு வழி இல்லாமல் இருந்ததால், சில மக்கள்விரோத சக்தியினர் இவரை மாற்ற வேண்டுமென்று திட்டம் போட்டு வைத்திருந்தார்கள். அவர்கள் திருட்டுக் குற்றத்தின் பேரிலே கொண்டு வந்த இருவரில் ஒருவரை பிடித்து வெளியூருக்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு அவர்களே இங்கிருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கு, அந்த சப்-இன்ஸ்பெக்டர் இரண்டு பேரை கூப்பிட்டு வைத்து உதைத்தார், அதிலே ஒருவர் இறந்துவிட்டாரோ என்னவோ என்று ஒரு தந்தியை கொடுத்து விட்டார்கள். அந்தத்தந்தியை வைத்துக் கொண்டு, அந்த நபர் இறந்து விட்ட அர்த்தத்திலே இந்த அரசு மீது குற்றம் சாட்டினார்கள். நான் அங்கு சென்று விசாரித்த பொழுது அந்தப் பையனை அந்த பேர்வழிகள் மறைத்து வைத்துவிட்டு, பிற்பாடு அவனை பிடித்து வந்தபொழுது அவருடைய தந்தை சப்-இன்ஸ்பெக்டரிடம் வந்து இவன் மேல் எந்தவித



நடவடிக்கையும் எடுத்துவிடாதீர்கள். அவன் மறைவானதற்கு நான்தான் பொறுப்பு என்று சொன்னாராம். இந்த நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. எதற்கு சொல்லவருகிறேன் என்றால், ஒரு சிறு சம்பவம் நடைபெற்றாலும்கூட, அதை இந்த அரசிற்கு விரோதமான முறையிலே திருப்பி, இந்த அரசின் மீது களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று எல்லா எதிர்க்கட்சியினரும்—தி.மு. கழக கூட்டணி கட்சியினர் தவிர, ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்கு உறுதுணையாக அந்தந்த கட்சியின் தலைவர்களும் இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்று எதிர்கட்சியிலேயுள்ள தலைவர்கள் கூறுகின்ற கருத்தை நாங்கள் கேட்டு, எங்களிடமுள்ள குறைபாடுகளை தீர்த்துக்கொள்ள வழி செய்ய வேண்டுமே தவிர, அவர்கள் கூறுகின்ற குறைபாடுகள் எங்கள் மீது மக்களின் வெறுப்பை உண்டாக்கும் நிலைமையில் இருக்கக் கூடாது என்று சொல்லி, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி, அமைகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒன் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பேர்களை திருட்டுக் குற்றத்தின் பேரில் விளாத்திக்குளம் போலீஸ் ஸ்டேஷனிலே அழைத்து வந்ததாகவும், அதிலே ஒருவரை யாரோ தட்டிக் கொண்டு போய்விட்டதாகவும் சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷனிலே இருந்தவர்கள் எப்படி வெளியே போனார்கள் என்ற விவரங்களையும் சற்று தெரிந்து சொன்னால் நலமாக இருக்கும். எங்களுக்கு வருகின்ற ஆதாரம் எல்லாம் இப்படி இரண்டு பேரை பிடித்து வைத்திருந்தார்கள், அதிலே ஒருவரைக் காணவில்லை என்றுதான். நான்கூட பேசும் பொழுது பிடித்து வைத்திருந்த இருவரிலே ஒருவரை காணவில்லை என்றுதான் இந்த மன்றத்திலே கூறியதாக எனக்கு ஞாபகம். அவரை ஸ்டேஷனிலே கொன்றுவிட்டார்கள் என்று நான் இந்த மன்றத்திலே பேசவில்லை.

திரு. மு. இரத்தினசபாபதி : நான் அதைத்தான் முடிவிலே கூறினேன். அந்த இருவரையும் அழைத்து வந்த நேரத்தில் அந்த போலீஸ் ஸ்டேஷனிலே இன்ஸ்பெக்ஷன் செய்வதற்காக மேல் அதிகாரி வந்துவிட்டதால் இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியே உட்காரச் சொல்லி இருந்தார்கள். ஆனால், அதிலே ஒருவரை அப்படி தட்டிக் கொண்டு போய்விட்டார்கள் என்றுதான் நான் சொன்னேன். காரணம் அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது களங்கம் கற்பித்து அவரை அங்கிருந்து மாற்ற வேண்டும் என்பதற்காக அவர்கள் அதைச் செய்தார்கள் என்று தான் கூறினேன்.

*திரு. மு. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, இந்த கவர்னர் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழ் நாட்டில் மககளின் நல்வாழ்விற்காக பல திட்டங்களைப்போட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் மக்களின் உயிர் உடமைகளைப்பாதுகாக்க அரசு தவறி விட்டது. இது குறித்து கவர்னர் உரையில் தெரிவிக்கப்படவில்லை என்பதனை இந்த நேரத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன். அதற்கு ஒரு [illegible] 6—1—1973 அன்று ஆலங்குடியிலே நடந்த

சம்பவத்தைப் பற்றி இங்கே சொல்ல நான் விரும்புகின்றேன். 6—1—1973 அன்று ஆலங்குடியிலே அமைச்சர் அவர்கள் கூட்டத்திற்காக வந்த நேரத்திலே அங்கே கருப்பு கொடி காட்ட ஏற்பாடு செய்திருந்தார்கள் அங்கிருந்த எதிர்க்கட்சியினர். கருப்புக் கொடி காட்டுவது என்பது ஜனநாயக மரபு. ஆனால், அதே நேரத்திலே கல் எறிவது கூடாது என்ற ஒரு விஷயத்தினையும் இங்கே நான் சொல்ல ஆசைப்படுகிறேன். கல் அங்கே எறியப்பட்டது என்றால் அந்தக் கல் எந்த கட்சிக்காரர்களால் எறியப்பட்டது, அந்த கல் எறிந்தவர்கள் யார் என்பதனைக் கண்டு பிடிப்பதிலேதான் சிக்கல் இருக்கிறது என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கு பெரிய அமைச்சர் அவர்கள் கூட்டத்திலே குழப்பம் விளைவித்த நேரத்திலே, என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "போலீசார் அவர்களைக் கவனித்து விடுவார்கள்" என்று சொல்லி இருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு போலீசாரையே ஆத்திரம் மூட்டுவதற்காக அங்கே சில உங்கள் கட்சிக்காரர்கள் அவர்கள் மீது கல்லை எறிந்து, அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகளுக்கும், சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்திருக்கிறார்கள். அந்த சேதம் விளைவித்ததின் காரணமாக, அமைதியாக இருக்கின்ற பிற கட்சிக்காரர்கள் வீடுகளிலே சென்று புகுந்து அங்கு சூறையாடி பல பேர்களை அடித்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் எங்கள் கட்சியைச் சேர்ந்த சில நண்பர்களை வீட்டிலே புகுந்து ........(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காலையிலே கல்வி அமைச்சர் அவர்கள் ஆலங்குடி சம்பந்தமான விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். பொதுக்கூட்டத்திற்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய வழக்கு விசாரணையிலே இருக்கின்றன. அதிலே எது சரி, எது தவறு என்று வாதிட நாம் விரும்பவில்லை. அது பற்றிப் பேசுகின்ற உரிமை நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருக்கு உண்டு; நான் அதை மறுக்கவில்லை. ஆனால், பொதுக் கூட்டத்திலே பேசும் பொழுது கல்வி அமைச்சர் "போலீசார் கவனித்துக் கொள்வார்" என்று சொல்லிய காரணத்தினால் போலீசார் அதன் மேலேயே நடவடிக்கைகளிலே இறங்கினார்கள் என்று கூறுவது கல்வி அமைச்சரைக் குற்றம் சாட்டுவதாக அமைந்துவிடுகிறது. காலையிலே பெரிய ஒரு உறுப்பினரும் அப்படியே சொன்னார்கள். இப்பொழுது பேசுகிற உறுப்பினர்களும் அப்படியே சொல்லுகிறார்கள். கலவரம் செய்கின்ற ஒரு கூட்டத்தினைப் பார்த்து கூட்டத்திலே இருந்த கழகத் தொண்டர்கள் அவர்களைத் தாக்குவதற்காக முற்பட்ட பொழுது பல மாணவர்கள் கூச்சல் போட்டார்கள். பலர் கல் எறிந்தார்கள். அவர்களை எல்லாம் தாக்க கழகத் தொண்டர்கள் முயற்சித்த பொழுது, கல்வி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, "அவர்களைப் போலீசார் கவனித்துக் கொள்வார்கள்; நீங்கள் அமைதியாக இருங்கள். கூட்டத்திலே எந்த சல சலப்பும் வேண்டாம்" என்று சொல்லியது எப்படித் தவறாகும். நீங்கள் அவர்களை இப்பொழுது தாக்க வேண்டாம் என்று சொல்லியதை வைத்துக்கொண்டு, கல்வி அமைச்சர் அவர்கள் அப்படிப் பேசியதால்தான் போலீசார் நடவடிக்கைகளிலே இறங்கினார்கள் என்று கூறுவது பொருத்தமாகாது.

*திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த விஷயத்தில் எனது கட்சி உறுப்பினர் கூறுவது எல்லாம்—போலிஸ்காரர்கள் அங்கே இருக்கிறார்கள், கலவரம் ஏற்படாது அமைதியைக் காப்பாற்ற அவர்கள் மேற்



கொள்ள வேண்டிய கடமைகளை மேற்கொள்வார்கள் ஆனால் அமைச்சர் அவர்கள் போலீசார் பார்த்துக் கொள்வார்கள் என்று சொன்னதானது போலீசார்களுக்கு ஆணை பிறப்பித்ததுபோல அமைந்துவிட்டது, அது போல அந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் சொல்லியிருக்கத் தேவையில்லை, அவர் அப்படிச் சொன்னதனால்தான் இவ்வளவு விபரீதங்கள் நேர்ந்தன என்பதுதான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கள்ளக் கடத்தல்காரர்கள், கலப்படம் செய்கிறவர்களைப்பற்றி இந்த அவையில் கேள்வி கேட்கிற நேரத்தில் நானே அவர்களை எல்லாம் போலீசார் கவனித்துக் கொள்கிறார்கள் என்று சொல்கிறேன். அதுபோல அன்றைக்குக் கல்வி அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது குழப்பம் விளைவிக்க சிலர் முயன்றார்கள். அது உண்மை. கறுப்புக்கொடி காட்டியவர்கள் கல் வீசி கூட்டத்தைக் கலைக்க முயன்றார்கள். அப்போது கட்சித் தொண்டர்கள் அவர்களைத் தாக்குவதற்காக எழுந்து முற்பட்டபோதுதான் அவர்களைப் பார்த்து கல்வி அமைச்சர் அவர்கள், அமைதியை நிலைநாட்ட நீங்கள் யாரும் அங்கே சென்று அவர்களைத் தாக்க வேண்டியதில்லை. அவர்களைப் போலீசார் கவனித்துக் கொள்வார்கள் என்பதாகக் கட்சித் தொண்டர்களுக்குச் சொல்லி இரண்டு கோஷ்டி மோதல் ஏற்படாது அமைதியை ஏற்படுத்தியிருக்கிறார். சில பத்திரிகைகள் கூட அவர் பேசியதில் முன்வரி, பின்வரியை விட்டுவிட்டு "அவர்களைப் போலீசார் கவனித்துக்கொள்வார்கள்" என்று சொன்னதாகப் போட்டிருப்பதும், அதை இங்கே எடுத்து வைத்து விவாதிப்பதும் அழகல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த இடத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் எந்த உள் அர்த்தத்துடனும் அந்த வார்த்தைகளைச் சொல்லவில்லை என்பதாகக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு பல பலாத்காரச் சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத்தான் எங்கள் கட்சி உறுப்பினர் எடுத்துக் கூறுகிறாரே தவிர, கல்வி அமைச்சர் அவர்கள் அப்படிக் கூறியதனால்தான் எல்லாவிதமான விளைவுகளும் ஏற்பட்டுவிட்டது என்கிற தொனியில் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சத்தியமூர்த்தி : கல்வி அமைச்சர் அவர்கள் உள்நோக்கத்துடன் சொன்னார் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் அப்படிச் சொன்னதன் காரணமாக அதற்குப் பிறகு மக்களுக்கு ஆத்திரம் ஊட்டக்கூடிய வகையில் கலகக் கட்சிக்காரர்கள் அங்கங்கே கல்லெறிந்து பல பலிதமான விபரீதச்சம்பவங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். போலீஸ்காரர்களை அழைத்துக்கொண்டே எங்களது கட்சிக்காரர்களது வீடுகளுக்கு எல்லாம் சென்று ஆர்ப்பாட்டம், ஆரவாரம் செய்திருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த பேரூராட்சி மன்றத் தலைவர் இராமச்சந்திரன் வீட்டிற்குள் நுழைந்து ஏகதேசமான முறையில் பெண்களை எல்லாம் தாக்கிப் பேசியிருக்கிறார்கள். வேம்புவினுடைய வீட்டுக்குப் பின்னால் இருந்த ஓடுகளை எல்லாம் இறக்கிக் கலவரம் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வன்முறைகளைக் கண்டிப்பதற்காக 9-ம் தேதி ஹர்தால் அனுஷ்டித்தோம். எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கக்கூடாது என்பதற்காக, டி.எஸ்.பி.

எஸ்.பி. எல்லாம் அங்கே இரவு எட்டு மணி, ஒன்பது மணி வரை இருந்திருக்கிறார்கள். ஆனால் அன்றைய தினம் இரவே 9 மணிக்கு மேல் ஹர்தாலுக்காகக் கடை அடைத்தவர்களுடைய கடைக் கதவுகளை எல்லாம் உடைத்தெறிந்து சூறையாடியிருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் வெங்கடா லாட்ஜ் வைத்திருக்கிறார். அவர் போலீசார்களுக்கு உணவு அளித்தார் என்பதற்காக அவரது கடையைச் சூறையாடியிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : வெங்கடா லாட்ஜ் உங்கள் கட்சிக்காரருடையது என்கிறீர்கள். அவர்கள் போலீசாருக்கு உணவு அளித்தார் என்பதற்காக அவரது கடை சூறையாடப்பட்டது என்றால் அது யாரால்?

<u>திரு. மு. சத்தியமூர்த்தி</u> : தி. மு. க. காரர்களால்தான் கடை சூறையாடப்பட்டது.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : வெங்கடா லாட்ஜ்காரர் உங்களது கட்சியைச் சேர்ந்தவர். அவர் போலீசாருக்கு சாப்பாடு போட்டார் என்பதற்காக தி.மு.க. காரர்கள் அவரது கடையைத் தாக்கினார்கள் என்று சொல்கிறீர்களா? போலீசார்களுக்கு உணவு அளிப்பது நட்பின் செயல். காங்கிரஸ்காரர்களும் போலீஸ்காரர்களோடு உறவாக இருந்தார்கள் என்பதை அது காட்டுகிறது. அந்தக் கடையைத் தாக்கியது யார்?

<u>திரு. மு. சத்தியமூர்த்தி</u> : அன்றைக்கு இரவு எட்டுமணி வரை டி.எஸ்.பி. அவர்களும், சப் கலெக்டர் அவர்களும் அந்த இடத்தில் இருந்திருக்கிறார்கள். கலவரம் எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக போலீஸ்காரர்கள் தி.மு.க. வினரையே தடுத்திருக்கிறார்கள். அந்த போலீஸ்காரர்களுக்கு எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் உணவு அளித்தார் என்பதற்காக தி.மு.க. வினரேதான் அந்த லாட்ஜைத் தாக்கினார்கள், யார் யார் அன்றைய தினம் ஹர்தாலுக்குத் தலைமை தாங்கினார்களோ அவர்களை எல்லாம் அடித்திருக்கிறார்கள். போலீசார்களுக்கும், ஸ்தல தி.மு.க. வினர்களுக்கும் கருத்து வேறுபாடு இருந்த காரணத்தினால் தான் இப்படி நடந்திருக்கிறது. பிறகு ஒன்றும் அறியாதவர்கள் மீது எல்லாம் பொய் கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. நமது முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து அந்த வழக்கினை எல்லாம் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்கவேண்டுமென்று உங்களுடைய கட்சியிலேயே தீர்மானம் போட்டிருக்கிறீர்கள். அதைச் செயல்படுத்த துரிதமாக ஆவன செய்யவேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பகுதியில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் உரங்கள் கிடைப்பதில்லை. உரம் கிடைப்பதற்குரிய ஒரு நல்ல ஏற்பாட்டினை உடனடியாகச், செய்துகொடுத்தால் விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும். மேலும் இவ்வாண்டு மழை காலதாமதமாகப் பெய்த காரணத்



தினால் பயிர்கள் எல்லாம் சரியாக விளையவில்லை. ஆகவே இவ்வாண்டு கடன்களை எல்லாம் ஒத்திவைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்</u> : மேலும் இன்றைய தினம் ½ மணி இருக்கிறது. திரு. சுப்பு, திரு லத்தீப், திருமதி அனந்தநாயகி ஆகிய மூவரும் பத்துப் பத்து நிமிடம் பேசுவார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த யாரும் பேசப்போவதில்லை. நாளைக்கு எதிர்க் கட்சித் தலைவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேசுவார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, you can extend the time beyond 1-30. Otherwise, we will have no chance to speak.

MR. DEPUTY SPEAKER : Does the hon. Member mean to say that she cannot speak within ten minutes'. How is it that some hon. Members speak within seven or eight minutes ? பி.ப. 1–00

THIRU R. PONNAPPA NADAR : May I make a submission The business can be extended by one day.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, இப்பொழுது குறிப்பிட்ட உறுப்பினர்கள் இதை ஆரம்பித்து நடத்தினால், பிறகு பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அதைப்பற்றி முடிவு செய்யலாம்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : சாதாரணமாகவே 1½ மணி வரை நடப்பது ½ மணி நேரம் நீட்டி நடத்தப்படுகிறது. இன்றைக்கு ½ மணி நேரம் நீட்டி வையுங்கள், உட்கார்ந்து கொள்ளுங்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : நீங்கள் வீட்டிற்குப்போய் ஓய்வு எடுத்துக்கொள்வீர்கள். நாங்கள் மறுபடியும் மேல்சபைக்குப் போக வேண்டும். அதுமாத்திரமல்ல 10-ம் தேதி நான் மேல்சபையிலும் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. இதை நீடிப்பது என்றால் மேல்சபையிலும் நான் பதில் சொல்வதைத் தள்ளி வைக்க வேண்டியிருக்கும்.

THIRU R· PONNAPPA NADAR : The House can sit Till 2'O clock or 1·45 to day.

MR. DEPUTY SPEEKER : Till 1·45 p.m. I am alloting 15 minutes. for each member·

<u>திரு. க. சுப்பு</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையிலே இந்த அரசாங்கம் " வறுமை, வேலையின்மை ஆகியவற்றை ஒழித்து, சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்கு

வதையே முக்கியக் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டுள்ளோம்," என்று
கூறியிருக்கிறது. அந்தக் குறிக்கோளை யாரும் இங்கு மறுக்கமாட்டார்கள்.
ஆனால் அறிவிக்கப்பட்ட குறிக்கோளுக்கும் அனுசரிக்கப்படக்கூடிய நடை
முறைக்கும் எந்த அளவுக்கு இடைவெளி இருக்கிறது என்று நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சோஷலிச சமுதாயம் காணத்தான் இந்த
அளவிலே போக்குவரத்தை தேசியமயமாக்குகிறோம் என்று
ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்
கிறோம். ஆனால், அகில இந்திய தேசியக் கொள்கையிலே எல்.ஐ.சி.,
அதேபோல் வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டபோது அனுசரிக்கப்பட்ட
முறை இங்கே அனுசரிக்கப்படவில்லை. நல்ல ஒரு திட்டத்தை இங்கே
கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், வங்கிகளையும் எல்.ஐ.சி. யையும்
முடிவு எடுக்கப்படுமானால், நாளை காலை 10 மணிக்கு சாவி கைக்கு
வந்தாக வேண்டுமென்ற முறையில் அமுலாக்கவில்லை. அப்பொழுது
நான் அதனால் பயன் ஏற்படும். அங்கு நடைபெறும் ஊழல்களையும்
லஞ்சத்தையும் மாற்றவும் மாநில வளர்ச்சிக்காகவும் இந்தத் திட்டம் படிப்
படியாகக் கொண்டு வரப்படும் என்று சொல்கிறார்கள். இந்த படிப்
படியாக என்பதிலே பல ஊழல்கள் படிப்படியாக வந்துவிடும் என்று
சொல்ல விரும்புகிறேன். ஆகவே, கவர்னர் உரையில் குறிப்பிட்ட
மாதிரி படிப்படியாக என்பதை எடுத்துவிட்டு, உடனடியாக என்று
கொண்டு வரவேண்டும்.

சினிமாவை தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையை ஏ. ஆர்.
பெருமாள் அவர்களும், காவேரி மணியம் அவர்களும், என் முத
லமைச்சர் கூட வரவேற்றிருக்கிறார்கள். ஆனால், அப்படிச் சொல்கிற
இவர்கள் ஒரு தியேட்டரைத் திறந்து பேசியிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சி
யில் திரு. ஏ. எல். சீனிவாசன் பேசும்பொழுது, வங்காளத்தில் சினிமாக்
கள் நாட்டுடமையாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்
திலே தனிப்பட்ட முதலாளிகளுடைய மனம் நோகாமல் அந்தக் கொள்கை
யைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். பொறுமையாக,
படிப்படியாகச் செய்யலாம் என்ற முறையில் இல்லாமல் உடனடியாக
நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
நம்முடைய முதலாளிகள் பற்றி நமக்குத் தெரியும். தவிட்டைத் தங்க
மாக ஆக்குவார்கள், தங்கத்தைத் தவிடாக ஆக்குவார்கள். முன்
பெல்லாம் பஸ்கள் ஒழுங்காகச் செல்லும். இப்பொழுது ஸ்ரீவில்லிபுத்தூரி
லிருந்து மதுரைக்கு நான் செல்வதற்குள் 3 இடங்களில் வண்டி நிற்கக்
கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக, அந்த வண்டியிலே இருக்கக்கூடிய
முக்கியமான உறுப்புகளையெல்லாம் மாற்றி விடுகின்றனர். போக்கு
வரத்துத் துறை அமைச்சர் திறமையாக திட்டத்தைக் கொண்டு வருகிறார்
என்று சொன்னாலும் அதிலே காலதாமதம் இருக்கக் கூடாது

(திரு. நா. வீராசாமி தலைமை)

என்பதை சுட்டிக்காட்டுவதற்காகத்தான் சொல்கிறேன். செய்ய வேண்டி
யதை உடனடியாக, முழுமையாகச் செய்யவேண்டுமே தவிர, இதை
காலதாமதமாகச் செய்யக்கூடாது. ஊழல் இல்லாத முறையில் [illegible]



நிர்வகிப்பதற்கே அரசின்கீழ் கொண்டு வருகிறோம் என்று திரு. கிருஷ்ண
மூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அது நல்லதுதான். அந்த முறையிலே
ஊழல் இல்லாமலிருப்பதற்காக இதைச் செய்கிறார்கள். பல ஊழல்
குற்றச் சாட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய நாட்டைப்
பொறுத்தவரையிலும் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற அடிப்
படையிலே கொண்டு வருகிறோம். சோஷலிசத்தைக் கொண்டு வர
வேண்டுமென்று இதைச் செய்கிறோம். ஆனால், அதைச் செய்கிறார்கள்
என்று மக்களுக்கு நம்பிக்கை வரவேண்டும். அப்படி மக்களுக்கு
நம்பிக்கை அளிக்கக்கூடிய அந்த முறையில் இவற்றைக்கொண்டு வர
வேண்டும். அப்படி மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய முறையில்
இதைகொண்டு வந்திருக்கிறோம் என்ற முறையில் கவர்னர் உரையிலே
ஏதாவது கூறப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இந்த முறைகளைப்
பற்றி மக்கள் மத்தியிலே அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுத்
துறையாக இருந்தாலும், எந்தத் துறையாக இருந்தாலும் அதிலே
யாருக்கு நம்பிக்கை இருக்கிறது? அவர்கள் ஏக்கத்தோடும் அவநம்பிக்கை
யோடும் இவைகளைப் பார்க்கிறார்கள். ஆளுநர் உரையிலே நம்பிக்கை
அளிக்கும் விதத்தில் ஏதாவது கூறப்பட்டிருந்தால் நன்றாக இருந்
திருக்கும்.

இன்றைக்குப் பாளையங்கோட்டை சம்பவத்தைப்பற்றி விசாரிக்க ஒரு
விசாரணைக் கமிஷன் போட்டிருக்கிறார்கள்.

**Central Act 56 of 1972. In exercise of the powers confered under section 3.**

என்று போட்டிருக்கிறார்கள். இப்படி மத்திய அரசினுடைய சட்டம்
3-வது பிரிவின்படி இந்தக் கமிஷன் ஆப் என்குயரி அமைக்கப்பட்டிருக்
கிறது. முன்பு, லூர்துநாதன் செத்தான் என்று சொன்னால் அதை
அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. புரபொசர் சீனிவாசன் அடிபட்ட
தைப் பற்றிச் சொன்னால், அதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆக,
எதுவாக இருந்தாலும் அரசாங்கத் தரப்பிலே தனியாக ஒன்று சொல்
கிறார்கள். இருந்தாலும் எதற்காக இந்த கமிஷன் ஆப் என்குயரி
போடப்பட்டிருக்கிறது? . . . .

திரு ஏ. ஆர். பெருமாள் : நான் பேசிக்கொண்டிருந்தபொழுது
மதிப்பிற்குரிய சுப்பு அவர்கள் வலதுசாரி கம்யூனிஸ்ட் என்று சொன்
னதை இந்திய கம்யூனிஸ்ட் என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்
கொண்டார்கள். நான் அதைத் திருத்திக் கொண்டேன். ஆனால் அதே
நேரத்தில் நமது வலதுசாரி கம்யூனிஸ்ட் என்று சொன்னதை மாற்றிக்
கொண்ட நேரத்தில், அவர் பார்வார்ட் பிளாக் கட்சி ஆளும் கட்சிக்கு
ஃபிடில் பேக் என்று சொன்னார்கள். அந்த சொற்களை எடுத்துவிட
வேண்டுமென்று . . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அவர்
சொன்னது குறிப்பிலே இல்லை. இருந்தாலும் முறைப்படி [illegible]
[illegible]

திரு. ஏ. ஆர். பெருமாள் : ஆளும் கட்சிக்கு ஃபிடில் பேக் வாசிக்கக் கூடிய கட்சி என்று....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அது குறிப்பிலே இல்லை.

திரு க. சுப்பு : மறுபடியும் குறிப்பிலே வராமல் இருப்பதுதான் நல்லது. பாளையங்கோட்டையிலே நடந்த சம்பவங்கள் பற்றி அரசாங்கத் தரப்பிலே கூறப்படுகிற கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அர்த்தம் அல்ல. அவர்கள் இங்கு ஒரு ஸ்டேட்மெண்ட் வைத்தபிறகு ஒரு கமிஷனை நியமிக்கிறார்கள். அந்தக் கமிஷன் உண்மை என்ன என்று ஆராய்ந்து அரசாங்கத்திற்குச் சொல்ல வேண்டும். அது மக்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டும். இங்கே 175 பேருக்குமேல் ஆளும் கட்சியில் இருந்தும் இந்த அரசின் மேல் எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது என்று நம்பிக்கை ஓட்டு எடுத்தார்கள். கொஞ்சம் பேர் மாறி விட்டார்கள் என்பதற்காக ஓட்டு எடுக்கவில்லை. இந்த அரசு அவர்களின் நம்பிக்கை இழந்துவிட்டது என்று வெளியே இருக்கிறவர்கள் கருதக் கூடாது. மக்களுக்கு அப்படி ஒரு எண்ணமோ, தோற்றமோ ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் அந்த ஓட்டு எடுத்தார்கள். மக்களுடைய நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும். நம்பிக்கையூட்ட வேண்டுமென்றுதான் அவ்வாறெல்லாம் செய்தார்கள். அன்றைக்கு அந்த நம்பிக்கைத் தீர்மானத்தை எதிர்ப்பதற்கு யாருமே இல்லாமல் எல்லோரும் வெளியே போய்விட்டார்கள். இருந்தாலும் நம்பிக்கையிருக்கிறது என்று காட்டவேண்டுமென்று திரு. ஏ. ஆர். பெருமாள் போன்றவர்கள் எல்லாம் சொல்லி வாக்கெடுப்பு நடத்தியிருக்கிறார்கள்.

ஊழல் பட்டியலை மத்தியில் கொடுத்திருக்கிறார்கள். அது முதலமைச்சருக்கு வந்திருக்கிறது. நான், மத்திய அரசாங்கம் செய்வது சரி என்று சொல்லவில்லை. மத்திய அரசாங்க குறுக்கீடு வேண்டுமென்று சொல்லவில்லை. சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்று கூடச் சொல்லவில்லை. இதை நான் எதிர்க்கிறேன். ஆனால் தலைமையமைச்சருக்கு அதிகாரம் இல்லையென்று சொல்லிவிட்டு அவருக்கு இவர் பதில் அனுப்பியிருக்கிறார். இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அந்த பதிலிலே அவர்கள் கொடுத்திருக்கின்ற விளக்கம் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. முற்போக்கான திட்டங்களுக்குக்காக ஆளும் கட்சியோடு தி. மு. கழகம் சேர்ந்திருக்கிறது. நம்மோடு அப்போது வலதுசாரி கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து அவற்றை ஏற்றுக்கொண்டு இணைந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது கம்யூனிஸ்டு கட்சி மற்றவர்களோடு சேர்ந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், முதலமைச்சர் மற்ற அமைச்சர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டிற்கு தலைமையமைச்சருக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை. அவர்களுக்கு நாம் பதில் சொல்லலாம் என்றுமில்லை. ஆனால் இவர்கள் என்ன பதில் சொல்லியிருக்கிறார்கள். நீங்களும் நானும் ஒன்று, இந்த கம்யூனிஸ்ட் கட்சிதான் வேறு என்று எழுதியிருக்கிறார்கள்.



அதற்காக ஆச்சரியப்படுகிறேன். அதிகாரம் இல்லாத ஒரு அம்மையாருக்கு, இல்லையென்று சொல்கிற ஒரு அம்மையாருக்கு இதை எழுத வேண்டிய அவசியம் இல்லை. ஸ்டேட் ஆர் சென்ட்ரல் ஆக்ட்படி அவர்கள் கமிஷன் போடுவதைப் பற்றி.........

மாண்புமிகு திரு க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் முதல்வர் காட்டிய நாகரீகத்தையும் பெருந்தன்மையையும் தவறு என்று கருதுகிறாரா ?

திரு. க. சுப்பு : நாகரீகத்தில் உரிமையை அடகு வைக்கிற ஒன்றை நான் நாகரீகம் என்று சொல்லமாட்டேன். கட்சி பாகுபாடு என்று நான் சொல்லவில்லை. கட்சி நாகரீகம் என்று விட்டுவிடுகிறேன். அதை நான் விட்டுவிடுகிறேன். உங்களுக்குப் பதில் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. அதற்குப் பதிலாக நீங்களே நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கலாம்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்ட மன்றத்தில் உறுப்பினராக உள்ள, மாண்புமிகு உறுப்பினருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர், பெட்டிஷனை எடுத்துக்கொண்டு போய் பிரதமரிடத்திலே கொடுத்தார்களே, அந்த நாகரீகத்தைப்பற்றி மாணபுமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து என்ன ?

திரு கே. டி. கே. தங்கமணி : சாதாரணமாக சில அமைச்சர்கள் மீது மட்டும் குற்றச்சாட்டுகள் இருந்திருந்தால், நாங்கள் நேரடியாகவே இங்கே கொடுத்திருப்போம். முதலமைச்சர் பேரிலேயே வருகிறபோது பிரதம அமைச்சரிடத்திலோ அல்லது ஜனாதிபதியிடத்திலோதான் அளிக்க வேண்டிய நிலை இருந்தது.

திருமதி த. ந. அனந்தநாயகி : நாகரிகமான பதிலைக் கொடுத்தாகச் சொன்னவர்கள், ஏன், விசாரணைக் கமிஷன் போட உரிமை இருக்கிறதா என்ற அநாகரிகமான கேள்வியை எழுப்பினார்கள் ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : கேள்வி கேட்டால் யாரும் பதில் சொல்வதைப்போல் குற்றச்சாட்டுகள் சொன்னால் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பதில் சொல்வதாலேயே விசாரணைக் கமிஷன் போடவேண்டும் என்பதற்கு நியாயம் இருப்பதாக ஆகிவிடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் யார் விசாரணை செய்ய என்றுநான் கேட்கவில்லை. பதிலைப் படித்துப் பார்த்தால் தெரியும். மாநில அரசு மீது விசாரணை செய்ய கமிஷன் நியமிக்க அரசியல் சட்டத்திலே எதுவும் கூறப்படவில்லை என்றுதான் அதிலே கூறப்பட்டிருக்கிறது.

**Dr. H. V HANDE : What prevents the Chief Minister from appointing an-enquiring commission him self ? That is the point.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாலு பேர் ஒரு புகார் கொடுத்தால், அதற்கு ஒரு விசாரணைக் குழு போடவேண்டுமென்று சொன்னால் அரசியலை அந்த நிலைக்கு கொண்டுபோவதை நான் நாகரிகமாகக் கருதவில்லை. அந்த நிலைமை ஏற்பட்டால் எதையும் நாலு பேர் கொண்டு போய்க் கொடுக்கக்கூடிய நிலைமையும், பிறகு விசாரணைக் குழு போட வேண்டுமென்று பொதுக் கூட்டங்களிலே பேசக்கூடிய நிலைமையும் ஏற்படலாம். அப்படிப்பட்ட முறையை கடைப்பிடிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

திரு க. சுப்பு : 4 பேர் கொடுத்திருந்தாலும், நாங்கள் சொல்வது எல்லாம், அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக நீங்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவேண்டாம், அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்ற முறையிலே எந்தவித நடவடிக்கையும் எடுக்க வேண்டும். ஆனால் நாட்டுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கக்கூடிய முறையிலே என்ன நடவடிக்கை தேவையோ அதைச் செய்யுங்கள். சட்ட மன்றத்தில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்க இங்கே நம்பிக்கை ஓட்டு எடுத்தீர்கள். அது ஒரு நல்ல முறைதான். அதேபோன்று நாட்டுமக்கள் நம்பிக்கையை இழந்திருக்கிறீர்கள் என்று சொல்கிறோம், அவர்கள் நம்பிக்கையை பெற்றிருக்கிறீர்களா இல்லையா என்பதைப் பார்க் கக்கூடிய முறையிலே, எது எதற்கோ தேசிய அளவிலே கவுன்சில் அமைக்க வேண்டுமென்று டெல்லியிடம் சொல்கிறீர்கள், வரிவிதிப்பு பற்றி வேண்டு மென்கிறீர்கள், அதைப்போன்று........................

மண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; பாராளு மன்றத்திலே பல விஷயங்களிலே கவுன்சில் போட வேண்டுமென்று மற்ற கட்சிகள் சொன்னார் களே, அப்பொழுது உங்கள் கட்சியினுடைய நிலை என்ன ? உ. பி. விஷய மாக கமிஷன் போடவேண்டுமென்று சொன்னபோது அதை ஏற்க மறுத்தபோது எதிர்க் கட்சிகள் வெளிநடப்புச் செய்தார்களே அப்பொழுது உங்கள் கட்சியின் நிலை என்ன ?

திரு கே. டி. கே. தங்கமணி : இங்கே ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டை. சொல்கிறபோது இன்னொரு இடத்திலே நடந்ததா இல்லையா என்று கேட்பது எப்படியிருக்கிறது என்றால், ஒருவர் குற்றம்செய்து விட்டார் என்றால் கோர்டிலே அவர் விசாரிக்கப்படும்பொழுது இன்னொரு நாலு பேர்களை ஏன் விட்டீர்கள் என்று கேட்பதுபோலத்தான் இருக்கிறது.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : குற்றச் சாட்டுச் சொன்னவர்களுக்குக் தெளிவு ஏற்படக்கூடிய முறையில் அவர்கள் குழப்பத்தைப் போக்கக்கூடிய வகையில் பதில் அமைந்துவிட்டது. குற்றச்சாட்டு யார் மீது சொல்லப் பட்டதோ, அதற்கான பதில் இருக்கிறது. வெறும் குற்றச்சாட்டுகளைக் கூறிவிட்டதாலேயே அவை உண்மையாகி விடாது.

திரு க. சுப்பு : மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக வேண்டுமென்பதைச் சிந்திக்கவேண்டும்.





மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) : காலத்தை உணர்ந்து சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு க. சுப்பு : நிறைய பேசவேண்டியிருக்கிறது, நேரமில்லை. இங்கே பேசவில்லையென்றால் எங்கேபோய் பேசுவது ? நம்முடைய முதலமைச்சர் மீதே விசாரணை வேண்டுமென்று நாங்கள் சொல்லும் பொழுது, பன்விலால் மீது வேண்டாம் என்று சொல்லமாட்டோம். நாட்டு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கிறீர்களா என்பதைப் பார்ப்பதற்கு இதை விட வேறு ஏதாவது வழிவகை இருந்தால் சொல்லுங்கள் பார்க்கலாம். மெஜாரிட்டி இருக்கிறது என்று சொல்கிறீர்கள். நாட்டு மக்களும் எங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிற நீங்கள் விசாரணைக் குழு அமைக்க ஏன் தயங்குகிறீர்கள் ? குற்றச்சாட்டு உண்மையா, இல்லையா என்பதைப் பார்க்க யாராவது ஒரு ஆளைப் போடுங்கள். அதற்காகத்தான் நாங்கள் கமிஷன் ஆப் என்குயரி போடவேண்டுமென்று சொல்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பூர்வாங்க ஆதாரம் இல்லாமல் எங்காவது விசாரணைக் கமிஷன் நியமிக்க முடியுமா ?

திரு க. சுப்பு : பூர்வாங்க ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பதைச் சொல்கிற உரிமை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பூர்வாங்க ஆதாரம் இல்லாத தால் விசாரணைக் கமிஷன் நியமிக்கவில்லை என்று டெல்லியிலிருந்து சொன்னபொழுது அதற்குக் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்புத் தெரிவித்திருக் கிறதா ?

திரு க. சுப்பு : எதிர்த்து இருக்கிறது. பூர்வாங்க ஆதாரம் இல்லை என்று சொல்ல அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. ஏன் இந்தப் பிரச்சினையை வளரவிடுகிறீர்கள். குற்றச்சாட்டுகளுக்குப் பக்கம் பக்கமாக பதில் எழுதி மத்திய அமைச்சர் அதைப்பற்றி அங்கே பதில் சொல்லக் கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டீர்கள். இப்படி இதற் காகவே நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருந்தால் நாட்டுக்கு வேண்டிய நல்ல திட்டங்களை நீங்கள் எப்படி நிறைவேற்ற முடியும் ? கமிஷன் ஆப் என்குயரி போடுவதில் என்ன ஆபத்து இருக்கிறது ? நீங்கள் தான் ஒரு குற்றமுமே செய்யவில்லை என்று சொல்கிறீர்களே, ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு குற்றமும் இல்லாதபோது அவதூறாக வேண்டுமென்றே திட்டமிட்டே புகார்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. அதிலே குற்றச்சாட்டுப் பட்டியலிலே என்ன என்ன குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்களோ அவற்றி[illegible] பல வந்திருக்கின்றன. நீதி மன்றத்திலே தீர்ப்பு தரப்பட்ட பி[illegible] நாட்டு மக்கள் தெரிந்துகொள்வார்கள். ஏன் விசாரணைக்குழு போ[illegible]க் கூடாது என்று கேட்டார்கள். அப்படி நாலு பேர் கொடுத்தால் என்ன செய்யலாம், என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி இந்த மன்றத்திலே நான் அறிவிக்க இருக்கிறேன்.

திரு க. சுப்பு: அப்படியாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். குற்றச்சாட்டுகள் சொல்கிறபோது சந்தேகத்தைப் போக்குவதற்கு ஏதாவது ஒரு அமைப்பு அல்லது ஏற்பாடு இருக்கவேண்டும். தமிழகத்தில் இவ்வளவு கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையிலே அது பற்றி ஒன்றுமே முடிவெடுக்கவில்லையென்றால், என்ன பொருள். தேசியமயமாக்கப்படுகின்ற கொள்கையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பள்ளிகளையெல்லாம் அரசே மேற்கொள்வதுபற்றி சட்டசபையிலேயே ரெசலியூஷன் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள், பீகாரிலே,. அதைப்போன்று நம்முடைய அரசாங்கமும் உடனடியாகச் செய்ய வேண்டும். தாமதப்படுத்தினால் நீதி மன்றத்தைப் பார்த்து ஒருபுறம், சட்ட மன்றத்தைப் பார்த்து ஒரு புறம், மக்களிடத்திலே தவறான பிரச்சாரம் இப்படித்தான் நிலைமை ஏற்படும். நாம் பள்ளிகளை எடுத்துக் கொள்கின்ற சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது இப்படித்தான் ஏற்கனவே பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். மக்கள் நம்பிக்கையைப் பெறக் கூடிய முறையிலே நீங்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

With the permission of the Chair, I may be permitted to take one or two minutes more.

*  *  *  *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) :—

*  *  *  *

அதைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு உரிமையிருக்கிறது. அவைத்தலைவரின் அனுமதியைப் பொற்றுக்கொண்டு அது என்ன கடிதம், யாருடைய கடிதம் என்று தெரிவித்து, சட்டமன்றத் தலைவர் அனுமதி கொடுத்ததற்குப் பிறகு பேசுவதுதான் முறை.

*  *  *  *

ஆகவே நண்பர் சுப்பு அவர்கள் முறைப்படி அனுமதியைப்பெற்று அடுத்துவரும் வாய்ப்புகளில் பேசுவதில் தடையேதுமில்லை. ஆனால்

இதுசம்பந்தமாக இதுவரையிலே பேசப்பட்ட பேச்சுக்களை, படித்த குறிப்புகளை சட்ட மன்றக்குறிப்பேடுகளிலிருந்து எடுத்து விட வேண்டுமென்றும், செய்தியாளர்களும் பிரசுரிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைக மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங் அகற்றப்பட்டது.



திரு கே. டி. கே. தங்கமணி: சில புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பதிலும் அரசால் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பதிலுக்கு அப்பால் குறிப்பிட்ட அமைச்சரு அதில் சம்பந்தம் இருக்கிறது என்று ஆதாரத்தைக் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) :—தலைவராக இருக்கின்ற அவர்களுக்கே தெரியும். கொடுத்த புகார்கள்மீது திரு. சுப்பு அவர்கள் பேசுவதற்கு உரிமையில்லை என்று சொல்லவில்லை. அனுமதி பெற்றுப் பேசலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் விசாரணைக்குழு வந்தால் அந்தக் கடிதம் கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டு, சபா நாயகரிடத்திலும் கொடுக்காமல், அல்லது வேறு யாரிடத்திலேயும் கொடுக்காமல், தாங்கள் மட்டும் படிப்பது என்றால் அது யார் எழுதிய கடிதம், யார் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்று தெரிய வேண்டும். வேண்டுமென்றே யாராவது எழுதியிருக்கலாம் அல்லது உண்மையாகவும் இருக்கலாம். அதைப்பற்றிப் பிரச்சினையில்லை. அவர்கள் விசாரணைக் கமிஷனிடம் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால்..........

திரு கே. டி. கே. தங்கமணி: விசாரணைக் கமிஷன் வந்தால் ஒரிஜினல் கொடுக்க முடியும், இப்பொழுது அந்த காப்பியைத் தரலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஒரிஜினலைக் கொடுத்தால்தான் தாங்கள் தலைவராகயிருந்து அதை விசாரித்து முடிவு சொல்லமுடியும். ஒரிஜினல் இல்லாமல் பிரதியை வைத்து விசாரிப்பது சரியானதாக ஆகாது.

திரு. எம். எ. லத்திப் ; பாயிண்ட் ஆப் ஆர்டர்சார்.

திரு. க. சுப்பு ; பாயிண்ட் ஆலப் ஆர்டர் பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் ?

THIRU M. A. LATHEEF: Sir, I am not here to just get educatedfrom my junior. The hon. Member, Thiru Subbu, should now how to conduct himself..........

THIRU R. PONNAPPA NADAR: Sir, I emphatically protest against it. In this House nobody is senior or junior. This is not a lawyers' chamber.

THIRU M. A. LATHEEF: I have not referred to it in the parliamentary sense. He is sitting and saying certain things. I am also to exercise my right.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

திரு. கே. டி. கே. தங்கமணி ; ஜூனியர் ஜூனியர் என்று சொல்லுகிறார்கள், அதை [illegible] செய்ய வேண்டும்.

I would like to know whether the hon. Member can use the expression 'junior'.

Mr. DEPUTY SPEAKER : The hon. Member, Thiru Latheef wants to raise a point of order. Let me know what his point of order is ?

Thiru K. SUPPU : Sir, on a point of order, He says that I am juniorto him......

Thiru M. A. LATHEEF : Sir, let the hon. Member act as a proper legislat or.

Thiru K. SUPPU : I know it. (spoke in a loud voice).

Mr. DEPUTY SPEAKER : Shouting is not a very good quality for a parliamentarian.

Th;ru K. SUPPU : But certain improper thing has been said....

Mr. DEPUTY SPEAKER : It is not proper to argue with the Chair.

Let the hon. Member, Thiru Latheef, raise his point of order and I will decide whether it is a point of order or not.

திரு. கே.டி.கே. தங்கமணி : சார், ஜூனியர் மினிஸ்டர், சீனியர் மினிஸ்டர் என்ற பேச்சு சமீபத்தில் வந்து. அமைச்சர்களில் ஜூனியர், சீனியர் இல்லை என்ற நிலைமை வந்திருக்கும்பொழுது, சீனியர் மெம்பர், ஜூனியர் மெம்பர் என்று சொல்வது சரியா ? சரியில்லையென்றால் அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையைப் பொறுத்தவரையில் ஜூனியாரிட்டி சீனியாரிட்டி ஒன்றுமில்லை.

Thiru M. A. LATHEEF ; My point of order is this. It is now well established that if any document....

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : நான் சில உறுப்பினர்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து இருக்கையிலேயிருந்து கொண்டு ஸ்பீக்கரைப் பார்த்துப் பேசுவது அல்லது உறுப்பினர்களைப் பார்த்துப் பேசுவது முறையல்ல. நீங்கள் ஒன்று பேசுகிறீர்கள். அதற்கு மற்ற உறுப்பினர்கள் பதில் கொடுக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் இல்லாத ஒரு மரபு, மற்ற சட்டமன்றங்களின் மரபு இங்கே நுழைந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது. எதாவது பேச வேண்டுமென்றால், அது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லையென்றாலும், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்து பேசுங்கள். அதற்கு அனுமதி தருகிறேன். ஆனால் இருக்கையிலேயிருந்து கொண்டு நாட்டுப் பஞ்சாயத்திலே பேசுவது போல பதில் பேச வேண்டாம்.



THIRU M. A. LATHEEF : Sir, the hon. Member, Thiru K.T.K. Thangamani, has just now stated that if an enquiry commission is appointed, the letter which was now read out by the hon. Member, Thiru Suppu, to substantiate the charge that he has levelled against the Government would be produced before the Commission. I take serious objection to the observation made by Thiru Thangamani because when a document is sought to be read out in this House, they must have complete confidence in the efficacy, integrity, parliamentary utility and legislative capacity of this House. After reading it, they should not say that they do not have any belief in this House and they have belief only in the enquiry commission. So, I request the Chair that it should be expunged.

Mr. DEPUTY SPEAKER : A clear ruling has been given by Thiru Veeraswami and he has ordered the expunction of the remarks made by the hon. Member, Thiru Suppu.

THIRU M. A. LATHEEF : I am not concerned about that. I am on my point of order. Whether it is read by the Communist Party member or not, once it has been read in this House, this House is competent to know the contents of the letter. I now call upon the Member பி.ப.
to present it to the Chair so that it will become a document of the House 1·30.
and we may know its contents fully.

Mr. DEPUTY SPEAKER : You cannot call upon the Member, Let me give my ruling.

THIRU K.T.K. THANGAMANI : I have never said we will not show the letter. I am now saying that I am perfectly willing to show the copy to you ; if you direct us to read that copy, it will be read.

MR. DEPUTY SPEAKER : It is the normal practice to take the House into confidence and get the permission of the Chair if you want to read from any document.

திரு. க. சுப்பு : பாயிண்ட் ஆப் ஆர்டர். துணைச் சபாநாயகரைப் பார்த்து லத்தீப் அவர்கள் பேசும்போது (சுட்டுவிரலுடன் கையை நீட்டிக் காட்டி) இப்படியே பேசுகிறார். இப்படி அவர் துணைச்சபாநாயகரை மிரட்டுவது மாதிரிப் பேசுவது சரியா ?

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : லத்தீப் அவர்களும், சுப்பு அவர்களும், என்னுடன் ஒன்றாகப் படித்தவர்கள். அவ்வாறு பழகியதில் அது ஒன்று என்று வைத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்பது ஒவ்வொருவரும் ஐந்து நிமிடம் பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக [illegible] தம்முடைய அவையில் மாறிக் கொண்டிருக்கிறது. அதற்கு [illegible]

விவாதம்

பேரவைத் துணைத் தலைவர்

நடைபெறும். 12-ம் நாள் கட்சித் தலைவர்கள் பேசுவார்கள். முதலமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள். 13-ம் நாள் அரசினர் சட்ட முன்வடிவுகள் எடுத்துக் கொள்ளப்படும். 14-ம் நாள் தனியார் அலுவல்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒற்றி வைக்கப்பட்டது.

## 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

32. Notification issued with G.O. No. 3125, Revenue, dated the 29th November 1972, in regard to exemption from sales-tax for the purchase of a "Standard Twenty" one-ton truck chassis for use as ambulance van by the Voluntary Health Services, Madras. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act,* 1959 (*Tamil Nadu Act I of* 1959.).

33. Notification issued with G.O.Ms. No. 2998, Home, dated the 27th November 1972, in regard to exemption from liability to tax, in respect of the seven vehicles belonging to the Port of Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act,* 1931 (*Tamil Nadu Act III of* 1931.)]

34. Notification issued with G.O.Rt. No. 2674, Revenue, dated the 16th December 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Surgical Instruments Plant Officers' Association, Nandambakkam, Madras at 10 a.m. on 24th December 1972 at Anand Theatre. Madras. (*Laid on the Table of the House under section* 16 (4) *of the Tamil Nadu Entertainments Tax Act,* 1939 (*Tamil Nadu Act* X *of* 1939.)



### b. *Reports, Notifications and Other Papers.*

17. Notification issued with G.O. Ms. No. 3181, Revenue, dated the 4th December 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deeds to be executed by the Tamil Nadu Area Defence Service Co-operative House Construction Society Limited, Madras.

இணைப்பு 1.

4-ம் பக்கத்திலுள்ள 81 எண்ணுள்ள வெள்ளி குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க—

(*a*) Yes.

(*b*) Apart from 1,000 persons recently recruited as Police Constables (Grade I) by direct recruitment who are undergoing training in the Police Recruits Schools from 1st February 1972, the number of S.S.L.C. qualified persons employed as Police Constables Grades I and II in each district is as indicated below :—

| *Name of District.* | *Number of Police Constables.* | |
|---|---|---|
| | *Grade I.* | *Grade II.* |
| (1) | (2) | (3) |
| Chingleput East .. .. .. | 31 | 16 |
| Thanjavur East .. .. .. | 9 | 3 |
| Thanjavur West .. .. .. | 18 | 6 |
| Tiruchirappalli .. .. .. | 83 | 52 |
| Madurai Urban .. .. .. | 50 | 67 |
| Madurai North .. .. .. | 42 | 41 |
| Ramanathapuram .. .. .. | 83 | 49 |
| Tirunelveli .. .. .. .. | 77 | 67 |
| Kanyakumari .. .. .. .. | 31 | 113 |
| Coimbatore .. .. .. .. | 112 | 97 |
| Salem ... .. .. .. .. | 26 | [illegible] |
| Dharmapuri .. .. .. .. | 18 | 4 |
| The Nilgiris .. .. .. .. | 23 | 26 |

| Name of District. | Number of Police Constables. Grade I. | Grade II. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| Madras City Police .. .. .. | 93 | 9 |
| Police Radio Office .. .. .. | 50 | 18 |
| Chingleput West .. .. .. | 11 | .. |
| South Arcot .. .. .. .. | 23 | 42 |
| Railway Police, Tiruchirappalli .. .. | 34 | 26 |
| North Arcot .. .. .. .. | 25 | 23 |
| | 839 | 694 |

**விடை—**

(அ) ஆம்.

(இ) அண்மையில் நேரடி நியமனம் மூலம் முதல் நிலைக் காவலர் களாகச் சேர்க்கப்பட்டு காவலர் பயிற்சிப் பள்ளிகளில் 1—2—1972 முதல் பயிற்சி பெற்றுவரும் 1,000 பேர் தவிர, எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெற்றுள்ளவர்களும் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல்நிலை, இரண்டாம் நிலைக் காவலர்களாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களுமான நபர்களின் விவரம் பின்வருமாறு :—

| மாவட்டத்தின் பெயர். | காவலர்களின் எண்ணிக்கை. முதல் நிலை. | இரண்டாம் நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| செங்கற்பட்டு கிழக்கு .. .. .. | 31 | 16 |
| தஞ்சாவூர் கிழக்கு .. .. .. | 9 | 8 |
| தஞ்சாவூர் மேற்கு .. .. .. | 18 | 6 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 83 | 52 |
| மதுரை நகர்ப்புறம் .. .. .. | 50 | 67 |



| மாவட்டத்தின் பெயர். | காவலர்களின் எண்ணிக்கை. முதல் நிலை. | இரண்டாம் நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மதுரை வடக்கு .. .. .. | 42 | 41 |
| இராமநாதபுரம் .. .. .. | 83 | 49 |
| திருநெல்வேலி .. .. .. | 67 | 77 |
| கன்னியாகுமரி .. .. .. | 31 | 113 |
| கோயம்புத்தூர் .. .. .. | 112 | 97 |
| சேலம் .. .. .. .. | 26 | 33 |
| தருமபுரி .. .. .. .. | 18 | 4 |
| நீலகிரி .. .. .. .. .. | 23 | 28 |
| சென்னை மாநகர் காவல்துறை .. | 93 | 9 |
| காவலர் வானொலி அலுவலகம் .. | 50 | 18 |
| செங்கற்பட்டு மேற்கு .. .. .. | 11 | .. |
| தென்னாற்காடு .. .. .. | 23 | 42 |
| இரயில்வே காவற்படை, திருச்சிராப் பள்ளி. | 34 | 26 |
| வடாற்காடு .. .. .. .. | 25 | 23 |
| மொத்தம் .. | 839 | 694 |

## இணைப்பு 2.

[36-ம் பக்கத்தில் 98-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

1 மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி .. தலைவர்.

2 சுற்றுலா அலுவலர், திருச்சிராப்பள்ளி .. .. செயலாளர்.

3 நகராட்சித் ஆணையர், திருச்சிராப்பள்ளி .. உறுப்பினர்.

விவாதம்

பேரவைத் துணைத் தலைவர்

நடைபெறும். 12-ம் நாள் கட்சித் தலைவர்கள் பேசுவார்கள். முதலமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள். 13-ம் நாள் அரசினர் சட்ட முன்வடிவுகள் எடுத்துக் கொள்ளப்படும். 14-ம் நாள் தனியார் அலுவல்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒற்றி வைக்கப்பட்டது.

## 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

32. Notification issued with G.O. No. 3125, Revenue, dated the 29th November 1972, in regard to exemption from sales-tax for the purchase of a "Standard Twenty" one-ton truck chassis for use as ambulance van by the Voluntary Health Services, Madras. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act,* 1959 (*Tamil Nadu Act I of* 1959.).

33. Notification issued with G.O.Ms. No. 2998, Home, dated the 27th November 1972, in regard to exemption from liability to tax, in respect of the seven vehicles belonging to the Port of Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act,* 1931 (*Tamil Nadu Act III of* 1931.)]

34. Notification issued with G.O.Rt. No. 2674, Revenue, dated the 16th December 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Surgical Instruments Plant Officers' Association, Nandambakkam, Madras at 10 a.m. on 24th December 1972 at Anand Theatre, Madras. (*Laid on the Table of the House under section* 16 (4) *of the Tamil Nadu Entertainments Tax Act,* 1939 (*Tamil Nadu Act* X *of* 1939.)



### *b. Reports, Notifications and Other Papers.*

17. Notification issued with G.O. Ms. No. 3181, Revenue, dated the 4th December 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deeds to be executed by the Tamil Nadu Area Defence Service Co-operative House Construction Society Limited, Madras.

இணைப்பு 1.

4-ம் பக்கத்திலுள்ள 81 எண்ணுள்ள வெள்ளி குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க—

(*a*) Yes.

(*b*) Apart from 1,000 persons recently recruited as Police Constables (Grade I) by direct recruitment who are undergoing training in the Police Recruits Schools from 1st February 1972, the number of S.S.L.C. qualified persons employed as Police Constables Grades I and II in each district is as indicated below :—

| *Name of District.* (1) | *Number of Police Constables* *Grade I.* (2) | *Grade II.* (3) |
|---|---|---|
| Chingleput East | 31 | 16 |
| Thanjavur East | 9 | 3 |
| Thanjavur West | 18 | 6 |
| Tiruchirappalli | 88 | 58 |
| Madurai Urban | 50 | 67 |
| Madurai North | 42 | 41 |
| Ramanathapuram | 83 | 49 |
| Tirunelveli | 77 | 67 |
| Kanyakumari | 81 | 113 |
| Coimbatore | 112 | 97 |
| Salem | 26 | 39 |
| Dharmapuri | 18 | [illegible] |
| Nilgiris | 23 | 96 |

| | |
|---|---|
| 4 நகராட்சி ஆணையர், திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) .. | உறுப்பினர் |
| 5 உதவி ஆணையர், இந்து சமய அறக்கட்டளைத்துறை, திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 6 மாவட்ட தகவல்துறை கண்காணிப்பாளர், திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 7 நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 8 கோட்டப் பொறியாளர், (நெடுஞ்சாலை), திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 9 கோட்ட இரயில்வே கண்காணிப்பாளர், திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 10 போக்குவரத்து அலுவலர், இந்திய விமான போக்குவரத்துக் கழகம், திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 11 மேலாளர், இலங்கை விமானப் போக்குவரத்து நிறுவனம், திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 12 வட்டாரப் போக்குவரத்து அலுவலர், திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 13 நிலைய இயக்குநர், அனைத்திந்திய வானொலி, திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 14 மேலாளர், இந்திய அரசு பயணிகள் விடுதி, திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 15 தலைவர், வர்த்தகக் கழகம், திருச்சிராப்பள்ளி .. | ஷை |
| 16 உரிமையாளர், அரிஸ்ட்டோ ஓட்டல், திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 17 உரிமையாளர், அஸ்பி ஓட்டல், திருச்சிராப்பள்ளி. | ஷை |
| 18 திரு. எம். ஆர். கோவிந்தராஜன், வாடகைக்கார் உரிமையாளர், திருச்சிராப்பள்ளி. | ஷை |

வாடகைக்கார் உரிமையாளர்கள்.

1 எம்.டி.ஜி. 2386,

திரு.பி.எஸ்.கே. பாலன்,
38பி, பிராமினேடுசாலை, கண்டோன்மெண்ட்,
திருச்சிராப்பள்ளி.

2 எம்.டி.ஜி. 2759

திரு. டி. என். இராமசாமி,
அசோக் பவன்,
திருச்சிராப்பள்ளி.



பயண முகவர்கள்.

| | |
|---|---|
| கிளை மேலாளர், ஏசியன் டிராவல்ஸ், திருச்சிராப்பள்ளி. | உறுப்பினர். |

பாராளுமன்ற, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள்.

| | |
|---|---|
| 1 திரு. கே. வீரையா, புதுக்கோட்டை .. .. | எம்.பி. |
| 2 திரு. வி. கிருட்டிணமூர்த்தி, திருச்சிராப்பள்ளி .. | எம்.எல்.ஏ. |
| 3 திரு. எஸ். நல்லசாமி, கரூர் .. .. .. | ஷை |

இ. உதகை சுற்றுலாக் குழு செயல்படும் முறை.

உதகை சுற்றுலா அபிவிருத்தி ஆலோசனைக் குழு உதகையில் 1968, மார்ச்சு திங்களன்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், சுற்றுலா அலுவலரை செயலாளராகவும் கொண்டு ஓராண்டிற்கு அமைக்கப் பட்டு பின்னர் ஒவ்வொரு ஆண்டும் நீடிக்கப்பட்டு வந்துள்ளது. நீலகிரி, இந்தியாவில் சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற மலைவாழ் இடம் ஆதலால் 1972 மார்ச்சு மாதம் அரசு அக்குழுவை நிலைக்குழுவாக திருத்தி அமைத்தது. அக்குழு, சுற்றுலாப் பயணிகளுக்காக உதகை ஏரியில் படகு காட்சி, படகு சவாரி மற்றும் இன்ன பிற இசை, நாடகங்கள், நடத்தி கோடை விழாவை ஏற்பாடு செய்து வருகிறது.

மதுரை சுற்றுலாக் குழு செயல்படும் முறை.

மதுரை சுற்றுலா பணிக்குழு மூன்றாண்டு காலத்திற்கு பணிபுரிய 1968 நவம்பரில் திருத்தி அமைக்கப்பட்டது. 22—2—1972-லிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு அதன் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி, சுற்றுலா வசதி பற்றி விவாதித்து, சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகளை அதிகரித்த லுக்கும், சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கும் பல்வேறு செயற்குறிப்புகளை அரசுக்குக் கருத்துரைக்கிறது.

| | | |
|---|---|---|
| 1 | The Collector of Tiruchirappalli .. .. .. | Chairman. |
| 2 | The Tourist Officer, Tiruchirappalli .. .. | Secretary. |
| 3 | Municipal Commissioner, Tiruchirappalli .. | Member. |
| 4 | Municipal Commissioner, Srirangam .. .. | Do. |
| 5 | Assistant Commissioner, Hindu Religious Charitable Endowments, Tiruchirappalli. | Do. |
| 6 | The Superintendent of Police, Tiruchirapalli .. | |
| 7 | Executive Engineer, Public Works Department, Tiruchirappalli. | Do. |
| 8 | The Divisional Engineer, (Highways), Tiruchirappalli. | Do. |
| 9 | The Divisional Superintendent of Railways, Tiruchirappalli. | Do. |
| 10 | Traffic Officer, Indian Air Lines Corporation, Tiruchirapalli. | Do. |
| 11 | The Manager, Air Ceylon, Tiruchirappalli .. | Do. |
| 12 | The Regional Transport Officer, Tiruchirappalli. | Do. |
| 13 | The Station Director, All India Radio, Tiruchipalli. | Do. |
| 14 | The Manager, Government of India Travellers Lodge, Tiruchirappalli. | Do. |
| 15 | The President, Chamber of Commerce, Tiruchipalli. | Do. |
| 16 | The Propietor, Hotel Aristo, Tiruchirapalli .. | Do. |
| 17 | The Proprietor, Ashby Hotel, Tiruchirapalli .. | Do. |
| 18 | Thiru M. R. Govindarajan, Taxi Owner, Tiruchirappalli. | Do. |

*Taxi Operators.*

1 M.D.G. 2386, Thiru B. S. K. Balan, 38-B, Prominade Road, Cantt., Tiruchirappalli-1.

2 M.D.G. 2759, Thiru T. N. Ramasamy, Ashoka Bhavan, Tiruchirappalli.



*Travel Agents.*

Branch Manager, Asian Travels, Tiruchirappalli .. Member.

*Members of Parliament and Tamil Nadu Legislative Assembly.*

(1) Thiru K. Veeraiah, M.P., Pattukkottai.

(2) Thiru V. Krishnamurthy, M.L.A., Tiruchirappalli.

(3) Thiru S. Nallasami, M.L.A., Karur.

(c) *Working of the Committee in Ootacamund.*—The Tourist Traffic Advisory Committee, Ootacamund was constituted in March, 1968 with the Collector of the Nilgiris as President and the Tourist Officer as Secretary for a period of one year and extended periodically every year. In March, 1972 Government have reconstituted it as a Standing Committee in view of the importance of the Nilgiris as a Tourist Popular Hill Resort in India. The Committee organises the Summer Festival which includes boat pageants and Races in the Ootacamund Lake and variety of entertainments of music and plays, etc., to the visiting tourists.

*Working of the Committee in Madurai.*

The Tourist Traffic Advisory Committee was reconstituted in November 1968 for a term of three years. Its term was extended for further period of three years with effect from 22nd February 1971. The Tourist Traffic Advisory Committee at Madurai meets once in three months to discuss tourism matters and to suggests to Government various proposals to provide amenities to tourists, and to increase tourist traffic.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1973 பிப்ரவரி 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### பின்தங்கிய வகுப்பினருக்கான ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையம்.

* 2. குறுகிய கால வினா—திரு. என். கணபதி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு, பிற்பட்ட வகுப்பினருக்கான அரசினர் ஐ.ஏ.எஸ். தேர்வுப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதியவர்கள் எத்தனை பேர்?

(உ) அத்தேர்வில் தேர்வு பெற்றவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) 8 பேர்கள்.

(உ) மூன்று பேர்கள்.

**திரு. என். கணபதி:** துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினருக்கான அரசினர் ஐ.ஏ.எஸ். தேர்வுப் பயிற்சி நிலையம் அமைத்து, முதன் முறையாக எட்டு பேர்களைப் பரிட்சைக்கு அனுப்பி, அவர்களில் மூன்று பேர்கள் வெற்றி பெற்றிருப்பது உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியதுதான். ஆனால் மேலும் அதிகமான எண்ணிக்கையில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதவைக்க இந்த அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்த டிரெயினிங் இன்ஸ்டிட்யூட் 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் துவங்கப்பட்டு, 1972-ஆம் ஆண்டு அக்டோபர் வரை எட்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டு ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால், அதற்கு அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஐம்பது ஆகும். இந்த ஆண்டுதான் ஐம்பது பேர்கள் அதிலே சேர்ந்திருக்கிறார்கள்.

[1973 பிப்ரவரி 10

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இதிலே நல்ல பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் நியமனம் பெறவில்லை என்ற ஒரு புகார் இருக்கிறதே, அதுசம்பந்தமாக அரசாங்கம் அந்தக் குறையினைப் போக்க வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வெளிநாடுகளில் சுற்றி அனுபவம் பெற்ற ஒருவர்தான் இந்தக் கல்லூரிக்குத் தலைவராக இருக்கிறார். ஆங்கிலப் பேராசிரியரும் மூன்று பகுதி நேரப் பேராசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் பல ஆண்டுக் காலம் பல கல்லூரிகளில் தலைவராக இருந்தவர்கள். நல்ல அனுபவம் பெற்றவர்கள். ஆகவேதான் எட்டு பேர் அனுப்பப்பட்டு, மூன்று பேர் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த டிரெயினிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு இந்த ஆண்டு ஐம்பது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** எம்.ஏ. படிப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் இவர்கள் ஐம்பது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** எந்த விகிதாசாரப்படி அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சமூக வாரியாகவா ? இன வாரியாகவா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பின்தங்கியவர்கள் பட்டியலில் உள்ள மாணவர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறோம். ஐம்பது பேர்களைத் தேர்ந்தெடுப்பதே பெரும்பாடாக இருக்கிறது. ஐம்பது பேர் கூடக் கிடைப்பதில்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** ஐ.ஏ.எஸ். பயிற்சிக்கு சென்ற முறை எட்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதில், மூன்று பேர் தேர்வில் வெற்றிபெற்றார்கள் என்று சொன்னார்கள். அந்த எட்டு பேர்களில் முஸ்லிம்கள் எத்தனை பேர்கள் ? அப்படி முஸ்லீம்கள் யாராவது இருக்கிறார்களா ? இப்பொழுது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிற ஐம்பது பேர்களில் முஸ்லீம்கள் எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பேர்களில் ஒருவர் பெயர் வேல்முருகன்; இன்னொருவர் பெயர் சந்திரபாபு, மூன்றுமவர் பெயர் அலெக்சாந்தர் பெர்னன்டோ—அவர் கிறிஸ்துவராக



1973 பிப்ரவரி 10]

இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். எட்டு பேர்களில் மூன்று பேர்தான் தேர்வில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர் முஸ்லிம்கள், எத்தனை பேர் இந்துக்கள் என்ற தகவல் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரலாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** எட்டுப் பேர்களில் பெண்களும் சேர்ந்திருக்கிறார்களா ? அவர்கள் தேர்வுப்பள்ளியில் தேர்வு பெறாததற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தற்போது அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சிலபல ஆண்டுகளாகவே ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறுகிறவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதும், அதற்கு முக்கியமான காரணம் ஆங்கில அறிவு போதுமான அளவு இல்லை என்பதும் உண்மையா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வெற்றி பெறவில்லை என்பது நீண்ட காலமாக எனக்கே தெரியும். ஆனால், அப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டது சென்ற ஆண்டுதான். அவர்களுக்கு ஒரு தனிப் பயிற்சி தருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு பயிற்சி நிலையம் இயங்கிக்கொண்டிருக்கிறது. பயிற்சி நிலையங்கள் இயங்கிய பிறகுதான் நமக்கு வெற்றி வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** இந்தப் பயிற்சி நிலையம் சென்னையில் அமைந்திருக்கிறது. மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் பிற்பட்ட வகுப்பினர் அதிகமாக இருக்கின்றனர். அவர்கள் இங்கே வந்து இந்தப் பயிற்சியைப் பெற வாய்ப்பு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். தென் மாவட்டங்களுக்கென்று மதுரையில் இப்படிப்பட்ட ஒரு பயிற்சிக்கூடம் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** சென்னையில் எல்லா வசதிகளும் மாணவர்களுக்கு இருக்கின்றன. பின்தங்கிய மாணவர்களுக்கு எல்லாச் சலுகைகளும், உபகாரச் சம்பளமும் அளிக்கப்படுகிறது. அவர்கள் சென்னையில் வந்து பயிற்சி பெற இப்போதே ஐம்பது பேர்களைத் தமிழ்நாடு பூராவும் தேடிக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கை ஒருவேளை கூடி, அதற்கான தேவை ஏற்படுமானால், தென் மாவட்டங்களுக்கென்று ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதுபற்றி அரசு ஆலோசிக்கலாம்.

[1973 பிப்ரவரி 10

## மாதிரி உயர்நிலைப்பள்ளி.

* 101. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73 ஆம் கல்வி ஆண்டில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றுடன் இணைக்கப்பட்ட "மாதிரி உயர்நிலைப்பள்ளி" ஒன்று அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கடந்த ஜுன் திங்களில் அரசு வெளியிட்ட ஆணையை ஒட்டி 7—7—1972 முதல் புதுக்கோட்டையில் ஒரு மாதிரிப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளோடு இணைக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளைப் போல, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் ஆங்காங்குள்ள உயர்நிலைப் பள்ளிகளோடு இணைக்கும் செயற்குறிப்பினை அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி மாடல் ஸ்கூலாக இணைக்கப்பட்டிருக்கிறது. மாடல் ஸ்கூல் இல்லாமல் எந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் நடைபெற முடியாது. இந்த மாடல் ஸ்கூல் என்பது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலுகிற மாணவர்களுடைய பயிற்சிக்கு அல்ல. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணி புரிகின்ற ஆசிரியர்களைப் பயன்படுத்துவதற்கு இந்த மாடல் ஸ்கூல் அங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த பி.டி. கல்லூரியோடு இந்த மாடல் ஸ்கூலையும் ஒருங்கிணைத்து அமைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஆணையினைப் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோடு இணைத்து இங்கே பயிற்சி பெறுகிறமாதிரி இங்கே நடைபெறுகிறதில்லை. அதற்குத் தனிப் பயிற்சிப் பள்ளி புதுக்கோட்டையில் இருந்து வருகிறது. ஆனால், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் வல்லுநராக இருக்கிற ஆசிரியர்களை இந்தப் பயிற்சிப் பள்ளிக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற முறையிலே தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாடல் ஸ்கூலில் 6 முதல் 8 வகுப்பு வரை பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிக்கவும், 9 முதல் 11 வகுப்பு



1973 பிப்ரவரி 10]

வரையில் மேல் பட்டப் படிப்பு பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிக்கின்ற அத்தகைய சீரிய முறை மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் பயன்படுத்திக்கொள்வதற்காகத்தான் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இருக்கும் இடத்தில் இந்த மாடல் ஸ்கூல் நிறுவப்படுவது பயன்தரும் என்று கருதப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : புதுக்கோட்டையில் இருக்கும் மாடல் ஹைஸ்கூல் மாதிரி மதுரையிலும் இருக்கிறது. இதுமாதிரி எவ்வளவு ஹைஸ்கூல்கள் ட்ரெய்னிங் காலேஜோடு இணைக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது இம்மாதிரி ஒரே ஒரு பள்ளிதான் புதுக்கோட்டையில் சென்ற ஆண்டு துவக்கப்பட்டது. அடுத்த ஆண்டு சென்னையில் இங்கிருக்கிற பெண்கள் ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரியோடு பெண்களுக்கு ஒரு மாடல் ஹைஸ்கூல் வைக்கலாமா என்று கருதப்பட்டிருக்கிறது. இதில் மாநிலம் பூராவிலும் உள்ள மாணவர்கள் தேர்வு எழுதி அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்தான் இந்த மாடல் ஸ்கூலில் சேர்க்கப்படுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது எவ்வளவு மாடல் ஹைஸ்கூல்கள் இம்மாதிரி இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த டைப்பில் ஒன்று தான் சென்ற ஆண்டு தொடங்கப்பட்டது. வேறுவகையில் மாடல் ஸ்கூல்கள் இருக்கலாம். தனிக் கேள்வி போட்டால் விசாரித்து விடையளிக்கலாம். இந்த ஸ்கீம் அடிப்படையில் முதல் முதலாக சென்ற ஆண்டுதான் ஆண்களுக்கு என்று தொடங்கப்பட்டது. இன்னொன்று பெண்களுக்காக இந்த வகையில் தொடங்கலாமா என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்து வருகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : மாவட்டந்தோறும் சென்ட்ரல் ஸ்கூல் திறப்பதற்கு திட்டமிருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ட்ரல் ஸ்கூல்ஸ் திறக்கிற கருத்து இப்போது இல்லை.

## மட்டப்பாறை உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞான ஆய்வுக்கூடம்.

* 102. வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள மட்டப்பாறை உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞான ஆய்வுக்கூடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

[1973 பிப்ரவரி 10

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. பி. எஸ். மணியன் :** இந்த ஆண்டு ஒதுக்கித் தர அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்குப் போடப்படுகிற நிபந்தனைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகிற நிலை இருந்தால் அடுத்த ஆண்டு தான் கவனிக்கப்படும். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கு ஒன்று என்று ஒதுக்கப்படுகிறது. குறைந்தது 500 மாணவர்களுக்கு மேல் இருக்கவேண்டும், அறிவியல் ஆய்வுக் கூடங்கள் வேண்டும். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு வந்தால் அடுத்த ஆண்டு கவனிக்கப்படும். எனவேதான், விடையில் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். பரிசீலனையில் வெற்றிபெறுவது என்பது நிபந்தனைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, formerly in each high school there used to be laboratories for conducting experiments easily but nowadays there are no separate laboratories and consequently, the pupils and the teachers find it very difficult to conduct experiments. So, may I know whether arrangements would be made for separate laboratories in the high schools?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 500 மாணவர்களுக்கு மேல் இருந்து வசதிக் குறைவு இருந்து, அதிக எண்ணிக்கை உள்ள பள்ளிகளில் ஆண்டு ஒன்றுக்கு கல்வி மாவட்டத்திற்கு ஒன்று வீதம் திறக்கப்படுகிறது. மாடல் லாபரட்டரி என்ற முறையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று ஏற்படுத்தி வசதிக் குறைவிருக்கிற பள்ளிகள் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கு மானேஜ்மென்ட் உயர்நிலைப்பள்ளிகளில் அவர்கள் வேண்டிய சௌகரியங்களைச் செய்துதர முன்வந்தால் அங்கு இம்மாதிரியான கூடம் ஏற்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளுக்கு, கழக உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தருவது மட்டுமல்ல, தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு முக்கியமாக இந்த ஆண்டு கூட எட்டு பள்ளிக் கூடங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 30,000 மானியமாக வழங்குகிறோம். அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 40,000



1973 பிப்ரவரி 10]

வழங்குகிறோம். ரூ. 15,000 கருவிகள் வாங்குவதற்காகவும் ரூ. 25,000 கட்டடங்கள் கட்டுவதற்காகவும். தனியார் பள்ளிகளுக்கு ரூ. 30,000 வரையில் உதவி செய்கிறோம். மேற்கொண்டு ரூ. 10,000 அவர்களுடைய நிதியிலிருந்து போட்டு அறிவியல் ஆய்வுக்கூடம் வைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அப்படி ஏழெட்டுப் பள்ளிக்கூடங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** அதிக மாணவர்கள் உள்ள பள்ளிக் கூடங்களுக்கு இந்த மாதிரி சலுகை அளிப்பதாகச் சொன்னார்கள். அதிக மாணவர்கள் படிக்கிற பள்ளிகளுக்கு ஏற்கனவே கட்டடங்கள் இருக்கும். குறைந்த மாணவர்கள் படிக்கும் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கூட அழகாக இருப்பதில்லை. எனவே, 50 சத விகிதம் அதிகமான மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கும், 50 சத விகிதம் குறைந்த மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கும் என்று கொடுப்பதற்கு அரசாங்கம் கவனிக்குமா ? மத்திய அரசு கொடுக்கிற இந்தப் பள்ளிகளின் எண்ணிக்கையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதில் ஏதாவது ஒருவகையான நியாயத்தைத்தான் கடைப்பிடிக்கவேண்டிவரும். ஆயிரத்துச் சில்லறை மாணவர்கள் இருந்து கருவி வசதிகள் இல்லாத பள்ளிக்கூடங்களுக்கு அந்த மாணவர்கள் பயன்படுத்தத்தக்க அளவிற்கு அங்கு ஒரு ஆய்வுக்கூடம் ஏற்படுத்துவதா ? 63 மாணவர்கள் இருந்து அங்கு கட்டடம் இல்லை என்பதற்காக அதற்கு ஒரு ஆய்வுக்கூடம் வழங்குவது என்பது பொருந்தாது. அப்படிப்பட்ட பள்ளிகளுக்காக மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் பெருமுயற்சி எடுத்து நிதி திரட்டித் தந்தால் அப்படி நிதி வழங்குவதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் ஆயத்தமாகயிருக்கிறது.

**மாட்டுக்கொட்டகைகள் கட்ட மானியம்**

*** 103. வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் விவசாயிகளுக்கு மாட்டுக் கொட்டகைக் கட்டுவதற்கு அரசு மானியத்தொகை அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இதுவரை எத்தனை மாட்டுக்கொட்டகைகளுக்கு மானியம் அளிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

[1973 பிப்ரவரி 10

(இ) 1971-72-ம் ஆண்டில் மார்ச் மாதம் 25 சதவீதம் மானியத் தொகையாக 12 மாட்டுக் கொட்டகைகளுக்குத் தலா ரூ. 75 வீதமும் ஒரு மாட்டுக் கொட்டகைக்கு ரூ. 100-ம் ஆக மொத்தம் ரூ. 1,000 அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி உதவித்தொகை 1971-72-ஆம் ஆண்டிற்கு முன்பாக அளிக்கப்படவில்லை.

திரு. கே. ஏ. வகாப்: மாட்டுக் கொட்டகைகளுக்கு மானியம் அளித்திருக்கிறோம். ஆனால் மாட்டுக் கொட்டகைகள் அங்கு கட்டப்படவில்லை. அதைச் சரியானமுறையில் நடத்தவேண்டுமென்றால் கால்நடைத் துறை மூலம் மானியம் வழங்க அல்லது அவர்கள் சென்று பார்த்து சர்டிபை செய்யும் விதத்தில் ஒரு ஏற்பாட்டினை வைத்தால் நலமாகயிருக்கும். எனவே அரசு அப்படிச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒன்றியங்களின் கீழ் இருக்கிற கால்நடை அலுவலர்கள், அதிகாரிகள் மேற்பார்வையில் கட்டப்படுகின்றன. வழங்கப்படுகிற தொகை சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்றால் நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒன்றியத்திற்கு உரிமை இருக்கிறது. 'பஞ்சாயத்து யூனியன் அண்டர் ஹனிமல் ஹஸ்பென்ட்ரி' என்று மானியம் வழங்கப்படுகிறது. மானியத்தைச் சரியாக பயன்படுத்தவில்லை என்றால், அந்தக் குறைபாட்டினை ஒன்றிய ஆணையாளரிடம் சொல்வார்களானால் தக்க அதிகாரிகளைக் கொண்டு அதன் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கலாம்.

### மாயூரத்தில் காவிரியின் குறுக்கே பாலம் அமைப்பு

* 104. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரில் காவிரி-முத்தப்பன் காவிரி மீது கட்டப்பட்டிருக்கும் பாலம் சம்பந்தமாகப் போடப்படும் சாலைகளுக்கு வேண்டிய நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் வேலை பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

(உ) அதற்கான நஷ்ட ஈட்டுத்தொகை எவ்வளவு அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்.

(இ) 43,072 சதுர அடிகள்.



1973 பிப்ரவரி 10]

திரு. என். கிட்டப்பா: மாயூரத்தில் காவிரியின் குறுக்கே பாலம் கட்ட ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அளிக்கப்பட்ட தொகை, பக்கத்தில், சுற்று வட்டாரத்தில் உள்ள நிலங்களின் தொகை, அந்த நிலங்களுக்குள்ள பெருமானத் தொகையை விட மிகக் குறைவான தொகையாக இருப்பதால் நிலத்தைக் கொடுத்தவர்கள் சர்க்கார் கொடுக்கிற அந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, அதை மீண்டும் பரிசீலித்து அந்த ஆர்ஜிதத்திற்கான நியாயமான தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் ஆலோசிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய விருப்பப்படி அவர்களுக்கு வேண்டிய தொகையைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். எனவே, நிலத்தை கையகப்படுத்துகிற அந்த கைய முயற்சியின் அடிப்படையில் வருவாய்த் துறை அதிகாரிகளைக் கொண்டு பக்கத்திலுள்ள நிலங்களின் மதிப்பீட்டுகளையெல்லாம் கணக்கிட்டு இவற்றிற்கு எவ்வளவு நஷ்டயீடு தருவது என்ற முறையில் கணக்கிட்டுத்தான் அவர்கள் ஒரு கொள்கையை வகுத்திருக்கிறார்கள்—அந்தக் கொள்கைப்படி கொடுக்கப்படுகிறது. அதிகமாக அவர்கள் பெற விரும்புகிறார்கள் என்றாலும், நாம் கையாள்கிற ஒரு முறையிலிருந்து மாறுவதற்கில்லை. கொராநாடு, சித்தக்காடு நிலங்களில் ஈட்டுத் தொகையைப் பகிர்ந்தளிப்பதில் தகராறு இருப்பதால் நஷ்டயீட்டுத் தொகை மாயூரம் கீழ் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றம் விசாரித்து அந்தத் தொகையை அவர்களிடம் கொடுக்க, அதற்கான முயற்சி நீதிமன்றத்தின்முன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கையகப்படுத்துகிற முறை இல்லாமல் பேரம் பேசி வாங்கலாம் என்றால், பேரம் பேசினால் அதிகத் தொகை கேட்கிறார்கள் என்பதற்காகத்தான் நிலத்தைக் கையகப்படுத்துகிற சட்டத்தின் அடிப்படையில் இந்த நிலங்களை நாம் பெறுகிறோம்.

திரு. என். கிட்டப்பா: அந்த நிலத்தை நம் அரசு ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னால் அவர்கள் ஒப்புதல் அளித்து நியாயமாக அவர்களுக்குப் பக்கத்தில் உள்ள நிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய தொகை தங்களுக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நிலத்தைத் தந்த அந்த மக்களுக்கு இன்றையதினம் அந்தத் தொகை கிடைக்காத காரணத்தினால் கொடுக்கப்பட்டுள்ள தொகையை வாங்க மறுக்கிறார்கள். எனவே, இதை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகை போதுமானதாக இல்லை என்று கருதினால் அவர்கள் வழக்கு தொடுத்து நீதிமன்றத்தில் அதை விசாரிக்கச் செய்து, நீதிமன்றம் பார்த்து

அதிகத் தொகை அதற்குக் கொடுக்கவேண்டுமென்று கருதுவார்களானால் அந்த வகையில் வேண்டுமானால் நாம் தரலாம். ஆனால் வருவாய்த் துறை அதை மறுபடியும், அவர்கள் போட்டிருக்கும் கணக்கை மீறி அதிகமாகத் தருவது என்ற நிலை ஏற்படாது. குறைவு என்று கருதினால் நீதிமன்றத்தின் மூலம் பெற முயற்சி செய்யலாம்.

**கைத்தறித் தொழிலாளர்களுக்கான ஊதியம்**

* 105. **வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயிக்க தமிழ்நாடு அரசு கமிட்டி ஏதேனும் அமைத்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் உறுப்பினர்கள் யார், யார் ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு :—

(1) துணைத் தொழிலாளர் துறை ஆணையர் (நலம்), சென்னை —தலைவர்.

(2) புள்ளியல் துறை உதவி இயக்குநர் (சந்தை நிலவர புலனாய்வு), சென்னை—தனி உறுப்பினர்.

(3) உதவி இயக்குநர் (கைத்தறி), கைத்தறி மற்றும் நெசவு இயக்குநர் அலுவலகம், சென்னை—தனி உறுப்பினர்.

வேலை தருவோர் பிரதிநிதிகள் :

(4) திரு. டி. எஸ். வி. வி. தியாகராஜன், இயக்குநர், மேட்டுப்பட்டி கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கம், சின்னாளம்பட்டி—உறுப்பினர்.

(5) திரு. ஆர். வெங்கடாசலம், தலைவர், கோயமுத்தூர் கைத்தறித் துணி உற்பத்தியாளர்கள் சங்கம், கோயமுத்தூர்—உறுப்பினர்.

(6) தலைவர், மதுரை மஹாலட்சுமி நெசவு கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம், காண்பாளையம், மதுரை—உறுப்பினர்.

(7) திரு. கே. பி. கவுண்டப்ப செட்டியார், தலைவர், சேலம் குகை கைத்தறித் துணி உற்பத்தியாளர்கள் சங்கம், சேலம்—உறுப்பினர்.





தொழிலாளர்கள் பிரதிநிதிகள் :

(8) பாமத்தி திரு. கே. சண்முகம், வடிவேல்நகர், கரூர், உறுப்பினர்.

(9) திரு. எஸ். துரைசாமி, எம். எல். ஏ., பொதுச் செயலாளர், கோயமுத்தூர் மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், கோயமுத்தூர், உறுப்பினர்.

(10) திரு. எஸ். ஜி. லட்சுமிநாராயணன், தலைவர், பரமக்குடி எமனேஸ்வரம் கைத்தறித் தொழிலாளர் சங்கம், பரமக்குடி, உறுப்பினர்.

(11) திரு. கே. ஜெயராமன், எம். எல். ஏ. சேலம், உறுப்பினர்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, அந்தக் குழு என்ன முறையிலே விசாரணை நடத்தியிருக்கிறது ? அதன் அறிக்கை எப்போது வரும் ? அதன் அடிப்படையில் எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, விரைவில் அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டுமென்று அக்குழுவின் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அதற்கு ஏற்ப அவர் தன்னுடைய பணியினைத் துவக்கியிருக்கிறார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த சம்பளத்தை நிர்ணயிக்க குழு அமைத்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னையைப் பற்றி ஆராய சந்தானம் குழு என்று ஒரு குழு அமைத்து இருக்கிறார்கள். இரண்டு குழுக்களும் இணைந்து பணிபுரிகின்றார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தனிக்கேள்வி போடவும்.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு ஊதியக் குழு அமைத்து இருப்பது, பட்டு நூல் நெசவுத் தொழிலாளர்களுக்கு மாத்திரமா அல்லது நூல் நெசவுத் தொழிலாளர்களுக்கு மாத்திரமா அல்லது இரண்டு பேர்களுக்கும் சேர்த்து ஆராயப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்களுக்காகத் தனியாக ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அதன் தலைவர், உறுப்பினர்கள் பின்வருமாறு :

துணைத் தொழிலாளர் துறை ஆணையர், சென்னை—தலைவர்.

புள்ளியியல் துணை உதவி இயக்குநர் (சந்தை நிலவர புலனாய்வு), சென்னை—உறுப்பினர்.

[1973 பிப்ரவரி 10

வேலை கொடுப்போர் பிரதிநிதிகள் :

திரு. பி. ராமதாஸ், பங்குதாரர், ஸ்ரீமங்களாம்பிகா பட்டு விச்சுதொழிற் சாலை, கும்பகோணம்.

திரு. என். கே. சுப்பராயச் செட்டியார், ஸ்ரீ லட்சுமி சரஸ்வதி பட்டு விச்சு தொழிற்சாலை, ஆரணி.

தொழிலாளர் பிரதிநிதிகள் :

தலைவர், காஞ்சிபுரம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சங்கம், காஞ்சிபுரம்.

துணைத் தலைவர், குடந்தை பட்டு நெசவுத் தொழிலாளர்கள் சங்கம், கும்பகோணம்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவரவர்களே, கைத்தறி நெசவுக் கூட்டுறவுத் துறையில் இல்லாத நெசவாளர்களுக்கும் சேர்த்து அந்தக் குழு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சேர்த்துத்தான் ஆராயும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்தக் கைத்தறித் தொழிலாளர்கள் குறைந்தபட்ச கூலி சம்பந்தமாகப் போடப்பட்டிருக்கின்ற குழுக்கள் எல்லாம் —சந்தானம் கமிட்டி, இப்போது குறிப்பிட்ட கமிட்டி, பட்டு நூல் சம்பந்தப் பட்ட கமிட்டி—அது குறித்து பணிகளை நடத்தி இருக்கிறார்கள். அதிலே எந்தக் கமிட்டி கூறுகின்ற குறைந்த பட்சக் கூலியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, அந்தக் குழுக் களின் அறிக்கைகள் கிடைத்த பிறகு அது பற்றி ஆராயப்படும்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், அகில இந்திய தொழிற்சங்க கூட்ட மைப்பு கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நீட்—பேஸ்ட் வேஜஸ் என்று ரூ. 250 நிர்ணயிக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அவர்களுடைய தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நான் ஏற்கனவே தெரிவித்தபடி அந்தக்குழுக்களின் அறிக்கைகள் வந்த பிறகு அதுபற்றி பரிசிலிக்கப்படும்.



1973 பிப்ரவரி 10]

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, கைத்தறித் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்க அமைக்கப்பட்டுள்ள குழுவில் ஆக்சுவல் கைத்தறித்தொழிலாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ? அவர் களுக்கு அதிகப் பங்கு அந்தக் குழுவில் இல்லை என்பது போல் தெரிகிறது. அவர்களுக்கு அதிகப் பங்கு பெற வாய்ப்பு அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அதில் இடம்பெற்று இருக்கிறார்கள். பெரும் பாலும் நெசவாளர்கள் இருக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய தற்கு ஏற்ப அந்தப் பிரச்னையை அவர்கள் கவனிப்பார்கள்.

**திரு. எ. க. துரைசாமி :** தலைவரவர்களே, கைத்தறித் தொழிலாளர் களுக்குக் கூலி நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் குழுவிற்கு கூட்டுறவுத் துறைக்கு வெளியில் இருக்கும் நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் ரிபேட் போன்ற வசதிகள் அளிக்க வாய்ப்பில்லை என்பதைச் சுட்டிக் காட்டி அதைக் கருத்தில் கொண்டு நிர்ணயம் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏற்கனவே விவரம் சொல்லப் பட்டிருக்கிறது. இருந்தாலும், கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத் தினை அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் கவனத்தில் கொண்டு ஆராயப் படும்.

### கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள்

* 106. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மில் தொழிலாளர் குறையினை ஆராய குழு ஒன்று நியமிக் கப்பட இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகிப்பார்கள் ?

(உ) அந்தக் குழுவில் நடைமுறைத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ள னவா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) அந்தக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக்கின்றனர் :

தலைவர் :

திரு. வி. பி. அருணகிரி, பி.ஏ., பி.எல். மாவட்ட நீதிபதி (தற்போது கோயம்புத்தூர் தொழில் நீதிமன்ற நீதிபதியாக உள்ளார்).

[1973 பிப்ரவரி 10

நிர்வாகத்தினர் பிரதிநிதிகள் :

(1) திரு. ஆர். எந்திராஜுலு, கோயம்புத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(2) திரு. பி. துரைசாமி, பிங்க் & பார்ட்ரிட்ஜ், சென்னை.

(3) திரு. கே. ராமன், மதுரை மில் கம்பெனி, மதுரை.

(4) திரு. பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி, கோத்தாரி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(5) திரு. எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி, தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம், கோயம்புத்தூர்.

(6) திரு. எம். ஏழுமலை, தமிழ்நாடு ஆலை அதிபர்கள் சங்கம், மதுரை.

(7) திரு. எஸ். ஆர். சுரேந்திரன், மதுரை.

(8) கைத்தறி மற்றும் ஜவுளித்துறை இயக்குநர் அல்லது அவருடைய பிரதிநிதி.

தொழிலாளர் பிரதிநிதிகள் :

(9) திரு. ஏ. எம். கோவிந்தராஜன்,
(ஏ.ஐ.டி.யு.சி.).

(10) திரு. ஏ. சுப்பிரமணி, எம்.எல்.ஏ. (எச்.எம்.எஸ்.).

(11) திரு. எம். எஸ். ராமச்சந்திரன் (ஐ.என்.டி.யு.சி.).

(12) திரு. கே. ரமணி (சி.ஐ.டி.யு.).

(13) திரு. பி. ஏ. கன்னையா நாயுடு, பாபநாசம் தொழிலாளர் யூனியன், விக்கிரமசிங்கபுரம்.

(14) திரு. பி. எஸ். சின்னதுரை, கோயம்புத்தூர் மாவட்ட ஐக்கிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோயம்புத்தூர்.

(15) திரு. கே. சி. ராமசாமி, கோயம்புத்தூர் மாவட்ட சோசலிச பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோயம்புத்தூர்.

(16) திரு. எஸ். துரைசாமி, எம். எல்.ஏ., கோயம்புத்தூர் மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், கோயம்புத்தூர்.

(உ) ஆம். பஞ்சாலைத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம், கிராக்கிப்படி ஆகியவற்றை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதை இக்குழு பரிசீலிக்கும்.



1973 பிப்ரவரி 10]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தக் குழு கோவையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்காக மட்டும் அமைக்கப்பட்டதா அல்லது தமிழகத்திலுள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் சேர்த்து பரிந்துரை கூற அமைக்கப்பட்டதா, அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத் தொழிலாளர்கள் ஏற்படுத்தியுள்ள தொழிற்சங்கங்களின் இணைச் செயற் குழு 7—12—1971-ல் எழுப்பிய கோரிக்கைகளின் அடிப்படையில் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அந்தக் குழுவிற்கு மேனேஜ்மென்ட் பிரதிநிதிகள் போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை, அவர்கள் சாட்சியம் கூற வரவில்லை, சரியானபடி ஸ்டேட்மென்ட் கொடுக்கவில்லை என்று புகார் சொல்லப்படுகிறது. அதைத் தவிர்க்க இந்த அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் கூறியதுதான் எனக்குத் தெரியும். அப்படியிருக்குமானால், அதைத் தவிர்க்க ஆவன செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த அருணகிரி கமிஷனின் அறிக்கை எவ்வளவு சீக்கிரத்தில் வரும் என்று அறிய விரும்புகிறேன். 2—3 மாதங்களுக்குள்ளாக அறிக்கை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்தக் குழு அறிக்கையைச் சமர்ப்பிக்க இன்னும் 6 மாத காலம் தேவைப்படுகிறது என்று தவணை கேட்டிருக்கிறது. அந்தக் கோரிக்கை இன்னும் பரிசீலிக்கப்படவில்லை. அதைப் பரிசீலனை செய்து, விரைவில் அறிக்கை தரும்படி சொல்லப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, அந்தக் குழு அமைக்கப்பட்டு எத்தனை வருஷங்கள் ஆகின்றன? எத்தனைக் கூட்டங்கள் போடப்பட்டிருக்கின்றது? எப்போது அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அந்த விவரங்கள் எல்லாம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும். இருப்பினும், கூடிய விரைவில் அவர்களை அறிக்கை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, ஏற்கனவே போன வருஷம் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்தத்தில் இருக்கும் ஷரத்துக்களுக்கு ஏற்ப கூலி உயர்வு, வேலைப் பளு போன்றவற்றை அமல் செய்ய மேனேஜ்மென்டார் முன்வரவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை அமல் செய்யும் வகையில் அரசு அக்கமிட்டியிடம் சிபார்சு செய்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அவ்வாறு ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. இப்போது கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கைகள் ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. க. துரைசாமி : மில் தொழிலாளர்கள் பிரச்னை வருகிறபொழுது கோவையைச் சுற்றி ஏராளமாக மில்கள் இருப்பதினால் அதை மட்டும் தனியாகக் கருத்தில் கொண்டு ஒரு முடிவு எடுக்கப்படுகிறது. அதனால் குடியாத்தம் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட தொழிலாளர்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தனித்தனியாக ஒன்றிரண்டு தொழிற்சாலைகளில் இருக்கின்ற தொழிலாளிகளின் நலனைக் கருதி, அவர்களுக்கு என்று ஒரு தனிக் குழு அமைத்து, அவர்கள் குறைகளைப் போக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அல்லது யோசனையை இப்பொழுது ஏற்றுக்கொள்வதற்கு இயலாத நிலை இருக்கிறது. குழு தனது அறிக்கையைக் கொடுத்ததற்குப் பின்னால், உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்து அவசியமாயின், அதை மேற்கொள்ளலாம்.

திரு. எம். சுரேந்திரன் : மாநிலம் முழுதும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததன்மூலம் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழு இந்த மாநிலத்திற்கு என்று ஒட்டுமொத்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கருதுகிறேன். ஒப்பந்தப்படி சில காரியங்களைச் சில தொழிற்சாலை முதலாளிகள் செய்யாமல் விட்டுவிட்டிருக்கிறார்கள். அந்த விஷயங்கள் இந்தக் குழுவின் ஆராய்ச்சிக்கு வராது. ஒப்பந்தப்படி சில காரியங்களை நிறைவேற்றாமல் இருக்கிற தொழிற்சாலைகள்மீது ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து குழுவினுடைய அறிக்கை வந்தபிறகு கவனிக்க வேண்டும். தனியாக இதைப்பற்றி விவரம் இருந்தால், அல்லது இதைப்பற்றித் தனியாகக் கேள்வி எழுப்பினால் அதனுடைய விவரங்களை அரசு தரத் தயாராக இருக்கிறது.





### அரிசனநலத் துறைப் பள்ளிக் கட்டடங்கள்

*107. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-72-ல் திருச்சி மாவட்டத்தில் அரிசன நலத் துறையின்கீழ் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதில் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) செலவழிக்கப்படாமல் விடப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஒரு லட்சம் ரூபாய்.

(இ) ரூ. 1,06,100.50.

(உ) ஒன்றும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிப் பல பள்ளிகளை அரிசன நல இலாகாவிற்கும், பிற்பட்டோர் நல இலாகாவிற்கும், பல இலாகாக்களுக்குப் பிரித்துக் கொடுப்பதால் திறமையாக இந்தப் பள்ளிகள் நடத்தப்படவில்லை. எல்லாப் பள்ளிகளையும் ஒரேயடியாகக் கல்வி இலாகாவின்கீழ் கொண்டுவருவதற்கான ஒரு திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது இந்த அமைச்சருக்கு சம்பந்தம் இல்லாத கேள்வி ஆயிற்றே ?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, my question is whether there is any proposal to hand over the Harijan Welfare Schools to the Education Department?

MR. DEPUTY SPEAKER : It is left to the Hon. Minister. . .

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனியாகப் பள்ளி இருப்பதினால் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்று இதுவரையிலும் யாரும் புகார் செய்யவில்லை. பொதுவாக, இது ஒரு கொள்கை விளக்கக் கேள்வியாக இருக்கிற காரணத்தினால் அதற்குப் பொருத்துத்தான் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது என்ன சொல்கிறீர்கள் ?

It is a question of policy of the Government. The main question relates to the Tiruchirappalli district.

[1973 பிப்ரவரி 10

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** கிராமத்தில் இருக்கக்கூடிய பள்ளிகளில் ஒவ்வொரு கிராமத்திலும் அரிசன மக்கள் இருக்கிறார்கள். அரிசன வகுப்பைச் சேராத மற்ற மாணவர்களும் இருக்கிறார்கள். ஒரே கிராமத்தில் இருக்கக் கூடிய பள்ளியில் அரிசன மாணவர்களும், மற்ற மாணவர்களும் சேர்ந்து படிப்பதன் காரணமாக ஜாதி வித்தியாசங்கள் ஒழிந்துவிடுவதற்கு வழி ஏற்படும். அரிசன மாணவர்களுக்காகத் தனியாக ஒரு பள்ளி வைத்திருக்கிற காரணத்தினால் ஜாதி வேற்றுமையை இன்னும் வளர்ப்பதற்குத்தான் அது வழி கோலும். ஆகவே, அரசாங்கம் இனிமேல் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கக் கூடிய அரிசன மாணவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற பள்ளியை ஒன்றியத்தின் நிர்வாகத்தின்கீழ் ஒப்படைத்துவிட்டு, ஒரே நிர்வாகத்தின்கீழ் எல்லாப் பள்ளிகளையும் வைத்து நடத்துவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அரிசனங்களுக்கு என்று தனியாகப் பல சலுகைகளை எல்லா வகைகளிலும் தரவேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் கொள்கையாகும். அவர்கள் அதற்காக நிதி ஒதுக்கீடு தந்து, கொள்கையை வகுத்து, அவர்களைத் தனியாகக் கவனிப்பதற்கு அரிசன நலத் துறை தனியாக இருக்கவேண்டும் என்று எல்லா மாநிலங்களிலும் வைக்கப் பட்டிருக்கிறது. அப்படி வைத்த காரணத்தினால்தான் ஓரளவுக்கு அரிசன மாணவர்கள் படிக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அரிசனப் பள்ளி களில், மேலும், ஜாதி வித்தியாசங்கள் பள்ளிகளில் இடம் பெறக்கூடாத அளவுக்குச் சமுதாயம் முன்னேறிவிட்டது என்று நாம் கருதியதற்குப் பிறகு இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்க ஒன்றாக இருக்கும். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** திருச்சி மாவட்டத்தில் கரூர்-பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் தும்பிவாடியில் அரிசன மாணவர்களுக்கென்று இது வரையில் ஒரு பள்ளி இல்லை என்று பல காலமாகக் கூறிவருகிறார்கள். அங்கே அம்மாதிரி ஒரு பள்ளியை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கேள்வி 1971-72-ல் திருச்சி மாவட்டத்தில் அரிசன நலத்துறையின்கீழ் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பது. அதற்குத்தான் பதில் சொன்னேன். ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். மேலும் ரூ. 6,100 அதிகமாகக் கட்டடம் கட்டுவதற்குச் செலவழிக்கப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ரூ. 20,000 பழுது பார்ப்பதற்காகச் செல வழிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கரூர் பள்ளிக் கட்டடமும் அதில் அமைந்திருக்கிறதா என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.



1973 பிப்ரவரி 10]

## கலப்புத் திருமணங்களுக்குப் பரிசு

* 108. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்து கொண்டதற்காக இதுவரை தமிழ்நாடு அரசின் தங்கப்பதக்கம் பரிசு பெற்ற தம்பதிகள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 168.

**திரு. என். கிட்டப்பா :** கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதி களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படுவதுபோல, அத்தகைய தம்பதிகளுக்கு அல்லது அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்காவது அரசாங்க உத்தியோகங்களில் முதல் இடம் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கிற தம்பதிகளில் ஒருவர் கட்டாயம் அரிசன வகுப்பைச் சேர்ந்த வராக இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் அரிசன நலத் துறையில் தரப்படுகிற எல்லாச் சலுகைகளையும் அவர்கள் பெற தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பெற்றெடுக்கிற பிள்ளைகளுக்குச் சலுகைகள் தருவது அவ்வளவு உசிதமாகத் தெரியவில்லை. காரணம், ஜாதி ஒழிப்பிற்காகக் கலப்புத் திருமணங்களை வரவேற்கிறோம். அவர்களுக்குப் பிறந்த குழந்தை களுக்கும் இதே ஜாதி அடிப்படையில் சலுகைகள் எதிர்பார்க்கிறார்கள் என்றால், ஜாதி ஒழிப்பு என்று கூறுவதற்குப் பொருள் இல்லாமல் போய்விடும்.

**திரு. என். இராஜாங்கம் :** நம்முடைய அரிசன நல இலாகாவின்மூலம் கலப்புத் திருமணம் செய்துகொள்ளக்கூடியவர்களுக்குத் தங்கப் பதக்கம் கொடுக்கப்படுகிறது, மற்ற சௌகரியங்களும் அவர்களுக்குச் செய்துகொடுக்கப் படுகிறது. 32 அரசாங்க அலுவலர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டிருக் கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் இம்மாதிரிக் கலப்புத் திருமணங்கள் செய்துகொண்டிருந்தாலும், அப்போதைக்கப்போது அவர்கள் மனுச் செய்ய முடியாத காரணத்தினால், அல்லது தெரியாத காரணத்தினால் விடுபட்டிருக் கிறார்கள். அப்படித் தெரிந்த பிறகு அவர்கள் கோரிக்கை எழுப்பினால் அதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்தால் பல பேர் இம்மாதிரிக் கலப்புத் திரு மணங்கள் செய்துகொள்வதற்கு விரும்புவார்கள் அல்லவா ? ஆகவே, இதை கவனிக்க அரசு ஏதாவது வழி வகை செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இந்தத் திட்டம் 1967 ஜூலைக்குப் பிறகு அமல்படுத்தப்படுகிறது. அதற்கு முன்னால் திருமணம் செய்து கொண் டிருந்த அரசு அலுவலர்களாக இருந்தால், அவர்கள் இதற்குத் தகுதியுடைய வர்கள் என்று கருதப்படமாட்டார்கள். 32 பேர்கள் இருக்கிறார்கள் என்று

சொன்னார்கள். அவர்கள் யார், யார் என்று இப்பொழுது என்னிடம் விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அந்த 32 பேர்கள் யார் என்றும், அவர்கள் 1967-க்குப் பிறகு திருமணம் செய்துகொண்டவர்களா என்பதுபற்றியும் அரசுக்கு விளக்கம் தருவார்களேயானால் அந்த 32 பேர்களுக்கும் அவர்களையே அழைத்துத் தங்கப் பதக்கம் கொடுக்க நான் ஏற்பாடு செய்கிறேன்.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, காதல் பாதை கரடு முரடானது. கலப்புத் திருமணங்கள் என்பது பெரும்பாலும் காதல் திருமணங்களாகத்தான் நடைபெறுகின்றன. 1967-க்குப் பிறகு சில வசதிகளை நாம் செய்துகொடுத்திருக்கிறோம். சமுதாயத்தில் எதிர் நீச்சல் போட்டு 1967-க்கு முன்பு நம்முடைய பிரசாரத்தின் காரணமாகக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை மதிக்கத் தக்க வகையில் அரசாங்கம் அவர்களுக்கும் தங்கப் பதக்கங்கள், மற்ற வசதிகள் செய்து தர முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 1967-க்குப் பிறகுதான் என்று அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி யாராவது இருப்பார்களேயானால் அது குறித்துத் தெரிவிக்கலாம்.

(திரு. நா. வீராசாமி எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரிடையாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. நா. வீராசாமி :** கலப்புத் திருமணம் என்றால் தம்பதிகளில் யாராவது ஒருவர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தால்தான் அவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. ஜாதிபேதமற்ற சமுதாயத்தில் அரிசனங்கள் அல்லாதவர்களும் கலப்புத் திருமணம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்கப் பதக்கம் இல்லை என்றாலும், வெள்ளிப் பதக்கமாவது கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அரிசன சமுதாயத்தில்தான் இப்படித் தொடர்பு கொள்வது வெறுக்கத் தகுந்த காரியம் என்ற நிலை இருப்பதினால் இத்தகைய உறவு கொள்ளாமல் இருக்கிறார்கள். எனவேதான் அரிசன சமுதாயத்தில் அப்படிப்பட்ட உறவு கொள்பவர்களுக்குத் தங்கப் பதக்கம் தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு சமுதாயத்தினர் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு வெள்ளிப் பதக்கம் கேட்கிறார். அதைப் பற்றி அரசு ஆலோசிக்கலாம்.





**திரு. கா. வேழவேந்தன் :** இந்த அரிசன நல இலாகாவிற்கு மத்திய அரசு பல உதவிகள் செய்கின்றது என்று அமைச்சர் அவர்கள் முன்னால் பதில் சொல்லும்பொழுது குறிப்பிட்டார்கள். தங்கப் பதக்கம் தருவதற்கு ஆகிற மிகப் பெரிய செலவை மத்திய அரசு ஏற்கிறதா அல்லது மாநில அரசு ஏற்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** என்னிடம் சரியாக இப்பொழுது விவரம் இருக்கவில்லை. ஆனால், மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூ. 35,000 கடந்த ஆண்டு இதற்கு ஒதுக்கியிருப்பதாக எனக்கு நினைவு.

**திரு. எஸ். வடிவேல் :** அரிசனரும் மற்ற ஜாதியினரும் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் பரிசு வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். அதேபோன்று செட்டியாரும், முதலியாரும், படையாச்சியும் மற்ற ஜாதியினரும் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்கும் பரிசு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** செட்டியாரும் முதலியாரும் அல்லது மற்ற ஜாதியினர் தீண்டாதவர்கள் அல்ல. ஒருவருக்கொருவர் தீண்டிக் கொள்கின்றவர்கள்தான். ஆனால், அரிசனங்கள் தீண்டாதவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆகவேதான், அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களைக் கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** கலப்புத் திருமணம் செய்துகொண்டால்தான் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றும், அதேபோன்று மற்றச் சலுகைகளும் கிடைக்கும் என்றும் கலப்புத் திருமணம் செய்துகொள்வதாகச் சொல்கிறார்கள். வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்றால் கலப்புத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் பரவலாக இருப்பதால், பலர் கலப்புத் திருமணம் செய்துகொண்டு, பின்னால் வேலை கிடைக்காமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப் பலருக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கேள்வியைப் புரிந்து கொள்வதே கஷ்டம். குறிப்பாகச் சுருக்கமாக ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க வேண்டும். ஒரே தொடர்ச்சியாகக் கேள்வி கேட்டால் அதைப் புரிந்துகொண்டு பதில் சொல்வது இயலாது. ஆகவே, தனித்தனிக் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. வை. பாலசுந்தரம் :** வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற காரணத்திற்காகத்தான் கலப்புத் திருமணம் செய்துகொள்கிறார்கள் என்று பேசப்படுகிறது. அந்த அடிப்படையில் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்படிப் பலர் சொல்லிக்கொண்டிருப்பதாகத்தான் சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு அதுபற்றிப் புகார் எதுவும் வரவில்லை. கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குப் பரிசுதான் வழங்கப்படுகிறது. வேலை வாய்ப்பளிப்பதில் தனிச் சலுகை எதுவும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அரிசனங்களுக்கு என்ன சலுகை உண்டோ அது நலத்துறைமூலமாகக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அது அல்லாமல் வேலை வாய்ப்பளிக்கப்படும் என்ற நிலை இல்லை.

## *Sub-Court for Kuzhithurai*

*109 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal under the consideration of the Government to open a Sub-Court at Kuzhithurai in Kanyakumari district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இக்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## மாயூரம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளுக்குக் கட்டடங்கள்

*110. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் முதல் நிலை, இரண்டாம் நிலை மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளுக்காக சொந்தத்தில் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம், மாயூரம் நகரில் முதல்நிலை, இரண்டாம்நிலை மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் கட்டுவதற்காக ரூ. 3.34 லட்சம் செலவுத் தொகைக்கு 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. என். கிட்டப்பா: மாயூரத்தின் நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்ற அனுமதி அளித்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வேலை எப்போது முடிவடையும்? துரிதமான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விரைவில் நிறைவேற்றப்படும்.





## *Computer to detect ground water*

*111 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that a new type of computer capable of detecting the movement of water below the earth crusts has been developed by the Irrigation Research Station, Poondi; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) பூண்டியிலுள்ள நீரியல் ஆராய்ச்சிக் கூடத்தில் மின் அணு இயல் "அனலாகு கம்ப்யூட்டர்" மூலம் நில நீர் ஊற்றுகளைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு புதிய காணு முறை விருத்தி செய்யப்பட்டுள்ளது.

(இ) "டைபோல்-நீரேற்று சோதனை" என்னும் புதிய நீரேற்று சோதனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீரின் கொள்ளளவிலுள்ள மின்சார அடக்குத் தன்மை நில நீர் ஓட்ட அளவில் ஒரு பகுதியாகத் தெரிய வருகிறது. மேற்கூறிய தன்மைகளை உபயோகப்படுத்தி வண்டல் மண் படிந்த நிலப் பரப்பில் சுமார் 3,000 மீட்டர் கீழ் மட்டத்திலுள்ள நில நீர் ஊற்றுகளை மின் அணு இயல் முறைப்படி கண்டுபிடிக்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த கம்ப்யூட்டர் எந்த அளவுக்கு வெற்றிகரமாக இருக்கிறது? இதை அபிவிருத்தி செய்து, வசதியாக இருக்குமானால், மற்ற விவசாயத் திட்டங்களுக்கும் பயன்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்போது அது ஆராய்ச்சியிலேதான் இருக்கிறது. ஆராய்ச்சி முடிவுபெற்ற பின்னால், மற்றப் பணிகளுக்கும் பயன்படுமானால், இம்முறை விஸ்தரிக்கப்படலாம்.

திரு. ஏ. எம். இராஜா: இந்த இயந்திரம் மணல்பாங்கானப் பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதை 'ஹார்டு ராக்' என்று சொல்லப்படுகின்ற பாறைப் பிரதேசங்களிலும் பயன்படுத்தி, நில நீரைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படியானால் கோவை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்கும் இந்த இயந்திரம் அனுப்பப்படுமா?

[1973 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கெனவே சொல்லிய படி இது இன்னும் ஆராய்ச்சியில்தான் இருக்கிறது. ஆராய்ச்சி முடிந்த பின்னால் மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுவது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த கம்ப்யூட்டர் வேலை செய்யத் தொடங்கினால் 'வாட்டர் டிவைனர்'களுக்கு வேலையில்லாமல் போய்விடுமா? அல்லது அவர்கள் வேலையை இது எளிதாக்குமா? அதுபற்றி ஆராயப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது இன்னும் ஆராய்ச்சியில்தான் இருக்கிறது, என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். டெக்னிக்கல் முறைகளைப் பற்றி இப்போது விளக்கம் அளிக்க விவரம் இல்லை.

THIRU B. VENKATASAMI : May I know from the Hon. Minister who is responsible for inventing this computor? Who is its founder?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நில நீர்த் துறை இயக்குநர் திரு. குமாரசாமி என்று சொல்லப்படுகிறது.

### வெங்கல்-கன்னிகைப்பேர் சாலை

* 112 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், எல்லாபுரம் ஒன்றியத்தில் இருக்கும் ஏழு மைல் நீளமுள்ள வெங்கல்-கன்னிகைப்பேர் சாலையை அரசுப் பெருவழித்துறையில் எடுத்து, தார்ச்சாலை போடும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சாலை மேம்பாட்டையும் பராமரிப்பையும் 1972-73 முதல் நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளுமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அரசு இந்தச் சாலையை எடுத்துக்கொள்ள ஆணை பிறப்பித்திருப்பதற்கு நன்றிதெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலையை 1972-73-ல் எடுத்துக்கொண்ட இச்சாலையை 1973-74 இல் தார் போட்டு முடிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நெடுஞ்சாலைத் துறை இந்தச் சாலையை எடுத்துக்கொண்டு, நிதிவசதிக்குட்பட்டு, படிப்படியாக வேலையைச் செய்து முடிப்பார்கள்.



1973 பிப்ரவரி 10]

### ஆலமரத்துப்பட்டியில் குட்டை அமைப்புத் திட்டம்

* 113 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் பெரும்பள்ளம், கல்மடுவு திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ரூ. 89,000 செலவில் ஒரு குட்டை ( Pond ) அமைக்கும் திட்டச் செயற்குறிப்பு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தப் பகுதியிலே கார்பிக்காடு என்ற இடத்திலே ஒரு திட்டம் இருக்கிறது. அதுபற்றிய ஆராய்ச்சி முடிந்து, அணைகட்டும் திட்டம் அரசாங்கத்தின் கையில் இருப்பதாகத் தெரிகிறது. அதோடு 50,000 ரூபாய்க்குக் கீழுள்ள பல திட்டங்கள் இருக்கின்றன. இவை எல்லாம் இன்னும் நிறைவேற்றப்படாததற்கான காரணம் என்ன? விரைவிலே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினரின் கேள்வி மூலக்கேள்விக்குத் தொடர் இல்லாதது. அதனால் நான் பதில் சொல்ல இயலாது.

### *Contingent establishments in Public Works Department*

* 114 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that there are still a large number of contingent workers in the Public Works Department without regularisation in spite of the Government Order; and

(b) if so, the action taken to implement the Order?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (a) & (b) சபை முன் ஓர் விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அமைச்சரவர்கள் அளித்த விவர அறிக்கையில் 88 பேர்களை நிரந்தரமாக்கியிருப்பதாகவும், மேற்கொண்டு 78 பேர்கள் நிரந்தரமாக்கப்பட இருப்பதாகவும், அதில் 11 பேர் மதுரையைச்

---

@ 231-239-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

சேர்த்தவர்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த 78 பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டாலும் மேற்கொண்டும் 300 பேருக்குமேல் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்களே, அவர்களையும் நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, 22—4—71 ஆம் ஆண்டு அரசு ஆணையின்படி

Government directs that 78 posts borne on the contingent establishment of P.W.D. as detailed in the annexure to this order to the various P.W.Ds. be provincialised with effect from 22nd April 1971. அது அல்லாமல் இந்த அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல 88 பேர்கள்.

It may be mentioned in this connection that even before the issue of these orders in the above Government Order, the services of 88 posts of the contingent establishment staff were provincialised in P.W.D. in the following Government Orders. There are two or three Government Orders. The Chief Engineer has also sent proposals for permanent retention of 55 posts. It is separately under examination. The proposal of Chief Engineer for framing of *ad hoc* rules for these posts are awaited.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** விவாக் குறிப்பிலே 78 பேர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கப்பாலும் நிரந்தரமாக்கப்பட வேண்டியவர்கள் இருக்கிறார்களே. அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதற்கான விவரங்களைத் தலைமைப் பொறியாளரிடம் கேட்டிருக்கிறோம்.

They have been provincialised from the date 22nd April 1971. As per G.O. No. 105, dated 25th January 1973, 78 posts had been provincialised. So far as permanent retention is concerned, we are awaiting proposals from the Chief Engineer.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. Minister for P.W.D state as to since how many years these persons have not been provincialised? Most of them are Sweepers and Watchmen. What is the difficulty in making them permanent workers of P.W.D.?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் ஏற்கெனவே தெரிவித்தபடி 1971-லிருந்து 'ப்ரோவின்சியலைஸ்' செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விவரங்கள் தலைமைப் பொறியாளரிடமிருந்து இன்னும் வரவில்லை.





**திரு. எஸ். வடிவேல் :** பொதுப்பணித் துறையில் உள்ள கடைநிலை ஊழியர்களுக்கு மற்றத் துறைகளிலுள்ளவர்களைப் போல் பதவி உயர்வு இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தத் துறையிலும் பதவி உயர்வுக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தத் துறையிலே சில பதவிகளுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம். இப்போதைய பிரச்சனை ஏற்கெனவே இருக்கும் இடங்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### கூட்டுறவு அச்சகங்கள்

*115 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972 ஆம் ஆண்டு, மார்ச் முடிய நமது மாநிலத்தில் கூட்டுறவு முறையில் இயங்கக் கூடிய அச்சகங்கள் எத்தனை உள்ளன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பதினான்கு கூட்டுறவு அச்சகங்கள் தமிழகத்தில் உள்ளன.

**திரு. என். கிட்டப்பா :** இந்தக் கூட்டுறவு அச்சகங்கள் தமிழகத்தில் எந்த எந்த ஊர்களில் இயங்குகின்றன என்பதையும், புதியதாக கூட்டுறவு முறையில் கூட்டுறவு அச்சகங்கள் துவக்கினால் அவற்றிற்கு அளிக்கக் கூடிய உதவிகளையும் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** சென்னையில் 2 கூட்டுறவு அச்சகங்கள் இருக்கின்றன. தர்மபுரி மாவட்டத்தில்தான் இல்லை. மற்ற எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒன்று இருக்கிறது. அடுத்து, அரசாங்கம் பங்குத்தொகையும் கொடுக்கிறது, கடன் தொகையும் கொடுக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** அமைச்சர் அவர்கள் பங்குத் தொகையும், கடன் தொகையும் அளித்து வருவதாகச் சொன்னார்கள். என்ன விகிதாசாரத்தில் அளிக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதற்கு உச்சவரம்பு இல்லை. தேவைக்குத் தகுந்தபடி கொடுத்து வருகிறோம்.

**திரு. மா. சுப்பிரமணியம் :** மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் இந்தக் கூட்டுறவு அச்சகங்கள் அமைக்கப்படுகின்றனவா? அல்லது கேட்கிற இடங்களில் எல்லாம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பொதுவாக மாவட்டத் தலைநகரங்களில்தான் கூட்டுறவு அச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் மட்டும் கூட்டுறவு அச்சகம் புதுக்கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

## *Supply of fertilisers.*

* 116 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food be pleased to state the total quantum of fertilisers consumed by the farmers of Tamil Nadu during 1971–72?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 1971-72-ல் இம்மாநிலத்தில் பயன்படுத்தப்பட்ட உரத்தின் மொத்த அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| உரத்தின் பெயர். | டன். |
|---|---|
| நைட்ரஜன். உரம் | 2,14,475 |
| பாஸ்பேட் உரம் | 71,586 |
| பொட்டாஷியம் உரம் | 61,137 |

Dr. H. V. HANDE : Sir, the Hon. Minister has given particulars regarding the quantity consumed. May I know the details of the quantity targeted originally by the department concerned and whether the farmers have complained to the Government that they do not get adequate supply of fertilisers. Also, whether in the Zonal Conference held on the 5th and 6th May, the Government officials have asked the Central Government to step up the quantity of fertilisers to be supplied to this State in view of the heavy demand from the farmers?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உரத்தைப் பொறுத்த வரை நம்முடைய மாநிலத்தின் டிமாண்டு—

| உரத்தின் பெயர். | டன். |
|---|---|
| நைட்டிரஜன் உரம் | 2,84,000 |
| பாஸ்பேட் உரம் | 91,000 |
| பொட்டாஷ் உரம் | 75,000 |

மற்ற விவரங்களுக்குத் தகவல் இல்லை.

Dr. H. V. HANDE : Sir, in view of the fact that more fertiliser is being required by the farmers of Tamil Nadu and in view of the shortage of fertilisers, have this Government got



into touch with the Central Government and asked for higher quota and whether the Government have succeeded in getting a higher quota so that the farmers can be satisfied?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நம்முடைய மாநிலத்திற்கு உரம் எவ்வளவு தேவையோ அதற்கான டிமாண்டை அனுப்புகிறோம். ஆனால் அவர்கள் நாம் கேட்ட அளவு கொடுப்பதில்லை. அப்படிக் கொடுப்பதிலும் அவர்கள் நாம் கேட்டதில் 32 சதவிகிதம் தாமதம் காட்டுகிறார்கள். இந்த ஆண்டும் கூட நாம் கேட்டதில் 32 சதவிகிதம் தான் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அதிகமாக வேண்டும் என்கிற கோரிக்கை நேற்றைய முன்தினம் நமது முதல்வர் அவர்கள் மத்திய அமைச்சர் திரு. ஷிண்டேயிடம் கூட வற்புறுத்தியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. ஹாண்டே அவர்களுடைய கேள்விக்கு ஒரு விளக்கம் அறிவிக்க விரும்புகிறேன். நேற்றைக்கு முன்தினம் மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்கள் என்னையும், உணவு அமைச்சர் அவர்களையும், கூட்டுறவு அமைச்சர் அவர்களையும் சந்தித்தார். நாங்கள் அவருடன் நீண்ட நேரம் இந்த உரம்பற்றி விவாதித்திருக்கிறோம். அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து கேரளா போன்ற மாநிலங்களுக்குத் தருவதற்காக அரிசி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் நாம் ஓரளவு ஒப்புதல் அளித்திருக்கிறோம். ஒரு லட்சம் டன் அரிசி வேண்டுமென்று மத்திய அரசின் சார்பில்—அதுவும் முக்கியமாக கேரளாவுக்கு அனுப்புவதற்காக என்று கேட்டபோது இந்த ஒரு லட்சம் டன் அரிசியைத் தர ஒத்துக்கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் இப்போது இந்தியாவில் பரவலாக பல்வேறு பகுதிகளில் உணவுப் பற்றாக்குறை நிலை ஏற்பட்டிருக்கிறபோது ஓரளவு தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருப்பதாலும், மற்றப் பகுதிகளின் குறையைப் போக்க இன்னும் அதிக அளவில் உணவு உற்பத்தியில் தொடர்ந்து கவனம் செலுத்த நமக்கு அதிகமான அளவு உரம் அளிக்கவேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். அதைத் தீவிரமாகக் கவனித்து ஆவன செய்வதாக உறுதி அளித்துச் சென்றிருக்கிறார்கள். அதன் விளைவாக ஆக்கப் பணிகள் நடைபெறும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

## சர்க்கரை வழங்கல்

* 117 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சர்க்கரை தட்டுப்பாடு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

(இ) இதைப்போக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) 1972-ம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி குறைவாகிவிட்டதாலும், கடந்த வருடங்களில் ஆலைகளில் தேங்கியிருந்த உபரி சர்க்கரை பூராவும் முன்பே பயன்படுத்தப்பட்டதாலும், நாடு முழுவதும் ஓரளவு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

(இ) சர்க்கரை ஆலைகளின் உற்பத்தியில் 70 சதவிகிதம் என்ற அளவில் சட்டபூர்வமாக கைப்பற்றப்பட்ட சர்க்கரை பொதுமக்களின் குடும்பத் தேவைக்குப் போதுமான அளவு கிலோ ரூ. 2.15 என்ற விலையில் அட்டைகள் மூலம் வழங்கப்படுகிறது. ஆகையால் சர்க்கரை விலை ஏற்றத்தால் குறைந்த வருமானமுள்ள பொதுமக்கள் பாதிக்கப்படவில்லை.

**திரு. நா. வெ. குருசாமி:** குறிப்பாக கிராமப்பகுதி மக்களுக்காக ஒதுக்கப்படுகிற சர்க்கரை நகரப் பகுதிகளிலேயே விற்கப்பட்டுவிடுகிறது. இதுபற்றி சென்ற கூட்டத் தொடரில்கூட நான் கேள்வி கேட்டிருக்கிறேன். அதிகாரிகளே இதற்கு உடந்தையாக இருந்து, முறைகேடான முறையில் நடந்துகொள்கிறார்கள். அவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உறுப்பினரது கேள்வி பொதுப்படையாக இருக்கிறது. கிராம மக்களுக்கும் சர்க்கரை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் கூட்டுறவு ஸ்தாபனங்கள் உள்ள இடங்களில் எல்லாம் கூட்டுறவு மூலமாகவே—அட்டைகள் கொடுத்து, அட்டைகளுக்கு ஒழுங்கான முறையில் சர்க்கரை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்காவது தவறு நடப்பதுபற்றி உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கிறதா என்றும் அறியவிரும்புகிறேன். இதுபோல பொதுவாகக் கேள்வி கேட்காது, குறிப்பிட்ட இன்ன இடத்தில் இன்னமாதிரியாக நடந்திருக்கிறது என்பதாக உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் நிச்சயம் நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.

**திரு. ஆர். பொன்னப்பநாடார்:** தலைவர் அவர்களே, சீனி வெளிமார்க்கெட்டில் ரூ. 3.65-க்கு விற்கப்படுகிறது. ஆகவே இன்னும் அதிகமான அளவுக்கு கூட்டுறவு மூலம் சீனி விநியோகம் செய்ய மாநில அரசு என்ன நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நம்முடைய மாநிலத்தில் மட்டும் நாம் மாதத்திற்கு 25 ஆயிரம் டன் என்கிற அளவில் வருடம் 3 லட்சத்து 6 ஆயிரம் டன் உற்பத்தி செய்கிறோம். அதில் மத்திய சர்க்கார்—கொள்முதல் சர்க்கரை—70 சதவிகிதம் எடுத்துக்கொள்கிறார்கள். 30 சதவிகிதம் வெளி மார்க்கெட்டில் விற்பதற்கு அனுமதித்துவிடுகிறார்கள். வெளி





மார்க்கெட் விலையைக் கட்டுப்படுத்தவோ, குறைக்கவோ நமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. நாம் மத்திய சர்க்காரிடம் நமது மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படுகிற மொத்த சர்க்கரையில் 50 சதவிகிதமாவது நமது மாநில உபயோகத்திற்காக என்று நமக்கு விடுவித்துவிட வேண்டும் என்று வற்புறுத்திவருகிறோம். ஆனால், அவர்கள் நமக்கு பத்தாயிரத்து எண்ணூறு டன் தான் கொடுக்கிறார்கள். அதுவும் இவ்வாண்டு ஒன்பதாயிரத்து முந்நூறு டன்னுக்குக் குறைத்து விட்டார்கள். இதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்ல, கூட்டுறவு மூலம் விநியோகிக்கிற சர்க்கரைக்கு விலை கிலோவுக்கு 2 ரூபாய்க்குமேல் போகக்கூடாது என்பதையும் நாம் வற்புறுத்தினோம். அவர்கள் ரூ. 2.15 ஆக நிர்ணயித்திருக்கிறார்கள். விலையைப்பற்றிக் கூடப் பரவாயில்லை. நாம் 90 ஆயிரம் கார்டுகள் வைத்திருக்கிறோம். இன்னும் அதிக அளவுக்கு கூட்டுறவு மூலம் சர்க்கரை விநியோகம் செய்ய மத்திய சர்க்கார் நமது மாநிலத்திற்கு—நமது மாநிலத்தில் கொள்முதல் செய்கிற சர்க்கரையில் 50 சதவிகிதத்தை ஒதுக்கிவிட வேண்டும் என்பதாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்னும் அதிகம் கொடுத்தால் நாமும் கூட்டுறவு மூலம் இன்னும் அதிக அளவுக்கு சர்க்கரை விநியோகம் செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது. மு.ப. 10-00

**திரு. ஆர். பொன்னப்பநாடார்:** நமது மாநிலத்தின் தேவை எவ்வளவு? அந்தத் தேவைக்கு இன்னும் எவ்வளவு குறைவாக இருக்கிறது? அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு மத்திய அரசாங்கம் அவர்களுடைய கொள்கையை புனர் பரிசீலனை செய்வதற்கு இன்னும் அதிகமாக நம்முடைய மாநில அரசாங்கம் 'பிரஷர்' கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உற்பத்தியாவதில் 50 சதவிகிதம் கொடுத்தால் தேவைக்குச் சரியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். 12,000 டன்னாவது கொடுக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறோம். இதை எழுதியதற்குப் பிறகுதான் 10,800 டன் என்று கொடுத்துகொண்டு இருந்ததை 9,300 ஆக ஆக்கியிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, சர்க்கரை விநியோகம் செய்வதில், நம்முடைய நாட்டிற்குத் தேவைப்படுகின்ற அளவை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே 10,000 டன் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது 9,000 ஆக குறைக்கப்பட்டிருக்கிறதென்பதால்

[1973 பிப்ரவரி 10

தமிழ்நாடு பாதிக்கப்படுகிறது. லெவி ஷுகர் கொடுக்கின்ற முறையிலே மத்திய அரசாங்கத்தினுடைய ரூல்ஸ் எல்லாம் மிகவும் ரிஜிடாக இருக்கின்றன. வெளியே வாங்குவதற்கும் பல்க் கன்ஸ்யூமர்ஸ் கஷ்டப்படுகிறார்கள். சந்தர்ப்பம் ஏற்படுவதற்கில்லை. ஆகையினால் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மத்திய அரசை வற்புறுத்தி இங்கிருக்கிற மக்களுடைய அதிருப்தியை மத்திய அரசுக்கு இந்த அரசு அறிவிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசு உணவு அமைச்சரிடத்திலே பேச்சு வார்த்தை நடத்தினார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு நம்முடைய சர்க்கரை ஆலைகளிலே ஏராளமாக உற்பத்தியாகிறது. இந்த உற்பத்தியை நமக்கென்று ஒதுக்கி நம்முடைய தமிழ் நாட்டு தேவைக்குக் கொடுத்து விட்டால் இந்தப் பிரச்னைகள் எல்லாம் வராது என்றும் அதே சமயத்திலே 70 சதவிகிதம் லெவி என்றும் கொடுத்து, இந்த லெவியை கிராமங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். அந்தக் கிராமங் களிலுள்ள பல்க் கன்ஸ்யூமர்ஸ் ஹோட்டல், டீ கடைக்காரர்கள்தான். கிராமங் களிலும் நகரங்களிலும் அவர்களுக்கு சர்க்கரை வழங்குவதற்கு அனுமதி யில்லாத உத்தரவையும் போட்டுவிட்டு ஏழைகளுக்குக் குறைந்தவிலையில் கொடுக்கிறோம் என்ற உத்தரவையும் போட்டுவிட்டு, அதன் விளைவாக பல்க் கன்ஸ்யூமர்ஸுக்குக் கொடுப்பதற்கு அதிகமான விலைக்கு வாங்கி, கள்ளச் சந்தையிலே விற்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆக, பல்க் கன்ஸ்யூமர்ஸுக்குக் கொடுக்கின்ற முறையையும் கொண்டுவர வேண்டும்.

மத்திய அரசினுடைய கொள்கையிலே இன்னொரு குறை இருக்கிறது. ஆலை முதலாளிகளிடத்திலே 70 சதவிகிதம் வாங்குகிறார்கள். அதை மிகவும் குறைந்த விலையிலே வாங்குகிறார்கள். இதனால் ஆலை முதலாளிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. அதைச் சரிக்கட்டுவதற்காக ஆலை முதலாளிகளுக்கு ஒரு சலுகை. மீதி இருக்கிற 30 சதவிகிதத்தை என்ன விலைக்கு வேண்டு மானாலும் விற்றுக்கொள்ளலாம் என்று. பல்க் கன்ஸ்யூமர்ஸ் சொல்கின்ற விலை மிக அதிகமாக இருக்கிறது. நாம் கொடுப்பதாகத் திட்டமிட்டிருக்கிற 70 சதவிகிதத்தினுடைய விலை கட்டுப்படியாகாத விலையில் இருக்கிறது. அந்த இரண்டுக்கும் இடையில் இருக்கிற ஏற்றத்தாழ்வுதான் கள்ளச் சந்தைக்குக் காரணம். மத்திய அரசாங்கம் இதில் தன்னுடைய பிடிப்பை விட்டுவிட்டு மாநில அரசாங்கத்திடமே விட்டுவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசினர் அதைப் பரிசீலிப்பார் களா என்று தெரியவில்லை.

(பல உறுப்பினர்கள் கைகளை உயர்த்தினர்).



1973 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவ்வளவு விளக்கமாகப் பதில் அளித்துவிட்டாரே, இன்னும் துணைக் கேள்வி வேண்டுமா? (குறுக்கீடு).

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த லெவி சர்க்கரை பூராவும் கூட்டுறவு முறையிலே வினியோகிக்கப்படுமா? புகார் இருந்தால் சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரை மாவட்டம் பெரியகுளம் தாசில்தார்மேல் பல ரிப்போர்ட்டுகள் வந்திருக்கின்றன, எழுத்து மூலமாகவே வந்திருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனிப் பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, அனேகமாக இப்பொழுது கொடுப்பதெல்லாம் கூட்டுறவுத் துறை மூலம் தான். ஏதாவது தவறு இருக்குமானால், அந்தக் கூட்டுறவு சங்கத்தில் தவறுகள் நடந்து இருக்கும். (குறுக்கீடு). அதைப்பற்றி விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. பெரியகுளம் தாசில்தார் பற்றிய விவரம் பிறகு சொல்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் என்று சொன்னதனால் விவரம் பிறகு சொல்கிறேன்.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் அவர்கள் கூறியதை ஏன் திருப்பிச் சொல்லவேண்டும்.

திரு. ஏ. எம். ராஜா: நம்முடைய நாட்டிலே நிறைய சர்க்கரை உற்பத்தி யாகிறது. இருந்தாலும் கேட்கின்ற அளவு சர்க்கரையை மத்திய சர்க்கார் கொடுப்பதில்லை, அதைக் குறைத்தேதான் கொடுக்கின்றார்கள் என்று தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி மேலும் கூறும் பொழுது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் நேரிடையே கேள்வி யைக் கேளுங்கள். மத்திய சர்க்காரைப் பற்றிக் கேட்கப் போகிறீர்கள். அதைக் கேளுங்கள். அமைச்சர் அவர்கள் இப்பொழுது தானே பதில் சொன்னார். அதை நானே மறக்கவில்லை. ஆகவே, அதை மீண்டும் நினைவூட்ட வேண்டாம், கேள்வியைக் கேளுங்கள், நேரமில்லை.

திரு. ஏ. எம். ராஜா: நமக்குத் தேவை மிக அதிகமாக இருக்கிறது. நம்முடைய நாட்டிலே உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஆனால், நாம் சொல்வதை மத்திய அரசு ஒத்துக்கொள்வதில்லை. ஆனால் அதே நேரத்தில் ஆந்திராவிலே அங்கே உற்பத்தியாகிற சர்க்கரையை நாங்கள் தான்

விற்போம் என்று அவர்களே விற்றுக்கொள்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய சட்டத்தை அவர்கள் மதிக்கவில்லை. அதேபோல் நம்முடைய நாட்டில் நம்முடைய அரசே இந்த சர்க்கரையை எடுத்துக் கொண்டு இங்குள்ள மக்களுக்கு விநியோகிக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது ஆந்திர நிலையை ஒப்பிடுவது சரியல்ல. ஆந்திரம் இப்பொழுது ஆந்திரமாக இல்லை. ஆத்திரமாக இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்பநாடார்:** இந்த சர்க்கரை விநியோகத்தினால் நமது மாநிலத்திற்குப் பெரும் பாதகம் ஏற்பட்டு இருக்கிற காரணத்தினால் இந்த மன்றமே அதற்கு வேண்டிய முறையிலே, மத்திய சர்க்கார் சலுகை தராவிட்டால், 'டிஸ்ஸட்ருவல்' தெரிவிக்கிறோம் என்ற முறையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற இந்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கிற பிரச்சினை சீனிமட்டும்தான். இது மாதிரி பல பிரச்னைகள் இருப்பதாலே இந்த மன்றம் பொதுவாகவே கூடி ஒரு தீர்மானத்தைப் போட்டால் இப்படிப்பட்ட பிரச்னைகளுக்குத் தீர்வு காண உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சர்க்கரை பிரச்சினையில் அப்படி ஒரு கசப்பான தீர்மானம் தேவையில்லையென்று கருதுகிறேன். இந்த விவாதத்தை வைத்துக்கொண்டே மத்திய அரசு நம்முடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** 1949-ம் ஆண்டு வரையிலே கரும்புக்கு விலை வைப்பதையும் சர்க்கரையினுடைய விநியோகத்தையும் அந்தந்த மாநில அரசாங்கங்கள்தான் வைத்திருந்தார்கள். அதற்குப் பிறகுதான் மத்திய அரசாங்கம் அதை எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அதற்குப் பிறகுதான் இந்த நாட்டிலே சர்க்கரைப் பஞ்சமும் கரும்பு மந்தமும் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் கரும்புக்கு விலை நிர்ணயம் பண்ணுகிற உரிமையையும், சர்க்கரை விலை நிர்ணயம், விநியோகிக்கின்ற உரிமை, இவற்றையும் மாநில அரசுக்குப் பெற்றுத்தர முதலமைச்சர் அவர்கள் வாதாடுவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, அவர்கள் சொல்கின்ற பிரச்சினைகளையெல்லாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். இவைபற்றி வாதாடுகிறோம் என்கின்ற கொள்கை உடையவர்கள் என்றாலும் இப்பொழுது மன்றத்தின் சார்பிலே எந்த கருத்தையும் சொல்வதற்கில்லை.



### அத்தியூர் பகுதியிலுள்ள வனத்துறை நிலங்கள்

***118 வினா—திரு. ந. தருமலிங்கம்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், அத்தியூர் காட்டில் அரசின் கண்காணிப்பில் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது?

(இ) அதில் விவசாயத்திற்கு ஏற்ற நிலம் எவ்வளவு?

(உ) அவைகளை விவசாயிகளுக்கு ஒப்படைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) அத்தியூர் என்ற பெயரில் காடு இல்லை. ஆனால் அவ்வூரருகே கடுவனூர் காடு இருக்கிறது. இதன் பரப்பளவு 1,645.04 ஹெக்டேர்.

(இ) விவசாயத்திற்கேற்றதல்ல.

(உ) வினாவிற்கு இடமில்லை.

### வீடு கட்டும் மரங்கள் வளர்ப்பு

***119 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வீடு கட்டும் மரங்களை வளர்ப்பதற்காக காட்டிலாக்கா ஏதேனும் விசேஷ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் யாது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) வீடுகட்டத் தேவையான மரங்களை வளர்க்கும் திட்டம், திருநெல் வேலி, சேலம், மதுரை, நீலகிரி மாவட்டங்களில் வனத்துறையால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. 1972-73-ல் சுமார் 510 ஹெக்டேர் நிலப்பரப்பில் தேக்கு மரங்கள் பயிரிடப்படும். இதைத் தவிர, ஆண்டுதோறும் 1,000 ஹெக்டேர் நிலத்தில் கிராம நலக் காடுகள் திட்டத்தின்கீழ் கருவை, மருது, வேம்பு முதலிய மரங்கள் பயிரிடப்படுகின்றது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்த எந்த மாவட்டங்களில் நிறைவேற்றப்பட இருக்கிறது, அல்லது நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி, மதுரை, சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம்

*** 120 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் எத்தனை வழித்தடங்கள் உள்ளன ?

(இ) எத்தனை பேருந்துகள் விடப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) 31—10—1972 அன்று உள்ளபடி 167 வழித்தடங்களில் 389 பேருந்துகளை பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் செலுத்துகிறது.

**திரு. பி. எஸ். மணியன் :** மதுரையிலிருந்து 24 கிலோ மீட்டர் தூரத்திற்குத்தான் நகரப் பேருந்துகள் விடுவதற்குச் சட்டம் இருக்கிறது. இப்பொழுது மதுரை மாநகராட்சியாகியிருக்கிறது. சென்னையிலே அது போன்ற சட்டம் இல்லை என்று கருதுகிறேன். அந்த முறையைப் பின்பற்றி 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு நகரப் பேருந்துகள் விட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பொதுவாக நகரப் பேருந்துகளின் எல்லை அமைப்பு நகர எல்லைக்குள் 24 கிலோ மீட்டர் இருக்கவேண்டுமென்றுதான் இருக்கிறது. சென்னைக்கும் அதுதான் பொருந்தும். சென்னை ஒரு பெரிய நகராக இருக்கின்ற காரணத்தினால் வழித் தடங்கள் நகரத்திற்குள்ளேயே முடிந்துவிடுகின்றன. ஆனால் மதுரையிலே அப்படியில்லை, எனவே 24 கிலோ மீட்டர் என்பதே போதுமானதாகும்.

**திரு. த. சோணையா :** தலைவர் அவர்களே, பஸ்கள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு, தனியார் பஸ்கள் சில கிராமங்களுக்குச் செல்கின்ற பஸ்கள் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கிராமங்களுக்கு என்றால் எந்த, எந்த கிராமங்களுக்குப் போகின்றன என்பது அமைச்சர் அவர்களுக்கு எப்படித்தெரியும் ? நீங்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றிக் கேள்வி கேளுங்கள்.

**திரு. த. சோணையா :** குறிப்பாக பழையனூர் என்ற கிராமத்திற்கு என்று இருந்த தனியார் பஸ் நின்றுவிட்டதே, அங்கே பாண்டியன் போக்குவரத்து கழக பஸ் விட அரசாங்கம் முன்வருமா ?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது இப்பொழுதுதான் அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது. பாண்டியன் போக்குவரத்திற்குச் சொந்தமான பஸ்கள் 24 கிலோ மீட்டர் வரையில்தான் விடப்பட்டு இருக்கின்றன. தனியார் எங்கேயாவது பஸ்களை நிறுத்திவிட்டாலும், அல்லது மக்களுக்கு வசதி ஏற்படுகின்ற முறையில் மாற்று பஸ் விடவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டாலும் அரசு பஸ்கள் விட அரசாங்கம் ஆலோசனை செய்யும்.

**திரு. மு. சுருளிவேல் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில், 7, 8 தேதிகளில் வக்ப் கல்லூரி மாணவர்களுக்கும் பாண்டியன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் ஏற்பட்ட அசம்பாவித நிகழ்ச்சியையொட்டி பாண்டியன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அந்த நாட்கள் திருமண நாட்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தொடர்பு இல்லா துணைக் கேள்வி, நான் அனுமதிக்கவில்லை.

**திரு. இ. ஓ. பெரியசாமி :** பஸ்களை எடுத்துக்கொண்டதற்காக நஷ்ட ஈடு கொடுத்த தொகை எவ்வளவு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக்கேள்வியுடன் தொடர்பு இல்லாத துணைக் கேள்வி வேண்டாம்.

**திரு. நா. வெ. குருசாமி :** நகர பேருந்துகள் மதுரையை ஒட்டி 24 கிலோ மீட்டர் தூரத்திற்குத்தான் செல்லும் என்று சொன்னார்கள். முனிசிபாலிடியிலிருந்து 24 கிலோ மீட்டர் தூரத்திற்கு நகரப் பேருந்துகள் செல்லும் என்று கூறினார்கள். அப்படியே பேரூராட்சிகளிலிருந்து 24 கிலோ மீட்டர் தூரத்திற்கு பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ? உசிலம் பட்டியிலிருந்து 24 கிலோ மீட்டர் தூரத்தில்தான் ஆண்டிப்பட்டி இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் உள்ள மக்களுக்கும் அதனால் சௌகரியம் ஏற்படும். எனவே, பேரூராட்சியிலிருந்து 24 கிலோ மீட்டர் தூரத்திற்கு நகர பேருந்துகளைவிட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அந்த முறையில் பேரூராட்சி களுக்கு விஸ்தரிப்பதாக இப்பொழுது உத்தேசம் இல்லை. அப்படிப்பட்ட முறையில் ஏற்கனவே விடப்படுகின்ற பஸ்கள் மூலம் குறைந்த வருவாய் தான் வந்துகொண்டிருக்கிறது. முனிசிபாலிடிக்கு அருகிலுள்ள கிராமங்களிலிருந்து பலர் அன்றாடம் வியாபாரத்திற்காகவும், வேலைக்காகவும் அடிக்கடி வந்து

போகக்கூடியவர்கள் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய வசதிக்காகத் தான் அந்த முறையை நாம் கையாண்டு வருகிறோம். ஆகவே, பேரூராட்சிகளுக்கு அப்படிப்பட்ட முறை ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இலாபத்தில் இயங்குகிறதா? அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா? இலாபம் என்றால் எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அமைத்ததற்குப் பிறகு அது கூடுதலான வருவாயோடு இயங்கி வருகிறது. எவ்வளவு லாபம் என்று இப்பொழுது சொல்வதற்குத் தயாராக இல்லை. செலவு போக ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் மிச்சமாக ஆகும்.

**திரு. மு. சுருளிவேல் :** பாண்டியன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் வேலை நிறுத்தத்திற்கு தனியார் பின்னணியில் இருந்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அப்படி ஒரு கருத்து நிலவிவருகிறது. ஆனால், பொதுவாக பொதுவுடைமைத் திட்டத்திற்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அங்கே இருக்கிற மாணவர்களும் தொழிலாளர்களும் இத்தகைய பிற்போக்குச் சக்திகளின் வலையிலே சிக்கிவிடாமல் இருப்பது அவர்களுடைய தலையாய கடமையாகக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். முத்தையா :** மதுரையிலே பஸ் ஸ்டாண்டிலே பஸ்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதே, அதனால் ஏற்பட்ட சேதம் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக்கேள்வியோடு தொடர்பு இல்லை, உட்காருங்கள்.

**திரு. கே. ஏ. வகாப் :** பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பஸ்கள் அரசாங்கத்தினுடைய ஒர்க்ஷாப்பில் ரிப்பேர் செய்யப்படுகின்றனவா அல்லது தனியாரிடத்தில் டி.வி.எஸ். ஒர்க்ஷாப்பில் ரிப்பேர் செய்யப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, டி.வி.எஸ்.-ல் ரிப்பேர் செய்து, அந்த ரிப்பேர் சார்ஜை கொடுத்துவிடுகிறோம்.

**திரு. என். எஸ். பலராமன் :** டி.வி.எஸ். பஸ்களை பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்துக்கொண்டதற்காக நஷ்டஈடு ஆக எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நாம் நஷ்டஈடாக டி.வி.எஸ்.-க்கு கொடுக்கவேண்டியது 124.5 லட்சம் ஆகும். அதிலே கிராஜியுட்டி என்ற வகையிலே 30 லட்சமும் தொழிலாளர்களுக்கு லீவ் என்ற வகையிலே மூன்று லட்சமும் ஆக முப்பத்திமூன்று லட்சம் போக 91.5 லட்சம் நஷ்டஈடு என்ற வகையிலே கொடுக்கிறோம். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பஸ்களை எடுத்ததற்குப் பின்னால் அவர்கள் சம்பாதித்த தொகையிலிருந்து 20 லட்சம் ரூபாய் நாம் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மதுரையில் மாணவர்—பேருந்துத் தொழிலாளர் மோதலும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள தொழிலாளர் வேலை நிறுத்தமும் குறித்து

MR. DEPUTY SPEAKER: The hon. Member, Thiru K. T. K. Thangamani has given notice under rule 42 of the Assembly Rules to discuss the serious situation arising out of the clash between the students and the bus workers in Madurai and the consequent strike of the workers in 120 buses continuing.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இன்று கேள்வி நேரத்திலே கூட அமைச்சர் அவர்கள், டி.வி.எஸ். பஸ்கள் எடுத்து நடத்துவதன் மூலம் போக்குவரத்து அங்கே சிறப்பாக நடப்பதாகவும், லாபமாக நடக்கிற நிலையில் இருப்பதாகவும் சொன்னார்கள்.

சென்னையிலே மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட நிலைமாதிரியல்ல மதுரையிலே. அங்கே பி.ஆர்.சி. தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. ஒரு பிரச்னை ஏற்பட்டு 24 மணி நேரத்திலே தீர்க்கப்பட்டது. நல்ல முறையில் லாபகரமான முறையில் ஓடக்கூடிய பஸ் தொழிலிலே ஒரு சம்பவம் ஏற்பட்டு அதைத் தீர்ப்பதற்காக மதுரை நகரத்திலே உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் இடையே எந்தவிதமான தகராறும் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி செட்டில்மெண்ட் ஆகியிருக்கிற நேரத்திலே, 355 பஸ்களிலே 120 பஸ்களுடைய தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசி தீர்த்துவைப்பதற்கு கலெக்டர் அவர்கள்

முயற்சி எடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இருந்தாலும் அங்கே நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும் நிலைமை மோசமாக இருக்கிறது. இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறோம். இது மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதால் இந்த அவையை ஒத்திவைத்து விவாதித்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மதுரை மாநகரத்தில் பேருந்து தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்ட தகராறு முற்றிவிடக்கூடிய நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தலையிட்டு உடனடியாக மாணவர் பிரதிநிதிகளையும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி, 8-ஆம் தேதியன்று ஒரு சமரச முடிவை ஏற்படுத்தினார்கள். அந்த சமரச முடிவிற்குப்பிறகு நேற்று, 9-ஆம் தேதி காலையில் 10 மணியளவில் மீண்டும் ஒரு இடத்திலே பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அதற்குப் பிறகும் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகின்ற மானேஜிங் டைரக்டரும், மற்ற அதிகாரிகளும் தலையிட்டு இருவரிடையேயும் ஒரு சமரசத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இன்று மீண்டும் பேருந்துகள் ஓடத் தொடங்கியிருக்கின்றன என்றும், மாரியம்மன்—தெப்பகுளம் சாலையிலும், நாகமலை—புதுக்கோட்டை சாலையிலும் தவிர மற்றச் சாலைகளில் போக்குவரத்து சுமுகமாக நடந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

அரசு இதிலே போதிய அக்கறை செலுத்தவில்லை என்று திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு அதைக்கூடச் சொல்லாவிட்டால் ஒத்திவைத்து விவாதிப்பதற்கு அடிப்படைக் காரணம் இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தினால் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். முதலிலே இப்படியொரு நிகழ்ச்சி நடைபெற்றது என்றவுடனேயே நான் மாவட்ட ஆட்சித் தலைவருடன் பலமுறை தொடர்பு கொண்டேன். போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களும் அதிகாரிகளோடு தொடர்புகொண்டு பேசியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அரசின் சார்பில் எடுத்த நல்ல முயற்சியின் காரணமாகவும், அவர்களுடைய ஏற்பாட்டினால் அங்கே நிறுவப்பட்ட அமைதி பரிபாலிக்கப்படுகின்ற குழுவின் பணியின் காரணமாகவும் அங்கே இப்பொழுது ஒரு சமரசம் ஏற்பட்டிருக்கிறது.



பொதுவாக எந்தக் கொள்கையின் அடிப்படையிலும் இல்லாமலும், எந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற தன்மையும் இல்லாமலும், திடீரென்று ஒரு மாணவருக்கும், ஒரு பஸ் தொழிலாளருக்கும் ஏற்படுகின்ற தகராறுகளின் காரணமாக உடனடியாக மாணவர் சமுதாயத்திற்கும், பஸ் தொழிலாளர்களின் யூனியனுக்கும் மோதல் ஏற்பட்டு விடுவது நல்லதல்ல. அவைகளை வெளியிலேயிருக்கும் யாரும் ஊக்கப்படுத்தாமல் இருக்க வேண்டுமென்று திரு. தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை மையமாக வைத்துக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் செய்திகளைப் பத்திரிகைகளிலே மிகப் பெரிய அளவிலே பிரசுரித்து சிலநேரங்களில் மிகைப்படுத்திவிடுகின்ற காரணத்தால் இந்த நிகழ்ச்சி நடைபெற்ற ஊர் மட்டுமல்லாமல், வேறு ஊர்களிலும் இப்படிப்பட்ட செய்திகள் தூண்டுதலாகி, இரு சாராரிடத்திலும் தகராறுகளுக்குக் காரணமாகிறது. மாணவர்களின் எதிர்காலம், பேருந்து தொழிலாளர்களின் பொறுப்பு மிகுந்த கடமை இவைகளை இருவரும் பார்த்து, இப்படிப்பட்ட காரியங்களில் தனிப்பட்ட இரண்டு பேர்களுக்கு ஏற்படும் மோதலில் உடன்பாடு காண வேண்டுமே தவிர, உடனடியாக பஸ்களைக் கொளுத்துவது, வழித்தடங்களிலே பஸ் ஓடாமல் நிறுத்துவது, மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் கைகலப்பு ஏற்படுவது போன்றவைகள் நடைபெறாமல் அவர்களைப் பார்த்துக் கொள்ளும் வகையில் பொறுப்பு வாய்ந்தவர்கள் இருக்க வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர்களுக்கும் விடுக்கிறேன் என்று கூறி, இந்த அளவில் ஒரு சமரச நிலை அங்கே ஏற்பட்டு வருவதால் பேரவையை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை தலைவரவர்களே, தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

### (ஆ) மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை மருத்துவர்களும் நர்ஸிங் ஆர்டர்லிகளும் செய்துள்ள வேலை நிறுத்தம் குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் பேரவையின் 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது

The strike by the Nursing Orderlies and Doctors in Government Erskine Hospital, Madurai and the conflict between them

resulting in much handicap to the patients who are undergoing treatment in the hospital.'

THE HON. THIRU K. ANBAZHAGAN : It can be taken up tomorrow, Sir.

THIRU R. PONNAPPA NADAR : The Hon. Minister wants that the matter may be taken up on Monday.

We have no objection.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி இந்த ஒற்றி வைப்புத் தீர்மானம் திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப்படும்.

அடுத்து இன்னொரு பிரச்னை வந்திருக்கிறது. 14 ஆம் தேதி அரசாங்க விடுமுறை என்று சொன்னார்கள். ஆகவே 12-ஆம் தேதி பிற்பகல் ஒரு செஷன் வைத்துக் கொள்ளலாமா?

THIRU K. T. K. THANGAMANI : No objection.

THIRU R. PONNAPPA NADAR : On our part, we agree.

MR. DEPUTY SPEAKER : All right. On 12th evening we will have non-official day.

### (3) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

(திரு. நா. வீராசாமி தலைமை)

***திரு. பு. செ. முத்துச்செல்வன் :** தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய மேதகு கவர்னர் பெருமான் அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த உரையை ஒட்டி என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன். கவர்னர் பெருமான் அவர்கள் தன்னுடைய உரையில் நம் விடுதலை இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகவும், கடைசி கவர்னர் ஜெனரலாகவும் விளங்கி வந்து, இந்த உலக அரசியல் அரங்கில் தனக்கென்று ஒரு நிலையான இடத்தைப் பெற்று மறைந்த அந்தப் பெருமகனுக்குத் தன் ஆழ்ந்த துயரத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனையொட்டி என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலே மறைந்த அன்னாருடைய குடும்பத்திற்கு என்னுடைய ஆழ்ந்த துயரத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய நாட்டில் வேளாண்மைத் தொழில் மிகவும் சிறப்புற்ற தொழிலாக இருந்து வருகிறது. அந்த வேளாண்மைத் தொழிலுக்கு இன்றைய





தினம் நம்முடைய அரசாங்கம் பல நல்ல கடன் உதவிகளை அளித்து நில மேம்பாட்டிற்கும், கிணறுகள் தோண்டுவதற்கும் இன்னும் பலவகைகளிலேயும் உதவுகிறது. என்றாலும், அந்த வேளாண்மைத் தொழில், 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்' என்று சொல்வார்களே அப்படி ஓரளவிற்குத் தன்னுடைய வருவாயில் குறைந்துகொண்டிருக்கிற நிலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய அரசாங்க அலுவலர்களுக்கு நாம் ஆண்டு தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை அதிகமாக வழங்கி வருகிறோம், உதவியாகவும், சம்பளமாகவும். அதேபோன்று நகரத்திலே வாழும் தொழில் துறையைச் சேர்ந்தத் தொழிலாளர்களுக்கும் நல்ல வருவாய் ஆண்டாண்டு தோறும் பெருகிக்கொண்டே வருகிறது. நகரத்திலே வாழும் நகர மக்களின் வாழ்க்கைத் தரமும், கிராமப்புறங்களிலே வாழும் ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரமும் மடுவிற்கும், மலைக்கும் இருக்கிறது என்ற அளவில் பெரிய தாரதம்மியமாக இருந்து வருகிறது. மு.ப. 10–03

நம்முடைய நாடு விவசாய நாடாக விளங்குகின்ற காரணத்தினால் "எகனாமிக் இகுவாலிட்டி"— பொருளாதார சமத்துவம் ஏற்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தை நாம் ஏற்றுக்கொள்ளுகின்ற அளவிலேயும், நம்முடைய நாட்டினுடைய விலைவாசிகள் குறையவேண்டும், அத்தியாவசிய பொருட்களின் விலை குறைய வேண்டும் என்கின்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளுகின்ற அளவிலேயும் நம்முடைய பொருளாதாரத்திலே சமத்துவ நிலை உருவாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தமிழக அரசை விரும்பி வேண்டி கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைய பொருளாதாரத் துறை நம்முடைய நாட்டின் வேளாண்மைத் தொழிலை அடிப்படையாக வைத்து வளம்பட்டால்தான் நம் நாட்டுப் பொருளாதாரமும் நல்ல பொருளாதாரமாக வளர முடியும் என்கின்ற அளவில் வேளாண்மைத் தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்து அரசு காரியங்களை ஆற்றவேண்டும்.

பயிர்களுக்கு வறட்சியினாலும், மற்றும் பூச்சிகளினாலும் ஏற்படுகின்ற பாதிப்பை போக்குகின்ற வகையில், விவசாயிகளுக்கு ஒரு காம்பன்சேஷன் கொடுக்க ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்கென்று தனி நிதி ஒன்றை நம்முடைய மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து உருவாக்கி, அந்த நிதியின் மூலமாக விவசாயிகளின் பயிர்கள் பாதிக்கப்படும் பொழுது நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாம் எவ்வளவு தூரம் முயற்சி செய்தாலும், மத்திய அரசு இன்னும் அந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை—கிராப் இன்ஷூரன்ஸ் ஸ்கீமை—கொண்டு வருவதற்கு எந்தவித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதை அறிந்து

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1973 பிப்ரவரி 10

நான் என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறை நல்ல முறையிலே நடப்பதற்கு, விவசாயிகளின் வருவாய் மேலும், மேலும் உயருவதற்கு இந்தக் கிராப் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் மிக மிக அவசியமான ஒரு திட்டமாகும். எனவே, அந்தத் திட்டத்தை நம்முடைய அரசு மேலும் வற்புறுத்தி, இந்தியா பூரா விற்கும் ஒரு சிறந்த திட்டமாக அந்த கிராப் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை கொண்டு வரவேண்டும் என்கின்ற எண்ணத்தை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, அந்த வேளாண்மைத் துறைக்கு உதவிகரமாக இருக்கக் கூடிய மின்சாரத்திற்குத் தட்டுப்பாடு இன்று ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது 40 சதவிகித மின்சாரம் வெட்டப்பட்டு, அதற்கு ஒரு கட்டுப்பாடு வைத்திருந் தாலும், அதிலே ஓரளவு பகல் நேரங்களிலே மின்சார மோட்டார் பம்ப் செட்டு களுக்கு வழங்குகின்ற முறையிலே மின்சாரத்தை சப்ளை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காலையிலே ஒரு பகுதிக்கும், மாலையிலே ஒரு பகுதிக்குமாக பிரித்து அந்த கட்டுப்பாடு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும், அதே நேரத்திலே இரவு 7 மணியிலிருந்து 10 மணி வரையிலும் எல்லா நகரங்களிலேயும் மின் விளக்குகள் எரிகின்ற அளவிற்கு மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சில நேரங்களில் 7 மணியிலிருந்து 10 மணி வரை மின்சாரம் கொடுக்கப்படாமல் ஆங்காங்கே இருக்கின்ற மக்கள் இருளினால் அவதியுருகின்றார்கள். அந்த நிலையை மாற்றி 7 மணியிலிருந்து 10 மணி வரையிலுள்ள நேரங்களில் மின்சாரத்தை தமிழகம் பூராவிலும் உள்ள எல்லா இடங்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வெள்ளத்தின் காரணமாக இன்று நம்முடைய நாட்டிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில் தீவிர மாக வாதாடி நிரம்பத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கிறார். 25 கோடி ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டும், இன்னும் ஒரு 5 சதவிகிதம் கூட அதிலே கொடுத்ததாகத் தெரியவில்லை நம்முடைய மத்திய அரசு. ஏறத்தாழ 5 கோடி ரூபாய் நிதி வழங்கி நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரின் துயரை தணித்திருக்கிறார்.

இன்னும் நம்முடைய நகர்ப்புறங்களிலே இருக்கின்ற குடிசை மாற்று வாரியத் திட்டத்தைக் கிராமப் புறங்களிலேயும் விஸ்தரிக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூடிய விரைவில் ஆங்காங்கே இருக்கிற ஏழை விவசாயிகள்—ஹரிஜன மக்கள் வாழ்கின்ற கிராமங்களிலே இருக்கக்



1973 பிப்ரவரி 10] [திரு. பு. செ. முத்துச்செல்வன்]

கூடியவர்களுக்கு அவர்கள் வசிக்கின்ற கூரை வீட்டை ஓடு போட்ட வீடாகவோ அல்லது ஒழுகாத வீடாகவோ அமைக்கும் நிலைமையில் அவர்களுக்குப் பாதித் தொகையை மானியமாகவும், பாதித் தொகையை கடனாகவும் வழங்கி அவர் களுடைய இருப்பிடத்திற்கு ஒரு பாதுகாப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி செய்து, இந்தத் தமிழகத்திலே எல்லா ஏழை மக்களும் நல்ல குடியிருப்பு வசதியைப் பெற்றிருக்கிறார்கள் என்ற ஒரு நிலை மையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, கவர்னருடைய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களை கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

சமீபத்திலே மறைந்த இராஜாஜி அவர்களுடைய சேவைகளை எல்லாம் பாராட்டி அவருக்கு புகழாரம் செலுத்தும் வகையிலே கவர்னருடைய உரையின் துவக்கத்திலே கூறப்பட்டிருக்கிறது. அவர், மேற்கொண்ட மது விலக்குத் திட்டத்தை இந்த அரசு தீவிரப்படுத்தி இருந்தால் இன்னும் அவருக்கு நல்ல முறையிலே நன்றி செலுத்தியவர்களாக இருந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, குடிதண்ணீர் பிரச்னையைப் பொறுத்தவரையில் எங்களுடைய ஆண்டிப்பட்டிப் பகுதியில் நிலைமை மிகவும் மோசமாக இருந்து கொண்டிருக் கிறது. குறிப்பாக, அந்தப் பகுதியைச் சேர்ந்த புள்ளிமான் கோம்பை, மயிலாடும்பாறை, கண்டமனூர், சுடமலைக்குண்டு போன்ற இடங்களில் குடி தண்ணீருக்கு மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இதை இரண்டு ஆண்டுகளாக நானும் இந்த சட்டமன்றத்திலே இதைப்பற்றி அடிக்கடி சொல்லிக்கொண்டு தான் இருக்கிறேன். ஆனால், ஏனோ எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தானே இதைச் சொல்லுகிறார் என்று கருதி, அங்கே குடிதண்ணீர் கொடுக்கக் கூடிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலை வசதியை எடுத்துக்கொண்டாலும், அங்கே இன்னும் பஸ்களே போகாத பல கிராமங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. புள்ளிமான் கோம்பை ஆண்டிப்பட்டியிலிருந்து 15 மைல்கள் இருக்கும். ஆண்டிப்பட்டிற்கு அங்கிருக்கும் மக்கள் செல்ல வேண்டுமானால் இரண்டு நாட்கள் அந்த மக்கள் நடந்தே வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆண்டிப்பட்டி ஒன்றிய பகுதி. மற்றும் பள்ளிக்கூட வசதியும் அங்கே மோசமான நிலையில் இருந்துகொண்டிருக் கிறது. அங்கே பல இடங்களில் மரத்தடிகளிலேயும், கூரை வேயப்பட்ட இடங்களிலேயும் தான் பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, ஆண்டிப்பட்டி ஒன்றியத்திற்கு பள்ளிக்கூட கட்டிட வசதிக்காக அதிகமான

[திரு. நா. வெ. குருசாமி] [1973 பிப்ரவரி 10

பணம் ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக அந்த ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மஞ்சநாயக்கன் பட்டியில் 1965 ஆம் ஆண்டில் பள்ளிக்கூடம் ஒன்றை கட்ட அரசு ஆணை யிட்டது. அதன்படி பள்ளிக்கூடம் ஒன்று கட்டப்பட்டு, பாதியிலேயே நிற்கிறது. காரணம் அங்கே பல முதலாளிகள் இடைஞ்சல் செய்யக்கூடிய நிலையிலே அந்த கட்டிடம் முற்றுப் பெறாமல் அப்படியே இருந்துகொண்டிருக் கிறது. சபைத் தலைவர் அவர்களுடைய அனுமதியின்படி அதற்கான இந்த போட்டோவைக் கூட இங்கே காண்பிக்க ஆசைப்படுகிறேன். (போட்டோவை பேரவைக்கு காண்பிக்கிறார்.) ஆகவே, அந்தப் பள்ளி பாதியிலே நின்றிருக் கிறது. பல முறை அந்த முதலாளிகள் அதைக் கட்டக் கூடாது என்று ஸ்டே கூட வாங்கினார்கள். ஆனால் அவை எல்லாம் கூட தள்ளப்பட்டு, அந்த இடம் ஊராட்சி மன்றத்திற்கே சொந்தமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இது விஷயத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்தைச் செலுத்தி, அந்த மஞ்சநாயக்கன்பட்டி பள்ளிக்கூடத்தைக் கட்டி முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பண்டப் பொருள்கள் விநியோகத்தைப் பற்றி நான் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் கூட பேசினேன். அங்கே இருக்கின்ற தாசில்தார் *** மற்ற பெர்மிட்தாரர்களிடம் காசு வாங்கிக்கொண்டுதான் காரியங்களைச் செய் வதாக சொல்லுகிறார்கள். அவர் மாத்திரம் சுமார் 3 லட்சம் ரூபாய்வரை சர்க்கரை விநியோகத்திலே வாங்கியிருப்பதாக மக்களால் பேசிக்கொள்ளப்படு கிறது. ஆகவே, இந்த விஷயத்திலே அரசு உடனடியாக கண்காணித்து . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : உறுப்பினர் அவர்கள் மன்றத்தில் இல்லாத தாசில்தார் அவர்களைப் பெயர் சொல்லி அவர் பணம் வாங்கினார் என்று பேசுவது உசிதமில்லை. பொதுவாக குற்றச்சாட்டை சொல்லுங்கள். அப்படி எதாவது அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று விரும்பினால் அதை அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள்.

திரு. நா. வெ. குருசாமி : நான் கேள்வி நேரத்தின் பொழுது திரு. கே. டி. கே. தங்கமணி அப்படி பேசியதை வைத்துத்தான் நானும் பெயர் சொல்லி பேச வேண்டி வந்தது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : திரு. குருசாமி அவர்கள் பேசும் பொழுது குறிப்பிட்ட தாசில்தார் பெயரைச் சொல்லி பணம்

*** மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1973 பிப்ரவரி 10] [மாற்றுத் தலைவர்]

வாங்கினார் என்று பேசியதை சட்ட மன்ற நடவடிக்கை குறிப்புகளிலே இருந்து நீக்கிவிட வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

திரு. நா. வெ. குருசாமி : பெரியகுளம் தொகுதியிலே அம் மாதிரி நடந்து கொண்டிருக்கிறது, அதைத்தான் சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பெரியகுளம் தொகுதியிலே பொதுப்படை யாக நடைபெறுகின்ற அந்த ஊழலைப்பற்றி சொல்ல அவருக்கு தலைவர் அவர்கள் உரிமை கொடுத்தால், அதற்கு மேலே நடவடிக்கை எடுக்கச் சொல்ல அமைச் சருக்கு ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தாசில்தார் பெயரைச் சொல்லுவது நல்லதல்ல. அவர் பொதுப் படையாக பேசலாம். ஆனால், அரசாங்க அதிகாரிகளின் பெயரைச் சொல்லி பேசுவது முறையல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி : ஒரு கேள்வி கேட்கும்போது திரு. கே. டி. கே. அவர்கள் கூட அவர் பெயரைக் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : திரு. கே. டி. கே. அவர்கள் கேள்வி கேட்கும்போது பெயரைச் சொல்லவில்லை. தாசில்தார் என்றுதான் சொன்னார்.

திரு. நா. வெ. குருசாமி : கிராமங்களில் கடை வைத்திருப்பவர்களுக்கு பர்மிட் கொடுப்பதில்லை. 25 மைல் தள்ளி டவுனில் கடை வைத்திருப்பவர் களுக்குத்தான் பர்மிட் கொடுக்கிறார்கள். ஒரே நபருக்கு 30, 40 மூட்டைக்கு மூன்று பேர் பெயரில் பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு நடக்கும் இந்த மாதிரி அநீதிகளை உடனடியாகக் கண்காணிக்க வேண்டும்.

தேனியில் உர மூட்டைகள் கடத்தப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்ட சப்ளை ஆபீசரால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வில்லை. உர மூட்டைகளைப் பதுக்கி, வைத்திருப்பவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின்சாரப் பற்றுக்குறை மிகவும் மோசமான நிலைமையில் இருந்து வருகிறது. கிராமங்களில் விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய மக்கள், தொழில்களை நம்பி இருக்கக்கூடிய மக்கள் பெருத்த இடையூறுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். 1967 தேர்தலின்போது உணவுப் பற்றுக்குறையைக் காட்டித்தான் காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்த்தார்கள். மின்சாரப் பற்றுக்குறை காரணமாக இந்த

அரசும் கவிழ்ப் போகிற நிலைமை ஏற்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழிற்துறையை எடுத்துக்கொண்டாலும் எங்களுடைய பகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, வைகை அணைப் பகுதியில் நைலான் தொழிற்சாலையை தொழிலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலையின்மைப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் எங்களுடைய பகுதியில் படித்தவர்கள் கஷ்டப்படுகிறார்கள். பட்டதாரிகளும், ஆசிரியர்களும் கடந்த ஆறு வருஷ காலமாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்து முடித்து விட்டு வேலையின்றி வீதியில் திரியும் நிலையில் இருக்கிறார்கள். ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய்க்கு ஹோட்டலில் சர்வர் வேலை செய்யும் சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கு சீனியாரிடி அடிப்படையில் வேலை போட்டுக் கொடுக்க கல்வியமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் போடியிலும், திருச்சி கிளைவ் ஹாஸ்டலிலும் மாணவர்களை இந்த அரசின் போலீசார் அடித்து மோசமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைக் குறித்து கவர்னர் உரையில் ஒன்றும் சொல்லப்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது என்று கூறி இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, கவர்னர் பேருரையிலே சில முக்கியமான விஷயங்களை விட்டு விட்டார்கள் என்ற வகையில் உள்ள திருத்தங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

கவர்னர் பேருரையைப் பார்த்தால் ஏதோ மீனம்பாக்கத்தில் இருந்து வருகிற வானிலை அறிக்கை மாதிரி இருக்கிறதே தவிர, தமிழகத்திலிருக்கிற அரசியல் நிலவரங்களைச் சுட்டிக்காட்டுகிற பேருரையாக அமையவில்லை என்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** கவர்னர் உரையை வானிலை அறிக்கை என்று கூறுவது சரியல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அது அந்த உரையைத் தயார் செய்த அரசாங்கத்தைத்தான் குறிக்கும்.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அரசாங்கத்தைப் பற்றி ஏது வேண்டுமானாலும் சொல்லுங்கள். கவர்னர் உரையை வானிலை அறிக்கை என்று கூறுவது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதை அரசாங்கந்தான் தயாரித்துக் கொடுக்கிறது.

That is a policy statement of the Government.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

வானிலை அறிக்கையைப் போல் அரசாங்கம் கவர்னர் உரையைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறது. இதிலே என்ன தவறு? அந்த உரையிலே அரசியல் வானிலை அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வானிலை அறிக்கை என்று சொல்லுவதில் கூடத் தவறு இல்லை. அது ரொம்ப ஆதரைஸ்டு ஸ்டேட்மெண்ட் ஆகும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தமிழகத்தில் இருக்கக்கூடிய பாலிடிகல் வெதரைப்பற்றி அதிலே குறிப்பிடவில்லை. தமிழக அரசு இன்று எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது? சட்டசபை எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது? இதைத் திருத்த அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது என்பதெல்லாம் கவர்னர் உரையிலே இடம் பெற்றிருந்தால் எங்களுக்குச் சற்று அமைதி ஏற்பட்டிருக்கும். நாட்டில் அரசியல் கட்சிகள் எத்தனையோ இரண்டாகப் பிளந்து போவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இப்போது இருக்கிற ஆளும் கட்சி பிளந்தவுடன் என்னென்ன முறையில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டது, என்னென்ன முறையில் தகராறுகள் ஏற்பட்டன, எந்த அளவுக்கு வன்முறைகள் அவிழ்த்து விடப்பட்டன என்பதெல்லாம் பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கதாகும். அக்டோபர் மாதத்தில் மட்டும் ஐந்து முறை துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன. எத்தனையோ தடியடிகள் நடந்திருக்கின்றன. சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அதைப்பற்றியெல்லாம் கவர்னர் உரையில் ஒரு வார்த்தை கூட இடம் பெறவில்லை. ஏதோ ஒன்றுமே நடக்காத மாதிரி சாதாரணமாக வருஷா வருஷம் கொடுப்பது மாதிரி கவர்னர் பேருரையைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றியெல்லாம் சுட்டிக் காட்டினால் ஆந்திராவில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படவில்லையா என்று கேட்கிறார்கள். காலையில் கூட முதல்வர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது ஆந்திரம் ஆத்திரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இங்கே சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது ஆந்திரத்தைச் சுட்டிக் காட்டுவது சரியல்ல. அங்கே

நடந்தது, இங்கேயும் நடக்கிறது என்றால் எப்படி அதை ஏற்றுக்கொள்ள முடியும்? அங்கே நடக்கிறது, இங்கேயும் நடக்கும் என்று சொல்லுவது தமிழகத்திற்குக் களங்கம் ஏற்படுத்துவதாகும்.

குறிப்பாக, சென்ற ஆண்டு என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்தன என்று பார்க்க வேண்டும். எவ்வளவு பஸ்கள் கொளுத்தப்பட்டன? பாளையம் கோட்டையில் புரபசரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று அடித்திருக்கிறார்கள். மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆலங்குடியில் வீட்டுக்கு வீடு புகுந்து மக்களை ஆடுமாடுகள் போல் விரட்டி அடித்திருக்கிறார்கள் திருப்பத்தூரில் 31—1—73 அன்று மாணவர்கள் கூட்டத்திற்குப் போய்த் திரும்பி வரும்போது தாக்கப்பட்டிருக்கிறார்கள். தேவகோட்டையில் கல்லூரிக்குள் முனிசிபல் சேர்மன் ஆட்களோடு சென்று மாணவர்களைத் தாக்குகிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலைமைகள் எல்லாம் நடந்திருந்தும் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருந்தும் இதைப்பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாதவர்கள் போல் ஒன்றுமே நடக்காதது போல் கவர்னர் பேருரையைக் கொடுத்திருப்பது வருந்தத்தக்கது. மக்கள் உண்மையிலேயே பதறிப் போய்க் கிடக்கிறார்கள். எவ்வளவு வழக்குகள், எப்போது பார்த்தாலும் வழக்குகள், அடிதடி, குண்டான்தடி, மாணவர்கள் மத்தியில் அன்ரெஸ்ட் என்ற நிலைமையில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருப்பது உச்ச கட்டத்தில் இருக்கிறது.

அடுத்து, வருங்காலம் எப்படி இருக்குமோ, இருள்மயமாகிவிடுமோ என்று சொல்லக்கூடிய மோசமான நிலைமைக்கு மின்சாரம் போய்க் கொண்டிருக்கிறது. அதற்காக ஏதாவது அவசர நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று கவர்னர் உரையிலே பார்த்தால் அதையும் காணோம். மின்சார வெட்டுதான் வந்து கொண்டிருக்கிறது. There is power cut but there is a lot of political power in the State அரசியல் அதிகாரத்தை அதிகமாகப் பயன்படுத்துகிற சக்திதான் வளர்ந்திருக்கிறதே தவிர, உண்மையிலேயே பொருளாதார வளர்ச்சிக்கு வழி கோலுகிற மின்சக்தி எந்த நிலையில் இருக்கிறது என்று பார்த்தால் பயங்கரமான நிலைமைக்கு அது போய்க் கொண்டிருக்கிறது.

இதைப்பற்றிக் கூறினால், பஞ்சாபைப் பாருங்கள், ஹரியானாவைப் பாருங்கள் என்று கூறுகிறார்கள். தமிழகம் மின்சாரத்தில் என்றைக்கும் வழிகாட்டியாக இருந்திருக்கிறது. 1967-க்குப் பிறகு இந்தத் துறையில் தமிழகம் இப்படி வழி தவறி நிற்கின்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டார்கள். 1967-க்குப் பிறகு மின் உற்பத்தியில் அக்கறை காட்டாமல், நல்லபல திட்டங்களைத் தீட்டாமல் எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைக் குறை கூறிக்கொண்டே



அரசாங்கம் தன்னுடைய பிரச்சினைகளைத் தட்டி கழித்துக் கொண்டே போவதைப் பார்க்கும்போது மக்கள் 'மத்திய அரசாங்கத்தின் மீது குறை சொல்லிக் கொண்டே இருக்க ஒரு மாநில அரசாங்கம் தேவையா?' என்று எண்ணுகின்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எண்ணூரில் தெர்மல் ஸ்டேஷனை அன்று திரு. வெங்கட்டராமன் ஆறே மாதத்தில் கொண்டு வந்தார்கள். ஆறு வருஷமாகியும் இவர்கள் ஒன்றும் கொண்டு வரவில்லை என்று பார்க்கும்போது மக்கள் மாநில அரசு பொறுப்புடன் நடந்துகொள்ளவில்லை என்பதை உணர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

மின்சாரத்தில் 40 சதவிகிதம் கட் பண்ணினால் விவசாயம் என்ன கதியாகும்? தொழில் என்ன கதியாகும்? வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படித் தீர்க்க முடியும்? உற்பத்தி எப்படிப் பெருக முடியும்? இந்த நிலையிலும் தைரியமாக சமயநல்லூர் மின்சார நிலயத்தை 59 லட்சம் ரூபாய்க்கு நாச்சிமுத்துச் செட்டியாருக்கு விற்று விட்டார்கள். இன்றைக்கு அவர் 1½ கோடி ரூபாய்க்கு அதை விற்று லாபம் அடைந்திருக்கிறார். என்னதான் டிப்ரிசியேஷன் எல்லாம் போட்டாலும் இப்படியா விற்பது? 59 லட்சம் ரூபாய்க்கு விற்றதை வைத்துக் கொண்டு இன்று ஒரு கோடி ரூபாய் ஒன்றரைக் கோடி ரூபாய் சம்பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

உங்கள் பதிலில் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? நஷ்டம் வந்து விட்டது ஆகவே விற்றுவிட்டோம் என்று. நஷ்டம் வருவதையெல்லாம் விற்றுவிடலாமா? பஸ் தொழிலில் இதுவரையில் லாபத்தையே பார்க்கவில்லை, எனவே இருக்கிற பஸ்களை எல்லாம் ஸ்க்ராப் வால்யூவிற்கு, பழைய இரும்பு விலைக்குப் போட்டு பேரீச்சம்பழம் வாங்குவது என்பதை மக்கள் ஒப்புக்கொள்வார்களா என்று கேட்கிறேன். என் நஷ்டம் வந்தது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். 14 மெகாவாட்ஸ் என்பதை அதிகப்படியாக உற்பத்தி செய்ய முடியுமா என்று பார்த்து அந்த அனல் மின்நிலயத்தைச் சீர்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் 59 லட்சம் ரூபாய்க்கு விற்றுவிட்டு நாங்கள் பதில் கொடுத்துவிட்டோம் என்று சொல்கிற சூழ்நிலைதான் இருக்கிறது. இது வருந்தத்தக்க காரியமாகும்.

மின் வெட்டைக் குறைக்க ஏதாவது வழியிருக்கிறதா என்றால் உரையில் சொல்லியிருக்கிறார்கள் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டப் போகிறோம், ஆயிரம் மெகாவாட்ஸ் தயாரிக்கப் போகிறோம் என்று. ஆனால் எட்டு ஆண்டுகளாகுமாம். இப்படிப்பட்ட அவசரமான நடவடிக்கை எடுப்பதைப் பார்க்கும்போது உண்மையில் பரிதாபப்படுகிறோம். இந்த நிலையில் இன்னும் சில மாதங்களில் ஏப்ரல் மாதத்தில் இங்கு மின்சாரம் இருக்குமா என்று கேள்வி கேட்கிற அளவில் கூட நிலைமை போய்விடுமோ என்று பயப்பட வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

அடுத்தபடியாக, விலைவாசியேற்றம். அவ்வளவு கடுமையாக ஏறியிருக்கிறது. அதற்கு மிகச் சாமர்த்தியமாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசின் ஃபிஸ்கல் பாலிசிதான் இதற்குக் காரணம் என்று. அன்று நாங்கள் ஆட்சியில் இருந்தபோது நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது இந்தக் காரணத்தை ஏற்றுக்கொண்டீர்களா? அன்று எண்ணெய் விலை ஆறு ரூபாய் என்று விற்றது. அதை எதிர்த்து கலெக்டர் ஆபீஸ் முன் மறியல் செய்தீர்கள். ஆனால் இன்று எண்ணெய் கிலோ ரூபாய் ஏழரை என்று விசைக்கு பத்தரை ரூபாயாகிறது. அதேபோல் பருப்புகள், புளி, மிளகாய் வத்தல், காய்கறி, பச்சைமிளகாய், கொத்தமல்லி, கருவேப்பிலை என்று பெண்கள் போய் வாங்கக் கூட முடியாத நிலையில் விலைகள் ஏறி நடுத்தர மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஊட்டமில்லாத உணவை மக்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா என்று கேட்கிறேன். அழகாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள், நாங்கள் நியாயவிலைக் கடைகளை ஆரம்பித்திருக்கிறோம் அதன் மூலம் பொருள்களைத் தரப்போகிறோம் என்று. அன்று உணவு அமைச்சர் அவர்கள் ஒரு கணக்கு கொடுத்தார்கள். சென்னையில் 541 கடைகள் உள்ளன, ஒரு கடைக்கு 500 கார்டுகள் என்று. நகரத்தில் உள்ள மக்கள் தொகை 25 லட்சம். அதில் குறைந்தது ஐந்து லட்சம் குடும்பங்கள் இருக்கும். ஒரு லட்சம் வசதி படைத்தவர்கள் என்று வைத்துக்கொண்டாலும் நான்கு லட்சம் குடும்பங்கள் வசதியில்லாதவையாகும். ஆக நான்கு லட்சம் குடும்பங்களுக்கு 541 கடைகள் என்றால் 30,000 கார்டுகள் கொடுத்திருக்கிறார்கள். இதைக் கொடுத்துவிட்டு பிரச்னையைச் சமாளித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். சொன்னால் கடைக்காரர்கள் கேட்கிறார்கள், மக்கள் கேட்கவில்லை என்று . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரசாங்கம் வருமான வரம்பை வைத்து கார்டு கொடுத்திருப்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். வருமான வரம்பை வைத்து கார்டு கொடுத்திருப்பது என்பதில் இப்போதுள்ள நிலையில் ஆஃப் டேக் குறைவு என்று ரேஷன் கடைகளில் எவ்வளவு எடுக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறோமோ அந்த அளவிற்குச் சரியாக எடுக்கவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. கடைகளில் போய் கேட்டு அரிசி கிடைக்கவில்லை என்று யாரும் சொல்லவில்லை. தகுதி உள்ளவர்கள் மனுப் போட்டால் நிச்சயமாக கார்டு கொடுப்போம், அரிசி எவ்வளவு வேண்டுமென்றாலும் கொடுப்போம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இன்றைக்கு கார்டு வருமானம் ரூ. 200, ரூ. 300-க்கு குறைவாக உள்ளவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால்,



சென்னையில் மாதம் ரூ. 700 வாங்குபவர்கள் கூட விலைவாசி ஏற்றத்தினால் குடும்பத்தை நடத்தமுடியாமல் திண்டாடுகிறார்கள். எனவே குடும்பக் கார்டுகளை அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் பேசும்போது 600 கடைகள், 500 கார்டுகள் என்று இரண்டையும் பெருக்கி 30,000 என்று சொன்னார்கள். அது சரியான கணக்கா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 500 இன்டு 500 2,50,000 வரும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 2,50,000 வரும். ஆனால் நீங்கள் 30,000 என்று சொல்கிறீர்களே, இப்படி முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கக் கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 500 இன்டு 500, 2,50,000 சரி, இருக்கட்டும். ஆஃப் டேக் குறைவு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏன் குறையாது என்று கேட்கிறேன். தரம் கெட்ட கோதுமை, தரம் கெட்ட அரிசி என்றால் 200 அல்லது 300 ரூபாய்க்கு குறைவாக வருமானம் வருகிறவர்கள் கூட அதை வாங்கிச் சாப்பிடப் பயப்படுகிறார்கள். தரம் இல்லாத பொருள்களை யார் வாங்குவார்கள். ஆகவே இதைச் சீர்ப்படுத்தவேண்டும். ரூ. 1.10-க்கு போடுகிறோம் என்றால் யார் வாங்குகிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரிசியை வாங்கி மக்கள் சாப்பிடுகிறார்கள். அதை வாங்கிச் சாப்பிடுகிறவர்களை எல்லாம் தரம் கெட்டவர்கள், தரம் கெட்டவர்கள் என்று சொல்வது, மக்களை அப்படிச் சொல்வது சரியல்ல. அரிசியைப் பற்றி புகார் செய்யலாம். அரிசி நாற்றம் அடிக்கிறது, கருப்பாக இருக்கிறது அல்லது சிகப்பாக இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் அந்த அரிசியை வாங்கிச் சாப்பிடுகிறவர்களை தரம் கெட்டவர்கள் என்று சொல்வது அதை வாங்கிச் சாப்பிடுகிற அந்த மக்களை கேவலமாகப் பேசுவதாகும். மக்களை அப்படிக் கேவலமாகப் பேசவேண்டாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** திசை திருப்பிப் பேசுவதே உங்கள் பழக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஐந்து நிமிடங்களே உள்ளன.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஐந்து நிமிடங்களுக்குள் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசமுடியாது என்று சொல்ல முடியாது. அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** திசை திருப்பிப் பேசுவதே உங்கள் வழக்கம். மக்களைப் பற்றி நான் குறைவாகச் சொல்லவில்லை. மக்களைக் குறையாக நினைக்கவேண்டாம் என்றுதான் சொல்கிறேன். அவற்றை வாங்குகிற மக்களை நீங்கள் மக்களாகவா மதிக்கிறீர்கள் அப்படியானால் இப்படிப்பட்ட உணவுப் பொருள்களை நீங்கள் வழங்குகிறீர்களா? அங்கு கொடுக்கும் அரிசியைப் பாருங்கள், கோதுமையைப் பாருங்கள். எப்படி ஆஃப் டேக் இருக்கும். மக்களை மக்களாக மதிக்காமல் நீங்கள் இஷ்டப்படி போடுவதை வாங்கிச் சாப்பிடவேண்டுமா . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கோதுமை பற்றி எங்கள் மீது பழி போடுகிறார்கள். அதை மத்திய அரசு கொடுக்கிறார்கள், நாங்களா கொடுக்கிறோம்?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மத்திய சர்க்கார் கொடுத்தால் அதை பார்த்து வாங்கவேண்டும். நல்ல கோதுமையாகப் பார்த்து வாங்க முடியாமல் ஏன் இருக்கிறீர்கள். மட்டமான சரக்கு சிவில் சப்ளைஸ் மூலம் வருகிறது. அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பது வருந்தத்தக்கதாகும்.

கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால் அது ஒழுங்காக இருக்கிறதா என்றால் சூப்பர் மார்க்கட்டிலும் விலைகள் அப்படித்தான் இருக்கின்றன. அதில் சரியான கவனம் செலுத்தி தவறான முறைகளைக் கண்டித்து சீர்படுத்தும் நிலை இருந்தால் பரவாயில்லை. உங்கள் பதிலில் இருந்தே புரிந்துகொள்ளலாம். எவ்வளவு ஸ்டான்டேர்ட்ஸை வைத்திருக்கிறீர்கள். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதம்.

திருவாரூர் கூட்டுறவு வங்கி பற்றி என்ன பேசியிருக்கிறார்கள். எல்லோரும் ராஜிநாமா செய்துவிட்டார்கள், ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டுவிட்டதாம், ஆபீஸர் மீது நடவடிக்கை எடுக்கிறார்களாம். தலைவர் கிட்டவே போகவில்லை. எல்லா கூட்டுறவு வங்கிகளில் உள்ளவர்களும் அப்படி ராஜிநாமா கொடுத்து விட்டால் நாங்கள் இக்கட்டான நிலையில் இருக்கிறோம், ஆபீசர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம் என்றால் கூட்டுறவுத் துறை எப்படி நன்கு இயங்க முடியும் என்று நான் கேட்கிறேன்.

தருமபுரி கூட்டுறவு மத்திய வங்கி பற்றி இதில் கூறியுள்ளார்கள். 10.87 லட்சம் மீளாக் கடன், ரூ. 66.47 லட்சம் ஐயப்பாட்டிற்குரிய கடனுகையும் உள்ளது என்று இதில் சொல்லப்பட்டுள்ளது. யார் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நிலுவைத் தொகைகளை வசூலிக்க



நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த பதில் சரியான பதிலாகாது. தருமபுரி கூட்டுறவு மத்திய வங்கிக்கு ஒரு நியாயம், திருவாரூர் கூட்டுறவு வங்கிக்கு ஒரு நியாயம் என்று இப்படி இஷ்டப்படி உங்கள் நியாயங்கள் இருக்குமானால் நேர்மையான முறையில் கூட்டுறவுத் துறையில் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எந்தப் பதிலை அவர்கள் சரியான பதிலாக எடுத்துக்கொள்கிறார்கள்? க்ளோப் பற்றிக் கொடுத்த பதிலை சரியான பதிலாக எடுத்துக்கொள்கிறார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாங்கள் டெனன்ட்ஸ்க்காக கொண்டு வந்தோம். நாங்கள் சொல்வதை நீங்கள் செய்வதாக இருந்தால் இந்தக் கெட்ட பெயரை வாங்கியிருக்கமாட்டீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் கேட்டுக்கொண்டு கடிதம் எழுதி, மகஜர் கொடுத்து எந்தத் தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றித் தந்தீர்களோ அதுவே ஒரு பெரிய ஊழல் என்று புகார் கூறப்பட்டிருக்கிறது. அதற்குப் பதில் அளித்திருக்கிறோம். அந்தப் பதிலையாவது சரி என்று ஒப்புக்கொள்கிறீர்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நாங்கள் டெனன்ட்ஸ்க்காக கொண்டு வந்தோம் அதை. இன்னும் நாங்கள் டெனன்ட்ஸ்க்காக இருப்போமே தவிர லான்ட் லார்ட்ஸ்க்காக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புகார் கொடுத்தவர்களைக் கேளுங்கள், என்னைக் கேட்காதீர்கள். புகார் கொடுத்தவர்களைக் கேளுங்கள், சரி, நானா புகார் கொடுக்கச் சொன்னேன் நானா புகார் பட்டியலைத் தயாரித்துக் கொடுத்தேன்?

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, புகார் கொடுத்தவர்களை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். எங்களை விட அதிகமாக நெருங்கிப் பழகுகிறார்கள் இந்திரா காங்கிரஸ் காரர்கள், எனவே அவர்களே கேட்டு பதில் சொன்னால் நன்றாகயிருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இவ்வளவு வருடங்களாக நீங்கள் நெருங்கி ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தீர்கள். எங்களைப் பார்த்து இப்போது கேட்கிறீர்கள். ஒன்றாக கைகோர்த்துக் கொண்டிருந்தீர்கள் இதுவரையிலும். கொடுத்திருக்கும் பதில்களை துருவிப் பார்த்தால் எவ்வளவோ குற்றங்களைச் சொல்லமுடியும். இவற்றைப் பதில்களாக ஏற்றுக்கொள்ள முடியுமா?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 பிப்ரவரி 10

ரைஸ், ஆயில் மில்-க்கு ரூ. 1,77,000 சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். கட்டடங்களுக்கு ரூ. 53,200, இயந்திரங்களுக்கு ரூ. 59,250, நடைமுறை மூலதனத்திற்கு ரூ. 64,550 என்றிருக்கிறது. கட்டடங்களுக்கு ரூ. 53,200 கேட்டிருக்கிறார்கள். ஆனால் ரூ. 7,400 பெறுமானமுள்ள கட்டடங்கள்தான் கட்டப்
மு. ப. பட்டிருக்கின்றன. ரூ. 53,200 சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதை
11-00 உடனடியாக சாங்க்ஷன் செய்து எடுத்துக்கொள் என்று தாராளமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதை எடுத்துக்கொள்ள முடியாமல் தவித்திருக்கிறார்கள். இந்த முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பதில் கொடுத்துவிடுவது மாத்திரம் போதாது. நாம் செய்கிற நிர்வாகம் நல்ல முறையில் இருக்க வேண்டும். மக்களுக்கு நன்மை செய்கிற அளவில் நிர்வாகம் இயங்கவேண்டும். நிர்வாகம் நல்ல முறையில் இயங்கினால் தான் அரசாங்கம் செய்யும் நன்மைகள் மக்களுக்குப் போய்ச் சேரும். அதுவும் இல்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி கூற விரும்புகிறேன். விலைவாசி ஏற்றம், சட்டம் ஒழுங்கு சரியாக பாதுகாக்கப்படாத நிலை, பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன, அதைத் திறக்க வழியில்லை. இந்த நிலையில் வேலையில்லாதோரின் வேதனை அதிகரித்துக் கொண்டே போகிறது. எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் 4 லட்சம் பேர் பதிவு செய்தார்கள் என்று சொன்னால், 40,000 பேருக்குத்தான் வேலை கிடைக்கிறது. இருக்கிற தொழிற்சாலைகளிலும் சரிவர வேலை நடைபெற வில்லை You must make them work to full capacity. முழுமையான அளவுக்கு அவை வேலை செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இப்போது தமிழகத்தில் 40 சதவிகிதம் மின்சார வெட்டு வந்திருப்பதால் அது இன்னும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கச் செய்கிற வகையில் இருக்கிறது. எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்தவர்களுக்கு சீனியாரிட்டி பேசிசில் கார்டு அனுப்பப்படுவதில்லை. 7-8 ஆண்டுகளுக்கு முன்னர் பதிவு செய்தவர்களுக்குக் கூட கார்டு வருவது இல்லை. இதற்கெல்லாம் எப்படி வழக்குத் தொடர முடியும். இந்தக் குறையைப் போக்க அரசு வழிவகைகளைக் காண வேண்டும். எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்வது மாத்திரம் தானா, ரிக்ரூட் செய்யும் அதிகாரம் கொடுக்கலாமா, அல்லது அந்த முறையை மாற்றியமைக்கலாமா, அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் தரலாமா என்பதை அரசு யோசிக்க வேண்டும்.

கவர்னர் உரையில் சட்டம் ஒழுங்கு பற்றி ஒன்றும் அதிகம் குறிப்பிடக் காணோம். விலை வாசி உயர்வு குறித்தும் குறிப்பிடக் காணோம். மின்சார வெட்டின் காரணமாக நிலைமைகள் பயங்கரமாக இருந்தாலும் அது குறித்து



1973 பிப்ரவரி 10] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப்பற்றி குறிப்பிடக் காணோம். வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையான நிலையில் இருக்கிறது. இவ்வளவு கஷ்டங்களையும் வைத்துக்கொண்டு, அதைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காணாமல், விசாரணைக் கமிஷன் அமைக்க அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பதற்கான பதிலை தந்து கொண்டிருக்கிறீர்கள்.

தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் திண்டுக்கல் தேர்தலைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் உரைமீது பேசுவதற்கு பதிலாக. இந்த கவர்னர் உரையில் நாட்டில் உள்ள வேதனையான நிலைகளைக் களைவதற்கான முறையில் ஒரு செயல் திட்டத்தையும் குறிப்பிட வில்லை. மத்திய அரசாங்கத்தைக் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். காவேரி-கோதாவரி இணைப்புத் திட்டத்தையாவது ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அதனாலாவது நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் சிறிதளவு குறையும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் கவர்னர் அவர்கள் இந்த அறிக்கையை ஒரு வானிலை அறிக்கை போல் கொடுத்திருக்கிறார்கள்.

வெள்ளத்தால் ஏற்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் உண்மையான நிலையைக் கூற வில்லை. சென்னை நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரிவர பண உதவி கொடுக்க வில்லை. என்னுடைய தொகுதியில் உள்ள மக்களுக்கு அந்த உதவி கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் முதலமைச்சர் அவர்கள் தொகுதியில் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்தப் பணம் கொடுப்பதிலேயே ஒரு பகுதியில் இருக்கும் மக்களுக்கு ரூ. 40, ரூ. 60, ரூ. 80 என்ற வகையில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. முழுமையாக யாருக்கும் ரூ. 80 கொடுக்கப்படவில்லை. இப்படி சென்னை மாநகரத்திலேயே, தமிழ் நாட்டின் தலைநகரத்திலேயே சரிவர இந்தப் பணியைச் செய்ய முடியவில்லை, இவர்கள் எப்படி மற்ற வேலைகளை நியாயமாகச் செய்யப் போகிறார்கள் என்ற கேள்வி மக்கள் மனதில் இருக்கிறது, இவற்றையெல்லாம் புரிந்து கொண்டு இனிமேலாகிலும் இந்த அரசாங்கம் தன்னுடைய தவறுகளைத் திருத்திக்கொண்டு, நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். ஏ. லத்தீப் : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் பெருமான் அவர்களால் நிகழ்த்தப்பட்ட உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் இங்கே கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்திற்கு என்னுடைய ஆதரவினைத் தெரிவித்து ஓரிரு வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 பிப்ரவரி 10

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட நம்முடைய மதிப்பிற்குரிய அம்மையார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் இன்று தமிழ் நாட்டில் ஏற்பட்டு இருக்கின்ற மின்சார தட்டுப்பாட்டை மிக அதிகமாக எடுத்துக் காட்டினார்கள். நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் நேற்றையதினம் பேசும் போது சொன்னார்கள். " The entire Tamil Nadu is plunged into darkness என்று சொன்னார்கள் அது எவ்வளவு தூரம் உண்மை என்பது அவர்களுக்குத் தெரியும். பொதுவாக, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்கிறபோது, அந்தக் குற்றச்சாட்டுகள் குறைகள் எல்லாம் எடுத்துச் சொல்கிறபோது, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் எங்களைப் போன்றவர்கள், தெளிவாகச் சொல்லவேண்டும், உண்மையாகச் சொல்லவேண்டும், இந்த அரசாங்கம் அந்தக் குற்றங்களை, குறைகளை உணர்ந்து அதை நிவாரணம் செலுத்துவதில் கவனம் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் சொல்ல வேண்டுமே தவிர, ஏதோ குற்றச்சாட்டுகள் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்மையார் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள். இங்கே 40 சதவிகிதம் மின்சாரப் பற்றுக்குறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் பத்திரிக்கையில் ஒரு செய்தி பார்த்தேன். உ. பி. மாநிலத்தின் மின்சார போர்டு தலைவர் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். 48 சதவிகிதம் மின்சார வெட்டு அங்கே செய்திருக்கிறார்கள். நான் ஹரியானாவைப் பற்றியோ, பஞ்சாபைப் பற்றியோ குறிப்பிட விரும்பவில்லை. நான் உ.பி.யைக் குறிப்பிடுவதற்குக் காரணம் அங்கே தான் ஜீவ நதிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஜீவ நதி காவேரி தான். அதன் தலைப் பீடம் இங்கே இல்லை. ஆனால் உ.பி. மாநிலத்தில் கங்கை போன்ற நதிகள் ஓடுகின்றன. யமுனை, கோமதி போன்ற ஜீவ நதிகள் ஓடுகின்றன. அப்படிப்பட்ட மாநிலத்தில் 48 சதவிகிதம் மின்சாரக் குறைப்பு ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்ற செய்தி நம்முடைய எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களுக்கு என்னைப் போன்றவர்களுக்குந் தெரியாமல் இருப்பது விந்தையாக இருக்கிறது. இங்கே 40 சதவிகிதம் வெட்டு வந்திருப்பது ஒரு பொருளாதாரக் குறைபாட்டை ஏற்படுத்தலாம். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. The adverse economic effect from power cut should be minimed. அதைத்தான் இந்த அரசுக்கு நான் கூட சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் தமிழ்நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன, அதை எப்படித் தவிர்க்கலாம் என்று சொல்வது முறையாகும். எதிர்க்கட்சிகள் நல்ல அறிவுரைகளையும் கொடுக்கலாம். பொறுப்புணர்ச்சியோடு அவைகளை எடுத்துக் கூறலாம்.



1973 பிப்ரவரி 10]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார். கனம் அங்கத்தினர் அவர்கள் உ.பி. யில் இருக்கும் ஜீவ நதிகளைப்பற்றிச் சொன்னார்கள். நான் ஹைடல் பவர்ஸ பற்றிச் சொல்லவில்லை. என்னூர் அனல் மின் நிலையத் திட்டம் போன்ற திட்டங்களை புல் கபாசிடிக்கு யுடிலைஸ் செய்யவில்லை என்பதைத்தான் சொன்னேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அனல் மின்சார நிலையத்தைப்பற்றிச் சொன்னார்கள். மாநில அரசின் தொடர்புள்ள ஹைடல் ரிசர்வாயர் மூலம் எவ்வளவு பவர் ஜெனரேட் செய்யமுடியுமோ அதைச் செய்திருக்கிறோம். அதிகமான வகையில் அவற்றைப் பயன்படுத்த, அரசு தவறவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால், மத்திய அரசின் அனுமதியோடு செய்யவேண்டிய திட்டங்களை, டெக்னிகல் அட்வைஸ் தேவைப்படுகிற திட்டங்களை ஆராய்கிற நேரத்தில், கேட்கின்ற நேரத்தில், கொடுக்கப்படுகிற நேரத்தில் கொடுக்கப்படவேண்டிய நிலையில் மத்திய அரசு கொடுக்கத் தவறியிருக்கிறது, மதமதப்புக் காட்டியிருக்கிறது. ஆகவே, இந்த நிலை இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாநில அரசைச் சாடவேண்டுமென்பதற்காக, இந்த அரசைத் தாக்க வேண்டுமென்பதற்காக இவற்றைச் சொல்வதை விட்டுவிட்டு, இந்தப் பிரச்னையை ஒரு பொதுப் பிரச்னையாக மனதில் கொண்டு, ஒரு பொருளாதாரப் பிரச்னையாக அணுகி, அதனால் ஏற்படும் விளைவுகளை மனதில் வைத்து, இந்த அரசு மத்திய அரசோடு இதற்காகப் போராடுகிறபோது, வேண்டுகோள்களை வைக்கிறபோது, அதற்கு உறுதுணையாக நின்று, ஆலோசனை கொடுத்து, அதை மத்திய அரசு செய்யத் தவறி விட்டது, அதனால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று குறை சொல்லலாம். உண்மை நிலைமையை மறந்து பேசுவது சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

நான் உ.பி.யைப் பற்றிக் குறிப்பிட்டக் காரணம், அங்கே ஜீவ நதிகள் ஓடுகிறது என்ற காரணத்தினால் மட்டுமல்ல. தமிழ்நாட்டை விட அங்கே பலவிதமான வாய்ப்புகள் இருக்கின்றன என்ற காரணத்தினால்தான். இன்றைக்கு அங்கே சென்று பார்த்தால் தெரியும். மேற்கு வங்காளத்தில் இந்திரா காங்கிரஸ் ஆளுகின்றது. அங்கே சென்று பாருங்கள். குறிப்பாக, வடமேற்கு வங்காளம், மால்டா, பராக்கா, முஷிராபாத், 24-பர்கானஸ், பர்காம்பூர், நாலியா போன்ற இடங்களில் சென்று பார்த்தால் தெரியும். எங்கள் கட்சியின் சார்பாக நான் அங்கேயெல்லாம் சென்றிருக்கிறேன் என்ற காரணத்தால் சொல்கிறேன். பர்காம்பூரிலிருந்து—நாலியா வரையில் மின்விளக்கு கிடையாது. பர்காம்பூரில் மின் விளக்கைப் பார்த்து விட்டால், 70 மைலுக்கு அப்பாலிலுள்ள நாலியா சென்று தான் பிறகு விளக்கைப் பார்க்க முடியும். இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் நமது தமிழ்நாட்டில் மின் துறையில் நல்ல அபிவிருத்தி இருக்கிறது.

நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறோம். வேறு எந்த மாநிலத்திலும் ஏற்படாத வகையிலே இந்த மாநிலத்தில் அந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இன்றைக்கு பவர் கட் ஏற்பட்டிருப்பதனால் பொருளாதாரத்தை பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் பற்றி நாங்களும் ஆழ்ந்த கவலை கொள்கிறோம். எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்களும், அமைச்சர்களும் ஆழ்ந்த கவலை கொள்கிறார்கள். அதைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு கவலைப்பட கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த பவர் கட்டைத் தவிர்க்க உருப்படியான நல்ல ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும். The entire Tamil Nadu is plunged into darkness. இன்றைக்கு கருத்தில் இருளை வைத்துக்கொண்டிருப்பவர்கள், எண்ணத்தில் இருளை வைத்துக்கொண்டிருப்பவர்கள், ஜனநாயக அமைப்பில் இருள்மயமான ஜனநாயகத்தைக் காண விரும்பக் கூடியவர்கள், இருள் மயமான எண்ணங்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள், அந்த வகையில் இருள் மயமான அரசாங்கம் இருக்க வேண்டும், இருள் மயமான அரசின் அடிப்படையில் நாங்கள் இயங்குகிறோம், நாங்கள் இருளை தான் காண்கிறோம், ஒளியைக் காணவில்லை என்று சொல்கிறவர்களை, ஒளியின் பக்கம் அழைப்பதற்கு எனக்கு தகுதியும் இல்லை, சக்தியும் இல்லை. அவர்கள் விரும்பும் இருள் பக்கம் செல்லக்கூடியவர்களை ஒளியின் பக்கம் யாரும் அழைத்துவிட முடியாது என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். கருத்தில் ஒளி இருக்கிறது அல்லது இருட்டு இருக்கிறது என்ற அந்தப் பிரச்னையில் நான் நுழையவில்லை. நான் என்ன சொன்னேன் என்றால், பவர் கட் அரசாங்கத்தின் முழுப் பொறுப்பு. மற்ற விஷயங்களை கவனிக்காமல், பஃபர் கோல் ஸ்டாக் இன்னும் மூன்று மாதங்களுக்கு முன்பே வைத்துக்கொண்டிருந்தால், இந்தப் பவர் கட் ஏற்பட்டிருக்காது. எண்ணூர், பேசின் பிரிட்ஜ் இந்த நிலையங்களை ஃபுல் கபாசிடிக்கு வொர்க் செய்திருக்க முடியும். அப்பொழுதே அதைத்தான் நான்சொன்னேன். பவர் கட்டுக்கு முழுவதும் பொறுப்பு முதல் அமைச்சரும், இந்த அரசாங்கமும் தான். முன்கூட்டியே போதுமான அளவு கோல் பஃபர் ஸ்டாக் வைக்காத காரணத்தினால்தான் இந்த மின்சார வெட்டு நமக்கு ஏற்பட்டது என்று சொன்னேன். அதைத்தான் இப்பொழுது விளக்கினேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இப்பொழுது இருக்கிற இக்கட்டான சூழ்நிலையைப் போதுமான நிலக்கரியை நாம் வைத்திருந்தால் சமாளித்திருக்க முடியும், இதற்கு அரசு தான் பொறுப்பு என்று சொல்கிறார்கள். நிலக்கரி நாம் எவ்வளவு வேண்டுமென்று நினைத்தாலும், அவர்கள் கொடுப்பதாக இல்லை.



நிலக்கரி வாங்குவதற்கு சட்டதிட்டங்கள், ஒழுங்கு முறைகள் தனியாக இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மாதத்திற்கு இவ்வளவு கோட்டா என்று வைத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் ஏற்கனவே 30,000 டன் நாம் வைத்திருந்தோம். உங்கள் எல்லோருக்கும் தெரியும், கடந்த ஒரு மாத காலமாக ஆந்திரா பகுதியில் ரயில் போக்குவரத்து சரிவர இல்லை என்பது. நாள் ஒன்றுக்கு 2,500 டன் நிலக்கரி நமக்கு வந்திருக்கவேண்டும். 30,000 டன் நாம் ஏற்கனவே ஸ்டாக் வைத்திருந்தாலும், வரவேண்டிய நிலக்கரி நமக்கு ஒழுங்காக வந்திருந்தால் இப்படி சிரமம் ஏற்பட்டிருக்காது. 60,000 டன் அல்லது ஒரு லட்சம் டன் கூட வாங்குவதற்கு அனுமதித்தால், நாம் வாங்கி வைத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு டன் நிலக்கரி என்று ஒதுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தியாவிலுள்ள மின்சார வாரியங்களிலே அதிகமாக ஸ்டாக் வைத்திருந்தது, 30,000 டன் வைத்திருந்தது தமிழ் நாட்டில் தான். ஆகவே, தமிழ் நாட்டு அரசாங்கத்தினால்தான் மின்சார வெட்டு வந்தது என்று சொல்வது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான வாதம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஹைடல் பிராஜக்டைப் பொறுத்தவரையில் காட்ச்மெண்டு ஏரியாவில் தண்ணீர் இல்லை என்று தெரிந்தவுடனேயே மூன்று மாதங்களுக்கு முன்பே இந்த நிலைமையை சரிக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அப்பொழுதே சுறுசுறுப்பு காட்டியிருக்கவேண்டும். அப்பொழுதே போதிய சுறுசுறுப்பு காட்டியிருந்தால் மத்திய அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கும். இப்பொழுது சுறுசுறுப்பு காட்டுகிறீர்கள், ஒத்துக் கொள்கிறேன், பாராட்டுகிறேன். உங்களுக்குத் தெரியும், அப்பொழுதே அனல் மின்சார நிலையங்களை ஃபுல் கபாஸிடிக்கு ஓட்டியாகவேண்டும் என்று. On this specific point the full responsibility is on Government.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தண்ணீர் குறைந்துவிட்டதினால் அப்பொழுதே முயற்சி எடுத்திருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். முயற்சி எப்பொழுதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால், நிலக்கரியை அவர்கள் தான் அதிகம் ஒதுக்கவேண்டும். சிங்கரேணியிலிருந்து தென் நாட்டுக்கு நிலக்கரி வரவேண்டிய நிலை இருக்கிறது. வங்காளத்திலிருந்து வருவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. எந்தெந்த மாநிலத்திலுள்ள சுரங்கங்களிலிருந்து எந்தெந்த மாநிலங்களுக்கு நிலக்கரி அனுப்பவேண்டும் என்ற நியதி இருக்கிறது. அவர்கள் ஒரு லட்சம் டன் நமக்குக் கொடுப்பதற்கு அனுமதி தந்தால் நாம் வாங்குவதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால், அவர்கள் ஒரு நாளைக்கு 2,500 டன் தான் நமக்கு அளிக்க முடியும். எதிர்பார்த்தபடி நமக்கு வந்து

சேரவேண்டிய நிலக்கரி வந்து சேரவில்லை. எங்களுடைய முயற்சியில் ஒன்றும் குறைவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது கூட 3,000 டன் இருக்கிறது. மூன்று நாளைக்குத் தேவையான கோல்தான் இருக்கிறது, ஆகவே நெருக்கடி நிலைமை நிலவுகிறது என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. இங்கேயாவது மூன்று நாட்களுக்குத் தேவையான கோல் இருக்கிறது. வேறு சில மாநிலங்களில் ஒரு நாளைக்குத் தேவையான கோல்தான் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. நாஸிக்கில் அரை நாளுக்குத் தேவையான கோல்தான் இருக்கிறது என்று தகவல் கிடைத்திருக்கிறது. 30,000 டன் நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல. வாகன்களில் ஏற்றப்பட்டிருப்பது நமக்கு வந்து சேருவதற்கு வழி இல்லை. ஆந்திராவில் ஏற்பட்டிருக்கிற கிளர்ச்சியின் காரணமாக விசாகப்பட்டணம், சிங்கரேணியிலிருந்து நமக்கு நிலக்கரி வந்துசேருவதில் பல இடையூறுகள் இருக்கின்றன. சுற்றுப் பாதை வழியாகத் தான் சுற்றிச் சுற்றிச் சுற்று வழியிலே தான் வந்து சேரவேண்டியிருக்கிறது. ஆந்திராவில் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும் என்று நாம் 2, 3 மாதங்களுக்கு முன்பு கனவு கூட கண்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை மட்டும் மின்சார வெட்டுக்குக் காரணம் அல்ல. மற்ற மாநிலங்களில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை, விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டம், தொழில் துறையில் ஏற்பட்டிருக்கிற கஷ்டம் இவைகளையெல்லாம் அனுசரித்துத்தான் ஆந்திராவில் ஏற்பட்டிருக்கிற ஒரு பயங்கரமான நிலைமையை உடனடியாக மாற்றுவதற்கு மத்திய அரசு முன்வருமேயானால், இவைகளையெல்லாம் தன்னிறைவு பெறமுடியும். 30,000 டன் நிலக்கரி வாகன்களில் ஏற்றப்பட்டு நின்றுகொண்டிருக்கிறது. அது நமக்காக வைக்கப்பட்டிருக்கிற ஸ்டாக்தான். ஆனால், அது வந்து சேருவதற்கு வழி இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு ஆந்திராவில் உள்ள நிலைமை முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதுபோன்ற காரணத்தை உத்தேசித்து ஆந்திராவில் நடைபெறுகிற நிலைமைகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கு மத்திய அரசு முயலவேண்டும். ஆந்திராவில் உள்ள இந்த நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தால், பொதுவாக இந்தியாவில் ஒரு பரந்த அளவுக்கு நன்மைகளை நாம் செய்ய முடியும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் 30,000 டன் நமக்காக அலாட் ஆகியிருக்கிறது. இன்றைக்கு 1,000 டன் தான் நம்மிடத்திலே இருக்கிற சூழ்நிலையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். ஆகவே, ரயில்கள் இங்கே சரிவர வந்து சேர





முடியாத காரணத்தினால் ஏற்பட்டிருக்கிற இடைஞ்சலே தவிர, வேறு ஒன்றுமில்லை. நமது முயற்சியில் ஒன்றும் குறைவு இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கப்பல் மூலம் கொண்டுவரலாம் என்று சொன்னேனே? அதைக் கூடச் செய்யவில்லையே?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கப்பல் மூலம் வருவது மாத்திரம் பிரச்னை இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கப்பல் மூலம் கொண்டு வருகிற நிலைமையைப் பற்றி, அதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப்பற்றி தொழில் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே விளக்கம் தந்திருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உற்பத்தியை முழுமையாகப் பெருக்குவதற்கான கண்டிஷன் இல்லை. அது முதல் குற்றம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் ஏதோ குற்றம் காட்டுகிறார். பல மாநிலங்களின் சார்பாக வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. என்.டி.ஸி. கூட்டங்களிலும் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு கவனிக்காமல் இருந்துவிட்டது. முழுப் பொறுப்பையும் மத்திய அரசு தான் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 6 மாத காலத்தில் எண்ணூர் தெர்மல் ஸ்டேஷன் ஸ்கீமைக் கொண்டு வந்து விட்டார். 6 வருஷங்கள் ஆகியும் நீங்கள் ஏன் ஒரு ஸ்கீமையும் கொண்டுவர முடியவில்லை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட ஆர். வெங்கடராமன் அவர்கள் இருந்த பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்திருந்த நீங்கள் ஏன் நன்றி மறந்து வேறு காங்கிரஸ் கட்சிக்குப் போனீர்கள்? தேவையில்லையே?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்படிப் பேசி தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கவேண்டாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சிங்கரேணியிலிருந்து நமக்கு நிலக்கரி வருகிறது. அக்டோபரில் 25% வெட்டப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் ஆந்திராவில் தகராறு இருந்ததாகத் தெரியவில்லை. சிங்கரேணியிலிருந்து வரவேண்டிய முழு நிலக்கரியும் நமக்குக் கிடைக்காதபோது வேறு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்க வேண்டாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு கோட்டா என்று ஒதுக்குகிறார்கள். எங்கிருந்து நிலக்கரி வந்தாலும், இந்த மாநிலத்திற்கு இவ்வளவுதான் இந்தத் தேதியில் அனுப்பப்படவேண்டும்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 10

என்கின்ற அளவுக்கு கோட்டா ஒதுக்கிறார்கள். ஆகவே, வேறு மாநிலத்திலிருந்து நமக்கு வருவதற்கு வழியில்லை. அந்த வகையில் இன்று 30,000 டன் கோட்டா நமக்கு ஒதுக்கப்பட்டிருந்தும், 1,000 டன் தான் நாம் பெற முடிந்திருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் என்ன பேசிக்கொண்டிருந்தேன் என்பதையே மறந்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கெனவே மின்சாரம் பற்றி பல முறை இங்கே பேசியாகிவிட்டது. உறுப்பினர் அவர்கள் இவ்வளவு தூரம் இந்தப் பிரச்னையை எடுத்திருக்கவேண்டியதில்லை. மின்சாரப் பிரச்னையைப் பற்றி இவ்வளவுதூரம் தாங்கள் போயிருக்கவேண்டியதில்லை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் சொல்லவேண்டியதை சொல்லித்தான் ஆக வேண்டும். சில விஷயங்களை ஸ்ட்ரெஸ் பண்ணி சொல்லவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் என்னுடைய கடமையைச் செய்கிறேன், 5 நிமிடங்கள் குறுக்கீட்டில் போய்விட்டது. (குறுக்கீடு). மிஞ்சிப்போயிருந்தால் 6 நிமிடங்கள் போயிருக்கும். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இன்னும் எனக்கு 15 நிமிடங்கள் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவ்வளவு நேரம் கொடுக்க முடியாது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இல்லாவிட்டால் நான் பேசவில்லை. முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப்பற்றி கவலையில்லை. பேசவில்லையென்றால் முடியுங்கள். பேரவையிலே எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை உண்டு. தாங்கள் இப்படிச் செய்தால் மற்ற உறுப்பினர்களும் நேரம் ஆனாலும் உட்காராமல் பேசிக்கொண்டே இருப்பார்கள். இன்னும் 7, 8 பேர்கள் பேசவேண்டியிருக்கிறது. அடுத்த பிரச்னைக்குச் செல்லுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் உட்கார்ந்துவிடுகிறேன். நான் பேசுவதை முழுமையாகப் பேசவேண்டும். தலை பாதியும், கால் பாதியும் மட்டும் பேசிப் பிரயோசனம் இல்லை. ஒரு கருத்தை முழுமையாகச் சொல்லவேண்டியிருக்கிறது.



1973 பிப்ரவரி 10]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு பாயிண்டை வைத்தே ஆர்க்யூ பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நெய்வேலியைப் பொறுத்தவரையில் சென்ற மாதம் தண்ணீர் இருந்ததால் முழு கபாசிடி 600 மெகாவாட் உற்பத்தி செய்ய முடியவில்லை. தண்ணீர் நிறைந்துவிட்டதால் சென்றமாதம் 120 மெகாவாட் தான் உற்பத்தி செய்ய முடிந்தது. இப்பொழுது அது 250 மெகாவாட்டாக உயர்ந்திருக்கிறது. தண்ணீரை இறைப்பதற்கு மத்திய அரசு அதற்கான ஒரு இயந்திரத்தை அனுப்பவேண்டும். இது ஒரு முக்கியமான நிரந்தரமான பிரச்னை. ஆனால் அவர்கள் அனுப்பவில்லை. இந்த விஷயத்தில் பல முறை சொல்லியும் மத்திய அரசு வாளா இருந்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறேன். மத்திய அரசு தன்னுடைய கடமையை சரியான முறையில் நிறைவேற்றவில்லை. எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் இதைச் சுட்டிக்காட்டியிருக்கவேண்டும். மாநில அரசை மட்டும் குற்றம் சாட்டி பிரயோசனம் இல்லை. நான் இப்பொழுது அடுத்த பிரச்னைக்குச் செல்கிறேன்.

நம்முடைய அம்மையார் அவர்கள் நேற்றையதினம் பேசும்போது, திண்டுக்கல் தேர்தலிலே ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிப்போம் என்று திரு. பெருமாள் அவர்கள் சொன்னதற்கு, ஒரு லட்சம் வாக்குகளுக்குக் குறைந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார்கள். அப்படி அவர்கள் கேட்டதன்மூலம் அங்கே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். நம்முடைய வெற்றிக்கு அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir.

MR. DEPUTY SPEAKER : What is the point of Order ?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Let me state my point of Order. You can give your ruling then.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் இப்படி அடிக்கடி குறுக்கிடாதீர்கள். அவர் பேசட்டும். (திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார்) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் இப்படி குறுக்கிடுவதாக இருந்தால் நேரம் வீணாகும். அப்போது உங்கள் கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்படும் நேரத்தில் இதைக் கண்டிப்பாகக் குறைத்துவிடுவேன். அதனால் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இந்தப் பிரச்னையை விட்டுவிட்டு, நான் அடுத்தப் பிரச்னைக்கு செல்கிறேன். நேற்று பேசிய நண்பர் திரு. சுப்பு அவர்களும், அதற்கு முன்னால் பேசிய நண்பர் திரு. சுரேந்திரன் அவர்களும் ஒரு முக்கிய மானப் பிரச்னையை இங்கே கிளப்பினார்கள். இந்த அரசைப்பற்றி கேட் பதற்கு மத்திய அரசுக்கு உரிமை இருக்கிறது, இந்த அரசைப் பற்றி விசாரிக்க விசாரணைக் கமிஷன் அமைப்பதற்கும் மத்திய அரசுக்கு உரிமை இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய இந்த கருத்தை இந்த மன்றத்தின் உறுப்பினர் என்ற முறையிலே நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இந்த மன்றத்திலே நாம் உட்கார்ந்திருக்கிறோம் என்று சொன்னால் அது அரசியல் சட்டத்தின் விதிமுறைகளின்படிதான். இந்த அரசு இயங்கிக்கொண்டிருப்பது அரசியல் சட்டத்தின்படிதான். இங்கே பேரவைத் தலைவராகவோ, துணைத் தலைவராகவோ வீற்றிருப்பவர்கள் அரசியல் சட்டத்தின்படிதான். இந்தப் பேரவை இயங்கிக்கொண்டிருப்பது அரசியல் சட்டத்தின்படிதான். ஆக அரசியல் சட்டத்திலே மாநில அரசுகளும், மாநில சட்ட மன்றங்களும் இயங் குவதற்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டத்தின்படி தான் இந்த சட்டமன்றமும், இந்த அரசாங்கமும் இயங்கிக்கொண்டிருக் கின்றன. 'அக்கவுண்டபிலிட்டி அண்ட் ஆன்ஸரபிலிட்டி' என்ற இரண்டு கடமைகளுக்கும் இந்த அரசும், இந்த மன்றமும் தான் பொறுப்பு. மற்றவர்கள் யாருக்கும் இதைப்பற்றி கேட்க உரிமையில்லை; கடமையும் இல்லை. மத்திய அரசாங்கமும் அரசியல் சட்டத்தின்படிதான் இயங்கிவருகிறது. அதனால் பாராளுமன்றத்திற்கு அதைப்பற்றி கேட்க உரிமை இருக்கிறது; அதற்கு பதில் சொல்ல மத்திய அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. அதைப்போன்று தான் மாநில அரசாங்கமும். இந்த முறையிலே மற்றவர்கள் தலையிட உரிமை இல்லை. அந்தந்த மன்றத்தின் உறுப்பினர்கள் அந்தந்த மன்றத்திலே கேட்கலாம். அரசாங்கம் தவறான வழியில் செல்கிறதா இல்லையா என்று எடுத்துச் சொல்லலாம். குறை கூறலாம். கேள்வி கேட்கலாம். அதற்கு அந் தந்த மாநில அரசாங்கம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் வெளியார் யாரும் இதிலே தலையிடலாமா என்றால் நிச்சயமாகச் சொல்கிறேன், அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு தலையிட உரிமை இல்லை.

ஆகவே, நமது அரசியல் சட்டப்படி மத்திய அரசாங்கத்திற்கு தமிழ்நாட்டு அரசை விசாரிக்க, விசாரணை கமிஷன் அமைக்க உரிமை கிடையாது என் பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை மீறி மத்திய அரசாங்கமோ பாராளுமன்றமோ மாநில அரசின் விவகாரத்தில் தலையிடு மானால் அது ஜனநாயகத்திற்கு விரோதமான செய்கை; இந்த மன்றம் அதை மிகக் கடுமையாக எதிர்க்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



மாநில அரசு குற்றம் செய்கிறது என்று சொல்லி மத்திய அரசு விசாரணைக் கமிஷன் வைத்தால், இதே குற்றத்தை மத்திய அரசு செய்தால் யார் கேட்பது என்று நம்முடைய நண்பர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். விசாரணைக் கமிஷன் வைப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக் கிறதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டியது சட்ட நிபுணர்கள் பொறுப்பு; அவர்கள் அதைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசியல் சட்டத்திலே இடம் இருக்கிறதா இல்லையா என்று இந்த மன்றத்திலே விவாதிப்பது சரியா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஆகும். இந்தப் பேரவையில் ஒரு உறுப்பினர் அவருடைய கருத்தைச் சொல்கிறார்.

**திரு. எம். சுரேந்திரன்:** துணைத் தலைவரவர்களே, என்னுடைய பெயரை யும் கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதால் என்னுடைய விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசும்போது அதற்கு விளக்கம் சொல்லுங்கள். இப்போது வேண்டாம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** அவர்கள் பேசும்போது, திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்பினார்கள். இந்தப் பேரவை யைப் பற்றி தாக்கிப் பேசினாலோ, அல்லது உறுப்பினர்களைப் பற்றி தவறாகப் பேசினாலோ உறுப்பினர்கள் குறுக்கிடலாம். அதில் தவறில்லை. ஆனால் ஓர் உறுப்பினர் பொதுவாக தனது கருத்துக்களை வெளியிடும்போது யாரும் குறுக் கிடக்கூடாது. ஆகவே அம்மையார் அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. திரு. லத்தீப் சொல்வது சரிதான்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** சட்ட மன்றம் என்று சொல்லும்போது அது சட்டம் இயற்றும் மன்றமாக இருக்கிறது. ஆகவே, இங்கே நடக்கக்கூடிய நிகழ்ச்சி கள் எல்லாம், இங்கே நடைபெறும் விவாதங்கள் எல்லாம் சட்டம் இயற்று வதற்கு அளிக்கப்படும் ஆலோசனைகளாக இருக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்தை மதிக்க வேண்டும்; சட்டமன்றத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும். ஆனால் ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு, நான் சட்டமன்றத்தை மதிக்க மாட்டேன்; எனக்கு நம்பிக்கை இல்லை என்றெல்லாம் வெளியிலே சொல்வது இந்த மன்றத்தை அவமதிப்ப தாகும். இன்றைக்கு இப்படி ஒரு கட்சியினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசு சரியாக நடக்கவில்லை; மக்களை மதிக்கவில்லை; எங்களுக்கு அநீதி இழைக்கிறது; அதனால் நாங்கள் சட்டமன்றத்திற்கு போகமாட்டேன்; மத்திய அரசாங்கம் உடனடியாக விசாரணைக் கமிஷன் போட வேண்டும் என்றெல்லாம் சொல்லித் திரிகிறார்கள். இப்படிச் சொல்வது ஜனநாயகத்தையே அவமதிப்பதாகும்; அது அவமதிக்க முடியாத ஒன்று; எனவே அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆட்சி மீதோ அல்லது இந்த மன்றத்தின் மீதோ குறை சொல்லவேண்டுமென்றால், இந்த மன்றத்திலேயே அதைச் சொல்லலாம். அதுதான் மரபு. அதைவிட்டுவிட்டு, சட்டமன்றத்தை மதிக்க மாட்டோம், நம்பிக்கை இல்லை என்று எங்கெங்கேயோ நின்றுகொண்டு சொல்வது இந்த மன்றத்தை உதாசீனப்படுத்துவதாகும். அதற்கு இந்த மன்றம் இடமளிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும், உறுப்பினர் என்ற முறையில் இந்த மன்றத்தில் தெரிவிக்கலாம். அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. பதில் சொல்ல அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பற்றிக் குறை கூறிக்கொண்டிருக்கும் உறுப்பினர்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். பாராளுமன்றத்திலே ஒரு முறை ஆசியாவின் ஜோதி, பண்டித மோதிலால் நேரு அவர்களின் குமாரன், ஜனநாயகவாதி நேரு அவர்களுக்கு விரோதமாக ஒரு குற்றச்சாட்டுச் சொல்லப்பட்டது. அது எப்பேர்பட்டக் குற்றச்சாட்டு என்பதை தெரிவிக்கிறேன். அதில் கூறப்பட்டதாவது—

Under the concept of the joint responsibility of the Cabinet, in the cabinet headed by the great Mr. Jawaharlal Nehru, various misappropriations and swindling charges have been levelled against the Defence Minister Mr. V. K. Krishna Menon in the matter of purchase of jeeps and that in such purchase of jeeps the Defence Minister has swindled crores of rupees. Under the concept of joint responsibility of the Cabinet, I hereby call upon Shri Pandit Jawaharlal Nehru, the Demagogue, the great patriot of this country, the apostle of peace in the country, the man who had been responsible for the democratic success of this country, I call upon such great Pandit Jawaharlal Nehru to resign gracefully since under the concept of joint responsibility of the Cabinet, the Cabinet is responsible for the misdeeds of Mr. V. K. Krishna Menon, the member of Pandit Jawaharlal Nehru's Cabinet. Since that member has committed grave mistakes of misappropriation and abuse of power vested in him, the Cabinet



must resign. Not only Mr. V. K. Krishna Menon. Even against Mr. T. T. Krishnamachari, some charges were levelled. Those may be past history.

Take the present history. The great heroine, the great leader of the Indian Nation, one who is responsible for safeguarding the integrity and solidarity of the nation and who is called throughout the world as such and Mrs. Indira Gandhi, the Prime Minister of India, against such a lady against that Prime Minister of India, charges had been levelled on the floor of Parliament that she has exercised her power and procured financial accommodation to the extent of some crores of rupees for her son Mr. Sanjay Gandhi for his company to manufacture 'Maruthi', the small car. That charge has been levelled against the Prime Minister of India. What happened? What happened then in Parliament? Did the Government resign? What was the hon. Member, the great leader of Tamil Nadu Communist Party, Mr. M. Kalyanasundaram doing at that time? What happened at that time and what were these persons doing.........

(Thirumathi T. N. Anandanayaki and Thiru N. Marudhachalam rose).

**மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் :** ஒரே நேரத்தில் இப்படி இரண்டு பேர், மூன்று பேர் என்று பேசத் தொடங்கினால் எப்படிக் கேட்க முடியும்? ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, this Maruthi issue was raised on the floor of the House and the reply was given
to the Members of the Parliament there. Therefore, there is no மு. ப.
meaning in referring to that in this House. It ought to be done 11–30
on the floor of the Parliament.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** ஹரியானா முதல்வர் பன்சிலால் பெயரில் தான் அப்படி குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் திருமதி இந்திராகாந்தி மீது குற்றம் சாட்டி பார்லிமெண்ட்டிலே வந்ததாகச் சொல்லுவது சரியில்லை.

**திரு. மு. கருணிவேல் :** மாருதி கம்பெனி விவகாரத்திலே தன்னுடைய பதவியை திருமதி இந்திரா காந்தி துஷ்பிரயோகம் செய்தார் என்று ஜோதி பாசு அவர்கள் பார்லிமெண்ட்டிலே குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். எனவே, பன்சிலாலல் மேல் மாத்திரமில்லாமல் திருமதி இந்திராகாந்தி மீதும் குற்றச்சாட்டு கூறப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டை எஸ். எம். பானர்ஜி அவர்கள் ஆதரித்தும் இருக்கிறார்கள்.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* உறுப்பினர் அவர்களை பார்லிமெண்ட் நடவடிக்கைகளை பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உறுப்பினர் திரு. சுருளிவேல் அவர்கள் சொன்ன மாதிரி எஸ். எம். பானர்ஜி மட்டுமில்லை, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அது பற்றி பாராளுமன்றத்திலே ஆதரித்து பேசி இருக்கிறார்கள்.

THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, there should be a limit. . . . . . .

*திருமதி டி. என். அனந்தநாயகி:* என்ன அப்படி பேசப்படுகிறது. அவர்கள் 300 ஏக்கர் நிலத்தை 11,000 ரூபாய்க்கு ஒரு தொழிற்சாலைக்காக வாங்கிக் கொடுத்தார் என்று தான் பேசப்பட்டிருக்கிறது. நாட்டிலே தொழில் வளரவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்திலேதான் அதை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இன்று இவர்கள் கூடத்தான் தூத்துக்குடி பெர்ட்டிலைசர் பாக்டரிக்கு இவ்வளவு ஏக்கரா நிலம் என்று ஆர்ஜிதம் செய்து வாங்கி கொடுத்திருக்கிறார்கள். அதே போல் தமிழ்நாட்டிலே அலுமினியம் கம்பெனிக்கும் இவ்வளவு ஏக்கரா நிலம் என்று ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்கிறார்கள். எனவே, இதிலே என்ன பெரிய தவறை கண்டுபிடித்துவிட்டீர்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை.

THIRU M. A. LATHEEF: Sir, my point is that even though this is not the proper forum where I should raise the question, it has been consistently and repeatedly raised by some hon. Members here also. I, as a Member of this House, want to safeguard the fair name of Tamil Nadu. My point is that such a charge is levelled against the very Prime Minister of India who is now being asked to appoint an Enquiry Commission against the reputed Government of Tamil Nadu. If the Central Government think in terms of appointing any Enquiry Commission, this House would also demand and as a Member of this House, I would demand that an Enquiry Commission should be appointed against the Government headed by the Hon. Mrs. Indira Gandhi. That is my demand on the floor of the House. As a member of the House I am echoing the voice and feelings of not only the House but also the people of Tamil Nadu, the entire Tamil community of the State. I am not blaming Mrs. Indira Gandhi, the great daughter of a great demagogue, the late Shri Jawaharlal Nehru. But certain persons in Tamil Nadu, the Central Ministers belonging to Tamil Nadu want to fish in trouble waters. If they want



to disturb the peaceful atmosphere of the State and if they want to create any trouble here, we will see that such Ministers are brought to their senses. That is my submission.........

DR. H. V. HANDE: I would like to know from the hon. Member, that in case the Prime Minister is not willing to appoint an Enquiry Commission, what prevents the Hon. Chief Minister from appointing an Enquiry Commission by himself......

MR. DEPUTY SPEAKER: This is not a proper occasion to put a question to the Hon. Chief Minister. Let the hon. Member Thiru Latheef proceed.

THIRU M. A. LATHEEF: Sir, day before yesterday I dwelt upon this point. What I submit is that we are not here to barter away the supreme right of this august body. This body is entitled to censure Ministers and that is the prerogative of this House which cannot be given to any other body including the body that may be constituted by this Government. We will not agree to it and we will see that we are a responsible body. Of course, hon. Members of this House are entitled to level charges against the Ministers in the same way as the hon. Members of the Parliament are entitled to level charges against the Government headed by Mrs. Indra Gandhi. So, this House alone is competent to censure Ministers and not any other body. I say this not because I expect anything from the Hon. Ministers and not because we are allied to the D.M.K. but I say this because I want that the fair name of Tamil Nadu should not be brought into disrepute. That is my submission.

I want to mention another point with regard to the financial allocation between the Centre and the State Government. My point is that the present system of the financial allocation is not happy and it should be revised basically and that is my submission. Even the other day, Thiru N. A. Palkhiwala, a great lawyer of India has stated that even under the present Constitution, we have got every right to carry on the affairs of the Government in such a manner as to fulfil the economic aspirations of a State. So, I demand a revision of policy with regard to financial allocation. The Hon. Chief Minister also has done his duty by pressing the demand before the Finance Commission.

With regard to the industrial policy, I warn the Government of India that if they do not revise their industrial policy and give more powers to the State, the whole country will be in utter poverty and penury and there will be all round unemployment, spiralling of prices and all sorts of economic complications and the Central Government will be responsible for that. So, they should make the State viable and economically sustained and stable.

Lastly, I want to draw the attention of the Hon. Chief Minister to a very important matter. For the last two years we have been echoing the voice of our community. The Urdu speaking Muslims are very few in number and they are not even lakhs. But in spite of the repeated requests of the Members belonging to my community, the reasonable request of the community is being relegated to the background. I submit to the Hon. Chief Minister, that even from the financial point of view it would not be a great burden as they are only few in number. My request is that the Government should declare them as backward so that they may get the benefit of all the concessions and privileges from the Government. They are the most backward community in the State and the Hon. Chief Minister on a previous occasion promised to consider it favourably and I hope and trust that he will fulfill it and include it in the list of backward classes.

With regard to Rajaji, I endorse whatever has been said about him. Rajaji was so intimately connected with me since 1954 and he was more intimately connected with me than Dr. Hande. Rajaji was something like a father. He was also something like a teacher. His demise is not only a great loss to the country but it is also a personal loss to me. I associate myself with the sentiments expressed about the demise of Rajaji.

Thank you very much.

Thiru M. Surendran rose .........

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நீங்கள் திரும்பவும் ஒரு விவாதத்தை எடுத்துக்கொண்டு விடாதீர்கள்.*

*திரு. எம். சுரேந்திரன்: திரு. லத்தீப் அவர்கள், பிரதம மந்திரியாக இருக்கக்கூடிய இந்திராகாந்தி பற்றி மிரட்டுகின்ற வகையில் பேசியது, தி.மு. கழகக் குரலாக எடுத்துக்கொள்ளவில்லை. நான் சொல்லுவதெல்லாம், இந்த அரசின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று யாரும் கோரிக்கை*





*விடவில்லை. மாநில அமைச்சர்கள் சிலர் மீதுதான் விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. சில அமைச்சர்கள் மீது கூட நடவடிக்கை எடுக்கக்கூட மத்திய அமைச்சகத்திற்கு அதிகாரம் இல்லை என்று லத்தீப் அவர்கள் கருதுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

THIRU M. A. LATHEEF: I was very clear in my statement. If any single Minister is singled out and charged by any member of the public or if the entire Government is charged with certain allegations, in all circumstances, my submission is that under the Constitution this House alone is competent to deal with the situation and censure the Minister or Ministers. No other body, no one outside this legislature, is entitled to go into the charges or to sit in judgment over the activities of any single Minister or Ministry of this State. The Central Government cannot arbiter in this matter. That is my submission. I was very clear on this.

DR. H. V. HANDE: I think it is a wrong thing. We have passed the Commission of Enquiry Act. Under that, an Enquiry Commission can be appointed to enquire into the charges against any Minister or Ministry. To say that this House alone is competent to enquire and that no other body can enquire, is wrong. That means that the majority alone prevails and with a majority here, you can do anything. That is entirely wrong. If a mistake is there, you can with your majority pass a resolution that there is nothing wrong. Does the matter end there? Surely not. It is incorrect to say that the Centre cannot appoint an enquiry commission. It can do so under the Commission of Enquiry Act. Either Central or State Government can appoint an Enquiry Commission to go into the charges openly levelled upon State Minister or State Ministry. That is my contention.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: கான்ஸ்டிட்யூஷனில் இருப்பதாக ஒரு வார்த்தை சொல்லிவிட்டார்கள். தனியாக பார்லிமெண்டு இயற்றிய ஒரு சட்டம்தான் இருக்கிறது.*

DR. H. V. HANDE: Under the Constitution, there is the Commission of Enquiry Act we have enacted.

THE HON. THIRU S. MADHAVAN: No Bill is under the Constitution. You can say that no Bill can be *ultra vires* of the Constitution.

எந்தச் சட்டமும் அரசியலமைப்பின்கீழ் வருவதில்லை. ஆனால் நாம் போடுகிற எந்தச் சட்டமும் அரசியல் அமைப்பை மீறியதாக இருக்கக் கூடாது, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு கூட்டாட்சித் தத்துவத்தைக் கொண்ட சட்டம். பாராளுமன்றத்தைப்போல மாநில சட்ட மன்றங்களும் பொறுப்பு வாய்ந்த சபைகள். மத்திய அமைச்சர்களும், பிரதம அமைச்சர் அவர்களும் எப்படி பாராளுமன்றத்திற்குத்தான் கட்டுப்பட்டவர்களோ அதுபோல, மாநில முதல் அமைச்சரும், மற்ற அமைச்சர்களும் மாநில சட்டமன்றங்களுக் குத்தான் கட்டுப்பட்டவர்கள். இவர்களை மேலே இருந்து யாரும் கேட்க முடியாது என்பது எங்கள் வாதம். இதை நீங்கள் ஒத்துக்கொள்ளலாம். ஒத்துக்கொள்ளாமலும் இருக்கலாம். யூனிடரி அரசியல் அமைப்பாக நம்முடைய அரசியல் அமைப்பு இருந்தால்தான் நீங்கள் சொல்கிற அதிகாரம் டெல்லியில் இருக்கிறவர்களுக்கு வருகிறது. Constitutionally we have raised the point.

DR. H. V. HANDE : Does this Commission of Enquiry Act become inoperable then? Federal structure is only in theory.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி மாநில அரசைப்பற்றி விசாரிக்க மத்திய அரசுக்கு முடியும் என்றால் மத்திய அமைச்சரவையைப்பற்றி இந்திய பிரதமரைப்பற்றியே விசாரிக்க யாருக்கு அதிகாரம் இருக்கிறது? இந்தியப் பிரதமரை, மத்திய அமைச்சர்களை மேலே இருந்து யாரும் கட்டுப்படுத்த முடியாது. பாராளுமன்றம் தான் கட்டுப்படுத்த முடியும் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளலாம். அந்த வாதம் தான் சட்டமன்றத்திற்கும் பொருந்தும். மாநில அமைச்சர்கள் மாநில சட்ட மன்றத்திற்குத்தான் கட்டுப்பட்டவர்கள் என்பதை நாங்கள் வற்புறுத்துகிறோம். இப்படி அரசியல் அமைப்பைப்பற்றி வாதிக்கிறவர்கள் இந்த இரண்டுவித கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு கருத்துக்களும் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.

DR. H. V. HANDE : Can you point out any such clause in the Constitution ? How can you say that Commission of Enquiry Act is inoperable?

செல்லுபடியாகாது என்கிற நிலையில் சட்டம் சட்டபுத்தகத்தில் ஏன் இருக் கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசியல் அமைப்பிலேயே ஸ்டேட் லிஸ்ட், சென்டர் லிஸ்டு, கன்கரன்ட் லிஸ்டு என்று தனியாக இருக்கிறது. 1952 லே ஸ்டேட் லிஸ்ட் சம்பந்தப்பட்டவற்றிலும் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள். பெடரல் சட்டப்படி இது செல்லாது என்பது எங்கள் அபிப்பிராயம்.





**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பெடரல் அமைப்புப்படி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற கமிஷன் ஆப் என்குவயரி ஆக்டில் மாநில அமைச் சரவையைப்பற்றி விசாரிக்கக்கூடாது என்று க்ளாஸ் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது மத்திய அரசாங்கச் சட்டம் இருக்கிறது. அரசியல் அமைப்புப்படி கூட்டாட்சித் தத்துவத்தை ஒப்புக் கொண்டால் ஸ்டேட் லிஸ்டைப் பொறுத்தும் மத்திய அரசுக்குத் தலையிட உரிமை இருக்கிறது என்பது ஒப்புக்கொள்ள முடியாததாகும். ஆகவே அந்தச் சட்டமே செல்லாது என்பது எங்கள் வாதம்.

**திரு. எம். சுரேந்திரன் :** வாதம் என்பது (மணி அடிக்கப்பட்டது) வியாக் யானம் என்பது அவர்களுடைய கருத்தைப் பொறுத்தது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் உட்கார்ந்துகொள்ள வேண்டும். நான் ஏன் மணி அடித்துக் கொண்டிருக்கிறேன்? ஏதாவது பூஜை நடக்கிறது என்று நினைத்துக்கொண் டிருக்கிறீர்களா? . . (சிரிப்பு)

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாநில அமைச்சரவைபற்றி கமிஷன் ஆப் என்குவயரி ஆக்ட் படி விசாரிக்க மத்திய அரசுக்கு ஒரு கமிஷன் நியமிக்க அதிகாரம் இல்லை என்றால்—பஞ்சாப் முதலமைச்சர் கெய்ரானைப்பற்றியும், பீகார் சகாயைப்பற்றியும், ஒரிசா பிஜு பட்நாயக்பற்றியும் விசாரிக்க மத்திய அரசாங்கம் கமிஷன் போட்டார்களே, அது தவறு?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்கு நமது முதல் அமைச்சர் அவர் களே சரியான பதிலை அளித்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் உரிமையை வற்புறுத்தத் தவறிவிட்டார்கள் என்பதனால் நாங்களும் எங்கள் உரிமையை விட்டுவிடத் தயாராயில்லை என்று சொல்லிவிட்டார்கள். கூட்டாட் சித்தத்துவத்தை ஒப்புக்கொள்கிற கம்யூனிஸ்டுக் கட்சியாக இருந்தாலும், சுதந்திராக் கட்சியாக இருந்தாலும்—மத்திய அமைச்சரவையை, இந்தியப் பிரதமரைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் பாராளுமன்றத்திற்குத்தான் இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டால்—அந்தப் பாராளுமன்றத்திற்கு இருக்கிற உரிமையைப்போலத்தான் மாநில சட்டமன்றங்களுக்கும் மாநில அமைச்சரவையைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் இருக்கிறது. மாநில் சட்ட மன்றம் என்பது முனிசிபாலிட்டிபோன்றது அல்ல. மாநில அமைச்சரவையைக் கட்டுப்படுத்த மாநில சட்டமன்றத்திற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர நமக்குமேலே டெல்லியில் இருந்து யாரும் கட்டுப்படுத்த முடியாது. இந்த உரிமை இருக்கக்கூடாது, முனிசிபாலிட்டிகளைக் கட்டுப்படுத்துவதுபோல் மாநில அமைச்சரவையைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் டெல்லியிடத்தான் இருக்கிறது என்கிறீர்களா?

*திரு. கே. டி. கே. தங்கமணி:* அது கொள்கைப் பிரச்சினை. இந்திய நாடு ஒன்று. இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததுமே The Constitution is for the whole country". மத்தியில் கட்டுப்பாடான, ஒரு வலுவான மத்திய அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

*திருமதி. த. ந. அனந்தநாயகி:* கூட்டாட்சித் தத்துவத்தைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். கமிஷன் ஆப் என்குவயரி ஆக்ட் படி—அரசியல் அமைப்பில் ஸ்டேட் லிஸ்ட் இருக்கிறது, சென்ட்ரல் லிஸ்டு இருக்கிறது, கன்கரன்ட் லிஸ்டு என்று இருக்கிறது என்றாலும் மாநில அமைச்சரவைப் பற்றிச் சாட்டப்படுகிற குற்றங்களை விசாரிக்க மத்திய அரசாங்கமோ, மாநில அரசாங்கமோ விசாரணைக் கமிஷனைப் போடலாம். மத்திய அரசாங்கம் ஒரு விசாரணைக் கமிஷனைப் போட்டுவிட்டது என்றால் மாநில அரசாங்கம் இன்னொரு கமிஷனைப் போட முடியாது. அதுபோல முந்திக்கொண்டு மாநில அரசாங்கமே ஒரு என்குவயரி கமிஷனைப் போட்டுவிட்டது என்றால் மத்திய அரசாங்கம் அதற்குமேலே இன்னொரு கமிஷனைப் போட முடியாது.

If you appoint Enquiry Commission you can oust the jurisdiction of Central Government. ஆக நம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாமே ஒரு என்குவயரி கமிஷனைப் போட்டுவிட்டு, நாங்கள் போட்டுவிட்டோம், அதனாலே மத்திய அரசாங்கம் இனி போட முடியாது என்று சொல்வதற்குப் பதிலாக, நாமும் போடாது மத்திய அரசாங்கத்திற்கும் விசாரணைக் கமிஷன் போட அதிகாரம் இல்லை என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? உங்களிடம் இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளவே உங்களுக்குத் தெரியவில்லை. விசாரணைக் கமிஷன் போட நீங்கள் பயப்படுகிறீர்கள். மத்திய அரசாங்கம் எங்கே போட்டுவிடுமோ என்று பயந்து. அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பதனால் மத்திய அரசாங்கம் சும்மா இருந்துவிடாது.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* மத்திய அரசாங்கத்தைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை. யார், யார் பயந்துகொண்டு கட்சியைவிட்டு ஓடினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். நாங்கள் எழுப்பியுள்ள பிரச்சினை—இந்திய அரசியல் அமைப்பில் "164 (2) The Council of Ministers will be collectively responsible to the Legislativie Assembly of the State" என்பதாக இருக்கிறது. முனிசிபாலிட்டிக்கு சட்டம் இல்லை. அசெம்பளிக்கு சட்டம் இருக்கிறது. இதுதான் பெடரல் தத்துவம். இந்த அமைச்சரவையைக் கண்டிப்பதற்கான அதிகாரம் இந்தப் பேரவைக்குத்தான் இருக்கிறது. இந்த மன்றம் தான் இங்குள்ள அமைச்சர்களைக் கட்டுப்படுத்தும். மிகவும் அற்பத்தனமான, அவதூறான குற்றச்சாட்டுகளைக் கொண்டுபோய் டெல்லியில் கொடுத்துவிட்டால் டெல்லியில் உள்ளவர்கள் இங்குள்ளவர்களை லகான் பிடித்து இழுப்பதுபோல இழுத்து மிரட்டலாம் என்றால் அந்த மிரட்டல்களுக்கு எல்லாம் பயந்தவர்கள் தி.மு.க. அல்ல. அவர்கள் அளித்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் படிப்படியாக அவை எவ்வளவு அற்பத்தனமானவை, ஆதாரமற்றவை என்பதற்கான பதில்களை எல்லாம் அச்சிட்டு இந்த மன்றத்திலேயே வைத்திருக்கிறோம். இன்னும் எத்தனை குற்றச்சாட்டுகள் வந்தாலும் பதில் அளிக்கத் தயாராய் இருக்கிறோம்.





*திருமதி த. ந. அனந்தநாயகி:* மாநில அமைச்சரவைமீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்க மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. எங்கே உங்களை எப்படிச் சந்திக்க வேண்டுமோ அப்படிச் சந்திப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்குத் தெரியும்.

(Thiru M. A. Latheef and Thiru Kamatchi rose)

MR. DEPUTY SPEAKER: One at a time

THIRU M. A. LATHEEF: The hon. Lady Member is talking as if she is Indira Gandhi and that she represents the Central Government.........

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* திருமதி அனந்தநாயகி அவர்கள் மிரட்டுவதுபோல இந்தப் பேரவையில் அப்படிச் சொல்வது நல்லதல்ல. சரியான முறையும் ஆகாது. நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொன்னார்கள். அதில் என்னுடைய துரதிருஷ்டமான நிலைமை என்னவென்றால் நீங்கள் வாதாடியதற்காக தீர்ப்பு சொல்வதற்கான நிலைமையில் நான் இல்லை. நான் நீதிபதியாக இல்லை. கான்ஸ்டிட்யூஷனல் பொசிஷன் அப்படி இருக்கிறது. நீங்கள் உங்களுடைய கொள்கைகளை எடுத்துச் சொல்கிறீர்கள், அவ்வளவுதான். வெளியிலே, மேடைகளிலே அல்லது தேர்தல் களத்திலே அவைபற்றி முடிவு செய்து கொள்ளுங்கள். யார் யாருடைய அதிகாரத்தைப் பற்றியெல்லாமோ பேசுகிறீர்கள். என்னுடைய அதிகாரத்தைப் பற்றி நீங்கள் யாருமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை. (திரு. கணபதி குறுக்கிடு) வழக்கறிஞர்கள் நினைத்தால் வேறு சந்தர்ப்பத்தில், ஏன் எப்பொழுது வேண்டுமானாலும் பேசலாம். இப்பொழுது வேண்டாம்.

*திரு. எஸ். வடிவேல்:* தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேசுகின்ற நேரத்தில், அதிலே மதிப்பிற்குரிய மூதறிஞர் இராஜாஜி அவர்களைப்பற்றி குறிப்பிட்டிருக்கின்றது. அந்த இராஜாஜி முதல்வராக இருந்தபொழுது நான் இந்த சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்த பெருமை, பாக்கியம் செய்தவனென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*[திரு. எஸ். வடிவேல்] [1973 பிப்ரவரி 10*

மாணவர்கள் மீது தடியடித் துப்பாக்கிப் பிரயோகங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. அவற்றைப்பற்றி இந்த ஆளுநர் உரையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அவர்களைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாததற்காக நான் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, அண்மையில் மாணவர்கள்மீது இந்த அரசு கொடூரமான தாக்குதல் நடத்தியிருக்கிறது. அந்த நிலைக்கு ஆளுநர் உரையிலே ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக, அன்றைக்கு எம்.ஜி.ஆர்.ஐ நீக்கியவுடனே எதிர்ப்பு, மறுப்பு தெரிவித்த முதல் ஸ்தாபனம் மாணவர் ஸ்தாபனம். அன்றைக்கு சென்னையிலேயிருந்த மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல சிட்டி கலேஜ்களில், பிரசிடென்சி கலேஸ, கலைக் கல்லூரி, தியாகராயக் கல்லூரி மாணவர்கள்மீது இன்றைக்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, விருத்தாசலத்திலே மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு ஒருவர் இறந்திருக்கிறார். தேவகோட்டை, இராமநாதபுரம் முதலிய இடங்களில் மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். கண்டமங்கலத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு மாணவர் இறந்தார். போடியில் இரு முறை மாணவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலர் காயமுற்றனர். மதுரையிலே மாணவர்கள் ஊர்வலமாக வந்தபொழுது தாக்கப்பட்டு பலர் மோசமான நிலையிலே இருக்கிறார்கள்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

உசிலம்பட்டியில் மாணவர்கள் பேரில் வழக்குப் போடப்பட்டது. இன்னும் பல்வேறு வகைகளிலே வழக்குகள் போட்டிருக்கிறார்கள். இறுதியில் மாணவர்களை அடித்து பயமுறுத்தும் நடவடிக்கையை கொடுமையான முறையிலே இந்த அரசு கையாண்டிருக்கிறது. அதன் பலன்தான் பாளையங்கோட்டையில் லூர்துநாதன் இறந்தார் என்பதை நாம் அறிவோம். அதேபோல் திருச்சி கிளைவ் ஹாஸ்டலில் உள்புகுந்து மாணவர்களை அடித்த பயங்கர நிலை இருக்கிறது. ஆகவேதான், மாணவர்கள் இன்று அதிருப்தியடைந்திருக்கிறார்கள் என்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறோம். கவர்னர் உரையிலே மாணவர்களைப் பற்றி ஒரு கருத்தும், ஒரு வார்த்தையும் இல்லாமல் இருப்பது அருந்தத்தக்கது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு மாணவர்களைப் பழிவாங்கும் நோக்கத்திடன் நடந்துகொள்கிறது என்று குற்றம் சாட்டுகிறேன்.

பஸ்களை தேசியமயமாக்குவோம் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதைப் படிப்படியாக என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை உடனடியாக எடுத்துக்கொள்ளுவோமென்று சொல்லி, அதன்படி செய்தால் மிக நன்றாக இருக்கும். ஒரு துறை நாட்டுடைமையாக்கப்பட வேண்டு



*1973 பிப்ரவரி 10] [திரு. எஸ். வடிவேல்]*

மானால், அதை முன்னால் அறிவிப்பு செய்தால் அதனுடைய பின்விளைவு என்ன என்று நாம் அறிவோம். அன்றைக்கு 30 ஏக்கர், 15 ஏக்கர் என்று வரம்பு கொண்டு வரப்போகிறோம் என்று அறிவித்தபொழுது, பல்வேறு நிலையிலே அவற்றைப் பிரித்து வைத்திருந்ததை நாம் பார்த்தோம். அந்த அனுபவத்தை கவனத்திலே கொண்டு உடனடியாக இதைச் செய்வதற்கு இந்த அரசு தயங்குவது ஏன் என்று பார்க்கும்பொழுது இந்த சர்க்கார் ஊழலுக்கு உடந்தையாக இருக்கிறது என்று குற்றம் சாட்டுகிறேன். இன்றைக்கு பஸ் அதிபர்களுக்கு, குறிப்பாக நீண்ட நாள் கொடுத்துக்கொண்டு போவதாலே, அவர்களுக்கு பலவற்றை மாற்றுவதற்கு, தங்களுக்கு ஆதாயம் தேடிக்கொள்வதற்கு உதவியாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சினிமா தியேட்டர்களையும், சர்க்கரை ஆலைகளையும், பள்ளிகளையும், கல்லூரிகளையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இவையெல்லாம் நாட்டுடைமையாக்கப்பட்டால்தான் சோஷலிச சமுதாயம் அமைப்பதற்கு வழி ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் முதல்வரை ஒன்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கும் நிர்வாக அமைப்பை அப்படியே வைத்துக்கொண்டு சோஷலிச திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று நம்புகிறீர்களா? இன்றைக்கு இருக்கும் நிர்வாக அமைப்பு, அரசாங்க அமைப்பு சரிதானா என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கும் நிர்வாக அமைப்பை வைத்து நாம் சோஷலிசம் காண்போம் என்று சொல்வது, யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவதுபோல் தான் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அப்படியே நீடித்தால், சோஷலிசப் பாதை, பூங்காவை அமைக்க முடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். மக்களுக்காக வகுக்கப்படுகின்ற திட்டங்களிலே அவர்கள் அக்கறை காட்டுவதற்கும் ஒத்துழைப்பு நல்குவதற்கும் அரசாங்கத்திடம் என்ன செயல் திட்டமிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு கேரளத்தில் எந்தத் திட்டமாக இருந்தாலும் அதற்கு மக்கள் குழுக்களை அமைத்து திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். அப்படி இங்கும் அமைத்தால்தான் நாட்டுடைமையாக்குவதற்கும் முற்போக்குத் திட்டங்களுக்கும் சோஷலிச சமுதாயம் அமைப்பதற்கும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க எந்தவிதமான திட்டமும் ஆளுநர் உரையிலே இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு பட்டா வழங்கப்படுகிறது, வாழ்ந்த மனை, அவர்கள் வைத்த மரம் பிள்ளைகளுக்குப் போய்விடுகிறது. குடியிருப்பதற்கு மனைகள் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒருவனிடம் [illegible] குழிகள் இருந்தால், [illegible] குழி [illegible]

மரத்திற்கும் 10 குழி புளிய மரத்திற்கும், இப்படி ஒவ்வொன்றுக்கும் போய் அவன் குடியிருப்பதற்கு 3 சென்ட், 2 சென்ட், 1 சென்ட், ½ சென்ட் என்று எல்லாவற்றையும் அளந்து எடுத்துவிட்டு மீதியிருக்கிறதை பெற்று ஏழைகளுக்கு கொடுக்கிற நிலை இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய சீர்காழி தொகுதியில் உமையாள் ஊர் என்ற ஊரில், ராஜா சர் முத்தையா செட்டியார் ஏராளமான நிலம் வைத்து இருக்கிறார்கள். அங்கு வைக்கப்பட்டிருந்த மரங்களை எல்லாம் எடுத்து விட்டு, அந்த நிலத்தை அதிகாரிகளிடம் காட்டி, அவர்கள் இந்த நிலம் உபயோகப் படாது என்று சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் எத்தனை லட்சம் பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப் போகிறோம் என்று குறிப்பிடப்படவில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தை எவ்வாறு போக்கப்போகிறோம், எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வேலை யில்லாத் திண்டாட்டம் தீரும் என்றெல்லாம் குறிப்பிடப்படவில்லை.

விலைவாசி ஏற்றத்தை தடுத்து நிறுத்த வழி கூறப்படவில்லை. விலைவாசியை எடுத்துக்கொண்டால், ரூ. 3½-க்கு விற்ற மிளகாய் ரூ. 7½-க்கு விற்கிறது. கிலோ 60 காசாக இருந்த கடலை இன்றைக்கு ரூ. 1.90 காசாக இருக்கிறது. கிலோ ரூ. 1-க்கு விற்ற தக்காளி கிலோ ரூ. 1.90 காசாக இருக்கிறது. கிலோ ரூ. 5-க்கு விற்ற நல்லெண்ணெய் ரூ. 7-க்கு விற்கிறது. இன்றைக்குப் பெருகி வருகிற விலைவாசியைப் பார்க்கும்பொழுது என்.ஜி.ஓக்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும் எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் பலன் இல்லை. விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க நீங்கள் இன்றைக்கு ஒன்றுமே செய்யவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். (மணியடிக்கப்பட்டது). எல்லோருக்கும் 20 நிமிடம், 30 நிமிடம் கொடுக்கிறீர்கள். தயவுசெய்து இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள், நீங்கள்பெரியவர்களுக்கு எல்லாம் நேரம் கொடுக்கிறீர்கள். இராஜாஜி இருந்தகாலத்திலே எங்களைப் போல இருந்தவர்களுக்கெல்லாம் . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** இங்கே பெரியவர்கள், சின்னவர்கள் என்று கிடையாது. கட்சியினுடைய தலைவர்கள் கொஞ்சம் அதிகமாக நேரம் எடுத்துக்கொள்வார்கள்.

**திரு. எஸ். வடிவேல் :** எனக்கு நேரத்தைக் கூட்டிக் கொடுங்கள். 5 நிமிடங்கள் கொடுங்கள், முடித்துக்கொள்கிறேன்.





விவசாயிகளுடைய, தொழிலாளிகளுடைய வேதனையைத் தீர்க்கவில்லை. மறைந்த ஜீவானந்தம் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னாலே "பாலின்றி பிள்ளையழ, பட்டினியால் பிள்ளையழ, வேலையின்றி நாம் அழ, வீடு முழுதும் அழ" என்று கூறினார். அன்றைக்குக் கூறிய வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் கிராமப்புறங்களிலே இருக்கிறது. நீதிபதி கணபதியா பிள்ளை விவசாயிகளுடைய வருமானத்தை ஆராய்ந்தபொழுது, அவர்களுக்கு வருடம் ஒன்றுக்கு 180 நாளைக்குத்தான் வேலை கிடைக்கிறது, 200 நாளைக்குத்தான் வேலை கிடைக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். சாதாரண என்.ஜி.ஓ.வுக்குக் கூட மாதம் ஒன்றுக்கு ரூ. 200-க்கு மேல் கிடைக்கிறது. ஆனால், அந்த விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 400-க்கு மேல் கிடைக்கவில்லையென்று குறிப்பிட்டார்கள். அத்தகைய சமுதாய நிலையை மாற்றுவதற்கு கவர்னர் உரையிலே எந்தவிதமான வழியும் இல்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு 1381-ம் பசலிக்கு, இந்த 1973-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11-ம் தேதிக்குள் குத்தகை பாக்கி தரவில்லையென்றால் லட்சக்கணக்கான விவசாயிகள் நிலத்தை விட்டு அப்புறப்படுத்தக் கூடிய நிலை இருக்கிறது. தலைவர் அவர்களே, நேற்று அதுபற்றி கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்தேன். அதை டிஸ்ஸலவ்ட் என்று போட்டுவிட்டார்கள். அதனால் இன்றைக்கு லட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். கவர்னர் உரையிலேகூட சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கர் வரையிலும் பாழ்பட்டிருக்கிறது, 28 ஆயிரம்
ஏக்கர் வரையிலும் அறவே பாழ்பட்டுவிட்டது. இந்த நிலையில் தாளவாடி ந.ப. 12-00
பயிர் இருக்கிறது. பிப்ரவரி மாதம் 11-ஆம் தேதிக்குள் பணம் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள், இல்லாவிட்டால் அந்த விவசாயிகளை அப்புறப் படுத்திவிடுவார்கள். ஆகவே, ஒரு ஆண்டுக் காலம் இதை நீடிக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி 6 மாதத்திற்கு முன்னாலேயே பணத்தைக் கட்டிவிடுங்கள் என்று நோட்டீஸ் போட்டிருக்கிறது. ஆனால் இடையிலே வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட நிலைமை ஏற்பட்டுவிட்டதால் ஒரு ஆண்டுக் காலம் நீடிக்க வேண்டும், அவர்கள் கட்ட வேண்டிய பாக்கியை பிறகு கட்டிவிடுவார்கள் என்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

*** திரு. ஜே. ஜேம்ஸ் :** கனம் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சாதாரணமாக, ஆளுநர் உரை என்றால் அந்தக் குறிப்பிட்ட ஆண்டில் அரசின் கொள்கை என்ன, நடத்த இருக்கும் திட்டங்கள் என்ன என்ன ஆகியவை அடங்கியிருக்கும். ஆனால் இந்த அறிக்கையைப் பார்க்கும்பொழுது

மத்திய அரசாங்கத்திடம் சில கோரிக்கைகளை வைத்து அது ஒரு விண்ணப்ப மனு மாதிரித்தான் இருக்கிறதே தவிர அரசாங்கத்தின் கொள்கைகளோ அல்லது திட்டங்களோ அதில் வரையறுக்கப்படவில்லை.

தொடக்கத்திலிருந்து மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களுக்கு நிதி வழங்க வேண்டும், அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தான் இருக்கின்றன. சாதாரணமாக இப்பொழுது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் மத்திய அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிகாரங்கள் இருக்கின்றன, மாநில அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிகாரங்கள் இருக்கின்றன என்ற பிரச்னை எழுவது வழக்கமாக இருக்கிறது. இதற்கு முன்பெல்லாம் ஆட்சியிலிருப்பவர்கள் அதிகாரம் வேண்டும் அதிகாரம் வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதற்கு முன்பு இருந்த ஆளுநர் உரைகளில் எல்லாம் மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கைத்தான் இருந்தது.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் முதன்முதலாக முதலமைச்சரான உடனே 1969-ல் அவர்கள் ராஜமன்னர் கமிட்டியை அமைத்து மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள அதிகாரங்களைப் பரிசீலித்து எந்த அளவிற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசுக்கு அதிகாரங்களை அளிக்கலாம் என்று ரிப்போர்ட் கொடுக்கச் சொன்னார்கள். 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ம் தேதி அந்த கமிட்டி அமைக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு மே மாதம் 27-ம் நாள் அன்று அந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையை இந்த அரசுக்கு சமர்ப்பித்தது, அந்த அறிக்கை இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆளுநர் உரையைப் பார்த்தால் என்ன என்ன அதிகாரங்கள் இந்த மாநில அரசுக்கு வழங்கப்படவேண்டுமென்பதைப் பற்றி ஒருவிதமான குறிப்பும் சொல்லப்படவில்லை. அதன் ரகசியம்தான் என்ன என்று தெரியவில்லை.

கழிந்த சில நாட்களாக இந்த அரசின் மீது தமிழ்நாட்டிலேயுள்ள பல்வேறு எதிர்க்கட்சிகள் சுமத்திய குற்றச்சாட்டுகளைப் பொறுத்து விசாரிக்க ஒரு விசாரணைக் கமிஷன் அமைப்பது சம்பந்தமாக மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே ஏற்பட்ட தாவா காரணமாக அந்தக் கோரிக்கையைப் பற்றி ஆளுநர் உரையிலே எடுத்துச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். குற்றச்சாட்டுகளுக்கு சொல்லியிருக்கிற பதிலுரையிலே நீங்கள் மத்திய அரசாங்கத்திற்கு விசாரணைக் கமிஷன் அமைக்க அதிகாரம் இல்லை என்று சொல்லி இருக்கிறீர்கள். சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு முறை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மத்திய அரசாங்கம் குழு அமைத்தால் நீதிமன்றம்தான் அதைப்பற்றி முடிவு செய்யவேண்டுமென்ற அவசியம்



ஏற்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். விசாரணைக் கமிஷன் அமைந்துவிடுமோ என்ற சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கும்பொழுது தி.மு.க. வைச் சேர்ந்த முக்கியமான சில உறுப்பினர்கள் மத்திய அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள்மீது ஊழல் பட்டியலை அனுப்பப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனைப் பார்த்துதான் மத்திய அரசினுடைய விசாரணைக் கமிஷன் நியமிக்கும் குரல் தாழ்ந்திருக்கிறது என்று நினைக்கிறேன். அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காகத்தான் சொல்கிறார்கள் என்று சொல்ல முடியாது. தங்கள் சொந்தத்திற்காக, தேவைக்காக, அமைச்சர்களின் நன்மைக்காக அவ்வப்பொழுது அந்தக் கொள்கையைப் பயன்படுத்திக் கொள்கிறார்களே தவிர தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காக அந்த வாதத்தை முன்வைக்க இல்லை. அவர்கள் பல்வேறு மாநாடுகளிலே மாநிலச் சுயாட்சிக் கொள்கையைப்பற்றி வலியுறுத்திக்கொண்டிருந்தார்கள். வாட்டர்லூவை பற்றிச் சொன்னார்கள். முஜிபுர் ரஹிமானைப்பற்றிச் சொன்னவர்கள் பல்வேறு நிபந்தனைகளைப் போட்டு நிச்சயமாக அதிகாரங்கள் வேண்டும் என்று சொன்னவர்கள் இன்றைய தினம் பெட்டிப்பாம்புபோல் இருப்பதன் ரகசியம் என்ன என்பது தெரியவில்லை. எதிர்க்கட்சிகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிய ஊழல் பட்டியல் சட்டசபையில் வைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அதற்கான பதிலும் வைக்கப்பட்டு இருக்கிறது. கவர்னர் பெருமான் தனது உரையின்பொழுது நிச்சயமாக லஞ்ச ஊழல்பற்றி விளக்கத்தைக் கூறியிருக்க வேண்டும். அவற்றை அவர் கூறாமல் இருப்பதன் ரகசியம்தான் என்ன? நிச்சயம் உண்மையை மறைக்கின்ற நிலைமைதான் என்று எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர வேறு அல்ல. குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும், குறுக்கிலே புண் வந்தால் குனியும்பொழுது கூசும் என்று சொல்வார்கள். கவர்னர் பெருமான் உரையிலே இந்த அரசாங்கத்தின்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளைப்பற்றியும் பதிலைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

இந்த அரசு போகின்ற போக்கு, மத்திய அரசாங்கம் செயல்படுகிற முறை இவற்றைப் பார்த்தால் தமிழகத்தில் உள்ள மக்கள் ஜனநாயகத்திலே நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இங்கே உள்ள எதிர்க்கட்சிகள் மாநில அரசுமீது புகார்கள் கூறுகிறார்கள். ஆனால் இங்கே உள்ள ஆளுங்கட்சியிலே உள்ள அங்கத்தினர்கள் மத்திய அரசாங்க அமைச்சர்கள்மீது ஊழல் கூறுகிறார்கள். இந்திய அரசைப்பற்றி, பாராளுமன்றத்திலே பல்வேறு ஊழல்களைப்பற்றி, மாருதி கார் சம்பந்தமான ஊழலைப்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஊழல் இல்லாத ஒரு மத்திய அரசு என்று சொன்னால் கமிஷன் ஆப் என்குயரி நியமித்து இருக்கவேண்டும். மத்திய அரசு

ஊழல் உள்ள அரசு என்பதால்தான் இந்த அரசு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு என்குயரி கமிஷன் நியமிப்பதற்குத் தயக்கம் காட்டுகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஒன்றைக் கூற விரும்புகிறேன். இங்கே காரசாரமான விவாதம் நடைபெற்றது. மத்திய அரசாங்கத்திற்கு விசாரணைக் கமிஷன் அமைக்க அதிகாரம் இருக்கிறதா, மாநில அரசுக்கு விசாரணைக் கமிஷன் நியமிக்க அதிகாரம் இருக்கிறதா என்பதுபற்றிப் பேசப்பட்டது. கமிஷன் ஆப் என்குயரி ஆக்டின் கீழ் இரண்டு அரசுகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை மத்திய அரசுக்கு விசாரிக்க உரிமை இல்லை என்று சொன்னாலும் கூட குற்றமற்ற அமைச்சர்களாக இருந்தால், தங்களை நிரபராதிகளாக அறிவிப்பதற்குத் தங்களுக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி ஒரு கமிஷன் நியமித்தருந்தால் பாராட்டியிருக்கலாம்—மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்ற சாக்கில் புகுந்துவிடுவதால் ஒன்றும் பயன் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரணமாக ஒரு அதிகாரி தவறு செய்தால் அதற்கு நாம் கமிஷன் ஆஃப் என்குயரி ஆக்டின் கீழ் என்குயரி நடத்துகிறோம். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதென்றால் அதற்காக நீதிவிசாரணைக்கு ஆணையிடுகிறோம். அப்படியெல்லாம் விசாரிக்கும்பொழுது அமைச்சர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால் மட்டும் கமிஷன் ஆஃப் என்குயரி ஏன் அமைக்கக்கூடாது என்று நான் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். இந்த நாட்டிலுள்ள அதிகாரிகள், மற்றும் தனிப்பட்ட மனிதர்களுக்கு ஒரு நியாயம், அமைச்சரவையிலிருக்கின்ற அமைச்சர்களுக்கு இன்னொரு நியாயம் என்று சொன்னால் நிச்சயமாக அதை நாடு ஒத்துக்கொள்ளாது என்று நான் கருதுகிறேன்.

இந்த அரசாங்கத்தின்மீது குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பலரை ஹைகோர்ட்டில் குற்றவாளிக் கூண்டில் இந்த அரசாங்கம் நிற்க வைத்திருக்கிறது என்று சொன்னால் இது ஜனநாயகமா? இது ஜனநாயகத்திற்கு முரண்பட்ட செயல் அல்லவா என்பதை இந்த அரசாங்கத்திற்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். யாராவது அரசாங்கத்தின்மீது, அமைச்சர்களின் மீது குறை கூறிவிட்டார்கள் என்றால் அவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி விசாரிப்பது என்றால் அது நிச்சயமாக ஜனநாயகத்திற்கு முரண்பாடானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை அரசாங்கத்தில் வீற்றிருக்கும் அமைச்சர்களுக்கு தங்கள் வழக்குகளை நடத்த அரசாங்க மெஷினரி இருக்கலாம், அரசாங்க வழக்கறிஞர்கள் இருக்கலாம், அரசாங்க பணம் இருக்கலாம், ஆனால் தங்கள் பதவியைத் துஷ்பிரயோகம் செய்து எதிர்க்





கட்சியில் பணியாற்றுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடையூறு செய்வது என்பது ஜனநாயகத்திற்கு எதிரான செயல் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு வழக்கறிஞர். பொதுவாக வழக்குமன்றத்திலே ஒரு வழக்கை அது நியாயத்தின்பாற்பட்டது என்றால்தான் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இதுகுறித்து அவர்கள் விளக்குவார்களா?

திரு. ஜே. ஜேம்ஸ்: நண்பர் கந்தப்பன் அவர்களும் ஒரு வழக்கறிஞர் என்று எண்ணுகிறேன். (குறுக்கீடு) இல்லையா? மன்னிக்கவும். ஆகையால் தான் இந்தச் சந்தேகம் ஏற்பட்டது. ஒரு வழக்குமன்றத்திலே ஒரு வழக்கிற்கு அட்மிஷன் வாங்குவது என்றால், வழக்கறிஞர்களுக்குத் தெரியும், குறிப்பாக திரு. கணபதி, திரு. லத்தீப் போன்றவர்களுக்கு நன்கு தெரியும், எந்த முறையில் அமைந்திருக்கிறது என்று. இந்த அட்மிஷன் வாங்குவதிலே சிரமம் இல்லை. அது வேறுமுறையில் அமைந்திருக்கிறது என்பதை திரு. கந்தப்பன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் பிரைமா ஃபேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதுகூட அவசியமில்லை.

திரு. என். கணபதி: திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு, உயர்நீதிமன்றத்தில் அட்மிஷன் வாங்குவது என்பது தலைகீழாக நிற்க வேண்டிய விவகாரம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த விவகாரம் நீதிமன்றத்தைப் பொறுத்த விஷயம். ஆகவே சட்டமன்றத்திலே விவாதிப்பது சரியாக இருக்காது என்று கூறி இதோடு நிறுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இது முதலிலேயே தெரிந்திருக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் சொல்லவில்லை. அவர்கள்தான் சொன்னார்கள்.

அடுத்து, மின்சாரத்தினால், நம்நாடு எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கழிந்த சில நாட்களில் விவாதிக்கபட்டு வருகிறது. குறிப்பாக, ஆளுநர் அவர்கள் இன்றையதினம் தமிழகத்தில் தொழில் வளம் எந்த அளவிற்குக் கெட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். தொழில் வளம் கெட்டிருக்கிறது என்றால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் நாட்டின் பொருளாதாரம் குன்றிப்போகிற சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டும். எனவே, அதில் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையதினம் மாணவர்கள்மீது அத்துமீறி பழி வாங்கும் சம்பவங்கள் பல நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேலூரில் 30—12—1972-இல் ஒரு மாணவரை போலீஸ் அதிகாரிகள், ஜெயகுமார் என்பரை நிர்வாணமாக நிறுத்தி சித்திரவதை செய்திருக்கிறார்கள். விருதுநகர் கல்லூரியின் பக்கத்தில் ஒரு பஸ் கொளுத்தப்பட்டதன் காரணமாக, யாரோ கொளுத்தியதற்காக, அதில் ஈடுபடாத விருதுநகர் கல்லூரி மாணவர்கள் பலரின்மீது ஐ.பி.சி. சட்டத்தின் கீழ் எத்தனை வகுப்புகள் இருக்கின்றதோ, அதில் சேர்த்து மாணவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மாணவர்களின்மேல் ஐ.பி.சி. 307 வகுப்பின்கீழ் கூட குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது என்றால் அவர்கள் யாரைக் கொலை செய்வதற்கு முயற்சி செய்தார்கள்? இது உண்மையிலே நிகழ்ந்திருக்கிற கொடுமை என்பதை மட்டும் கவனத்திற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த நிலையில் மாணவர்கள்மீது ஆங்காங்கு சுமத்தப்பட்டிருக்கும் வழக்குகளை நிச்சயமாக வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கவர்னர் உரையில் சுருக்கமாகப் பார்க்கும்பொழுது இன்றைக்கிருக்கும் பிரச்சினைகளுக்கு, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எந்தவிதமான முயற்சியுமில்லாத நிலையில் இருப்பதைப் பார்க்கும்பொழுது, ஒருவேளை இந்த அரசு தனது பதவிக்காலம் எத்தனை நாட்கள் நீடிக்குமோ என்ற ஐயப்பாட்டோடுகூட தன்னுடைய நிலையில் ஆட்டம் கொண்ட நிலையில் ஆகி இருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். திண்டுக்கல் உபதேர்தலைப்பற்றி எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சுந்தரம் அவர்கள் கூறினார்கள். கள்ள வாக்குகள் பதிவு செய்யப்படுகின்றன என்று சொன்னார்கள். திண்டுக்கல் நகரில் 15-வது வார்டில் உள்ள ஒரு வீட்டில் நான்கு நபர்கள்தான் இருக்கிறார்கள். அங்கே 20 பெயர்கள் இப்பொழுது புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வீட்டு நம்பரைக் கொடுத்தால் உடனடியாக விசாரிக்கலாம். விசாரித்துத் திருத்துவதற்கு வசதியாக இருக்கும். 15-வது வார்டில் எந்த வீடு என்று நம்பரைக் கூறினால் ஒரு மணி நேரத்தில் விசாரித்துச் சொல்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இவ்வளவு பெரிய அரசாங்கம் இத்தனை அமைச்சர்கள் இருக்கின்ற அரசாங்கம், இவ்வளவு விவரத்தைக் கொடுத்த பிறகும் . . . .





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** என்ன விவரம் கொடுத்தீர்கள்? அங்கே நூற்றுக்கணக்கான வீடுகள் இருக்கலாம். எந்த வீடு என்று சொன்னால் நாளைக்கே விசாரித்துச் சொல்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** வாக்காளர்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள சந்தேகத்தை, நல்லெண்ணத்தோடுதான் கேட்கிறார்கள். அப்படித் தவறு நடந்திருந்தால் போக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காகக் கேட்கிறார்கள். அதற்குத் தகவல் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் அதைவிட்டு விட்டுப் பேசுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, எனக்குள்ள தகவல், திண்டுக்கல்லில் 15-வது வார்டில் ஒரு வீடு என்று இருக்கிறது. அதை விசாரித்து அறிவதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்பிருக்கிறது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** 15-வது வார்டிலே நிறைய வீடுகள் இருக்கலாம். அது உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், விலாசம் சரியாக இருக்கிறதா, வீட்டு எண் இருக்கிறதா என்று தெரியவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் அவர்கள்மீது ஒரு குறை காண வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஓட்டுச் சேர்ப்பதிலே மாநில அரசாங்கத்திற்குச் சம்பந்தமேயில்லை. இதை விவரம் தெரிந்தவர்களாவது புரிந்துகொள்ள வேண்டும். எலெக்ஷன் கமிஷன் ஒரு எலக்ஷன் வரும் என்று இன்டென்சிவ் என்யூமரேஷன் ஆஃப் எலக்டோரேட்,' ஒரு உத்தரவைப் போடுகிறார்கள். ஆங்காங்குள்ள அதிகாரிகள் சேர்க்கிறார்கள். அடுத்த கட்டத்தில் ஒரு மாத காலம் கொடுத்து ஒரு மாத காலத்திற்குள்ளாக அதிகாரிகளால் விடப்பட்டிருந்தால் மனு கொடுத்து சேரலாம் என்று காலம் கொடுக்கிறார்கள். ஏதாவது தப்பிருந்தால் ஆட்சேபிக்கலாம். அதற்காக அரசாங்கம் என்று பத்திரிகையில் போட்டு, எம்.எல்.ஏ. விளம்பரம்கொடுத்து, எல்லோரும் சேர்ந்து அரசாங்கம், கட்சி கள்ள ஓட்டு சேர்க்கிறது என்ற கருத்தில் சொன்னால் அது இந்த மாநிலத்தை அவமதிப்பதாக ஆகும்.

நான் ஒரு விவரத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தேர்தலுக்கு, திண்டுக்கல் தேர்தலுக்கு 'இன்டென்சிவ் வெரிஃபிகேஷன்' என்று வந்தபிறகு ஐயாயிரத்துச் சொச்சம் பேர்கள் அதிகாரிகளால் சேர்க்கப்

பட்டிருக்கிறது. பிறகு கொடுத்த ஒரு மாத காலத்தில் பதினோராயிரத்துச் சொச்சம் பேர் மனு போட்டிருக்கிறார்கள். அதற்கு சுமார் 331 ஆட்சேபணைகள் வந்திருக்கின்றன. எனவே 15-வது வார்டில் எந்த வீடு என்று வீட்டு எண்ணைக் கொடுத்தால், இப்பொழுது கொடுத்தாலும் விசாரிக்கத் தயாராக இருக்கிறோம்.

இது புதுமையில்லை. காமராஜர் இடைத்தேர்தலில் நின்றார். அந்த இடைத்தேர்தலில் சேர்க்கப்பட்ட வாக்குகள் 54,000.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர்களே, நான் கூறுவதெல்லாம் 4 பேர்கள்தான் இருக்கின்ற ஒரு வீட்டில் 20 வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆட்சேபணைகள் போடலாம், அதற்கான விதிமுறைகள், அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதெல்லாம் தெரியும். பொதுவாக இடைத்தேர்தல் நடக்கும்பொழுது நிச்சயமாக புதிதாக வாக்காளர்களைச் சேர்ப்பது வழக்கம் தான். எல்லாக் கட்சிகளும் சேர்க்கிறார்கள். ஆனால் அதில் தவறு நடப்பதாகத் தகவல் கிடைத்ததால், அரசாங்கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிறேன்.

அரசாங்கம் கூடிய அளவு தவறுகள் நடைபெறுவதைக் கண்காணிக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தின் ஆணையின் மீது செயல்பட்டாலும் இந்த அரசாங்கத்தின் அதிகாரிகள்தான் அந்தப் பணியைச் செய்கிறார்கள் என்ற காரணத்தால், இந்த அரசாங்கம் நிச்சயமாக அதைக் கண்காணிக்க இயலும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் 2—2—1973 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து இரண்டொரு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் சமீபத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட சூழ்நிலையைப் பற்றி நன்றாக விளக்கி இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1,80,000 குடும்பங்கள் வீடுகளை இழந்திருக்கிறார்கள். 2,80,000 ஏக்கர் நிலங்களில் பயிர் நாசமாகி இருக்கிறது. 1,70,000 ஏக்கர் நிலங்களில் பயிர் ஓரளவு நாசமாகி இருக்கிறது. தாராளமாக 40 கோடி ரூபாய்க்கு மேல் தமிழ்நாட்டில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து அதற்கான நிவாரண உதவிகளை தமிழக அரசு எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அதிகாரிகளும், மாநில அமைச்சர்களும் சுற்றுப் பயணம் செய்து அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளித்திருக்கிறார்கள். வீடிழந்தவர்களுக்கு உதவித் தொகையாக





40 ரூபாய் என்று இருந்ததை 80 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். நஞ்சை நிலங்களில் வெள்ளத்தால் மண் மேடிட்ட பகுதிகளில் மண் மேடு அகற்றும் செலவில் பாதித் தொகையை முதலில் நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டும் கடைசியில் பணத்தை கூட பெறாமல் அந்த நஞ்சை நிலங்களிலிருந்து மண்ணை அப்புறப்படுத்த புல்டோசர்களை இனாமாகவே அளித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்க்கும்போது நான் இந்த அரசை மனமாரப் பாராட்டுகிறேன்.

நாம் மத்திய அரசாங்கத்திலிருந்து 25 கோடி ரூபாய் கடனாகவும், மானியமாகவும் கேட்டோம். அவர்கள் இதுவரையில் பாராமுகமாக இருக்கிறார்கள். அதைப்பற்றி என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. இங்கிருக்கும் எதிர் கட்சிக்காரர்கள் தங்கள் கட்சி தலைவர்கள் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி அந்தத் தொகையைப் பெற்றுத் தர வழி செய்தால் நன்றியுடையவர்களாக இருக்கமுடியும்.

இப்போது விவசாயிகளுக்கு உரங்கள் பல துறைகளின் மூலமாக வழங்கப்படுகிறது. அது சீராக்கப்பட வேண்டும். ஒருமுகமாக வழங்கப்பட வேண்டும். கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி மூலமும் ஐ.எம்.எல். லோன் முறையிலும் வழங்கப்படுகிறது. இவற்றை எல்லாம் நிறுத்தி பஞ்சாயத்து யூனியனில் கொடுக்கப்பட்டு அக்ரிகல்சுரல் கோடவுன் மூலமாக ஒவ்வொரு பகுதிக்கு எவ்வளவு உரம் என்று நிர்ணயித்துக் கொடுத்துவிட்டால் சவுகரியமாக இருக்கும். இப்போது வசதியுள்ளவர்கள் பல இடங்களில் இருந்து உரத்தை வாங்கிக் கொள்ளுகிறார்கள். ஒரே ஸ்தாபனத்தின் மூலம் கொடுத்தால் யார் யார் வாங்கி இருக்கிறார்கள் என்று கண்காணித்துக் கொள்ள வசதியாக இருக்கும்.

தமிழ்நாட்டில் மின்சக்தி வெட்டு ஏற்பட்டிருப்பது உண்மை. எல்லாக் கிராமங்களுக்கும் இப்போது நாம் மின்சாரம் கொடுத்து வருகிறோம். நமக்கு மாநில சுயாட்சி கிடைத்தால்தான் இந்தப் பிரச்சினையை எல்லாம் தீர்க்க வழி ஏற்படும். அனல் மின்சார நிலையத்தை ஆரம்பிக்கவேண்டும் அல்லது மின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்றால், மத்திய அரசாங்க அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அதிலே காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மாநில சுயாட்சிதான் இதற்கெல்லாம் நிவாரணமாகும்.

என்னுடைய தொகுதியில் பின்தங்கிய பகுதிகளாக உடையார்பாளையம், அரியலூர் வட்டங்கள் இருக்கின்றன. எந்தவிதமான ஆற்றுப் பாசனமும் கிடையாது. அங்கு இரண்டொரு ஏரிகள்தான் இருக்கின்றன. அவையும் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. அவற்றைச் சரிவரப் பராமரிக்க வேண்டும்.

அங்கு ஏராளமான சர்க்கார் முந்திரிக் காடுகளும், தனியார் முந்திரிக் காடுகளும் இருக்கின்றன. அவற்றின் விளைபொருள்கள் எல்லாம் இன்று வேறு மாநிலத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் இப்போது அதற்கான தொழிற்சாலை ஒன்றும் கிடையாது. தமிழக அரசின் முயற்சியால்தான் அது நடைபெற வேண்டும். அதிகமாக முந்திரி பயிராகும் அரியலூர், உடையார்பாளையம் பகுதியில் முந்திரிக் கொட்டை உடைக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டும். அதன் மூலம் வருஷத்தில் பாதி நாட்கள் கூட வேலைவாய்ப்பு இல்லாத அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும்.

நெசவாளர்கள் எங்கள் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான நூல்கள் போதிய அளவுக்கு நியாய விலையில் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நமது அரசு ஆங்காங்கு இருக்கின்ற ஸ்பின்னிங் மில்களில் இருக்கிற நூல்களை எல்லாம் வாங்கி நேரடியாக அந்தந்தப் பகுதிகளில் எவ்வளவு நூல்கள் சப்ளை செய்ய வேண்டுமோ, அதை வீவர்ஸ் சொசைடிஸ் மூலமாகச் சப்ளை செய்ய வேண்டும். அப்போதுதான் நெசவாளர்கள் குறைகள் நீங்கும்.

எங்கள் பகுதியில் அரிசனங்களுக்கு மனைகள் வழங்கப்படுவதில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஓரிரு கிராமங்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான அரிசன மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. மனுக்களை டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசரிடம் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றிக் கேட்டால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். கொஞ்சம் அதிகமாகப் பணம் ஒதுக்கியாவது எங்கள் பகுதி அரிசன மக்களுக்கு வீட்டு மனை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை கூட்டுறவு ஸ்டோர் மூலமாக விநியோகிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமங்களில் நாணயச் சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்யலாமென்று இருக்கிறது. ஆனால் அந்தப் பணத்தை கூட்டுறவு சங்கத்திலிருந்து எடுத்து சர்க்கரை வாங்கக்கூடாது. தலைவர்தான் தனியாகப் பணம் போட்டு வாங்கவேண்டுமென்று ஆடிட்டர்கள் கூறுகிறார்கள். இதற்குச் சட்டத்தில் விதிவிலக்கு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் விநியோகம் நல்ல முறையில் நடைபெறும். எங்களுடைய பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வசதியும் ரோடு வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கவர்னர் உரையின் பேரில் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.



* திரு. சோ. கருணைநாதன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையை வரவேற்று இரண்டொரு கருத்துக்கள் பேச விரும்புகிறேன்.

இந்த ஆண்டு பொங்கல் புதுநாள் அன்று தமிழகம் எங்கும் சர்க்கரைப் பொங்கல் உண்டு மகிழ்ந்திருந்த நேரத்தில் கழக அரசு தனியார் பஸ்களை எல்லாம் சர்க்கார் பஸ்களாக நீலகிரி மாவட்டத்தில் மாற்றி எங்களுக்கு அதனைப் பொங்கல் பரிசாக வழங்கியதற்காக நீலகிரி மாவட்ட மக்கள் எல்லாம் உள்ளமுவந்து பாராட்டுகிறார்கள். தனியார் பஸ்களை வைத்துக் கொண்டிருந்த நேரத்தில் அங்கு பல கிராமங்களுக்குச் சென்று வந்த பஸ்களை லாபம் இல்லை என்று சொல்லி நிறுத்திவிட்ட காரணத்தால், அங்குள்ள பொது மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தின் காரணமாக அவர்களிடம் பஸ்களை விட வேண்டுமென்று கூறியும் விடவில்லை. அவர்கள் அதிலே நஷ்டம் என்று சொன்னாலும் உண்மையிலேயே நஷ்டம் இல்லை. லாபம் அதிகமாக இல்லை என்ற காரணத்தால்தான் அவர்கள் விடவில்லை. மக்கள் இதனால் பெருத்த அவதிக்குள்ளானார்கள். இன்று சேரன் போக்குவரத்துக் கழகம் அந்தப் பொறுப்பை ஏற்று இன்று அந்தப் பகுதிகளுக்கெல்லாம் பஸ்களை விடுகிறோம் என்று உறுதியளித்திருக்கிறார்கள். 12-30 பி.ப.

அதை நம் அரசு தேசியமயமாக்கியது மட்டுமல்லாமல் அதே நேரத்தில் அங்கு ஓடுகிற பஸ்கள் சில பழுதடைந்து மிகவும் பழையதாகியுள்ளன. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து என் வேண்டுகோளை ஏற்று பழுதடைந்த அந்த பஸ்களை மாற்றி புதிய வண்டிகளை விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி நல்ல பல காரியங்களைச் செய்யும்போது இங்கு பாராட்டிப் பேசுகிற எதிர்கட்சியைச் சார்ந்த ஒரு சிலர் அங்கு கூட்டம்போட்டு பேசும்போது பஸ்களை எடுத்தது சரிதான் ஆனால் எடுத்த முறைதான் சரி இல்லை என்று முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். எல்லாப் பஸ்களையும் தேசியமயமாக்கும் பணியில் நம் அரசு விரைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் தேர்தல் காலங்களில், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சரி, நாம் மக்களிடம் சென்றபோது நாம் வேட்பாளர்களிடம் சொல்லியுள்ளதை மறந்து விடக் கூடாது. அதை உள்ளத்தில் கொண்டு நம் அரசு செய்கிற நற்பணிகளுக்கு எதிர் கட்சிகளைச் சார்ந்தவர்களானாலும் சரி அல்லது யாரானாலும் சரி நல்ல ஆதரவினைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

கழக அரசு நீலகிரி மக்களுக்குப் பொங்கல் பரிசாக இப்படி பஸ்களை தேசியமயமாக்கியதற்கு அங்குள்ள மக்கள் சார்பாக என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இரண்டொரு குறைகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் தாலுகா ஆபீஸுக்கு

உதவித் தொகை பெற வருகிறவர்கள்—தாய்மார்கள், வயதானவர்கள் ஏராளமாக வருகிறார்கள். அவர்கள் அமரக் கூட இடம் இல்லாமல் குளிரிலும் மழையிலும் மிகவும் அவதிப்படுகிறார்கள். அப்படிப்பட்ட 500-க்கு மேற்பட்டவர் களுக்கு ஒரு சப் டிரஷரி ஏற்படுத்தித் தர திட்டம் ஒன்றினை அனுப்பி யிருக்கிறார்கள். அதை விரைவில் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் 3 தாலுகாவோடு கோத்தகிரி, குந்தா, பந்தலூர் ஆகிய மூன்று தாலுக்காக்களை ஆறு தாலுகாக் களாக மாற்றி அங்குள்ள மக்கள் அதனால் பயனடையும்படி, வசதி பெறும்படி செய்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கோத்தகிரியில் கீழ் கோத்தகிரி மற்றப் பகுதிகளை இணைத்து—இப்போது அங்குள்ள மக்கள் எந்த ஒரு வழக்கானாலும் குன்னூருக்கும், ஊதகைக்கும் செல்ல வேண்டியிருப்பதால் கோத்தகிரியிலேயே ஒரு கோர்ட் அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கமிஷன் வந்தபோது அதற்கான சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். இந்த அரசும் வேண்டியதைச் செய்து அங்கு ஒரு கோர்ட் ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நீலகிரி மாவட்டத்தில் மின்சாரக் குறைவு காரணமாக பயங்கரமானதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டின் நிலைமையும் அப்படியே இருப்பதால் அதற்காக நாம் வருத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளோம். ஆனால் தேயிலைத் தொழில் என்பது அப்படி அல்ல. தேயிலையைத் தேக்கி வைக்க முடியாமல் அழுகிப் போய் விடும். ஒருசில தேயிலைத் தொழிற்சாலைகள் வைத்திருப்பவர்கள் தங்கள் தேயிலையை மட்டுமே அரைத்துக் கொள்கிறார்கள். ஏழை எளியவர்கள் இரண்டு மூட்டை தேயிலையைக் கொண்டு சென்றால்—வேறு எந்தவிதமானதொரு விவசாயமும் அவர்களுக்கு இல்லை—சனிக்கிழமை விற்று ஞாயிறு அன்று வாங்கிச் சாப்பிட வேண்டிய நிலையில் உள்ளவர்கள்—தொழிற்சாலைகளில் அவற்றை அரைத்துக் கொடுக்காமல் அவர்கள் தலையில் வைத்துக்கொண்டு தொழிற்சாலை தொழிற்சாலையாக அலைகிறார்கள். காரணம், மின்சார சப்ளைக் குறைவுதான். மின்சாரம் போதிய அளவு இல்லாததால் நாங்கள் அரைப்பதற்கு வாங்கமாட்டோம் என்று மறுக்கும் ஒரு நிலை உள்ளது. இப்போது மழை வரும் அறிகுறி இருக்கிறது. பத்து பதினைந்து நாட்களுக்குள் மழை பெய்துவிட்டால் நிலைமை சோசமாகும் ஆபத்தான நிலை இருக்கிறது. எனவே அங்குள்ள அந்த ஏழை எளிய விவசாயிகளை, அந்தத் தேயிலையை நம்பி வாழ்பவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இருகரமும் கூப்பி பணிவன்போடு வேண்டிக் கொண்டு, எனது வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து மனம் இரங்கி முன்வரவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





***திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது பகுதியில் உள்ள விவசாயிகளின் கஷ்டங்களைப் பற்றிச் சரியாகக் கவனிக்காததன் காரணமாக ஒருசில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன்.

பாபநாசம் நீர் தேக்கத்திலிருந்தும், மணிமுத்தாறு நீர்தேக்கத்திலிருந்தும் சென்ற அறுவடை காலங்களில் சரியாக தண்ணீர் கிடைக்காததன் காரணமாக விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி பலதடவை இங்கு நான் எடுத்துச் சொல்லியும் அது கவனிக்கப்படவில்லை. பாபநாசம் நீர் தேக்கத்திலிருந்து கோடை காலத்தில் மின்சாரத்திற்குப் பயன்படும் தண்ணீர் அளவை கணக்கிட்டு பயிர் செய்ய வேண்டும். அட்வான்ஸ் கார் என்பது ஏப்ரல், மே மாதங்களுக்குள் அறுவடை செய்யக்கூடிய குறுகிய கால விதை களைப் பயிர் செய்யச் சொல்வது மிகவும் நலமாகயிருக்கும். அப்படியில்லாமல் நாலைந்து மாத காலப் பயிர் செய்தால் மேற்கத்திய பாசனத்திற்கு ஜூன் 1-ம் தேதி தண்ணீர் கொடுக்க வேண்டிய நிலை வரும்போது கிழ்ப்பாசனமும், பாதிக்கப்படும். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். வடக்குக் கோடை மேல் அழகியன் கால்வாய் பகுதியில் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. வாகைகுளம், மன்னார்கோவில் கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. வருகிற ஏப்ரல், மே மாதங்களில் அட்வான்ஸ் கார்-க்குத் தண்ணீர் கொடுப்பதாகத் தெரிகிறது. மின்சாரத்திற்குச் செலவழிக்கப்படும் தண்ணீரை கணக்கிட்டு அதற்குரிய ஏக்கரா மட்டும் பயிர் செய்யச் சொல்வதுதான் சரியாகும். மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் மேற்கத்தியப் பாசனத்திற்காக தண்ணீர் சுமார் 50 அடிக்குக் குறையாது பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் வடக்கு கோடை மேல் அழகியான் கால்வாயில் நிரு மாடல் ஸ்கீம் முடிந்த பிறகும் முறை ஸிஸ்டம் இருந்து வருகிறது. மேற்படி கால்வாயில் கீழ் பாசனங்களுக்குத் தண்ணீர்கிடைக்கும் அளவில் லைனிங் வேலை செய்ய வேண்டுமென்று அந்தப் பகுதிமக்கள் அரசுக்கு கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். அதைத் தயவு செய்து விரைவில் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கார் விவசாயத்திற்கு லோன் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கொடுக்கும்போது காலம் தவறி கடன் வழங்குவதால் கூட்டுறவுச் சங்கம் மூலம் கொடுக்கப்படும் கடன்கள் விவசாயிகளுக்கு நன்கு பயன்படுவதில்லை. எனவே கூடுமானவரை யில் ஜூன் 1-ம் தேதிக்கு முன்னதாகவே அந்தக் கடன்களைக் கொடுத்தால்தான் காலா காலத்தில் அவர்கள் பயிர் செய்வதற்கும், உரங்கள் போன்றவை வாங்கு வதற்கும் உதவிகரமாயிருக்கும். எங்கள் பகுதியில் காலம் தவறி இரண்டு மூன்று மாதங்கள் கழித்து கொடுக்கப்பட்டது. இன்னும் ஒரு மாத காலத்தில்

[திரு. ச. சங்குமுத்துத் தேவர்] [1973 பிப்ரவரி 10

அழுவடை இருப்பதால் இந்த பாகம் பள்ளி பார்ப் பாத வாக்கில் வசூல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அம்பாசமுத்திரம் பகுதியில் அநேகக் குளங்கள் தனியார் கையில் இருக்கின்றன. குளம் ஒருவருக்கு, குளப் பாசனம் பலருக்கு என்றிருப்பதால் குளத்துத் தண்ணீர் அழிக்கப்படுகிறது. குத்தகைக்கு எடுக்கிறவர்கள் குளத்தில் உள்ள ஆயக்கட்டுகளின் பயிர்களைக் கவனிக்காது அழித்து விடுகிறார்கள். இதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. எனவே இப்படிப்பட்ட குளங்களை எல்லாம் அரசாங்கமே முழுப்பொறுப்பு ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அநேகக் குளங்கள் மானாவாரிக் குளங்களாக இருக்கின்றன. அந்தக் குளங்களை எல்லாம் அரசாங்கமே ஏற்று மராமத்து செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. மேலும் எங்கள் பகுதியில் அநேகக் கிராமங்கள் இனாம் கிராமங்களாக இருப்பதால் விவசாயிகளைப் பொறுத்த வரையில் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான கடன்களை அரசாங்கத்தின் மூலம் வாங்குவதற்கு பல கஷ்டங்கள் இருந்துவருகின்றன.

இனாம் கிராமங்களில் அபிவிருத்தி வேலைகள் எதுவும் சரியாகச் செய்ய முடியவில்லை. இந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தை அரசு விரைவில் அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது 20 சதவிகிதம் நெல் சர்க்காருக்கு லெவி கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. நெல்லுக்குக் குறைந்த விலை தான் கொடுப்பேன் என்று மில் சொந்தக்காரர்கள் சொல்வதால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு நெல் விலை கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுப்பதாகப் பேசப்படுகிறது. எங்கள் பகுதியில் சேர்வலாறு ஸ்கீம் என்று பாபநாசம் பக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வேலை முழுமையாகச் செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எதனால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அங்கே பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கி வேலை இல்லாமல் வாழ்கிறார்கள். அந்த வேலையைத் தொடங்கி, உடனே அதை முடிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).



1973 பிப்ரவரி 10]

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையை நான் ஆதரிக்கிறேன், பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் மூதறிஞர் இராஜாஜியின் முடிவு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நன்றி மறந்தவர்கள் நாள்தோறும் நாட்டிலே பெருகிக் கொண்டிருக்கிற நேரத்தில் நன்றி மறப்பது நன்றன்று என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற வகையில் அது அமைந்து இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

பாராட்டுகின்ற நேரத்தில், என்ன இருக்கிறது பாராட்டுவதற்கு என்று எதிர் வரிசையில் இருப்பவர்கள் எழுப்பிய வினாக்களும் என் காதில் விழாமல் இல்லை. என்ன இருக்கிறது என்று கேட்பவர்களுக்கு என்ன இல்லை என்ற கேள்வியை நான் விடையாகத் தருவதற்கு ஆசைப்படுகிறேன்.

"கெடுப்பதூ உம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூ உம் எல்லாம் மழை" என்ற குறளுக்கு

கெடுப்பதூ உம் என்று சொல்வதற்கு பெய்யாமல் கெடுத்தது என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாமழை பெய்யாமலும் கெடுத்து இருக்கிறது, பெய்தும் கெடுத்து இருக்கிறது. அதை நன்குணர்ந்து நம் அரசு ரூ. 40 கோடி நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்பதைக் கணக்கில் கொண்டு, இந்திய அரசிடம் ரூ. 25 கோடி கேட்டு இருக்கிறது. அதை வைத்து நல்ல முறையில் செயல்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்காகப் பாராட்டுகிறேன்.

அடுத்ததாக, அன்றாடப் பொருள்களைச் சில்லறை விற்பனைக் கடை மூலம் விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் பற்றிப் பேசுகிறபோது அம்மையார் அவர்கள் கணக்குக் கூட சரியாகப் பார்க்காமல் பேசினார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கணக்கைப் பற்றிப் பேச வேண்டாம். 500 இன்டு 500-ஐ பெருக்குவதிலே தவறி விட்டது. நான் அதை அப்போதே ஒப்புக்கொண்டு விட்டேன். 'சிலிப் ஆப் தி டங் இஸ் ஆல்வேஸ் காமன் டு ஆல்". ஆகவே, அதைப் பற்றிப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோ. இளங்கோவன்:** தவறு என்று ஒப்புக்கொண்டதற்கு நன்றி. இது போன்று சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் இன்றியமையாத பொருள்க [illegible] ய்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கணக்கு தவறு என்று சுட்டிக் காட்டினீர்கள். 25 லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களில் பாதி பேருக்குத் தான் கார்டு கொடுத்து இருக்கிறீர்கள். அதைத்தான் கேட்டேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அதை எத்தனை முறை தான் கேட்பீர்கள்? பல தடவைகள் கேட்டாகிவிட்டது!

**திரு. கோ. இளங்கோவன்:** 500 குடும்பங்கள் என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ 12½ லட்சம் மக்கள் பயன் பெறுகிறார்கள் என்று பொருள். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 25 லட்சம் மக்களுக்கு அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது போன்று மற்ற முக்கிய பகுதிகளிலும் இந்த அரசு அந்த ஏற்பாட்டைச் செய்து இருக்கிறது. அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலத்தடி நீரை பயன்படுத்துவதற்காக உலக வங்கியின் உதவியால் ஏற்பாடு செய்து வருவதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். நொடித்த பஞ்சாலைகளை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதற்கும் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் பாராட்டுகிறேன்.

மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வைச் சுட்டிக் காட்டி, மத்திய அரசு உதவி கொண்டு அதைப் போக்க முனைப்பாக செயல்பட்டு இருக்கிறது. அதற்காகப் பாராட்டுகிறேன். பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் திட்டத்திற்குச் சட்ட வடிவம் கொடுக்கப்படவிருக்கிறது. அதற்காகப் பாராட்டுகிறேன். இது போன்று பாராட்ட வேண்டுமென்று நினைத்தால், எத்தனைப் பாராட்டுகளை வேண்டுமானாலும் கொடுக்கலாம். அந்த அளவுக்கு ஆளுநர் உரையிலே இடம் இருக்கிறது. இருந்தாலும், ஒவ்வொன்றாகச் சொல்லி, சிலவற்றைச் சொன்னார்கள். ஊழல் குற்றச்சாட்டு இடம் பெறவில்லை என்று சொன்னார்கள். வள்ளுவன் சொன்னான்:

> "பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
> மக்கட் பதடி யெனல்"

ஆளுநர் அவர்கள் தமிழை அண்மையில் தான் படிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்று சொன்னாலும், இந்தக் குறளில் சொல்வதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு இருப்பதால், அதை விட்டு இருக்கிறார்கள் என்று கூறி, அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.





குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. தஞ்சை வங்கியைப் பற்றி சொல்லப் பட்டது. இல்லாத ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அது பற்றி சொல்லப்பட்ட நேரத்தில், பார்வார்டு பிளாக் மாண்புமிகு பெருமாள் அவர்கள் இல்லாத குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். அதை நிரூபிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்" குறள் சொல்கிறார்கள். அந்தக் குறளைப்

படித்து இருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குறள் கோனாட்சி இருந்த நேரத்தில் எழுதப்பட்டது. மாமன்னன் ஆட்சி நீடித்து இருக்க வேண்டும். நிலைத்து இருக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட, அக்கறைகொண்ட அமைச்சர்கள் அரசன் தவறு இழைக்கிற நேரத்தில் அரசன் இழைக்கும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவார்கள். அவர்களெல்லாம் இடிப்பாராக கருதப்பட்டார்கள். ஆனால் கோனாட்சி இருக்கிற காலத்தில் பக்கத்து நாட்டு மன்னன் எப்படி இந்த மன்னனைக் கவிழ்க்கலாம், அவன் மணி மகுடம் பறிக்கலாம் என்று பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அவர்களெல்லாம் கெடுப்பாராகக் கருதப்பட்டார்கள். நீங்கள் இடிப்பாராக இருக்க ஆசைப்பட்டால், இந்த நாட்டு மக்கள் உங்களைப் போற்ற வேண்டுமென்று கருதினால், இந்த அரசுக்கு நல்ல அறிவுரைகளைத் தாருங்கள், யோசனைகளைத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கெடுப்பவர்கள் பட்டியலில் இடம் பெறாதீர்கள், இடம் பெற வேண்டாம் என்று சொல்லி, ஆளுநர் பேரவையில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்று சொல்லி, விடை பெறுகிறேன். வணக்கம். நன்றி.

**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையில் ஏழை எளிய பாட்டாளி மக்களின் நல்வாழ்வு சீரும் சிறப்புமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் பல நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்ற காரணத்தினால், நான் அதை மனப்பூர்வமாக வரவேற்று ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

என்னுடைய மானாமதுரை தொகுதிக்கும் அதற்குக் கிழக்கே இருக்கும் பரமக்குடி தொகுதிக்கும் சேர்த்து வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே ஆரம்பிக்கப் பட்ட அந்தத் திட்டத்தில் ஓரளவுக்கு வேலை முடிந்து இருக்கிறது. பார்த்திபனூருக்கு கிழக்கே வரையில் வேலை முடிந்து விட்டது. வீரனூர் [illegible] அந்த வேலையை உடனடியாகத்

துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக பொதுப்பணி அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மானாமதுரைத் தொகுதியில் குறிப்பாக திருபுவனத்திற்கு அருகாமையிலே 1970-ம் ஆண்டு அரிசனப் பெருமக்களுக்கு நில ஆர்ஜிதம் செயவதற்குரிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று வரையில் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஆகவே, இங்கே இவர்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழக அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பிரமனூர் கிராமத்தில் சிவகங்கை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலத்தை பிரமனூர் விவசாயிகள் பரம்பரையாக விவசாயம் செய்து வந்தாலும், ஏற்கனவே அவர்கள் ஒரு பங்கை சிவகங்கை தேவஸ்தானத்திற்கு நெல்லாக கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது ஒரு சில காரணங்களினால் அது சரிவர நடைபெறவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, அந்தக் கோவில் நிலங்களையெல்லாம் பிரமனூர் விவசாயிகளுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலங்களுக்கு பட்டா வழங்குவதற்கு தேவஸ்தான சொந்தக்காரரான சிவகங்கை மாமன்னர் அவர்களும் அரசு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு பட்டாக்களை அந்த விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தன்னுடைய ஒத்துழைப்பு இருக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இராமனாதபுரம் மாவட்டம் பின்தங்கிய பகுதி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி. அதிலும் குறிப்பாக மானாமதுரை பகுதி எந்தத் தொழிலும் இல்லாத பகுதி. நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதி மக்கள் தொழிற்சாலை வேண்டும் என்று கோரிக்கொண்டு வருகிறார்கள். இந்த மாமன்றத்தில் அங்குள்ள பொது மக்கள் கோரிக்கையை பல தடவை வற்புறுத்தியிருக்கிறேன். அங்கே எந்தத் தொழிற்சாலையும் இல்லை. அந்தப் பகுதியில் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று தமிழக அரசைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மானாமதுரையில் நீண்ட நெடுங்காலமாக மக்கள் கோரி வந்திருக்கிற ஒரு பிரச்னை இருக்கிறது. அங்கிருக்கிற பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான ஆஸ்பத்திரியை அரசாங்க ஆஸ்பத்திரியாக ஆக்க வேண்டும் என்ற



கோரிக்கை விட்டோம். பொது மக்களுடைய கோரிக்கையை ஏற்று நம்முடைய தமிழக அரசு அதை அரசாங்க ஆஸ்பத்திரியாக ஆக்கியிருக்கிறது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அங்கே ஒரு எக்ஸ்ரே நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல திருபுவனம் யூனியனுக்குச் சொந்தமான ஆஸ்பத்திரியை அரசாங்க ஆஸ்பத்திரியாக ஆக்கியிருக்கிறார்கள். அங்கும் ஒரு எக்ஸ்ரே நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை, திருபுவனம் ஆகிய இரண்டு பெரிய நகரப் பஞ்சாயத்துகளில் குடி தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டத்தை அங்கே உடனடியாகக் கொண்டு வந்து அமுல் செய்ய வேண்டும் என்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருபுவனத்தில் நீண்டகாலமாக இருக்கிற இன்னொரு பிரச்னை, அங்கே ஆண்களும், பெண்களும் ஒரே பள்ளியில் படிக்கிறார்கள். அதனால் சில நேரங்களில் சில சர்ச்சைகள் ஏற்படுகின்றன. அது ஒரு பெரிய பிரச்னைக்குரிய காரணமாக இருப்பதினால் பெண்களுக்கு என்று ஒரு தனி உயர்நிலைப்பள்ளி அங்கே ஏற்படுத்த வேண்டும். அதைச் செய்ய வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய மானாமதுரை தொகுதியிலே ரோடுகள் போக்குவரத்து வசதி இல்லாத அளவுக்கு இருக்கிறது. இப்பொழுது கிராம நலத் திட்டத்தின் கீழ் தார் ரோடு போட தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. கடுகர்கடை என்ற ஊரில் பொது மக்கள் திருபுவனம் கால்வாயைத் தாண்டி வரவேண்டியிருப்பதன் காரணத்தினால், ஆண்கள் வேஷ்டியை தலையில் சுற்றிக்கொண்டுதான் கால்வாயை தாண்ட வேண்டியிருக்கிறது. சுதந்திரம் வந்து 20, 25 ஆண்டுகளுக்குப் பிறகு கூட ஆண்கள் கோவணத்தைக் கட்டிக்கொண்டு வேஷ்டியை தலையில் சுற்றிக் கொண்டு

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

தண்ணீரைக் கடக்க வேண்டியிருக்கிறது. இதை மூன்றாவது தடவையாக இந்த மாமன்றத்தில் சொல்கிறேன். இனியாவது கிராமங்களில் தார் ரோடு போடுகிற திட்டத்தின்கீழ் இதைச் சேர்த்து இந்த அவல நிலையைப் போக்க வேண்டும். அதைப்பற்றி திருப்பித் திருப்பி பல முறை இங்கே சொல்லி இருக்கிறேன். இதை விரைவாகச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கானூர், மடப்புரம் வழியாக திருபுவனம் வருகிற ரோடு, பிரமனூர் ரோடு, முதுவந்திடல் மேல்சொறிக்குளம் ரோடு ஆகியவைகளுக்கும்,

கட்டிக்குளம், தேனாபுதுக்கொட்டை, தின்னக் கண்ணனூர் ஆகிய கிராமங்களுக்கும் தார் ரோடு போடும் வேலையை அரசு இந்த ஆண்டே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் ஊழல், ஊழல் என்று பல பேர் பேசினார்கள். ஆனால், அந்த ஊழலைப் பற்றிப் பேசியவர்கள், அந்த ஊழலுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களே இன்றைக்கு இந்த மன்றத்தில் இல்லை. அவர்கள் முதலில் வருகிறபொழுது மிக ஆர்பாட்டமாகவும், ஆடம்பரமாகவும் இங்கே வருகிறபொழுது தெரிந்தது. இப்பொழுது அவர்களை நம்மால் பார்க்க முடியவில்லை. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால் கிராமப்புறத்தில் ஒரு கதை சொல்வார்கள். புது மாடு வாங்கிக் குளிப்பாட்டும் கதை என்று சொல்வார்கள். புது மாடு வாங்கிக் குளிப்பாட்டுவது என்று சொன்னால், கிராமப்புறத்தில் ஒரு விவசாயியின் வீட்டில் ஏதாவது மாடு வாங்கினால், மாடு வாங்கிய வீட்டில் இருக்கிற பையன்கள், பொடியன்கள், சிறியவர்கள் என்ன செய்வார்கள் என்றால், ஒரு நாளைக்கு 20 தடவை வைக்கோல் போடுவார்கள், 15 தடவை தண்ணீர் காட்டுவார்கள், 7 தடவை தவிடு வைப்பார்கள், 8 தடவை பருத்தி விதை வைப்பார்கள். முதல் நாளைக்கு அப்படி இருக்கும். காலையில் மாட்டைக் குளிப்பாட்டி, பொட்டு வைத்து, மாட்டைக் கொண்டு வந்து கட்டுத்துறையில் கட்டுவார்கள். ஆனால் 10, 15 நாட்களுக்குப் பிறகு 20 தடவை வைக்கோல் போடுவது 10 தடவையாகக் குறைந்து போய்விடும். இன்னொரு பத்து நாட்கள் கழித்தால் அது இன்னும் குறைந்து 2 தடவையாகப் போய்விடும். அதற்குப் பிறகு மாட்டுக்கு வைக்கோல் வைக்க வேண்டும் என்று அந்த வீட்டில் இருக்கிற கிழவன், கிழவி சொன்னால் கூட, 'உனக்கு வேலை இல்லை' என்று சலித்துக் கொண்டு சொல்லிவிட்டுப் போய் விடுவார்கள். அதைப்போலத்தான் இருக்கிறது. குற்றச்சாட்டு சொல்பவர்கள் வேகமாக ஒரு நாளைக்கு 20, 30 தடவை சொன்னார்கள், பிறகு 10, 8 தடவை சொன்னார்கள், பிறகு 4, 2 தடவை சொன்னார்கள். இப்பொழுது சொல்வதற்கு நாதி இல்லாமல் போய்விட்டார்கள்.

வெளியே பெரிய ஆர்பாட்டத்தோடு ஒரு காலத்தில் சொன்னார்கள். அந்த ஆர்ப்பாட்டப் பேச்சை மக்கள் நம்பவில்லை. புது மாடு வாங்கி குளிப்பாட்டிய கதை போல ஆட்டம், பாட்டம், ஆர்பாட்டங்களெல்லாம் அடங்கி, ஒடுங்கி எங்கேயோ ஒரு மூலையில் போய் உட்கார்ந்து விட்டார்கள். அப்படிப் பட்டவர்கள் பிரச்னையை இங்கே வந்து சொல்லாமல் எங்கேயோ போய் சொல்ல வேண்டிய நிலைமைக்குப் போய் விட்டார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது



உள்ளபடியே வருத்தப்படுகிறேன், வேதனைப்படுகிறேன் என்று சொல்லி, தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, இந்த அளவோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். இந்தச் சபையிலே இதுவரையிலும் பல்வேறு கருத்துக்கள் காரசாரமாகவும், அனல் தெரிக்கவும் பேசப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே கடைசியாகப் பேசுகிறபொழுது யாரும் சொல்லாததை, புதிய கருத்தைச் சொல்ல முடியாதிருந்தாலும், சில கருத்துக்களை நான் சொல்ல முன்வருகிறேன்.

இன்றைக்கு நாட்டிலே முக்கியமான பிரச்னை மக்கள் முன்னாலே இருப்பது வேலையில்லாத் திண்டாட்டம், முழு வேலையின்மை, விலைவாசி ஏற்றம் ஆகிய மூன்றும் தான். இவைகளைக் கருத்தில் கொண்டு எப்படி இவைகளை எதிர் காலத்தில் சமாளிக்க இருக்கிறோம் என்பதைப் பற்றி தெளிவான முறையில் ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். கடந்த பல ஆண்டுகளாக அரசின் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக நாட்டிலே ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி, அந்த வளர்ச்சியின் நிமித்தம் நாட்டிலே ஏழ்மை போக்கப்படவில்லை. இல்லாதவர்கள் இல்லாதவர்களாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு வருங்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆலோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி பல ஆண்டுகளாக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பலன் அளிக்கவில்லை. குறிப்பாக ஆட்சியில் இருக்கிற கட்சியினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே விலைவாசியைக் குறைப்பதற்காகப் போராட்டம் நடத்தியவர்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு—இன்றைக்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் விலைவாசி குறைந்திருக்கிறதா என்றால் இல்லை. ஆளுநர் உரையிலே விலைவாசிப் பிரச்சினை மாநிலத்தை மட்டும் பொறுத்ததல்ல; அனைத்திந்தியப் பிரச்சினை என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். முழுக்க முழுக்க, மாநில அரசால் மட்டும் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது என்பது சரிதான். மத்திய அரசாங்கம் கடந்த பல்லாண்டுகளாக போட்ட ஐந்தாண்டுத் திட்டங்களினால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டு, அதனால் நாட்டிலே தொழில் ஏற்பட்டு, பணப் புழக்கமும் ஏற்பட்டது. பணப் புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையிலே அரசு வரி

விதிப்புக் கொள்கை, சிறு சேமிப்புத் திட்டங்களை மேற்கொண்டாலும், நாட்டிலே கள்ளப் பணத்தைக் கையிலே வைத்துக்கொண்டு நாட்டின் பொருளாதாரம் சீர்கேட்டையும் முறையில் ஒரு சிலர் நடந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விலைவாசியைப் பற்றி சரியான கட்டுப்பாடு தேவை என்று சொன்னார்கள். விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது என்றால், எல்லாப் பொருள்களிலும் ஏறிக்கொண்டிருக்கிறது இல்லையா, (குறுக்கீடு). அவர்கள் ஆம் என்று சொல்கிறார்கள். எல்லாப் பொருள்களுமே விலையேறிக்கொண்டிருக்கிறது என்றால், அதன் பொருள் பணத்தின் மதிப்பு குறைந்து கொண்டிருக்கிறது என்றாகிறது. பொருளாதாரத்தில் 'லா ஆஃப் சப்ளை அண்ட் டிமாண்ட்' என்ற விதி இருக்கிறது. எப்போது ஒரு பொருளை அதிகமாக உற்பத்தி செய்கிறோமோ, அதன் மதிப்பு குறையும். உற்பத்தி குறையக்கூடிய பொருளின் மதிப்பு அதிகமாகும். அதன்படி இப்போது ரூபாயின் மதிப்பு குறைந்திருக்கிறது என்றால், அதிகமாக பணம்—அதாவது காகித நோட்டுகளை உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்று அர்த்தம். முதல் ஐந்தாண்டுகளில் 800 கோடி ரூபாய், அதற்கடுத்து ஆயிரம் கோடி ரூபாய், அதற்கடுத்து 3,000 கோடி, 4,000 கோடி, இப்போது 5,000 கோடி என்ற அளவுக்குக் காகித நோட்டுகளை உற்பத்தி செய்திருக்கிறார்கள். ஆகவேதான் பணத்தின் மதிப்பு குறைந்து, பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: பணப் பெருக்கத்தினால் மட்டும் விலையேறி விட்டது என்று சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது. நீங்கள் பொருட்களை உற்பத்தி செய்வதிலே கவனம் செலுத்தவில்லை. அதனால்தான் இப்படி விலைவாசி உயர்ந்திருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அமைச்சரவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது இந்த நோட்டுப் புழக்கத்தை அதிகப்படுத்தியதால் தான்—காகித நோட்டு உற்பத்தி பெருகியதால்தான்—விலைவாசி உயர்ந்துவிட்டது என்ற கருத்தை அவர்கள் நீண்ட நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டிலே இருக்கின்ற பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படிதான், அவர்களுடைய அட்வைஸ்படிதான் மத்திய அரசாங்கம் நோட்டுகளை அச்சடித்து புழக்கத்திற்குக் கொண்டு வருகிறார்கள். இந்த அரசாங்கமானாலும் சரி, அல்லது வேறு எந்த அரசாங்கமானாலும் சரி, பொருளாதார நிபுணர்களின் கருத்தின்படிதான் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள். அதனால் அதிலே நாம் குறை கூற





முடியாது. நமது நாட்டிலே fiorum of Free Enterprise இருக்கிறது அவர்களால் சுயேச்சையாக தொழில் நடத்த வேண்டும்; கட்டுப்பாடு கூடாது; பிளான் கூடாது; திட்டம் கூடாது என்று சொல்லப்படுகிறது. அதனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் காகித நோட்டுக்களை அச்சிட்டதால் விலைவாசி உயர்ந்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. 25 ஆண்டு காலமாக விலைவாசி குறையவில்லை. வரவர அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. நாம் அதை ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்திக் கொண்டுவரவில்லை.

இன்றைக்கு இதைப்பற்றி பிளானிங் கமிஷன் ரொம்பத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து, விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் ஒரு 'ஸ்டேட் டிரேடிங்' அமைப்பை அரசாங்கம் ஏற்படுத்தி, நடைமுறைப் படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறது; அதை வலியுறுத்தியிருக்கிறது. அதற்காகத்தான் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்னால் அதற்கான ஸ்தாபன அமைப்புகளைப் போட்டுவிட வேண்டுமென்று மத்திய சர்க்கார் தீவிரமாக முயற்சி செய்து வருகிறது.

விலைவாசி ஏற்றம், சம்பள உயர்வு என்பது மாறி மாறி தொடர்ந்து வரும் சக்கரமாகத்தான் இன்றைக்கு இருந்து வருகிறது. விலைவாசி உயர்ந்தவுடனே, தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் சம்பள உயர்வு வேண்டுமென்று போராட்டம் நடத்துகிறார்கள். சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தவுடன் மறுபடியும் விலைவாசி உயர்ந்துவிடுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, பொருளாதாரத்திலே நோட்டுப் புழக்கம் அதிகமானதினாலே விலைவாசி ஏறவில்லை என்று சொல்கிறார்கள். அதோடு 'லேசி ஃபெயர்', 'ஃப்ரீ என்டர்பிரைஸ்' வேண்டுமென்றும் சொல்கிறார்கள். பொதுவாக பொருளாதாரத்தில்,

"N. V. is equal to P.T. Money printed into velocity of circulation should be equal to total turnover and prices."

என்று இருக்கிறது. ஆகையினால் உற்பத்தி பெருகவில்லை, அதனால்தான் விலையேறிவிட்டது என்பது ஒரு வாதம். உற்பத்திப் பெருக்கத்தில் 'சோஷியல் ஜஸ்டிஸ்'—சமுதாயத்தில் நீதி வேண்டுமென்று நாம் சொல்கிறோம். ஃப்ரீ என்டர்பிரைஸ் இருக்கவேண்டுமென்று அவர்கள்—முதலாளித்துவத்தை விரும்புகிறவர்கள் சொல்கிறார்கள். உற்பத்திப் பெருக்கத்தில் இப்படி இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. உற்பத்திப் பெருக்கம், பணப் புழக்கம் இவைகளின் அடிப்படையில்தான் பொருளாதாரம் அமைந்திருக்கும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நான் கூறுவது என்னவென்றால் ‘டெஃபிஸிட் ஃபைனான்ஸிங்’ என்ற நிலை வரும்போதுதான் நோட்டு அச்சடிக்கப்படுகிறது. ஆகையால் அது தவிர்க்க முடியாத ஒன்று. பொருளாதார வளர்ச்சித் திட்டத்திற்கு நாம் அதைச் செய்துதான் ஆகவேண்டும். பொருளாதார நிபுணர்களும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது நாம் செய்ய வேண்டியது, இருக்கின்ற நிலையில் எதை, எப்படி செய்வது என்பதுதான் அதற்கு முதல் படியாக அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தி, விலையேற்றத்தைத் தடுக்கும் ஒரு திட்டத்தை நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து பலராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இம்மாதிரி முயற்சிகளில் மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அதிலே நம்முடைய மாநில அரசுக்கு கருத்து வேறுபாடு இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொள்கை அளவிலே அதை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டதை நடைமுறையில் செயல்படுத்த தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விலைவாசி பற்றிக் கூறுகின்றபோது ஒரு கருத்து இங்கே சொல்லப்பட்டது. அதாவது, நெல் விலையை நாம் நிர்ணயம் செய்தால், அதற்கு அதிகமாகவே சில சமயங்களிலே விலையேறிவிடுகிறது. இதற்கு காரணம் நாட்டிலே இடைத்தரகர்கள் இருப்பதுதான். அவர்கள் நெல்லை கைப்பற்றி, பதுக்கி வைப்பதால்தான் விலை அதிகமாகிவிடுகிறது. அதனால் கஷ்டப்படுகிறவர்கள் சாதாரண ஏழை மக்கள் தான் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. சாதாரண மக்களுக்குக் கிடைக்கின்ற ஊதியத்தில் பெரும் பகுதி உணவுப் பண்டங்களில்தான் செலவழிக்கப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு ஒரு நிர்ணய விலையில் உணவுப் பண்டங்களை விநியோகம் செய்தால், அவர்களின் வாழ்க்கைச் செலவு கடுமையாகக் குறைந்துவிடும். அப்படிக் குறையுமானால் பொருட்களின் விலையில் இப்படிப்பட்ட அமைதியற்ற நிலை இருக்காது. ஆகையினால் அத்தியாவசியப் பண்டங்களைக் கொள்முதல் செய்து அரசாங்கமே விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்; நிர்வாக அமைப்பிலே அதற்கு வகை செய்ய வேண்டும். அரசாங்கம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டுகிறது. ஒரு வகையிலே பார்த்தால் தயக்கம் காட்டுவதிலும் நியாயம் இருக்கிறது. ஆனாலும் தயக்கம் காட்டுகின்றபோது மக்களுக்குப் பாதகம் ஏற்படுகின்ற நிலை





இருக்கிறது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். ஆகவே, அரசாங்கம் தயக்கம் காட்டாமல் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, துணியை எடுத்துக்கொள்வோம். பஞ்சு விலை குறைவாக இருக் கிறது. ஆனால் நூல் விலை ஏறியிருக்கிறது. ஆகையினால் நாம் பஞ்சாலைகளைத் தேசியமயமாக்கவேண்டும். மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் உணவு, உடை, உறையுள் இந்த மூன்றையும் வரும் ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் செய்துவிட வேண்டுமென்று மத்திய அரசு கருதுகிறது. மாநில அரசும் அதற்கு ஒத்துழைப்பு தரவேண்டும். இந்த விஷயத்தில் மத்திய அரசுக்கு விரோதமாக இந்த அரசு செயல்படாது என்று சொல்கிறார்கள். உங்களுக்கும் மத்திய அரசுக்கும் விரோதம் கிடையாது. அதனால் உங்களுக்கு எதிர்ப்பாக அவர்கள் இருக்கமாட்டார்கள். அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இப்போது தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது என்றால், அதை ஆதரிக்க மத்திய அரசு தயாராக இருக்கும் எங்களைப் போன்ற எதிர்க்கட்சிகள் அந்த ஆட்சி பொறுப்பிலே இருக்கவேண்டுமென்று விரும்புவதில் தவறு இல்லை. ஆனால் அரசுக்கு அரசு அந்தமாதிரி எண்ணம் இருக்க முடியாது. முன்னேற்றக் கழகம் இங்கே இருக்கிறது. அது நல்ல காரியங்களைச் செய்யும் என்றால், அப்படிப் பார்க்கின்ற பொழுது, மத்திய அரசு எங்களுக்கு எதிரிடையாக இருந்து கொண்டு காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறது. எங்களுக்குத் தரப்படுகின்ற பணத்தை சரியாக தரவில்லை என்று நமது அரசு தரப்பிலே இருந்து சொல்லப்படுவதில்லை. அதற்குப் பதிலாக மத்திய அரசு என்ன சொல்கிறதோ அதைத்தான் கடைப்பிக்கிறேன் என்று மாநில அரசு செய்து கொண்டுவருகிறது. ஆகவே, மத்திய அரசுக்கும் மாநில அரசிற்கும் இழுபறி, வம்பு கிடையாது. ஆனால், மத்திய அரசை பெரிய டார்ஜெட்டாக வைத்து, 4, 5 தினங்களாக இங்கே பேசிய உறுப்பினர்கள், மத்திய அரசு ஏதோ பெரிய பூதாகாரமாக இருந்துகொண்டு இருப்பது போலவும், இங்கே மக்களுக்கு விரோதமான காரியங்களைச் செய்து கொண்டிருப்பது போலவும் பேசினார்கள். அது சரியான கருத்தல்ல.

மத்திய சர்க்கார் என்பது நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாகும். அது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டுதான் செயல்படும். அத்தோடு கூட தமிழகத்திலே அரசாட்சியிலே இருக்கி க்ட்சியை நீக்கி தங்கள் கட்சியின் ஆட்சி இங்கே வரவேண்டும் என்ற கருத்து அவர்களுக்கும் இருக்கும் என்ப தால் அவர்கள் மக்களுக்கு விரோதமான காரியத்தைச் செய்யமாட்டார்கள்

அப்படி ஏதாவது மத்திய அரசு மாநில அரசிற்கு எதிரான காரியங்களைச் செய்கிறதா என்றால் அதை முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல தடவை அவர்கள் கூறுகின்ற குறிப்புக்களிலே இருந்து பார்க்கும்பொழுது, மத்திய அரசு அவர்களுக்கு இடைஞ்சலாக இல்லை என்றுதான் கூறியிருக்கிறார்கள். ஆகவே, சரியான முறையிலே இந்த அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் கட்டுப் படுத்துவதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்து, மனைக்கட்டு வழங்குவதற்கான திட்டத்தை நாம் மேற்கொண்டிருக் கிறோம். நாடு பூராவிலும் குறுகிய காலத்திற்குள்ளே மனைக் கட்டுக்களை வழங்க திட்டம் அமல் ஆக்கப்படுகிறது. அது முற்றிலும் பூர்த்தியாக இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகள் ஆகலாம்; காரணம் அதிகாரிகள் அதிலே நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே முனிசிபாலிட்டி எல்லைக்குள்ளே இருப்பவர்களுக்கு மனைக்கட்டுக்களை வழங்க இன்னும் அரசாங்கம் உத்தரவு போடவில்லை. எனவே, முனிசிபாலிட்டி எல்லைக்குள் இருப்பவர்களுக்கும் மனைக்கட்டுக்களை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது விவசாயத்திலே உற்பத்திப் பெருக்கமானது நமக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். இன்றைக்கிருக்கும் வேலையில்லாத் திண்டாட் டத்தைப் போக்க வேண்டுமானால், விவசாய உற்பத்தியில்தான் வேகமாக நாம் கவனம் செலுத்தவேண்டும். இந்த விவசாயப் பகுதி தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக் கூடிய நிலைமையிலே இருக்கிறது. அதிலே நாம் முழு கவனம் செலுத்த வேண்டுமென்று பல ஆண்டுகளாக இந்தச் சட்ட சபையிலே நான் வலியுறுத்தி வருகிறேன். நம்முடைய நாட்டிலேயுள்ள பூமிகளை எல்லாம் மூன்று போகம் செய்யக்கூடியதாக ஆக்க முடியும். அதற்கான நில மாற்றங்களை நாம் செய்தாக வேண்டும். நில உடைமை என்ற பெயரால் நம் மக்களுக்கு இருக்கும் நிலங்கள் எல்லாம் துண்டு, துண்டாகச் சிதறிப்போய் இருக்கிறது. அதை எல்லாம் கன்சாலிடேட் பண்ண வேண்டும். அதை நான் பல வருஷங்களாகக் கூறிக் கொண்டு வருகிறேன். மத்திய அரசு கூட பிளானிங் கமிஷனிலே அதிகமாக இது பற்றி வலியுறுத்தி வருகிறார்கள். பஞ்சாபிலே நம்மைக் காட்டிலும் அதிகப்படியாக உணவு உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய, நிலங்கள் எல்லாம் ஓரிடமாக ஆக்கப்பட்டிருப்பதுதான். ஏக்கருக்கு அதிகப்படியான உற்பத்தியை ஒன்றும் அவர்கள் நம்மைவிட ஆக்கிவிடவில்லை. எனவே, அதே நிலை இங்கே வர நாம் முயற்சி செய்யவேண்டும். பிளானிங் கமிஷனிலே





இதற்காகத் தொகை ஒதுக்கப்பட்டு அது இங்கே செலவழிக்கப்படாமல் இருக்கிறது. அதுபற்றி இங்கே இருந்து செல்லும் செயலாளர்கள் வெறுமனே வாதித்து விட்டு வருகிறார்களேதவிர, அதற்காக என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறார்கள் என்பதுபற்றி நம்மால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து, உரத் தட்டுப்பாடு. உரம் எல்லாம் பிளாக் மார்கட்டிலே விற்கப் படுகிறது. இந்த வருஷம் நமக்குக் கிடைக்க வேண்டிய நைட்ரஜன் போன வருஷம் கிடைத்ததைக் காட்டிலும் குறைவாகக் கிடைத்திருக்கிறது என்று கூறினார்கள். அப்படிக் கூறினாலும், இந்த உர விநியோக முறை சரியாக இல்லாததால் கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைக்காமல், மற்றவர்களுக்குக் கிடைத்து அது தவறான முறையிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை மாற்றி அமைக்கவேண்டும். அதை கார்டு முறையிலே தேவையானவர் களுக்குத் தேவையான உரத்தைக் கொடுக்கவேண்டும் என்ற கருத்து பல்வேறு இடத்திலே பேசப்படுகிறது. அதை விவசாய அமைச்சரும் ஒத்துக் கொண் டிருக்கிறார்கள்.,

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைக் கூற ஆசைப் படுகிறேன். அங்கே கூட்டுறவு நாணயச் சங்கத்திலே இருந்து கடன் கொடுக்கிறபொழுது அந்தக் கடனிலே ஒரு பகுதி உரமாகவும், மற்றொரு பகுதி பணமாகவும் கொடுக்கப்படுகிறது. அப்படி இவர்கள் வற்புறுத்தி ஒரு பாதியை உரமாகக் கொடுப்பதால், சில பேர் பணம் தேவை என்று நினைக்கிறவர்கள் உரத்தைப் பக்கத்திலே இருக்கும் வியாபாரிகளிடத்திலே விற்றுவிடுகிறார்கள். அன்றைய தினம் அப்படிப் போட்ட உத்தரவு சரி. காரணம், உரத்தை விவசாயிகள் எங்கே உபயோகிக்காமல் இருந்துவிடுவார்களோ என்பதற்காக அவர்களை வற்புறுத்த வேண்டி, உரத்தையும் பணத்தையும் கொடுத்தோம். இன்றைக்கு அவர்கள் எல்லாம் நிலத்திற்கு உரம் போடத் தயார் ஆகிவிட்டார் கள். அத்தோடு அரசாங்கத்திடம் போராடியாவது உரத்தை வாங்கி நிலத் திற்குப் போடவேண்டும் என்ற நிலையிலேதான் அவர்கள் இருக்கிறார்கள். நாம் வற்புறுத்த வேண்டிய நிலையிலே அவர்கள் இல்லை. எனவே, கூட்டுறவு நாணயச் சங்கத்தின் மூலமாகக் கொடுக்கும் கடனை இந்த அரசாங்கம் பண மாகவே கொடுக்க வேண்டும். உரத்தை அவர்கள் இஷ்டப்பட்டால் வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலையினை உருவாக்கினால் இந்தத் தவறை ஓரளவு நம்மால் தடுக்க முடியும். 100 சதவிகிதம் நாம் இப்படிக் கள்ளத்தனமாக விற்கும் உரத்தை நாம் தடுக்க முடியாவிட்டாலும், 50 சதவிகிதத்தைத் தடுக்க லாம். தனியாருக்கு இப்படி உரம் போகிறது என்றால், கடன் வாங்கும் பொழுது உரத்தைப் பெறுபவர்கள், அவர்களிடம் கொடுத்துவிடுகிறார்கள் என்பதுதான் உண்மை. எனவே, அரசு இதிலே ஒன்றைச் செய்யவேண்டும்.

தனியார் யாரும் உரத்தை விற்கக் கூடாது என்று தடை செய்யவேண்டும். அரசாங்கமே பூரா உர விநியோகத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி யாராவது தனியார் மீறி உரம் விற்பார்களேயானால், அந்தத் தனியார்கள் தண்டிக்கப்பட வேண்டும். அந்த மாதிரியான முறையிலே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரைப்பற்றி, இங்கே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கார்டு எல்லா இடங்களிலேயும் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது. பல்வேறு இடங்களிலே கொடுக்கப்படவில்லை. அதையும் சரியான முறையிலே விநியோகம் செய்ய, ஒரு விநியோக ஏற்பாட்டைச் செய்யும் முறையை உருவாக்கவேண்டும். இப்படி நான் விநியோக முறையைச் சொல்லும் பொழுது, அது நடப்பதற்கான ஸ்தாபன அமைப்பு நம்மிடம் கிடையாது. அந்த ஸ்தாபன அமைப்பை ஏற்படுத்தித் தேவைப்படுகின்ற உணவுப் பொருட்கள் எல்லாம் மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும் வகையிலே காரியங்களைச் செய்யவேண்டும். அப்படி அமைக்கப்படும் ஸ்தாபன அமைப்பு எந்த நோத்திலேயும் எந்தக் காரியத்தையும் செய்யக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். அந்த அமைப்பு கிராமப்புறம் தோறும் உருவாகும் நிலைமையினை சட்ட மூலமாக இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, என்னுடைய கிராமத்திலே சீனி விநியோகத்தை ஒரு பஞ்சாயத்துத் தலைவரிடம் கொடுக்கிறீர்கள் என்று வைத்துக்கொண்டால், அவர்கள் சரியாக எல்லோருக்கும் விநியோகம் செய்கிறார்களா இல்லையா என்பதை யாரிடத்திலே போய் சொல்ல முடியும். ஆகவேதான் இந்த விநியோகமுறை, கொள்முதல் முறை என்பவைகளிலே சரியான ஒரு ஸ்தாபன அமைப்பை ஏற்படுத்துவதிலே இந்த அரசு சிந்தனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, என்ன ஸ்தாபன முறை வேண்டுமென்று உறுப்பினர் விரும்புகிறார் என்பது எனக்குப் புரியவில்லை. இப்பொழுது சர்க்கரையை கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கொடுத்து விநியோகிக்கச் சொல்லுகிறோம். அவர்கள் தவறு செய்கிறார்கள் என்றால், அந்த ஊர் ஊராட்சி மன்றத் தலைவரிடம் கொடுத்து விநியோகிக்கச் சொல்லுகிறோம். அவர்களும் தவறு செய்தால், தனிப்பட்ட வியாபாரிகளிடம் கொடுத்து செய்கிறோம். அதை எல்லாம் விட்டுவிட்டு, வேறு என்ன ஸ்தாபன அமைப்பு வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஒரு கிராமத்திற்கு ஒரு அதிகாரியைப் போட்டுக் கண்காணிப்பது என்பது முடியாத ஒரு காரியம்.





**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** கண்டபடி அதிகாரிகளைப் போடுவதாலே பிரச்சினை தீர்ந்துவிடாது. நான் "ஸதாபன அமைப்பு" வேண்டுமென்று சொல்வது அடிப்படையிலே போட வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். ஒரு கிராமம் என்று எடுத்துக்கொண்டால், அந்தக் கிராமத்திலே பல்வேறு "டெவலப்மென்ட் ஒர்க்ஸ்" முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றும் வகையிலே அந்தக் கிராமத்திலே இருக்கும் இளைஞர்களைக்கொண்ட அமைப்பு பஞ்சாயத்து, கூட்டுறவு ஸ்தாபனம் போன்றவற்றைச் சேர்த்து ஒரு மத்திய ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டும். அவர்கள் மூலமாக எல்லோரையும் கலந்து சர்க்கரை சரியான முறையிலே விநியோகிக்கப்படுகிறதா என்று கவனிக்கச் சொல்லவேண்டும். ஏதோ கூடுமானவரையில் அதிலே இருக்கும் தவறுகளைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யலாம். 1 வயதிற்கு மேற்பட்டு 25 வயதிற்கு உட்பட்ட இளைஞர்களை எல்லாம் சேர்த்து "வாலன்ட்டரி கோர்" அதாவது தொண்டர் படை ஒன்றை அமைக்க வேண்டும். அவர்கள் பல்வேறு காரியங்களைச் செய்வதற்கான நிலைமையினை நாம் உருவாக்கவேண்டும். நம்முடைய அரசாங்கம் இளைஞர் அணி ஒன்றை ஏற்படுத்தியபொழுதே நான் சொன்னேன், அந்த அணியை நாட்டிலே பரவலாக விட்டுவிடாமல், ஒரு குறிப்பிட்ட ஏதாவது ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு கிராமங்களிலேயுள்ள ஸ்தாபனங்களைப் பயன்படுத்தி அவர்கள் நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்று சொன்னேன். இளைஞர்கள் எல்லாம் டெவலப்மென்ட் ஒர்க்ஸிலே பங்கு கொள்ளும் வகையிலே அது அமைக்கப்பட வேண்டும் என்று நான் சொன்னேன். கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பண விநியோகம் செய்வதைப் போல், இந்த முக்கியப் பொருட்களின் விநியோகத்தையும் நான் கூறிய முறையிலேதான் செய்யவேண்டும். அவர்கள் மூலமாகவே கொள்முதல் செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம். ஆகவே எனக்குத் தோன்றுவது இப்போதைக்கு இதுபோல ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டால், இதில் ஏற்படுகிற குறைபாடுகளைக்கூட நாம் நம்முடைய அனுபவத்தில் பின்னால் திருத்திக்கொள்ள வேண்டியதாகக்கூட இருக்கும். ஆகவே, இன்றைக்கு இதுபோன்ற ஒரு அமைப்பை உருவாக்க வேண்டுமென்பது என் கருத்து.

கவர்னர் உரையில் நதி நீரைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்குமலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் என்பதாக ஒன்றை அமைக்கலாம் என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் கங்கை காவேரி இணைப்பு என்பதாக நாட்டில் உள்ள நதிகளை எல்லாம் நாஷனல் க்ரிட் என்பதாக ஒருங்கிணைக்கிற ஒரு தேசிய அமைப்பு உருவாக்கக்கூடிய நிலையில் நாம் இருக்கிறபோது மேற்குமலைத்தொடர் மேம்பாட்டுக்கழகம் என்பதாக ஒரு அமைப்பை ஏற்படுத்துவது தேசிய அமைப்புக்கு எதிரிடையான கருத்தாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன்.

**திரு. செ. கந்தப்பன்:** கங்கை-காவேரி இணைப்பைப்பற்றிய ஆய்வை முடிக்கவே முப்பது ஆண்டு ஆகும் என்று சொல்லப்படுகிறதே.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அதில் உள்ள பணிகள் என்ன, அதன் பல்வேறு அமைப்புகளைப்பற்றி நிபுணர்கள் ஆராய்ந்து எடுக்கவேண்டிய முடிவுகள் பல இருக்கின்றன. ஆய்வு எடுக்க 5 ஆண்டு ஆகலாம், அதனை முடிக்க 20 ஆண்டு ஆகக்கூடும், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் தேவைப்படும். அதுபற்றிக் கொள்கை அளவில் ஒரு முடிவு உருவாகிற நிலையில் இதுபோன்ற ஒரு அமைப்பைத் தெரிவித்திருப்பது அதற்கு முரண்பாடான திட்டமாக இது அமையக்கூடாது என்பதனால்தான் நான் குறிப்பிட்டேன். கங்கை-காவேரி இணைப்புத் திட்டம் உருவானால் நமக்குத்தான் அதிகப்பயன். மிகவும் வறண்ட இராமநாதபுரம் போன்ற பகுதிகள் எல்லாம்கூட பயன்பெறும் ஆகவே அதனை நாம் வற்புறுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் பற்றி ஆளுநர் உரையில் இடம் பெற்றிருக்கிற காரணத்தினால் கங்கை-காவேரி இணைப்புத் திட்டத்திற்கு இந்த அரசு எதிராக இருக்கிறது என்கிற கருத்து எதிரொலிக்கிற வகையில் மாண்புமிகு உறுப்பினர் கூறியிருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும். கங்கை-காவேரி இணைப்பு என்பது பல ஆண்டுகளுக்கு முன்பாகவே சர் சி.பி. இராமசாமி ஐயர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்தாகும். அந்தக் கருத்தின் அடிப்படையில் மத்திய அரசும் விரைவில் அதுபற்றிய ஆராய்ச்சியினைத் துவங்கவேண்டும் என்பதாக நான் டெல்லி சென்ற சமயங்களில் பாசனத் துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ், அவர்களிடம் வற்புறுத்திவந்திருக்கிறேன். ஒருமுறை நானும், மத்திய அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் அவர்களும் இதுபற்றி நீண்ட நேரம் அவரிடம் விளக்கமாகப் பேசியிருக்கிறோம். வேறு ஒரு சமயத்தில் நானும், மைசூர் அமைச்சர் வீரேந்திரபடீல் அவர்களும், நமது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும், சட்டத்துறை அமைச்சர் அவர்களும் நீண்ட நேரம் விவாதித்திருக்கிறோம். தென்மாநில முதல் அமைச்சர் அவர்கள் எல்லாம் இதை ஏற்றுக்கொண்டு விரைவாக மத்திய அரசு ஆய்வுப் பணியைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த ஆய்வுப் பணிக்கு ஆகின்ற செலவில் ஒரு பங்கினை மாநில அரசு தரவேண்டுமென்றால், அதற்குக் கூடத் தயாராய் இருக்கிறோம் என்று திரு. கே. எல். ராவ் அவர்களிடத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கங்கை-காவேரி இணைப்புத் திட்டம்பற்றி இந்நாள்வரை செயல்படாமல், ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கு நாங்கள் வருந்துகிறோமே தவிர, அதை எதிர்க்கவில்லை. கங்கை-காவேரி இணைப்பு என்கிறபோது ஒரு இடத்தில்



இருந்து துவங்காமல் காவேரி-கோதாவரி இணைப்பு என்பதுபோல அங்கங்கே இதுபற்றிய பணிகள் துவங்கப்படவேண்டும் என்றும்கூட வற்புறுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்த அரசு அதற்கு எதிரியாக இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. அத்தகைய தேசிய அமைப்புக்கு மாறுபட்டதாக இது போய்விடக்கூடாது என்பதற்காகத்தான் குறிப்பிட்டேன்.

பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை வெளிக்கொணரும் திட்டத்திற்கு 11 கோடி ரூபாய் சிபார்சு செய்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அது எந்த அளவு பயன்படும் என்று தெரியவில்லை. நமக்கு வெளி நீர் கிடைக்காத போது க்ரவுண்டு வாட்டரைத்தான் முழு அளவுக்குப் பயன்படுத்துக்கொண்டாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நாம் கழிவு நீரைக் கடலில் கொண்டுபோய்விடுகிறோம். கழிவு நீரின் மேல்பகுதியைப் பயன்படுத்தி சிறிய பாசனங்களை நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். சிறுபாசனத் திட்டங்கள்பற்றி அமைச்சரிடத்தில் கேட்கிறபோது அவற்றுக்கு வேண்டிய அளவு தொகை இருக்கிறது என்றார்கள். ஒரு 9 கோடி ரூபாய் பெறுமான திட்டம் ஓராண்டுக்குமேலாகிறது, அதற்கு அனுமதி வழங்கி. அதை ஏன் செயல்படுத்தவில்லை? பணமில்லையா? காரணம் என்ன? சிறிய பாசனத் திட்டங்களை விரைவுபடுத்துவதன் மூலமாகத்தான் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கிற விவசாய மக்களுக்கு நாம் வீடு கட்டிக்கொள்ள மனைக்கட்டுகள் கொடுக்கிறோம். அது போதாது. நகரப் பகுதிகளில் எப்படி குடிசைமாற்றுவாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித்தருகிறோமோ, இங்கே ஒன்றுக்கு 9 ஆயிரம் ஆகிறது என்றால் கிராமப்பகுதியில் ஆயிரத்து ஐநூறு, இரண்டாயிரம் ரூபாய்க்குள்ளாவது வீடுகள் கட்டித்தர—மனைக்கட்டுகொடுத்த பிறகு வீடு கட்டித்தரும் திட்டத்தையும் எடுத்துக் கொள்ள அரசு முன்வரவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் விஸ்வரூபம் எடுத்திருப்பது படித்தவர்களிடையேதான் என்பதை நாம் அறிவோம். படிக்காதவர்கள் மாதத்திற்கு பத்து நாட்களாவது வேலை செய்கிறார்கள். இதற்குக் காரணமே நம்முடைய கல்வி அமைப்பில் உள்ள குறைபாடுதான். கல்வி அமைச்சர் அவர்கள் தாம் போகிற ஒவ்வொரு கூட்டத்திலும் அநேகமாக இப்போதுள்ள கல்வித்திட்டம்

சரியானது அல்ல என்பதை வற்புறுத்தி வருகிறார்கள். ஆயினும் இதுவரை ஒன்றும் அதை மாற்றி அமைக்கச் செய்யவில்லை. எப்படி உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் நாம் தீவிரக் கவனம் காட்டுகிறோமோ, அப்படி இந்தக் கல்விமுறையை மாற்றி அமைப்பதிலும் தீவிரக் கவனம் காட்ட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்போதுதான் வருங்காலம் நல்லமுறையில் அமையும்.

மின்சாரத்தைப்பற்றி மிக அதிகமாகப் பேசப்பட்டது. விவசாயம், தொழில் எல்லாம் அதிக அளவில் முன்னேற்றம் அடைய வேண்டிய நிலையில் இருக்கிற சமயத்தில் மின்சார உற்பத்தியிலும் அதிக கவனம் காட்டவேண்டும் என்கிற கருத்தில்தான் மத்திய அரசும் இருக்கிறது. ஆகவே, மாநில அரசு மின்சாரத்தை அதிக அளவில் உற்பத்தி செய்ய என்ன, என்ன திட்டங்களை எல்லாம் செயல்படுத்தவிரும்புகிறதோ, அவற்றை விரைவில் செயல்படுத்த முன்வந்தாகவேண்டும்.

அடுத்து, ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் 2 டாக்டர்களைப் போட்டிருக்கிறோம். வட்டாரத்தில் உள்ள மக்கள் எல்லாம் அங்கே வருவதில் உள்ள சங்கடங்களை உணர்ந்து—ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ஒரு டாக்டர் இருந்தால் போதும், இன்னொரு டாக்டரை அந்த வட்டாரத்திலேயே இன்னொரு பகுதியில் இருந்து சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தால், மக்களுக்கு அதிக அனுகூலமாக இருக்கும். இதனால் அரசுக்குக் கொஞ்சம் பணச்செலவு கூடும் என்றாலும் மக்கள் நலனைக் கருதி இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும்.

பஸ்களை தேசிய உடைமையாக்குவதுபற்றி ஒரு கருத்து. அதற்கு நாங்கள் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. ஆனால் நாடு பூராவிலும் உள்ள எல்லா தனியார் பஸ்களையும் எடுத்துக்கொண்டுவிடவேண்டும் என்பது என் கருத்து. ஆனால் பகுதி பகுதியாக எடுத்துக்கொள்ளும் வகையில் சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். கடைசியில் நமக்கு வண்டிகள் வரும்போது ஒன்றுகூட உருப்படியாக இருக்காது. பகுதி பகுதியாக எடுப்பதில் பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

இன்றைக்கு ஓரிரண்டு பஸ் வைத்து நடத்தக்கூடிய சிறு முதலாளிகள்
பி.ப. 1-30 இருக்கிறார்கள். வட்டிக்குக் கடன் வாங்கி இதை நடத்தக்கூடியவர்கள் இருக்கிறார்கள். எல்லோரையுமே பெரும் பணம் போட்டு நடத்தக் கூடியவர்கள் என்று சொல்லமுடியாது. தஞ்சை மாவட்டம் என்று எடுத்துக்





கொண்டால், அது 8-வது இடத்திலே இருக்கிறது. 8-வது இடத்திலே இருக்கின்ற அதை எடுப்பதற்கு இன்னும் 4 வருடம் அல்லது 3 வருடம் ஆகும் என்று வைத்துக் கொண்டால், இந்த 3 வருடம் வரையிலும் யாரும் அவர்களுக்குக் கடன் கொடுக்கமாட்டார்கள். கடன் கொடுக்கவில்லையென்றால் அவர்களால் பார்ட்ஸ் வாங்கமுடியாது. பார்ட்ஸ் போட முடியவில்லையென்றால் பஸ்கள் ஒழுங்காக ஓடமுடியாது. அந்த விதமான சூழ்நிலைகள் இருப்பதாலே படிப்படியாக எடுக்கப் போகிறோம் என்ற கருத்தை மாற்றி ஒட்டு மொத்தமாக எடுத்துவிட வேண்டும். இந்தத் திட்டத்தை இனி கைவிடவும் முடியாது: ஆகவே, படிப்படியாக என்பதைவிட . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கைவிடவும் முடியாது என்று வருத்தத்தோடு சொல்கிறார்களா? அல்லது கைவிடக்கூடாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்களா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** கைவிடக் கூடாது என்று தான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேனேயொழிய, கைவிடக்கூடாது என்று வருத்தமாகச் சொல்லவில்லை. அந்தத் திட்டத்தை கைவிட்டுவிடவேண்டுமென்று சொல்கிறவர்கள் நாங்கள் அல்ல. அதை முதலமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கமுடியாது.

இப்பொழுது மத்திய அரசு கமிஷன் நியமிப்பதுபற்றி காரசாரமாகக் கருத்து தெரிவிக்கப்பட்டது. பிரதமரிடம் உங்களுக்கு அதிகாரம் கிடையாது. இதை நீங்கள் செய்யமுடியாது என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு மக்கள் முன்னால் ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. அரசின் பேரிலே குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அந்த குற்றச்சாட்டுக்குப் பதில் அளித்ததோடு சரியாகப் போய்விட்டது என்று நீங்கள் கருதுவீர்களானால் அது சரியானதல்ல என்று கருத்து தெரிவிக்க விரும்புகிறேன். நடுநிலைமையில் உள்ளவர்தான் குற்றச்சாட்டு தவறு, இது நியாயமல்ல, இது தவறானது என்று கூற வேண்டுமே தவிர . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு அங்கத்தினர் எங்களால் மதிக்கப்படுபவர். நீதிவிசாரணை கேட்கிறோம், மறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். திருவாரூரில் தெற்குத் தெரு 94-ம் எண்ணுள்ள முதலமைச்சருடைய குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டுக்கு ஏராளமான பணம் செலவழித்து, புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது என்பது குற்றச்சாட்டிலே ஒன்று. எங்களுடைய பதிலில் அது உண்மையல்லவென்று படத்தையே தந்திருக்கிறோம். இதை விசாரிப்பதற்கு ஒரு நீதிபதி டெல்லியிலேயிருந்து வந்து விசாரிக்கவேண்டுமா? இதை அவர்கள் சொல்கிறார்கள், நீங்கள் ஒத்து

கொள்கிறீர்களா? இவ்வளவு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்களே, இந்த அவையிலே குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டுப் போவதற்குப் பதிலாக, தைரியமிருந்தால் யாராவது வெளியிலே சொல்லுங்கள். எழுதிக் கொடுத்தவர்களோ, கொண்டு போய்க்கொடுத்தவர்களோ, வேறு யாராவது வெளியிலே சொல்லட்டும் உடனே நீதிமன்றத்திற்குப் போகும், நீதிபதி விசாரணை தன்னாலே வந்து விடும். இதை ஒத்துக் கொள்ளக் கூடாதா? இப்பொழுதே இரண்டு மூன்று வந்திருக்கிறது. உயர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். அங்கு நிலைமை தெரியப்போகிறது. அதை ஏன் நீங்கள் ஏற்க மறுக்கிறீர்கள்? மக்கள் அதைப்பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஒரு குற்றச் சாட்டைப் பற்றி அவர் சொன்னார். அதிலே இன்னொரு குற்றச்சாட்டு, 25-வது குற்றச்சாட்டு. அதில், சமயநல்லூர் தெர்மல் பிளான்ட்டைப் பற்றி, ரூ. 110 லட்சத்திற்கு மெஷினரிஸ் வாங்கி, இப்பொழுது அதை ரூ. 59 லட்சத்திற்கு விற்றிருக்கிறார்கள் என்பது. அதனுடைய டெப்ரிஷியேட்டட் வால்யூ ரூ. 55 லட்சம். இந்த ரூ. 55 லட்சத்திற்கு விற்பதற்குப் பதிலாக ரூ. 4 லட்சம் ஜாஸ்தியாக வைத்து விற்றிருக்கிறோம் என்பது அவர்களுடைய பதில், இன்றைக்கு நான் அமைச்சர் அவர்களையே கேட்கிறேன். அதனுடைய மார்க்கெட் வால்யூ ரூ. 59 லட்சம் என்று சொல்கிறாரா? அங்கே இருக்கக் கூடிய சாமான்களில் செம்பு, ஸ்டீல்ஸ்தான் அதிகம். அன்றைக்கு அதனுடைய மதிப்பு ரூ. 1 கோடி 10 லட்சம் என்றால், இன்றைக்கு அதன் மதிப்பு ரூ. 4 கோடியாகும். இன்றைக்கு அதனுடைய டெப்ரிஷியேட்டட் வால்யூ ரூ. 2 கோடி. அதிகமாக விற்றிருப்பதாகச் சொல்கிறீர்களே, ரூ. 59 லட்சத்திற்கு விற்றிருக்கிறோம் என்று நீங்களே ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களே, இவ்வளவு குறைந்த விலைக்கு விற்றிருந்தால், அதற்கு என்ன காரணம்? . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரு திருத்தம். அதை விற்றோமா அல்லது டெண்டர் கோரி, யார் அதிகப் பணத்தைக் கேட்டார்களோ அவர்களுக்குக் கொடுத்தோமா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது சம்பந்தமாக 1970-71-ம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட்டை நீங்கள் பார்ப்பீர்களேயானால், அதனுடைய பல நிலைமைகளைப் பார்த்து பஞ்சாப் மாநிலத்திற்கு விற்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாப் மாநிலத்திற்கு ரூ. 30 லட்சத்திற்கு விற்றால்கூட நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒரு தனிப்பட்டவருக்குக் கொடுத்திருக்கிறீர்கள். ஒரு மாநிலத்தினுடைய சாமான்களை இன்னொரு மாநிலத்திற்குக் குறைந்த, விலைக்குக் கொடுக்கலாம். ஆனால் தனியாருக்கு ரூ. 1 கோடி, ரூ. 2 கோடி,





பெருமான சாமான்களை ரூ. 59 லட்சத்துக்கு ஏன் விற்றீர்கள் என்று கேட்பதிலே என்ன தவறு? இன்றைக்கு அவர்கள் சொல்லட்டும் அந்தச் சாமான்களுடைய விலை ரூ. 59 லட்சம்தான் என்று சொல்லட்டும். நாச்சிமுத்து செட்டியாருக்கு கொடுத்த தொகை ரூ. 59 லட்சம் என்று சொல்லலாம். பஞ்சாப் மாநிலம் ரூ. 42 லட்சத்திற்குக் கேட்டது என்று சொன்னார்கள், நான் சொல்லலாம், ரூ. 74 லட்சத்திற்குக் கேட்டார்கள் என்று. முதலில் அவர்கள் கேட்கவில்லை, பிறகு ரூ. 42 லட்சத்திற்குக் கேட்டார்கள் என்று சொல்கிறார்கள். அது குறைந்த விலை என்று டெப்ரிஷியேட்டட் விலையைவிடக் குறைந்தது என்று மீண்டும் டெண்டர் கேட்டதாகவும், அதில் ரூ. 40, ரூ. 46 லட்சம் என்று கேட்டார்கள் என்றும் அதுவும் டெப்ரிஷியேட்டட் வால்யூவுக்கு குறைவாகப் போய்விட்டது என்றும் அதனால் பொதுமக்களிடத்திலே வந்து கேட்டதாகவும், அப்பொழுது நாச்சிமுத்து செட்டியார் ரூ. 59 லட்சத்திற்குக் கேட்டார் என்றும் அது அதிகமான தொகையாகையால் கொடுத்தோம் என்றும் பதில் சொல்லியிருக்கிறீர்களே அது உங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதிலே என்ன விசாரணை வேண்டும்? நாங்கள் பகிரங்கமாகச் சொல்கிறோம். இந்த நிலையத்தைப் பற்றி ஆராய ஒரு குழு போடப்பட்டது. இன்னின்ன காரணத்தாலே அதை விற்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மூன்று முறை டெண்டர் கேட்டோம். பஞ்சாப் எலெக்டிரிசிட்டி போர்ட் கொடுத்த டெண்டர் தொகை புக் வால்யூவைவிடக் குறைவாக இருந்ததாலே, மீண்டும் டெண்டர் கேட்டோம். எதிலே தவறு என்று சொல்கிறீர்கள்? அந்தக் குழு ரிப்போர்ட்டிலே தவறா? அல்லது மூன்று முறை டெண்டர் கோரியது தவறா? இதை டெல்லியிலே இருக்கிற இந்திரா காந்தி விசாரிக்கப் போகிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதைக் குறைவான விலைக்கு விற்றார்கள், ரூ. 2 கோடி பெருமானம் பெறும். அதைக் குறைந்த விலைக்கு விற்றார்கள் என்று சொல்கிறார்கள். ரூ. 2 கோடி பெறுமானம் என்று சொன்னால், கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூடப் பெற்றிருக்கலாமே. அவரை யார் தடுத்தார்கள்? ரூ. 3 கோடிக்குக் கூடப் பெற்றிருக்கலாமே. யார் தடுத்தார்கள்? அவரே கூட அதிகத் தொகைக்கு டெண்டர் கேட்டிருந்தால் கொடுத்திருப்போம். இதிலே என்ன தவறு நடந்து விட்டது? டெண்டர் பகிரங்கமாக விடப்பட்டது. மிகக் குறைந்த விலைக்கே கேட்டிருந்தார்கள் முதலில் என்பதால் திருப்பித் திருப்பி டெண்டர் விடப்பட்டது. பஞ்சாபிலே இதை வாங்கமாட்டேன் என்றார்கள். ரூ. 42 லட்சத்திற்குக் கேட்டாலும் பிறகு இதை வாங்குவதில்லை என்று சொன்னார்கள்.

The Punjab Electricity Board first offered to purchase the Station at Rs. 42 lakhs but subsequently went back on this offer and refused to purchase.

டெண்டர்லே யார் அதிகமாகக் கேட்டார்களோ, அவர்களுக்குத்தான் கொடுத்தோம். ஆக, ரூ. 2 கோடி யாராவது கேட்டிருந்தால் அவர்களுக்கு விற்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. ஒருவர் ரூ. 2 கோடிக்குக் கேட்டுவிட்டு அவரை விட்டுவிட்டு ரூ. 59 லட்சம் கேட்டவருக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் அல்லது ரூ. 60 லட்சம் கேட்டவரை விட்டு விட்டு, ரூ. 59 லட்சம் கேட்டவருக்குக் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால், அது குற்றம். இன்னும் சொல்வேன், டெண்டரில் ரூ. 59 லட்சத்திற்குக் குறைவாகக் கேட்டவருக்கு எம். ஜி. ஆர். அவர்கள் சிபாரிசு செய்தார். நாங்கள் அதை மறுத்துவிட்டோம். அதுதான் அவர்களுக்குக் கோபம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் ஆடிட் ரிப்போர்ட்டைப் பார்த்தால் இன்னொரு மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும் என்பது தெரியும். நான் முதலிலே விற்பது தவறு என்ற நிலையை சுட்டிக்காட்டினேன். அப்படியே விற்பதாக இருந்தாலும் இன்னொரு மாநில அரசுக்குக் கொடுக்கலாம். தனியாருக்கு விற்கிறபொழுது டெண்டர் போட்டோம் என்று சொல்லமுடியாது . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, குற்றச்சாட்டில் அவர்கள் கொடுத்த குற்றச்சாட்டில் இந்த வரி இருக்கிறது

A dark game of corrupt bargain was made behind the screen without correct procedure.

என்று இருக்கிறது. என்ன புரசீஜர் இதிலே ஃபாலோ செய்யப்படவில்லை. எந்த புரசீஜருக்கு விரோதமாக இது நடைபெற்றிருக்கிறது. என்ன கரப்ஷன்? இதைத் தைரியமிருந்தால் சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உங்கள் விவாதத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். பின்னால் நடக்கிற விஷயத்தைப்பற்றி நான் சொல்லவில்லை. பஞ்சாப் சர்க்கார் ரூ. 42 லட்சத்திற்குக் கேட்கவில்லை. அதற்கு மேலே மேலே கேட்டார்கள் என்று நான் சொல்லுகிறேன். அதற்கும் முன்னால் இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை என்று சொல்லிக்கொண்டு, ஏற்கனவே பெரிய அமெரிக்கா போன்ற நாடுகளிலே டென்னஸி வேலிகளெல்லாம் சிறுசிறு தெர்மல் பிளாண்டுகளெல்லாம் இருக்கின்றன. அவைகளையெல்லாம் அவர்கள் வைத்திருக்கும்போது இதை இதுமாதிரி விற்கலாமா? தெர்மல் பிளாண்ட் முறை சரியாக வேலை செய்கிறதா என்பதுபற்றி காங்கிரஸ் கட்சி ஆட்சி





காலத்தில் ஒரு கமிட்டி போட்டார்கள். 1968-ம் ஆண்டில் நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் ரிப்போர்ட் வந்தது. நீங்கள்தான் முடிவு செய்தீர்கள். கடைசியிலே தனியார் ஒருவருக்கு விற்றீர்கள். ரூ. 55 லட்சம் புக் வால்யூ, அதற்கு மேலே விற்று விட்டோம் என்று சொன்னால், இன்றைக்கு விலைவாசி ஏராளமாக உயர்ந்து இருக்கிறதே, அதுவும் செம்பு, இரும்பு சாமான்கள் விலை அதிகமாக இருக்கிறதே, இப்பொழுது . . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** குற்றச்சாட்டில் எதை விசாரிக்க வேண்டும்? எதற்காக விசாரிக்கவேண்டும்? ரூ. 42 லட்சம் அவர்கள் கொடுத்தது தவறு என்கிறீர்களே அதற்காகவா? உண்மையாக நாங்கள் நடந்திருக்கிறோம், அதை விசாரிக்கவேண்டுமென்று சொல்கிறீர்களா? வேண்டுமென்றால், பைல்களையெல்லாம் தலைவர் அவர்களிடத்திலே ஒப்படைக்கிறோம். எல்லோரும் பார்க்கட்டும். அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால் என்ன தண்டனை கொடுத்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அது தவறாக இருந்தால் நீங்கள் என்ன தண்டனை ஏற்றுக்கொள்கிறீர்கள்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரு நாளைக்குத் தமிழ்நாட்டிற்குத் தேவைப்படுகிற மின்சாரம் எவ்வளவு? எத்தனை யூனிட் மின்சாரம் சமயநல்லூர் மின்சார நிலையம் வழங்குகிற ஆற்றல் பெற்றிருந்தது என்பது திரு. தங்கமணி அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

நம்முடைய மாநிலத்திற்கு ஒரு நாளைக்குத் தேவையான மின்சார யூனிட்டுகள் 220 லட்சம் யூனிட்டுகள். ஆனால் சமயநல்லூர் மின்சார நிலையத்தின்மூலம் கிடைத்தது 1 லட்சம் மின்சார யூனிட்டுகள்தான். தேவை 220 லட்சம் யூனிட்டுகள், கிடைத்தது 1 லட்சம் யுனிட்டுகள். ஆண்டொன்றுக்கு 60 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் அது நடந்துகொண்டு இருந்தது. 1968 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு இவற்றை எல்லாம் பரிசீலனை செய்து பரிந்துரை செய்தது. அதற்குப் பிறகு டெண்டர்கள் கோரப்பட்டு நியாயமான, நேர்மையான முறையிலேதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்களும் எம்.ஜி.ஆரும் டெல்லியிலே கொண்டுபோய்க் கொடுத்தீர்களே, அந்தப்பட்டியலில்

"A dark game of corrupt bargain was made behind the screen without correct procedure" என்று சொல்லியிருக்கிறீர்களே என்ன கரெக்ட் புரசீஜர் இல்லை என்று சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஒவ்வொரு மாநிலத்திற்கும் உள்ள தெர்மல் பிளான்டைப்பற்றி நாம் யோசித்துப் பார்த்தால் அதைப்பற்றிக் கருத்துச் சொல்லலாம். தெர்மல் பிளான்ட்டை புக் வேல்யூவுக்கு விற்பதுதான் சரி யென்று சொன்னால், அதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. தங்கமணி அவர்கள் 2 கோடி ரூபாய்க்குக் கேட்டிருந்தால் நாங்கள் மறுத்திருக்கமாட்டோம். அவர்களுக்கே கொடுத்திருப்போம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்த ஊழல் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக மெரிட், டிமெரிட்டுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஏனென்றால் குற்றச் சாட்டுகளை நாங்கள் கொடுக்கவில்லை. வேண்டுமென்றே ஒரு புறத்தில் ஓட்டுக் காங்கிரஸ் என்று சொல்லி, ஏதோ நாங்கள் சொல்லிக்கொடுத்ததுதான் அவர்கள் செய்ததாகப் பிரச்சாரம்கூடச் செய்யப்படுகிறது. உங்கள் கட்சிக் குள்ளே இருக்கும் ஒருவரை நாங்கள் தூண்டிவிட்டுப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. குற்றச்சாட்டுகளை நாங்கள் சொல்லவில்லை. சாட்டப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளை விசாரிக்கக்கூடிய நிலைமையில் . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எங்களுடைய பதிலிலேயே நாங்கள் விவரமாகச் சொல்லியிருக்கிறோம். இன்னொரு உதாரணம் கூடச் சொல்லலாம். உதாரணம் இன்னொன்று தேவையில்லை என்று சொல்கிறார்கள். இதை விசாரிப்பதற்கு டெல்லியிலிருந்து நீதிபதி வேண்டுமா? இவற்றிலேயே சில நீதிமன்றத்திற்கு, உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இருக் கின்றன. அவர்கள் கொடுக்கின்ற தீர்ப்பைவிட வேறு ஒரு தீர்ப்பு வேண்டுமா?

**திரு. நா. வீராசாமி:** உறுப்பினர் பேசும்பொழுது ஓட்டுக்காங்கிரஸ் என்று சொல்லி, ஏதோ அவர்கள் சொல்லிக்கொடுத்துச் சொல்கிறார்கள் என்று நினைத்துக் கூறுகிறார்கள், என்று சொல்கிறார்கள். அதற்காகச் சொல்லவில்லை. என்றைக்காவது ஒரு நாள் ஓட்டுகாங்கிரஸ் என்பது . . . .

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் கொள்கை உண்டு . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைப்பற்றி விவாதிப்பதற் காக இந்தச் சபையிலே ஒரு தனி நாளை வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். உறுப் பினர்கள் பேச்சை முடிக்கிற நேரத்திலே ஒரு சப்ஜெக்டை எடுக்கிறார்கள். இப்படிப் பேசுவதால் நான் என்ன செய்யமுடியும்? முடிக்கிற நேரத்தில் ஒரு புகாரை எடுத்துக் கொண்டு தொடங்கினால் அதற்கு அமைச்சர்கள் சும்மா



இருப்பார்களா? அவர்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். நீங்கள் முடித்துவிடுங்கள். இதுபற்றி வேண்டுமானால் தனியாக ஒரு நாள் ஒதுக்கி விவாதிக்க வேண்டுமென்று முடிவுசெய்தால் விவாதிக்கலாம் அல்லது பட்ஜெட்டிலே விவாதிக்கலாம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** குற்றச்சாட்டுகளுக்குள்ளே, மெரிட்ஸ் டிமெரிட் மெரிட்டுகுள்ளே நான் போகவில்லை. நீங்கள் எது முக்கியமான குற்றச்சாட்டு என்று கருதுகிறீர்களோ, அதைப்பற்றி விசாரியுங்கள். மத்திய அரசுக்கு அதைச் செய்ய அதிகாரம் இல்லையென்றால் நீங்களே ஒரு கமிஷன் போடலாம். என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதற்குமேலே நான் பேச விரும்பவில்லை, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே என்மேல் பதவிவிலகல் தீர்மானம் கொண்டுவரப்பட்டபொழுது, நடந்த விவாதத்தில் "நாங்கள் பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தோம், எங்களைக் கூப்பிட்டீர்களா, தொலைப் பேசிமூலமாவது பேசி அழைத்தீர்களா?" என்று திரு. தங்கமணி அவர்கள் அன்றைக்குப் பேசினார்கள். நான் அன்றைக்கே பதில் சொல்லலாம் என்று கருதினேன். இப்பொழுது சொல்லவிரும்புகிறேன். இந்தப் பேரவை செத்துவிட்டது என்று வெளியே பேசிக்கொண்டிருக்கின்றவர்களுக்கும் அண்ணா தி.மு.க. தலைவருக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்தப் பேரவை செத்துவிடவில்லை, நடந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளும் கலந்துகொண்டு பணியாற்றவேண்டும். அவர்களும் பங்கேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று மீண்டும் **12—2—1973 அன்று** திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கூடும்.

**பின்னர்** பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

**35.** Notification issued with G.O. Rt. No. 2720, Revenue, dated the 28th December 1972, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge to the film show organised by Loyola College, Madras at 6.30 p.m. on 14th January 1973 at Devi Theatre to raise funds for

midday meals scheme for poor students. [*Laid on the Table of the House under section* 16(4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939).]

36. Notification issued with G.O. Ms. No. 325, Excise and Prohibition, dated the 20th November 1972, in regard to form of bond to be used for the purpose of section 47 of the Tamil Nadu Excise Act, 1971. [*Laid on the Table of the House under section* 34(5) *of the Tamil Nadu Excise Act*, 1971 (*Tamil Nadu Act* 34 *of* 1971).]

37. Notification issued with G.O. Ms. No. 2484, Rural Development and Local Administration, dated the 2nd December 1970, making the Local Authorities Provident Fund Rules, 1970. [*Laid on the Table of the House under section* 199(2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958)].

@ 38. The Tamil Nadu Government's Review and the First Annual Report and Statement of Accounts of the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited, Madras for the year ended 31st March 1972. [*Laid on the Table of the House under section* 619A *of the Companies Act*, 1956 (*Central Act I of* 1956)].

B. *Reports, Notifications and other papers.*

18. Notification issued with G.O. Ms. No. 3123, Revenue, dated the 28th November 1972, in regard to remission of stamp duty and registration fee chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed to be executed by the Honorary Secretary, Thakkar Bapa Kushta Nivaran Sangh, Tirukoilur, South Arcot district.

@ Laid on the table of the Legislature Library with reference to the proviso to rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.





இணைப்பு

[135-ம் பக்கத்திலுள்ள 114-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

*Answer*—

(*a*) & (*b*).—Eighty-eight members of the contingent establishment of the Public Works Department were provincialised prior to the issue of the orders of the Government in G.O. Ms. No. 1399, Public (Services), dated 22nd April 1971 in the various circles as indicated below :—

I. *Madras-Chingleput Circle* :

| | |
|---|---|
| Sweeper-*cum*-Watchman ... | 1 |
| Watchman ... | 10 |
| Sweeper ... | 10 |
| Scavenger ... | 5 |
| Night Watchman ... | 2 |
| Total ... | 28 |

II. *Chingleput-North Arcot Circle* :

| | |
|---|---|
| Night Watchman ... | 6 |
| Total ... | 6 |

III. *Tiruchirappalli Circle* :

| | |
|---|---|
| Watchman ... | 2 |
| Gardener ... | 2 |
| Total ... | 4 |

IV. *Salem-Dharmapuri Circle* :

| | |
|---|---|
| Watchman ... | 3 |
| Total ... | 3 |

*V. Coimbatore-Nilgiris Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 3 |
| Sweeper | ... ... ... ... ... ... | 2 |
| | Total ... | 5 |

*VI. Ramanathapuram Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 2 |
| | Total ... | 2 |

*VII. Tirunelveli-Kanyakumari Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 3 |
| | Total ... | 3 |

*VIII. Madurai Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 2 |
| Gardener | ... ... ... ... ... ... | 1 |
| | Total ... | 3 |

*IX. Thanjavur Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 11 |
| Telephone Attender | ... ... ... ... | 12 |
| Telephone Messenger | ... ... ... ... | 1 |
| | Total ... | 24 |

*X. South Arcot Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... ... | 4 |
| Telephone Attender | ... ... ... ... | 2 |
| | **Total ...** | **6** |



*XI. Parambikulam Aliyar Project Canals Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... ... | 1 |
| | Total ... | 1 |

*XII. Chief Inspector of Steam Boilers :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 3 |
| | Total ... | 3 |
| | Grand Total ... | 88 |

The Chief Engineer, Public Works Department (General) has since submitted proposals for the provincialisation of the services of 78 posts of contingent establishment in the Public Works Department in the various circles of the Department which are under the consideration of the Government. The details of the posts are as indicated below :—

*I. Madras-Chingleput Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 5 |
| | Total ... | 5 |

*II. Madurai Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 10 |
| Gardener | ... ... ... ... ... ... | 1 |
| | Total ... | 11 |

*III. Ramanathapuram Circle :*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 12 |
| | Total ... | 12 |

*IV. South Arcot Circle:*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 2 |
| | Total ... | 2 |

*V. Tirunelveli-Kanyakumari Circle:*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 10 |
| | Total ... | 10 |

*VI. Tiruchirappalli Circle:*

| | | |
|---|---|---|
| Sweeper-cum-Scavenger | ... ... ... ... | 1 |
| Watchman | ... ... ... ... ... | 3 |
| | Total ... | 4 |

*VII. Coimbatore-Nilgiris Circle:*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 7 |
| | Total ... | 7 |

*VIII. Parambikulam Aliyar Project Canals Circle:*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 11 |
| | Total ... | 11 |

*IX. Parambikulam-Aliyar Project Headworks Circle:*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 3 |
| | Total ... | 3 |

*X. Chingleput-North Arcot Circle:*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 7 |
| | Total ... | 7 |





*XI. Salem-Dharmapuri Circle:*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 2 |
| | Total ... | 2 |

*XII. Thanjavur Circle:*

| | | |
|---|---|---|
| Watchman | ... ... ... ... ... | 4 |
| | Total ... | 4 |
| | Grand Total ... | 78 |

**(அ) & (இ):**

*அரசு பொதுத்துறை நாள் 22—4—1971 ஆணை எண். 1399 வெளியிடப் பெறும் முன்பே பல பொதுப்பணித்துறை வட்டங்களில் 88 சில்லரைச் செலவினப் பணியாளர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிரந்தரப் பணி உரிமை பெறும் தொகுதியின் கீழ் கொண்டு வரப்பெற்றனர் :—*

I. **சென்னை—செங்கற்பட்டு வட்டம்.**

| | |
|---|---|
| கூட்டுபவர் மற்றும் காவலாள் | 1 |
| காவலாளர்கள் | 10 |
| கூட்டுபவர்கள் | 10 |
| தோட்டிகள் | 5 |
| இரவு காவலாளர்கள் | 2 |
| மொத்தம் | 28 |

II. *செங்கற்பட்டு—வடஆற்காடு மாவட்டம்:*

| | |
|---|---|
| இரவு காவலாளர்கள் | 6 |
| மொத்தம் | 6 |

III. **திருச்சிராப்பள்ளி வட்டம்:**

| | |
|---|---|
| காவலாளர்கள் | 2 |
| தோட்டக்காரர்கள் | 2 |
| மொத்தம் | 4 |

IV. சேலம்—தருமபுரி வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 3 |
| மொத்தம் | 3 |

V. கோவை—நீலகிரி வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 3 |
| கூட்டுபவர்கள் | 2 |
| மொத்தம் | 5 |

VI. இராமனுதபுரம் வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 2 |
| மொத்தம் | 2 |

VII. திருநெல்வேலி—கன்னியாகுமரி வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 3 |
| மொத்தம் | 3 |

VIII. மதுரை வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 2 |
| தோட்டக்காரர் | 1 |
| மொத்தம் | 3 |

IX. தஞ்சாவூர் வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 11 |
| தொலைபேசி பதிவெழுத்தர் (Telephone Attender). | 12 |
| தொலைபேசி செய்தியாள் (Telephone Messenger). | 1 |
| மொத்தம் | 24 |



X. தென்னாற்காடு வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 4 |
| தொலைபேசிப் பதிவெழுத்தர் | 2 |
| மொத்தம் | 6 |

XI. பரம்பிக்குளம்-ஆளியார் திட்ட வாய்க்கால் வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர் | 1 |
| மொத்தம் | 1 |

XII. நீராவி கொதிகலன் தலைமை ஆய்வாளர் அலுவலகம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 3 |
| மொத்தம் | 3 |
| ஆக மொத்தம் | 88 |

பொதுப்பணித்துறையில் பல்வேறு வட்டங்களில் உள்ள 78 சில்லரை செலவினப் பணியாளர்கள் நிரந்தரப்பணி உரிமை பெறும் தொகுதியின் கீழ்க் கொண்டு வருவதற்கான செயற் குறிப்பையும் அரசுக்கு தலைமைப் பொறியாளர் (நிர்வாகம்) பொதுப்பணித்துறை அனுப்பி உள்ளார். இவை அரசின் பரிசீலனையிலுள்ளன. அவைகளின் விவரம் வருமாறு:—

I. சென்னை-செங்கற்பட்டு வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 5 |
| மொத்தம் | 5 |

II. மதுரை வட்டம்:

| | |
|---|---|
| காவலாளர்கள் | 10 |
| தோட்டக்காரர் | 1 |
| மொத்தம் | 11 |

III. இராமநாதபுரம் வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 12 |
| மொத்தம் | 12 |

IV. தென்னாற்காடு வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 2 |
| மொத்தம் | 2 |

V. திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 10 |
| மொத்தம் | 10 |

VI. திருச்சிராப்பள்ளி வட்டம் :

| | |
|---|---|
| கூட்டுபவர் மற்றும் தோட்டி | 1 |
| காவலாளர்கள் | 3 |
| மொத்தம் | 4 |

VII. கோவை-நீலகிரி வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 7 |
| மொத்தம் | 7 |

VIII. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வாய்க்கால் வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 11 |
| மொத்தம் | 11 |



IX. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட தலைமை பணிகள் வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 3 |
| மொத்தம் | 3 |

X. செங்கற்பட்டு-வடஆற்காடு வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 7 |
| மொத்தம் | 7 |

XI. சேலம்-தர்மபுரி வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 2 |
| மொத்தம் | 2 |

XII. தஞ்சாவூர் வட்டம் :

| | |
|---|---|
| காவலாளர்கள் | 4 |
| மொத்தம் | 4 |
| ஆக மொத்தம் | 78 |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### திங்கட்கிழமை, 1973 பிப்ரவரி 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினுக்கள்–விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

### பாடநூல் நிறுவனத்திற்குத் தனி அச்சகம்.

* 121 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடு அரசுப் பாடநூல் நிறுவனத்துக்கு எனத் தனி அச்சகம் நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : சில தனியார் நிறுவனங்களும் அத்தகைய பள்ளிப் பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுவதாகத் தெரிகிறது. பள்ளிக்கூடங்கள் திறக்கின்ற குறிப்பிட்ட அதே நேரத்தில் தமிழகத்திலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் ஒரே நேரத்தில் பாடப் புத்தகங்கள் கிடைப்பதற்கான வகையில் நமது தமிழக அரசாங்கம் முழுப் பொறுப்பேற்று எல்லாப் பள்ளிக்கூட நூல்களையும் அச்சிட்டு வெளியிட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டு காலமாகப் பள்ளிக்கூடப் பாட நூல்களெல்லாம் குறிப்பிட்ட நேரத்தில் பள்ளிகளுக்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றன. இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னல் அப்படிப் போய்ச் சேருவதில் சில கஷ்டங்கள் ஏற்பட்டன. அந்தக் கஷ்டங்கள் இரண்டாண்டு காலமாக நிவர்த்திக்கப்பட்டு சென்ற ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டும் முறைப்படி போய்ச் சேர வேண்டிய நூல்களெல்லாம் போய்ச் சேர்ந்திருக்கின்றன. இவ்வாண்டும் போய்ச் சேரும் என்று நம்பிக்கை கொள்ளலாம்.

[1973 பிப்ரவரி 12

திரு. எஸ். வடிவேல் : தனியார் அச்சகங்களில் பாட நூல்களை அரசு அச்சிடுவதன் காரணமாக ஆண்டொன்றுக்குச் செலவாகும் தொகை என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியார் அச்சகத்தில் பாடப் புத்தகங்களை அச்சடிக்க வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. ஏனென்றால், எல்லாப் பாடப் புத்தகங்களையும் அரசாங்க அச்சகத்தில் அச்சடிப்பதற்கான வழிவகைகள் ஏற்படவில்லை. தனியார் அச்சகங்களில் அச்சடிக்காவிட்டால் குறிப்பிட்ட நேரத்தில் பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்குப் போய் சேராது. மேலும், அரசாங்க அச்சகத்தில் அச்சடிப்பதற்கு ஆகும் செலவைவிட தனியார் அச்சகத்தில் அச்சடிக்கும்போது செலவு குறைவாகவே இருக்கிறது. அதனால், ஒரு கோடி ரூபாய் அளவிலே இலவசமாக ஒரு அச்சகம் வைக்க உதவ வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தினிடம் கேட்டிருக்கிறோம். பஞ்சாப், மைசூர், ஒரிஸ்ஸா ஆகிய இடங்களில் இலவசமாக அச்சகம் தந்திருக்கிறார்கள். சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாகவே அப்படியொரு அச்சகத்தைத் தமிழகத்திற்குத் தரவேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். அது வருமானால் அதன் மூலமாக அரசாங்கமே பாடப் புத்தகங்கள் எல்லாவற்றையும் அச்சடிக்கலாம். இப்பொழுது அரசாங்க அச்சகத்தில் கொடுத்து அச்சிடுவதன் மூலம் காலத்தாழ்வு ஏற்படுகிறது என்பது மட்டுமல்லாமல், அச்சிடுகிற கூலியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சற்று கூடத்தான் இருக்கிறது.

## புதிய கல்வி நிறுவனங்களுக்குப் பெயர்கள்

* 122 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**சாதியின் பெயரால் கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் துவக்குவதைத் தடை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் செயற்குறிப்பொன்றுமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : மதங்களின் பெயரால் இருக்கின்ற கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பெரும்பாலாக அந்த மதத்தைச் சார்ந்தவர்கள்தான் முதல்வர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அந்த



1973 பிப்ரவரி 12]

மதத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு மட்டும் விசேஷ சலுகை அளிக்கப்படுகிறது. அதைத் தவிர்க்கும் வகையில் வேறு மதத்தைச் சார்ந்தவர்களையும் முதல்வராக நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுதிருக்கிற அரசியல் நிர்ணயச் சட்டம் கொடுத்திருக்கிற உரிமையின் அடிப்படையில் அப்படிப்பட்ட விதிகள் எதையும் வகுப்பதற்கு இயலாத நிலையில் இருக்கிறோம். தனியார்ப் பள்ளிகளை எடுக்கும் அத்தகைய மசோதாவில்கூட அப்படிப்பட்ட தன்மைகள், சிறுபான்மையோர் என்ற முறையில் மத சம்பந்தமாக வைக்கப்பட்டிருப்பவைகளில் நாம் தலையிட முடியாத அளவுக்குத் தான் இருக்கின்றன. ஆனால், எந்த ஒரு ஸ்தாபனமாக இருந்தாலும் யாரும் ஒரு மாணவரையும் சேர்த்துக்கொள்ள மறுக்கக் கூடாது. குறிப்பிட்ட ஜாதியினருக்காக, குறிப்பிட்ட மதத்தினருக்காகத்தான் அந்தப் பள்ளி இருக்கிறது என்று திட்டவட்டமாக இருக்குமானால், அவர்களுக்கு அனுமதி வழங்குவதையும் அல்லது மானியம் வழங்குவதையும் நாம் நிறுத்தலாம். ஆனால், மாணவர்களைச் சேர்ப்பதில் யாரும் இன்னாரைச் சேர்க்க மாட்டோம் என்று சொன்னால் அது குற்றத்திற்காளாகும். ஆனால், அவர்கள் தனிப் பள்ளிக்கூடம் வைப்பதை இப்பொழுதிருக்கும் சட்ட திட்டத்தின் அடிப்படையில் தடுத்து நிறுத்த வழி இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இனிமேலாவது ஜாதியின் பெயரால் கல்லூரிகளையோ, உயர்நிலைப்பள்ளிகளையோ ஆரம்பிப்பதைத் தடுக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆரம்பிக்கும்போது கூடுமான வரையில் சமுதாயத்தின் பெயரால் மதத்தின் பெயரால் இருக்க வேண்டாம் என்று சொல்கிறோம். ஆனால், தனிப்பட்டவர்கள் கல்லூரிகள், பள்ளிகள் வைக்க முன்வருகிறபோது அவர்கள் பெயரால் வைக்கும்போது அத்துடன் ஜாதியும் மதமும் ஒட்டிக்கொண்டு விடுகிறது. அப்படிப்பட்ட வகையில் பெயர் வந்து சேர்ந்து விடுகிறது.

திரு. பி. எஸ். மணியன் : ஜாதியின் பெயரால் கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் இருப்பது மாணவர்கள் மத்தியில் ஒரு ஜாதிய உணர்ச்சியை உண்டுபண்ணுகிறது. அதேபோல், பொது மக்களிடையேயும் குறிப்பிட்ட கல்லூரி குறிப்பிட்ட ஜாதிக்காரர்களுக்குத்தான் என்ற

உணர்ச்சியையும் ஏற்படுத்தும் காரணத்தால் இனிமேலாவது சட்டத்தின் மூலமாகவாவது மாறுதல் செய்து, ஜாதியின் பெயரில் கல்லூரிகள் துவக்க அனுமதி கொடுப்பதைத் தடை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் வேறுபாடு காட்ட இப்படிப்பட்ட நிலையங்கள் இடம் அளிக்கக் கூடாது என்பதே எல்லோருடைய எண்ணமாகும். அதுவே அரசாங்கத்தின் எண்ணமும் ஆகும். அதைக் கூடுமானவரையில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். சட்டத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்த வழிவகை இல்லாமல் இருப்பதால் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த இயலுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: "ரிலிஜியஸ் அண்டு சாரிடபிள் ட்ரஸ்ட்" என்ற தலைப்பில் பல சட்டங்களை நிறைவேற்றுவதற்கு மனுக்கள் கொடுக்கிறார்கள். இவர்கள் கொடுக்கிறபோது இந்த விதிமுறைகளை மாற்றியமைப்பதற்கு தற்போது அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா? அப்படியில்லையானால், அவர்களுக்குக் கொடுப்பதில் என்ன ஆட்சேபணை இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எந்த ஒரு அற நிலையமும் விதிகளுக்கு உட்பட்டு பள்ளிகளை, கல்லூரிகளை வைப்பதில் ஆட்சேபணை ஒன்றும் இல்லை. ஆனால், கூடுமான வரையில், ஏற்கெனவே இருந்த ஒரு நிலைமை இருந்தாலும், இனிமேல் ஜாதியோ மதமோ இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் நன்றாக இருக்கும். ஜாதிப் பெயரால் வைக்காதீர்கள் என்று சொல்கிறோம். ஆனால், சட்ட திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் வைத்தால் அதை மீறிச் சொல்வதற்கு வழி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இருக்கின்ற சட்டத்திற்குட்பட்டு கூடுமானவரையில் எந்த அளவுக்குத் தடுத்து நிறுத்த முடியுமோ அந்த அளவுக்குத் தடுத்து நிறுத்தும் முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, நம்முடைய அரசு டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெயரால் கல்லூரி துவங்க யிருப்பது உண்மையா? அதற்கான ஆக்க வேலைகளெல்லாம் முடிந்துவிட்டதா அல்லது இன்னும் முடியவில்லையா? இல்லை யென்றால் எப்பொழுது முடியும்?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் துணைக்கேள்விக்கும் நேரடித் தொடர்பு இல்லையென்றாலும், டாக்டர் அம்பேத்கார் பெயரில் கல்லூரிக்கு முயற்சியெடுக்கப்பட்டு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து அந்தக் கல்லூரி துவங்கப்படலாம்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, நமது மாநிலத்தில் கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் ஜாதியின் பெயரால் எத்தனை இயங்குகின்றன என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தாலும், இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரத்திற்கருகில் உள்ள மன்னன்பந்தல் என்றயிடத்தில் ஏ.வி.சி. கல்லூரி இயங்கி வருகிறது. அங்கே குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும், அவர்களுக்கு மார்க்குகள் குறைவாகயிருந்தாலும் அதிகச் சலுகைகள் தரப்படுகின்றன என்பதும், அதே நேரத்தில் வன்னிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மார்க்குகள் அதிகமாகப் பெற்றிருந்தாலும்கூடப் புறக்கணிக்கப்படுகிறார்கள், சேர்ப்பதற்கு மறுக்கப்படுகிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அதைப்பற்றி அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாணவர்களைச் சேர்ப்பது, மற்றவைகளிலெல்லாம் பல்கலைக்கழகம் தான் தலையிட வேண்டும். பல்கலைக்கழகத்திற்கு இந்தக் குறைபாடுகளை எழுதி அனுப்பினால் பல்கலைக்கழகம் அதற்கு விளக்கங்களைக் கேட்க முடியும். நாம் எல்லாக் கல்லூரிகளுக்கும் சொல்வது, குறைந்தது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 18 சதவிகிதமும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதம் ஆக 49 சதவிகிதம் ஒதுக்கி வைக்க வேண்டுமென்ற அந்தத் தாக்கீதை பல்கலைக் கழகத்தின்மூலம் எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான அறிக்கை தரவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை எல்லாக் கல்லூரிகளிடத்திலும் கேட்கப்பட்டிருக்கிறது.

## பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள்

* 123 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகாரிகளே நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சாதாரண மைனர் பஞ்சாயத்துகளில் இம்மாதிரி அதிகாரிகள் இல்லாத காரணத்தினுல், எல்லா ஊராட்சி மன்றங்களிலும் அல்ல, பல ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் செக்குகளில் தன்னிஷ்டபடி கையெழுத்துப்போட்டு பணத்தை எடுத்து அந்தப் பணத்தை ஒழுங்காகப் பஞ்சாயத்திற்குச் செலவிடாமல் தங்களுடைய சொந்த நலன்களுக்காகச் செலவிடு கிருர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுப்பதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு அதிகாரி என்று இல்லா விட்டாலும்கூட, நான்கைந்து மைனர் பஞ்சாயத்துக்களை ஒன்ருகச் சேர்த்தாவது ஒரு நிர்வாக அதிகாரியை விரைவாக நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய எல்லாக் கருத்துக்களும் ஆராயப்பட வேண்டியவையாக இருக்கின்றன. அரசு இதைப்பற்றி பரிசீலித்து வருகிறது. இப்பொழுது சில ஊராட்சி மன்றங்களில் வருமானமே 900 ரூபாய், 1,000 ரூபாய், 1,600 ரூபாயாக இருக்கிறது. அங்கே நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதற்குப் போதுமான அளவிற்கு அவர்களுக்கு வருமானம் ஏற்படவில்லை. சட்டதிட்டத்தின்படி பேரூராட்சி மன்றங்களில் நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும்பொழுது அங்கேயிருக்கும் தலைவருக்கு செக்குகளில் கையெழுத்துப்போடும் உரிமை வராது. நிர்வாக அதிகாரிக்குத்தான் அந்த உரிமை வருகிறது. ஆனுல் சிற்றூராட்சி மன்றம், ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் மட்டுமேயிருப்பதால், அவர்கள் சாதாரணமான முறை களில் பகுதி நேர எழுத்தர்களை வைத்து, 10 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் சம்பளமாக வழங்கப்படுகிறது. செக்கில் கையெழுத்துப் போடும் உரிமை, சட்டத்தின் 40 (2) விதியின்படி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆகவே, செக்குகளில் கையெழுத்துப் போடு



கிருர்கள். ஆனுல் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்று, தவருகச் செலவழிக்கிருர்கள் என்ருல், அது கண்டறியப் பட்டு அறிவிக்கப்பட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றவைகளுக்கும் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அவ்வளவு சுலபத்தில் செக்குகளில் கையெழுத்துப்போட்டு சொந்தத் திற்கு எடுத்துக்கொள்ள முடியாது. செக்கில் கையெழுத்துப்போட்டுப் பணத்தைப்பெற்று, வேலை நடந்ததாக வேண்டுமென்ருல் காண்பித்து விட்டு எடுத்துக் கொள்பவர்களாக இருக்கக்கூடும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு விசாரணைக்கு வந்து நிரூபிக்கப்பட்டால் அந்தத் தலைவரின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது.

திரு. த. சோனேயா : தலைவரவர்களே, வருமானம் குறைவாக இருக்கும் சிறு பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகாரிகளை அமைக்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித் தார்கள். 2,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள பஞ்சாயத்துக் களுக்கு நிர்வாக அதிகாரிகளை அமைக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, லோயர் டிவிஷன் கிளார்க் அளவிற்கு நியமிக்கப்பட்டாலே மாதம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 210 ரூபாய் அளிக்க வேண்டியிருக்கும். அந்த வகையிலே பார்த்தால் அந்தப் பணம் முழுவதும் அவர் ஒருவருக்கே அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே தான் இதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு, மூன்று ஊராட்சி மன்றங்களை ஒன்ருக இணைக்கலாமா அல்லது அவர்களுக்கு வரும் பணத்தோடு கூடத் தந்து ஒவ்வொரு ஊராட்சி மன்றத் திலேயும் நிர்வாக அதிகாரி என்று இல்லாவிட்டாலும் ஒரு எழுத்தரையாவது முழு அளவில் நியமிக்கலாமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்கப்படுகிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு தக்க முடிவெடுக்கப்பட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இவ்வாறு நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? அப்படிக் கொடுக்கப்படும்பொழுது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை அந்த வேலைக்கு நியமிப்பதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வேலைவாய்ப்பு எவ்வளவு பெருக்குக் கிடைக்கும் என்பதல்ல. எவ்வளவு பண வாய்ப்பு கிடைக்கும் என்பதுதான் மிகமிக முக்கிய மான பிரச்னையாக இருக்கிறது. பண வாய்ப்புக் கிடைத்தால் வேலை வாய்ப்பு எளிதாக ஏற்பட்டுவிடும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிற பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு, இந்த நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுவதால், பஞ்சாயத்துத் தலைவர் களின் அதிகாரம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அதிகாரிகளை நம்புகிற அரசு மக்களின் பிரதிநிதிகளை நம்ப மறுப்பதன் காரணம் என்ன? எதிர்காலத்திலாவது காசோலைகளில் மக்களின் பிரதிநிதி களான தலைவர், நிர்வாக அதிகாரி ஆக இரண்டுபேரும் சேர்ந்து கூட்டாகக் கையெழுத்துப்போடும் முறை அமலுக்குக் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் கேட்ட கேள்விக்கு நேர்மாறான கேள்வியை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். திரு. கிட்டப்பா அவர்கள், ஏன் அதிகாரிகளிடத்திலே தரக்கூடாது, தலைவர்களுக்கு அந்த அதிகாரத்தை தந்து அதன காரணமாகப் பணத்தை எடுத்து சொந்த நலன்களுக்குப் பயன் படுத்திக்கொள்கிறார்கள் என்றும், ஏன் நிர்வாக அதிகாரிகளை வைக்கக் கூடாது என்றும் கேட்கிறார்கள். ஆனால் நீங்கள் நிர்வாக அதிகாரியை ஏன் வைத்திருக்கிறார்கள். தலைவருக்கே அந்த உரிமையைத் தரலாமே என்ற கருத்தைக் கூறுகிறீர்கள். எனவே தான், இருக்கின்ற சூழ்நிலைகளைப் பார்த்து, சுமுகமாக, ஒழுங்கான முறையில் நிர்வாகம் நடப்பதற்கான வாய்ப்பு வசதிகளை ஆராய்ந்து முடிவுக்கு வர வேண்டும். ஆகவே பல்வேறு கருத்துக்கள் ஆராயப் பட்டு ஒரு முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### யானைக்கால் நோய்த்தடுப்பு

* 124 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் (Filaria) நோயினைத் தடுத்து நிறுத்த அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் யாவை?



1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: விவரப்பட்டியல் @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த யானைக்கால் வியாதி பெரும்பாலும் சலவைத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய பகுதிகளில் மிக அதிகமாகத் தென் படுவதாகக் கூறப்படுவதால் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் அதிக மான கவனத்தைச் செலுத்தி, தனி அதிகாரிகளை, சுகாதார அதிகாரிகளை நியமித்து அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, யானைக்கால் வியாதி முற்றிப்போய், கண்ணுக்குத் தெரிகிற அளவிற்கு யானைக் காலாக ஆன பிறகு சிகிச்சை தருவது என்பது உண்மையான சிகிச்சை அல்ல. கண்ணுக்குத் தெரிந்த கால்களை வைத்துக்கொண்டு இந்தச் சிகிச்சைத் திட்டத்தை நடத்தவில்லை. யானைக்கால் வியாதி வரும் வகையில் அந்த வட்டாரத்திலே கொசுக்கள் பரவி, அந்தக் கொசுக்கள் கடிப்பதன் காரணமாக இரத்தத்திலே கிருமிகள் சேர்ந் திருப்பது கண்டுபிடிக்கப்படுமேயானால் அந்தக் கட்டத்திலே சிகிச்சை அளிப்பதால் இந்த வியாதி முற்றாமல் இருக்கிறது. இது ஏதோ நெசவாளர்களுக்கும், அல்லது சலவைத் தொழிலாளர்களுக்கும் மட்டும் ஏற்படக்கூடிய வியாதி அல்ல. இது அக்ரஹாரத்திலிருந்து ஆதித் திராவிடர்கள் வசிக்கும் பகுதிவரை எங்கும், எல்லா வகுப்பு களிலும் பரவியிருக்கிற ஒன்று. அது வட்டாரத்தைப் பொறுத்தது. வட்டார அளவிலே கவனிக்க ஆவன செய்யப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த நோய் எங்கு அதிகமாகப் பீடித்திருக்கிறது என்பதை ஆய்ந்தறிந்து, சென்சஸ் எடுத்திருக்கிறார்களா? அப்படியிருந்தால் அந்தப் பகுதிகளில் தீவிர கவனம் செலுத்துவதற்கு என்ன முனைப்புத் திட்டம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படி எடுக்கப்பட்ட பகுதிகளில் எட்டு மிக முக்கியமான பகுதிகள் என்று இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அந்த ஒழிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த எட்டு இடங்கள், விழுப்புரம்

@ 457-458-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 பிப்ரவரி 12

பகுதி, கடலூர் பகுதி, காஞ்சிபுரம் பகுதி, தஞ்சாவூர் பகுதி, நாகப் பட்டினம் பகுதி, ஸ்ரீரங்கம் பகுதி, புதுக்கோட்டை பகுதி, சென்னை மாநகராட்சிப் பகுதி ஆகிய இந்தப் பகுதிகளில் இந்தக் கடமைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த எட்டு பகுதிகளில் மாத்திர மல்லாமல் ஒவ்வொரு நகராட்சி இருக்கும் இடங்களிலும் இம்மாதிரி கொசுக்களினால் ஏற்படக்கூடிய வியாதியைத் தடுக்க அதற்குரிய அமைப்பு ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இரண்டு விதமான கொசுக்களை ஒழிக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஒன்று, யானைக் காலைத் தோற்றுவிக்கும் இனத்தைச் சேர்ந்த கொசுக்களின் வகை. மற்றொன்று, மலேரியா போன்ற நோய்களுக்குக் காரணமான வகை. பொதுவாக, கொசு ஒழிப்புப் பணி அல்லது சாக்கடைத் துப்புரவுப் பணி வேறு வேறு வகைகளால் அரசாங்கத்தாலும் நகராட்சி மன்றங்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. வை. பாலசுந்தரம் : கொசுவின் மூலம் இத்தகைய வியாதிகள் பரவுகின்றன என்று சொல்லப்படுகிறது. தனியாரிடமிருந்து இதற்காக வாங்கப்படுகின்ற மருந்துகளில் மிலாதியான், பைல்திரன் போன்ற கெமிகல்களை அதிகமாக அவர்கள் சேர்ப்பதில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அரசே இப்படிப்பட்ட மருந்துகளைத் தயார் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த மருந்துகள் மத்திய அரசாங்கத்தின் மூலம் அவ்வப்போது வாங்கப்பட்டு அந்தந்த நகராட்சி மன்றப் பகுதிகளிலும்* வேறு வேறு இடங்களிலும் தெளிக்கப்படுகின்றது. மருந்துகள் தரக்குறைவாக இருக்கிறது என்று கூறப்படவில்லை. அந்த மருந்துகளைத் தெளிக்கின்றபோது கலந்து தெளிக்கும் நிலைமை இருக்கும் காரணத்தால் சரியாகக் கலக்காததன் காரணமாக தவறு ஏற்பட்டிருக்கலாம். மூன்று நாட்களுக்கு ஒரு முறை, ஏழு நாட்களுக்கு ஒரு முறை தெளிப்பதற்கான நிலைமைகள் இருக்கின்றன. ஆங்காங்கு இருக்கின்ற சிறு சிறு அலுவலர்களால் ஏற்படுகின்ற தவறுகளைக் கண்காணிக்க துணை இயக்குநர் இருக்கிறார். அவர்களின்கீழ் மாவட்ட நலத் துறை அலுவலர்கள் இருக்கிறார்கள்.



1973 பிப்ரவரி 12]

திரு. நா. வீராசாமி : இந்தக் கொசுக்களை ஒழிப்பதில் முனிசி பாலிடிகளும், அரசாங்கமும் இரண்டு பிரிவுகளாக வேலை செய் கின்றன. ஆகவே முனிசிபாலிடியினர் அரசாங்கத்தைச் சேர்ந்த வர்கள் இந்தக் கொசு ஒழிக்கும் பணியைச் செய்வார்கள் என்று நினைப்பதும், முனிசிபாலிடியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் செய்வார்கள் என்று நினைப்பதுமாக இரண்டு பேர் களுமே பேசாமல் இருந்து விடுகிறார்கள். இதனால் அந்தப் பணி நடைபெறுமலே போய்விடுகின்றது என்பது உண்மையா? ஏதாவது ஒரு துறையின் மூலமாகப் பணத்தைச் செலவழித்து கொசுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நகராட்சி மன்றத்தில் உள்ள வர்கள் அந்த முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டால் அவர்களிடம் வழங்கலாமா என்பதுபற்றி ஆலோசனையில் இருக் கிறது. எந்த வகையில் அதற்கு நகராட்சி மன்றங்கள் ஏற்றுக் கொள்ள முன்வந்தன என்று இப்போது தெரிவிக்க இயலவில்லை.

திரு. மா. வே. நாராயணசாமி : அப்படி நகராட்சி மன்றங்கள் கொசு ஒழிப்புப் பணியை முழுமையாக ஏற்றுக் கொள்ள முன் வந்தாலும் கூட, இந்தப் பணி மத்திய அரசினுடைய மானியத்தின் அடிப்படையில் செய்யப்படுகிற காரணத்தால் நகராட்சிகள் இந்தப் பணியைச் செய்ய ஆரம்பித்தால் அந்த மானியம் நகராட்சிகளுக்கு அளிக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாக அறிவித்து வருகிறார்கள். அதை ஆராய்ந்து அந்தக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுபற்றி ஆலோசித்துத்தான் விடை அளிக்க முடியும்.

## சென்னை பொது மருத்துவமனை

* 125 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளிகள் படுக்கும் வார்டுகளில் கரப்பான் பூச்சிகள் அளவிற்கு அதிகமாக பெருகி இருக்கின்றன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அரசு பொது மருத்துவ மனையில், அளவுக்கு மீறி பெருகவில்லையென்றாலும் கரப்பான் பூச்சி யினால் சிறு தொல்லை இருந்துதான் வருகிறது.

(இ) உடல்நல ஆய்வாளரின் கண்காணிப்பில், மருத்துவ மனையின் எல்லாப் பகுதிகளிலும் நோயாளிகள் படுக்கும் கட்டில்கள் மற்றும் அவர்களின் படுக்கைகளுக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் உணவு வைக்கப்படும் அறை மூடிகளிலும் கூட முறையாகப் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்படுவதோடு, இத்தொல்லையை ஒழிக்க எல்லா முயற்சியும் எடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : அமைச்சர் அவர்கள் கரப்பான் பூச்சிகள் அதிகமாக இல்லையென்று சொன்னார்கள். ஆனால் அங்கு சென்று பார்த்தால் அங்குள்ள பைப்புகளில் இவை புற்று வைத்து உற்பத்தி யாவதாகத் தெரிகிறது. நீர் போகின்ற குழாய்கள், சாக்கடை பைப்புகள் ஆகியவற்றை சரியாகச் சுத்தம் செய்தால் இவற்றை ஒழிக்க முடியும். எப்படியாவது இந்தக் கரப்பான் பூச்சிகளை ஒழிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : என்னுடைய வீட்டிலேயே உள்ள சுத்தம் செய்த குழாய்களிலிருந்து இத்தகைய பாச்சைகள், காக்ரோச்சஸ் வந்து கொண்டுதான் இருக்கின்றன. குழாய்களைச் சுத்தம் செய்வதால் மட்டும் இதை அழித்துவிட முடிவதில்லை. இவற்றை அடியோடு ஒழிக்க மருந்து வகைகள் இல்லை. ஓரளவுக்குத் தான் கட்டுப்படுத்த முடிகிறது.

திரு. எஸ். வடிவேல் : ஆஸ்பத்திரிகளில் கரப்பான் பூச்சி தொல்லையை விட மூட்டைப் பூச்சி தொல்லை ரொம்ப அதிகமாக இருக்கிறது. மூட்டைப் பூச்சியை ஒழிக்க முதலில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இவற்றை ஒழிப்பதற்காக இன்றைக்கு இருக்கிற நவீன முறைப்படி என்னென்ன மருந்துகள் பயன்படுத்தப்பட வேண்டுமோ அவை பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பூச்சிகளை ஒழிக்க இன்னொரு பூச்சிதான் உண்டாக வேண்டும். அது எந்தப் பூச்சி என்று இன்னும் தெரியவில்லை.



1973 பிப்ரவரி 12]

திரு. ஆ. பரந்தாமன் : ஜெனரல் ஆஸ்பத்திரியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற வார்டுகளிலும் கரப்பான் பூச்சி தொல்லை இருக்கின்றது. ஆகவே, இதை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்ட மன்ற விடுதிகளில் அங்கத்தினர் ஓய்வாக இருக்கும்போது அதை அடியோடு ஒழிக்க முயற்சிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் கேட்பது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகிற ஸ்பெஷல் வார்டுகளில் அந்தப் பூச்சிகளை ஒழிப்பது பற்றி.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மனிதர்களிலே நாம் ஒரு பங்கு. நாம் இருக்கும் இடத்தை மட்டும் சுத்தமாக வைத்துக் கொண்டால் அது சமூக அநீதியாக மாறிவிடும். எல்லோருக்கும் இருக்கும் கஷ்டம் நமக்கும் தெரிய வேண்டும்.

## கால்நடை ஈட்டுறுதித் திட்டம்

126 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைகளுக்கு இன்சூரன்ஸ் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) இது குறித்து தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை ஏதேனும் தெரிவித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை. ஆயினும் கால்நடை ஈட்டுறுதித் திட்டம் என்பது மத்திய அரசின் வரம்பிற்குட்பட்ட ஒன்றாகும். எனவே, இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டுமாயின் நாடாளு மன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

(இ) எழவில்லை. எனினும், இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றத்தின் முழு பொருள் உதவியுடன் தமிழகத்தில் முதன் முதலாக செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் கால்நடை ஈட்டுறுதி முன்னோடி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இது பற்றிய முழு விவரங்களும் இத்துறையின் மூலமாக விவசாயப் புள்ளியியல் ஆய்வுக் கழகம், புதுடில்லிக்கு நேரிடையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் முடிவு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

*[1973 பிப்ரவரி 12*

*Import of Russian Marino Sheep*

* 127. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister of Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that Russian Goats and Sheep have been imported to the State in 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) 25 கிடாக்களையும், 100 பெட்டை செம்மறி ஆடுகளையும் கொண்ட 125 ரஷ்ய மெரினோ செம்மறியாடுகள் ரூ. 1,82,495.40 செலவில் 1972 செப்டம்பர் திங்களில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. வெள்ளாடுகள் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவில்லை. இறக்குமதி செய்யப்பட்டுள்ள செம்மறியாடுகள், கலப்பினப் பெருக்கு ஆராய்ச்சிகள் செய்யும் பொருட்டு உதகை சாண்டிநல்லாவிலுள்ள ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளன.

திரு. என். டென்னிஸ் : எல்லா மாவட்டங்களுக்கும் பயன்படும் வகையில் அந்த ஆடுகள் பகிர்ந்தளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ரஷ்யா போன்ற நாடுகளிலே அங்குள்ள தட்ப வெட்ப நிலையில் வளர்ந்த ஆடுகள் உதகையில் கொண்டுபோய் வளர்க்கப்பட்டால்தான் நீண்ட நாள் இருந்து பயன் தரும். எல்லா மாவட்டங்களிலும் நேரடியாக அந்த ஆடுகளைக் கொண்டுபோய் வைக்க முடியாது. மெரினோ ஆடுகளையும் நம்முடைய இன ஆட்டையும் கலப்பு செய்து தரமுள்ள கலப்பு இனத்தைப் பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தரவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மெரினோ ஷீப் உதகையில் வைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்த வகை ஆடுகளில் பெரும்பகுதி இறந்துவிட்டதாகச் சொல்லப்படுவது உண்மையா? விவரம் அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுவரை அப்படி இறந்துவிட்டதாகச் செய்தி வரவில்லை. ஒருவேளை அங்கத்தினர் அவர்கள் இதுபற்றி முன்னரே அறிந்திருப்பார்களேயானால், தெரிவித்திருப்பார்



*1973 பிப்ரவரி 12]*

களேயானால் அதைப் பற்றி விசாரித்திருக்கக்கூடும். இந்த ஆடுகளும் இதற்கு முன்னால் கொண்டுவரப்பட்ட ஆடுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றுதான் அறிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : These goats and sheep thrive very well in Hosur and Denkanikota taluks on account of cool climate there. May I know from the Hon. Minister whether a sheep farm will be started there to improve the stock?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Nowadays, it is not the intention of the Government to start a farm for every particular type of cattle. The cattle farm which is at present at Hosur is capable of also having sheep or goat in that farm.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது இறக்குமதி செய்யப்பட்டிருக்கிற செம்மறியாடுகளின் விசேஷத் தன்மைகள் என்ன என்று கூறுவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவை குளிர்நாட்டில் வளர்ந்த இனம் என்ற காரணத்தினால் அவை மிக அதிக அளவிற்கு ஏறத்தாழ 13 கிலோ கிராம் அளவிற்கு கம்பளி தரக்கூடியவை, ஒரு முறை கம்பளி எடுக்க வெட்டுகிறபோது. நம் நாட்டு செம்மறி ஆடுகள் ஒரு புதிய கலப்பினத்தைத் தோற்றுவிக்க அது உதவும் என்று எதிர் அளவிற்கு கம்பளி தருகிற இனம் உடல் வலிவிலும் அதிகக் கனம் உள்ளதாக வளர வாய்ப்பிருக்கிறது. எனவே, அதிக எடை உள்ளதாகவும் அதே நேரத்தில் அதிகப்படி கம்பளி உற்பத்தி செய்வதற்கும் ஒரு புதிய கல்ப்பினத்தைத் தோற்றுவிக்க அது உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : இப்போது ஆட்டு இறைச்சியின் விலை விஷம் போல் ஏறிவருகிறது. இப்போது நெல் உற்பத்தியில் தீவிரத் திட்டத்தின்கீழ் ஐ.ஆர். 8 போன்றவை உற்பத்தி செய்யப்படுவதைப் போல் ஆடுகளை அதிகப்படி உற்பத்தி செய்ய ஒரு தீவிரத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போதே ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு ஆடு வளர்ப்புச் சங்கங்களை ஆங்காங்குள்ள விவசாயிகள் ஏற்படுத்த ஊக்கம் அளிக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் ஒரு நல்ல இன ஆடு இருக்கிறது. அந்த இன ஆட்டை, மேய்ச்சேரி என்பதை, அதிகமாகப் பரப்பச் செய்வதற்கு

ஒரு முயற்சி இருக்கிறது. அதேபோல் இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கரிசல் என்ற இனத்தை அதிகப்படி—அவை நல்ல வளர்ச்சி உயரம் உள்ளதாக இருக்கின்றன—பரப்பவும் முயற்சி எடுக்கப்படுகிறது. ஆனால், அரசு இலாகாவிலிருந்து முயற்சி எடுக்கும்போது அது 5 சதவிகிதம்தான், பொதுமக்கள் எந்தளவிற்கு இதைப் புரிந்து கொண்டு பயன்படுத்திக்கொள்கிறார்களோ அது 95 சதவிகிதம். அதற்கு இக்கருத்தைப் பறைசாற்றவேண்டியிருக்கிறது. ஓரளவிற்குச் செய்து வருகிறோம்.

திரு. த. சோனையா : ரஷ்ய நாட்டிலிருந்து வருகிற இந்த ஆடுகள் நம் நாட்டிலுள்ள ஆடுகளைப்போன்ற நிறத்தில் உள்ளனவா அல்லது பலவிதமான கலர்களில் இருக்கின்றனவா, எந்த நிறத்தில் இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ்நாட்டிலுள்ள கால்நடைப் பண்ணைகளை எல்லாம், உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ளவைகளை ஒரு முறை சென்று பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் இந்த ஆடுகள் பெரும்பாலும் சாம்பல் நிறம், வெள்ளை நிறம், கொஞ்சம் பழுப்பு நிறம் இந்த அளவிற்குத்தான் இருக்கின்றன.

## தமிழ்நாடு நகல் எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்கும் விதிகள்

*128. வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நகல் எழுதுபவர்கள் விதி (Tamil Nadu Copy-writes Rules) எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வந்தது?

(இ) அதன்படி எத்தனை பேர்களுக்கு இதுவரை உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) தமிழ்நாடு நகல் எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்கும் விதிகள் (Tamil Nadu Copy-writers Licence Rules) இன்னும் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.



## கள், சாராயக்கடை ஏலத்தில் கிடைத்த தொகை

*129. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள், சாராயக் கடைகளின் ஏலத்தொகைகளிலிருந்து பங்கு கோரி, பஞ்சாயத்து யூனியன்கள் எவையேனும் அரசுக்கு விண்ணப்பித்துள்ளனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். சில ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மேலும் சில நகராட்சிகளும் விண்ணப்பித்ததை அனுமதிக்க இயலாது என்று அரசு முடிவெடுத்து அவைகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : மதுவிலக்கைத் தள்ளி வைத்துவிட்ட பிறகு கிராமங்களில் உள்ள ஏழை, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாகக் குடித்துக் கெட்டுப்போய் விடுகிறார்கள். அதை உத்தேசித்தாவது அரசாங்கம் மீண்டும் மதுவிலக்கைக் கொண்டுவருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கும் மூலக் கேள்விக்கும் என்ன சம்பந்தம்?

திரு. மா. வே. நாராயணசாமி : நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறிடங்களில் இதுபோன்ற கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் நிரம்ப இருக்கின்றன. நகராட்சி மன்றங்கள் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு சுகாதார அடிப்படையில் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் எப்படி கேளிக்கை வரி நகராட்சிமன்றத்திற்கு வருகிறதோ அதே போல் இந்த மதுக்கடைகள் வாயிலாக வரும் வருவாயில் ஒரு பகுதியை நகராட்சி மன்றங்களுக்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இயலாது என்று ஏற்கனவே பதிலில் தெரிவித்துவிட்டேன்.

திரு. த. சோனையா : திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் கள்ளுக் கடைகள்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருப்புவனம் பற்றி எப்படிச் சொல்ல முடியும்? பொதுவாகக் கேளுங்கள்.

[1973 பிப்ரவரி 12

திரு. த. சோலையா: கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் இவற்றை போட்டி போட்டுக்கொண்டு ஏலம் கேட்கிறார்கள். அப்படி ஏலம் கேட்பவர்கள் கடைசியில் ஏலத்தொகையை கட்டுவதற்குப் பணம் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். எனவே அப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது சலுகை அளிக்க முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்வியை யொட்டிக் கேளுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, will the Hon. Minister for Revenue be pleased to say how many shops—Arrack Shops and Toddy Shops—are situated in each Panchayat Union?

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sorry, Sir; I do not have the figures now.

திரு. ஜே. ஜேம்ஸ்: பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த வருவாயில் ஒரு பகுதியைக் கொடுப்பதால் இப்போது அதிகமாகயிருக்கிற கள்ளச்சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதற்கு அதை மேற்பார்வை செய்ய அனுகூலமாகயிருக்குமே. எனவே, அதை ஆலோசித்தாவது இதுபற்றி முடிவு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதற்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: சலுகைகள் கோருவதற்குப் பதிலாக நம் தமிழ்நாட்டில் ஏதாவது பஞ்சாயத்துக்கள் இப்படிப்பட்ட மதுக்கடைகளை அவர்களது எல்லைக்குள் இருக்க வேண்டாம் என்று விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளனவா? அது குறித்து அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுபற்றிய விவரம் என்னிடம் இப்போது இல்லை.

திரு. நா. வே. குருசாமி: சில ஊராட்சிமன்றங்கள் வருவாய்க் குறைவு காரணமாக மின்சாரக் கட்டணம்கூட செலுத்த முடியாத நிலையில் உள்ளன. எனவே மதுவிலக்கு ரத்து செய்திருப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு பகுதியை அந்தப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்தால் அது நல்ல முறையில் நடவடிக்கைகள் எடுக்கமுடியுமே, அதைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா?



1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்படிப்பட்ட விண்ணப்பங்கள் வந்தவுடன் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், முதல் அமைச்சர் அவர்களையும் கலந்துகொண்டு அப்படிக் கொடுப்பது தேவையில்லை என்று அரசாங்கம் முடிவு எடுத்துவிட்டது என்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

## கள்ளச் சாராயம் தயாரிப்பு

*130. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுவிலக்கு தள்ளி வைக்கப்பட்டதற்குப் பிறகு, கள்ளத்தனமாக மது தயாரித்ததாக யாரேனும் கைது செய்யப்பட்டனரா?

(இ) அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) செப்டம்பர் 1971லிருந்து டிசம்பர் 1972 வரை கள்ளத்தனமாக மது தயாரித்ததாக 11,674 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 8,893 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டன. 1,046 வழக்குகள் தள்ளப்பட்டன. மற்றவை புலனாய்விலும், கண்டுபிடிக்கப்படாமலும் உள்ளன.

திரு. என். கிட்டப்பா: இந்த மதுவிலக்கைத் தாற்காலிகமாக ஒத்திவைத்த பிறகு கள்ளச்சாராயம் காய்ச்சுவது குறிப்பாக, சாராயம் காய்ச்சுவது கிராமப்புறங்களில் அதிகரித்து உண்மைச் சாராயத்தோடு அதைக் கலந்து விற்கின்ற சூழ்நிலை பலயிடங்களில் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே அதைப் பரிசோதித்து அத்தகைய முறையில் வியாபாரம் நடத்தக்கூடியவர்களுக்குத் தண்டனை விதிக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படியும் பல வழக்குகள் பிடித்து வழக்குகளை நீதிமன்றத்தில் கொண்டுபோய் வைத்திருக்கிறோம். சிலர் தண்டிக்கப்பட்டும் இருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுவிலக்கை ரத்து செய்த பிறகு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமான தொகைக்கு ஏலம் எடுத்திருப்பதால் இம்மாதிரி கள்ளச்சாராயத்தை உபயோகப்படுத்துகிறார்கள் என்று தெரியுமா? அப்படியானால் அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கயிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவலில் இருந்து கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறது. ஆனால் கள்ளச்சாராயத்தோடு இவற்றைக் கலந்து விற்கிறார்கள் என்ற புகார்கள் சிலயிடங்களில் வந்திருக்கின்றன. நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். பொதுவாக எங்கு கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறதோ அங்கிருந்து புகார்கள் வருமானால் அங்கிருக்கிற போலீஸ் ஒருவேளை நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டால் எனக்கோ, அல்லது டி.ஐ.ஜி.க்கோ அல்லது கமிஷனருக்கோ எழுதியனுப்பினால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : மதுவிலக்கு தள்ளிவைக்கப் பட்ட பிறகு சிலர் மது அருந்திவிட்டுப் பொதுயிடங்களில், தாறு மாறாக நடந்துகொள்கிறார்கள். அதைத் தடுக்க இச்சட்டத்தை திருத்தி அமைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்கு இப்போதே விதிகள் இருக்கின்றன. அப்படி நடந்துகொள்ளக் கூடாது. நடந்து கொண்டால் போலீஸார் நடவடிக்கை எடுப்பார்கள்.

## மாயூரம்–மணல்மேடு சாலை

*131. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரத்திலிருந்து மாப்படுகை–திருமங்கலம்–ஆத்தூர் வழியாக மணல்மேடு செல்லும் சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : மாயூரத்திலிருந்து திருமங்கலம் ஆத்தூர் வரை செல்லும் சாலையை நெடுஞ்சாலைத் துறையில் சென்ற நிதி ஆண்டு ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. ஆனால் இதுவரை யிலும் புகார்கள் கொடுத்தும், நேரில் சொல்லியும் அந்தப் பாதை சீரமைக்கப்படாத காரணத்தினால் போக்குவரத்து தடைப்பட்டிருக் கிறது. அதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதை விரைவுபடுத்த அரசு ஆணையிட முன்வருமா?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒன்பது மைல், இரண்டு பர்லாங் நீளமுள்ள அந்தச் சாலையை அரசாங்கம் மேற் கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறை மூலம் அதைப் பேணி நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும்.

## சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்கள்

*132. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

முக்கிய நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் நிழல் தரும் மரங்களை வளர்க்க அரசு ஆலோசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த நெடுஞ்சாலைகளில் இந்த மரம் நடும் பணிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக விவரம் இல்லை.

The Government are considering a crash programme and have called for necessary details from the Chief Engineer Highways and Rural Works.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சில இடங்களில் சாலை களிலே உள்ள மரங்களை சில ஆட்கள் வெட்டி எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ரம்பத்தால் அறுத்து எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். சேலம் மாவட்டத்தில் ஓமலூர்–மேட்டூர் சாலையில் உள்ள மரங்களை அறுத்து எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மரங்களை எல்லாயிடங்களிலும் நடுவதற்கு முடியா விட்டாலும், நட்ட மரங்களை பாதுகாக்க அரசாங்கம் கடுமையான சட்டம் கொண்டு வர முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சட்டம் ஏற்கெனவே இருக்கிறது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் சிலர் தவறான பணிகளில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். பொதுமக்களின் உதவியால்தான், ஒத்துழைப்பால் தான் அவற்றைத் தடுக்க முடியும்.

மால்கோ தொழிற்சாலை கழிவு நீர்

*133. வினு—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா நகர எல்லைக்குள் இருக்கும் மால்கோ தொழிற்சாலையில் கழிவு நீரைத் தடுத்து பாசனத்திற்கு பயன் படுத்தும் திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது?

(இ) இதைத் துரிதமாக செயல்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) அத்தகையத் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், அது சம்பந்தமாக சர்வே செய்யப் பட்டு, எஸ்டிமேட் போடப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீரை அருகேயுள்ள தண்ணீர் இல்லாத நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்கு வசதியிருக்கிறது. ஏன் அதைச் செயல்படுத்தும் திட்டத்தை அரசு மேற்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மெட்ராஸ் அலுமினியம் ஆலைக்கும் அரசாங்கத்திற்கும் இருக்கும் ஒப்பந்த வாசகத்தின்படி கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, நீர்த்தேக்கத் திற்கு விட வேண்டும். அந்த ஒப்பந்தத்தில் இது ஒரு கண்டிஷனுக இருக்கிறது. அதன்படி இப்போது அவர்கள் அந்தத் தண்ணீரைச் சுத்தப்படுத்தி, நீர்த் தேக்கத்திற்கு அனுப்புவதால் அந்த நடவடிக்கை தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

சுற்றுலா இடங்களைப் பற்றிய புத்தகங்கள்

*134. வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா இடங்களையும் சிறப்புக்களையும் விளக்க புத்தகம் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறிப்புப் புத்தகங்கள் இருக்குமானுல், வெளிநாட்டிலிருந்து இறங்குகிற பயணிகள் டெல்லியிலே வந்திறங்கும்போதோ, பம்பாயிலே வந்திறங்கும்போதோ அந்த நகரத்திலுள்ள விமான நிலையத்திலேயே தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ் நாட்டிலுள்ள நீலகிரியின் எழில் பற்றியும், குற்றாலத்தைப் பற்றியும் உள்ள புத்தகங்களை அங்கேயே கொடுத்தால், அவர்கள் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்க வருவதற்கு ஆர்வம் ஏற்படுத்துவதாக இருக்கும். அதற்கான வழிவகை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அந்தப் புத்தகங்கள் இப்போது தான் தயாராகிக் கொண்டு வருகின்றன. சுற்றுலா வாரியம் தற்போது பம்பாயிலே ஏர் இந்தியா கட்டடத்தில் ஒரு இடத்தை எடுத்து, விளம்பரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிருர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த புக்லெட்டு கள் நான்டிடேயில் போல் பெரிய அளவில் இல்லாமல், சிறிய சிறிய புத்தகங்களாக அளிக்கப்படுமா, அல்லது பெரிய அளவில் அளிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கைட் புத்தகங்கள் என்ருலே நான்டிடேயில் போல் பெரிய அளவில் இருக்காது. ஆனுல் நான்டி டேயில் போல் சுவையானதாக இருக்கும். அந்த வகையில் சென்னை, மகாபலிபுரம், காஞ்சீபுரம் ஆகிய மூன்று இடங்களைக் குறித்து ஒரு புத்தகமும், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, இராமேஸ்வரம் ஆகிய நான்கு ஊர்களைக் குறித்து ஒரு புத்தகமும், தமிழ்நாட்டிலுள்ள மலை வாசஸ்தலங்களைக் குறித்து ஒரு புத்தகமும், சிறிய அளவில் அழகான வகையில் வெளியிடப்படவிருக்கின்றன. அவைகள் பயணிகள் விரைவில் படித்துப் பார்த்து சுவைப்பெறத்தக்க வகையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, அந்தப் புத்தகங் கள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது சுற்றுலா பயணிகளுக்கு கொடுப்பதற்காகத் தயாரிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் ஆர் வத்தைப் பார்க்கிறபோது அதை அளிக்கலாம் என்று நம்புகிறேன்.

[1973 பிப்ரவரி 12

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அந்தப் புத்தகங்கள் எந்தெந்த மொழிகளில் வெளியிடப்படுகின்றன? ஹிந்தி மொழியிலும் வெளியிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இதில் மொழிப் பிரச்னைக்கு இடமில்லை: தற்போது வெளியிடப்படுகிற புத்தகங்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் இது போன்ற சிறிய வெளியீடுகள் வெளிநாட்டிலிருந்து பயணிகள் வந்து தங்குகிற ஓட்டல்கள், விடுதிகள் ஆகிய இடங்களில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட முறையில் இங்கேயும் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தனியார்த் துறையில் தற்போது இரண்டு புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. "ஆசியன் டிராவலர்ஸ்" என்று ஒரு புத்தகமும், "மெட்ராஸ் காலிங்" என்ற புத்தகமும் வெளியிடப்படுகின்றன. அந்தப் புத்தகங்களில் சென்னையில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றியும், தமிழ்நாட்டிலுள்ள ஒரு பகுதியின் சிறப்பைக் குறித்தும் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. அவைகளை எல்லா ஓட்டல்களிலும், உணவு விடுதிகளிலும் வைத்து விற்றுக்கொண்டு வருகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளுக்காக பிரசுரிக்கப்படுகின்ற புத்தகத்தை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களை அவ்விடங்களுக்கு அழைத்துச் செல்லவும் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றிப் பார்ப்பதற்கு பாஸ் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. எல்லா சுற்றுலா இடங்களும் தமிழ்நாட்டிற்குள்தான் இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர்கள் தங்கள் வசதிப்படி அந்த இடங்களுக்குச் சென்று பார்த்து வருவதில் அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.



1973 பிப்ரவரி 12]

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, சுற்றுலாத் துறையினர் அச்சடிக்கும் அந்தப் புத்தகத்தில் சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மலை வாசஸ்தலம் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது. நானும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் புறக்கணிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, அந்தப் புத்தகத்தில் தமிழ்நாட்டின் ஒரு மிகப் பெரிய சாதனையான கூவம் நதியின் சிறப்பையும் சேர்த்து அச்சடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தகுந்த வகையில் கூவம் நதி ஒரு சிறப்பான இடத்தைத் தற்போது பெற்றுள்ள காரணத்தால், அதுவும் புறக்கணிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## அடையாறு வாய்க்காலின் குறுக்கே பாலம்.

* 135 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் சென்ட்ரல் பாலிடெக்னிக் பகுதியையும் இந்திரா நகர் பகுதியையும் இணைக்க இரண்டுக்கும் குறுக்கேயுள்ள அடையாறு வாய்க்காலுக்கு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சைதாப்பேட்டைக்கு எளிதில் சென்றுவர வசதியாயிருக்கும் பொருட்டு, இந்திரா நகர் இரண்டாவது அவெனியூவையும், தென் சென்னைப் புற நகர்ப் பகுதியின் மேற்கில் செல்லும் நெடுஞ்சாலையையும் இணைப்பதற்காக பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுவதற்கான செயற்குறிப்புக்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1971 மார்ச்சில் அனுப்பியது. பொருளாதார வகையில் அது இயலாத ஒன்று எனத் தெரியவந்ததால், அச்செயற் குறிப்பு தள்ளி போடப்பட்டது.

[1973 பிப்ரவரி 12

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தப் பாலத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அதை அங்கேயுள்ள மக்கள் பெரிதும் எதிர்ப்பார்க்கிறார்கள் என்ற காரணத்தால், அந்தப் பணியை விரைவில் இந்த நிதி ஆண்டிலேயே ஏற்று நடத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அந்த பாலத்திற்காக திட்டமிடப்பட்ட நேரத்தில் அதன் மதிப்பீடு ரூ. 4½ லட்சம். இப்போது அந்தத் திட்டத்திற்கு ரூ. 9 லட்சமாக உயர்ந்து இருப்பதாக அறிய வருகிறது. அதிலே இருக்கும் பிரச்னை என்ன வென்றால் இந்திரா நகரில் ஒரு வீட்டு மனை ரூ. 4,500 என்று விற்கப் பட்டிருக்கிறது. அது கையகப்படுத்தப்பட்ட நிலையில் ரூ. 6,500 என்று விற்கப்பட்டு வருகிறது. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக ஆகும் செலவை அங்கே குடியிருப்பவர்கள் அனைவரும் சமமாகப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை அவர்கள் ஒப்புக்கொள்ளாத காரணத்தாலும், வீட்டு வசதி வாரி யத்தால் இவ்வளவு பெரிய செலவை ஏற்க முடியாத காரணத்தாலும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, 9 லட்சம் ரூபாய் அங்கே குடியிருப்பவர்களிடமிருந்து வாங்க முடியாது என்ற காரணத் தால் அந்தப் பாலத்தைக் கைவிடுவது சரியா? அந்தப் பாலத்தின் மீது போகும் வண்டிகளிடமிருந்து ஏதேனும் கட்டணம் வசூலிப்பதன் மூலம் அந்தத் தொகையை ஈடுசெய்து கொள்ளலாம் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பாலத்தின் மீது செல்லும் அந்த வண்டிகளும் அந்த வீட்டிற்குத்தான் செல்லும். ஆகவே, வண்டிகளிடமிருந்து வாங்கினாலும், அங்கே வசிப்போரிடமிருந்து வாங்கினாலும் இரண்டும் ஒன்றுதான். பக்கிங்ஹாம் கால்வாயில் கட்டப்படும் பாலத்திற்கு அரசு 60 சதவிகிதம் கொடுக்க வேண்டு மென்றும், மாநகராட்சி மீதமுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொன்ன நேரத்தில், மாநகராட்சி அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு அரசு அவ்வளவு பெரிய தொகையைத் தருவது, வீட்டு வசதி வாரியம் தனியான முறையில் அவ்வளவு பெரிய தொகையைச் செலவு செய்வது



1973 பிப்ரவரி 12]

என்பது இயலாத காரணத்தால், அந்தத் திட்டம் தள்ளிப் போடப் பட்டிருக்கிறது. காலகட்டத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அதனுடைய மதிப்புத் தொகை 9 லட்சம் ரூபாய் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தொகையில் கணிசமான ஒரு பகுதியை அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் நிதியாக வசூலித்துத் தந்தால், அந்த வேலையை அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன் வருமா என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இப்படிப்பட்ட ஆலோசனை களை அரசு வரவேற்கத் தயாராக இருக்கிறது.

## சந்தனத்தைலம் தயாரித்தல்.

* 136 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ் நாட்டில் சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களில் யார் யாரால் நடத்தப்பட்டு வருகின்றன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ் நாட்டில் சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தனியார் துறையினரால், சேலம் மாவட்டம் மேட்டூரில், மேட்டூர் சந்தன எண்ணெய் வடிசாலைக் கம்பெனியாலும், சேலத்தில் பாரத் சந்தன எண்ணெய் வடிதொழிற்சாலையாலும் நடத்தப்பட்டு வரு கின்றன.

திரு. என். கிட்டப்பா : சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தனியார் நிறுவனங்களினால் நடத்தப் படுவதில் அதிகமான வருமானம் கிடைக்கிறது என்று கருதப்படு கிறது. அவைகளை தமிழக அரசு எடுத்து நடத்துவதற்கு ஆலோ சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி ஒரு செயற்குறிப்பு அரசாங்கத்தில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் மேட்டூரில் இருக்கிற தொழிற்சாலை சரியாக இயங்குவதில்லை என்றும், அப்படி இயங்காததற்குக் காரணம் சந்தனக் கட்டையின் விலை அதிகமாக இருக்கிறது என்பதினால் அரசாங்கம் அதற்கு ஏதாவது சலுகை அளிக்க வேண்டும் என்று அரசாங்கத்தினிடம் விண்ணப்பத்திருக்கிறார்களா ? அப்படி விண்ணப்பத்திருந்தால், அதைப் பரிசீலித்து அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் அந்தத் தொழிற்சாலை முறையாக இயங்குவதற்கு வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதைப்பற்றி விவரம் என்னிடம் இல்லை.

திரு. எம். இராதாகிருட்டிணன் : திருவண்ணாமலையில் புதியதாக ஒரு சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலை ஏற்படுத்தப் போவதாக அறிகிறேன். அது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தகவல் இல்லை.

*Kodayar Electricity Project*

*137. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether direct electricity supply from Kodayar MeenMoti Hydro leitricity Project has been given to Kanyakumari district?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆம்.

திரு. என். டென்னிஸ் : டார்ஜெட்படி உள்ள மின் கபாஸிடி ஜெனரேட் செய்ய முடியாத காரணம் என்ன ? மேலும் கன்யாகுமரி மாவட்டத்தில் பல இடங்களில் டிரான்ஸ்பார்மர்ஸ் அமைக்கப் படாமல் இருப்பதால், ஒளி மங்கிய நிலைமையில் மின்சாரம் வழங்கப் படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலம் அதிக அளவு மின் சாரம் வழங்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எடுத்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் திட்டத்தின் கீழ் 100 மெகவாட் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. அதிலே எவ்வளவு உற்பத்தி ஆகிறது? இப்பொழுது பழுது பார்க்கப் பட்ட என்ஜின்களெல்லாம் இயங்குகின்றனவா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?





மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதில் 60 மெகாவாட் உற்பத்தி செய்யும் ஒரு நிலையமும், 40 மெகாவாட் உற்பத்தி செய்யும் இன்னொரு நிலையமும் இருக்கின்றன. 60 மெகாவாட் நிலையம் இயங்குகிறது. 40 மெகாவாட் நிலையம் இன்னும் இரண்டொரு நாட்களில் இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மைசூர், கேரள மாநிலங்களிலிருந்து மின்சாரம்

* 138 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-72ஆம் ஆண்டில் நமது மாநிலத்திற்கு மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்கள் மின் சப்ளை செய்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) 1971-72-ஆம் ஆண்டில், நம் மாநிலம் 186 மில்லியன் யூனிட் மின்சாரத்தை மைசூரிலிருந்தும் 328 மில்லியன் யூனிட் மின் சாரத்தை கேரளத்திலிருந்தும் பெற்றுள்ளது.

திரு. என். கிட்டப்பா : இந்த ஆண்டு இந்த இரண்டு மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்குக் கிடைத்து வந்த மின்சாரம் நிறுத்தப்பட்டு விட்டதாகவும், அப்படி நிறுத்தப்பட்டுவிட்ட காரணத்தினால் மின்சார வெட்டு அதிகரித்து விட்டதாகவும் எல்லோருக்கும் தெரிகிறது. எனவே, நமது மாநிலத்திலேயே மின்சாரத்தினை அதிகமான அளவுக்கு உற்பத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா என்பதை இங்கே அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதற்காக தனியாக ஒரு ரிபோர்ட்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் சட்ட மன்றத்தில் வைக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : இந்த ஆண்டும் தொடர்ந்து அவர்கள் நமக்கு சப்ளை செய்து வருகிறார்களா ? சென்ற ஆண்டு மைசூர், கேரள மாநிலங்களிலிருந்து நாம் வாங்கிய மின்சாரத்திற்கு நாம் கொடுத்த விலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சென்ற ஆண்டு ஒரு யூனிட்டுக்கு முதல் 15 கோடி யூனிட்கள் வரையில் 5 பைசாவும், அதற்கு மேலே உள்ளதற்கு ஒரு யூனிட்டிற்கு 5.25 பைசா என்றும் தரப்பட்டுள்ளது. இரண்டு மாநிலங்களிலும் மின்சாரம் இல்லாத காரணத்தினால் இப்பொழுது கொடுக்கவில்லை.

திரு. நா. வீராசாமி: கேரளாவில் இப்பொழுது நிலைமை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவ்வளவு மோசமாக இல்லை. எனவே, நம்முடைய அரசு கேரள அரசை அணுகி சென்ற ஆண்டும், அதற்கு முன் ஆண்டும் கொடுத்ததுபோல் இந்த ஆண்டும் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பல முறை கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களிடத்தில் மின்சாரம் இல்லை என்ற பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

*Inter-State Transport Services*

* 139. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the agreement made by the Tamil Nadu Government and Kerala Government for operating inter-State bus services?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒப்பந்தம் இன்னும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்: இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் திருவனந்தபுரத்திலிருந்து நாகர்கோவிலுக்கு மின்னல் வேக பஸ் விடுவதாக குறிப்பிடப்பட்டது. எப்பொழுது அது நடைமுறையில் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கொள்கை அளவிலே கேரள மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் போக்குவரத்தைப்பற்றி ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கான விவரங்களை இரு மாநில அதிகாரிகளும் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒப்பந்தம் இன்னும் முடிவு பெறவில்லை. இருந்தாலும், திருவனந்தபுரத்திலிருந்து கன்யாகுமரிக்கு ஓடுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்



படுத்துவதற்கு கேரள அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் 20-க்கு மேற்பட்ட தடவைகள் அந்தப் பகுதியில் ஓடுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இரவு நேர பஸ்கள் விடுவதற்கு ஒரு ஆலோசனை இருந்ததே, அது என்ன ஆயிற்று? அப்படி பஸ்கள் விடவில்லை என்று சொன்னால் துரிதமாக விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரவு நேரங்களில் ஓட்டுவதற்கான நிலைமையையும் ஒட்டித்தான் பயணத் தடவைகள் அதிகரித்திருக்கின்றன. இரவில் கூட திருவனந்தபுரத்திலிருந்து கன்யாகுமரிக்கு பஸ் வசதிக்காக ஏற்பாடு ஆகியிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்கு மின்னல்வேக பஸ் விடுவதாகக் கூறப்பட்டதே, அது நடைமுறையில் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு நாகர்கோவில் வழியாக கேரள அரசாங்கமும் நம்முடைய அரசாங்கமும் பஸ் விடுவது என்று கேரள மாநில போக்குவரத்து அமைச்சர் அவர்கள் என்னைச் சந்தித்துப் பேசிய பொழுது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் நல்ல பஸ்கள் கிடைத்தவுடன் அதற்கான ஏற்பாடுகளை இரண்டு அரசும் மேற்கொள்ளும்.

திரு. ஆ. பரந்தாமன்: ஆந்திர அரசோடு ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தின் அடிப்படையில் 50 பஸ்கள் தமிழக அரசு விடுவதாக இருந்ததே, அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆந்திர அரசோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்தப் பேருந்துகள் இப்பொழுது இரு மாநிலங்களிடையேயும் விடப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன்: ஆந்திர மாநிலத்தோடு செய்து கொண்டிருக்கிற ஒப்பந்தத்தின்படி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே நாஷனலைஸ் செய்த பஸ்கள் சில, நம்முடைய அரசு பேருந்துகள் ஓட்ட முடியாத சூழ்நிலையில் அவை புதுப்பிக்கப்படவில்லை என்ற புகார்கள் வருகின்றன. நெல்லூர், நாயுடுப்பேட்டை, வரதப்பாளையம் போன்ற

பகுதிகளில் பஸ்கள் நம்முடைய எல்லையில் நிற்கின்றன. இவைகளை யெல்லாம் ஓட்டுவதற்கு, புதுப்பிக்கும் முயற்சியுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரு மாநிலங்களுக்கு மிடையே ஒப்பந்தம் ஏற்பட்டாலும்கூட, மாநிலங்களுக்கு இடையே ஓடும் வழித்தடங்கள் தனியார்களினாலும் பயன்படுத்தப்படுகின்றன. நம்முடைய சில வழித்தடங்களில் அத்தகைய தனி பஸ்கள் உரிமையாளர்கள் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கியிருக்கின்ற காரணத்தினால் சில வழித்தடங்களிலே நமது பஸ்கள் விடமுடியவில்லை. இதை ஒட்டித்தான் அண்மையில் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சர்கள் மகாநாட்டில் மாநிலங்களுக்கு இடையே ஓடுகின்ற பேருந்துகளின் வழித்தடங்கள் அத்தனையையும் நமது போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான்கு தென் மாநில அமைச்சர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழ் நாட்டு அரசிற்கும் கேரள சர்க்காருக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடந்து புதிய ரூட்கள் திறக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? ஏற்கனவே கோட்டையம் போகிற பஸ்களை எர்ணாகுளத்திற்கு நீடிப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஏற்கனவே தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் இருந்த உடன்படிக்கையின்படி ஒவ்வொரு வழித்தடத்தைப்பற்றி அவர்களிடையே பேசி அதற்குப் பிறகு விட வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. அண்மையில் பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு மாநிலத்திலிருந்து இதர மாநிலத்தில் பேருந்துகள் எவ்வளவு தூரம் ஓடுகிறது என்ற அடிப்படையில். அந்தப் பகுதியிலே ஓடுகிற தூரத்தை சமநிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தத்துவத்தை கேரள அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வழித்தடங்களை நாம் அதிகப்படுத்துவதில் எந்த விதமான சிக்கலும் இருப்பதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் கவனத்தில் கொள்ளும்.

### *Road Development and Traffic Planning Committee*

* 140 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Road Development and Traffic Planning Committee, is working in collaboration with (1) Road Safety Organisation and (2) Traffic Cell of the Highways and Police Departments; and

(*b*) if so, the details thereof?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) நெடுஞ்சாலை, காவல்துறைகளின் அதிகாரிகள் தமிழ்நாடு மாநில சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக்குழுவின் உறுப்பினர்களாக உள்ளதாலும் இக்குழுவின் பரிவுரைகள் இவர்களால் செயல்படுத்தப் படுவதாலும், நெடுஞ்சாலை—காவல்துறைகளுடன் இக்குழு ஒருங்கிணைந்து செயல்படுகிறது எனக் கொள்ளலாம்.

THIRU N. DENNIS: May I know the place having greater number of accidents?

THE HON. THIRU S. RAMACHANDRAN: I have no information, Sir.

MR. DEPUTY SPEAKER: Questions and answers are over.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

### மதுரை, எர்ஸ்கின் மருத்துவமனை ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார் அவர்களும், கே. டி. கே. தங்கமணி அவர்களும் பேரவையின் 42-வது விதியின் கீழ் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது—

"Failure of the Government to settle Madurai Erskine Hospital House Surgeons' strike earlier than 30th January 1973 resulting in four days strike by House Surgeons and students and sympathetic strike and threat by the Class IV staff".

இது எப்படி பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கக்கூடிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் திரு. தங்கமணி அவர்களும் சுருக்கமாக விளக்குவார்கள். முதலில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir, I would like to invite the attention of the Government to a matter of urgent public importance and I think the matter is now well-settled. Suffice it for me to say at this juncture that the strike was the result of a clash between the doctors and workers in that Hospital. It is unfortunate that it has been reported that some assault had been made—whether it is true or not I do not know—and if it is a fact something has to be done. On that the doctors and the medical students struck work and the patients who were in the hospital were put to irrepairable suffering for four days. I understand that some persons were dealt with and departmental action was taken and some persons were dismissed.

The grievance ventilated by the subordinate staff is that no proper enquiry had been conducted and the principles of natural justice have not been completed and the order of dismissal and suspension were communicated even while the negotiations were in progress. I was informed that the orders were issued at about 11-15 on that day and the negotiations had not terminated even by 1 O'clock that day. That is the information I have. If that be the case, I would request the Government to take a lenient view and if it is a gross injustice and mistake that had been committed, it would be proper that drastic measures are taken; but if it is not so, it is better that both parties are sufficiently admonished so that better relationship may prevail and such things will not recur in future. That is the only point for which I want to bring to the notice of the Government and also this House that a strike by the doctors and staff would be most unwelcome as it would cause so much hardship to the patients and people. Such things should not recur in any institution in future and it is with that view that I have brought this motion. Thank you Sir.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த வேலை நிறுத்தம் ஓரளவு முடிந்து விட்டது வரவேற்கத்தக்கது என்றாலும்கூட, அந்த சமயத்தில் நான் மதுரையில் இருந்தவன் என்ற முறையிலே சில விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டியது என் கடமை என்று கருதுகிறேன். காரணம், அங்கு இருக்கக்கூடிய டாக்டர்களிலேயே நல்லமுறையில் பணியாற்றக்கூடிய டாக்டர் திரு. ஜெயகுமார்தான் என்று சொல்கிறார்கள். அதனால்தான் அந்த டாக்டர் தாக்கப் பட்டதும், மற்ற டாக்டர்களுக்கெல்லாம் ஆத்திரம் ஏற்பட்டு, வேலை





நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்று தெரிகிறது. அதே நேரத்தில் வேலை நிறுத்தம் நடைபெற்றாலும் "ஹவுஸ் சர்ஜன்கள்" எல்லாம் ஒன்று சேர்ந்து எமர்ஜன்ஸி கேஸ்களை அட்டன்ட் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து பணியாற்றியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும்.

எனக்குக் கிடைத்தத் தகவல்படி, டாக்டர் ஜெயகுமார் அவர்கள் ஒரு நோயாளியை டிஸ்சார்ஜ் செய்த பிறகு, அங்கு இருக்கக்கூடிய டீன் அவர்கள் தான் அவரை மீண்டும் அங்கே சேர்க்க வேண்டு மென்று சொன்னதாகவும், அதன் காரணமாக சர்ச்சை ஏற்பட்டு, அதன் பிறகு வேலை நிறுத்தம் நடைபெற்றதாகத் தெரிகிறது. அதன் காரணமாக மற்ற இடங்களில் கூட—தஞ்சை, சென்னை, கோவை போன்ற இடங்களில் கூட வேலை நிறுத்தம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரியான நிலை மேலும் நீடிக்குமானால் அது மிகவும் வருந்தத்தக்கது. எனவே, வேலை நிறுத்தத்திற்கான காரணங்களை அறிந்து அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பது ஒரு அவசரமான விஷயம். இல்லாவிட்டால் இதன் காரண மாக மேற்கொண்டும் ஏதாவது வேலை நிறுத்தம் நடைபெறுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் சிகிச்சைப்பெற வந்த நோயாளிகள். உயிர் பிழைக்கக்கூடிய நோயாளிகள் அதனால் உயிரைவிட வேண்டிய நிலை ஏற்படும். இதை ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானமாகக்கொண்டு வரவேண்டாமென்று தான் நான் நினைத்தேன். இருந்தாலும், தொடர்ந்து இம்மாதிரியான பதட்ட நிலை ஏற்படுமா, நடந்த வேலை நிறுத்தத்திற்கு என்ன பரிகாரம் காணப்பட்டது என்பதை அறிந்துகொள்வதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். இதற்கு முழு விளக்கம் கொடுக்கும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்ததற்கான காரணங்களை திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அவர்களின் கருத்துக்களிலேயே ஒன்றுக்கொன்று முரண்பாடு இருக்கிறது என்பதை முதலிலே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். நடைபெற்ற நிகழ்ச்சியை ஒரு முறை அவர்கள் நினைவுக்குக் கொண்டுவருகிறேன்.

மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் டாக்டர் ஜெயகுமார், 25—1—1973 அன்று காலையில் சிகிச்சைக்குப் பிறகு ஒரு நோயாளியை மருத்துவ மனையிலிருந்து விடுவித்து வெளியே அனுப்பும்படி பணித்தார். அந்நோயாளி மருத்துவ மனையில் கடைநிலை ஊழியராகப் பணி புரிபவர் ஆவர். அன்று மாலை மருத்துவர் வார்டுக்கு வந்த சமயத்தில் நோயாளி வெளியே அனுப்பப்படாமல் வார்டிலேயே இருப்பதைக் கண்டார். எனவே, உடனடியாக அந்நோயாளியை அனுப்பும்படி மருத்துவர் பணித்தார். இதனால் கடைநிலை ஊழியர்களுக்கு இவர்மீது ஆத்திரம் ஏற்பட்டது. கடைநிலை ஊழியர்கள் பலர் மருத்துவரைச் சூழ்ந்துகொண்டு வசை மாரி பொழிந்து அவரைத் தாக்கியதாகவும் புகார் எழுந்தது. மருத்துவமனைத் தலைவர் அவ்விடத்துக்குச் சென்று மருத்துவரைச் சமாதானப்படுத்தி அவரை அனுப்பி வைத்தார். டாக்டர் ஜெயகுமாரை அனுப்பி வைத்தவுடன் நிலைய மருத்துவ அலுவலரின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட நான்கு கடைநிலை ஊழியர்களிடம் அவர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டனர் என்று வாய்மொழியாக மருத்துவமனைத் தலைவர் தெரிவித்தார். பிறகு 26—1—1973-ல் எழுத்து மூலமாக இதுகுறித்து ஆணை பிறப்பித்தார். அதன் பிறகு ஹவுஸ் சர்ஜன்கள் இரவில் கூடி, வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தனர்.

இவ்வளவு விளக்கம் அவசியமில்லை என்றாலும், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்ததற்காக இந்த விளக்கத்தைத் தெரிவித்தேன். டாக்டர் தன் கடமையைச் செய்தார். ஆனால் ஊழியர்களில் ஒருவர் மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சைப் பெற உரிமை இல்லையா, அதைக் கேட்க எங்களுக்கு உரிமை இல்லையா என்று எழுப்பியப் பிரச்சனையின் காரணமாக இந்தத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் இதைக் காரணமாகக் கொண்டு, ஹவுஸ் சர்ஜன்களும், டாக்டர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். மேன் அவர்கள் எவ்வளவோ கேட்டுக் கொண்டும், அவர்கள் வேலை நிறுத்தத்தை கைவிடவில்லை. அதனால் நோயாளிகள் பாதிக்கப்பட்டனர். நோயாளிகள் பாதிக்கப்படாமல் இருக்க, அவர்கள் மீது அனுதாபம் கொண்டு, மேன் அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தார். தற்காலிகமாக சம்பந்தப்பட்டவர்கள் நீக்கம் செய்யப்பட்டதாக அறிவித்தார். அந்த நடவடிக்கை திருப்தி அளிக்காததால் வேலை நிறுத்தம் தொடர்ந்தது.





ஆகவே, இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உடனடியாக இங்கிருந்து துணை இயக்குநர் அவர்களும், இயக்குநர் அவர்களும் சென்று, அவர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து, வேலை நிறுத்தத்தை கைவிடும்படி திரும்பத் திரும்ப வலியுறுத்தியும், ஒரு வாரத்திற்குள் விசாரணை செய்து முடிவெடுப்பதாகத் தெரிவித்தும் அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினர். சுமார் 2,000 நோயாளிகள் இருக்கக்கூடிய ஒரு மருத்துவ மனையில் இப்படி ஒரு தகராறு எழுந்ததால், அந்த நோயாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதிலே போராட்ட உணர்ச்சியோ அல்லது பலாத்கார உணர்ச்சியோ அவர்களிடம் இல்லாமலிருந்தாலும், சம்பந்தப்பட்ட கடைநிலை ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களை நீக்கம் செய்யவேண்டுமென்று கோரினர். இறுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த நான்கு கடைநிலை ஊழியர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதிலே அரசாங்கத்தினால் தாமதம் எதுவும் ஏற்படவில்லை. இப்படி அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதிலே டாக்டர்களும், மற்றவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் டாக்டர்கள் பணியை ஒரு எமர்ஜன்ஸி பணியாகக் கருதுகிறது. ஏனென்றால் டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் பல்லாயிரக் கணக்கான நோயாளிகள் பாதிக்கப்படுவார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தருவார்களானால் டாக்டர்கள் பணியை "எமர்ஜென்ஸி சர்வீஸ்" ஆக டிக்ளேர் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. நோயாளிகள் எந்தவகையிலும் பாதிக்கப் படக்கூடாது. அந்த நல்லெண்ணத்தோடு அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுக்கத் தயாராக இருக்கிறது. அதற்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொண்டு, இந்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதி, அதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

[1973 பிப்ரவரி 12

## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I move—

'That leave be granted for the introduction of the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1973.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

### (ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Deputy Speaker, Sir, I move—

'That leave be granted for the introduction of the Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

## (4) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது தொடர்ந்து விவாதம். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆளுநர் உரையின் பேரில் எங்களுடைய கட்சியின் சார்பில் சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அந்த திருத்தங்களை எல்லாம் நான் பேசுகிற இறுதி நேரத்திலே வெளியிடலாம் என்று நினைக்கிறேன்.





கவர்னர் உரை என்று சொன்னால், அந்த கவர்னர் உரையானது அரசாங்கத்தினுடைய கொள்கையை வலியுறுத்துவதாகவும், அந்த கொள்கையின் அடிப்படையில் இந்த ஆண்டு என்ன செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கவேண்டும் என்பது தான் சாதாரணமாக நான் அறிந்த ஒன்று. ஆனால், இந்த கவர்னர் உரையைப் பார்த்தால் அந்த மாதிரி எதுவும் குறிப்பிடாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். உதாரணமாக, இதே மாதிரி ஒரு கவர்னர் உரையை 1957-ஆம் வருஷம் சமர்ப்பித்தவுடனே அதைப் பற்றி என்ன கருத்துக்களைச் சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"கவர்னர் பெருமகனாரின் பேருரை ஆட்சியாளர்கள் இனி செய்யப் போகின்ற காரியங்களையும் கடைப்பிடிக்க இருக்கின்ற கொள்கைகளின் விளக்கத்தையும் உள்ளடக்கியதாக இல்லாமல் இருப்பது உண்மையில் பெரும் குறையே என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொதுவாக ஆட்சியாளர்களின் கொள்கை திட்டங்களை விளக்குவதே கவர்னருடைய பேருரை என்பதும், அக் கொள்கைத் திட்டங்களுக்கு ஏற்ப நிதியை பகிர்ந்தளிப்பதாகிய புள்ளி விவரங்களைக் கொண்டதே வரவு செலவுத் திட்டம் என்பதும்தான் நான் அறிந்துள்ளவரையில் உணர்ந்து இருக்கிறேன். ஆனால் கவர்னர் பேருரையில் குறிப்பிடவேண்டிய கொள்கை விளக்கங்களை நிதி அமைச்சர் அவர்களுடைய வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்திற்கு கவர்னர் ஒதுக்கிவிட்டது பெரும் குறை எனச் சொல்லாமல் இருக்க முடியவில்லை."

இது 1957 ஆம் வருஷம் அன்றைக்கு எதிர்க்கட்சியிலிருந்த திரு. அண்ணாதுரை அவர்கள் நிகழ்த்திய உரை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு மேல் நான் இதை விளக்க விரும்பவில்லை. காரணம் அப்பொழுதே அவர்கள் தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். இப்பொழுது இருக்கக் கூடிய நிதியமைச்சர் வெறும் நிதியமைச்சராக மட்டுமில்லாமல் கல்வி அமைச்சராகவும் செலவினங்களை செய்யப்படுவதற்கான இலாக்காவையும் கொண்டவராக இருப்பதே இதற்குக் காரணமாக இருக்கிறது என்றார். அதே மாதிரி, இங்கே நிதியமைச்சராக இருக்கக்கூடிய முதலமைச்சர் கீழே இருக்கக் கூடிய பல இலாக்காக்கள் நிதியமைச்சர் செலவழிக்கக் கூடிய ஒரு அமைப்பாக அமைந்திருப்பது வருந்தத்தக்க விஷயம். ஆகவே, இனிமேலாவது நிதியமைச்சர் என்பவர் தனியாகவும், செலவினங்களுக்காக இருக்கக் கூடிய அமைச்சர் தனியாகவும் இருக்கக் கூடிய நிலைமையிலே மாற்றினால் இம்மாதிரி குறைபாடுகள் கவர்னர் உரையில் வருவதற்கு இல்லாமல் போகும் என்று நான் கருதுகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 12

அதே நேரத்தில் சாதாரணமாக இங்கே பேசியவர்களில் பலர் எதிர்கட்சிகள் எதிர்த்துக் கொண்டு தானே இருக்கிருர்கள்; எங்களோடு தோளோடு தோள் சேர்ந்து பணியாற்றக் கூடாதா என்று கேட்டிருக்கிருர்கள். உளப் பாங்கை பொறுத்தமட்டில் பல்வேறு கட்சிகள் தோளோடு தோள் சேர்ந்து பணியாற்ற முடியாது. கை கோர்த்துக்கொண்டு பணியாற்றலாம். அந்த முறையில் தான் அரசு இன்றைக்கு சொல்லக் கூடிய விஷயத்தில் கை கோர்த்து பணியாற்றக் கூடியவர்களாக இருக்கிறேம். இப்பொழுது நாங்கள் கைகோர்த்து பணியாற்ற ஏதாவது காரியங்களைச் சொன்னல் உடனடியாக நீங்கள் எங்களை எதிர்க்கிறீர்கள் என்ற முறையிலே நாங்கள் பேசுவதையே தடை செய்யும் முறையிலே இங்கு ஏற்கனவே அனுபவங்கள் நிறைய இருக்கின்றன. அந்த மாதிரி இல்லாத வகையிலே இனி உங்களுடைய பாதுகாப்பை நான் பேசக் கூடிய நேரத்திலே தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை நான் பார்முலேட் பண்ணி சொல்லுவது என்ருல், சுருக்கமாகச் சொன்னல், இன்றைக்கு வந்திருக்கக் கூடிய உரை

It is only the continuation of the pro-monopoly and pro-landlord policy that persists. There is a rightward swing but there is a leftward manoeuvre.

இந்த முறையிலே வைத்துக்கொண்டு ஒரு உரை நிகழ்த்துவார்களேயானல் இவர்கள் கொள்கை ஆரம்பத்திலிருந்தே ஊழல் உள்ளதாகத் தான் இருக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை. பல உறுப்பினர்கள் ஏற்கனவே எடுத்துச்சொன்னர்கள். அதுவும் ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் கூட எடுத்துச் சொன்னர்கள். உணவு கொள்முதலை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று. அது பற்றி விவரமாக சொல்லிவிட்ட காரணத்தினல் அதைப் பற்றி மேலே போகாமல் நான் நிறுத்திக்கொள்கிறேன். இன்றைக்கு உணவுக் கொள்முதலைப் பொறுத்தவரையில் 20 சதமான லெவியை மட்டும் எடுத்துக்கொண்டு 80 சதமானத்தை தனியாருக்கு விற்கலாம் என்ற நிலைமையினல் ஏற்படுகின்ற கோளாறுகளைப் பற்றி எனக்கு கிடைத்த விவரத்தை வைத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மத்திய அரசிற்கு அதிகாரம் இருக்கிறதா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும், அந்த மத்திய அரசே சொல்லுகிருர்கள் உணவுக் கொள்முதலை அரசே ஏற்று நடத்தவேண்டுமென்று. கேரளத்திலே அவ்வாறு அரசே உணவுக் கொள்முதலை ஏற்று நடத்துகிறது. புட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா தான் எல்லா விதமான உணவுப் பொருட்களை



1973 பிப்ரவரி 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

யும் விலைக்கு வாங்கி அதை விநியோகித்துக் கொண்டிருக்கிருர்கள். இன்று அதற்கு மாருக, சென்ற ஆண்டே ஒரு போட்டி ஸ்தாபனத்தை நமது அரசாங்கம் அமைத்தார்கள். இரண்டு ஸ்தாபனங்களும் சேர்ந்து முழுமையாக கொள்முதல் செய்கிருர்களா என்ருல் அதுவுமில்லை. இன்றைக்கு 20 சதம் கொள்முதல் செய்வதிலேகூட சிறு விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்படும் வகையிலே கொள்முதல் செய்துவிட்டு, மிச்சம் இருக்கக்கூடிய 80 சதமானத்தை நீங்கள் வெளியே விற்கலாம் என்று வந்தால் அங்கே தான் "ஊழல்" என்பதற்கு அஸ்திவாரம் ஏற்படுகிறது.

எப்படி ஊழல் ஏற்படுகிறது என்று சொன்னல்—இன்றைக்கு கடைசியில் என்ன சொல்லிவிட்டார்கள், தஞ்சை போன்ற இடத்திலே இருந்து மீதி இருக்கும் 80 சதமானத்தை எடுத்துச் செல்லக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள், அதுவும் உற்பத்தியாளர்களுக்கு பாதகம் ஏற்படும் வகையில். 10 இலட்சம் டன் உபரியாக இருக்கக் கூடிய தஞ்சை மாவட்டத்திலிருந்தும், சேலம், இராமனுதபுரம் மாவட்டங்களிலே இருந்தும் எந்த மாவட்டத்திற்கும் எடுத்துப் போகக் கூடாது என்று சொன்னல், சர்க்கரை எப்படி எல்லாம் கொண்டு போகப்படுகிறதோ அதே மாதிரி அந்த உணவுப் பொருளும் போவதற்கான நிலைதான் ஏற்படுமே தவிர வேறு ஒன்றுமில்லை. ஆகவே, இந்த உணவுக் கொள்முதலை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லும் பொழுது, தமிழகத்திலே கோளாறுகள் வரும் என்பதை எதிர்பார்த்து சொல்லுவதே அத்தகைய கோரிக்கைக்கு காரணம்.

இன்னென்று, சர்க்கரையைப் பொருத்தவரையில் மத்திய சர்க்கார் ஒரு உத்தரவு போட்டிருக்கிருர்கள். 60 சதமானம் லெவியாகவும், 40 சதமானத்தை தனியார் முறையிலேயும் விநியோகம் செய்வது என்று. இப்பொழுது 60, 40 என்றிருந்ததை 70, 30 என்று ஆக்கியிருக்கிருர்கள். அப்படி 70, 30 என்ருே அல்லது 60, 40 என்று ஆக்கினலும் சரி, நமக்கு அனுபவம் இருக்கிறது, எந்த அளவிற்கு அது ஊழல் நிறைந்ததாக இருந்தது என்று. அப்படி வரும் பொழுது, நானே ஒரு கேள்வி கேட்டிருந்தேன். சென்ற வருஷம் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதத்திலே நம்முடைய அரசிற்கு வந்திருக்கக் கூடிய சீனி ஏதேனும் விநியோகிக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டதும், அப்படி ஒன்றும் விநியோகிக்கப்படவில்லை என்று பதில் வந்தது. அப்படி விநியோகம் செய்ததில் கூட்டுறவு முறையில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 12

விநியோகம் செய்யப்பட்டதா என்பதற்கும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த 3 மாத காலத்தில் கிடைத்த சீனி என்ன ஆனது? அது இன்றைக்கும் நமக்குத் தெரியாத ஒன்றாக இருக்கிறது.

ஆகவே தான் நாங்கள் கொடுத்த குற்றச்சாட்டில் நம்பர் 31—இம்மாதிரி 1 கோடி பெருமான சீனி ஸ்டாக் பற்றியது ஒன்றாகும். அதற்குப் பதில் "அந்தச் சீனியை விநியோகிப்பதற்கு நாங்கள் சில ஹோல்சேல் வியாபாரிகளை எதிர்பார்த்தோம். அந்த நேரத்தில் சாதாரணமாக லெவி சர்க்கரை விலை 2 ரூபாய் என்றால் அந்த 2 ரூபாய்க்கே வெளிமார்க்கெட்டில் சர்க்கரை நிறையக் கிடைத்துக் கொண்டிருந்த காரணத்தினால், யாரும் நம்மிடம் இருந்த சர்க்கரையை லிப்ட் பண்ண முன்வரவில்லை. இரண்டு பேர்கள் தான் முன்வந்தார்கள். அவர்கள் மூலமாக லிப்ட் பண்ணினோம்" என்று சொன்னார்கள். இவர்கள் யார் யாரைக் கேட்டார்கள், எந்த இரண்டு பேர்கள் லிப்ட் பண்ண முன்வந்தார்கள் என்கிற விவரம் எதுவும் சட்டமன்றத்திற்குத் தெரியாது. எல்லோரும் முன்வரவில்லை என்றால் அப்படி முன்வந்த இந்த இரண்டு பேர்கள் யார்? இவர்கள் மட்டும் முன்வரக்காரணம் என்ன? பாரி அண்டு கம்பெனி முன்வந்ததாகத் தெரியவில்லை. அதன் மானேஜிங் டைரக்டர் எச். வி. ஆர். ஐயங்கார் ராஜினாமாச் செய்திருக்கிறார்கள். பாரி அண்டு கம்பெனி முன்வராமல் இருக்கிற சூழ்நிலை உருவாக்கப்பட்டதா? அதன் காரணத்தினால்தான் இவர் ராஜிநாமாச் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதா? இந்தக் கேள்விகள் எல்லாம் மக்கள் மத்தியில் இருக்கின்றன. (மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் எழுந்திருந்தார்.)

THIRU K. T. K. THANGAMANI: Sir, let me continue my speech. I will come to it in greater detail later. I am now developing the point on the distribution ..........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் கொடுக்கிற விளக்கம் அவர்களது விவாதத்திற்கு கூட உதவியாக இருக்கும். தங்கமணி அவர்கள் 1972 என்று சொன்னார்கள். அது 1972-ம் ஆண்டு அல்ல. 1970-ம் ஆண்டு 13-ம் தேதி பிப்ரவரி பாரி அண்டு கம்பெனியும் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கவே இல்லை என்கிற விவரமும் சரியல்ல. பைலே இருக்கிறது. எச். வி. ஆர். ஐயங்கார் எப்போது ராஜீநாமச் செய்தார்கள் என்று பார்க்க வேண்டும். இதற்கு முன்பே செய்துவிட்டார்கள். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.



1973 பிப்ரவரி 12]

திரு. கே. டி. கே. தங்கமணி: அமைச்சர் 1970-ம் ஆண்டைச் சொல்கிறார். நான் குறிப்பிட்டது 1972-ம் ஆண்டைப்பற்றித்தான் 1972-இல் ஸ்டாக் லிப்ட் பண்ணின முறையைப்பற்றித்தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எச். வி. ஆர். ஐயங்கார் 1971 ஜூலையில் ராஜீநாமாச் செய்தார்கள். ராஜீநாமாப் பண்ணின பிறகு 1972-ல் இன்னொரு முறை ராஜீநாமாப் பண்ணினார்களா?

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் உங்களது சீனி சப்ளை முறையைப்பற்றி திட்டவட்டமாகக் குற்றம் சாட்டுகிறேன். அந்த விநியோகத்தைப் பொறுத்த வரையில் இந்த அரசு சரியாக நடக்க வில்லை. சிலர் அதனால் பயன் அடைந்தார்கள். அது பாரி கம்பெனியா, ஏ.பி.டி. மகாலிங்கமா என்று சொல்லவில்லை. நீங்கள் கொடுத்திருக்கிற பதிலிலேயே 1 கோடி ரூபாய் பெருமான ஸ்டாக் இருந்தது, யாரும் லிப்ட் பண்ண முன்வரவில்லை இரண்டு பேர்கள் வந்தார்கள் அவர்கள் மூலம் லிப்ட் பண்ணினோம் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். யார் யார் மனுச் செய்தார்கள், நீங்கள் யார் யாருக்குக் கொடுக்கவில்லை என்கிற விவரத்திற்குள் போக நான் விரும்பவில்லை. உங்களது விநியோக முறையில் ஊழல் இருந்தது. மக்களுக்கும் சீனி கிடைக்கவில்லை. சீனியும் அதிகமான விலைக்கு ஏறிற்று.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேசிக்கொண்டே போவது பற்றி ஆட்சேபணையில்லை. எப்போது ஷுகர் கண்ட்ரோலை நீக்கினார்கள், மீண்டும் எப்போது வந்தது? ஏன் எடுத்தார்கள், ஏன் கொண்டுவந்தார்கள் என்பது எல்லாம் மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டியது. நாங்கள் என்ன தவறான முறையில் நடந்து கொண்டோம் என்று சொல்லவேண்டும்?

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழ்நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முறைகேடான முறையில் 1 கோடி ஸ்டாக் இருந்தது, வெளி மார்க்கெட்டில் 2 ரூபாய்க்குத் தாராளமாகக் கிடைத்த காரணத்தினால் இந்த ஸ்டாக்கை லிப்ட் பண்ண யாரும் வரவில்லை, இரண்டு பேர்கள் தான் முன்வந்தார்கள், அவர்கள் மூலம் லிப்ட் பண்ணினோம் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். இரண்டு ரூபாய்க்கு சர்க்கரை வெளிமார்க்கெட்டில் வாங்குவாரற்று

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 12

எப்போது இருந்தது? நான் சொல்ல வந்த விஷயமே 20 சதவிகிதம் லெவி செய்துவிட்டு 80 சதவிகிதம் வெளியில் விட்டபோது எந்த மாதிரியான ஊழல் ஏற்பட்டதோ அதுபோலத்தான் 30, 70 என்கிற போதும் உருவாகப்போகிறது என்பதை வற்புறுத்தத்தானே தவிர வேறு இல்லை. மேற்கொண்டு விவரங்கள் வேண்டுமானால் நான் அமைச்சரிடத்தில் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன். அது பற்றி நான் இப்போது மேலும் பேசி என் நேரத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை.

இரண்டாவது, இந்த அரசு எதை எடுத்தாலும் தேசியமாக்கப் போகிறோம் தேசியமாக்கப்போகிறோம் என்கிறார்கள். தேசியமாக்குவது புரட்சிகரமான விஷயமாக வைக்கிறார்களே, தேசியமாக்கினவுடன் சோஷலிசம் வந்துவிடுகிறதா? அப்படி நாங்கள் சொல்லவில்லை. இவர்களும் நினைப்பதாகத் தெரியவில்லை. அரசியல் சட்டத்தில் முக்கியமான தொழில் தனிப்பட்ட சிலர் கையில் குவிந்துவிடாதிருக்க பரவலாக்கப்படவேண்டுமென்ற டைரெக்டிவ் இருக்கிறது. அதன் காரணத்தினால் பீடித் தொழிலை தேசியமாக்கி விடுவதனால், பஸ்களை எல்லாம் தேசியமாக்கி விடுவதனால், நாங்கள் தேசியமாக்கி விட்டோம் என்று சொல்வதனால் தேசியமாக்குவதற்கும், சோஷலிசத்திற்கும் உள்ள முரண்பாடு நன்றாகத் தெரியும்.

சர்க்கரை ஆலைகளை தேசியமாக்கக்கூடாதா? ஏன் தயங்குகிறீர்கள்? எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லலாம். பஸ்களை தேசியமாக்குவதற்குக்கூடத்தான் உங்களுக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசாங்கத்தின் கன்கரன்ஸ் பெற்றேதான் ஆர்டினன்ஸ் கொண்டுவந்திருக்கிறீர்கள். கேரளாவில் பெரிய பெரிய தேயிலைத் தோட்டங்களை தேசியமாக்க மத்திய அரசின் அனுமதி கேட்டார்கள். அனுமதி கொடுக்கவில்லை. இங்கே சர்க்கரை
மு.ப. ஆலைகளைப் பொறுத்தவரை தேசியமாக்க நீங்கள் மத்திய சர்க்காரை
10-30 அனுமதியாவது கேட்டீர்களா? இங்குள்ள ஏகபோக முதலாளித்துவத்தை அரசு விரும்புகிறதா? பாரி கம்பெனி ஏகபோக முதலாளி இல்லையா? கொத்தாரி இல்லையா? ஆரூரான் பெரிய முதலாளி இல்லையா? சக்தி ஷுகர் இல்லையா? மதுரையில் கருமுத்து தியாகராசச் செட்டியாருக்குச் சொந்தமானது இல்லையா? இவர்களிடம் ஏகபோகமாக இருக்கும் சர்க்கரை மில்களை தேசியமாக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆலோசனையாவது செய்யப்பட்டது உண்டா?



1973 பிப்ரவரி 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

என்றைக்காவது மத்திய அரசை கேட்டதுண்டா? என்றைக்காவது மத்திய அரசுக்கு ஒரு மசோதாவைக் கொடுத்து, நாங்கள் இப்பொழுது சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கப் போகிறோம், எங்களுடைய மாநிலத்திலே மட்டும் 25,000 டன் மாதம் ஒன்றுக்கு உற்பத்தியாகிறது, அப்படி உற்பத்தியாகக் கூடிய மிகச் சிறந்த பண்டத்தை, நாங்களே, சர்க்காரே கன்ட்ரோல் செய்து யாருக்கு விநியோகம் செய்யவேண்டுமோ, மற்ற மாநிலங்களுக்கென்றிருந்தாலும் சரி, எங்களுடைய மாநிலத்திற்கே வேண்டுமென்றாலும் சரி, நாங்களே வைத்துக் கொள்ளப்போகிறோம் என்று செய்ய இது வரையிலே இந்த சர்க்கார் தயாராக இருந்ததா என்றால், இல்லை.

அடுத்து, பஞ்சாலையை எடுத்துக்கொள்ளுங்கள். கைத்தறி தொழிலாளர் பிரச்சினை வந்து மோதுகிறது. ஏன் நூல் விலையைக் குறைத்துக் கொடுக்க மறுக்கிறீர்கள் என்று ஆர்பாட்டம் நடத்துகிறார்கள். சேலம் போன்ற இடங்களிலே தாக்குதல்கள் நடக்கின்றன. பஞ்சாலைத் தொழிலிலே சில பெரிய பஞ்சாலைகளையாவது எடுத்துக் கொள்ளலாமே. பெரிய புள்ளிகள் வைத்திருக்கிற பஞ்சாலைகளை எடுக்க வேண்டுமென்று அரசு நினைத்ததுண்டா? என்றைக்காவது மத்திய அரசைக் கேட்டதுண்டா? என்றைக்காவது ஒரு மசோதாவைக் கொண்டுவந்து அதை மத்திய அரசினர் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னால், நாங்களும் அவர்களோடு சேர்ந்து மத்திய அரசு இதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று கைகொடுத்து நாங்கள் வேலை செய்யத் தயார். அதற்கு இன்றைக்கு அவர்கள் தயாராக இல்லை.

ஆனால், இப்பொழுது பஸ்ஸை எடுக்கப்போகிறேன் என்று சொல்கிறீர்கள். டி.வி.எஸ்.-ஐ எடுத்துக்கொண்டோம், ஏ.பி.டி.-ஐ எடுத்துக்கொண்டோம், நீங்கள் மறக்கலாமா என்று கேட்பார்கள். ஐம்பது பஸ்ஸை வைத்திருப்பதை நாங்கள் எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்று சொன்னீர்கள். ஆரம்பத்திலே நாங்கள் சொன்னதைப் போல, பஸ்களை எண்ணிக்கையைப் பார்த்து எடுப்பதை விட, அப்படியே எடுத்துக்கொள்ளுங்கள். நாங்கள் கேட்டதற்குப் பிறகு பல முதலாளிகளுக்கு பஸ்கள் கொடுத்திருக்கிறார்கள். ஏ.பி.டி. சர்வீசிலே லாரியை எடுங்கள், டி.வி.எஸ். சர்வீசிலே இருக்கிற லாரியை எடுங்கள். அவர்கள் கேட்கிற நஷ்டஈட்டைக் குறைத்துத் தான் கொடுப்போம் என்று சொல்லுங்கள். அரசியல் சட்ட 25-வது திருத்தத்தை வைத்துக்கொண்டு, நஷ்டஈட்டை எந்த அளவுக்குக்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 12

குறைக்கவேண்டுமோ அந்த அளவுக்குக் குறைத்துக்கொடுக்கலாம். அதில் நாங்களும் சேர்ந்து நிற்கத் தயார். அதற்குப் பதிலாக ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்திருப்பவர்களிடமிருந்து எடுத்துக்கொள் வோம், அதைப்பற்றி 6 மாதத்திற்கு முன்னாலே சொல்வோம், பிறகு பொங்கலுக்கு பரிசு, முதலில் குறைவாக பஸ்கள் ஓடுகிற மாவட்டத்தை எடுத்துக்கொள்வோம், பின்னாலே எந்த மாவட்டத்தை எடுப்பது என்று முடிவு செய்வோம் என்றால் அதிலே பலவிதமான நிர்ப்பந்தங்கள் அரசுக்கு வரும். பலவிதமான நிர்ப்பந்தம் உறுப்பினர்களுக்கு வரும். அரசு தேசியமயத்தில் வைத்திருக்கின்ற முறை, லஞ்சம், ஊழலின் உறைவிடங்கள் இருக் கின்றனவே, அந்த உறைவிடங்கள் இன்னும் அதிகமாக ஆகக்கூடிய முறையிலே தான் இந்த தேசியமயப் பிரச்சினை வந்திருக்கிறது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது.

அடுத்தாற்போல், நில சிர்திருத்தம் சம்பந்தமாக எந்த பேச்சு வார்த்தையும் கிடையாது. மணலி அவர்கள் மிக விளக்கமாகச் சொன்னார்கள். நல்ல பாம்பை பாதியிலே அடித்துவிட்டு பாதியை வைத்தால், பின்னால் அது பெரிய ஆபத்தாக முடியும். அதைப்போல் தான் இதுவும். எதெற்காக நிலச்சீர்திருத்தம்? நிலப்பிரபுக்களை நமக்குப் பிடிக்கவில்லையா? தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே உற்பத்தி சாதனமாக இருக்கக் கூடிய பல பண்டங்களிலே நிலம் ஒன்று. நிலம் இன்றைக்கு விரிவாகக் கிடக்கிறது. இன்றைக்கு நாம் நிலத்தை பண்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடியும். அப்படிப் பட்ட நிலங்கள் இன்றைக்கு இருக்கிற நில உறவுகள் காரணமாக அந்த நிலத்திலே பாடுபடக் கூடிய விவசாயிகளுக்கும் நியாயம் கிடைக்கவில்லை, மக்களுக்கும் நியாயம் கிடைக்கவில்லை என்பதால் தான் நிலச் சீர்திருத்தமே தவிர, ஏதோ அதிக நிலம் படைத்த சிலர் பேரிலோ, மிராசுதார்கள் பேரிலோ நமக்கு வெறுப்பு என்பது கிடையாது. இந்த உற்பத்தி சாதனத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கு இடையூறாக இருக்கிற உறவுகள் உடைக்கப்பட வேண்டும். அப்படி இடையூறாக இருக்கிற உறவுகள்தான் நிலப்பிரபுத்துவ உறவுகள் என்று கூறுகிறேன்.

இவைகளைப் பற்றி அரசு ஒட்டு மொத்தமாக சிந்தித்தது உண்டா? ஏதோ இதிலே விதிவிலக்கை எடுத்து விட்டோம், அதிலே விதி விலக்கை எடுத்துவிட்டோம் என்று சாதனைப் பட்டியலிலே வேண்டு மானால் சேர்த்துக்கொள்ளலாமே தவிர, நல்ல முறையில் பார்க்கும் கண்ணோட்டம் இந்த அரசுக்கு இல்லையென்று குற்றம் சாட்டுகிறேன்.



1973 பிப்ரவரி 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அடுத்து, அர்பன் சீலிங். அர்பன் சீலிங் பற்றி என்ன கருத்து? நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையிலே ஒரு குறிப்பிட்ட விஷயம். மடம், மதங்களுக்குச் சொந்தமாக இருக்கக் கூடிய நிலங்களை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்பது. அரசு எப்பொழு தாவது மத்திய அரசுக்கு அதைப்பற்றி சொல்லியதுண்டா? நம்முடைய சர்க்கார் சார்பில், டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது, அமைச்சர் அவர்கள் கோயில் நிலங்களை எடுப்பதற்கு திட்டம் இல்லை என்று சொன்னதாக பத்திரிகையிலே வந்திருக்கிறது. இல்லை யென்றால் மறுக்கட்டும். கேரளாவிலே எடுத்திருக்கிறார்கள், ஒரிசாவிலே எடுத்திருக்கிறார்கள்.........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் அந்த மாநாட்டில் கலந்து கொண்டேன். முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள வில்லை. நான்தான் கலந்து கொண்டேன். அதுபற்றிய குழுக் கூட்டத்திலே, அது விவாதத்திற்கு வந்தபொழுது, நாட்டிலே இருக்கிற மடம், மதங்கள் வைத்திருக்கிற நிலங்களை எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னேன். அதற்கு அவர்கள் அப்படியென்றால், கிருத்துவர்கள், முகமதியர்கள் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களையும் சேர்த்து எடுக்கவேண்டுமே, அது இன்டர்நேஷனல் பிராபிளமாக ஆகிவிட்டாலும் ஆகிவிடும், எனவே அதைப்பற்றி இப்பொழுது பேச முடியாது, என்று கோயில் சம்பந்த மான நிலங்கள் பற்றி அப்பொழுதும் இப்பொழுதும் அமைச்சராக இருக்கிற மாண்புமிகு பக்ருதீன் அலி அவர்கள் தான் அந்த யோசனையைச் சொன்னார்கள். நண்பர் சி. சுப்பிரமணியம் அவர்கள் கூட அப்பொழுது இருந்தார்கள். அதற்குப் பிறகு அது விடப் பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்த இடத்திலே போய் தமிழ் நாட்டின் குரலாக இந்த ரிலிஜியஸ் நிலங்களை எடுப்போம் என்று சொல்வதற்கு உங்களால் முடியவில்லை. அதை இங்கு எந்த அளவுக்குச் செய்தாலும், கேரளத்தில் செய்திருக்கிறார்கள். ஒரிசாவில் செய்திருக்கிறார்கள். மைசூரிலே செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். உங்களுக்கு செய்வதற்கு நோக்கமே கிடையாது என்பதுதான் என்னுடைய பாயின்ட். மைசூரிலே.........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கு செய்யப்போகிறார்கள், மைசூரிலே செய்யப்போகிறார்கள், கேரளத்திலே செய்துவிட்டார்கள்,

ஒரிசாவில் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் என்ன செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் எங்களுக்கு உதவியாக இருக்கும். அவர்களுடைய விவாதத்திற்குத் துணையாக இருக்கும், எங்களுக்கும் உதவியாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான்கு மணி நேரம் கொடுத்தால் அதைப்பற்றி பேச எனக்கு உதவியாக இருக்கும். என்ன செய்தார்கள் என்று நான் சொல்ல.........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு சின்ன விளக்கம் நான் தங்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நிலச்சீர் திருத்தம் ஏற்பட்டதற்குப் பிறகு இதுவரையில் எவ்வளவு நிலத்தை உபரி நிலம் என்று எடுத்து நிலம் அற்ற ஏழைகளுக்கு கேரளத்தில் கொடுத்திருக்கிறார்கள். ஏதாவது ஒரு சென்ட்டாவது கொடுத்திருக்கிறார்களா என்று தெரியவேண்டும். கேரளத்தோடு மைசூரில் எடுத்துவிடப்போகிறார்கள் என்று சொன்னால், விவரமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கேரளாவிலே செய்யவில்லை, ஒரிசாவிலே செய்யவில்லை, மைசூரிலே செய்யவில்லை, தமிழ் நாட்டில் ரொம்பச் சாதனையாகச் செய்துவிட்டார்கள்; திருப்திதானே. நான் கேட்கிறேன், இன்றைக்கு மடத்திற்கு சொந்தமான நிலங்களையும் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களையும் ஒரு வாரத்திற்குள் எடுக்கத் தயாராக இருக்கிறார்களா? மற்றவர்கள் பற்றி இருக்கட்டும். கேரளத்திலே என்ன நடந்தது என்று நீங்களே விசாரித்துக் கொள்ளுங்கள்.

இதே மேடையிலே ஜவஹர்லால் நேரு "டெமகாக்", அம்மையார் "டெமகாக்" என்று பேசக்கூடிய நிலைகள் எல்லாம் இருக்கின்றன. ஜவஹர்லால் நேருவையும் குறைத்தும் பேசலாம், அவமானமாகவும் பேசலாம். அவருடைய மகளைப்பற்றியெல்லாம் பேசலாம். இன்றைக்கு நான் சொல்வதெல்லாம் மற்ற மாநிலத்திலே நடந்ததைக் கூட நீங்கள் செய்யவில்லை...........

திரு. இராம. அரங்கண்ணல்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் ஆளும் கட்சியிலே இருக்கிற நாங்கள் இந்தியப் பிரதமரையும் அவருடைய தந்தையாரையும் அவமானப்





படுத்துகின்ற விதத்தில் பேசினோம் என்கின்ற பலமான குற்றச் சாட்டைச் சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் இந்திரா காந்தி அவர்களுடைய நடவடிக்கை மீதும், ஆட்சித் திறமை மீதும், தியாகத்தின்மீதும் எப்போதுமே பற்றுதல் வைத்திருக்கிறோம். போற்றி வந்திருக்கிறோம். அதைவிட பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய சேவையின்மீது பக்தி உண்டு, போற்றுதல் உண்டு என்று தெரிவித்துக்கொள்கிறேன். சொல்லாத ஒன்றை திருப்பிச் சொல்வது அழகல்ல என்று தங்கள் மூலமாக எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

THIRU M. A. LATHEEF: The hon. Member Thiru K. T. K. Thangamani is obviously referring to the speech made by me the other day. I submit that Demagogue is not a bad word even according to the dictionary. Demagogue according to dictionary is a political leader advocating democracy and that has been used with reference to the Great Demosthenes. He is also referred to as Demagogue. Only in that point of view I had used the word and if it is construed otherwise than I amend myself. I have the greatest respect for Pandit Jawharlal Nehru, who has been the respected leader of his great country and who had been a great democrat I have also got equally high respect for Indra Gandhi. So, for both these personalities I have the greatest respect. It it were to be constured otherwise by leaders like Thiru K. T. K. Thangamani, I amend myself.

திரு. கே. டி. கே. தங்கமணி: பாரதப் பிரதமரை டிஃபெண்ட் பண்ணுவதற்கு நான் வரவில்லை. நீங்கள் எதையும் பேசுங்கள். பேசியவர்கள் எந்த விதமாக அனுபவித்துக்கொள்ள வேண்டுமோ அந்த விதமாக அனுபவித்துக் கொள்ளட்டும். அது என்னுடைய தலைவலியல்ல............

THIRU R. PONNAPPA NADAR: The contention raised by the hon. Member Thiru M. A. Latheef is that there is nothing in calling a democratic leader as a Demagogue. If that contention is right, are we not entitled to call the present Chief Minister as a Demagogue? Will that be in order and will it be in good taste? That is a matter which will have to be considered. Let us not cast aspersion or insinuation against any person holding very responsible positions. It is better we avoid such epithets. That is the point.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நியாயம் பேச வந்து அவர்களும் அவர்கள் அறியாமலேயே அநியாயத்தின் பக்கம் விழுவது முறையல்ல. திரு. லத்தீப் அவர்கள் சொன்னது சரியல்ல என்றால், அப்படிச் சொல்லலாமா என்று கேட்பதுதான் முறை. அது வல்லாமல் இப்பொழுது இருக்கின்ற முதலமைச்சரை நான் அப்படிச் சொல்லலாமா என்று ஏன் கேட்டார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. ஒரு நியாயத்தை எடுத்துச் சொல்கிற நேரத்திலே அவர்களும் நியாயமாக நடந்துகொள்வதுதான் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் . சேம்பர்ஸ் டிக்ஷனரியில் "demogogue" என்றால் -a leader of the peoples' a popular and actions orator என்றுதான் இருக்கிறது. சேம்பர்ஸ் டிக்ஷனரியை நாம் அதிகாரப் பூர்வமானதாக எடுத்துக்கொள்ளலாம். பாபுலர் யூஸேஜ் எப்படி இருக்கிறது என்பதுபற்றி எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சில கட்சியைச் சேர்ந்த தலைவர்களைப்பறி குறைவான அபிப்பிராயங்கள் இருக்கலாம். பேரவையிலே அதைப்பற்றி எல்லாம் பேசுவது நல்லதல்ல. ஜவஹர்லால் நேரு, மற்றவர்கள் பற்றி நாம் இந்த அவையில் பேசவேண்டிய அவசியமில்லை. நாம் நல்ல மரபைக் கடைப்பிடித்து வருவோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எதிர்க்கட்சியினர், குறை கூறுகிறார்கள் எனக்குற்றம் சாட்டி, "அடாணா" ராகத்தில் பேச்சை ஆரம்பித்தவர்கள், அவர்களும் தங்கள் குறைகளை நிறையக் கூறி "முகாரியில்" முடித்தார்களே தவிர, யாரும் "மோகன" ராகத்தில் முடிக்கவில்லை. இப்படி ஒருவர் பேசியிருக்கிறார். முதலமைச்சர்தான் அப்படிப் பேசியது. அதையேதான் இங்கு நான் பார்த்தேன்.

முதலிலே அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பஸ்களை தேசியமயமாக்குவதன் மூலமாக ஊழலைக் குறைக்கலாம் என்று சொன்னார்கள். கடைசியிலே நகரத்திலே உள்ள சொத்துக்களுக்கு ஒரு வரம்பு கட்டுவதற்கு தயாராக இல்லை என்று குற்றச்சாட்டை அவர்களே போட்டுக்கொண்டு, இந்த நகரத்திலே 50, 60 வீடுகள் தனிப்பட்ட ஒருவர் வைத்துக்கொண்டிருக்கின்ற நிலைமையும், பல



பெரிய பங்களாக்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். அர்பன் ப்ராப்பர்டி சீலிங்கைப் பொறுத்தவரையில் இந்த அரசின் கொள்கை என்ன? அர்பன் ப்ராப்பர்டி சீலிங்கை கொண்டுவராததால் இன்றைக்கு வாடகை சாஸ்தியாகப் போய்க்கொண்டிருக்கிறது.

1960ஆம் வருடம் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து இன்றைக்கு ஒவ்வொரு முறையும் நீட்டித்துக்கொண்டே போகக்கூடிய முறையிலே, ஒரு மசோதாகூட வந்திருக்கிறது, அதற்காக ஒரு கமிட்டி போட்டு விசாரித்து இருக்கிறோம். இப்பொழுது ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு பொறுக்குக். கமிட்டிக்குப் போய் இருக்கிறது. எப்படி வருகிறது என்று பார்ப்போம். இந்த அரசு வாடகைக்குக் குடி இருக்கிறவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பது பற்றி அன்றைக்குத் தெரியும்.

நாங்கள் ஏழை மக்களுக்கு உதவி செய்கிறோம் என்று ஆரம்பித்தார்கள். இன்றைக்கு நிலைமை என்ன? கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தார்கள், அது பொறுக்குக் கமிட்டிக்குப் போய்த் திரும்பி வந்திருக்கிறது. அதனுடைய நிலைமையைப் பார்த்தால் லேவாதேவிக்காரர்களுக்கு நிவாரணச் சட்டமாக முடிந்தது. வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்காகக் கொண்டுவரப்படுகின்ற சட்டமாக ஆரம்பித்து நிலப்பிரபுகளுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய சட்டமாக ஆகிவிடக்கூடிய அச்சம் இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் பல காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஒன்றிரண்டைப் பற்றி மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன். பிச்சைக்காரர் மறுவாழ்வு என்று திட்டம் கொண்டு வந்தார்கள். பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு கூடாதா என்று சொன்னார்கள், நாங்கள் மறுக்கக்கூடியவர்கள் அல்ல. பிச்சைக்காரர் மறுவாழ்வு என்று சொல்லி நீங்கள் போகக்கூடிய முறையைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். பிச்சைக்காரர் மறுவாழ்வு என்று ஆரம்பித்து தொழுநோய்க்காரர்களுக்கு விடுதிகள் கட்ட வேண்டுமென்று சொல்லி வசூலிக்கச் சொல்கிறீர்கள் "வேலொடு நின்றான் இடு என்றதுபோலும், கோலொடு நின்றான் இரவு" என்பதைப்போல அரசாங்கத்திலிருந்து நீங்கள் இதற்கு நிதி

கொடுங்கள், இதற்கு நிதி கொடுங்கள் என்று ஒரு கொள்ளைக்காரன் கையிலே வேலை வைத்துக்கொண்டு, ஐயா நான் பிச்சை கேட்கிறேன் கொடு என்று சொன்னால் எப்படியோ அந்த மாதிரி வசூலிப்பது என்ற கொடுமையான முறையைத் தொடர்ந்து அனுசரித்து வருகிறீர்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

ஒவ்வொரு மாநாட்டிலும் எப்படி வசூலிக்கிறீர்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். மதுரை மாநாட்டை எடுத்துக்கொண்டால் எப்படி நடந்தது என்பதை விவரமாகச் சொல்ல முடியும் எங்களால். வேலொடு நின்றான் இடு என்றது போலும், என்று சொன்ன மாதிரி, அரசின் அதிகாரிகள் மூலம் அதிகாரத்தின் மூலம் வசூல் செய்கின்ற நேரத்தில் கொடுக்காமல் இருந்தால் என்ன ஆகும் என்று நினைத்துத் தான் கொடுக்கிறார்கள். இதை உங்கள் மட்டத்திலிருந்து, மேல் மட்டத்திலிருந்து மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5 ரூபாய் கொடுக்கட்டும், 5 லட்சம் கொடுக்கிறவனாய் இருக்கட்டும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. "குன்றின் மேலிட்ட விளக்கு" என்று திருப்பரங்குன்றம் மாநாடு பற்றி அண்ணா அவர்கள் ஒரு புத்தகத்தை வெளியிட்டார்கள். அந்தப் புத்தகத்தை நான் கூட வைத்திருக்கிறேன். அப்பொழுது அவர்கள் சொன்னார்கள் "முந்திரா ஒரு நல்ல மனிதர். அவருடைய படத்தைப் பார்த்தால் எளிய தோற்றம் உடையவராக இருக்கிறார். அப்படிப்பட்டவர் ஊழல் செய்திருக்கிறார். சட்டங்களையெல்லாம் மீறியிருக்கிறார். மத்திய சர்க்கார் போட்ட சட்டம், உத்திர பிரதேச சர்க்கார் போட்ட சட்டம், வங்காளம் போட்ட சட்டத்தையெல்லாம் மீறிவிட்டார். பின்னால் விசாரித்துப் பார்க்கிறபோது அன்றைய ஆளுங்கட்சிக்கு தேர்தலுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறார், புரிகிறதா ஊழல் எப்படி ஏற்பட்டது என்று" என்று அன்றைக்குச் சொன்னார்கள்.

அதேபோல்தான் இன்றைக்கு குமாரபாளையத்தில் அங்கப்பன் செட்டியார் என்பவரைப் பற்றிய ஊழலும். நாங்கள் அங்கப்பன் செட்டியார் ஊழல் என்றே புத்தகம் வெளியிட்டிருக்கிறோம். அங்கப்பன் செட்டியாருக்கும் முந்திராவுக்கும் வித்தியாசம் இருப்பதாகச் சொல்ல முடியாது. ஒரு வித்தியாசம் இருக்கலாம். முந்திரா கோடிகோடியாகச் சேர்த்து இருக்கலாம். இவர் அதிலே கால்வாசி சேர்த்திருக்கலாம். அவ்வளவுதான். பின்னால், அங்கப்பன்





செட்டியாருடைய உதவி ஆளுங்கட்சிக்கு இருந்து இருக்கிறது என்பது தெரியலாம். முந்திரா ஊழல் மாதிரியாகத்தான அங்கப்பன் செட்டியார் ஊழலும் இருக்கிறது. அவர் எந்த எந்த முறையிலே மத்திய சர்க்காரையும் மாநில சர்க்காரையும் ஏமாற்றியிருக்கிறார், மற்றவர்கள் எப்படி ஏமாற்றப்பட்டார்கள், இது ஒரு முக்கியமான ஊழல் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கப்பன் செட்டியார் பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி பதில் புத்தகத்திலே இருக்கிறது. அதைப் படித்துவிட்ட பிறகு இப்படித் தொடர்ந்து பேசுவது சரியல்ல.

பதில் சொல்ல வேண்டாமென்று சொல்கிறார்கள், நிறுத்திக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார்,...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்? ஏற்கனவே கிட்டத்தட்ட 40 நிமிடங்கள் ஆகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்னும் ½ மணி நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இனி எதிர்க்கட்சித் தலைவர்கள் இரண்டு பேர் பேச வேண்டும், முதலமைச்சர் பேச வேண்டும். 11 மணிக்கு முடித்து விடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இண்டரப்ஷன்ஸ் இல்லாத முறையில் இருந்திருந்தால் பரவாயில்லை. இண்டிரப்ஷன்ஸ் இருந்ததால் என்னுடைய பிரசங்கத்தை வேறுபக்கம் திருப்ப வேண்டியிருக்கிறது. அவர்கள் பாஷையிலிருந்து பேசிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இண்டரப்ஷன்ஸ் இல்லாமல் இருக்கும். பத்து நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 11-15 மணிக்கு முடித்து விடுகிறேன். இரண்டாவதாக, டாட்டா அவர்களைப்பற்றி அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். "அவர் பெரிய கோடீஸ்வரர். அந்தப் பெரிய கோடீஸ்வரர் ஆளும் கட்சிக்கே பணம் கொடுத்தார்.

5 லட்சம், 10 லட்சம் என்று பேலன்ஸ் ஷீட்டிலேயே கொடுத்திருக்கிறார்கள். கல்கத்தா ஹைகோர்ட்டிலே பிரமாண வாக்குமூலம் எழுத்து மூலம் கொடுத்து நான் இந்த அரசை ஆதரிக்கிறேன், இதை ஆதரித்தால்தான் என்னுடைய சொத்துக்களெல்லாம் பாதுகாக்கப்படும். அதுமட்டுமல்ல, என்னுடைய உருக்கு தொழிற்சாலை தேசியமயமாக்கப்பட மாட்டாது" என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குச் சமமாக யாராவது ஒருவர் இங்கே இருப்பார் என்றால், கிட்டத்தட்ட ஏகபோகத்தில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஏ.பி.டி. கம்பெனியின் உரிமையாளரும், இன்றைய திட்டக் கமிஷனின் உறுப்பினராகவும் இருக்கின்ற மகாலிங்கம் அவர்களைத்தான் கூற வேண்டும். அன்றைக்கு பஸ்களைத் தேசிய மயமாக்கிய பொழுது டி.வி.எஸ். கம்பெனிக்கு 300 பஸ்கள் இருந்தன, இவர்களுக்கு 100-க்கும் குறைவான பஸ்கள். 300 பஸ்கள் வைத்திருந்தவர்களுக்கு எவ்வளவு நஷ்ட ஈடு கொடுத்தார்கள், அதில் மூன்றில் ஒரு பங்கு இருந்த இந்த ஏ.பி.டி. கம்பெனிக்கு எவ்வளவு நஷ்ட ஈடு கொடுத்தார்கள் என்பதைப் பார்த்தாலே எந்த அளவிற்கு இன்றைக்கு ஏ.பி.டி.-க்கு ஹோல்ட், கிரிப் இருக்கிறது என்று தெரியும். எல்லாமே அவருக்கு சக்தி, சக்தி ஷுகர்ஸ், சக்தி பைப்ஸ் என்று இருக்கும். இன்றைக்கு 10, 12 வருஷங்கள் ஆகியிருக்கும் பஸ்களை மார்க்கெட் வேல்யூ மூலம் வாங்கியிருக்கிறார்கள். பல வருஷங்களாக நஷ்டம் காண்பித்ததன் மூலம் மத்திய சர்க்காரையும் ஏமாற்றியிருக்கிறார்கள், மாநில அரசாங்கத்திடம் அதிகப் பணத்தை வாங்கிக்கொண்டு, இன்றைக்கு தேசியமயமாக்கியதன் மூலம் மேலும் மேலும் அவர்கள் செல்வந்தராக ஆகக்கூடிய நிலைமையைப் பார்த்தால் உண்மையிலேயே அண்ணா அவர்கள் டாடாவையும், மத்திய அரசாங்கத்தையும் பற்றிச் சொன்ன அதே விஷயத்தை இன்றைக்கு இவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மூன்றாவதாக, பிஜு பட்நாயக். பிஜு பட்நாயக் ஏற்கனவே பலமுறை பணம் சம்பாதித்தார் என்றாலும் முதலமைச்சராக இருந்த நேரத்தில் மத்திய அரசை வற்புறுத்தி மத்திய அரசிலுள்ள அமைச்சர்கள் ஜீப்புகளை மகேந்திரா அண்ட் மகேந்திராவிடமிருந்து வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி வாங்கியதனால் தேர்தலுக்கு ஒரிசாவிற்கு 100 ஜீப்புகள் இலவசமாகக்



கிடைத்தது என்று "குன்றின் மேலிட்ட விளக்கில்" அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதேமாதிரியாக இன்றைக்கு அப்படிப்பட்ட பிஜு பட்நாயக்குகள் இருக்கிறார்கள். பிஜு பட்நாயக்குகள் யார் என்பதை பின்னால் அரசாங்கம்தான் பார்க்க முடியும்.

முன்னால் முதலமைச்சராகயிருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலே குறிப்பிட்டார்கள், நானும் விவசாய அமைச்சராயிருந்திருக்கிறேன், அந்த நேரத்தில் விவசாய அமைச்சராகயிருந்து கொண்டு பணம் சேர்க்க முடியுமென்று எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் இப்பொழுது விவசாய அமைச்சராக இருந்துகொண்டுகூட பல ஊழல்கள் செய்ய முடியுமென்று தெரிவதாக அன்றைக்கு நவசக்தி பத்திரிகையில், ஓரிரண்டு பத்திரிகைகளில், ஒரு ஆண்டுக்கு முன்னால் வந்தது. அதற்குப்பிறகுதான் நாங்களெல்லாம் இதை எழுப்பினோம். இன்றைக்கு விவசாயத் துறையிலே எவ்வளவு ஊழல் இருக்க முடியுமென்பதற்கு இன்றைக்கு டிராக்டர்கள் வாங்கிய விஷயத்தைப் பரிசீலிக்கலாம், கிரீவ்ஸ் காட்டனில் சாமான்கள் வாங்கியதைப்பற்றிப் பரிசீலிக்கலாம், அதற்குத் தயாரா? அப்படிப் பரிசீலித்து யார் யார் அன்றைக்கு விவசாய அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் செய்த காரியங்கள் எழுத்து மூலமாக இன்றைக்கு ரிக்கார்டுகளைப் பார்க்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன.

ஏரியல் ஸ்ப்ரேயைப் பற்றிப் பலமுறை பேசப்பட்டிருக்கிறது. நான்தான் முதன்முதலில் பொதுக்கூட்டத்தில் பேசினேன். ஏரியல் ஸ்ப்ரேயைப்பற்றி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் ரெய்ஸ் பண்ணினேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் பதில் சொல்லும் அமைச்சர்கள் சார்பாக வந்திருக்கக்கூடியவர்கள் பதில் சொல்ல முடியாமல் இருந்தார்கள். பல கேள்விகளைக் கொடுத்தேன், அதற்குப் பதில் இல்லை: 13-வது எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டை வைத்திருக்கிறார்கள். அதிலே பத்து லட்சம் ஏக்கர்களுக்கு ஏரியல் ஸ்ப்ரே கொடுக்க வேண்டுமென்று, முதலில் 8 ரூபாய் என்று ஆரம்பித்து, பிறகு 10 ரூபாய் என்று ஆகி, பிறகு 11 ரூபாய் ஆனது. அதற்குப்பிறகு விவசாயிகள் மத்தியிலே இதற்கு வெறுப்பு ஏற்பட்டதால் இனிமேல் ஏரியல் ஸ்ப்ரே இல்லாமல் செய்து விட்டோம் என்று 13-வது எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்டில் கூறப்பட்டிருக்கிறது.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 12

ஏரியல் ஸ்ப்ரே வந்த காலத்தில் இருந்த ஊழலைப்பற்றி இன்றைக்கு அரசு என்ன நினைக்கிறது? அன்றைக்கு நடந்தது ஊழல் இல்லையா? 10 ஏன் 11 ஆக ஆனது? 10-ஐ 11-ஆக ஆக்கியவர்களுக்கு நன்மை செய்வார்களா மாட்டார்களா அந்த முதலாளிகள்? இதைத்தான் அறிய விரும்புகிறேன். இதைத்தான் திரு. சுப்பு அவர்கள்கூட எங்களுக்குக் கடிதம் இருக்கிறது என்று கடிதத்தின் பிரதியை வாசித்தார்கள். எக்ஸ்ட்ராவாக 1 ரூபாய் கொடுத்தால் அதை யார் யாருக்கு எப்படிப் பகிர்ந்து கொடுக்கலாம் என்று கடிதத்தில் இருக்கிறது, சிலபேருடைய பெயர்களெல்லாம் இருக்கிறது என்று இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், வெளியிலே சொல்வது ஒருபுறமிருக்கட்டும்.

அடுத்து, சுருக்கமாகச் சில கருத்துக்களை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இராஜாஜி அவர்களைப் பொறுத்தவரையில் நல்ல குறிப்பு இருக்கிறது. பலரும் அவருக்கு மண்டபம் கட்ட வேண்டும் அல்லது வேறு ஏதாவது செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அம்மாதிரி இராஜாஜி அவர்களுக்கு மண்டபம் கட்டுவதை நான் குறை சொல்லவில்லை: அது இருக்கட்டும். இராஜாஜி பிறந்த ஊரில் கலைக்கல்லூரி அமைக்க வேண்டுமென்று சிபாரிசுக்கு வருகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். இராஜாஜி பிறந்த ஊரிலே, இந்தியாவில் இருக்கின்ற எல்லோரும் சேர்ந்து, யார் யார் அவர்களால் நன்மையடைந்தார்களோ, அவர்களது கொள்கையால் நன்மையடைந்தார்களோ, அவரது இயக்கத்தில் சேர்ந்திருந்தார்களோ, அவர்களெல்லாம் சேர்ந்து, பாண்டிச்சேரியில் எப்படி ஜிப்மேர் இருக்கிறதோ அதைப்போல, மெடிகல் காலேஜ், என்ஜினியரிங் காலேஜ் போன்றவைகளை நவீன முறையிலே செய்ய வேண்டும். பின் தங்கிய மாவட்டமாக மத்திய சர்க்காரே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அந்தத் தர்மபுரி மாவட்டத்திலே ஹோசூரிலே மிகச் சிறந்த தொழிற்கூடம் இருக்கிறது, விவசாயத்தில் படிக்கும் மாணவர்கள் அங்கே இருக்கிறார்கள், வெளிநாட்டிலேயிருந்து படிப்பவர்கள் அங்கேயிருக்கிறார்கள் என்ற முறையிலே நாம் அங்கே செய்ய வேண்டியது மிகமிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வெள்ள நிவாரணப் பணியைப் பொறுத்தவரையில், நான் வெள்ள நிவாரணத்தின்பொழுது அந்த பவானி பகுதிக்குப் போய்வந்தேன். படம்கூட வைத்திருக்கிறேன். பூகம்பம்



1973 பிப்ரவரி 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஏற்பட்டதைப்போல் அங்கே இருக்கிறது. அங்கே பாதிக்கப்பட்ட இடங்களில் "ரீ-கன்ஸ்ட்ரக்ஷன்", திரும்ப அதைக் கட்ட வேண்டிய முறையிலே அரசுக்கு ஏதாவது ஆலோசனை இருக்கிறதா? ஏதோ 250 ரூபாய், 500 ரூபாய் கொடுக்கிறோம் என்றால் போதாது. காமராஜர் 30 ரூபாய் கொடுத்தார், பிறகு 40 ரூபாய், 50 ரூபாய் ஆக்கினோம் என்று சொல்வது
does not even touch the Fringe of the problem

அதே நேரத்தில் புயல் வருவதை அறிவிப்பதற்கு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்த நேரத்திலே புயல் வருகிறது என்று சொல்லக் கூடிய முறையில் அமைந்திருக்கின்றன. சேட்டிலைட் உலகத்தை இரண்டுமுறை சுற்றி வருகிறது. அந்த சேட்டிலைட்டிலிருந்து காமிரா மூலம் படம் பிடித்து புயல் இந்த நேரத்தில் வரும் என்று சொல்லும் முறையில் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரிஸா மாநிலத்தில் புயலைத் தடுப்பதறகாக ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். இங்கேயும் அதைப்போன்ற ஒரு கமிட்டியைப் போட வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே சொன்னார்கள். பி.டி. ஆசிரியர்கள் 900 பேர்களுக்கு வேலை கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதை எப்படி எடுத்தார்கள் என்று சொல்லவில்லை. நேரிடையாக மாநில அரசாங்கத்தின் சார்பில் அரசாங்கமே இந்த 900 பேர்களுக்கும் வேலை கொடுக்கிறோம் என்று லிஸ்ட் போட்டு ஆங்காங்கு அனுப்ப வேண்டுமே தவிர, பஞ்சாயத்து யூனியன், கார்ப்பரேஷனுக்குப் போங்கள் என்று சொல்வதால் அங்கே என்ன ஏற்படுகின்றது என்று பார்க்க வேண்டும். பி.டி. ஆசிரியர்கள் போராடினார்கள், சிறை சென்றார்கள். மத்திய சர்க்காருக்கு செகண்டரி கிரேடிற்குப் பதிலாக பி.டி. ஆக்குங்கள் என்று குறிப்பு கொடுத்து, பி.டி. வேலை கொடுப்போம் என்று போட்டபிறகு, அவர்கள் தங்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்றால் 3,000 ரூபாய், 5,000 ரூபாய் கொடுத்து வேலை பெறுவது என்று சொன்னால் அது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும். இப்படிப்பட்ட அவல நிலை இனிமேல் கண்டிப்பாகத் தமிழகத்திலே இருக்கக்கூடாது. வேலை வாங்குவதற்காக யாருக்கும் பணம் கொடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டது என்றால் அப்படிப் பணம் வாங்குபவர்கள்தான்

தேசத் துரோகிகள், சமூகத் துரோகிகள், அவர்களைக் கண்டிப்பாகக் கட்டி வைத்து உதைத்தாலோ அல்லது பலாத்கார முறையில் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தாலோ அதில் தவறில்லை என்று சொல்லுகின்ற முறை வரவேண்டும். ஆசிரியர்களை இம்மாதிரி செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் ஆளும் கட்சியில் ஏற்பட்ட பிளவைப்பற்றிக்
11-00 மு. ப. குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். ஆளும் கட்சியில் ஏற்பட்ட பிளவு பற்றி ஏன் எங்களுக்கு அக்கறை ஏற்பட்டிருக்கிறது ? எல்லாக் கட்சிகளும் பிளவு பட்டிருக்கின்றன. இந்திய கம்யூனிஸ்டு கட்சி பிளவு பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டிருக்கிறது. பிளவுபட்டதற்குப் பின்னல் இரு கட்சிகளாக அவை உருவாயிற்று. திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு ஏற்பட்டவுடன் மற்றக் கட்சிகளுக்கு ஏன் அக்கறை இருக்கிறது என்றால் அது ஆளும் கட்சியாக இருப்பதுதான். ஆளும் கட்சியில் பிளவு ஏற்படுவதால் அதன் பலாபலன்கள் மக்களைத்தான் பாதிக்கிறது; ஒவ்வொரு கட்சியையும் பாதிக்கிறது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் பிளவு ஏற்பட்டது. இந்திய கம்யூனிஸ்டு கட்சி, கேரளாவிலும், மார்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி வங்கத்திலும் ஆங்காங்கு அதிகமாக இருந்த காரணத்தால் ஆட்சியை நடத்தினார்கள். அப்படிப் பிரிந்து போன நிலையில் மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பேரில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியோ, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் பேரில் மார்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியோ அந்தந்தக் கட்சிக்காரர்கள் பேரில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி ஒரு கட்சியிலிருந்து பிரிந்து போன தோழர்களை கொடுமையான முறையில் நடத்தியது தமிழ் நாட்டில்தான் என்று இந்த இடத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதனால் ஏற்படக்கூடிய பலாபலங்கள் பல முறையில் சிக்கலாகத்தான் ஆகுமே தவிர, அடக்குமுறை மூலமாக எப்படி அடக்க முடியும் ? அடக்குமுறை மூலமாக எந்த உணர்ச்சியையும் அடக்கு விடமுடியாது. அடக்குமுறை இன்று கட்டுமீறிப் போய்க் கொண்டிருக்கிறது.

சேலத்தில் தாக்கப்பட்டிருக்கிறார்கள். நானாக இருந்தால் அதை அனுமதிக்க மாட்டேன். மதுரை நகரத்தில் நேரடியாக ஏசிக் கொண்டிருக்கிறார் மேயர் முத்து அவர்கள். மேயர் முத்துவுக்குத் தாக்குதல் ஏற்பட்டால் நிச்சயமாக நான் அனுமதிக்க மாட்டேன். அதைத் தடுக்கத்தான் நாங்கள் பார்ப்போம். ஆனால் சேலத்தில் இப்போது என்ன நடந்தது? மனோகரனும், கிருஷ்ணசாமியும் ஓட்டலில் இருந்து வெளியே வருகிறபோது பத்து பேர் அவர்களைக் கொலை செய்வதற்காக எத்தனித்தார்கள் என்பது உண்மையா, இல்லையா ? அந்தக் கிராமத்தில் இருக்கும் பெண்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு கொலை செய்ய யத்தனித்தவர்களை விரட்டியது உண்மையா, இல்லையா ? இதிலே எத்தனை பேரைக் கைது செய்திருக்கின்றீர்கள் ? இதற்கு கம்ப்ளெயின்ட் கொடுக்க வேண்டுமா ?



சேலத்தில் நடந்த சம்பவங்கள் எத்தனை ? சேலத்தில் பள்ளப் பட்டியில் இருக்கும் பெண்கள் அவமானப்படுத்தப்படவில்லையா ? யாரோ ஒருவர் இறந்து விட்டார். அவர் கொலை செய்யப்பட்டிருப்பார் என்ற எண்ணத்தில் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி வந்தார்கள் அந்தப் பெண்கள். அந்தப் பெண்களின் சேலையை உரிந்து நீங்கள் அவமானப்படுத்தவில்லையா ? பரமத்தி போலீஸ் ஸ்டேஷனில் நடந்த சம்பவங்கள் என்ன ? அன்றைக்கு அந்தப் பெண்களை அவமானப்படுத்துவதற்காக சேலையை உரிந்து கொண்டு வெளியே கொண்டு வரவில்லையா ? அப்படிப் பெண்களை இழுத்துக் கொண்டு போனபோது சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்கள் தலையிட்டு வேண்டுமென்றால் என்னைச் சுட்டுவிட்டு மேலே போங்கள் என்று சொன்னது உண்மையா இல்லையா? இந்த முறையில் பழி வாங்கும் நடவடிக்கைகள் ரொம்பக் கொடுமையாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதே நேரத்தில் மன்றத்தில் நான் சில விஷயங்களைச் சொல்லத் தான் வேண்டும். எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரையில் ஊழல் குற்றச்சாட்டை மத்திய அரசாங்கத்தில் கொண்டு போய்க் கொடுத்தார். நாங்களும் கொடுத்தோம். எங்கே கொண்டு போய்க் கொடுத்தீர்களோ அங்கே போய்க் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். பன்சிலால் மேல் குற்றச்சாட்டுகளை யார் கொண்டு போய் எங்கே கொடுத்தார்கள் ? அப்படிக் கொடுத்த குற்றச்சாட்டில் உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்களே, அங்கு மந்திரிசபையில் ஏக ஊழல். பங்கு கிடைக்காத மந்திரிகள் கிளப்பி விட்டிருக்கிறார்கள். அவர்களை ஊழல் மன்னர்கள் என்று இன்றைக்கும் சொல்லுகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 12

பன்சிலால் மேல் என்குயரி கமிஷன் போடத்தான் வேண்டும். ருசிகரமான விஷயம் என்னவென்றால் "மாருதி"-க்கு 300 ஏக்கர் நிலம் கொடுத்தார், 45 லட்சம் ரூபாய் கொடுத்தார் என்பதல்ல உண்மையான ஊழல். இன்னும் 25 லட்சம் ரூபாய் வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதில் அல்ல ஊழல். அரியானா பூராவும் இரண்டு, மூன்று மாதத்திற்குள்ளாக மின்சார மயமாக்கவேண்டுமென்று சொல்லி ஆக்கினார்கள். அப்படி மின்சார மயமாக்கியதில் ஏற்பட்ட ஊழல்தான் பயங்கரமான ஊழல். மந்திரிகளுக்குள்ளேயே ஊழல். இதில் என்னென்ன விஷயம் என்பது போகப் போகத் தான் தெரியும். அவர்களுக்குள்ளேயே சண்டை போட்டுக்கொண்டு மனுக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே நாடாளுமன்ற உறுப்பினர் களும் கையெழுத்துப் போட்டு மத்திய சர்க்காருக்குக் கொடுத்திருக் கிறார்கள். நாங்களும் அதே முறையில்தான் மத்திய சர்க்காரிடத்தில் கொடுத்தோம். மத்திய சர்க்காருக்கு இந்த விசாரணைக் கமிஷனைப் போட முழு அதிகாரமும் இருக்கிறது என்பதுதான் எங்களுடைய நிலை. அப்படிக் கொடுத்ததற்குப் பின்னால் இங்கே ஏன் வரவில்லை? அந்த வீராதி வீரர் எங்கே போனார் என்று கேட்கிறார்கள்.

கடந்த டிசம்பர் 2-ம் தேதி இதே இடத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள் இதே இடத்தில் 1½ மணி நேரம் பேசினார். அவர் ஊழல் குற்றச் சாட்டுகளுக்கான சான்றுகளை எடுத்து வைத்துக் கொண்டு இங்கே பேசினார். முன்னால் இருந்த மந்திரிகள் கேட்டார்கள். அவர்கள் காதில் விழுந்திருக்கும். அவர் அன்று முறையாகப் பேச அனுமதிக்கப் படவில்லை என்பது நடந்த சம்பவம்.

இன்றைக்கு நாங்கள் பேசும்போது எப்படியும் மத்திய சர்க்கார் கமிஷனை அமைக்க வேண்டுமென்றுதான் கேட்கிறோம். எங்களுக்குக் கோபம் மத்திய சர்க்கார் பேரில். ஏன் கமிஷன் போடாமல் இருக்கிறீர்கள், இவ்வளவு காலதாமதம் ஏன் என்று கேட்கிறோம். மத்திய சர்க்கார் நாங்கள் கொடுத்த ஊழல் குற்றச்சாட்டை மாநில சர்க்காருக்கு அனுப்புகிறார்கள். இவர்களும் விரிவாகப் பதில் கொடுத்திருக்கிறார்கள். விரிவானப் பதிலைக் கொடுக்க வேண்டு மென்ற கட்டாயம் இல்லை. சுருக்கமாகக் கொடுத்திருக்கலாம். எப்படியாவது இங்கேயே முடித்துவிடலாம் என்று இங்கேயே



1973 பிப்ரவரி 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வைத்து விட்டார்கள். இங்கே வைத்து அதை விவாதிக்கத்தான் முடியும். எங்களுக்குப் பதில் சொல்ல வேண்டியது மத்திய சர்க்கார். மத்திய சர்க்கார் கமிஷன் போடுகிறதா இல்லையா என்பதுதான் நாங்கள் கேட்பது. ஏதோ கேட்பது நாலுபேராக இருக்கலாம். நாங்களும் இந்தியாவில் பொறுப்புள்ள கட்சிதான். பொறுப்புள்ள கட்சி என்ற முறையில் நானும் கலியாணசுந்தரமும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தோம். ராஜேஸ்வருக்கோ, புபேஷ் குப்தா வுக்கோ, ஹிரேன் முகர்ஜிக்கோ தெரியாமல் கொடுக்கவில்லை. அவர்களும் சரிதான் என்று சொன்ன பிறகுதான் கொடுத்தோம். ஏதோ தெருவில் போகக்கூடிய தங்கமணி என்ற ஒருவனும், கலியாண சுந்தரம் என்ற ஒருவனும் கொண்டு போய்க் கொடுத்துவிடவில்லை. எங்கள் கட்சி அம்மாதிரி கமிஷன் போட வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய தேசிய கவுன்சில் தீர்மானத்தில் கமிஷன் போட வேண்டும். ஏன் தாமதப்படுத்து கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.

இதே தமிழ் நாட்டில் மாநில சர்க்கார் கமிஷன் போடவில்லையா? திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் சம்பவம் நடந்தது பற்றி அரசு சொல்லுகிறது "போலீசாரை நாங்கள் சஸ்பெண்ட் பண்ணி விட்டோம்" என்று. ஜனங்கள் சொல்லுகிறார்கள், "போலீசார் சஸ்பெண்ட்" செய்யப்படவில்லை என்று. [illegible] ஆற்றில் விழுந்து இறந்து விட்டான் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவனை அடித்துக் கொன்று விட்டார்கள் என்று பொதுஜனங்கள் சொல்லு கிறார்கள். ஆகவே, அபிப்பிராயபேதம் வந்து விட்டது. அதை விசாரிக்க எந்தச் சட்டத்தின்கீழ் கமிஷன் போட்டிருக்கிறீர்களோ, மத்திய சர்க்கார் கொடுத்த அதிகாரத்தின் கீழ் கொடுக்கப்பட்ட சட்டத்தின்படி போட்டிருக்கிறீர்களோ, அதே பிரிவின் அடிப்படை யில்தான் நாங்களும் கமிஷன் போட வேண்டுமென்று கேட்கிறோம். It is not a judicial enquiry திருநெல்வேலியில் நடந்த சம்பவத்திற்கு நீங்கள் கமிஷன் போட்டிருக்கிறீர்கள். அதே மாதிரி தமிழ்நாட்டில் நடந்த சம்பவங்களுக்காக கமிஷன் போட வேண்டுமென்று கேட்கிறோம். It is a commission of Enquiry under the Commission of Enquiry Act of 1952, Section 3 gives powers to the State Government and the Central Government.

தமிழ்நாட்டில் நடந்த சம்பவங்களைப் பொறுத்தவரை வெறுமனே ஊழலைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. லஞ்சம் பற்றி மட்டும்

சொல்லவில்லை. வன்முறைகள் பற்றியும் சொல்லியிருக்கிறோம். பலாத்காரத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். ஜாலியன்வாலாபாக் போல் நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். எங்கள் கட்சிக்கோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கோ இங்கே இடமில்லை. அவர்கள் விரும்புவதை எல்லாம் நாங்கள் செய்து விட்டோம். ஆகவே, அவர்களுக்கு இடமில்லை என்று சொல்லுகிறார்கள். கம்யூனிஸ்டு கட்சி உலகம் பூராவும் இருக்கிறது. சோஷலிசம் வந்த நாட்டிலேயே கம்யூனிஸ்டு கட்சி இருக்கிறது. உண்மையில் மக்களுக்குச் சாதகமான முறையில் மேல்தட்டில் இருப்பவர்கள் கீழே இருக்கக்கூடியவர்களைச் சுரண்டிக் கொண்டிருப்பதை நிவர்த்திக்கக்கூடிய நடவடிக்கை எதுவாக இருந்தாலும் அதை வரவேற்கிறோம்.

நாங்கள் மகஜர் கொடுத்தோம். கொடுத்தவுடனே பல இடத்தில் அடக்குமுறைகள். சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் அண்ணா தி.மு.க.வுக்குப் போனார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது என்ன நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள்? காளிமுத்து பேரில் என்ன நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள் என்பதைப் பற்றிக் கவர்னர் அவர்களிடத்தில் சொன்னோம். வேலப்பன் பேரில் என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது? அவர் வாங்காத பணத்திற்கு இன்றைக்கு நோட்டீஸ் வந்து கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் கவர்னரிடத்தில் எடுத்துச் சொன்னோம்.

10-ஆம் தேதி சென்னை நகரத்தில் ஊர்வலம் நடந்தது. கமிஷன் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டபோது அரசு அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் மீதும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதும் பழி வாங்கும் நடவடிக்கை எடுத்தது. 15-ஆம் தேதியன்று அரசின் கொள்கையை எதிர்க்கிறோம் என்ற முறையில் தமிழ்நாடு பூராவும் ஹர்த்தால் நடந்தது உண்மையா இல்லையா?

பல பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள், அமைதியாக நடந்தது என்று. என்ன ஹர்த்தால் என்றால்
"the hartal was an indictment on the Government."
அந்த ஹர்த்தால் இந்த சர்க்காரின் கொள்கையை நிராகரிக்கிறோம் என்பதற்காக நடந்த ஹர்த்தால் என்பதைப் பார்க்கவேண்டும். இதை பல பத்திரிகைகள் எழுதியிருக்கிறார்கள்.





இப்போது மக்கள் மத்தியில் கோபம் இருக்கிறதா இல்லையா? எம்.ஜி.ஆர். 5-ம் தேதி மதுரை வந்ததுபற்றிச் சொல்கிறேன். செயினைப் பிடித்து வண்டியை நிறுத்தினார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானதாகும். பிரதமர் அவர்கள் வருகிறார்கள் என்பதற்காக—மதுரை ஸ்டேஷனில் அன்று நானும், அ.தி.மு.க.வினர் சிலரும் இருக்கிறோம். பத்து மணி. திண்டுக்கல்லில் ரயில் வந்திருக்கிறது. எட்டு மணிக்கு வரவேண்டியது. திண்டுக்கல் ஸ்டேஷன் மாஸ்டரைக் காண்டாக்ட் செய்து கார் அனுப்பியிருக்கிறோம். இப்போது பத்தாயிரம் மாணவர்கள் மத்தியில் பேசிக்கொண்டிருக்கிறார்கள் எம்.ஜி.ஆர். என்று சொன்னார்கள். கோவை மாவட்ட மாணவர்களும் இருக்கிறார்கள். திண்டுக்கல், பழனி தாலூகா மாணவர்கள் இருக்கிறார்கள், பேசிக்கொண்டிருக்கிறார்கள், வழி நெடுகக் கூட்டமாக இருக்கிறது, அவரை இறக்கிக் கொண்டு போனால் கண்டிப்பாக ஜனங்கள் ரெயிலை நொறுக்கி விடுவார்கள். ரெயிலுக்கு நெருப்பு வைத்துவிடுவார்கள், இருக்கிற மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னார்கள். திண்டுக்கல்லில் இருந்து மதுரைக்கு ரெயில் ஊர்வலம் நடந்தது. ஜனங்கள் முன்னால் செல்ல ரெயில் பின்னால் செல்ல என்ற முறையில் மாலை ஐந்து மணி அளவிற்கு ரெயில் வந்தது . People's upsurge has not subsided. பல கட்சிகள் உடைந்தால் வெர்டிகலாக உடையும், உங்களுடையது ஹாரிஸாண்டலாக உடைந்திருக்கிறது, அஸ்திவாரமே உடைந்திருக்கிறது. அதைச் சரியாக்குவது அவ்வளவு லேசானதல்ல. இது சரித்திரம். அடியில் துரு ஏற்பட்ட பிறகு சேர்த்து வைப்பது சிரமம். எங்கள் கட்சி கேட்பது இரண்டு. கமிஷன் ஆஃப் என்கொயரி மத்திய சர்க்கார் போடவேண்டும். அதற்கு உட்படவேண்டும் மாநில சர்க்கார். அந்த நேரத்தில் கருணாநிதி சர்க்கார் ராஜினாமா செய்யவேண்டும். (சிரிப்பு) அங்குதான் பாயிண்ட். கருணாநிதி சர்க்கார் ராஜினாமா செய்யவேண்டுமென்றால் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் ராஜினாமா செய்யவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. (சிரிப்பு) இப்போது நீங்கள் சிரிக்கலாம். சிரிப்பவர் அழுவார், அழுபவர் சிரிப்பார் இது காலத்தின் கேடு. அப்படியெல்லாம் இருக்கின்றன. (சில குரல்கள் எம்.ஜி.ஆர். பாட்டா?) காசேதான் கடவுளப்பா-வில் வருகிறது இந்தப் பாட்டு.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: ஒரு திருத்தம். காசேதான் கடவுள் அப்பா அல்ல கடவுளடா.

[1973 பிப்ரவரி 12

திரு. கே. டி. கே. தங்கமணி : அது கடவுளுக்கும் தெரியும் அப்பா. கைக்கு கை மாறும் பணமே அதை கைக்கொள்ள நினைக்குது மனமே. சிரிப்பதும் அழுவதும் காசால் வந்த கோலமே. அதற்கும் எம்.ஜி.ஆர்.க்கும் சம்பந்தமில்லை. நீங்கள் நினைப்பவருக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. எந்தப் பாட்டு பாடினாலும் எம்.ஜி.ஆர். பாடினார் என்று எம்.ஜி.ஆர். ஃபோபியாக இருக்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். இன்று அதிகாரிகளைப் பொறுத்தவரையில் நேர்மை யாக செயல்படக்கூடிய அதிகாரிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டும். நிர்ப்பந்தப்படுத்தி அவர்களை மாற்றுவது போன்ற போக்குகள் இருக்கின்றன. அது விஷயம் சில சமயங்களில் தெரிந்து எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. மதுரை டி.ஐ.ஜி.யாக கிருஷ்ணசாமி இருந்தார்கள். அப்போது பல சம்பவங்கள் ஏற்பட்டன. மாணவர் சம்பவம் போடியில், அவர் போடி சென்றார். அங்கு மாணவர் போராட்டம், சுருளிவேல் எழுந்து நிற்கிறார். அவரைச் சொல்லவில்லை. அம்மாதிரி மாணவர் சம்பவம் திருநெல்வேலியில் நடந்தது, அங்கும் சென்றார். ஜில்லாக் கலக்டரை விட அதிகமாக முயற்சி எடுத்துக்கொண்டார்கள், தகராறு வராமல் இருக்க வேண்டுமே என்பதற்காக. அதற்கான முழு முயற்சியை எடுத்துக்கொண்டார்கள். பல வன்முறைச் சம்பவங்கள் நடை பெற்றன. இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றனவே, இதற்கு எல்லாம் மூல காரணமாக சிலர் இருக்கிறார்கள் என்று எங்கள் கட்சி சார்பில் அ.தி.மு.க. சார்பில், ஸ்தாபன காங்கிரஸ் சார்பில், காங்கிரஸ் சார்பில் நான்கு கட்சிகளைச் சார்ந்தவர்களும் சேர்ந்து அந்த மாவட்டத்திலுள்ள பொறுப்பான தலைவர்கள் டி.ஐ.ஜி.யைச் சென்று பார்த்தோம், பின்னால் ஐ.ஜி.யையும் பார்த்தோம். என்ன பலன் ஏற்பட்டது? டி.ஐ.ஜி. மாற்றப்பட்டார். நடந்த சம்பவங்களுக்கும் டி.ஐ.ஜி. மாற்றப்பட்டதற்கும் என்ன இணைப்பு இருக்கிறது என்று தெரியவில்லை. எதிர்க்கட்சிகள் சொல்லக் கூடியது நியாயம் என்று நினைக்கக்கூடிய அதிகாரிகளை...... நான் டி.ஐ.ஜி.யைச் சொல்கிறேன் என்றால் டி.ஐ.ஜி. போன்ற ஒருவருக்கே இந்த பாடு என்றால் கீழே உள்ள போலீஸ் அதிகாரிகள் பாடு என்ன என்பதுதான். கண்ணமங்கலத்தில், அந்த டி.ஐ.ஜி. கூட்டத்தில் பேசிய தலைவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வராமல்



1973 பிப்ரவரி 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இருப்பார்களேயானால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்காது என்று அவர் சொன்னதற்கு எப்படியாவது அதை மறுக்க வேண்டுமென்று அறிக்கை விடவில்லையா? என்று கேட்கிறேன். அவர் அதை மறுக்கவில்லை, மேலேயிருந்து அறிக்கை ஒன்று விடும்படிச் செய்தார்கள்.

போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் நேர்மையாகப் பணியாற்றக்கூடியவர்களை, எந்த அதிகாரியாக இருந்தாலும் சரி, நேர்மையாகப் பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டும்.

பவானி ஏரியாவில் ஜம்பை போன்ற இடங்களில் பலருக்கு வீடு இல்லாமல் போய்விட்டது. அதில் எந்தவிதமான தலையீடும் இல்லை. டெப்டி தாசில்தாரே ரூ. 80, ரூ. 80 என்று இரண்டொரு தினங்களில் கொடுத்த காட்சியை நான் பார்த்தேன். நல்லவேளை அரசியல் ஆள்கள் வரவில்லை, நல்லவேளை எம்.எல்.ஏ.க்கள் வரவில்லையென்று அவர்களே சொன்னார்கள். எனக்கு நான்கு உனக்கு நான்கு என்று கேட்கவில்லை என்றார். நாணயமாகப் பணியாற்றுகிறவர்களுக்கு மதிப்பு ஏற்பட வேண்டும், மரியாதை கிடைக்க வேண்டும்.

I have already stated that this Governor's Address does not spell out the policy. It is a non-political document.

I would like to conclude by saying that when we say that the Dravida Munnetra Khazhagam should go, we are not asking the Government of India to dissolve the Assembly. We do not want the Central Government to intervene in that particular way. We want the Ministry to resign and let them reconstitute the Ministry. There may be charges against some Ministers. If they are satisfied that the charges are of a serious nature, we can sit together and discuss it. Now, we have also made fresh charges and I am not talking about those charges now. As I have stated earlier, this Ministry should resign and another Ministry should be reconstituted and then only there will be co-operation from the Opposition. The Government take the position that whatever we raise from the Opposition we do so because we are always opposing the policy of the Government. But this Government do not spell out a proper policy. If this policy is to continue, I demand that the D.M.K. Ministry should resign.

திரு. ஏ. எம். இராஜா : பவானி பகுதியில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின்போது எம். எல்.ஏ.க்களும் மற்றும் அங்குள்ள ஒன்றியத் தலைவர், கட்சிக்காரர்கள் யாரும் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் அனைவரும் எல்லாயிடங்களுக்கும் சென்றோம். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். முதல் அமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். இடங்களைச் சுற்றிப் பார்த்து மக்களுக்கு வேண்டியதைச் செய்தோம். எங்கள் ஒன்றியத் தலைவர் பாதிக்கப்பட்டவர்களுக்கு துணிகள் கொடுத்துக்கொண்டிருந்த நேரத்தில்—அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் ஊரிலும் கொடுத்தோம்—அதை தங்கமணி அவர்கள் கூடப் பார்த்தார்கள். பார்த்து அதைப் பாராட்டி விட்டு வந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது இப்படிச் சொல்வது நல்லதல்ல.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு சின்ன விளக்கம். கேரளாவில் ட்ரஸ்ட் லான்ட்ஸ் முழுவதையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டார்கள், கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களை எடுத்துக்கொண்டார்கள், மைசூரில் எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். கேரளாச் சட்டம் என் கையில் இப்போது இருக்கிறது. கேரளாச் சட்டத்தில் எவையெவைக்கு விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை கொஞ்சம் படிக்கிறேன். கேரளாச் சட்டம் அவர்கள் கையிலும் இருக்கும், இல்லாவிட்டால் இதையாவது குறித்து வைத்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

'lands owned or held by (1) a University established by law (2) a religious or charitable or educational institution of a public nature and (3) "public trust" which expression shall include a "wakf".'

இவ்வளவுக்கும் விதிவிலக்கு இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ளவர்கள் மட்டும் அந்தப் பாவம் செய்யவில்லை. கேரளாவிலும் அந்தப் பாவம் போகவில்லை. கேரளாவிலும் கோவில் நிலத்திற்கு விதிவிலக்கு எடுத்துவிடவில்லை. அது இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுருளிவேல் : சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், கரப்ஷன் சார்ஜ்.........(மணியடிக்கப்பட்டது)





திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்புமிக்க ஆளுநர் அவர்களுடைய பேருரையின் மீது நானும் சில கருத்துக்களை வெளியிடுவதற்கு அனுமதித்ததற்காக என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நான் ஒருவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதை நான் சொல்லாமல் விடுவேனானால் நான் நன்றி மறந்தவன் ஆவேன் என்று கருதுகிறேன். இதே கவர்னர் பேருரையில் பேசிய என் அன்புச் சகோதரி அனந்தநாயகி அவர்கள் தன்னுடைய மேலான பேச்சில் குறிப்பிடும்போது, கவர்னர் உரை மீனம்பாக்கம் வானிலை அறிக்கை போல் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய திருவாயால் கீழ்ப்பாக்கம் அறிக்கை போல் இருக்கிறது என்று சொல்லாமல் இருந்தார்களே என்பதற்காக சந்தோஷப்படுகிறேன். இந்த அவையில் பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அதை நான் இல்லை என்று சொல்ல வரவில்லை. அந்த உரிமை காற்றோடு பேசும் பேச்சு அல்ல. நான் பேசும் பேச்சு, எடுத்துச் சொல்லப்படும் கருத்து இங்கே பதிவு செய்யப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் கவர்னர் உரை மீது எப்படிப் பேச வேண்டும், எதைப் பேச வேண்டுமென்று சொல்வதற்கு அவருக்கு உரிமை கிடையாது. நான் வானிலை அறிக்கை மாதிரி, வெதர் ரிப்போர்ட் மாதிரி இருக்கிறது என்று சொன்னேன். இந்த அரசாங்கம் அத்தகைய அறிக்கையைக் கொடுத்து இருக்கிறது என்று சொன்னேன். அதை திட்டவட்டமாக என்னால் சொல்ல முடியும். நான் எப்படிப் பேசவேண்டுமென்று அவர் சொல்லித்தரவேண்டிய அவசியமில்லை. அவர்கள் கட்சியில் இருப்பவர்களுக்கு அதைச் சொல்லித்தரட்டும். எனக்கு அறிவுரை கூறத் தேவையில்லை.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : நான் அறிவுரையாகச் சொல்லவில்லை. பாராட்ட அல்லவா செய்தேன். இன்னும் அதைவிடக் கீழாகப் போகாமல் இருந்தார்களே, இந்தப் பேரவையின் கௌரவத்தைக் காப்பாற்றினார்களே என்பதற்காகப் பாராட்டினேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஐ அப்ஜெக்ட் டு ஹிஸ் ஸ்பீச். அப்படியென்றால் நாங்கள் என்ன இந்தப் பேரவையின் கௌரவத்தை காப்பாற்றாமல் இருக்கிறோமா, அல்லது அன்பார்லிமென்டரி

எக்ஸ்பிரஷன் யூஸ் செய்கிறோமா, எதற்காக இப்படிச் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இட்டீஸ் அபெக்டிங் மை பிரிவிலேஜ்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : அந்த வார்த்தைக்கு வரவில்லை என்று தான் சொன்னேன். அந்தமாதிரி வார்த்தை வராமல், பேரவையின் கௌரவத்தைக் காப்பாற்றினார்களே என்பதற்காக நன்றி கூறுகிறேன் என்றுதான் சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : உங்கள் கட்சியில் வேண்டுமானால் கீழ்ப்பாக்கம் அறிக்கை.........

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர்களைப் போன்ற பெருந்தன்மை படைத்த தலைவர்கள் மற்ற உறுப்பினர்களைப் பற்றிப் பேசுகிறபோது அவர்களுடைய மனதைப் புண்படுத்தவேண்டாம் என்று துணைச் சபாநாயகர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். நாம் எல்லாம் இங்கே எதிர்க்கட்சிக்காரர்களாக இருக்கிற காரணத்தால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் நாம் ஒருவருக்கொருவர் விமர்சனம் செய்வது பொருத்தமல்ல என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாகவே ஒரு உறுப்பினர் பேசிய பேச்சைப் பற்றி விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : நான் விமர்சனம் செய்யவில்லை. குறை சொல்லவில்லை. பாராட்டத்தானே செய்தேன்.

THIRU R. PONNAPPA NADAR : It is something like saying " Brutus is an honourable man ".

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : இப்போது நான் எந்தச் சங்கடத்தில் இருக்கிறேன் என்றால்............

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் உங்கள் கட்சியில் வேண்டுமானால் கீழ்பாக்கம் அறிக்கை கொடுங்கள் என்று சொல்கிறார்கள். நான் கண்டிப்பாகச் சொல்கிறேன், முஸ்லீம் லீக் கட்சியைப் பொறுத்தவரையில் கீழ்ப்பாக்கம் கிடையாது. கீழ்ப்பாக்கம் இருக்கும் இடம் எங்களுக்குத் தெரியும்.





திருமதி த. ந. அனந்தநாயகி : என்னைப் பார்த்து கீழ்ப்பாக்கம் அறிக்கை என்று சொல்லாமல் இருந்தார்களே என்று சொல்கிறார்கள். உங்கள் கட்சியில் கீழ்ப்பாக்கம் அறிக்கை கொடுக்காமல் இருங்கள் என்று தான் சொன்னேன். என்னுடைய பேச்சை அவர் எப்படி கீழ்ப்பாக்கம் அறிக்கை என்று சொல்லாமல் விட்டு விட்டார்களே என்று கூற முடியும். ஆகவே தான் உங்கள் கட்சியில் கீழ்ப்பாக்கம் அறிக்கை கொடுக்காமல் இருங்கள் என்று கூறினேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : சபையில் உறுப்பினர்கள் பேசுவது சபை நடவடிக்கையைச் சேரும். சபை நடவடிக்கை என்று ஏற்றுக் கொள்கிறபோது, அந்தப் பேச்சின் மீது சபையில் பேசுவதற்கு, விமர்சனம் செய்வதற்கு உரிமை உண்டு. அந்த வகையில் நம்முடைய தலைவரின் பேச்சு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய கட்சிக்காரர்களுக்குச் சொல்லுங்கள், என் பேச்சைப் பற்றிச் சொல்லாதீர்கள் என்று எப்படி அவர்கள் சொல்லலாம்? அப்படிப் பேசுவது ஜனநாயக உரிமை. நேற்றைய தினம் அம்மையார் அவர்கள் பேசிய பேச்சு சபை நடவடிக்கையில் இருக்கிறது. அதைப் பாராட்டியோ அல்லது விமர்சனம் செய்து பேசவோ உரிமை எங்களுக்கிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : விமர்சனம் செய்வதற்கும் ஒரு வரை முறை உண்டு. கீழ்ப்பாக்கம் அறிக்கை என்று சொல்வது விமர்சனம் செய்வதா?

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : அவர்கள் அப்படிச் சொன்னதாக நான் சொல்லவில்லை.

திரு. க. சுப்பு : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். ஒரு அறிக்கையைப் பற்றி கீழ்ப்பாக்கம் அறிக்கை என்று சொல்வது ஒழுங்கு முறைக்கு உட்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசிய பேச்சை விமர்சிக்க வேண்டுமென்பதற்காக திரித்துக் கூறுவது நல்லதல்ல. அவர் பேசிய அந்த வார்த்தை என்று சொல்லலாம். அது வேறு விஷயம். ஆனால் அவர் பேசியது, நல்லவேளை அம்மையார் அவர்கள் மீனம்பாக்கம் வானிலை

அறிக்கை என்று சொன்னார்களே, எனக்கு ஒரு வகையில் மகிழ்ச்சி. கீழ்ப்பாக்கம் வானிலை அறிக்கை என்று சொல்லாமல் மீனம்பாக்கம் வானிலை அறிக்கை என்று சொன்னதற்காக மகிழ்ச்சி என்று குறிப்பிட்டார்கள். அம்மையார் அவர்கள் கூட குறிப்பிடவில்லை. அவர்கள் குறிப்பிட்டதைக் கொண்டு, அவர் பேசுவது சரியா என்று கேட்பது முறையல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போது கனம் முதலமைச்சர் அவர்கள்தான் திரித்துக் கூறுகிறார். அவர் கீழ்ப்பாக்கம் வானிலை அறிக்கை என்று கூறவில்லை; கீழ்ப்பாக்கத்தில் வானிலை நிலையம் எங்கேயிருக்கிறது? மீனம்பாக்கத்தில் தான் வானிலை நிலையம் இருக்கிறது. கீழ்ப்பாக்கம் அறிக்கை என்று தான் சொன்னார்கள். அதை அவர்கள் திருத்தாமல் இருந்தால் போதும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திருமதி அனந்தநாயகி அவர்களின் பேச்சு கீழ்ப்பாக்கம் அறிக்கை என்று அவர்கள் சொல்லவில்லை. மீனம்பாக்கம் அறிக்கை என்று சொன்னார்களே, அது வரை மகிழ்ச்சி. நல்ல வேளை கீழ்ப்பாக்கம் அறிக்கை என்று சொல்லாமல் அப்படிச் சொன்னதற்கு மகிழ்ச்சி என்று குறிப்பிட்டார்கள்.

திரு. இராம அரங்கண்ணல் : கீழ்ப்பாக்கம் என்னுடைய தொகுதியிலுள்ள ஒரு சிறப்பான பகுதியாகும். ஏராளமான புத்திசாலிகள், மேதைகள் இருக்கும் இடமாகும். ஆகவே, தயவு செய்து அந்தப் பகுதிக்கு ஒரு அவப் பெயர் ஏற்படுகிற வகையில் விவாதம் நடப்பதை தடுத்து நிறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மொய்தீன் அவர்களே இதைச் சொல்கிறபோது உங்களுக்கு இவ்வளவு கோபம் வரும் என்று எதிர்பார்த்து இருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒருவருடைய பேச்சை விமர்சனம் செய்யலாம். கூடாது என்று சொல்லவில்லை. நண்பர் லத்தீப் கூட எடுத்துச் சொன்னார்கள். ஆனால் தனிப்பட்ட முறையில், அவர்கள் மனம் நோகுகிறது என்று சொல்கிற நேரத்தில், என்னுடைய மனம் புண்படுகிறது என்று சொல்கிறபோது, அவர்கள் பேச்சைப் பற்றி குறிப்பிடாமல் இருப்பது நல்லது. திரு. மொய்தீன் அவர்கள் தன்னுடைய விவாதத்தை அந்த முறையில் எடுத்துச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.



திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : எடுத்ததற்கு எல்லாம் குறை காணுவது என்றால், அது என்னாலும் செய்ய முடியும். ஒருவரைப் பெருமைப்படுத்துவது என்று சொல்வது இழிவு படுத்துவது என்று சொன்னால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. என்னைப் பொறுத்தவரையில் இருக்கும் நிலைமையென்னவென்றால் இங்கே நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு பாட்டைக் குறிப்பிட்டார்கள். அந்தப் பாட்டை அவர்கள் முழுமையாகச் சொல்லவில்லை. "சிலர் அழுவார், சிலர் சிரிப்பார், நான் அழுதுகொண்டே சிரிக்கின்றேன்" என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் சொன்ன பாட்டு வேறு.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : அவர் பாடிய பாட்டு அது தான். சினிமாவில் வந்திருக்கிறது. நான் அந்தப் படத்தைப் பார்த்ததில்லை. பாட்டைக் கேட்டிருக்கிறேன். அந்த நிலைமை தான் என்னுடைய நிலையாக இருக்கிறது. * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ************** அந்த வார்த்தைகளை * * இந்தச் சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று ஆணையிடுகிறேன். கூடியவகையில் திரு. மொய்தீன் அவர்கள் அம்மாதிரி விவாதத்திற்கு இடம் அளிக்காமல் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : வாயைத் திறப்பதே விவாதம் என்றால் நான் என்ன பேசுவது? நான் பேசுவதையெல்லாம் விவாதம் என்று எடுத்துக் கொண்டால் நான் எப்படிப் பேசுவது? நான் அடுத்தபடியாக ஹாண்டே அவர்களுக்கு வரப்போகிறேன். (சிரிப்பு) இது எப்படி விவாதம் ஆகும்? முன்பு பேசிய பேச்சை, அதைப்பற்றி நான் கொண்டிருக்கிற கருத்தைச் சொல்வது அவர்களைக் குறை கூறுவது என்று எடுத்துக் கொள்ள முடியாது. அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

இந்தச் சர்க்காரைக் குறை கூறவில்லையா? நீங்கள் இந்தச் சர்க்கார் வெளியே போகவேண்டும் என்று சொல்லவில்லையா? 185 பேர்களைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவர்களைப் பார்த்து "நீங்கள் வெளியே போகவேண்டும்" என்று சொல்கிற உரிமை இருக்கிறது உங்களுக்கு. நான் பதில் சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லை! இது என்ன துர்ப்பாக்கியம் என்று எனக்குத் தெரியவில்லை. இத்தோடு அதை விட்டுவிடுகிறேன்.

அடுத்தாற்போல் நம்முடைய அன்புச் சகோதரர் டாக்டர் ஹாண்டே அவர்கள் தன்னுடைய பேச்சில் குறிப்பிட்ட பொன் மொழி இது. இதைச் சொல்லலாம் அல்லவா? லஞ்ச ஊழல், புகார்ப் பட்டியல், விசாரணை கமிஷன், கெடுபிடிப் போராட்டம், கள்ள ஓட்டு, போலீஸார் கொடுமை, கூட்டத்தில் குழப்பம், தி.மு.க. வேண்டாம் என்பதுதான் அவர்களுடைய பேச்சின் ரத்னச்சுருக்கம். கடைசியில் அவர் முடிக்கிறார். "என்னைப் பொறுத்தவரையில் கவர்னர் உரை தமிழகத்தில் உள்ள பயங்கர சம்பவங்களுக்குச் சம்பந்தம் இல்லாதது, மக்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்காதது, இது யோக்கியதை இல்லாதது" என்று முடிக்கிறார். இது சரிதானா? கவர்னர் பேருரையை யோக்கியதை இல்லை என்று சொல்லலாம். ஒரு அம்மையார் பேசியது பாராட்டுக்குரியது என்று சொல்லும் உரிமை எனக்கு இல்லை. தலைவர் அவர்களே, யோசிக்க வேண்டும். சொல்கிறபொழுது எப்படி இருக்கிறது? எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆகவே, நான் சொல்கிறேன்.

இதிலே நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்றால், என்னைத் திசை திருப்புகிறார்கள். நேற்றே அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நாளைக்கு அண்ணன் பேசப்போகிறார். நான் மணலி அவர்களைவிட இரண்டு வயது மூத்தவன். அவர்கள் பேசப் போகிறார், நாம் திசை திருப்பிவிட வேண்டும் என்று என்னுடைய நண்பர்கள் எண்ணினார்கள். அதை இப்பொழுது செய்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) யார் இல்லை என்று சொல்வது? சொன்னதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் நிச்சயம் திசை திரும்ப மாட்டேன். ஏனென்றால், திசை திரும்பும் பழக்கம் எனக்கு இல்லை. நான் எப்பொழுதும் திசை திரும்ப மாட்டேன். நான் எதற்காகச் சொல்கிறேன்? இங்கே பேசுகிறபொழுது காற்றோடு பறந்துவிடுவதில்லை. நாம் பேசுவது ரிக்கார்டு ஆகிறது. நம்முடைய சந்ததியார் அதைப் பார்க்கப் போகிறார்கள் "ஆகா!,





சென்ற தலைமுறையில் எவ்வளவு அழகாகச் சட்டமன்றத்தில் விவாதித்திருக்கிறார்கள்!" என்ற பெருமை நமக்கு இருக்க வேண்டும். நாம் மறைந்து போனாலும் நாம் பேசியது நிலைத்து இருக்கும் என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். நாம் பேசுவதை அளந்து பேச வேண்டும். ஆகையினால்தான் நான் இதை மனதில் கொண்டு அளந்து பேசுகிறேன்.

ஒரு சர்க்காருடைய திட்டம், நடைமுறையிலே அது செய்திருப்பது என்ன என்பதையும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும், என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். புயல் வந்தது எப்படி, புயலை இவர்களா வரவழைத்தார்கள்? எதிர்பாராமல் வந்தது. வரட்சி வந்தது என்றால், வரட்சியை இவர்களா வரவழைத்தார்கள், எதிர்பாராமல் வந்தது. அதற்கெல்லாம் என்ன நிவாரணம், எப்படிச் செய்யலாம், எந்த மாதிரி செய்யலாம் என்பது கவர்னர் உரையிலே இல்லையா? கவர்னர் உரையில் அதற்கு விளக்கம் இல்லையா? என்ன மாதிரி செய்யப்பட்டிருக்கிறது, சர்க்கார் இன்னின்ன முயற்சிகளைக் கையாண்டு கொண்டிருக்கிறது என்பதற்கு விளக்கம் இல்லையா?

இந்த பட்ஜெட்டைப் பார்த்தால் ஏட்டுக்கும் பேரேட்டுக்கும் 7, 8 உதை உதைக்கிறது. மாகாண சர்க்காரின் நிலை அதுதான். "நீங்கள் நிதி தாருங்கள்" என்று அங்கே போய் மத்திய சர்க்காரைத்தான் கேட்க வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் கொடுக்கவில்லை. இவர்கள் கையிலே இல்லை. இந்த நிலைமையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஏன் சொல்கிறார்கள் என்றால், சொல்லாமல் என்ன செய்வது? நிவாரணங்களெல்லாம் அங்கிருந்து பரிகாரம் வந்துதானே ஆகவேண்டும். இங்கே கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்காரைப்பற்றி யாராவது சொன்னார்களா? "இந்தக் கஷ்டத்திற்கு உதவுங்கள், இந்தச் சர்க்கார் திணறுகிறது, உதவுங்கள்" என்று சொல்ல வேண்டாமா? அதைத்தான் நான் சொல்கிறேன். மத்திய சர்க்கார் செய்யட்டும், செய்யவேண்டும். அதை மாநில சர்க்காரினால் பூர்த்தி பண்ண முடியாது.

அடுத்தபடியாக, மின்சாரம் பற்றாக்குறை என்று சொல்லப்பட்டது. இதை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மின்சாரம் இல்லாமல் நகரே இருளில் மூழ்கி விட்டது; மக்கள்

எல்லாம் இருட்டில் இருக்கிறார்கள் என்று உருக்கமாக இங்கே சொல்லப்பட்டது. மின்சாரம் இல்லை என்றால் அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்களா கரண்டை ஆஃப் செய்து விட்டார்கள்? இருப்பதற்குள்ளேதான் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும். "குண்டுச் சட்டிக்குள்ளேதான் குதிரை ஓட்ட வேண்டும்". கரண்ட் பற்றாக் குறை வந்திருக்கிறது என்றால் அது நமக்கு மாத்திரம் வந்துவிட வில்லை. மற்ற மாநிலங்களிலும் வந்திருக்கிறது. அதனால் நமக்கு மற்ற மாநிலங்களிலிருந்தும் கரண்ட் கிடைக்கவில்லை. அது யார் தவறு? மலையாத்திலிருந்து கேட்டோம். அவர்களும் இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

ஆகவே, இருப்பதைக்கொண்டு சரிக்கட்டி வருகிறார்கள். மின்சார உற்பத்திக்கு வேண்டிய கரி போதுமான அளவில் கிடைக்கவில்லை. கரி ரயிலில் வந்து கொண்டிருக்கிறது. வந்த ரயில் எங்கோ நின்று கொண்டிருக்கிறது. ஆந்திராவிலே வேலை நிறுத்தம். அதனால் அங்கே நின்றுகொண்டிருக்கிறது. இதைச் சொன்ன உடனே கப்பலில் கொண்டு வந்தால் என்ன என்று கேட்கிறார்கள். கப்பலில் கொண்டுவருவது சுலபமான காரியமா? ரயில் நிற்கக்கூடிய இடத்திற்கு கப்பலைக் கொண்டுபோய், பக்கத்தில் நிறுத்தவா முடியும்? அது முடியாத நிலையில் ரயில் வரும் வரையில் காத்திருக்க வேண்டியது தான். இப்படி ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு சர்க்காரைக் குறை கூறிக்கொண்டே இருந்தால் சர்க்கார் என்ன செய்யும் என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மை யான வேண்டுகோள்.

அடுத்து நான் வருவது சினிமாத் துறை பற்றி. இங்கே பேசிய பல உறுப்பினர்கள் சினிமாத் துறையை தேசியமயமாக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்வதற்கு என்னை இந்தப் பேரவை மன்னிக்க வேண்டும். இந்தத் துறையையே இல்லாமல் ஆக்குவது நல்லது என்பது என் கருத்து. அது மனிதனுக்கு உதவக் கூடியது என்று நான் எண்ணவே இல்லை. காரணம், இந்தத் துறை யினால் இன்றைக்கு இருக்கும் இளம் சமுதாயத்தினர் ஹிப்பிகளாய், பிக்பாக்கட் அடிப்பவர்களாய், திருடர்களாய், கொள்ளையடிப்பவர் களாய், மக்களுக்குத் தொல்லை கொடுப்பவர்களாய், சமூக விரோதி களாய் மாறிக்கொண்டு வருகிறார்கள். அதற்கு இந்த படம்தான்



காரணம் என்று நான் எண்ணுகிறேன். அதை தேசியமயமாக்க வேண்டும் என்று சொல்லும்போது, அந்தத் திருத்தத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். காரணம் நான் படமே பார்ப்பது இல்லை. (குறுக்கீடு) அனைவரும் என்று நான் சொல்லவே இல்லை மிஸ்டர் ஹாண்டே. நான் பார்ப்பதில்லை என்றுதான் சொன்னேன். இந்தத் துறையை சர்க்கார் தேசியமயமாக்கினால், முழங்காலுக்கு கீழே யாவது உடை வருமா, முக்கால் கையாவது ரவிக்கை வருமா, முந்தானை தொட்டுக்கொண்டிருக்குமா, ஒட்டிக்கொண்டிருக்குமா? அந்த முறையில் இருக்குமானால் அதை தேசியமயமாக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. அதைக் குறிப்பிட்டுப் பேசிய என் நண்பர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் வருவது, இந்த அரசைப் பற்றி மணலி அவர்கள் குறிப்பிட்டது பற்றி. ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சி யினரை மதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது பொன் போன்ற கருத்து. நிச்சயமாக மதிக்க வேண்டும். 6, 7 பேர் இருக்கிற எங்களை 180 பேர் இருக்கிற நீங்கள் மதிக்க வேண்டும். அதே நேரத்தில் 6, 7 பேர்களாக இருக்கும் நாமும் 180 பேர்களாக இருக்கும் அவர்களை மதிக்க வேண்டும். (சிரிப்பு). 180 பேர்களை வைத்திருப்பவர்களை குறை சொல்லும்போது, 6, 7 பேர்களை வைத்திருக்கிற நம்மை குறை சொல்லும்போது ஆத்திரப்படுவதில் பயனில்லை. ஆகவேதான் சொல்கிறேன்; பெருமையைக் கொடுத்துப் பெறவேண்டும் என்று. பெருந்தன்மையை அவர்களிடம் இருந்து பெற வேண்டும் என்பதைவிட நாம் கொடுத்துப் பெறவேண்டும் என்பதுதான் மணலி அவர்களுக்கு என்னுடைய பதில்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மெம்பர்களின் பேச்சுக்கு அமைச்சர்கள் அல்லது முதலமைச்சர்தான் பதிலளிக்க வேண்டும். ஆனால் முஸ்லீம் லீக் கட்சி பதில் சொல்ல லாமா? அப்படி பதில் சொல்வது முறையா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இது ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரா? அவருடைய கருத்தை அவர் சொல் கிறார்...

THIRU K. SUPPU: How can another Opposition member reply? உறுப்பினர்கள் எழுப்பியப் பிரச்சனைகளுக்குப் பதில் சொல்வது யார்? அரசாங்கமா அல்லது வேறொரு கட்சியா?

[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : நீங்கள் எப்படி உங்கள் கருத்தைச் சொல்கிறீர்களோ, அதைப்போல அவரும் அவருடைய கருத்தைச் சொல்கிறார்.

திரு. க. சுப்பு : அவருடைய கருத்தைச் சொல்லவில்லை. பதில் சொல்வதாகச் சொல்கிறார். அரசாங்கத் தரப்பில் பதில் சொல்ல வேண்டுமே தவிர, இன்னொரு கட்சித் தலைவர் பதில் சொல்லக் கூடாது.

THIRU M. A. LATHEEF : I submit that members of the House can react to the actions of other hon. Members. If a particular party acts in a particular way, we are entitled to react. Similarly our leader is entitled to exhibit his reaction to the acts of Thiru Manali Kandasami. That cannot be restricted. So, there cannot be any point of order on this.

THIRU N. GANAPATHY : Though it is the privilege of the Ruling Party to reply to the charges levelled against it, every member has got freedom of speech in this Assembly to criticise the speech of other Members also, for the purpose of record. So, one cannot take exception or objection to any statement by the hon. Member.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : I have already given my ruling.

THIRU K. SUPPU : What is the ruling, we do not know.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அவர்களுக்குப் பதில் சொல்லவில்லை. என்னுடைய பேச்சு அவர்களுக்குப் பதிலாக அமைகிறது (சிரிப்பு). நான் அவர்களுக்கு பதில் சொல்ல முடியாது. நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். அதற்கு உரிமை இல்லையா ? (குறுக்கீடு) தாராளமாக இருக்கிறது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். மிகப்பணிந்த குரலில்தான் நான் சொல்கிறேன். அதற்கு என் பதில் இது. இப்படிச் சொல்வது சரியில்லையா ?

அடுத்து மணலி கந்தசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது எனக்கும் சம்பந்தப்பட்டது. நானும் இந்தப் பேரவையின் உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். " கோவில் நிலங்கள் ", மற்ற ஆலயங்களைச் சேர்ந்த



1973 பிப்ரவரி 12] [திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்]

நிலங்கள் எல்லாம் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதை என்னால் ஒப்ப முடியாது. கோவில்களுக்கும் மற்ற மத நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட காரணங்களுக்காக ஒரு சிலரால் சொத்துக்கள் எழுதி வைக்கப்படுகின்றன. அதைப் பொதுவாக்கி, சிலருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்வது, அப்படிக் கொடுத்தவர்களின் சுதந்திரத்தைப் பறிப்பதாகும். அந்த சுதந்திரத்தைப் பறிப்பதை நான் விரும்பவில்லை. ஆகையால், அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை மிகத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேசியமயமாக்கப்பட வேண்டிய பல விஷயங்கள் இருக்க, ஒன்றிரண்டு பேர்கள் சேர்ந்து மார்வாடிகளிடமிருந்து கடன் வாங்கி பஸ்களை நடத்துவதைத் தேசியமயமாக்க வேண்டியது அவசியமா என்று ஒரு நபர் கேட்கிறார். நான் அவருடைய பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. அதை தேசியமயமாக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.

அந்த நேரத்திலே அவர்களுக்குள்ள கஷ்டத்தையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். அப்படி எடுக்கிற பொழுது அவர்கள் பஸ்ஸிற்கு 5,000 ரூபாய் கொடுப்பதாக இருக்கிறது. அதற்கு அவர்கள் டயர், மெஷின், டாப் எல்லாம் மாற்றி அதை ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்கோ அல்லது 75,000 ரூபாய் அளவிற்கோ கொண்டு வந்து வைத்திருப்பார்கள். அதைப் போய் 5,000 அல்லது 10,000 ரூபாய்க்கு அரசாங்கம் வாங்குவது நியாயத்திற்கு விரோதமான ஒன்றாகும். எனவே, அதற்குத் தகுந்த வரம்பு வகுத்து தேசிய மயம் ஆக்குவது நல்லது என்று ஒரு திருத்தத்தைக் கொடுக்கிறேன்.

தலைவரவர்களே, நான் இன்னும் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. சர்க்கார் பல துறைகளில் தவறி இருக்கிறது என்று கூறப்படும் குற்றச்சாட்டு ஆதாரத்துடன் கூறப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம். இன்ன இடத்தில் இன்னது நடந்திருக்கிறது, அது இன்னின்ன காரணங்களால் தவறி இருக்கிறது என்று எடுத்துச் சொல்லி இருந்தால் அதை நானும் சற்றுச் சிந்திப்பதற்குக் காரணமாக இருந்திருக்கும். அப்படி இல்லை. மொத்தமான ஒரு குற்றச்சாட்டு, இப்படி இருக்கிறது, இப்படி நிகழ்கிறது, இப்படி நடக்கிறது, இப்படிப் போகிறது, இப்படி வருகிறது என்று சொல்லி, ஆகையால் நீங்கள் வெளியே போங்கள், வெளியே

போங்கள் என்று சொல்லுவது இன்றைக்கு கனிந்து காயாகி இருக்கிறது. மந்திரி சபை எப்படியாவது வெளியே போக வேண்டும்; வெளியே போய் நாம் உள்ளே வரவேண்டும். இதிலே தப்பில்லை. எனக்குக்கூட சபலம்தான். ஆனால், அது சாத்தியப்பட வேண்டுமே. கொக்கு தலையிலே வெண்ணெயை வைத்து, அது உருகி அதன் கண்ணிலே விழுந்து, அதனால் அது பறக்கத் தெரியாமல் இருக்கும் பொழுது அல்லவா அப்படிச் சொல்லலாம்.

அதற்குப் பிறகு, தேர்தலைப் பற்றியும் வந்துவிட்டது. அவசரம். அங்கே சரியாக இல்லை; அங்கே திருட்டு ஓட்டு போடப்படுகிறது. அது உடனே கவனிக்கப்பட வேண்டும் என்று வேறு சொல்லுகிறார்கள். அவ்வளவு ஆத்திரம். இன்னொரு இடத்திலே சொல்லுகிறார்கள், நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுப் போகப் போகிறது என்று. இன்னின்ன இடங்களிலே இத்தனை இலட்சம் ஓட்டுகள் கட்சிகளுக்கு இருக்கிறது என்கிறார்கள். அவர்கள் சொன்ன கணக்கைப் பார்த்தால், ஆளும் கட்சிக்கு $6\frac{1}{2}$ இலட்சம் ஓட்டுகள் இருக்கிறது. எங்கே சந்திக்க வேண்டுமோ அங்கே சந்திக்க வேண்டும். சந்திக்கத் தயாரா? வாருங்களேன் களத்திற்கு; தேர்தல் களத்திலே சந்திப்போம், பேசுவோம். நாங்களும் பேசுகிறோம்; நீங்களும் பேசுங்கள். நடப்பது என்ன என்று பார்ப்போம்.

ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன், "உங்களில் இருந்து பிரிந்து போனவர்கள்" என்று சொல்லப்படுகிறது அடிக்கடி. எங்களில் இருந்து பிரிந்து போனவர்கள் எங்களை நேரடியாக எதிர்க்கட்டும், அவர்களுக்கு நெஞ்சு துணிவு இருந்தால். அதற்கு மேல் நான் சொல்லத் தயாராக இல்லை. இருந்தால் நேரடியாக அவர்கள் நம்மை எதிர்க்கட்டும். கூட்டு சேர்த்துக்கொண்டு வந்து இன்னொருவர் தலையிலே போட்டுக் கொண்டு, பிளாக் மார்க்கட் ஆதரவு கொடுத்துவிட்டு வந்து, நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்லுவார்களானால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. நேரடியாக வரட்டும், களத்திலே சந்திப்போம். அதிலே என்ன தப்பு இருக்கிறது. அடுத்த தேர்தல் வருகிறது. அதிலேயும் பார்ப்போம். இந்த மந்திரி சபைக்கு ஆதரவு இருக்கிறதா? அல்லது எதிர்க்கட்சிக்கு ஆதரவு இருக்கிறதா என்று பார்ப்போம். "மக்கள் எல்லாம் இருக்கிறார்கள்" என்று சொன்னார்கள் அல்லவா, யாரும் பாக்கியில்லை, பேசுகிற நான் உட்பட, என்றுதானே அர்த்தம். யாரும் நீங்கள் இருக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்த



பரிட்சையை அங்கே பார்ப்போம். மக்கள் எல்லாம் இருக்கிறார்களா, மக்கள் எல்லாம் யாரை வெறுக்கிறார்கள் என்று பார்ப்போம். அதிலே என்ன அவசரம். அவசரப்படாதீர்கள். ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுங்கள்.

1976-லே சந்திப்போம். மக்கள் தீர்ப்பளிக்கட்டும் என்று சொல்லுகிறேன். அவசரம் என்ன? இப்பொழுதே போங்கள் வெளியே என்றால், எப்படிப் போவார்கள்? எந்தவிதமாக போக முடியும்? தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். "போ" என்று சொல்லுவது யாரை. தேர்ந்தெடுக்கப்பட்டு நம்மைப் போல் வந்திருப்பவர்களைப் பார்த்து "போ" என்று சொன்னால் அவர்கள் நம்மையும் பார்த்து அப்படி சொல்வார்கள் அல்லவா? மறுபடியும் தேர்தல் வைத்து உள்ளே வாருங்கள் என்றால், நம்மையும் அவர்கள் சொல்லுவார்கள் அல்லவா? நீங்கள் தேர்தல் நடந்து உள்ளே வாருங்கள் என்று. ஆகையால், தலைவரவர்களே, நான் சொல்ல விரும்புவதெல்லாம், கவர்னர் அவர்களுடைய உரை இந்த சர்க்காரின் பிரத்தட்சியமான கொள்கையையும் திட்டங்களையும் விளக்கும் வகையிலே அமைந்திருக்கிறது. மிகத் தெளிவாக இருக்கிறது. இந்த சர்க்காருக்கு உள்ள கஷ்டத்தையும் இந்த சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிற எதிர்பாராத துன்பத்தையும் கண்ணாடி போல் காட்டுவதாக அது அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, கவர்னர் அவர்கள் தன்னுடைய மேலான உரையை முடிக்கிறபொழுது ஒன்றை குறிப்பிடுகிறார்கள்—இதையாவது படிக்க தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும். இதன்மீது என்னுடைய கருத்தைத்தான் சொல்லுகிறேன். அவர் சொல்லுகிறார் "மக்களாட்சியின் வளர்ச்சிப் பாதையில் அவ்வப்போது இன்னல்களும் இடுக்கண்களும் நேரத்தான் செய்யும். இந்த இன்னல்களையும் இடுக்கண்களையும் களைந்து சீரான முன்னேற்றம் நேரிய வழியில் ஏற்பட நம்மாலானதையெல்லாம் செய்யவேண்டும். தமிழ்நாடு சட்டமன்றம் நல்மரபு காத்து, ஜனநாயக நேர்மை போற்றி, நாட்டிலே நீதியுடன் நல்வளங் கொழிக்கச் செய்ய ஜனநாயக அமைப்புகளே ஏற்ற கருவிகளாகும் என்பதை மெய்ப்பிக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை" என்கிறார். இப்படி அவர் சொல்லுவதை இந்த மன்றமும் சிந்திக்க வேண்டும், இங்கேயுள்ள கட்சிகளும் சிந்திக்க வேண்டும், மக்களும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்] [1973 பிப்ரவரி 12

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்பு ஒரு வார்த்தையை சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீண்ட நாட்களாக எங்களில் ஒரு சிறு பிரிவினரை—மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களை பின் தங்கிய பட்டியலில் இருந்து நீக்கி, முற்போக்காளர் என்று சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தயவுசெய்து நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களையும் பின்தங்கிய பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று. அதை இந்த நேரத்தில் வற்புறுத்தி, இந்தப் பேரவையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி, நான் என்னுடைய வார்த்தைகளை முடித்து, விடை பெறுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I have been listening with rapt attention to the learned speeches made by the various leaders of parties and also other hon. Members on the floor of this House. As for the Governor's address, the Governor's address is the policy statement which is placed before this House and through the Motion of Thanks that is being adopted by the ruling party, it is usual and customary that the whole policy of Government is discussed threadbare.

I would at the outset without any fear of contradiction mention in this House through you, Sir, that the Governor's address is disappointingly meagre and lacking in particulars. It may be said that all the particulars need not be said in the policy statement. What is the policy that has been enunciated is the important thing, which I would like to focus attention of this House.

மணல் மேடிட்ட, மண் அடித்துச் செல்லப்பட்ட நிலங்கள் 10,000 ஏக்கர்கள். அந்த நிலங்களைச் செப்பனிட இதுவரையிலே எந்த அரசும் ஏற்றுக்கொள்ளாத ஒரு பொறுப்பை, இந்த அரசு ஏற்றுக்கொண்டு, அந்த நிலங்களை அரசே செப்பனிடுகின்ற வேலையை



1973 பிப்ரவரி 12] [டாக்டர் மு. கருணாநிதி]

ஏற்றுக்கொள்கிறது என்று அறிவித்த வகையிலே அதற்குச் செலவு மட்டும் ஒரு கோடி ரூபாய் என்பதை நான் மிகுந்த பெருமையோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள முடியும். செப்பனிடும் பணியில் 75 புல்டோசர்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உயிரிழந்த குடும்பங்கள் 81. இதுவரையிலே புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உயிரிழந்த குடும்பங்களுக்கு பெரும் தொகை உதவியாக அளிக்கப்பட்ட வரலாறு கிடையாது. இந்த அரசு 81 குடும்பங்களுக்கும்—அதிலே 39 பேர் அந்தக் குடும்பங்களின் தலைவர்களாக இருந்த காரணத்தால் அந்தக் குடும்பத்தாருக்கு தலா 2,000 ரூபாய் வீதம், 78,000 ரூபாயும், குடும்பத் தலைவர் இல்லாமல் மற்றவர்கள் இறந்துபோயிருந்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 500 முதல் 1,000 ரூபாய் வரை இழப்பு ஈடாக அளிக்கப்பட்டிருக் கிறது. இவைகளுக்கு எல்லாம் நாம் மத்திய அரசிடம் உதவியைக் கேட்டோம். 25 கோடி ரூபாய் நாம் கேட்டோம்.

நேற்று வரையிலே அவர்கள் மூன்றரை கோடி ரூபாய் அனுமதித் தார்கள். இன்றைக்கு இந்த அவைக்கு நான் மகிழ்ச்சியான ஒரு செய்தியைச் சொல்லிக்கொள்ள முடியும். இப்போது எனக்குக் கிடைத்த தகவலின்படி ரூ. 14.25 கோடி மத்திய அரசு இந்த வெள்ள நிவாரண உதவிக்காக வழங்கியிருக்கிறது என்பதை நன்றி உணர் வோடு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதிலே நடப்பு ஆண்டுக்காக ரூ. 7 கோடியும், அடுத்த ஆண்டு செலவுக்காக ரூ. $7\frac{1}{4}$ கோடியும் கணக்கிலே வைக்கப்படும். இந்த $14\frac{1}{4}$ கோடி ரூபாய் ஏற்கெனவே நமக்குக் கொடுத்திருக்கிற $3\frac{1}{2}$ கோடி ரூபாயையும் உள்ளிட்டு வழங்கப்பட்டிருக்கிற உதவித் தொகை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏரிகள், குளங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதம் குறித்தும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1,524 பெரிய ஏரிகளும் 1,387 சிறிய ஏரிகளும் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இதிலே நாம் இது வரையில் ஏற்றுக்கொண்டிருக்கிற வேலைகள் 5,921. அதிலே 1,191 வேலைகள் முழுவதும் முடிவுபெற்று, மீதியுள்ள 4,100 வேலைகள் விரைவிலே முடிவுறத்தக்க வகையிலே பணி நடைபெற்றுக்கொண் டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இந்த மன்றத்தில் ஏற்கெனவே அறிவித்த சலுகைகள் அன்னியில், ஆங்காங்கு வெள்ளச் சேதங்களைப் பார்ப்பதற்குப் போன போது அறிவித்த சிலவற்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

உதாரணமாக பவானி ஆற்றில், அங்கே முதல் கட்டமாக கரையைக் கட்டி உயர்த்துவதற்காக 17 லட்சம் ரூபாயில் ஒரு திட்டத்தைத் துவக்கிவைக்க நான் சென்றிருந்தேன். அங்கே இடிந்து கிடந்த ஒரு பள்ளிக்கூடத்தைக் காட்டி, இதற்குப் பதிலாக, வேறு புதிய இடத்திலே பள்ளிக்கூடம் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இடிந்துவிட்ட அந்தப் பள்ளிக்கூடத்தைப் பெண்கள் பள்ளிக்கூடமாக மாற்ற வேண்டுமென்றும் பவானியிலே உள்ள பொது மக்கள் என்னிடத்திலே முறையீடு தந்தார்கள். நான் உடனே அதனை ஏற்றுக்கொண்டு பவானியிலே புதிய பள்ளிக்கூடம் கட்ட 5 லட்சம் ரூபாய்க்கு அங்கேயே அனுமதி வழங்கிவிட்டுத் திரும்பினேன்.

கோவையிலும், சேலத்திலும் என்னைச் சந்தித்த நெசவாளர் பெரு மக்கள் தங்களுடைய நெசவுத் தொழிலுக்கான கருவிகள் எல்லாம் வெள்ளத்தால் அழிந்து போய்விட்டன, பாழாகி விட்டன என்று கூறியபோது அவர்களுக்கு வெள்ளத்திலே தங்களுடைய கருவிகளை இழந்துவிட்ட நெசவாளர் தோழர்கள் அந்த இழந்துவிட்ட நெசவுக் கருவிகளை வாங்குவதற்காக, நெசவாளத் தொழிலாளர்களுக்கு ரூ. 100 அரசின் சார்பிலே மானியமாக அளிக்கப்படும் என்று உறுதி கூறினேன். அந்தவகையிலே கோவை மாவட்டத்தில் இதுவரை இந்த நூறு ரூபாய் பெற்ற நெசவாளர்களின் எண்ணிக்கை—1,405 என்பதையும், சேலம் மாவட்டத்தில் பயன் அடைந்த நெசவாளர்களின் எண்ணிக்கை 300 என்பதையும், இதற்காக ரூ. 1,70,500 வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரி மாணவர்கள் பலரும் அரசாங்கத்தினுடைய வேண்டுகோளை ஏற்று இந்த அரும்பணியிலே ஈடுபட்டார்கள்—வெள்ள நிவாரணப் பணியிலே, அதிலே பவானி பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்த மாணவர் ஆற்றுச் சூழலிலே அடித்துக்கொண்டு போகப்பட்டார்—ஜேம்ஸ் டானியல் என்ற தாம்பரம் கிறித்துவக் கல்லூரி மாணவர் அங்கே அடித்துச் செல்லப்பட்டார் என்று கேள்விப்பட்டதும் அவருடைய குடும்பத்தாருக்கு ரூ. 5,000 அரசின் சார்பிலே வழங்கப்பட்டது என்பதை நான் இங்கே நினைவுபடுத்துகிறேன்.

கோவையில் வீடு இழந்த 3,216 பேருக்கு வீடு கட்டுவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் ரூ. 8 லட்சம் வரையிலே கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் புயலால், அனாதைக் குழந்தைகளானவர்கள் 4 பேர்கள். எஸ். துரைராஜ் என்ற 10 வயது பையனும்,



எஸ். கல்பகம் என்ற 7 வயதுச் சிறுமியும், எஸ். நடராசன் ஆகிய மூன்று குழந்தைகளும் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நெல்லை மாவட்டத்தில் நெல்லையப்பன் காந்திமதி அம்மாள் தேவஸ்தான அனாதை விடுதியில் 8—2—1973 அன்று சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். உதகமண்டலத்திலே வீடிழந்து, தாய் தந்தையரை இழந்த சித்திக் என்ற 4 வயது பையனை தந்தை பெரியார் இராமசாமி அவர்கள் எடுத்து வளர்ப்பதாகச் சொன்னார்கள். ஆனால் முஸ்லீம் சமுதாயத்தினுடைய முறைப்படி, அவர்கள் ஸ்வீகாரம் போவது அவர்களுடைய மத சம்பிரதாயப்படி தடுக்கப்படுகின்றது என்று சொன்ன காரணத்தினால், அந்தப் பையனுடைய எதிர்காலத்திற்காக நீண்ட கால சேமிப்பு டிபாசிட்டாக ரூ. 2,000 அரசின் சார்பில் வங்கியில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதைத்தவிர, அரசு ஊழியர் ஒருவர் பதவியில் இருக்கும்பொழுது இறந்துபோனால், அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் எல்லாக் கல்விச் சலுகைகளும் இந்தச் சிறுவனுக்கு அளிக்கப்படும் என்றும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தில் வீடு இழந்து உதவி பெற்றவர்கள் 49,381 பேர். இதற்கான மொத்தப் பணச் செலவு ரூ. 23,10,690 ஆகும். இதிலே சைதாப்பேட்டை, தியாகராயநகர் ஆகிய பகுதிகளில் 11,272 பேரும், மைலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதிகளில் 10,395 பேரும் இந்த உதவியைப் பெற்றிருக்கிறார்கள். இதிலே முழுமையாக வீடு இழந்தவர்களுக்கு ரூ. 80 வீதமும், ஓரளவு பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 60, ரூ. 40 என்கின்ற வகையிலும் பண உதவி செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு அரசின் சார்பில் உடனடியாக நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன என்பதற்கும், அதைச் சுற்றிப் பார்த்து விவரம் அறிய வந்த மத்திய அரசு அனுப்பிய குழுவினர் சரியான தகவல்கள் அறிந்து மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதற்கும் இதைவிட வேறு சான்றுகளை நான் சொல்ல முடியாது.

ஆனால், எதிலும் ஒரு தவறு கற்பிக்க வேண்டும் என்று கருதுகின்ற சில பேர் நாட்டில் இருக்கிறார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக அமைச்சர் பெருமக்களும், அரசாங்க அதிகாரிகளும், பொதுமக்களுடைய பிரதிநிதிகளும் பறந்தோடிச் செல்கின்ற நேரத்திலும், மத்திய சர்க்கார் பணம் அனுப்பினால் அது ஊழல் ஆகிவிடும், அது தவறாகச்

செலவிடப்படும் என்கின்ற முறையில் இங்கே பல பேர் பிரச்சாரம் செய்தார்கள். நான் இங்கே உள்ள எதிர்க்கட்சியினர் சிலர் சொன்னது பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. டெல்லியிலிருந்து வந்த காங்கிரஸ் கட்சியினுடைய பொறுப்பிலே இருக்கிற திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார்கூட ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கிற பணம் அவர்களுடைய கையில் போய்ச் சேர்வதில்லை என்கின்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இங்கே இருக்கின்ற ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. ராமையா அவர்கள்கூட இதே குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஆனால், வந்து ஆராய்ந்த பார்த்த குழுவினர் நல்ல முறையிலே நடைபெற்றிருக்கிறது என்பதனையும், அந்தக் குழுவினரே நம்முடைய அதிகாரிகளை விட்டு விட்டுத் தனியாகச் சென்று பல்வேறு கிராமங்களில் இருக்கின்ற ஏழை மக்களைப் பார்த்து, வீடு இழந்தவர்களைப் பார்த்து "உங்களுக்கு எவ்வளவு பணம் கிடைத்தது?" என்கின்ற கணக்குகளையெல்லாம் கேட்டு, அவர்கள் சரியான முறையிலே தான் இந்த உதவிகள் செய்யப்படுகின்றன; பண விநியோகம் நடைபெறுகிறது: பொருள் விநியோகம் நடைபெறுகிறது என்கின்ற அந்தப் புள்ளிவிவரத்தை மத்திய அரசிற்குத் தந்திருக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் இன்றைக்கு 14 கோடி 25 லட்சம் ரூபாய்க்கான அனுமதியை மத்திய அரசு நமக்கு வழங்கியிருக்கிறது என்பதனையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசின் உதவி எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்குமேல் கூட வேண்டும் என்று வற்புறுத்தத் தயார்தான். ஆனால் மகாராஷ்டிரத்தில் இம்மாதிரி மத்திய அரசு பண உதவி செய்யும்பொழுது, மத்திய அரசின் அதிகாரிகளும் கூட இருந்து, விநியோகத்தைக் கண்காணித்தார்களே, அம்மாதிரி முறையைத் தமிழ்நாட்டிலும் அனுமதிப்பீர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இங்கே கண்காணிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. எதற்கு எடுத்தாலும் சந்தேகப்படுவது, உண்மையிலே மனத்திற்குள் சந்தேகம் இருக்கிறதோ, இல்லையோ, அப்படி ஒரு புழுதியை வாரி இறைப்பது; இதையே எதிர்க்கட்சிக்காரர்கள் வேலையாக வைத்துக்கொண்டிருந்தால், நல்ல காரியங்களை நடத்த முடியாது. மராட்டியத்தில் என்ன நடைபெறுகிறது என்பது எனக்குத் தெரியாது. எந்த வகையிலே நடைபெறுகிறதோ எனக்குத் தெரியாது. அப்படி மராட்டியத்தைக் கண்காணிக்க வேண்டிய அளவிற்கு அங்கே தவறு நடைபெறுகிறதாவென்பதும் எனக்குத் தெரியாது.



திருமதி த. ந. அனந்தநாயகி : நாங்கள் சொல்வதையெல்லாம் ஏதோ புழுதி வாரி இறைப்பதற்காகவே சொல்கிறோம் என்று நீங்கள் எடுத்துக்கொள்வது தவறு. என்னுடைய தொகுதியில் பல குடிசைகளில் நான்கு சுவர்களும் இடிந்து கிடந்தும்கூட, அவர்களுக்குக்கூட உதவி போய்ச் சேரவில்லை. நானும் தாசில்தாரிடம் இரண்டு முறை பார்த்துச் சொன்னேன். இப்படிச் சரியான முறையில் நீங்கள் கணக்கு எடுக்காமல் இருக்கின்றீர்களே என்று சொல்கிறோம். ஏதோ எங்கோ சில குறைகள் இருக்கின்றன என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறோம். ஏதோ நாங்கள் புழுதியை வாரி இறைப்பதாக அவரே சொல்லுவது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குறைகள் ஏற்படலாம், திரு. ஹாண்டே அவர்கள்கூட, அந்த வெள்ளச் சேதத்திற்காக நிவாரணங்கள் அளிக்கப்பட்டபோது, பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்னை மாநகரத்தில் நிவாரணம் அளிக்கப்பட்டபோது, அவர்களுடைய தொகுதியில் ஒரு ஐந்து ஆறு இடங்களில், நிவாரணம் அளிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு, என்னிடம் கடிதம் மூலம் எழுதித் தந்தார்கள். இந்த அவை நடந்தபோதுதான் கொடுத்தார். அதை உடனடியாகக் கவனித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற விவரங்களை திரு. ஹாண்டே அவர்களுக்கு நானே அனுப்பி வைத்தேன். அதைப்போல அம்மையார் அவர்கள் இந்த அவையில்—ஓகோ! வரவில்லை அப்போது—கொடுத்திருக்கலாம். அப்படிக் கொடுக்காத காரணத்தினால் அது கவனிக்கப்படாமல் போயிருக்கலாம். இப்பொழுதுகூட எந்த எந்த இடத்தில் இந்தத் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று குறிப்பிட்டுக் காட்டினால், அவைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நிச்சயமாகத் தயாராக இருக்கிறது.

அடுத்து, இந்த உரையின்மீது நடைபெற்ற விவாதத்தில் விவசாயிகளுடைய கோரிக்கைகளை அரசு சரியானபடி கவனிக்கவில்லை, அல்லது உடன்பாட்டிலே ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தவில்லை என்ற விவாதம் முக்கியமாக இருந்தது. குறிப்பாக, காங்கிரஸ் கட்சியினுடைய மதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள், விவசாயிகள் கிளர்ந்து எழுவார்கள் என்கிற வகையில்கூட வெளியிடங்களில் பேசி வருகிறார்கள். பத்திரிகைகளிலே அவைகள் பெரிய எழுத்துச் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் விவசாயிகளின் கோரிக்கைகள் எந்த உடன்பாட்டிற்கு வந்தன, அந்த உடன்பாட்டை இந்த அரசு நடைமுறைப்

படுத்தியதா, இல்லையா என்பதை இந்த அவைக்கு நான் விளக்குவதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் விளக்குவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவர்களுடைய முதல் கோரிக்கை, விவசாயத்திற்கான மின் கட்டண உயர்வை ரத்துச் செய்ய வேண்டும். மின் துண்டிப்பு செய்தல் கூடாது. வறண்ட கிணறுகளுக்கு வருடாந்திர குறைந்த பட்சக் கட்டணம் வசூலித்தலை நிறுத்த வேண்டும். இது கோரிக்கை.

உடன்பாடு என்ன? விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணம் ஒரு மாதத்தில் உபயோகப்படுத்தப்படும். மின்சாரத்திற்கு முதல் 100 யூனிட்டுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 12 பைசாவாகவும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு யூனிட்டுக்கும் 11 பைசாவாகவும் நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இது உடன்பாடு. எடுக்கப்பட்ட நடவடிக்கை—இதன்படி மாற்றியமைத்து, 1—8—1972 அன்று அரசு ஆணை பிறப்பித்தது. அவ்வாறு அதை அரசு நிறைவேற்றியிருக்கிறது.

இரண்டாவது கோரிக்கை, அரசாங்கக் கடன், கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் உட்பட சகல கடன் பாக்கிகளையும் வஜா செய்ய வேண்டும். மோட்டார் பம்பு செட்டுகள், கால்நடைகள், விவசாய சொத்துக்களை ஜப்தி செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். இது கோரிக்கை.

உடன்பாடு என்ன? மாநிலத்தில் வறட்சியுள்ள இடங்களில் கடன் வசூலிப்பதில் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அது தொடர்ந்து அமல்படுத்தப்படும். மேலும் வறட்சிப் பகுதிகளை வருவாய் வாரிய உறுப்பினர்கள் மாவட்டவாரியாகப் பார்வையிட்ட பின்னர் எந்தெந்தப் பகுதிகள் விளைச்சல் அற்ற பகுதிகள் என்று தீர்மானிக்கப்படுகிறதோ அந்தப் பகுதிகளில் கடன் பாக்கிகளுக்குத் தவணை அளிப்பது போன்ற சலுகைகள் அளிக்கப்படும். இதற்கிடையில் ஜப்தி போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது. இது உடன்பாடு. எடுக்கப்பட்ட நடவடிக்கை. அரசு ஆணையின்படி மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், எல்லாக் கூட்டுறவு வங்கிகளுக்கும், துறையின் அதிகாரிகளுக்கும் கடன் பாக்கிகளை வசூல் செய்வதில் கெடுபிடி நடவடிக்கை இல்லாமல் பார்த்துக்கொள்ளுமாறு உத்தர விட்டுள்ளார். பின்னர் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக மேற்சொன்ன உத்தரவு 30—6—1973 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு உதவும்



வகையில் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற, மாநில அரசு கோரிக்கை செய்து, ரிசர்வ் வங்கி ரூ. 4.54 கோடி கடனுதவி அளித்திருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் இதே விதமான குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் சேதமான கிணறுகளைச் செப்பனிடவும், மண் அடிக்கப்பட்ட நிலங்களைச் சீர் செய்யவும் மத்திய வங்கிகள் மத்திய காலக் கடன்கள் வழங்குவதற்கான உத்தரவைக் கூட்டுறவுப் பதிவாளர் பிறப்பித்துள்ளார்.

மூன்றாவது கோரிக்கை, விவசாயப் பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து விவசாயப் பண்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்து, அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்று, விற்பனை செய்ய வேண்டும். இது மூன்றாவது கோரிக்கை.

இதில் என்ன உடன்பாடு ஏற்பட்டுள்ளது? விவசாயப் பண்டங்களுக்கு அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்பதற்கு "ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்" நிறுவுவதை, கொள்கை அளவில் அரசு ஏற்றுப் பரிசீலிக்கும், விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயம் செய்வதற்கு விவசாயப் பிரதிநிதி உள்ளிட்ட குழு ஒன்றை அமைப்பது பற்றிப் பரிசீலிப்பதோடு, தேங்கியுள்ள பருத்தி முதலியவற்றைக் கொள்முதல் செய்வது பற்றியும் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதுதான் உடன்பாடு. எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? தேங்கியுள்ள பருத்தி இருப்பினை விற்பதில் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைப்பற்றி மத்திய அரசுக்குத் தமிழக அரசு எடுத்துச் சொல்லியுள்ளது. பருத்திக்கு நியாயமான விலையை நிர்ணயிக்கும் கொள்கைபற்றி மத்திய அரசு முடிவு எடுக்கவேண்டும் என்று இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியப் பருத்திக் கழகம் எந்த அளவுக்குப் பருத்தியைக் கொள் முதல் செய்கிறது என்பதையும் கொள்முதல் விலையையும் முன் கூட்டியே அறிவிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு வற்புறுத்தி வந்துள்ளது. விலை நிர்ணயம் செய்யும் குழு அமைப்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது ஒன்று தான் இன்னும் பரிசீலனையில் இருக்கின்ற விஷயம்.

அடுத்த கோரிக்கை நான்காவது கோரிக்கை. பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிட வேண்டும் என்பது கோரிக்கை. கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 12

அந்தளை பேரும் விடுத்த கோரிக்கை—பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிட வேண்டும். புதிதாகப் போடப்பட்டுள்ள நில வரி, செஸ் வரிகளைக் கைவிட வேண்டும்; விவசாய பம்பு செட்டுகளுக்கும், ரசாயன உரத்திற்கும் போடப்பட்டுள்ள வரியை ரத்து செய்ய வேண்டும்; இது கோரிக்கை.

ஏற்பட்ட உடன்பாடு என்ன? பயிர் அடிப்படையில் விவசாய வருமான வரியில் கணக்கு வைப்பது கட்டாயமில்லை என்றும், ஏக்கரா எல்லை அளவு இல்லாமல் கம்பவுண்டிங் முறையில் வரி செலுத்தலாமென்றும் முன்பு அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளை யொட்டி மேலும் சிறிய விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியில் சலுகை அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும். அந்தச் சலுகை உதாரணமாக 7.5 ஸ்டாண்டர்டு ஏக்கரா வரையில் வருமான வரி இல்லை என்பதை பத்து ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று ஆக்குவது பற்றியும், ஸ்டாண்டர்டு ஏக்கரா கணக்கிடுவதில் மாற்றம் செய்வதாகவும் இருக்கும். இது உடன்பாடு.

எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாய வருமான வரி திருத்தச் சட்டத்தின்படி கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்பட்டன. 7.5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரி விலக்கு அளித்து இருந்த நிலையை மாற்றி தற்பொழுது 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. தற்போது 10.00 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு வருமான அடிப்படையில் வரி விதிக்கும்போது 4,000 ரூபாய் வரி விலக்கு அளிக்கப்பட்டது. இதில் தற்போது 5,000 ரூபாய் வரை வரி விலக்கு அளிக்க உத்தரவு இடப்பட்டுள்ளது.

பிளான்டேஷன் அல்லாத பயிர்களுக்கு, முன்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை கம்பவுண்ட் செய்துகொள்ளலாம். தற்போது எவ்வித ஏக்கர் எல்லை அளவும் இல்லாமல் வரியைக் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம்.

பிளாண்டேஷன் பயிர்களுக்கு முன்பு உயர்ந்த பட்சம் 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மட்டும் கம்பவுண்டிங் செய்ய விதியில் இடம் இருந்தது. தற்போது 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்பது 50 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக உயர்த்தப்பட்டது.

கம்பவுண்டிங் கட்டண விகிதங்கள் தற்போது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.



1973 பிப்ரவரி 12] [டாக்டர் மு. கருணாநிதி]

பாக்கு, திராட்சை, கரும்பு, நிலக்கடலை, பருத்தி, பயறு, தென்னை ஆகிய பயிர்கள் விளையும் நிலங்களை ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றுவதில் மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டன.

உதாரணமாக முன்பு ஒரு ஏக்கரில் 6-ல் ஒரு பங்கு பாக்கு பயிரிட்டால் அது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று எடுத்துக் கொள்ளப்பட்டது. தற்போது ஒரு ஏக்கரில் 3-ல் ஒரு பங்கு பாக்கு பயிரிட்டால் அதை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று எடுத்துக் கொள்ளலாம். இந்த வகையிலே அந்த உடன்பாடு இந்த அவையிலே நிறைவேற்றி வைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஐந்தாவது கோரிக்கை, பாசனக் கட்டுப்பாட்டை நீக்கி தண்டத் தீர்வை போடுவதைக் கைவிட வேண்டும். இது கோரிக்கை உடன்பாடு என்னவென்றால் ஏற்கெனவே இதற்கான தற்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இந்தப் பகுதிகளில் விவசாயிகளின் மாநாட்டைக் கூட்டிப் பரிசீலித்துத் தக்க முடிவு எடுக்கப்படும். ஏற்பட்ட உடன்பாடு இது.

எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? 22—1—1973-ல் கோவையில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தி அம்மாநாட்டில் பயிர் செய்வது சம்பந்தமான கட்டுப்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. முடிவுகள் விரைவில் அறிவிக்கப்பட இருக்கின்றன.

ஆறுவது கோரிக்கை, பாசனமற்ற பகுதிகளுக்கு உடனடியாக நீர்ப்பாசனம் செய்ய உத்தரவிடச் செய்ய வேண்டும்; அதுவரை அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்த வேண்டும். இது ஆறுவது கோரிக்கை.

உடன்பாடு என்ன? இதுபற்றி மத்தியத் திட்டக் குழுவுடனும், கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும். தொடர்பு கொண்டிருக்கிறோம். அது எடுக்கப்பட்ட நடவடிக்கை. பலமுறை பேச்சுவார்த்தைகளை அந்த அரசுகளோடு இந்த அரசு நடத்திக்கொண்டிருக்கிறது.

ஏழாவது கோரிக்கை, விவசாயக் கால்நடைகள், பயிர்கள் பாதுகாப்பு (இன்ஷுரன்ஸ்) செய்யப்பட வேண்டும். ஏற்பட்ட உடன்பாடு என்ன? மாநில அரசுக்கு இந்தக் கொள்கை உடன்பாடு உடையது. மத்திய அரசிடம் இதுபற்றி வலியுறுத்தப்படும், வலியுறுத்தி வருகிறோம். ஆனால் மத்திய அரசிடமிருந்து பதிலில்லை.

பல கடிதங்கள் எழுதியிருக்கிறோம். இதற்கான அறிக்கையைத் தமிழ் நாடு விவசாயப் பல்கலைக் கழகத்திலிருந்து தானியக் காப்பீடு சாத்தியக் கூறுகளைப் பற்றி அரசிற்கு இப்போது அறிக்கை அனுப்பப் பட்டுள்ளது. அதையும் பெற்று மத்திய அரசிற்கு மீண்டும் நினை வூட்டுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

இனும் ஒழிப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் செய்வது, இனும் நிலங்களை உழுதுகொண்டிருக்கும் உழவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். இதற்கென்ன உடன்பாடு? இந்தப் பிரச்சினை பரிசீலனை செய்யப்படும்.

அதற்கேற்ப எடுக்கப்பட்ட நடவடிக்கை 1963-ஆம் ஆண்டு இனும் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் பல்வேறு பிரிவுகளில், இந்து, முஸ்லீம், கிறித்துவ மத ஸ்தாபனங்களுக்கும், தனிப்பட்ட இனும்தாரர் களுக்கும் எந்த அளவுப் பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை நிலவரித் திட்ட ஆணையாளரை மாநிலம் முழுமைக்கும் சேகரித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. செட்டில் மெண்ட் அலுவலர்கள் மூலம் ஒருவித விசாரணையும், தாசில்தார்கள் மூலம் மற்றொரு விசாரணையும் செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. இவை களின் மூலம் கிடைக்கப்பெறும் புள்ளிவிவரங்கள் தகுந்த நட வடிக்கை எடுக்க மிகவும் தேவைப்படும். வருவாய் வாரியத்தின் இறுதி அறிக்கை வரப்பெற்றதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதுபற்றி தனியார் மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டபோது, அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது; விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டதே. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது வருவாய் வாரியத்தின் இறுதி அறிக்கை வந்தவுடன், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒன்பதாவது கோரிக்கை. அதை அவர்களே வலியுறுத்தவில்லை.

பத்தாவது கோரிக்கை, விவசாய வேலைகளில் பாதிக்கப்பட்டவர் களுக்கும், மரணம் அடைந்தவர்களுடைய குடும்பங்களுக்கும் அரசு நிவாரணம் அளிக்க வேண்டும். இது கோரிக்கை.



இதிலே ஏற்பட்ட உடன்பாடு என்ன? விவசாயத் தொழி லாளர்கள், விவசாயிகள், இரு தரப்பினரும் மாவட்ட வாரியாக விவ சாயத் தொழிலாளர்களுடைய பொது நல நிதி உருவாக்கவும், அதற்கு அரசு சார்பில் ஈட்டு நிதி அளிக்கவும் பரிசீலிக்கப்படும்.

இன்னும் அவர்கள் ஏற்றுக்கொண்டவாறு அந்தச் சங்கத்தார் விவசாயிகளுடைய பொது நல நிதியைத் திரட்டவில்லை. அவர்கள் திரட்டியதும் அதற்கு ஈடாக அரசு நிதி அளிக்கத் தயாராக இருக்கிறது.

பதினோராவது கோரிக்கை, விவசாயத் தொழிலாளர்களுக்கும் கிராமப் புற ஏழை மக்களுக்கும் அரசுச் செலவிலேயே குடியிருப்பு மனை நிலம் வழங்கி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்; விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் பூராவும் கூலி நிர்ணயச் சட்டம் வேண்டுமென்பதாகும். இது கோரிக்கை.

ஏற்பட்ட உடன்பாடு என்ன? குடியிருப்பு மனை நிலம் ஏழை மக்க ளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்குவது பற்றி மாநிலம் முழுவதும் சட்டத்தை விரிவாக்க முதலமைச்சர் ஏற்கனவே கலெக்டர்கள் மாநாட்டில் அறிவித்திருப்பதையொட்டி அந்த முயற்சி விரைவுப்படுத்தப்படும். விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுவதும் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவரவும் அதுபற்றி ஆராயவும் ஒரு கமிஷன் ஏற்படுத்தப்படும்.

இந்த இரண்டு காரியங்களும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

பன்னிரெண்டாவது கோரிக்கை, வனத் தரிசு புறம்போக்கு நிலங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர் களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

ஏற்பட்ட உடன்பாடு. வனத்துறையில் இப்போதே காடுகள் அல்லாத நிலங்கள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு ஐம்பத்து இரண்டாயிரம் ஏக்கர் பகிர்ந்தளிக்கத் திட்டம் உள்ளது. புறம்போக்கு நிலங்களும் இலட்சக்கணக்கானவர்களுக்குத் தொடர்ந்து பகிர்ந்தளிக்கப்படுகிறது. விவசாயத்தில் ஈடுபட்டிருப்ப வர்களுக்குத்தான் இதுபோன்ற நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. அது தீவிரமாக அமுல்படுத்தப் படும். இதுதான் உடன்பாடு.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 1972–73-ஆம் ஆண்டில் அரசு 75,000 ஏக்கர் நிலத்தை அடமானம் என நிர்ணயம் செய்தது. அதில் நவம்பர் 1972 முடிய 51,000 ஏக்கர் நிலம் அடமானம் செய்யப்பட்டு விட்டது. 1972–73 நிதியாண்டு முடிவதற்குள் நிர்ணயிக்கப்பட்ட இந்த இலக்கை அடைந்துவிடலாம்.

இந்த அளவிலே விவசாயிகளுடைய கோரிக்கை மிகப் பெரும் பாலானவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரங்களை நான் இங்கே எடுத்துச்சொன்ன குறிப்புகளின் மூலமாக இந்த அவைக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த அவையிலே மிக முக்கியமாகப் பேசப்பட்ட பிரச்சனை, இன்று மக்களுடைய கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கின்ற பெரிய பிரச்சினை, மின்சார வெட்டு. மிக நெருக்கடியான நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை யாரும் மறுத்திடத் தயாராக இல்லை. ஆனால் அனைவருடைய ஒத்துழைப்போடு இந்தப் பிரச்னையை நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மின்சார வெட்டைப்பற்றிப் பேசிய நேரத்தில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களானாலும் சரி, அல்லது மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களானாலும் தலைவர்களானாலும் சரி, இந்த அரசு மின் உற்பத்தி செய்யவே இல்லை என்ற ஒரு பெரிய குற்றச்சாட்டை எடுத்துக்கூறினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் 1966–67-ல் 857 மெகாவாட் உச்ச மின் தேவை demand இருந்தது. இப்போது 1971–72 ஆம் ஆண்டிலே அது 1,326 மெகாவாட்டாக மாறி இருக்கிறது. 1966–67-ல் நீர் மின்நிலையங்கள் நமக்கு வழங்கிய உற்பத்தி 21,000 லட்சம் யூனிட். ஆனால் 1971–72-ல் அது 37,490 லட்சம் யூனிட்டாக நீர் மின் நிலையங்கள் மூலம் கிடைக்கிறது. அனல் மின் நிலையங்கள் 1966–67-ல் 4,050 லட்சம் யூனிட் உற்பத்தி செய்தது. இன்றைக்கு 1971–72-ல் அது 4,050 லட்சத்திற்கு மாறாக 6,180 லட்சம் யூனிட் இன்றைக்குக் கிடைக்கிறது.

நெய்வேலி, கேரளா, மைசூர் மாநிலங்களிலிருந்து 1966–67-ல் வாங்கப்பட்ட மின்சாரம் 15,980 லட்சம் யூனிட். 1971–72-ல் அது 24,490 லட்சம் யூனிட்டாக உயர்ந்தது. இதிலே மின்வெட்டு இப்போதுதான்—தமிழ்நாட்டிலே முன்னேற்றக் கழக அரசிலே வந்துவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டு சில பேர் பேசினார்கள்.





அவர்களுக்கு 1961-ம் ஆண்டிலிருந்து இந்த மின்சாரத் துறையிலே ஏற்பட்டிருக்கிற சங்கடங்களை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1961-ம் ஆண்டு தமிழ் நாட்டில் ஏற்பட்ட மின்சார வெட்டு 40 சதவீதம் 12 நாட்களுக்கு வெட்டப்பட்டது. பின்னால் 15 சதவீதம் சுமார் 6 நாட்களுக்கு வெட்டப்பட்டது. 1962-ம் ஆண்டு 40 சதவீதம் 15 நாட்களுக்கு, 1963-ம் ஆண்டு 80 சதவீதம் 16 நாட்களுக்கு, 1964-ம் ஆண்டு 40 சதவீதம் 3 நாட்களுக்கு, பிறகு அது 80 சதவீதம் ஆக்கப்பட்டது 18 நாட்களுக்கு, 1965-ம் ஆண்டு 25 சதவீதம் இரண்டு மாதங்களுக்கு, 1966-ம் ஆண்டு 25 சதவீதம் 7 மாதங்களுக்கு. 1967 முதல் 69 வரை மின்வெட்டு இல்லை. 1970-ம் ஆண்டில் 40 சதவீதம் வெட்டப்பட்டது 6 நாட்களுக்கு—நெய்வேலி அப்போது மூடப்பட்ட காரணத்தால்—1971-ல் மின்வெட்டு இல்லை. 1972-ல் 25 சதவீதம் மின்வெட்டு 23 நாட்களுக்கு.

பிறகு 1—10—1972-க்குப் பிறகு இதுவரையிலே 25 சதவீத மின்வெட்டு 4 மாதங்களுக்கு வெட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாகத் தொழிற்சாலைகளுக்கு வெட்டு உயர்த்தப்பட்டு 40 சதவீதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. மேலும் நிலைமைகள் நெருக்கடியாகக் கூடும். அதை மறுக்க விரும்பவில்லை. மறைக்கத் தேவையும் இல்லை. பி. ப.
ஆனால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில், அங்கே 1–30
இல்லையா என்று கேட்டு நாம் ஆறுதல் பெறமுடியாது என்பதை நிச்சயமாக ஒத்துக்கொள்கிறேன். ஆனாலும், இது வெறும் தமிழ் நாட்டிலே மாத்திரம் உள்ள பிரச்சினை மட்டுமல்ல. அனைத்திந்தியாவிலும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

மற்ற மாநிலங்களில் தற்போதுள்ள மின்சார வெட்டின் அளவு:—அரியானா 80 சதவீதம், பஞ்சாப் 75 சதவீதம், உத்தரப் பிரதேசம் 40 சதவீதம், ஆந்திரப்பிரதேசம் 30 சதவீதம், மைசூர், குஜராத், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் 25 சதவீதம், மேற்கு வங்கம் 15 சதவீதம் இன்றைக்கு மின்வெட்டு மூலம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இன்றையதினம் எடுத்துச் சொல்லப்பட்ட மிகப் பெரிய குறையாகச் சொல்லப்பட்டது. பார்ப்பவர்களுக்குப் பாமரர்களுக்கு—ஓகோ இதனால் தானே இவ்வளவு பெரிய ஆபத்து என்று எண்ணிடத்தக்க அளவுக்குப் பெரிய குறையாக ஒன்று சொல்லப்பட்டது; சினிமாக்கள் மூன்று காட்சிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இது ஒரு குற்றச்சாட்டு. இரண்டாவது

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 12

நீங்கள் ரூரல் எலக்டிரிபிகேஷன், கிராமங்களுக்கு மின் வசதி கொடுப்பதற்கான ஒரு பெரிய திட்டத்தை ஆரம்பித்தீர்கள். அதன் காரணமாகத்தான் இந்தச் சங்கடமான நிலைமை வந்துவிட்டது என்று சொன்னார்கள். முதலில், சினிமாவுக்கு மூன்று காட்சிகளுக்கான மின்சாரம் நாம் வழங்கவில்லை. நாம் ஒரு காட்சியைக் குறைத்து விடுங்கள் என்று உத்தரவிட்டபோது நாங்கள் 2 காட்சிக்குரிய மின்சாரத்தில் விசிறி முதலானவைகளைக் குறைத்துக்கொண்டு 3 காட்சிகள் நடத்திக் கொள்கிறோம் என்று கேட்டுக் கொண்டதால், 2 காட்சிக்குரிய மின்சாரம் தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சினிமாவிற்கும் அல்லது தெரு விளக்குகளுக்கும் கிராமப்புறத்து விளக்குகளுக்கும் ஆகின்ற செலவு எவ்வளவு என்பதைத் தயவுசெய்து நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

பார்ப்பதற்குப் பிரகாசமாக இருப்பதைச் சொல்லி, பார் பார் பட்டணத்தில், எவ்வளவு விளக்குகள் எரிகின்றன. பார் பார் சினிமாக்கள் நடக்கின்றன. பார் பார் கிராமத்திற்கு எல்லாம் இவர்கள் விளக்குகள் போட ஆரம்பித்து இருக்கிறார்கள் என்று கூறுகின்றனர்.

அரிசனக் காலனிகளுக்கு 1967 வரையில் 4 ஆயிரம் காலனிகளுக்குத்தான் போடப்பட்டிருக்கிறது. இன்று இந்த ஆட்சியிலே 20 ஆயிரம் காலனிகளுக்கு மின் விளக்குகள் போடப்பட்டு முடிந்துவிட்டது. இவைகளை எல்லாம் செய்தது தவறு என்பதைப் போல்—ஆராயாமல் செய்த வேலை என்பதைப் போல—இன்றைக்குப் பேசுகிறார்கள். அதற்காகத்தான் இந்தக் கணக்கை அளிக்க விரும்புகிறேன்.

ஒரு நாளைக்கு நம்முடைய மாநிலத்திற்குப் பல்வேறு துறைகளுக்கும் தேவையான மின்சாரம் 225 லட்சம் யூனிட்டுகள்.

இதிலே, இந்த 225 லட்சம் யூனிட்டுகளிலே, தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மின்சாரம் 115 லட்சம் யூனிட்டுகள், கிட்டத்தட்ட 50 சதவீதம் தருகிறோம்.

விவசாயத்திற்கு இந்த 225 லட்சம் யூனிட்டுகளிலே தருவது 45 லட்சம் யூனிட்டுகள், 20 சதவீதம் தருகிறோம்.

வீட்டு உபயோகத்திற்கு 9,50,000 யூனிட்டுகள் இந்த 225 லட்சம் யூனிட்டில் இருந்து தருகிறோம். அதாவது 4.2 சதவீதம்.



1973 பிப்ரவரி 12] [டாக்டர் மு. கருணாநிதி]

தெரு விளக்குகளுக்குப் பயன்படுத்தப்படுவது இந்த 225 லட்சம் யூனிட்டுகளிலே—கிராமத்திலே எல்லாம் லைட் போட்டுக் கெடுத்து விட்டார்கள்; அதனால்தான் பற்றாக்குறை என்று சொன்னார்களே; அதற்கு நான் சொல்லுகிற பதில் இந்த 225 லட்சம் யூனிட்டுகளிலே 2 லட்சத்து 50 ஆயிரம் யூனிட்டுகள் தான். அதாவது 1 பெர்சென்ட் தான் தெரு விளக்குகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிற மின்சாரம்.

சினிமாக்களுக்கு 225 லட்சம் யூனிட்டுகளிலே உபயோகப்படுத்துகின்ற மின்சாரம் ஒரு நாளைக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் யூனிட். ½ சதவீதம். அதாவது 0.5 சதவீதம்.

கடைகளுக்கு 6 லட்சத்து 60 ஆயிரம் யூனிட்டுகள். அதாவது 3 சதவீதம்.

அத்தியாவசிய சர்வீஸ்களுக்கு 7 லட்சம் யூனிட்டுகள். அதாவது 4.3 சதவீதம்.

இதிலே எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்றால், தொழில் நிறுவனங்களுக்கு 115 லட்சம் யூனிட்டாக இருந்ததை, 80 லட்சத்து 60 ஆயிரம் யூனிட்டுகளாக இப்பொழுது, இந்த 40 சதவீதம் வெட்டின் மூலம், குறைத்து இருக்கிறோம். அவர்களுக்கு, மொத்தம் மின் வழங்குவதில் 36 சதவீதம் தொழிற்சாலைக்குக் கிடைக்கிறது.

விவசாயத்திற்கு 45 லட்சம் யூனிட் அப்படியே கொடுக்கிறோம். வெட்டு இல்லை. அவர்களுக்கு மொத்த மின் வழங்குவதில் 20 சதவீதம் வழங்குகிறோம்.

வீட்டு உபயோகத்திற்காக 9 லட்சத்து 50 ஆயிரம் யூனிட்டை 8 லட்சத்து 70 ஆயிரம் யூனிட்டுகளாகக் குறைத்து இருக்கிறோம். 25 சதவீதம்—100 யூனிட்டுக்கு மேற்பட்டால் வெட்டு என்கிற வகையில்.

தெரு விளக்குகளுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் யூனிட், இதைக் குறைத்து 1 லட்சத்து 25 ஆயிரம் யூனிட்டுகள் ஆகக் குறைத்திருக்கிறோம். தெரு விளக்கைப் பொறுத்த வரையில் 50 சதவீதம் மின் வெட்டு.

சினிமாக்களுக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் யூனிட்டை 90 ஆயிரம் யூனிட்டுகள் என்று குறைத்து இருக்கிறோம். 33⅓ சதவீதம் மின் வெட்டு சினிமாக்களுக்கு. 0.5 சதவீதம் தான் சினிமாக்களுக்கு உபயோகிக்கப்பட்டது. இப்பொழுது 0.4 சதவீதம் தான் சினிமாக்களுக்கு உபயோகிக்கப்படுகிறது.

கடைகளுக்கு 6 லட்சத்து 60 ஆயிரம் யூனிட் என்று இருந்ததை 5 லட்சத்து 10 ஆயிரம் யூனிட்டுகள் என்று குறைத்து இருக்கிறோம்.

அத்தியாவசிய சர்வீஸ்களுக்குக் குறைக்கவில்லை.

முன்பு இழப்பு, 225 லட்சம் யூனிட்டாக இருந்தபோது, 38 லட்சத்து 10 ஆயிரம் யூனிட். அதாவது 17 சதவீதம். இப்பொழுது 32 லட்சத்து 60 ஆயிரம் யூனிட்டாகக் குறைத்து இருக்கிற காரணத்தால் இழப்பு 14.2 சதவிகிதமாகிறது. இந்த இழப்பு தமிழ் நாட்டிலே 17 சதவிகிதம் ஏற்படுகிறது என்ற காரணத்தாலேதான் மின்சாரப் பற்றுக்குறை வந்தது. இது ஒரு கண்டனக் கணை. நாம் மற்ற மாநிலங்களையும் ஒப்பிட வேண்டும். இந்த இழப்பு 1970–71-ஆம் ஆண்டு கணக்குப்படி அரியானாவில் 27.96 சதவீதம், ஆந்திரப் பிரதேசத்தில் 25.41 சதவீதம், உத்திரப் பிரதேசத்தில் 24.48 சதவீதம், பீகாரில் 22.87 சதவீதம், பஞ்சாபில் 22.37 சதவீதம், ஜம்மு–காஷ்மீரில் 21.49 சதவீதம். நாகாலாந்தில் 20.34 சதவீதம். அஸ்ஸாமில் 17.71 சதவீதம். மத்தியப் பிரதேசத்தில் 14.7 சதவீதம். குஜராத்தில் 14.57 சதவீதம். மைசூரில் 14.69 சதவீதம்.

அகில இந்திய சராசரி இழப்பு 17.31 சதவீதமாகும். நம்முடைய மாநிலத்தினுடைய இழப்பு 17 சதவீதமாகும்.

மற்ற மாநிலங்களை விடக் குறைவாக இருந்தாலும் ஏன் மைசூரை விட—குஜராத்தைவிட—ஆந்திரத்தைவிடக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று பார்த்தால், தமிழ் நாட்டில் மின் கம்பித் தொடர்களின் நீளம் 1 லட்சத்து 94 ஆயிரம் கி.மீ. மைசூரில் 1 லட்சத்து 29 ஆயிரம் கி.மீ. மின் கம்பிகளின் நீளம். ஆந்திரப் பிரதேசத்தில் 97 ஆயிரம் கி.மீ. மின் கம்பிகளின் நீளம் மின் கம்பிகள் நெடுந்தூரத்திற்குப் போக போக, இழப்பு கொஞ்சம் அதிகப்படுகிறது.

அது மாத்திரமல்ல; ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 2.21 லட்சம் தான். மைசூரில் இருக்கிற பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 1.57 லட்சம். ஆனால், தமிழ் நாட்டில் 1966–67-ல் 2 லட்சம் பம்பு செட்டுக்கள். இன்றைக்குத் தமிழக அரசினுடைய பெருமுயற்சியின் காரணமாக இந்த 2 லட்சம் பம்பு செட்டுகள் 6 லட்சத்து 24 ஆயிரமாக உயர்ந்து இருக்கின்ற காட்சியினை நாம் காணுகின்றோம். ஆகவே, இந்த இழப்பு, மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில் நம்முடைய தேவை, நாம் ஏற்படுத்தியிருக்கின்ற வசதிகள், சாதனைக் கூறுகள் இவைகளைக் காணுகிற





நேரத்திலும் அது அவ்வளவாகப் பொருட்படுத்தக்கூடியதாக இல்லை. மேலும் இந்த இழப்பைக் குறைக்கவேண்டும் என்பதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் செலுத்திய கவனத்தோடு நான் என்னுடைய உள்ளத்தை இணைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதையெல்லாம் மின்சார போர்டு செய்ய வேண்டுமென்று நானும் கேட்டுக் கொள்கின்றேன்.

DR. H. V. HANDE: The Hon. Chief Minister was saying that there was no serious power cut for agriculturists and industries. But actually the position to-day is that there is serious lay-off in Coimbatore and industrial belts surrounding it and we have also received information that for agricultural pumpsets, there is no electric supply and consequently the farmers are suffering in many places in the State.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளைப் பிறகு சொல்கிறேன். இந்த அரசு வந்தபிறகு மின்சார உற்பத்திக்கான திட்டங்களை நிறைவேற்றப்படவில்லை என்று குறைபாடு. இந்த அரசு வந்த பிறகுதான் 60 மெகா வாட்டுக்கான ஆளியாறு திட்டம், 100 மெகா வாட் அளிக்கும் கோதையாறு திட்டம், 95 மெகா வாட் அளிக்கும் சோலையாறு திட்டம், 30 மெகா வாட்டுக்கான பேசின் பிரிட்ஜ் நீட்டிப்புத் திட்டம், 230 மெகா வாட்டுக்கான எண்ணூர் திட்டம்—மொத்தம் 515 மெகா வாட் வழங்கக்கூடியதாக இந்தத் திட்டங்கள் இந்த அரசினுடைய ஆட்சிக் காலத்திலேதான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மேலும் ஆரம்ப வேலை நடந்துகொண்டிருக்கும் திட்டங்கள்—220 மெகா வாட் கொண்ட எண்ணூர் விஸ்தரிப்புத் திட்டம், 35 மெகா வாட் கொண்ட சுருளியாறு திட்டம், 20 மெகா வாட் கொண்ட சேர்வலாறு திட்டம், 50 மெகா வாட் கொண்ட நெல்லித்துறை திட்டம், 200 மெகா வாட் கொண்ட காடம்பாறை திட்டம், 110 மெகா வாட் கொண்ட குந்தா 4-வது கட்ட திட்டம் ஆக 635 மெகா வாட் கொண்ட திட்டங்களுக்கும் ஆரம்ப வேலைகளை இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட திட்டங்கள் தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டம் 400 மெகா வாட் கொண்டது. இன்னும் ஒப்புதல் கிடைக்கவில்லை.

மேட்டூர் அனல் மின்நிலையம் 330 மெகா வாட் கொண்டது. சிறிய நீர் மின் திட்டங்கள் 165 மெகா வாட் கொண்டது. இதை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கிறோம். ஒப்புதலுக்காக இவை காத்துக்கொண்டிருக்கின்ற திட்டங்கள்.

மத்திய அரசுத் திட்டம் என்கிற பெரிய திட்டம், கல்பாக்கம் அணு மின் நிலையம் 470 மெகாவாட் கொண்ட திட்டமாகும். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் 1,000 மெகாவாட் கொண்டதாகும். தூத்துக்குடி அணு மின்நிலையம் 1,000 மெகா வாட் கொண்டதாகும். இவைகளைப்பற்றியெல்லாம் நாம் மத்திய அரசிடத்திலே வாதாடிப் பெறவில்லை. மத்திய அரசுக்கு இவைகளைப்பற்றியெல்லாம் சரியானபடி எடுத்துச் சொல்லவில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் வேறு சில மாண்புமிகு உறுப்பினர்களும் வேகமாக எடுத்துச் சொன்னார்கள். பல முறையும் இவைகளைப்பற்றி நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு கலைஞர் அவர்கள் தற்போதுள்ள மின்வெட்டைப்பற்றிச் சொன்னார்கள். இன்னும் நான்கு மாதங்களில் நிலைமை மோசமாகத்தான் இருக்கும். ஆகவே இதைத் தடுப்பதற்கு எல்லாக் கட்சிகளையும் சேர்த்து ஒரு போர்க் கால நடவடிக்கை போல் நான்–ப்ரொடெக்டிவ் பர்பஸஸ்—அதாவது சினிமா, அலங்காரம், வீட்டு உபயோகம் இவைகளுக்கான மின்சக்தி விநியோகத்தைக் குறைத்து தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் அதிகப்படியான மின்சக்தியைக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்தில் இருந்து பேசவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: No power is as costly as 'no power' என்பதாக பாபா சொன்னதாக ஆளுநர் அவர்களது இந்த உரையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது தெரு விளக்குகளுக்காவது பயன் தரக்கூடிய சமயநல்லூர் பிளாண்ட் ஏன் மூடப்பட்டது?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இப்போதே மணி ஒன்றேமுக்கால் ஆகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் உரையை முடித்தவுடன் ஏதாவது விளக்கம் கேட்க வேண்டுமென்றால் கேட்கலாம்.





திரு. கே. டி. கே. தங்கமணி: கோவையில் இருந்து வந்திருக்கக் கூடிய தந்திகளில் கோவையைச் சுற்றி பம்பு செட்டுகளுக்கு 4 மணி நேரம் மின்சார சப்ளை கிடைக்கிறது என்றும், அதற்கு அப்பால் இருக்கிற குக்கிராமங்களில் எல்லாம் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் கூடக் கிடைக்கவில்லை, எப்போது கிடைக்கிறது என்றும் தெரியாமல் இருக்கிறது என்பதாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், அமைச்சர் அவர்கள் எசென்ஷியல் சர்வீசுகளுக்கு 7 லட்சம் யூனிட் கொடுக்கிறோம், அதில் கட்டுப்பாடு இல்லை என்று சொல்கிறார். ஆனால் ஆஸ்பத்திரி ஆப்பரேஷன் தியேட்டர்களில் திடீர் திடீர் என்று மின்சப்ளை போய்விடுவதுபற்றி எங்களுக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இது பாயின்ட் ஆப் ஆர்டரா? புகார்கள் வருகின்றன என்றால். அதற்கு ஆதாரங்களைக் காட்ட வேண்டாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது எலெக்ட்ரிசிடி ஃபெயில்யூர். அமைச்சர் குறிப்பிட்டது எலெக்ட்ரிசிடி கட். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சமயம் வரும்போதெல்லாம் திரு. தங்கமணி அவர்கள் சமயநல்லூரைப்பற்றி பேசாமல் இருப்பது இல்லை. இப்பொழுதும் சொன்னார்கள். எனக்கும் இப்போது சமயம் வந்தது. நேற்று அவர் சொன்ன ஒரு விஷயத்திற்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். 225 லட்சம் யூனிட் மின்சாரம் தேவைப்படுகிற நேரத்தில் 1 லட்சம் யூனிட் உற்பத்தி செய்யக்கூடிய சமயநல்லூர் மின்சார நிலையத்தை மூடலாமா என்றார். இந்த ஒரு லட்சம் யூனிட் பெறுவதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 55 லட்சம் நட்டத்திற்கு நாம் ஆளாக வேண்டியவர்களாக இருந்தோம். அதனால் தான் முன்பு இருந்த அரசாங்கம் இதைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. அந்தக் குழுவினர்தான் அதைப் பரிசீலனை செய்து அதை விற்றுவிடலாம் என்று தெரிவித்த தன்பேரில் விற்பதற்கு டெண்டர் கோரப்பட்டது. தனிப்பட்டவர்களிடம் விற்காமல் இன்னொரு மாநிலத்திற்காவது அளிக்கக்கூடாதா

என்றார்கள். நேற்றையதினம் திரு. தங்கமணி அவர்கள் பஞ்சாப் மாநிலம் 42 லட்சத்திற்கும் அதிகமாக வாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தார்கள் ஏன் அவர்களுக்கு விற்று இருக்கக்கூடாது என்று குற்றம் சாட்டிப் பேசினார்கள். அப்போதே மறுத்தேன். மறுத்த வுடன், "நீங்கள் எல்லாம் குற்றமற்றவர்கள், நல்லவர்கள்" என்று கேலிப் பேச்சாகப் பேசி நேற்றும் சரி, இன்றும் சரி முடித்து விட்டார்கள். 9—7—1970-ல் பஞ்சாப் மின்வாரியம் எழுதிய கடிதம் இதுதான்.

The offer of Rs. 40 lakhs was made on behalf of our Board. However, as a matter of compromise, an agreed figure of Rs. 42 lakhs had been adopted subject to conformation by the Board on either side.

என்பதாக முதலில் 40 லட்சத்திற்குக் கேட்டவர்கள் பிறகு 42 லட்சத் திற்கு ஒத்துக்கொண்டார்கள். பின்னர் 6—8--1971-இல்

I regret to say the Board gave a second look to your offer and have decided not to proceed with it further.

என்பதாக எழுதிவிட்டார்கள். இது அவர்களது இரண்டாவது கடிதம். இதைவிட இவர்களுக்கு என்ன விளக்கத்தை நான் அளிக்க முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, அதை நான் அந்த அளவோடு விட்டுவிடுகிறேன்.

DR. H. V. HANDE: The Hon. Chief Minister said that the report had asked the Government to sell the Samayanallur plant. It is not so. I shall quote from the report.

"The possibility of utilising the equipment and building after closure should be examined."

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரே ஒரு விஷயம் என்ன வென்றால் 59 லட்சத்திற்கு விற்றதாகச் சொல்கிறார்கள். ப்ளோர் ப்ரைஸ் 1 கோடி என்று வைத்து விற்க முயன்றிருந்தால் .........

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒருவேளை திரு. தங்கமணி அவர்கள் அமைச்சராக இருந்திருந்தால் அப்படி 1 கோடி ப்ளோர் ப்ரைஸ் என்று வைத்து நல்ல விலைக்கு விற்றிருக்கக்கூடும். அவரது



வியாபாரத் திறமை எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் புக் வால்யுவை சட்டப்படி நிர்ணயித்து விற்பனை செய்துவிட்டோம். எங்களால் சட்டப்படி நடக்க முடியுமே தவிர தங்கமணி சொன்னது போல குத்துமதிப்பாக வைத்து வியாபாரம் செய்ய இந்த அமைச்சர் களால் முடியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் மின்சாரப் பற்றாக் குறை ஏன் ஏற்பட்டது என்பதற்கான விளக்கங்களைத் தரும்பொழுது —நமக்கு இந்த நிலைமை ஏற்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் தென்மேற்குப் பருவ மழை சரிவர இல்லாததுதான் என்பதை உணர வேண்டும். குந்தா, பரம்பிகுளம், ஆளியாறு, பைக்காரா ஆகிய நீர் நிலையங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துவிட்டது. எந்த அளவுக்குக் குறைந்தது என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். சென்ற ஆண்டு குந்தாவில் 87,860 லட்சம் கன அடி தண்ணீர் இருந்தது. நடப்பு ஆண்டில் 1,550 லட்சம் கன அடி ஆகக் குறைந்திருக்கிறது. பரம்பிக்குளம்-ஆளியாற்றில் சென்ற ஆண்டு 54,240 லட்சம் கன அடியாக இருந்தது நடப்பு ஆண்டில் 15.5 லட்சம் கன அடியாகிவிட்டது. பைக்காராவில் சென்ற ஆண்டு நீர் அளவு 29,400 லட்சம் கன அடி. நடப்பு ஆண்டில் அங்குள்ள நீரளவு 5,270 லட்சம் கன அடி. ஆக, 1972-ல் இந்த மூன்று நிலையங்களிலும் நாள் ஒன்றுக்கு சுமார் 80 லட்சம் யூனிட் மின்சாரம் தயாரிக்க முடிந்தது. 1973-ஆம் ஆண்டு மார்ச்சில் நாள் ஒன்றுக்கு 5 லட்சம் யூனிட் மட்டும்தான் உற்பத்தி செய்ய இயலும். டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். மற்றவர்களும் கேட்டார்கள்.

இதையே நம்பியிராமல் நாம் அனல் மின்சாரம், அணு மின்சாரம் ஆகியவைகளிலே போதிய கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டாமா, அதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டாமா, இரண்டாவது நெய்வேலிச் சுரங்கத்தைத் துவங்கு வதற்கு வற்புறுத்தியிருக்க வேண்டாமா, என்று, வேண்டாமா என்று கேட்பதிலிருந்து இந்த அரசு எதையும் செய்யவில்லையென்று அவர்கள் சொல்வதாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

1965-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டுமென்று அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள், அப்பொழுது பிரதம அமைச்ச ராக இருந்த திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அப்பொழுது மத்திய அரசு இந்த அரசுக்கு அளித்த

பதில், "தென் பிராந்தியத்தில் செயல்படப் போகும் பல மின்சாரத் திட்டங்கள் அளிக்கும் மின்சக்தியே போதுமானது" என்பது. பிறகு, இந்த அரசு 1968-ம் ஆண்டு நவம்பரில் மத்திய அரசினுடைய திட்டக் குழுவுக்குக் கொடுத்த ஐந்தாண்டுத் திட்ட வரைவில், கல்பாக்கம் அணு மின்சார நிலையம் 200 மெகா வாட்டிலிருந்து 400 மெகா வாட்டாக உயர்த்தப்பட வேண்டும் என்றும், தூத்துக்குடியிலே ஒரு அணு மின் நிலையமும், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கமும் ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த அரசு வலியுறுத்தியுள்ளது. 1968-ஆம் ஆண்டு நவம்பரிலே திட்டக் குழுவுக்குக் கொடுத்த ஐந்தாண்டுத் திட்ட வரையிலே நாம் இதை வலியுறுத்தியிருக்கிறோம். இந்த வரைவு சட்டப்பேரவையிலே வைக்கப்பட்டதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அதைத் தொடர்ந்து 1969-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் தேதி நான், நமது தலைமையமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதிலே குறிப்பிட்டேன்.

"The development of a second mine cut at Neyveli has been engaging the attention of both the Central and State Governments for some time now. This is another case of a project, the feasibility and need of which has been fully established. I would like to draw your attention to the need to provide for this too in the Fourth Plan".

என்று எழுதினேன். அதற்குப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில் என்ன குறிப்பிட்டார்கள் என்றால்,

"The continuing constraint on our resources makes this doubly difficult. When the time comes to decide on the creation of additional steel capacity, the points made in your letter will naturally be taken into account. On similar considerations, a decision on the second mine cut at Neyveli, as you will appreciate, will also have to wait."

என்று பிரதமர் அவர்கள் எனக்குப் பதில் எழுதினார்கள்.

அது மாத்திரமல்ல, நான் இன்னும் ஒன்றையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன், மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு. இதே அவையில், 1969-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26-ஆம் நாள், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய வரைவு, நம்முடைய



சட்டமன்றத்திலே விவாதித்து, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்திலே என்ன குறிப்பிட்டோம்? மத்திய அரசுக்கு அந்தத் தீர்மானத்தை அனுப்பி வைத்தோம்.

"In particular, this House urges that the Government of India should proceed immediately with the implementation of the following Central Sector Projects, the economic viability and technical feasibility of which have been well established :—

1. Salem Steel Plant ;
2. Sethusamudram Project;
3. Second mine-cut at Neyveli;
4. Expansion of the installed capacity of the Kalpakkam atomic energy Plant.

என்ற இந்தத் தீர்மானத்தை இதே சட்டமன்றப் பேரவையிலே நாம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம்.

அது மாத்திரமல்ல, 1970-ஆம் ஆண்டு தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பேசியபொழுது, நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். 1972-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திரு. மோகன் குமாரமங்கலம், திரு. சி. சுப்பிரமணியம், டாக்டர் கே. எல். ராவ், ஆகியோர்களுக்கு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதான அவசியத்தை வலியுறுத்தி வற்புறுத்தி அரசின் சார்பிலே நான் ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பதில் அளித்த திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் இரண்டாவது நிலக்கரி சுரங்கத்தைக் குறித்து பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று பதில் கடிதத்திலே தெரிவித்திருக்கின்றார்.

மத்திய திட்ட அமைச்சர் திரு. தார் அவர்கள் 1972-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இங்கே வந்தார்கள். திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், அக்டோபர் மாதத்திலே முதலமைச்சருக்கு அவருடைய "பவரை"ப் பற்றித்தான் கவலை இருந்ததே தவிர, இந்த "பவரை"ப்பற்றிக் கவலை இல்லை என்று. அதற்காகத்தான் நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன். திரு. தார் அவர்கள் அக்டோபர் மாதம் இங்கே வந்தபொழுது, அவரிடத்திலே கொடுக்கப்பட்ட அறிக்கையிலே நான் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தேன் ;

"In respect of Neyveli, it is found, that the quantity of lignite mined, is not adequate, to utilise the capacity already installed, due to various factors including in particular the adverse ore-overburden ratio. It is learnt, that some immediate steps are under examination, to enable Neyveli Lignite Corporation, to run the plant at least to 400 M.W. capacity. In addition to such steps, work on opening the second mine cut has to be initiated early, in order to utilise the capacity already created, and also to tide over the perennial power shortage."

என்று அந்த அறிக்கையிலே குறிப்பிட்டு திரு. தார் அவர்களிடத்திலே அதைப்பற்றி நீண்டநேரம் நாங்கள் கலந்துரையாடியிருக்கிறோம். மத்திய அரசு ஒன்றை மறந்துவிடக் கூடாது. தொழில் வளர்ச்சியிலே மாநிலங்கள் முன்னேற வேண்டுமென்று திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்தில் அந்தத் தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமான மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே மத்திய அரசு போதிய அக்கறை செலுத்தவில்லையென்பதுதான் என்னுடைய குற்றச் சாட்டாகும். மத்திய அரசைக் கேட்கவில்லை, கேட்கவில்லை என்று கூறிவிட்டால் மாத்திரம் போதாது. மாநில அரசு தானாக முன்வந்து இங்கே ஒரு மின்சார உற்பத்தி சாதனத்தை உருவாக்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறதாயென்பதை மாநில அரசைக் குற்றம் சாட்டுகிற நேரத்தில், தொழில் அதிபர்களானாலும் அல்லது மாண்புமிகு மாற்றுக் கட்சி உறுப்பினர்களானாலும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

இன்றைக்கு போடப்பட்டிருக்கின்ற திட்டங்களின்படி, 1983–84-லே கூட நம்முடைய மாநிலத்திற்கு 1,500 மெகாவாட் உற்பத்தி பற்றாக்குறையாக இருக்கும் என்றுதான் கணக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. நாம் போட்டிருக்கிற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிவிட்டாலும்கூட, வளரக்கூடிய தொழில் உற்பத்தியில் 1983–84-ம் ஆண்டு 1,500 மெகாவாட் குறைவானதாகத்தான் நம்முடைய மின் உற்பத்தி இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவேதான் மத்திய அரசு இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்யவேண்டும்.

ஆளுநர் உரையிலே, நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதை இப்பொழுது ஆரம்பித்தாலும் முடிக்க 8 ஆண்டுக்காலம் ஆகும் என்று குறிப்பிட்டதை அம்மையார் அவர்கள் கேலியாகச்





சொன்னார்கள். இப்பொழுது ஆரம்பித்தாலும் 8 ஆண்டுக்காலம் ஆகும், அதுவரையிலே இந்த மின் வெட்டினால் பாதிக்கப்படுபவர்களுடைய கதி என்ன என்று கேட்டார்கள். இப்பொழுது ஆரம்பித்தால் 8 ஆண்டுக்காலம் ஆகும் என்று சொன்னதற்குக் காரணம், 1965-லே இந்த அரசு நினைவூட்டியதை—பக்தவத்சலம் அவர்களுடைய காலத்திலே—இப்பொழுதே ஆரம்பித்திருந்தால் இப்பொழுது இந்தக் கஷ்டம் நமக்கு ஏற்பட்டு இருக்காது என்பதைச் சொல்லத்தான் கவர்னர் அவர்கள், இப்பொழுது ஆரம்பித்தாலும் 8 ஆண்டுக்காலம் ஆகும் என்று சொல்லியிருக்கின்றார்.

1964-ல், 1965-ல், பிறகு 1967-ல் நாம் நினைவூட்டிய நேரத்திலேயெல்லாம், பலமுறை வற்புறுத்திய நேரத்திலெல்லாம் மத்திய அரசு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்திற்கு ஒப்புதல் அளித்திருக்குமேயானால், கொஞ்சம் காத்திருங்கள் என்று சொல்லாமல், பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள் என்று கூறாமல், இப்பொழுது இருக்கிற நிதிக்கஷ்டத்திலே இதைப்பற்றி யோசிக்க முடியாதென்று தட்டிக் கழிக்காமல், மத்திய அரசு இப்படிப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கு அனுமதி வழங்கியிருக்குமேயானால்—இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்காது என்பதற்காகத்தான் நெய்வேலி இரண்டாவது சுரங்கம் உருவாவதற்கு இப்பொழுது தொடங்கினாலும் 8 ஆண்டுக் காலம் ஆகும் என்று ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆகவே, மின்சாரத்திலே மேலும் வெட்டு வருவதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். அதை எப்படி யோசிக்கப்போகிறோம், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசிக்கப் போகிறோமா என்று திரு. பழனிச்சாமி அவர்கள் கேட்டார்கள். இப்போது அனைத்துக்கட்சித் தலைவர்களுடைய அபிப்பிராயங்களை இந்த மாமன்றத்திலே பெற்றிருக்கிறோம். பேரவையிலே பெற்றுக்கொண்டிருக்கிறோம். மேலவையிலேயும் அனைத்துக்கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களையும் பெறுகின்ற வாய்ப்பை உடையவர்களாக இருக்கிறோம். இன்னும் எதிர்பாராமல் உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, போர்க்கால வேகத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற சங்கடம் வருமென்றால், அந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரையும் அலட்சியப்படுத்திவிட்டு இந்த அரசு தன்னுடைய காரியங்களிலே செல்லாது என்பதை மாத்திரம் நான் இந்த அவைக்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 12

நம் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்வேன், தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வேன். இந்த நெருக்கடியான நிலை நாமாக வரவழைத்துக் கொண்டது அல்ல. இயற்கையாக ஏற்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட நிலைமை வருமென்று தெரியாததாலோ என்னவோ மத்திய அரசும் நாம் வேண்டுகோள் விடுத்த நேரத்திலேயெல்லாம் காலதாமதம் செய்துவிட்டது. மாநில அரசு தன்னுடைய வேண்டுகோளை வைக்க என்றைக்கும் தவறியதில்லை. சுட்டிக் காட்டவும் தவறியதில்லை; நிலைமையை விளக்கத் தயங்கியதில்லை. அப்படியிருந்தும் எதிர்பாராத சூழ்நிலை ஒன்று ஏற்பட்டிருக்கிற நேரத்திலே அனைவரும், எல்லாக் கட்சிக்காரர்களும், பொதுமக்களும், தொழிலாளர்களும், அனைவரும் கலந்து அரசோடு இந்தக் காரியத்திலே ஒரு தியாகத்திற்குத் தயாராகத்தான் இருக்க வேண்டுமென்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு பிரச்னைகள் இந்த மன்றத்திலே பேசப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் நான் தனித்தனியாகப் பதில் சொல்வதற்கான நேரம் இல்லையென்றே கருதுகின்றேன். பொதுவாக, திண்டுக்கல் இடைத்தேர்தலைப் பற்றிக் கடைசியாகப் பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் உட்பட பல மாற்றுக் கட்சி உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

2-00 பி.ப. திண்டுக்கல்லிலே யார் வெற்றிபெறுவார்கள், யார் தோற்பார்கள், தேர்தல் முடிவு என்ன என்பதைப்பற்றியெல்லாம்கூட இங்கே பேசி முடித்து ஆகிவிட்டது. நான் அங்கே செல்ல விரும்பவில்லை. (அங்கே என்றால் திண்டுக்கல்லுக்கு அல்ல.) இங்கே அந்தப் பிரச்னைக்குச் செல்லவில்லை. திண்டுக்கல் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிடும், அங்கே மக்கள் சக்தியே கிடையாது தி.மு.க.வுக்கு என்று பேசப்பட்ட காலம் போய் இப்பொழுது திடீரென்று, திண்டுக்கல்லிலே ஏதோ கள்ள ஓட்டுச் சேர்த்துவிட்டார்கள், கள்ள ஓட்டுச் சேர்த்துவிட்டார்கள் என்று பத்திரிகைகளிலே வருவதைப் பார்க்கிற நேரத்தில் அங்கே இருக்கின்ற ஒரு மறவர் குலத்துத் தோழனைச் சந்தித்தால் அவர் ஆம், கள்ள ஓட்டுத்தான் சேர்த்து இருக்கிறோம் என்று சொன்னார். அந்த சிலேடை எனக்கு முதலிலே புரியவில்லை. பிறகுதான் எனக்குப் புரிந்தது. பிறகு நானே சிரித்துக்கொண்டேன்; அதை நான் இந்த அவையிலே விளக்குவது நல்லதல்லயென்கிற காரணத்தினால்—ஏதோ 50 ஆயிரம் ஓட்டு, ஒரு லட்சம் ஓட்டு சேர்க்கப்பட்டுவிட்டது என்றெல்லாம் கூறப்பட்டது.



1973 பிப்ரவரி 12]

திருமதி த. ந. அனந்தநாயகி : கள்ளர்கள் ஓட்டுக்கும் கள்ள ஓட்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டிற்கும் சிலேடை பேசி அந்த இனத்தின் பெருமையைக் குறைக்கக்கூடிய அளவுக்குப் பேசுவது நியாயமல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த இனமே என்னை வாரிசாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள், அந்த இனத்தோடு கலகம் மூட்டுகிற முயற்சியில் தோல்வியடைந்துவிடுவீர்கள். 1971-ஆம் ஆண்டு சுருக்கமுறையில் வாக்காளர் பட்டியலைத் திருத்திய பின் திண்டுக்கல் தொகுதியில் வாக்காளர்களுடைய கணக்கு 6,31,308 ஆகும். இராசாங்கம் அவர்கள் மறைந்ததும் இன்றைக்கு அதிகாரிகள் சென்று வாக்காளர்களைப்பற்றிய விவரங்களைச் சேகரிப்பார்களே அந்த முறைப்படி சேர்ந்துள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 5,666 ஆகும். அன்று இருந்த வாக்காளரின் எண்ணிக்கை 6,31,308. ஆனால் இப்பொழுதிருக்கிற நிலைமை 6,36,974. ஆக, 5,666 தான் அதிகம். பிறகு தொகுதிவாரியாக வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

திருமங்கலம் சட்ட மன்றத் தொகுதியில் பிறகு சேர்க்கக் கோரிய வாக்காளர்கள் 1,180; உசிலம்பட்டி சட்ட மன்றத் தொகுதியில் 988; நிலக்கோட்டை சட்ட மன்றத் தொகுதியில் 1,574; சோழவந்தான் சட்ட மன்றத் தொகுதியில் 3,489; திண்டுக்கல் சட்ட மன்றத் தொகுதியில் 2,438; ஆத்தூர் சட்ட மன்றத் தொகுதியில் 1,893; மொத்தம் பிறகு சேர்க்கக் கோரிய வாக்காளர்களின் எண்ணிக்கை 11,562 ஆகும். இதிலே, ஆட்சேபம் தெரிவித்து வந்த மனுக்கள் 303. இதுதான் இருக்கின்ற விவரம்.

இந்த நிலையில் 50 ஆயிரம் சேர்த்துவிட்டார்கள், 1 லட்சம் சேர்த்துவிட்டார்கள், மத்தியத் தேர்தல் அதிகாரியே வந்து தேர்தல நடத்த வேண்டும், பயங்கர ஊழல்கள் நடந்துவிட்டன, பெரிய போராட்டம் நடத்துவோம், கிடுகிடு போராட்டம் நடத்துவோம் என்றெல்லாம் சொல்வது—உள்ளபடியே தமிழ்நாட்டிலே நாம் வளர்த்து வருகின்ற ஒரு அரசியல் மரபுக்கு நாமே இழுக்குத் தேடுகிற சூழ்நிலையை உண்டாக்குகிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள் பேசும்பொழுது திண்டுக்கல்லில் பெரிய சூது நடந்து

விட்டது என்று சொன்னார்கள். திண்டுக்கல்லில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 73,862. வாக்காளர்களாகச் சேருவதற்கு மனுக் கொடுத்தவர்களின் எண்ணிக்கை 1,437, திண்டுக்கல் நகரம் முழுவதும். 15-வது வார்டில் உள்ள வாக்காளரின் எண்ணிக்கை 2,158. வாக்காளராகச் சேர மனுக்கொடுத்தவர்களின் எண்ணிக்கை 23. அதிலே நிராகரிக்கப்பட்டது 12. புதிதாகச் சேர்க்கப்பட்டது 23-இல் 11 தான். 143–பி—வார்டில் 5 குடிசைகள். இவைகளிலிருந்து வந்த மனுக்கள் 11. நிராகரிக்கப்பட்டவை 2. 143–சி, 1971-ஆம் ஆண்டின்படி 4 ஓட்டுகள், அருகில் உள்ள குடிசைகளில் புதிதாகச் சேர்த்த ஓட்டு 12. ஆகவே, எந்த ஒரு வீட்டிலும் 20 வாக்காளர்கள் இல்லை. இன்று எனக்கு வந்த கடிதப்படி 4-ஆம் நெம்பர் வீடு என்று நான்கு வீடுகள் இருக்கின்றனவாம். நெம்பர் போட்டவர்கள் நான்கு வீடுகளுக்கும் 4 என்றே போட்டிருக்கிறார்கள். அல்ல, 5 வீடுகளாம்; அதிலே ஐந்து வீட்டில் 4 அல்லது 6 பேராக இந்த 20 ஓட்டுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்திலேயே பார்த்தால் அதிலே ஒரு 11 ஆயிரம், இதிலே ஒரு 5 ஆயிரம் ஆக மொத்தம் 16 ஆயிரம்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. 2-ம் தேதி வரையில் காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆட்சேபம் தெரிவிப்பதற்காக, அதையும் ஒரு வாரம் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டு தேர்தல் அதிகாரி சிந்தித்துக் கொண்டிருக்கிறாராம். எங்களுக்கு அதைப்பற்றி ஆட்பேசனை இல்லை. ஒரு வாரம் அல்ல, இரண்டு வாரங்கள்கூட கொடுக்கலாம். நாங்கள் கவலைப்படவில்லை, அதற்குள்ளாக ஏதோ சூது நடந்துவிட்டது; சதி நடந்துவிட்டது என்று ஏன் பேச ஆரம்பிக்க வேண்டும்? நாம் பொறுப்புள்ளவர்கள் அல்லவா?

நாகர்கோவில் நாடாளுமன்றத் தேர்தலில், 1967-ம் ஆண்டு பிப்ரவரி பொதுத் தேர்தலில் இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 4,74,210. 1969-ம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலின்போது 5,32,089 வாக்காளர்கள். அதிகமாகச் சேர்க்கப்பட்ட வாக்காளர்கள் 57,879 ஆகும். இப்படிச் சேர்ந்தது யார்? சேர்த்தது யார்? நாங்கள் யாராவது அதைப்பற்றி மூச்சுவிட்டோமா? அதைப்பற்றிப் பேசினோமா? ஏன் திண்டுக்கல் தொகுதியைப்பற்றி இந்த அளவுக்கு ஆரம்பத்திலேயே தவறான கருத்துக்களைப் பரப்ப வேண்டும்?

அதேபோல்தான் தென்காசி சட்டப் பேரவைத் தொகுதிக்கு 1967-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தேர்தல் நடைபெற்ற பொழுது இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 85,611. 1968-ஆம் ஆண்டில் நடைபெற்ற இடைத் தேர்தலின்போது வாக்காளர்கள்



87,057. அதிகமாகச் சேர்க்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1,500, ஒரு சட்டசபைத் தொகுதிக்கு. இதைப்போல்தான் திண்டுக்கல் தொகுதியிலும் ஒரு சட்டசபைத் தொகுதிக்கு 2 ஆயிரம் அல்லது ஆயிரம் என்ற அளவுக்கு அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள். தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குத் தேர்தல் நடைபெற்ற பொழுதும் 5 அல்லது 6 ஆயிரம் பேர்கள்தான் அதிகமாகச் சேர்க்கப்பட்டார்கள். அவசரமாகத் தேர்தல் அப்பொழுது நடத்தப்பட்ட காரணத்தினால் இந்த நிலைமை. இல்லாவிட்டால் இன்னும் 5 ஆயிரம் அதிகமாகியிருக்கலாம். ஆனால் அவர்கள் எல்லாம் சொன்னார்கள், ஒவ்வொரு முறையும் வாக்குகளைச் சேர்த்துவிட்டார்கள்; உள்ள வாக்குகளை விலக்கி விட்டார்கள்; மை வைத்து விட்டார்கள் என்று.

வேடிக்கை என்னவென்றால் 1971-ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பிறகு, கூட்டணிக் கட்சிகளைப் பார்த்து, மை வைத்து ஜெயித்து விட்டார்கள் என்று சொன்ன நம்முடைய பழைய காங்கிரஸ் நண்பர்களை மறந்துவிட்டு, தங்கமணியும் மை வைத்து ஜெயித்தார் என்றுதான் திரு. பொன்னப்ப நாடார் சொன்னார்—பொன்னப்ப நாடார் என்றால் அவருடைய கட்சி சொன்னது—என்னுடைய அருமை நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும் மை வைத்து ஜெயித்தார் என்றுதான் காங்கிரஸ் கட்சி சொன்னது. நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியாது. திருமதி அனந்தநாயகி அம்மையார் இங்கே சொல்லிவிட்டு பிறகு அங்கே போய் உட்கார்ந்து கொண்டார்கள். மை வைத்து ஜெயித்துவிட்டார்கள் என்று அனந்தநாயகி அம்மையார் சொன்னார்கள். இப்பொழுது மை வைத்து ஜெயித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கட்சியிலேயே அவர்கள் இருக்கின்றார்கள். நான் அதை வரவேற்கின்றேன். ஆகவே, ஒவ்வொரு தேர்தலிலும், அந்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியாமல் இப்படிப்பட்ட ஒரு தவறான போக்கிலே நாம் ஈடுபடுவது ஜனநாயகத்திற்கு ஒரு நல்ல ஆரோக்கியமான மார்க்கத்தைப் பெற்றுத்தராது என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேனேயல்லாமல் வேறல்ல.

செஞ்சியிலே பெருமாள் நயினாரைப்பற்றிச் சொன்னார்கள். அவர் உர மூட்டைகளைக் கடத்திச் சென்று இன்னொரு இடத்திலே வைத்து விட்ட காரணத்தினால், அந்த மூட்டைகள் கடத்தி வைக்கப்பட்ட இடம் போலீசாரால் சீல் வைக்கப்பட்டதென்றும், அவர்மீது இருக்கின்ற வழக்கிற்காக அவர் கைது செய்யப்படாத நிலையில் அவரே

வந்து சரண் அடைந்துவிட்டார் என்றுதான் செய்திகள். மேலும் தகவல்கள் எனக்குக் கிடைத்த பிறகு வேண்டுமானால் அதைப்பற்றிச் சொல்கிறேன். வழக்கு இருக்கிற காரணத்தால் விவரமாகச் சொல்ல நான் விரும்பவில்லை.

திரு. சுவாமிதாஸ் அவர்கள்—கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்—ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அங்கே தச்சம்பறம்பு என்ற ஒரு ஊரில் 3½ லட்சம் ரூபாய் அளவுக்குத் தேவையின்றி செலவு செய்துவிட்டார்கள். அது, முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் தலைவருடைய ஊர். ஆகவே செலவு செய்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். நிலைமையென்னவென்றால் இந்திய நாட்டினுடைய விடுதலை வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்காகத் தமிழ்நாட்டில் இருக்கின்ற 374 ஊராட்சி ஒன்றியங்களும் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளவர்கள் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அதை நல்ல கிராமமாகச் செம்மையான கிராமமாக தூய்மையான கிராமமாக ஆக்குவதற்கு முனைய வேண்டுமென்று இந்திய அரசு மாநில அரசின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுத்தது. அதற்கு ஏற்ப தமிழ்நாட்டில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் 374 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. எப்படி அங்கே தச்சம்பறம்பு என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டதோ, அதைப்போலவே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்பது கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் என்றே நான் கருதுகிறேன். அப்படி அகஸ்தீசுவரத்திலே, முன்னேற்றக் கழகத்தின் தலைவர் இல்லாவிட்டாலும், அங்கேயும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னார் 3 லட்சம் ரூபாய் திட்டம், 44 ஆயிரம் ரூபாய் செலவாகி விட்டது என்று. உண்மை என்னவென்றால் திட்டம் 77,000 ரூபாய்தான். இன்னும் மத்திய அரசிடமிருந்து அதுபற்றிய தாக்கீது எதுவும் வராத காரணத்தினால் அந்த வேலையே ஆரம்பிக்கப்படவில்லை, எதுவும் செலவு செய்யப்படவில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தச்சம்பறம்பு என்ற கிராமத்தில் 235 பேர்கள்தான் வாக்காளர்களாக இருக்கிறார்கள். அது ஒரு சிறு கிராமமாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்த சேர்மன் இருக்கிறார் என்ற காரணத்தினால்தான் அதைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. 10



ஆயிரம் பேர்களுக்கு மேல் இருக்கிற பெரிய கிராமங்கள் எல்லாம் இருக்கிறபோது, ஏன் இதைத் தேர்ந்தெடுத்தார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தக் கிராமத்தில் 235 பேர்கள் இருப்பதாகத் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் எனக்கு வந்திருக்கிற தகவல் 2,074 பேர்கள். எது சரியென்று பிறகு சரிபார்த்துக் கொள்கிறேன். அங்கே மக்கள் தொகை 2,074 பேர்கள் என்றும், அதிலே 80 சதவிகிதம் பேர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கின்றனர் என்றும் தகவல் வந்திருக்கிறது. நான் இப்போதே வாதிட விரும்பவில்லை: எது சரி என்று நானும் விசாரிக்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் விசாரிக்கவேண்டும். பிறகு கிடைக்கும் தகவலை ஒருவரோடொருவர் பரிமாறிக்கொள்வது நல்லது. 42 ஆயிரம் ரூபாய் செலவாகிவிட்டது என்று சொன்னார்கள். இன்னும் ஒரு பைசா கூடச் செலவாகவில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. தங்கமணி அவர்கள், இங்கே சோஷலிசத் திட்டங்கள் எதுவும் நிறைவேறவில்லை, எல்லாத் திட்டங்களையும் "கேரளாவில்தான் நிறைவேற்றுகிறோம், இங்கே தனியார்களை வளர்க்கிறீர்கள்" என்றெல்லாம் சொன்னார்கள். பஸ்களைத் தேசிய மயமாக்கிய நேரத்திலேகூட ஏதோ டி.வி.எஸ்.-க்குக் கொடுத்ததைவிட ஏ.பி.டி.-க்கு அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். டி.வி.எஸ். கம்பெனியின் பஸ்கள் "பார்க்கோ" இயந்திரங்கள். ஆனால் ஏ.பி.டி.-யின் இயந்திரங்கள் உயர்ந்தவைகள். பென்ஸ் வண்டிகள். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று, டி.வி.எஸ்.க்குக் கொடுத்த இழப்பீடு 1,25,42,741 ரூபாய். அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்று சொல்லக்கூடிய ஏ.பி.டி.-க்குக் கொடுத்து இருப்பது 56,82,378 ரூபாய். 346 வண்டிகள் டி.வி.எஸ்.-இடமிருந்து எடுக்கப்பட்டன. அந்த 346 வண்டிகளில் "பார்க்கோ" வண்டிகள் அதிகம். ஏ.பி.டி.-யிடமிருந்து எடுக்கப்பட்ட 112 வண்டிகளில் பென்ஸ் வண்டிகள் பெரும்பான்மையான வண்டிகள். இந்த விளக்கத்தை நான் அவர்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ஒரு கோடி 25 லட்சம் ரூபாயில் பிராவிடண்ட் ஃபண்ட் மற்றவைகள் போக ஒரு கோடிக்கும் கம்மியாகக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேரள மாநிலத்திலேதான் பொதுத்துறை வேகமாக வளர்கிறது, தனியார் துறை இல்லை, ஆனால் இங்கேதான் தனியார் துறை வளர்க்கப்படுகிறது என்ற போக்கிலே சில கருத்துக்களைச் சொன்னார்கள். கேரளாவில் பிர்லாவின் தொழிற் சாலை வர வேண்டுமென்று வரவேற்பு கொடுத்துவந்து அங்கே பிர்லாவின் தொழிற்சாலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அதுமட்டுமல்ல, "சில்க் பேக்டரி" ஒன்றை நடத்தி வருவதும் தனியார் நிறுவனம்தான். டியூப் லைட் செய்கின்ற Toshiba-Anand என்ற பெயரில் ஒரு தனியார் நிறுவனம் சமீப காலத்தில் தொழில் தொடங்கி நடத்தி வருகிறது என்பதையும் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அது மாத்திரமல்ல, "பிரிமீயர் டயர்ஸ்" என்ற ஒரு குஜராத்தி நிறுவனம் எர்ணாகுளத்தின் அருகே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. கேரளத்தில் பல கயிறு தொழிற்சாலைகள் தனியார் துறையில்தான் இப்போதும் உள்ளன. எனவே, கேரளாவில் தனியார் துறை முழுவதையுமே தேசிய மயமாக்கிவிட்டார்கள் என்று கூறுவது பொருத்தமுடையதல்ல என்பதற்காகத்தான் நான் இதை எடுத்துச் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் பேச்சிலே பெரும் பகுதி, ஆளுங்கட்சி இரண்டாகப் போய்விட்டது என்பதைப்பற்றிய கவலையை உள்ளடக்கியதாக இருந்தது. மற்றக் கட்சிகள் இரண்டாகப் போனபோது நாங்கள் போய்ச் சேரவில்லை, ஆனால் ஆளுங்கட்சி இரண்டாகப் போனபிறகு நாங்கள் ஏன் போய்ச் சேர்ந்தோம் தெரியுமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். இங்கே ஆளுங்கட்சி இரண்டாக ஆகிவிட்டது, ஆகவே போய்ச் சேர்ந்தோம் என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அதிர்ஷ்டக்காரர், அவர்கள் இங்கே வராவிட்டாலும், அவரைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதற்கு அவருடைய கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் இங்கே வராவிட்டாலும், அவ்வளவு பேருடைய பொறுப்பையும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக்கொண்டு, எம். ஜி. ஆர். அவர்களுடைய சிலாக்கிய குணங்களை, அவருடைய தியாகத்தை, அவருக்கு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கின்ற சக்தியை, பெருமையை, செல்வாக்கை இங்கே எடுத்துச்சொன்னதற்காக உள்ளபடியே என்னுடைய பழைய நண்பர் என்ற பெயரால் எம். ஜி. ஆர். அவர்களின் சார்பாக



என்னுடைய பணிவன்பான நன்றியைத் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக் கிறேன்.

எவ்வளவோ அதிகமாகச் சொல்லியிருக்கின்றார்கள். காந்திக்குக் கூட இவ்வளவு கூட்டம் வந்ததில்லை என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசியதை நான் பத்திரிகைகளில் படித் தேன். என்னென்னவோ நடந்து விட்டது என்றெல்லாம் சொன் ஞர்கள். இந்த இரண்டு, மூன்று மாத காலங்களில் நாடே அல்லோகல்லோலப் பட்டுவிட்டது என்று சொன்னார்கள். நான் இல்லை என்று அதை மறுக்கவில்லை.

அன்றைக்குப் பேசிய திரு. சுவாமிதாஸ் அவர்கள் அழகாகக் குறிப் பிட்டார்கள். அவர்கள் ஏறிச்சென்ற ஒரு பஸ்ஸை வழியிலே அ.தி.மு.க. உறுப்பினர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மறித் தார்கள் என்றும், பிறகு நிறுத்திவிட்டார்கள் என்றும், ஏன் பஸ்ஸை நிறுத்திவிட்டீர்கள் என்று டிரைவரையும், கண்டக்டரையும் கேட்ட போது, நிறுத்தாவிட்டால் அடிப்பார்கள், பஸ்ஸைக் கொளுத்தி விடுவார்கள் என்றும் சொன்னார்கள் என்ற தகவலை நம்முடைய திரு. சுவாமிதாஸ் அவர்களே இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதை நான் சொன்னால் ஏதோ ஸ்தாபன காங்கிரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மறைமுகமான ஒரு உறவு இருப்பதாக யாரும் பழிக்கக்கூடும். அதற்காகவே நிரம்ப அதிக மாகத் தாக்குகிறார்கள். காமராஜ் அவர்களை நான் இந்த நிகழ்ச்சிக் குப் பிறகு, என் வீட்டுத் திருமணத்தில் தவிர வேறு எந்த இடத்தி லும் சந்தித்ததும் கிடையாது, பேசியதும் கிடையாது. ஆனால், காமராஜர், கருணாநிதிக்கு அண்ணன்—இது புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திட்டவட்டமான அறிவிப்பு. எதிலே? ஊழலில். கருணாநிதி ஊழலிலே தம்பி, காமராஜர் கருணாநிதிக்கு அண்ணன். வேடிக்கை என்னவென்றால் அவர் உங்களைப்பார்த்து ஊழல் மன்னர்கள் என்று சொல்கிறார். நீங்கள் எங்களைப் பார்த்து ஊழல் மன்னர்கள் என்கிறீர்கள். இப்படி ஒருவருக்கொருவர் ஊழல் மன்னர்கள், ஊழல் மன்னர்கள் என்று சொல்லிக்கொண்டிருக் கிறோம். இன்றைக்கு நடந்த வேடிக்கை என்னவென்றால் கே.டி.கே. தங்கமணி அவர்கள் கடைசியாக பன்சிலால் ஒன்றும் நம்பர் ஊழல் மன்னர் என்று சொல்லிவிட்டார். அதை நம்முடைய ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் காதாரக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதை நான் கவனித்தேன்.

ஆகவே, இப்படி ஒருவருக்கொருவர் ஊழல் மன்னர்கள், ஊழல் மன்னர்கள் என்று கூறிக்கொண்டிருப்பது பொருத்தம்தானா? இது எங்கே கொண்டுபோய்விடும்? காமராஜரே சொல்லியிருக்கிறார் என்று புத்தகத்தைப் படித்துக் காட்டினேனே, இன்னொருவரைப் பார்த்து ஊழல் பேர்வழி என்று சொல்பவர்தான் சரியான ஊழல் பேர்வழி என்று காமராஜரே சொல்லியிருக்கிறாரே, அந்தப் பெருந் தலைவரின் பொன்மொழியை, எதை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டாமா? அவரையும் ஊழல் பேர்வழி என்று சொல்லி, எங்கள் அண்ணாவையும் சேர்த்து எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னார்கள். இராஜாஜியிடத்தில் நான் கேட்டபொழுது, "நீ, இந்த ஊழல் ஒழிப்பு இயக்கத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பித்திருக்க வேண்டும்" என்று இராஜாஜி அவர்கள் சொன்னார்களாம். இராஜாஜி அவர்கள் அப்படிச் சொன்னாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் பத்திரிகைகளிலும், இராஜாஜியின் மறைவுக்குப் பிறகு வானொலியிலும் சொன்னார்கள். இராஜாஜி அவர்கள் அப்படிச் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அவர்கள் மறுத்துக்கூட இருக்கலாம். ஆனால் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இராஜாஜி மறுத்த பிறகும், அவர்கள் மறைந்தபிறகும் சொன்னார்கள். இதை பத்தாண்டு காலத்திற்கு முன்பே ஆரம்பித்திருக்க வேண்டுமென்றால், காமராஜர் காலத்திலிருந்து, பக்தவத்சலம் காலத்திலிருந்து, அறிஞர் அண்ணா காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் ஊழல் நடந்து கொண்டு தான் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டதைப்போல எம்.ஜி.ஆர். அவர்கள் பல அறிக்கைகளிலே சொல்லி இருக்கிறார்கள். ஒருவருக் கொருவர், ஊழல், ஊழல் என்று பேசிக் கொண்டேயிருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

கமிஷன் வை, கமிஷன் வை, கமிஷன் போடு, என்று யாரைப் பார்த்தாலும் கமிஷன் போடு கமிஷன் போடு என்று கேட்டால் நாங்கள் யாரிடத்திலேயிருந்து கமிஷன் வாங்கினோம்? வாங்கினால் அல்லவா கமிஷன் போட! (சிரிப்பு) கமிஷன் போடு, கமிஷன் போடு என்றால் என்ன வேடிக்கை? விசாரணைக்குழு போடுவதற்கு மத்திய சர்க்காருக்கு அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொல்லுகிறோம். அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொல்லு கின்ற நேரத்தில்............

திரு. கே. டி. கே. தங்கமணி : இதேமன்றத்தில்தான் நீங்கள் சொன்னீர்கள், சான்றுகள் இருந்தால் சொல்லுங்கள், விவரங்கள்



இருந்தால் சொல்லுங்கள், அப்படிச் சொன்னால் நடவடிக்கை எடுப் போம் என்று சொன்னீர்கள். ஆகவேதான் முறையாக, சட்டப்படி விவரங்களையெல்லாம் சேகரித்து இப்படிக் கமிஷன் போட வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் கொடுத்தோம். அதுதான் முறை. இல்லாவிட்டால் தெருவிலே நின்று பேசிக்கொண்டிருக்கலாம். முறையாகத் தயாரித்து மத்திய அரசுக்குக் கொடுத்தபிறகு மத்திய அரசை கமிஷன் போட வேண்டுமென்று கேட்கிறோம். இன்னமும் அப்படிச் சொல்லிக்கொண்டுதான் இருப்போம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதற்குப் பல முறை பதில் சொல்லியாகிவிட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி : விசாரணைக் கமிஷன் போட வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். ஆனால் உங்கள் கட்சியிலே உள்ள அங்கத்தினர்கள் சொல்வது வேறு, அது வியாபாரிகள் சொல்லும் கமிஷன். அதை இதோடு சொல்வது எப்படிப் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பல விஷயங்கள் உங் களுக்குப் புரியாது. என்ன செய்வது?

விசாரணைக்குழு அமைப்பதற்கு அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொன்னால் அதை—அண்ணா அவர்களுடைய பல பேச்சுகளை இங்கே எடுத்துப் படித்துக் காட்டிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு ஞாபகப்படுத்துவேன்—இந்தக் கருத்தை எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் மத்திய அரசுக்குத் தமிழக அரசின் சார்பிலே எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய உள்துறை அமைச்சராக இருந்த திரு. சவான் அவர்கள் "லோக்பால்" என்கின்ற அமைப்பை நிறுவிட எண்ணம் கொண்டு மாநில அமைச்சர்க ளிடத்திலே கருத்தையறிந்தார்கள். அப்பொழுது ஒரிசாவின் முதலமைச்சராக இருந்த சிங்தேவ்—சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்—என்ன எழுதினார், சவான் அவர்களுக்கு, அறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த எங்கள் தலைவர் என்ன எழுதினார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அண்ணா சொன்னார்கள்.

'Constitutionally the Central Ministers are under the control of the Prime Minister and the State Ministers are under the control of the Chief Minister. The Chief Minister is independent

of the Prime Minister and Home Minister. So the Chief Minister will be the authority of the State Ministers. '

இது அண்ணா சொன்ன கருத்து. அதே நேரத்தில் ஏப்ரல் 10-ஆம் தேதி 1968-ஆம் ஆண்டில் திரு. சவான் அவர்களுக்கு ஒரிசாவின் முதலமைச்சராக இருந்த சிங்தேவ் அவர்கள் எழுதினார்கள்.

' It may not be in keeping with the demands of Constitutional propriety that the observance of the code of conduct by the Chief Minister should be entrusted to the Prime Minister and the Union Home Minister.

In order to develop proper democratic practices the State Legislature should be the authority for enforcing the observance of the code of conduct by the Chief Minister in the same way as the Parliament is the authority for ensuring the observance of the code by the Prime Minister. '

"ஒரு அரசின் முதலமைச்சர் நெறிமுறைகளைப் பின்பற்றுவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பை, நாட்டின் பிரதமரோ, அல்லது உள்துறை அமைச்சரோ ஏற்றுக் கொள்வது என்பது அரசியலமைப்பின் அடிப்படைக்கு உகந்ததாகாது. அரசியல் நெறிமுறைகள் வழுவாமல் நாட்டின் பிரதமர் செயல்படுகிறாரா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு எப்படி நாடாளுமன்றத்திற்கு இருக்கிறதோ, அதைப் போலவே, ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் நெறிமுறைகள் வழுவாமல் நடக்கிறாரா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அதிகாரமும் படைத்தது அந்த மாநில சட்டமன்றந்தான். இதுதான் சிறந்த ஜனநாயகப் பண்புகளை வளர்க்க ஏதுவாக இருக்கும்" என்று ஒரிஸ்ஸா முதலமைச்சர் சிங்தேவ் அவர்கள் கடிதம் எழுதி திரு. சவான் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

பிறகு 23—3—1968-ல் அண்ணா அவர்கள் அமைச்சரவையைக் கூட்டி, அருமை நண்பர் மதியழகன் உள்ளிட்ட அமைச்சரவையைக் கூட்டி, முடிவெடுத்தார்கள். அந்த முடிவை மத்திய அரசுக்கு அனுப்பினார்கள்.

' The Council have examined the suggestion in detail and have decided not to agree to it on various grounds including the ground that the institution of Lokpal as contemplated will impinge on the State's autonomy guaranteed by the Constitution. '





அதுமாத்திரமல்ல. கடிதம் எழுதினார்கள்—2—6—1968-ல் சவானுக்கு அண்ணா அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

" We feel that the setting up of a Lokpal as contemplated by A.R.C. would impinge on the State's Autonomy as envisaged in the Constitution and as such we would advise against it. "

என்று கடிதமே எழுதினார்கள். நாங்கள் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தினுடைய அடிப்படையில்தான் இன்றைக்கும் மத்திய அரசுக்கு அந்த உரிமை இருக்கிறதா என்ற கேள்விக் குறியை எழுப்புகிறோமே அல்லாமல் வேறல்ல என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுவேன்.

ஆகவே, மத்திய அரசு ஒரு விசாரணைக் குழுவைப் போட வேண்டும், போட வேண்டுமென்று சொல்லுவது—இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு உங்களுக்கு வெறுப்பாக இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக அரசு உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். தங்கமணி அவர்களுக்கு இங்கே உட்கார்ந்திருக்கும் நாங்கள் பிடிக்காமல் பின்னால் இருப்பவர்கள் மீது புதிய ஆசை பிறந்திருக்கலாம். "கருணாநிதி சர்க்கார் ராஜினாமா செய்யட்டும்; கழக சர்க்கார் வரட்டும்" என்று அவர் சொல்லுகிறார். இந்த வேலை எல்லாம் நான் தெரிந்து கொள்ளாத வேலை அல்ல. இது எதற்காக நடைபெறுகிற முயற்சி என்பதை நான் புரிந்து கொள்ளாதவன் அல்ல. ஆகவே, கருணாநிதி இருப்பதா, நெடுஞ்செழியன் இருப்பதா, அன்பழகனா, நடராசனா, சத்தியவாணிமுத்தா, மற்றவர்களா என்பதை நிர்ணயிக்க வேண்டியவர்கள் எங்களுக்குப் பின்னால் இருக்கின்ற 176 பேர்களே அன்னியில் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அல்ல.

இவர்கள் இந்தக் கட்சியினுடைய யோசனைகளை, கட்சித் தலைவர்களுடைய யோசனைகளை ஏற்பவர்கள். அதைப் போலவே கட்சியிலே இருக்கின்ற கீழ்மட்டத் தொண்டர்களிலேயிருந்து பொதுக்குழு, செயற்குழு அங்கே இருக்கும் ஜனநாயக முறைப்படி அந்த யோசனைகளைத்தான் நாங்கள் ஏற்பவர்களே தவிர வேறல்ல என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வெறுப்பின் காரணமாக செய்து விடுகிறோம். இதையே ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டு வருங்காலத்தில் இந்தியாவிலேயே மத்திய அரசிலே ஒரு கட்சியும் மாநில அரசுகளில் வேறு கட்சியும் இருந்தால் அந்தக் கட்சியை மாநில அரசிலிருந்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 12

துரத்துவதற்கு, விரட்டுவதற்கு நான்கு எம்.எல்.ஏ-க்களைப் பிடித்து, இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிடித்து "ஒரு புகார் கொடு உடனே விசாரணைக் கமிஷன் போடுகிறோம், உடனே ராஜினாமா செய்" என்று கிளர்ச்சி செய்து அங்கே அந்த அரசை ஒழித்து விடலாம், அழித்துவிடலாம் என்ற மனப்பான்மை இன்றைக்கு இருக்கின்ற இந்திரா காந்திக்கு அல்ல—என்றைக்கோ அமைகின்ற மத்திய அரசுக்கு, அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சிக்கு ஏற்பட்டால் நிலைமை என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

இவைகளைச் சொல்லுகின்ற காரணத்தினால் தவறுகள் நடைபெற வேண்டுமென்று நான் அனுமதிப்பவன் அல்ல. தவறுகள் நடைபெறுகிறது என்றால் அதற்குரியவர் யாராக இருந்தாலும், யார் அதைச் செய்தாலும், என் அண்ணன் தம்பியாக இருந்தாலும், பெற்ற பிள்ளையாக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன் என்பதைப் பல முறை இங்கே சொல்லியிருக்கிறேன். என் உயிரனைய நண்பர்கள் மீதும் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறேன் என்பதற்குப் பல்வேறு உதாரணங்களைக் காட்ட முடியும்.

அந்த அடிப்படையில்தான் நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறேன். பொதுவாழ்வில் ஈடுபட்டவர்கள் மீது குற்றங் குறைகள் சொல்லப்பட்டால், புகார்கள் சொல்லப்பட்டால் அதை விசாரிப்பதற்கான ஒரு கமிஷனை மாநில அளவில் நியமிக்க ஒரு சட்டத்தை இந்த அவையிலே நாம் நிறைவேற்ற வேண்டும், அதைப் பற்றி அறிவிக்க இருக்கிறேன் என்று சொன்னேன். அதனுடைய சுருக்கத்தை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு பொதுப்பணி ஆற்றுவோர் (குற்ற நடத்தை) சட்டம் என்ற பெயரில் சட்ட முன்வடிவு ஒன்று இன்று சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர், மாநகராட்சிகளின் நிலைக் குழு அல்லது இதர குழுக்களின் தலைவர், நகராட்சிகளின் தலைவர், துணைத் தலைவர், நிலைக்குழு அல்லது இதர குழுக்களின் தலைவர், ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர், துணைத் தலைவர், ஊராட்சி மன்றங்களின் தலைவர், துணைத் தலைவர், இதர குழுக்களின் தலைவர், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வருவார்கள். இவர்கள் மீது லஞ்சக் குற்றச் சாட்டுகளை இந்தச் சட்டத்தின்கீழ் விசாரிக்கலாம். உயர்நீதி மன்ற



1973 பிப்ரவரி 12] [டாக்டர் மு. கருணாநிதி]

நீதிபதித் தகுதியுள்ள நீதிபதி ஒருவர் நியமிக்கப்படுவார். இந்த நீதிபதிமுன் குற்றச்சாட்டுகளை யார் வேண்டுமானாலும் சமர்ப்பிக்கலாம். குற்றம் சாட்டுபவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

நீதிபதி விசாரித்துத் தரும் தீர்ப்பின்மீது அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும். லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க இந்த அமைப்பு பயன்படும்.

இந்தச் சட்டம் இந்த அவையிலே விவாதிக்கப்பட இருக்கிறது. அதற்கு முன்பு பொறுக்குக் குழுவுக்கு விடலாம் என்ற நிலை இருக்கிறது. இதிலே வந்திருக்கிற இவ்வளவு பேரும் இடம் பெறலாமா, இன்னும் யாரையாவது இணைத்துக் கொள்ளலாமா என்பதையெல்லாம் செலக்ட் கமிட்டி ஆராய்ந்து விவாதித்து சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம்.

ஆகவே, பொழுதுதோறும், பொழுதுதோறும் செய்யவேண்டிய பல வேலைகளை விட்டுவிட்டு இதே வேலையில் எல்லோரும் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைச் சொல்லுகின்ற காரணத்தால் சில பேர் கவரப்படுகிறார்கள் என்று தங்கமணி அவர்கள் சொன்னதைப் போல் அவருக்கு மக்கள் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் நாம் நம்பத் தயாராக இல்லை. கிரிக்கெட் மாட்ச் பார்த்தோம். எல்லோரும்தான் பார்த்தோம். நானும் பார்த்தேன். நாவலரும் பார்த்தார். மற்ற அமைச்சர்களும் பார்த்தார்கள். இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து கூடப் பார்த்தேன். அந்தக் கிரிக்கெட் ஆட்டத்திலே 11 பேர் ஆடுகிறார்கள். இரண்டு பேர் பாட் செய்கிறார்கள். பார்க்கின்ற ரசிகர்கள் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அங்கே ஒரே ஒரு ஆள் மாத்திரம் தினந்தோறும் பாவாடை கட்டிக் கொண்டு கையில் தகர டப்பாவை வைத்துக்கொண்டு ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறான். ஐம்பதினாயிரம் ரசிகர்களும் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்ப்பவர்கள் உட்பட கொஞ்ச நேரம் மாட்சைப் பார்த்து விட்டு கொஞ்ச நேரம் அந்தப் பக்கம் கண்ணைத் திருப்புகிறார்கள். அவன், எண்ணிக் கொள்வதா? அந்த ஐம்பதாயிரம் பேரும் ஆடுகின்ற சந்திரசேகரையோ, பிரசன்னாவையோ, பிளச்சரையோ, லூயிசையோ, பட்டோடியையோ

கவனிக்காமல் என்னைத்தான் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவன் எண்ணிக்கொண்டால் எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனமோ அவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனமாக இருக்கக் கூடும் என்பதை மாத்திரம் தெரிவித்து, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுக்கப்பட்ட திருத்தங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின்வெட்டு இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு ஜில்லாக்களில் இருந்து நூற்றுக் கணக்கான தந்திகள் வந்திருக்கின்றன. அவர்களுக்கு கரென்ட் நிரந்தரமாகக் கிடைக்கவில்லை. கிடைக்குமென்று வரையறுத்து இன்னும் சொல்லப்படவில்லை. ஆகவே, எப்போது அவர்களுக்கு பம்ப் செட்டுக்கு கரென்ட் கிடைக்கும் என்ற விவரத்தை கூறுவார்களா?

டாக்டர் எச். வி. ஹாண்டே : இரண்டு பிரச்சினை. தொழிலாளர்கள் "லே ஆஃப்"-ல் ஈடுபட்டிருக்கிறார்கள். கோவைப் பகுதியில் விவசாயிகளுக்கு கரென்ட் கிடைக்கவில்லை. முன்னறிவிப்பு இல்லாமல் கட் செய்கிறார்கள். இப்போது எப்படி மின்சாரத்தை விநியோகம் செய்கிறார்கள் என்று அறிவித்தால், விவசாயிகளுக்கு முன்கூட்டியே சொன்னால் சவுகரியமாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கிரிக்கட் பற்றிச் சொன்னார்கள். மாட்சில் 11 பேர் ஒரு நாள் பூராவும் ஆடுகிறார்கள், இரண்டு பேர் பாட் செய்கிறார்கள். மறுநாளும் இதே 11 பேரும் அங்கு காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை வைத்துக் கொண்டுதான் " இட் இஸ் நாட் கிரிக்கட் " என்று சொல்லுவார்கள். ஒருவருக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தை மற்றவர்களுக்கும் கொடுக்காது இல்லாதவர்களைப் பற்றிப் பேசுவது முறையா என்று பார்க்க வேண்டும். மேல்நாடுகளில் அதற்கு மாறாக "இட் இஸ் நாட் கிரிக்கட் " என்று சொல்லுவார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிரிக்கட்டைப் பற்றிப் பேசியதாக எண்ணிக் கொள்ளக்கூடாது. சில அரசியல் கிறுக்கர்களைப் பற்றிச் சொன்னேன். அவ்வளவுதான்.



திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் முக்கியமான ஒரு பிரச்சினையைப் பற்றிக் கேட்டார்கள். தங்கமணி அவர்களுக்கு அது முக்கியமானதாகத் தோன்றவில்லை. விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் மின்சாரம் தரப்படுகிறபோது திடீரென்று நின்றுவிடுவது பற்றிக் கூறினார்கள். அது பற்றி நான் கலந்து பேசி கவனம் செலுத்துகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் இதுபோன்ற குற்றங் குறைகளை எடுத்துக் கூறினால் ஏற்ற நடவடிக்கைகளை எடுப்போம் என்று இந்த மன்றத்தில் உறுதியளிக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் வீடு இழந்தவர்களுக்கு வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ. 80 கொடுத்திருப்பதாகக் கூறினார்கள். அப்படி என்னுடைய தொகுதியில் 503 வீடுகளுக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அங்கே ரூ. 60 தான் கொடுத்திருக்கிறார்கள். இன்னொன்று, ரூ. 60 மட்டுமல்ல. அந்த ரூ. 60-ல் கூட பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் என்று பணம் வாங்குகிறவர்களிடமிருந்து கமிஷன் எடுத்துக் கொண்டு கொடுத்திருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : க்ளாரிஃபிக்கேஷன் கேளுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : ரூ. 80 கொடுத்திருப்பதாகக் கூறினார்கள். ஆனால் ரூ. 60 தான்......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முழுதாகப் பழுதுபட்டிருந்தால் ரூ. 80. முக்கால் பங்கு பழுதுபட்டிருந்தால் ரூ. 60 கொடுத்திருப்பார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : ரூ. 60 கொடுத்திப்பதில் கூட ......

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த சங்கதிகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசி தீர்த்துக்கொள்ளலாம். கொள்கை பற்றிச் சொல்கிறோம். எந்தெந்த இடத்தில் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்ற விவரப் பட்டியல் வைத்து பேசுவதல்ல. ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்தால் அவர்கள் கவனிப்பார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : நான் கேட்கவிரும்புவது என்னவென்றால்......

[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கம் வேண்டாம். ஒரு புதுவிவாதத்தை ஆரம்பிக்கவேண்டாம்.

இந்தப் பேரவையில் நாம் பின்பற்றி வரும் மரபுக்கேற்ப ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் திருத்தத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

DR. H. V. HANDE : I am pressing my amendment, even though it is not the practice. In the upper House also, some Members have pressed their amendments.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : We are pressing our amendments.

THIRU R. PONNAPPA NADAR : Let it be decided by voice vote.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களின் திருத்தமும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் திருத்தமும் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

திரு. என். மருதாசலம் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவரது திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவரது திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டதாக கருதப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களின் திருத்தமும், திரு. எம். சுரேந்திரன் அவர்களின் திருத்தமும் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

'ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் :—" 1973 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்." '



1973 பிப்ரவரி 12] [பேரவைத் துணைத் தலைவர்]

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## 5. அறிவிப்புகள்.

### (அ) அ.தி.மு.க. தலைவருக்கு பேரவைத் துணைத் தலைவர் விடுத்த வேண்டுகோள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக்கு ஒரு சிறிய அறிவிப்பு. நான் இந்தப் பேரவையில்—சனிக்கிழமை என்று கருதுகிறேன்—அ.தி.மு.க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு இப்பேரவை மூலம் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதற்கு அவர்கள் அளித்திருக்கிற பதிலை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர் மீண்டும் தான் சொன்னதையே வலியுறுத்தியிருக்கிறார். அதோடு விட்டுவிடாமல் இந்தப் பேரவையின் துணைத் தலைவராக இருக்கிற நான் மனச்சாட்சியுடன் பேசவேண்டுமென்று ஏதோ ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அது எனக்குச் சரியாகப் புரியவில்லை. அதைக் கூட பேரவையில் வந்து சொல்லியிருந்தால் நன்றாகயிருந்திருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அ.தி.மு.க. தலைவர் தங்களுக்கு ஏதாவது கடிதம் எழுதியிருக்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடிதம் எழுதவில்லை, பத்திரிகையில் வந்திருக்கிறது, அவர்களுடைய கட்சிப் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதற்காக நான் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2-ம் தேதி நடந்தது சரிதான், அதற்கு இவ்வளவு பேர்களின் சாட்சியம் இருக்கிறது, அதோடு என்னுடைய மனச்சாட்சியும் இருக்கிறது. வோட்டு முடிவுப்படி அந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் மாலை 4-30 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-37 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

(இடைவேளைக்குப் பிறகு—பிற்பகல் 4-30 மணி) .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பிற்பகல் 4-30 மணிக்குப் பேரவை கூடியது.

5. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/72).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/72) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

6. தனியார் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/72).

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை * ஆய்வு செய்வதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : நான் அதை ஆமோதிக்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : பேரவை உப தலைவரவர்களே, இந்தத் திருத்த மசோதாவை சபை முன் வைக்கிறபோது, இது பொதுவான தேச நலனுக்கு உகந்ததாக, எல்லாக்கட்சிகளும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது என்ற காரணத்தால் இதற்கு ஒட்டு மொத்தமாக ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் பொருளாதாரத்தில் 100-க்கு 50 சதவிகிதம் விவசாயத்திலிருந்து தான் வருகிறது என்பது தெரியும். ஆனால் அதே நேரத்தில் நாட்டிலுள்ள சில சதவிகிதத்தினர் இன்றைக்கு விவசாயத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படி தேசத்தின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறபடியால், இந்த விவசாயப்

* 1 ஏப்ரல் 1972 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பொருளாதாரத்தை நாம் சீர்திருத்தாவிட்டால் நாட்டின் பொருளா
தாரம் க்ஷீண நிலைக்குச் சென்று விடும் என்று தெரிவித்துக் கொள்
கிறேன். நாம் எவ்வளவு தான் உற்பத்தியைப் பெருக்கினாலும்,
திட்டங்களைப் போட்டாலும், நம்முடைய பொருளாதாரத்தில் நாம்
அபிவிருத்தியைக் காண முடியாது. நாட்டிலே வளர்ந்து வரும்
நெருக்கடி மேலும், மேலும் வளர்ந்து கொண்டே தான் போகும்
என்பதை அத்தனை பேரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.
அதோடு நாட்டிலே உள்ள பொருளாதாரம் சரியானபடி
மக்களிடையே விநியோகிக்கப்படவில்லை. இதனால் நாட்டின்
வளர்ச்சி குன்றியும், மக்களிடையே வாங்கும் சக்தி இன்றியும் போய்
இருக்கிறது. இதனால் எல்லாத் துறைகளிலும் இருக்கும் மக்கள்
சீரழிந்து போகக்கூடிய நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.
அந்த அடிப்படையில் இந்த தேசத்தில் நிலச்சீர்திருத்தம் சரியான
வகையில் கொண்டு வந்தால் தான் முன்னேற முடியும் என்று தெரி
வித்துக்கொள்கிறேன்.

இந்த தேசத்தில் நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் எத்தனையோ போடப்பட்டன. சமீப காலத்தில் எந்த விதத்தில் நிலச்சீர்திருத்தம் இருக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லி இருப்பதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நிலச்சீர்திருத்தம் என்ற அடிப்படை
யில் நாம் எடுத்துக் கொண்டுள்ள நிலம் எவ்வளவு என்பதைப் பார்க்க
வேண்டும். நான் ஆளும் கட்சியைக் குறை கூறவேண்டுமென்ற அடிப்
படையில் இதைச் சொல்லவில்லை. இன்றையதினம் இங்கே இருக்கிற
விவசாயிக்கு எவ்வளவு நிலம் கிடைக்கும் என்று பார்க்கிறபோது 50,000 ஏக்கர் தான் கிடைக்கலாம் என்று கணக்கு காட்டப்படுகிறது. இந்த நாட்டிலே, தமிழ்நாட்டிலே இருக்கும் 4–5 கோடி மக்களில் 3–3¼ கோடி மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள். இந்த 50,000 ஏக்கர் எடுத்துக்கொள்வதன் மூலம் எந்த அளவுக்கு விவசாயப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று பார்க்கிறபோது, அது சரியான வகையில் இருக்காது என்று தான் தோன்றுகிறது. ஆகவே தான் இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

பல்வேறு விதமான விவசாயச் சீர்திருத்தச் சட்டங்கள் வந்திருக்
கின்றன. விவசாயத்தைக் கணக்கெடுத்துக்கொண்டு பார்த்தால் 65

சதவிகிதம் சிறிய பட்டாதார்கள், 4–5 சதவிகிதம் பெரிய பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் நிலமில்லாதவர்களாக இருக்கிறார்கள். விவசாயத்தின் மூலம் நாட்டிற்கு வரும் வருமானம் 5,000 கோடி ரூபாய். நாட்டிற்கு வரும் 16 கோடி வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு இருக்கிறது. இதை ஓரளவுக்குச் சரியாகப் பங்கிடுவதன் மூலம் வளர்ச்சியை உணர முடியும். இதை அனுதாபத்தோடு பார்க்கவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த மசோதாவின் மூலம் நிலச்சீர்திருத்தச் சட்டத்திலுள்ள ஓட்டை உடைசல்களை எனக்குத் தெரிந்த வரையில் பல திருத்தங்கள் மூலம் அடைத்து இருக்கிறேன்.

ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்தில் ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும், நபருக்கு 30 ஏக்கர் என்றும் உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். அதன் பலனை அதிக நிலம் கிடைக்கவில்லை. இன்றைக்கு இருக்கும் அரசு அதைக் குறைத்து 60ஐ 40 ஆகவும், 30ஐ 15 ஆகவும் செய்திருக்கிறார்கள். இது ஓரளவுக்கு முன்னேற்றம் தான். ஆனால் அதன் மூலம் நமக்கு கிடைத்த நிலம் 40,000—50,000 ஏக்கர் தான் எதிர்பார்க்கப்படுகிறது. சிலர் பேசலாம், ஸ்மால் ஹோல்டிங்ஸ் எகானமிக் வயபிலிடியாக இருக்குமா என்று. பொருளாதாரத் துறையில் அந்த முறையில் பேசலாம். ஆனால் மக்கள் பரம்பரை பரம்பரையாக ஒடிந்த நிலையில், நசிந்த நிலையில் இருக்கிறார்கள். இந்த ஏற்றத் தாழ்வைப் போக்கத்தான், பல மடங்கு நாட்டின் பொருளாதாரத்தை லீப்ஸ் அண்டு பௌண்ட்ஸ் பெருக்கத்தான், எல்லாத் துறைகளிலும் உயர்ந்தத்தான், இதை நான் சொல்கிறேன் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அடிப்படையில் தான் நான் இப்பொழுது கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்த சட்டம், நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்கள் அமைந்திருக்கின்றன. ஒரு நபருக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருந்தால் போதும் என்பது என்னுடைய திருத்தம். நவீன சாகுபடி முறையைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், தாராளமாக ஒரு நபர் நிச்சயமாக பொருளாதார ரீதியில் கட்டுபடியாகக்கூடிய விதத்தில் சிறப்பாக சாகுபடி செய்து, விஞ்ஞான ரீதியில் சாகுபடி செய்து 5 ஏக்கரில் எவ்வளவு அதிகப்படியான விளைச்சல் கொண்டு வர



முடியுமோ, அப்படிக் கொண்டுவந்தால், நிச்சயமாக 15 மா கிட்டத்தட்ட 400, 500 கலம் நெல், அதே மாதிரி மற்ற தானியங்களையும் விளைச்சல் செய்ய முடியும். ஒரு தனி மனிதனுக்கு கட்டுபடியாகக்கூடிய ஸீலிங் நான் அது. முற்றிலும் அந்த ஸீலிங் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன். 5 ஏக்கர் ஒரு தனி நபருக்கு என்று வைப்பதன்மூலம் 15 ஏக்கரில் 5 ஏக்கர் போக ஒரு தனி நபருக்கு 10 ஏக்கர் மிச்சப்படும். அதிலிருந்து சில லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விநியோகத்திற்குக் கிடைக்கும். பல லட்சக்கணக்கான குடும்பங்கள் நிச்சயமாக முன்னேற முடியும், மூச்சு விட்டு ஒரு அடிப்படை வாழ்க்கையை நடத்த முடியும், கலாசார முன்னேற்றம் அடைய முடியும், வாங்கும் சக்தியை அதிகரித்துக் கொள்ள முடியும். நாட்டிலுள்ள பொருளாதார அஸ்திவாரம் உந்தப்படக்கூடும். கோடிக்கணக்கான மக்களுடைய பொருளாதாரத்தில் மேம்பாடு ஏற்படும் நான் சொல்லக்கூடிய விதத்தில் ஒரு தனி நபருக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஸீலிங் வைத்தால். 5 ஏக்கர் ஸீலிங் வைப்பது என்பது மிகவும் சாலவும் சிறந்தது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, வியாக்கியானங்களில் பல்வேறு கோணல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வியாக்கியானங்களைப் பொறுத்த வரையில் ஒரு குடும்பம் என்பது ஒரு கணவன், மனைவி, 3 மைனர் குழந்தைகள் என்பது தான் நியாயமான குடும்பம் என்று ஒத்துக்கொள்ளக்கூடிய அடிப்படையில் அதை யாரும் மறுக்கமுடியாது. ஒரு கணவன், மனைவி, 3 மைனர் குழந்தைகள் என்பது நிச்சயமாக ஒரு நல்ல குடும்பமாக அமைய முடியும். இதை யாரும் நிச்சயமாக மறுக்க முடியாது என்பதைத் தெளிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு மேல் குடும்பத்தில் இருக்கக்கூடிய எல்லோரையும் சேர்த்துக்கொண்டு அதற்கு வேண்டிய ஸீலிங்கை வைத்துக்கொண்டிருப்பது என்பது, ஒரு குடும்பத்திற்கு 30 ஏக்கர், 40 ஏக்கர் என்று வைத்துக்கொள்வது என்பது நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதார அமைப்பில், கிராமப் பொருளாதார அமைப்பில் நிச்சயம் சாத்தியமாகாது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள், மறுக்க முடியாது என்பது என்னுடைய தெளிவான அபிப்பிராயம், என்னுடைய துணிவு. அடிப்படையில் 5 ஏக்கர் தான் ஒரு நபருக்கு, ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் தான், 5 பேருக்கு மேல் இருக்கக்கூடிய குடும்பத்தில் தலா ஒரு நபருக்கு ஒரு ஏக்கர் என்று சொல்லக்

கூடிய விதத்தில், எப்படியும் உயர்ந்த பட்சமாக 20 ஏக்கர் உச்ச வரம்பு என்று ஒதுக்கப்படுகிற விதத்தில் உச்ச வரம்பு அமைய வேண்டும் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதுதான் நியாயத்தின் அடிப்படையில் அமைந்த ஒன்றாக இருக்கும். அதை யாரும் மறுக்க முடியாது. கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் வருடம் ஒன்றுக்கு 296 ரூபாய் தேசிய வருமானம் என்ற நிலைமை நிலவும்பொழுது நான் கூறியபடி 20 ஏக்கர் என்ற அடிப்படையில் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டால் தான் மேற்கொண்டு லட்சக்கணக் கான ஏக்கர் நிலங்கள் மிச்சமாகும். அதன் மூலம் விவசாயப் பொருளாதாரத்தில் ஒரு உந்தும் சக்தி ஏற்படும். அந்த அடிப்படை யில் ஸீலிங்கைக் குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன். அதை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எடுத்துக்கொண்டால், டெனன்ட்ஸ் என்று சொல்லக்கூடிய குத்தகைக்கு சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு, பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து குத்தகை கொடுத்துக் கொண்டு வரக்கூடியவர்களுக்கு, நிலச்சுவான்தார்களால் கொடுமைப்படுத்தப்படும் குத்தகை முறையில் விவசாயம் கொண்டு வருபவர்களுக்கு, இயற்கை பாதிப்பின் காரணமாக விளைச்சல் இல்லாவிட்டாலும், பாக்கிக்கு நோட்டு எழுதிக்கொடுத்தாக வேண்டும் என்று அவதிக்குள்ளாகிற குத்தகைதாரர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் வகையில் சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறேன்.

தனிநபர் உரிமைகளைப் பற்றி விசேஷமாகப் பிரசாரம் செய்பவர் கள் தனி நபர் சொத்துரிமை என்ற வர்ண ஜாலங்களை மறந்துவிட்டு, ஏதாகிலும் நாட்டிற்கு நன்மை செய்யவேண்டும். வெறும் சட்ட மாறுதல்களை மட்டும் செய்துகொண்டிருந்தால் பிரயோசனம் கிடை யாது. டெனன்ட்ஸ் என்று சொல்லக்கூடிய பரம்பரையாக குத்தகைக்கு விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கு நன்மை ஏற்படக் கூடிய விதத்தில் சட்டமாறுதல்களைச் செய்வதன் மூலம் அவர்கள் வாழ்க்கை வளமடையச் செய்யவேண்டும். நான் 4 ஏக்கர், 5 ஏக்கர் என்று அடிப்படையில் குத்தகைக்கு வைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகளைச் சொல்லவில்லை. மொத்த குத்தகை விவசாயிகளைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. சிறு குத்தகை விவசாயிகள் என்ற



அடிப்படையில் பரம்பரையாக குத்தகைக்கு சாகுபடி செய்து கொண்டு வரக்கூடிய விவசாயிகளுக்கு அவர்களுக்கு அந்த நிலம் சொந்தமாகக்கூடிய விதத்தில், அந்த நிலங்களுக்கு ஏற்படக்கூடிய நியாயமான நஷ்ட ஈட்டை அந்த நிலஉடைமையாளர்களுக்குக் கொடுத்துவிட்டு, அந்த நிலத்தை அவர்களுக்கே சொந்தமாக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் பல லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும், அவர் களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதமாக இருக்கும். அப்படிச் செய்வது நியாயமாகவும் இருக்கும்.

ராணுவ சேவை செய்யக்கூடியவர்கள், சிறு, சிறு விவசாயிகள் இவர்களைப் பொறுத்தமட்டில் என்னுடைய திருத்தங்கள் அவர் களைப் பாதிக்காத விதத்தில் தான் அமைந்திருக்கின்றன. குறிப்பிட்ட காலத்திற்குள் நிலத்தை மீட்டுக் கொள்ளும் விதத்தில் வசதி செய்து கொடுக்கக்கூடிய விதத்தில் தான் அவை அமைந்திருக்கின்றன. இல்லாவிட்டால் மார்க்கெட் ரேட் போட்டு நஷ்ட ஈடு கொடுப் பதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. சிறு நிலச்சுவான்தார் களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கக்கூடிய விதத்தில் இந்தச் சட்டத் தில் பல்வேறு விஷயங்களில் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

அடுத்தபடியாக, எந்த நிலமாக இருந்தாலும் அதற்கு விதிவிலக்கு என்பது கூடாது. பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அம்மாதிரி விதிவிலக்கு அளிக்கப்பட்டு, பாழ்பட்டுக் கிடக்கின்றன. பல லட்சக் கணக்கான மக்கள் தொடாத அளவுக்கு, மக்கள் பக்கம் போகாத அளவுக்கு அவைகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் விதிவிலக்குகள் அறவே நீக்கப்பட வேண்டும், நில சம்பந்தமாக தரத்திற்கு வேண்டுமானால் ஏக்கரேஜைக் கூட்டலாம், குறைக்கலாம். ஆனால், நிலம் என்றால், வாழையாக இருந்தாலும் சரி, தென்னையாக இருந்தாலும் சரி, நெல்லாக இருந் தாலும் சரி, எந்தவித பயிர் செய்திருந்தாலும் கூட, நாட்டில் இருக்கக்கூடிய சோஷல் ஜஸ்டிஸ் என்று சொல்லக்கூடிய விதத்தில், சமுதாய அடிப்படையில் ஒரு மனிதன் இவ்வளவுக்கு மேல் ஒரு பூமியை வைத்துக்கொள்ளக் கூடாது என்ற நிலைமை ஏற்படவேண்டும். நாட்டிற்கு நலன் பயக்கக்கூடிய விதத்தில் நடவடிக்கை எடுக்கக்கூடிய தன்மையில் அது அமையவேண்டும். அந்த அடிப்படையில் எல்லா விதமான விதிவிலக்குகளையும் நீக்கவேண்டும் என்பது என்னுடைய தெட்டத் தெளிவான அபிப்பிராயம்.

நிலம் பூராவும் என்றால், கோவில் நிலங்களும் அதற்குள் வரும். மற்றப்படி மடாதிபதிகளுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய பல்வேறு நிலங்களும் அதில் வரும். ஏதோ இந்திரா காந்தி அம்மையார் கூறினார்களாம், சர்வதேச சிக்கல் ஏற்படும் என்றார்களாம். சர்வ தேச சிக்கலை அவர்கள் எதிர்ப்பதற்குத் தயாராக இல்லாமல் இருக்க லாம். உலகில் பல்வேறு தேசங்களை எடுத்துக்கொள்வோம். அங் கெல்லாம் இப்படியெல்லாம் நிலம் இருக்கிறதா? அங்கெல்லாம் இப்படி கோவில்களுக்கு நிலங்கள் எழுதிவைக்கப்பட்டு சூரையாடப் படுகிறதா? சர்வ தேச சிக்கல் என்று பேசுவதில் பிரயோசனம் இல்லை. தொழுகை உரிமைக்கு எந்தவிதமான ஆட்சேபனையையும் நான் சொல்லவில்லை. மடாதிபதிகள் பல்வேறு விஷயங்களுக் கென்று பினாமியாக நிலங்களை எழுதிவைத்திருக்கிறார்கள். தமிழ் மொழிக்கு என்று, திருக்குறளுக்கு என்று, பரீட்சையில் முதல் மார்க் வாங்கியவர்களுக்கு என்று, தேவாரத்திற்கு என்று இப்படி பல்வேறு விதங்களில் பினாமி டிரான்ஸாக்‌ஷன்ஸ் என்று சொல்லக்கூடிய விதத் தில் எழுதிவைத்திருக்கிறார்கள்.

நான் தெளிவாகச் சொல்கிறேன். இம்மாதிரி இருக்கக்கூடிய மடாதிபதிகளுக்கு ரூ. 1,000, 2,000 சம்பளம் கொடுங்கள். ஓதுவாருக்கு சம்பளம் கொடுங்கள் பரம்பரையாக அவர்கள் செய்யக் கூடிய கடமைகளைச் செய்வதிலே நாம் தலையிடவேண்டாம். ஆனால் சாகுபடி செய்வதைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர் கள் துர்மந்திரிகளை வைத்துக்கொண்டு விவசாயிகளை எப்படி அடக்கி ஒடுக்குவது, கசக்கிப் பிழிவது, ஆடம்பரமாக தாங்கள் எப்படி வாழ்க்கை நடத்துவது என்ற அடிப்படையில் இயங்கிவருகிறார்கள். விவசாய சம்பந்தமாக அவர்களுக்கு ஒன்றும் தெரியாது, நிலங்கள் சமுதாயத்திற்குத் தேவையாக இருக்கிறது. அந்த நிலையில் அவர்கள் ஒத்துழைக்கவேண்டும். வீபூதி அணிந்து, ருத்திராட்சம் அணிந்து, ஒரு வேளை சாப்பிட்டுக்கொண்டு, அவர்கள் சைவப் பிரசாரம் செய் தார்களேயானால், இப்பொழுது சைவம் வளருவதைவிட வேகமாக வளர முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, மடாதி பதிகளுக்கும், கோவில்களுக்கும் சொந்தமான எல்லாவிதமான நிலங்களையும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவரவேண்டும் என்று நான் தெட்டத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.



அடுத்தபடியாக, நிலத்தை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுப்பது, அதாவது உபரி நிலங்களைப் பிரித்துக்கொடுக்கும் பொழுது நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். முதலில் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகு நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். ஒரு ஏக்கர் நிலத்திற்கு அதிகமாக வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இதைக் கொடுக்கவேண்டாம். இப்படிப்பட்ட நியாயமான அடிப் படையில் என்னுடைய திருத்தச் சட்டம் பூராவும் அமைந்திருக் கிறது. எந்தவிதமான கட்சி மனோபாவத்தோடோ அல்லது எந்த விதமான ஒரு பகுதி மக்களை பாதிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு இந்தத் திருத்தங்களைக் கொண்டுவரவில்லை.

இப்படிப்பட்ட மாறுதல்களை நான் நல்லெண்ணத்தில் தான் கொண்டுவந்திருக்கிறேன். இவைகளை நல்லெண்ணத்தோடு சீர் தூக்கிப் பார்த்து, மாறுதல்களை ஒப்புக்கொண்டு, திருத்தங்களை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் சர்க்கார் வருங்காலத்தில் தமிழகப் பொருளாதாரத்தில் ஒரு பெரிய உந்தும் சக்தியை, ஒரு பெரிய டைனமிக் ஃபோர்ஸை அவிழ்த்துவிட்டவர்களாவார்கள். தமிழகத்தில் வாழக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு மறுமலர்ச்சி உத்திரவாதம் ஏற்படக்கூடிய நிலைமை உண்டாகும். இப்பொழுது எங்கு பார்த்தாலும் நெருக்கடி, கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய துணிகளை விற்பதற்கு மார்க் கெட் கிடையாது. 55 கோடி மக்களில் 40 கோடி விவசாயிகளுக்கு வாங்கும் சக்தி அதிகரிக்கும், பல தேசங்களிலிருந்து நாம் இறக்குமதி செய்யக்கூடிய அளவுக்கு நாட்டில் இருக்கக்கூடிய உற்பத்தி அதிக மாகி, மக்களிடையே வாங்கும் சக்தி அதிகரிக்கும். ஆகவே, இதற் கெல்லாம் இந்த நிலச் சீர்திருத்தம் எவ்வளவு உதவிகரமாக இருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தேர்தலைப்பற்றி சவால் விடுகிறார்கள். திண்டுக்கல்லில் என்ன ஆகும் என்பதைப்பற்றி சவால் விடுகிறார்கள். இந்த விவசாயிகள் தங்களைக் கட்டிப்போட்டிருக்கக்கூடிய தலைவர்களிடமிருந்து அறுக் கப்பட்டுவிட்டால், அவர்கள் தாங்கள் சுதந்திர புருஷர்களாக இருக் கக்கூடிய நிலையில் தேர்தலைப்பற்றி இப்படி சவால் விடக்கூடிய நிலைமை வருமா?

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 பிப்ரவரி 12

ஏழை, எளிய மக்கள், விவசாயிகள் சுதந்திரமாகச் செயல்படும் வகையில், திருப்திகரமான முறையில் அவர்கள் வாழ வழிவகை செய்து கொடுத்திருந்தால் இன்றைக்கு தேர்தலிலே நீங்கள் இவ்வளவு அக்கரை காட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு அளிக்கப் பட்ட உதவியை உணர்ந்து, தங்களுடைய தன்மானத்தை உணர்ந்து அவர்கள் நிச்சயமாக உங்களுக்கு ஓட்டளிப்பார்கள். அந்த வகையில் நீங்கள் அவர்களுக்குத் தேவையானவற்றை செய்திருந்தால், இன்றைக்கு நீங்கள் தேர்தலைப்பற்றிய கவலையே இல்லாமல் இருந் திருக்கலாம்.

ஏழை மக்களுக்கு என்று நீங்கள் தனி சலுகையே காட்ட வேண்டியதில்லை, அவர்கள் தன்னம்பிக்கையோடு ஒரு தெம்போடு தலை நிமிர்ந்து நடப்பதற்கு வழிவகை செய்திருந்தால். ஏழை பிள்ளை களுக்கு இலவசப் படிப்பு அளிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக் காது. அவர்களுக்கு அரசாங்கத்திலோ, கல்வித் துறை இயக்குநரிடம் இருந்தோ அல்லது கோவில் மடங்களிலிருந்தோ, அல்லது பூண்டி வாண்டையார் போன்றவர்களின் உதவியைப் பெற்றோ, அல்லது அவர்களைப் போன்றவர்களின் கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ சென்று படிக்கக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக் காது. மற்ற பிள்ளைகளைப் போல அவர்களும் படித்திருப்பார்கள். எனவே, இப்போதாவது அப்படிப்பட்ட ஏழை பிள்ளைகள் சுதந்திர மாக, சமுதாயத்தில் தாழ்வு மனப்பான்மை இல்லாமல் படிக்க வேண்டுமென்றால், அதற்கு ஏற்றவகையில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமைக்கவேண்டும். அந்த அடிப்படையிலேதான் இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன்.

இந்தமாதிரியான ஒரு நல்ல சட்டத்தை நிறைவேற்றும்போது மத்திய அரசாங்கத்தையும் பார்க்கவேண்டியதில்லை. அல்லது கேரளத்தையும் பார்க்க வேண்டியதில்லை. நீங்களே அதைச் செய்யுங்கள். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா மாநில கட்சிகளையும் விட மிகப் பலம் பொருந்தியவர்களாக நீங்கள் இருந்து கொண்டிருக்கிறீர்கள். ஒரு திறமையான அரசாங்கத்தை நீங்கள் இன்றைக்கு அமைத்திருக்கிறீர்கள். உங்களிலே திறமை மிக்கவர்கள் நிறையபேர் இருக்கிறீர்கள். அதனால் நீங்களே முடிவு செய்து, மக்களுக்குப் பயன்படக்கூடிய நல்ல சட்டங்களை உருவாக்கி, அவைகளை நிறைவேற்றலாம். உங்களால் கண்டிப்பாக அதைச்



1973 பிப்ரவரி 12] [திரு. மணலி சி. கந்தசாமி]

செய்யமுடியும். நீங்கள் அப்படிச் செய்தால் கிராம மக்கள் எல்லாம் உங்கள் அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள். நீம்கள் கவலை இல்லாமல் ஆட்சியை நடத்திக்கொண்டு போகலாம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குள் இந்தமாதிரியான திட்டங்களை நிறைவேற்றினால், அதிலே ஏற்படக் கூடிய அபிவிருத்தி ஒரு புதிய ஜனநாயக அமைப்பை உருவாக்கும். இந்த அடிப்படையிலேதான் இந்த மசோதாவை நான் கொண்டு வந்திருக்கிறேன். இதிலே ஏதாவது நல்ல திருத்தங்கள் செய்ய வேண்டுமென்றால், அதைச் செய்து இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளுங்கள். அதிலே எனக்கு மறுப்பு கிடையாது. எப்படி யானாலும் ஏழை எளிய மக்கள், விவசாய மக்கள் முன்னேற வேண்டும் என்பதுதான் என் எண்ணமெல்லாம்.

எங்களைப் பொறுத்தவரையில் எந்த நிறுவனங்களுக்குமே விதி விலக்கு கொடுக்கக்கூடாது.

அதுமட்டுமல்ல. அரசாங்கம் வரையறுத்திருக்கிற ஒரு குடும் பத்திற்கு அதாவது தனி நபருக்கு 5 ஏக்கருக்குமேல் நிலம் கொடுக்கக் கூடாது. பெரிய குடும்பத்திற்கு 20 ஏக்கருக்குமேல் கொடுக்கக் கூடாது. இந்தமாதிரியான நல்ல திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். நான் இவைகளைச் சொல்லும்போது மாற்றுக்கட்சிக் காரன் சொல்கிறானே என்று நீங்கள் தயக்கம் காட்டக்கூடாது. உங்களுடைய உள்ளம் இது நல்ல கருத்து என்றுதான் எண்ணும். அது எனக்கு நன்றாகத் தெரியும். உங்கள் கட்சியின் கொள்கையும் அதுதான். இதிலே ஏதாவது நல்ல திருத்தங்கள் செய்ய வேண்டு மென்றால் செய்து கொள்ளுங்கள். ஏற்கெனவே நான் தெரிவித்த மாதிரி அதிலே எனக்கு ஆட்சேபனை கிடையாது. எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் உங்களுடைய ஆதரவு இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான் தமிழ்நாட்டு மக்கள் நன்மையடைகின்ற வகையில், விவசாய மக்கள் பயனடையும் வண்ணம், இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று உங்களை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநில சர்க்காரே இதைச் செய்யலாம். மத்திய அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெறவேண்டியதில்லை. இந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டால் லட்சக்கணக்கான மக்கள் பயனடைவார்கள். மற்ற

மாநிலங்களுக்கும் இது ஒரு முன்னோடியாக இருக்கும். உங்களை பின்பற்ற அவர்களும் முன்வரக்கூடும். எதற்குமே முன்னோடியாக விளங்கும் தமிழ்நாடு என்று சொல்லும்போது இதற்கும் முன்னோடியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் கிராமப்புற மக்களின் வாழ்க்கை மறுமலர்ச்சியடையும்; அவர்கள் சுபீட்சம் அடைவார்கள். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

கோவில், மடம், கடவுள் பெயரால் இருக்கக்கூடிய நிலங்களை எல்லாம் விவசாயிகளுக்கு—ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நான் கெட்ட எண்ணத்தோடு கொண்டுவரவில்லை: நல்ல எண்ணத்தோடுதான் கொண்டு வந்திருக்கிறேன். அதனால் யாரும் இதைப்பற்றி கவலைப்பட வேண்டாம்.

முஸ்லீம் நண்பர்கள் மைனாரிட்டியாக இருக்கிறார்கள்; அதனால் அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று சொல்வதற்கு இதிலே ஒன்றும் இல்லை. நிச்சயமாக அவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். இப்போது கோவில் சொத்துக்களை நிர்வகிக்கின்ற மடாதிபதிகள் எல்லாம் விவசாயிகளின் லகானை கையிலே பிடித்துக்கொண்டு அவர்களை அடக்கி ஒடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். முஸ்லீம்கள் நிறுவனங்களிலும் அப்படித்தான் இருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததால் எங்கள் கட்சிக்கு அவர்கள் மேல் அக்கறை இல்லை என்று அவர்கள் எண்ணவேண்டாம். மற்றவர்களை விட, 100 மடங்கு எங்களுக்கு அவர்களைப் பற்றி அக்கறை உண்டு. அவர்களுடைய கலாச்சாரம், பண்பாடு இதனால் கெட்டுவிடும் என்று அவர்கள் எண்ணுவதாக இருந்தால், அவர்கள் இனத்தவர்களுக்கே அவர்கள் மத நிறுவனங்களின் சொத்துக்களைப் பகிர்ந்தளிக்கலாம். அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. முஸ்லீம் மக்கள் எல்லாம் செல்வந்தர்கள் அல்ல. எத்தனையோ மக்கள் வெற்றிலைக் கட்டை தலையிலே தூக்கிச்சென்று விற்று, 2 அணா, 4 அணா, 8 அணா சம்பாதித்து பிழைக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். சுள்ளி பொறுக்கி 8 அணா, 10 அணா சம்பாதிக்கக்கூடியவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். பீடி சுத்தி பிழைக்கக்கூடியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கலாம். நான் அதை வரவேற்கிறேன்.



அதேமாதிரி இந்த கிறித்தவர்கள் மிஷன்களும் இருக்கின்றன. அவற்றின் பெயரால் இருக்கின்ற சொத்துக்களையும் எடுத்து, ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற இடங்களிலிருந்து இங்கு வந்து மிஷன் வைத்து நடத்துகிறார்கள் என்றால் அவர்கள் நம்முடைய நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காக என்று நாம் எண்ணிவிடக்கூடாது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தஞ்சாவூர் போன்ற இடங்களில் எல்லாம் மிஷன்களை நிறுவி ஏராளமான சொத்துக்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அவைகளை பாதிரிமார்கள் நிர்வகித்து வருகிறார்கள். இந்த பாதிரிமார்கள் எல்லாம் நல்லவர்கள் அல்ல என்பது நமக்குத் தெரியும். அவர்கள் செய்கையால் அவர்களை எல்லாம் வளர விட்டோம் ஆனால் அவர்கள் இந்த நாட்டையே அபகரித்துகொள்வார்கள். பல சந்தர்ப்பங்களில் பல பாதிரிமார்கள் நம் நாட்டுக்கு விரோதமாக நடந்துகொண்டார்கள் என்று தேசத் துரோகக் குற்றம் சாட்டி, அவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதை எல்லாம் நாம் நன்றாக அறிவோம்.

இன்றைக்கு ஒரு நல்ல ஜனநாயக அமைப்பை, ஒரு நல்ல பாரம்பரியத்தை உருவாக்கி, எல்லா மக்களுக்கும் எல்லாப் பொருட்களையும் வாங்கும் சக்தியை உருவாக்க வேண்டும், என்று நாம் விரும்புகிறோம். அந்த நோக்கத்தோடுதான் நான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் இதை ஏற்றுக்கொள்ளாமல் சும்மா உட்கார்ந்திருப்பதில் பயனில்லை. முதலமைச்சரவர்கள்கூட ஒரு பெரிய பட்டியலையே படித்துக் காட்டினார்கள். அந்தச் சாதனைகளை பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம்.

இவ்வளவு செய்தும் மக்களிடம் வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறதா என்றால் இல்லை. அப்படியானால் அதற்கு என்ன காரணம் என்பதை யோசிக்க வேண்டும். ஏதோ செய்துவிட்டோம் என்று சொல்லி திருப்தியடைய முடியாது. மேற்கொண்டு அதிலே என்ன செய்ய வேண்டுமென்று தோண்டித் துருவிப் பார்க்க வேண்டும்.

நான் கொண்டு வந்திருக்கும் இந்த நிலச் சீர்திருத்த மசோதா சரியான—ஒரு நல்ல மசோதா. இப்படிப்பட்ட ஒரு சட்டம் வர வேண்டுமென்று பல போராட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. பலர் அதனால் சிறை சென்றிருக்கிறார்கள். எங்கள் தோழர்களிலே பலர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த மசோதா இங்கே

வந்திருப்பதை பார்த்தால் அவர்கள் நெஞ்சங்கள் எல்லாம் பெரு மகிழ்ச்சியடையும். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் அவர்கள் உள்ளங்கள் எல்லாம் உங்களை வாழ்த்தும்.

இதிலே ஏதாவது மாற்றங்கள் செய்யவேண்டுமென்று சொன்னால், ரெவின்யூ அமைச்சரவர்கள் காரணங்களை விளக்கி, இன்னின்ன காரணங்களால், இன்னின்ன மாற்றங்கள் செய்யவேண்டுமென்று சொன்னால், அவை நல்ல திருத்தங்களாக இருந்தால் நான் அவற்றை வரவேற்கிறேன்; ஏற்றுக்கொள்கிறேன். மாற்றுக் கட்சியை சேர்ந்த கந்தசாமி கொண்டுவந்திருக்கிருனே என்று எண்ணுதீர்கள். மாற்றுக் கட்சிக்காரர்கள் கொண்டுவந்தாலும் நல்ல சட்டமாக இருந்தால் ஆளும் கட்சியிரான நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்பதை நீங்கள் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும். அந்த வகையிலே ஒரு புதிய ஜனநாயக பாரம்பரியத்தை நீங்கள் உருவாக்க வேண்டும். மாற்று கட்சியினர் கொண்டுவந்த மசோதாவை ஆளும் கட்சியினர் ஏற்றுக்கொண்டனர் என்ற பெருமை இந்த சட்டமன்றத்திற்கு இருக்கும். நல்ல எண்ணத்தோடு, உங்களுடைய கட்சியின் கொள்கைகளுக்கு உட்பட்டு, ஏழை எளிய மக்கள், விவசாயிகள் பயன் பெறும் வகையிலே தான் நான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, இந்த மசோதாவை ஏற்று, நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய ஆரம்ப உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய நம்முடைய பெரியவர் மணலி கந்தசாமி அவர்களால் முன்மொழிந்திருக்கிற தர்ம ஸ்தாபனத்திற் கான நிலத்தையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை எதிர்த்துப் பேச வேண்டியவனுக இருக்கிறேன்.

ஏனென்று கேட்டால் இன்றைய தினம் அவர்கள் சொன்னார்கள் அவர்கள் சேர்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி மதத்திலேயும் கடவுளின் பேரிலும் நம்பிக்கை இல்லை என்று. ஆனால், இன்றைக்கு உலகத்திலே இருக்கிற பெருவாரியான மக்கள்—நான் சொல்ல வேண்டுமானால் கம்யூனிஸ்ட்டுக்கள் என்று கூறிக்கொள்கிறவர்கள்கூட தங்களுடைய உள்ளத்திலே இறைவனைப் பற்றி அச்சத்தோடு பார்க்கிருர்கள். மதத்திலே ஒருவித பற்று உடையவர்களாக இருக்கிருர்கள்



என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். மதங்கள் எந்த அடிப்படையிலே எழுப்பப்பட்டன என்ற சர்ச்சையிலே நான் இறங்கத் தயாராக இல்லை. மனித சமுதாயம் ஏற்பட்ட நாளிலிருந்து, மனிதர்களிடத்திலே சில ஒழுக்க நெறிகளை உண்டாக்க சில மதங்கள் ஏற்படுகிறது. அது இந்து மதம் என்றும், இஸ்லாமிய மதம் என்றும், கிறிஸ்துவ மதம் என்றும், பௌத்த மதம் என்றும் உலகத்திலே தோன்றி இருக்கின்றன. அவரவர்கள் தங்கள் மதத்தை வழிபடவும், அவரவர்களுக்கென்று சில கோட்பாடுகளும் கொள்கைகளும் கொண்டு அதிலே இலட்சிய மான இறைவனை தொழுவது அதன் அடிப்படையிலே உலகத்திலே ஒழுக்கமும், நியாமும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மதங்கள் இருக்கின்றன என்பதை அவர்களும் ஒப்புக்கொள்வார்கள். அப்படி ஒப்புக்கொள்ளும்பொழுது "கம்யூனிசம்" கூட. ஒரு மதம் என்று நான் வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் அதை ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட ஸ்தாபனமாக வைத்துக்கொண்டிருக் கிருர்கள் ஒரு அடிப்படையிலே பார்க்கும் பொழுது, அதே அடிப் படையிலே பார்க்கும் பொழுது தான் அவர்கள் ஆண்டவன், இறைவன் என்று ஒன்றில்லை என்று கூறினாலும் அவர்களும் இயற்கை என்ற தத்துவத்தை ஏற்கும் பொழுது, இயற்கை என்ற தத்துவத்தை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கிருர்கள் என்று தான் நாம் சிந்திக்க வேண்டும்.

மத ஸ்தாபனங்கள் அடிப்படையிலே சில இறை வணக்கம் ஸ்தலங்கள் இருக்கின்றன, கல்விக்கூடங்கள் இருக்கின்றன. அவை எல்லாம் அந்தந்த மதங்கள் வளர வேண்டும் என்ற எண்ணத்திலே இயங்குகின்றன. கிறித்துவ மதத்தைப் பற்றிக்கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் தன்னுடைய பேச்சிலே குறிப்பிட்டார்கள். அந்த மதத்தின் அடிப்படையிலே பாதிரியாக வருகிறவர்கள் அப் பதவியை துஷ்பிரயோகம் செய்து, அவர்கள் இந்த நாட்டைவிட்டே வெளியேற்றப்பட வேண்டிய நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றது என்று சொன்னார்கள். மைனரிட்டியாக இருக்கிற மக்களுக்கு இஷ்டப்படுகின்ற மதத்தை ஏற்று; அந்தந்த கடவுளை வணங்க வழி வகை அரசியல் சட்டத்திலே செய்யப்பட் டிருக்கிறது. சில நேரங்களிலே அவைகளிலே குறைபாடுகள் ஏற்படும் பொழுது அவைகளை திருத்திக் கொள்வதுதான் முறையே தவிர அந்த ஸ்தாபனங்களிடம் இருக்கும் எல்லாவற்றையும் பிடுங்கிக்

கொண்டு அவர்கள் வழிபாடு செய்யாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால் அது எந்தவிதத்திலே பொருந்தும் என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதைவிட்டு தத்துவத்தின் பேரில் மதத்தை வளர்ப்பது என்றால், அப்படி எத்தனை பேர் வளர்ப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர் புள்ளிவிவரங்கள் வைத்துக்கொண்டு பேசலாம். ஆனால், என்னிடம் அப்படிப்பட்ட புள்ளிவிவரங்கள் இல்லை. உண்மையிலேயே இறைவனிடம் சென்று வணங்குபவர்கள் அப்படிப்பட்ட இடம் பாதுகாக்கப் பட்டதாகவும், அப்படிப்பட்ட இடம் சுத்தமானதாகவும், ஒழுக்கம் உள்ளதாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு அவர்களே ஏற்படுத்திக் கொள்ளுகின்ற ஒரு இடம் தான் பள்ளிவாசல் என்பது—அது தான் இஸ்லாமிய மக்கள் சென்று தொழுது வருவதும் ஆகும். அங்கே தூய்மையான செயல்தான் நடைபெறுகிறது. அப்படிப்பட்டவர்களுக்குக் கூட நிறுவனங்கள் இருக்கின்றன. அதை 4, 5 பேர் நிர்வாகம் செய்ய வேண்டியிருக்கிறது. சிறு கிராமமாக இருந்தாலும் 500, 1,000 பேர் சென்று பள்ளிவாசலுக்கு போய் தொழுதாலும்கூட, அங்கே 1,000, 1,500 ரூபாய் செலவாகிறது. இதை அந்த ஊரிலே இருப்பவர்கள் ஏழையாக இருப்பதால் கொடுக்க முடியாது. எனவே, அங்கிருக்கும் வசதி படைத்தவர்கள் தங்களுடைய சில சொத்துக்களை வக்ஃப்பாக அதாவது தானமாக கொடுக்கிறார்கள் அந்த நிறுவனங்களுக்கு, அத்தோடு அந்தத் தொழுகை ஸ்தாபனத்தில் தன்னுடைய மதத்தை பேணிப் பாது காக்கவும் வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட ஸ்தாபனங்கள்தான் இன்றைக்கு இருக்கின்றன.

ஒருவேளை மடங்களையும், அவைகளுக்கிருக்கின்ற ஏராளமான நிலங்களையும் மனதில் வைத்துக்கொண்டு மணலி கந்தசாமி அவர்கள் இஸ்லாமிய நிறுவனங்களின் வக்ஃப் சொத்துக்களையும் இணைத்து பேசி இருக்கலாமென்று நான் நினைக்கிறேன். சில மடங்களுக்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ஸ்தாபனம் இஸ்லாமிய ஸ்தாபனங்களிலே கிடையாது. 20 ஏக்கரா, 50 ஏக்கரா என்று ஒரு இஸ்லாமிய ஸ்தாபனத்திற்கு இருந்தால், சில கடைகள் மூலமாக வருவாய் வந்தால், அந்த வருவாய் எல்லாம் அந்த தொழுகை நடத்தவும், முஸ்லீம் குழந்தைகளுக்கு கல்வி போதிக்கவும், அதன் மூலம் எங்கள்



சமுதாயத்திற்கு சேவை செய்யத்தான் பயன்படுகிறது. அதேபோல் நான் நினைக்கிறேன். இந்து அற நிலையங்களிலேகூட—முன்பு ஒரு காலத்திலே எப்படியோ இருந்திருக்கலாம்—இன்றைக்கு தர்மபுர ஆதீனம் போன்றவைகளிலே தமிழை வளர்க்கும் பணிகளை பார்க்கும்பொழுது அதைப்போன்ற பணிகளுக்காக அவர்களை பாராட்டத்தான் வேண்டும். அதிகப்படியான நிலங்களை எடுத்து மக்களுக்கு கொடுத்துவிடு என்பது கம்யூனிச வாதத்திற்கு சரியாக இருக்கலாம். ஆனால் ஆண்டவனைப் பற்றிய அச்சம் உலகத்து மக்களிடையே எழுகின்ற காலமாகத்தான் இது இருக்கிறது. சந்திர மண்டலத்திற்குச் சென்று வருபவர்கூட சர்ச்சுக்குச் சென்று பிரார்த்தனை செய்யும் வகையிலே ஆண்டவனிடம் ஒரு அச்சம் இன்றைக்கு காணப்படுகிறது. நான்கூட படித்ததாக ஞாபகம், இங்கர்சால்கூட கீழே விழுந்தபொழுது "ஓ காட்" என்றுதான் விழுந்தாராம். இப்படிப்பட்ட நிலைமைகள் ஆண்டவனைப்பற்றி அச்சம், ஒழுக்கம், மார்க்கம் போன்றவை இருந்தால்தான் வரமுடியும்.

அப்படிப் பார்க்கும்பொழுது, அந்த மார்க்கங்கள், மதங்கள் எல்லாவிதமான அடிப்படையான மதங்களின் உரிமைகளும் பறிக்கப் படாமல் இருக்க வேண்டும். அது நம்முடைய அரசியல் சட்டத்திலே ஜீவாதார உரிமையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமைகளை புறக்கணிக்கும் வகையிலே தமிழக அரசு செயல்படாது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதுவும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமிக்கும் இருக்கும் அன்பும், பாசமும் எங்களுக்குத் தெரியும். ஆனால் பாசத்தோடு இருக்கிறோம் ஆளும் கட்சியிடம் என்று சொல்லிக்கொண்டு, அங்கே வருகிற பிரச்சினையின் பொழுது அதற்கான எதிர்ப்பான கருத்துக்களை சொல்லுவது என்றால், அது அவர்களுடைய கொள்கையாக இருக்கலாம். அந்த சமயத்திலே நாங்களும் எங்களுடைய கொள்கையை சொல்லித்தான் ஆகவேண்டும். ஆகவே, தமிழக மக்களின் முன்னேற்றத்திலே அக்கரை கொண்டிருக்கிற இந்த அரசு மத ஸ்தாபனங்களின் சொத்தை எடுக்காது என்று நம்புகிறேன். நிலச் சீர்திருத்தத்திற்காகவும், ஏழை மக்களுக்காகவும் உதவுகின்ற பல திட்டங்களிலே அவர்கள் பங்கு கொள்கிறார்கள். அதற்காக நான் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் செய்வது எல்லாமே நல்லது என்று கூற முடியாத நிலைமையிலே

நான் இருக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட செயல்களிலே நம்முடைய அரசாங்கம் ஈடுபடக் கூடாது. இதை என்னுடைய கட்சியின் வேண்டுகோளாகவும் இந்த நாட்டிலே இருக்கிற மைனாரிட்டி சமுதாயத்தினர் வேண்டுகோளாகவும் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் நிறைவு செய்து, அமைகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவை ஆதரித்து நானும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் விவசாயிகளுக்கு என்று நிலச் சட்டங்கள் பல இயற்றப்பட்டிருக்கின்றன. இந்த சட்டங்களை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு சட்டத்திலேயும் இருக்கிற ஓட்டைகள், அந்த நிலச் சட்டங்கள் எதற்காக கொண்டுவரப் பட்டதோ அதற்கு நேர் விரோதமாக அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அந்த அளவிற்கு ஓட்டைகளும் உடைசல்களும் இருக்கக் கூடிய இந்த சட்டங்களை முறைப்படுத்தி, எந்த நோக்கத்திற்காக நிலச் சீர்திருத்தச் சட்டம் என்று சொல்லுகிறோமோ அந்த நோக்கம் நிறைவேறுகின்ற முறையிலே இந்த சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்களின் மசோதாவிலே கூறப் பட்டிருப்பது. அந்த முறையிலே பார்த்தீர்கள் என்று சொன்னால், 40 : 60 என்ற சட்டம் நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது. உழைத்து உழுது சாகுபடி செய்து உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயிகளுக்கு 60 சதவிகிதம் வாரம் என்றும், ஏதோ ஒரு காலத்தில் வாங்கியதாக, நிலம் எங்கே கூட இருக்கிறது என்று தெரியாமல் இருக்கிற நிலக்காரருக்கு 40 சத விகிதம் வாரமும் என்று சட்டம் இருக்கிறது. உண்மையில் அந்தச் சட்டம் அமலில் இருக்கிறதா என்றால் இல்லை. விஷயம் தெரிந்த விவசாயிகள்தான் 60 சத விகிதம் வாரம் பெற்று வருகிறார்கள். பாக்கியுள்ளவர்கள் இன்னும் பழைய நிலைமையிலேயே ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்.

அதேபோல நிலத்தில் உழுது சாகுபடி செய்துகொண்டிருக்கிற வர்களை ஆண்டுக்கு ஆண்டு நிலத்தைவிட்டு வெளியேற்றக்கூடாது என்பதற்காக நிலவெளியேற்றத் தடுப்புக்குச் சட்டம் போட்டிருக் கிறோம். இதுவும் சரியான முறையில் செயல்படவில்லை. இன்னமும்



விவசாயிகள் தான் வெளியேற்றப்படுகிறார்கள். "தானே நிலத்தை விட்டு வெளியேறுவதாக" முன்கூட்டியே எழுதி, கையொப்பம் வாங்கிக்கொண்டே நிலத்தை சாகுபடி செய்ய கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு இன்னமும் அந்தச் சட்டத்தை ஏமாற்றி வருகிறார்கள்.

அதேபோல பதிவுச் சட்டம் வந்திருக்கிறது. அது நல்ல நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டது என்றாலும் அதனாலும் நடைமுறையில் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை.

உச்சவரம்புச் சட்டத்திலும் பல மோசடிகள். உச்சவரம்பு 30 ஏக்கர் என்றபோதும் நிலம் எதுவும் அதிகமாகக் கிடைக்கவில்லை. நாம் 15 ஏக்கரா என்று குறைத்தும் நமக்குக் கிடைத்திருப்பது 60 ஆயிரம் ஏக்கராதான் என வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படி நாம் எந்த எந்த வகையில் சட்டங்கள் கொண்டுவந்தாலும் அவை எல்லாம் முறியடிக்கப்பட் டிருக்கின்றன. நிலத்திற்கு உரியவர்கள் என்று சொல்லப்படுகிற சோம்பேறிகள் எங்கோ இருந்து நிலத்தின் பயனை அடைவதும், அன்றாடம் நிலத்தில் உழுது பாடுபடக்கூடிய நிலமற்ற ஏழை எளிய விவசாயிகள்—உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்ச வில்லை என்கிற பழமொழிக்கு இன்னமும் ஆளாகிக்கொண்டிருக்கிற நிலையும்தான் இருக்கிறது. ஆகவே ஏழை எளிய விவசாயிகள் பயன் அடையக்கூடிய முறையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்பது எங்கள் வாதமாகும். உச்சவரம்புச் சட்டத்தில் ஒரு நபருக்கு 5 ஏக்கரா இருந்தால் போதும். ஒரு குடும்பம் என்றால் 15 ஏக்கரா இருந்தால் போதும். அந்தக் குடும்பத்தில் இன்னொருவர் கூட இருந்தால் 20 ஏக்கரா—ஒரு ஐந்து ஏக்கரா அதிகம் இருக்கலாம், அதற்குமேல் இருக்கவேண்டியதில்லை என்பதாக இந்தச் சட்டத்தில் மணலி ஐயா அவர்களே திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அமைச்சர் அவர்களுக்கே தெரியும். தஞ்சை மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தில் இருந்து தப்பிப்பதற்காக யார் யார் பேரிலோ எழுதி வைத்துக்கொண்டிருக்கிற நிலைமை. வலிவலம் கிராமத்தில் பினாமியாக பலபேர்கள் மீது குத்தகைச் சீட்டுகளை எழுதி வைத்துக்கொண்டு உபரி நிலங்களை எல்லாம் நிலக்காரரே அனுபவித்துக்கொண்டிருந்தார். எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அந்தக் குத்தகைதாரர்கள் அந்த ஊரிலே இருக்கிறார்களா என்றும் பார்த்தார்கள், தஸ்தாவேஜில் கூட அவர்கள் பெயர் இல்லை. அந்த

[திரு. ஆ. கு. சுப்பையா] [1973 பிப்ரவரி 12

நிலத்தை எல்லாம் கண்டுபிடித்து உழவர்களுக்கு விநியோகித்திருக்கிறார்கள். இதே நிலைதான் பூண்டியை எடுத்துக்கொண்டாலும். இதே நிலைதான் வடபாதிமங்கலத்தை எடுத்துக்கொண்டாலும். இதே நிலைதான் கபிஸ்தலத்தை எடுத்துக்கொண்டாலும். நம்முடைய நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் எல்லாம் நடைமுறையில் தோற்றுவிட்டன. கோவில், மடங்கள், மசூதிகள், சர்ச்சுகள் ஆகியவற்றுக்கு எல்லாம் எதற்காக நிலங்கள்? மடங்களுக்கு உள்ளதுபோல மசூதிகளுக்கு, சர்ச்சுகளுக்கு அதிகமான நிலங்கள் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் இந்த ஸ்தாபனங்களில் நிலங்களை எல்லாம் எடுத்துவிட்டால் மக்கள் தொழுகைக்குப் போகக்கூடாதா? வழிபாடு செய்வதற்குப் போகக்கூடாதா? நிலம் இருந்தால்தான் இவற்றைச் செய்ய முடியுமா?

இன்றையதினம் கோவில் பேரிலும், மடத்தின் பேரிலும் நிலத்தை வைத்துக்கொண்டு தஸ்தாவேஜில் கூட இல்லாமல் ராஜதர்ப்பார் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கால கட்டத்தில் கூட இவற்றை அனுமதிக்க வேண்டுமா? இன்றைக்கு இதுபோன்று தர்ம ஸ்தாபனங்களுக்கு ஏகபோகமாக ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலம் இருந்துகொண்டிருப்பதனால்தான்—கிராமங்களில் எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளையும் கூடச் செய்ய முடிவதில்லை. இந்த ஊர் பஞ்சாயத்துக்களுக்கு இவர்கள் பணம் கொடுத்தால்தான் எதையாவது செய்ய முடியும். ஆகவே, இந்த தர்ம ஸ்தாபனங்களுக்குள்ள நிலங்களை எடுத்தால் நிலம் இல்லாத ஏழை எளிய ஹரிஜன விவசாய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1½ ஏக்கரா, 2 ஏக்கரா என்று கொடுக்க முடியும். இவ்வாறு வழங்குவது மூலம் கிராமப்புறங்களில் ஒரு செழிப்பை ஏற்படுத்த முடியும் என்கிற எங்கள் ஆலோசனையைக் கூறிக்கொள்கிறோம்.

மேலும் இவ்வாண்டு வறட்சியாலும், வெள்ளத்தாலும் பல இடங்களில் பயிர்கள் நாசமாகிவிட்டன. கடன் நிவாரணச் சட்டப்படி கடைசி ஆண்டுக் குத்தகையை இம்மாதம் 10-ம் தேதிக்குள் கொடுக்கவேண்டும் என்கிற கெடு முடிந்துவிட்டது. பலர் வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதனால் இவ்வாண்டு அந்த கெடு காலத்திற்குள்ளாகக்கூட கொடுத்திருக்க முடியாது. ஆகவே அரசு இந்தக் கெடுவை கொஞ்சம் நீட்டிக்கொடுத்தால் கூட நன்றாக இருக்கும் என்கிற ஆலோசனையையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1973 பிப்ரவரி 12] [ஆ. கு. சுப்பையா]

ஆகவே, அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு கெடுவாவது கொடுக்கவேண்டும், அல்லது தள்ளுபடி செய்ய வேண்டுமா என்று ஆலோசிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்வதற்கு விரும்புகிறேன். இல்லையென்று சொன்னால் இதையே சாக்காக வைத்து கெடு முடிந்துவிட்டது என்று சொல்லி, சகலபேர்களும் ரெவினியூ கோர்ட்டுக்குப் போவார்கள். எவிக்ஷன் போடுவார்கள். நெல் 81-வது பசலியில் கொடுக்கவில்லையென்று சட்டப்படி நடவடிக்கை எடுத்து, சட்டப்படி வெளியேற்ற வேண்டுமென்று கேட்பார்கள். அப்பொழுது கட்டு ஆடுவதற்கு வழியே இருக்காது. கட்சி ஆடுவதற்கு வழியில்லையென்று சொல்லும்போது பல்லாயிரக் கணக்கான, குத்தகைதாரர்கள், விவசாயிகள், அவர்களுடைய நிலங்களைவிட்டு வெளியேறக்கூடிய அபாயகரமான நிலை ஏற்படுகிறது என்று நம்முடைய அரசாங்கத்திற்கு சொல்லவிரும்புகிறேன்.

அதேபோல் இனும் சட்டத்திலே இருக்கிற ஓட்டைகளை அடைத்தாகவேண்டும். அதிலே நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. அது நமது மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். முன்னாலே இருக்கிற சட்டங்களை எடுத்துப் பார்த்து அதிலே இருக்கிற தவறுகளையெல்லாம் நீக்கியாக வேண்டும். அன்றைக்கு அவற்றிற்கு நாங்களே திருத்தம் கொடுத்தோம். அவைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அது இன்றைக்கு ஆபத்தாக இருக்கிறது. நிலத்தை யார் அனுபவிக்கிறார்களோ அவர்களுக்குத்தான் பட்டா வழங்க வேண்டுமென்று சட்டம் இருந்தாலும் திருச்சியிலே இனாம்தாரர்களையும் கேட்டுக்கொண்டு குடியிருக்கிறவர்களுக்கும் சேர்த்து ஜாயிண்டாக பட்டா வழங்கக் கூடிய ஆபத்தான நிலை இருக்கிறது. இரண்டுபேருக்கும் சேர்த்து பட்டா வழங்கப்பட்டு இருப்பதால் எங்களுக்குப் பட்டா கிடைத்துவிட்டது, நாங்கள் எப்படி குத்தகை தரவேண்டுமென்று அதிலே குடியிருப்பவர்கள் கேட்கிறார்கள். ஆகவே, அதற்கும் ஒரு திருத்தத்தை அதற்குரிய முறையிலே கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கம், கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகள், பொருளாதார வசதி பெற்று, சுபீட்சமாக வாழவேண்டுமென்று கருதினால், வேறு எந்தத் தொழிலையும் ஆரம்பித்துக்கொடுத்து, நிச்சயமாக அத்தனை பேருக்கும் வாழ்வு அளிக்கமுடியாது. என்பது

சகலரும் அறிந்த உண்மை. ஏனெனில், கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு குடும்பம் குடும்பமாக மக்கள் வருகிறார்கள். நிலப் பிரபுக்களிடமிருந்தும், நிலச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு அதிக வருவாய்க்காக நிலங்களிலிருந்து ஏகபோக வாழ்வை வாழ்கிறவர்களிடமிருந்தும், கோயில் மடங்களிடமிருக்கிற நிலங்களையும் எடுத்து அந்த விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதன் மூலம்தான் கிராமப் பொருளாதாரத்தை நாம் பெருக்கமுடியும். சுபீட்சமாக வாழ வழி ஏற்படுத்த முடியும். அந்தக் காரியத்தை அரசு செய்ய வேண்டுமென்று கூறி, மணலி கந்தசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

* திரு. எம். சுரேந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே சபையிலே மாண்புமிகு மணலி அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற மசோதாவை ஆதரித்து இரண்டொரு விவரங்களைக் கூறவிரும்புகிறேன்.

மனிதர்கள் நாடோடியாகவே நடந்து ஓரிடத்திலே அமர்ந்து, உழுது பயிரிட ஆரம்பித்த நாளிலேயிருந்து, மனிதனுக்கும் நிலத்துக்கும் ஒரு உறவு ஆரம்பம் ஆகியது. அந்த உறவு படிப்படியாக வளர்ந்து பல்வேறு முறையிலே உருவம்கொண்டு பல்வேறு நம்பிக்கைகளுக்கு ஆளாக்கப்பட்டு, இன்றைக்கு வேறு மாற்றங்களைக் கொண்டு வந்துகொண்டிருக்கிறது என்பதுதான் இந்த மசோதாவும் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிற நிலச் சம்பந்தமான சட்டங்களும் நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

நிலச் சம்பந்தமான நிலைமைகள் பற்றி ஆராய்கின்றபொழுது நிலம் இயற்கையாக அமைந்திருக்கின்ற ஒன்றாகும். அந்த நிலத்தை யார் ஜீவனத்திற்காக உபயோகப்படுத்துகின்றார்களோ அவர்களுக்கு மட்டும்தான் அது பயன்படவேண்டும். ஜீவனத்திற்குப் பயன்படுத்துகின்ற ஒரு சாதனமாகத்தான் நிலம் இருக்கவேண்டுமே தவிர வருமானம் சம்பாதித்தளிக்கும் ஒரு கருவியாக அது இருப்பது முறையல்ல. இயந்திரம் வருமானம் சம்பாதிப்பதற்கான ஒரு கருவியாக இருக்கின்றது. இயந்திரங்களைப்போல, அவை அமைந்திருக்கின்ற தொழிற்சாலைகளைப் போல, நிலங்களை அமைப்பது இன்றைய நிலைக்குப் பொருந்தக்கூடியதாக இல்லை என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.



ஆனால், இன்றைக்கு நிலம் வருமானம் தருகின்ற ஒரு கருவியாக, சாதனமாகப் பயன்படுகின்றது. அதுமட்டுமல்ல, ஆதிக்கம் செலுத்துகின்ற கருவியாகவும் நிலம் பயன்படுகின்றது. ஒரு கிராமத்திலே இருக்கிற ஒருவரிடத்திலே அதிகமான நிலம் இருக்கிறது என்று சொன்னால், அவருடைய ஆலோசனை இல்லாமல் அந்தக் கிராமத்திலே எந்தக் காரியமும் நடைபெற முடியாது என்ற அளவிலே சமுதாய உறவுமுறை வளர்ந்திருக்கிறது. அந்த உறவு முறையை விஞ்ஞானம் வளர்ந்திருக்கிற இந்த நேரத்திலே மாற்றி அமைக்க வேண்டுமென்று அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அந்தந்த மாநிலத்திலே வளர்ந்து வருகிற முறைகளுக்கு அனுசரணையாக பல்வேறு சட்டங்கள் கொண்டு வரப்பட்டு, அமுல் நடத்தப்படுகிறது. அந்த சட்டங்களைக் கொண்டு வருவது பெரிய விஷயமல்ல. அவற்றைக்கொண்டு வருவதற்கே கூட இந்த மாநிலத்திலே எழும்பிய எதிர்ப்புகள் நம்முடைய நினைவிலேயிருக்கின்றன. நிலச் சம்பந்தமான சட்டங்களைக் கொண்டு வந்தபோது, இந்த மாநிலத்திலேயிருக்கிற பெரும் நிலச்சுவான்தார்கள், பெரும் ஆர்பாட்டங்களையும், ஏதோ அரசாங்கத்தையே கவிழ்த்துவிடுவதைப் போல, பெரும் கிளர்ச்சிகளையும் செய்தார்கள் என்பது நம்முடைய நினைவிலே இருக்கிறது. ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. இப்பொழுது எங்கேயும் எந்தவிதமான சலசலப்பும் ஏற்படவில்லை. ஆகவே, இப்பொழுது ஓரளவு பக்குவப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

நிலம் என்பது ஏதோ ஒருவருடைய சொத்தாக, ஆதிக்கம் செலுத்துகின்ற கருவியாக, வருமானம் தருகின்ற கருவியாக இருக்கக் கூடாது என்று அத்தனை பேரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பது இன்றிருக்கிற நிலைமை. ஆகவே, பக்குவமான முறையிலே, கருவிகளாக உள்ள இவை, மனித ஜீவனத்திற்குப் பயன்படக் கூடிய நமக்கு அனுசரணையான, முறையான உற்பத்தியை பெருக்குவதற்குச் சங்கடங்களும் இல்லை. இங்கே மட்டுமல்ல, மத்தியிலேயும் சரி, மற்ற மாநிலங்களிலேயும் சரி, இது ஒப்புக்கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இன்றைக்கு உச்ச வரம்பு சட்டத்திலே இவ்வளவு ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்ற அளவு, வரம்பு முறை வைத்திருக்கிறோமே அது அதிகமானது என்பதுதான் பொதுவான கருத்தாகும். எப்படி இருந்தாலும் ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக 20 ஏக்கருக்கு

[திரு. எம். சுரேந்திரன்] [1973 பிப்ரவரி 12

மேல் இருக்கக் கூடாது என்பது அத்தனை பேராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்ருகும். அதை 20 ஏக்கர் என்று வைத்திருப்பது ஏன் என்ருல், குறைந்தபட்சம் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றிருந்தால், அவர்களாகவே உழுகின்ற நிலைமை ஏற்படுகின்ற பொழுது, அதற்கு மேலே அவர்களாலேவே உழமுடியாது. அதிலே நல்ல உற்பத்தி எடுப்பது என்று சொன்ஞல், அதற்கு விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தியாகவேண்டும். அப்படி ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுடைய நிலத்திலே விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்துவதற்கான அத்தியாவசியம், அந்தக் காரியங்களை செய்கின்ற நிலை வளர்ந்துவிட்டால் இன்றைக்கு இருக்கிற உற்பத்தியைவிட அதிகமாக உற்பத்தி செய்யமுடியும் என்பது பல அறிஞர்கள் கண்ட உண்மையாகும். அம்மாதிரி பல நாடுகளிலே ஏற்படுகிறது என்பது நமக்கு தெரிந்திருக்கிற உண்மையாகும். ஆகவே தான் 20 ஏக்கர் தான் அதிகபட்சம் வைத்துக் கொள்ளவேண்டுமென்று நாம் கருதுகிறேம். அப்படி 20 ஏக்கர் என்று சட்டமாகக் கொண்டுவந்தால் போதுமா என்று பார்த்தால் இப்பொழுது இருக்கிற சட்டங்களின் படி இங்கே நிலம் இருக்கிற இடங்களிலே பார்த்தால் இங்கே சட்டம் செயல்படவில்லையென்பது நமக்குத் தெரிந்திருக்கிற உண்மையாகும். ஒவ்வொருவரும் 500 ஏக்கர், 100 ஏக்கர், 50 ஏக்கர் என்று தங்களுடைய அதிகாரத்தின் பேரிலே வைத்திருக்கிருர்கள். சட்டப்படி அவர்களுடைய பெயரிலே இல்லை. வெவ்வேறு பேரிலே இருக்கிறது. அதிகாரமும் அதிலே வருகின்ற வருமானமும், ஒருவருடைய பெயரிலே இருக்கிற நிலைமையிருக்கிறது. சட்டம் என்ன நோக்கத்துடன் வருகின்றதோ என்ன நோக்கத்துடன் வரப் போகிறதோ அது அப்படியே அமுல்படுத்தப் பட்டபின்தான் அந்த சட்டத்திற்கு அர்த்தம் இருக்கிறது. சபையிலே இருக்கிற அத்தனை பேர்களும் சட்டம் கொண்டு வருவது நல்ல எண்ணத்தோடுதான். அதிலே சந்தேகம் கிடையாது. சபையிலே இருக்கிறவர்களுடைய உள்ளங்களும் சரி, அதிகாரிகளுடைய உள்ளங்களும் சரி, அந்த நிலைமைக்கு பக்குவப்படுத்தப்படாத நிலைமையிலே இருக்கிறது.
மாலை இதுதான் சரியானது, நியாயம்தான், உரிமையானதுதான் என்று
5-30 அத்தனை பேருடைய மனதிலேயும் எண்ணம் வந்துவிட்டால்தான் அதைச் சரியாகச் செயல்படுத்தமுடியும் என்று தோன்றுகிறது.

ஆகவே, அரசாங்கம் இப்பொழுது எடுத்துக்கொண்டிருப்பதை விட அதிகமான சிரத்தையை இந்த விஷயத்திலே எடுத்துக்கொள்ள



1973 பிப்ரவரி 12] [திரு. எம். சுரேந்திரன்]

வேண்டியது அவசியம் என்று பல அனுபவங்களிலிருந்து நாம் தெரிந்துகொண்டிருக்கிறேம். இன்றைக்கு விவசாயம் செய்து கொண்டிருக்கிற பல நிலங்களில் குத்தகைதாரர்கள் என்ற பெயரில் விவசாயம் செய்துகொண்டிருக்கிருர்கள். அதிகமான அளவுக்கு நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்களிடம் இருந்து நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வதில் தவறில்லை. அந்த நிலத்தை வைத்துக்கொண்டிருப்பவர் நிலத்தின் உரிமையாளர் என்பதைத் தவிர வேறு அல்ல. பஸ் உரிமையாளர்களை எடுத்துக்கொண்டால் பஸ்களை அவர்கள்தான் வாங்கிஞர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இருந்தாலும் மக்களுக்குத் தேவைப்படவேண்டியவை அவை, மக்களின் வசதிக்காக இருப்பவை அவை என்ற கருத்திலே இன்றைக்கு அரசாங்கம் அவற்றை எடுத்துக்கொள்கிறது. அதிலே ஒன்றும் நமக்கு தவறு தெரியவில்லை. ஆஞல் நிலச் சொந்தக்காரரைப் பொறுத்தவரையிலே நிலத்தை அவர்தான் வாங்கிஞர் என்பதால் அந்த உரிமையை அவரே வைத்துக்கொள்ளலாம் என்று வாதம் செய்வது எப்படிச் சரியானது?

மடங்களுக்கு ஏராளமான நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன, கோயில்களுக்கும் ஏராளமான நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அப்படிச் செய்வது பழைய காலத்திலே தேவையானதாக இருந்திருக்கலாம். பக்தி மிகுந்தவர்கள் தங்களின் தேவைக்கு அதிகமானதை மடங்கள், கோயில்கள் இவற்றிற்காக எழுதியிருக்கலாம் அல்லது பக்தி மிகுந்தவர்கள் தெய்வ காரியங்களுக்காக என்று எழுதி வைத்திருக்கலாம். சில வருஷங்களுக்கு முன்ஞலே ஒரு மடத்தினுடைய நிலத்திலோ அல்லது ஒரு கோயிலினுடைய நிலத்திலோ பிரவேசிப்பது என்ருல் பாவம் வந்துவிடும், நோய் வந்துவிடும், நரகத்திற்குச் செல்ல நேரிடும், கடவுளால் தண்டிக்கப்படுவார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆகவே அன்றைக்கு யாரும் பிரவேசிக்கமாட்டார்கள். ஆஞல் நிலைமை இன்றைக்கு அப்படியில்லை. நரகம் என்பதும், தெய்வம் என்பதும், தண்டிக்கப்படுவது என்பதும், பாவம் என்பதும் எப்படி எப்படி என்ற அறிவு ஏற்பட்டு விட்டது. மக்கள் உலகத்தை நன்ருகப் புரிந்துகொண்டிருக்கின்ற காலம் இது. தெய்வத்தின்மீது பக்தியுள்ளவர்கள் இருந்தால்தான் தெய்வம் எல்லாம் உள்ளவன் என்பது பொருள். பக்தியுள்ளவர்கள் இல்லாமலிருந்தால் தெய்வமும் எதுவும் இல்லாதவன் என்பது பொருள். எல்லாம் உள்ளவன் ஆகவும் எதுவும் இல்லாதவஞகவும்

உள்ள தெய்வம் பக்தியுள்ளவர்கள் இல்லாதவர்கள் இருப்பதைப் பொறுத்துத்தான் ஆகிறது.

ஆக, தெய்வம் எதுவும் இல்லாதவனாகிவிட்ட நிலையில் தெய்வத்திற்கு என்று ஒரு சொத்தை வைத்துத்தான் தெய்வத்தைக் காப்பாற்ற வேண்டுமா? என்ற கேள்வி எழுகிறது. பக்தர்கள் இருந்தால் தெய்வம் எல்லாம் உள்ளவனாகிறான். பக்தர்கள் இல்லையென்றால் எதுவும் இல்லாதவனாக தெய்வம் ஆகிவிடுகிறது. காரணம் தெய்வத்தைக் கொண்டாடுவதற்கு அப்பொழுது ஆள் இல்லாமல் போய் விடுகிறது. தெய்வத்தைக் கொண்டாடவேண்டுமானால் பக்தர்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம் உள்ள அளவிலே இருக்கவேண்டும். இங்கிருந்து சபரிமலைக்கு லட்சக்கணக்கிலே பக்தர்கள் நடந்தே செல்கிறார்கள். ஒரு மாத விரதம் இருந்து நடந்தே செல்கிறார்கள். அவர்கள் அப்படிச் செல்வதற்கு எங்கேயிருந்து உணர்வு வருகிறது? அப்படிப்பட்ட நம்பிக்கை இருக்கிறது அதனால்தான் உணர்வு மூலமாக தான் அப்படிப்பட்ட தியாகத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். பக்தர்கள் இருக்கும் வரையிலும் ஐயப்பன் இருப்பான் என்பதில் சந்தேகம் இல்லை. கோயில்கள் மடங்கள் இருக்கும்வரை எல்லாக் காரியங்களும் நடைபெறும்......

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு உறுப்பினர் நண்பர் சுரேந்திரன் அவர்கள் கூறியது தனது சொந்தக் கருத்தா? அல்லது அன்னார் சார்ந்திருக்கின்ற கட்சியின் கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

திரு. எம். சுரேந்திரன்: மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இப்பொழுது இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பது குறித்து ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. இந்த நவீன காலத்திலே, நவீனப் போக்கிலே, சந்திரனுக்கு மனிதன் சென்றுவரக்கூடிய நேரத்திலே இது உங்களுடைய கருத்தா அல்லது கட்சியினுடைய கருத்தா என்று கேட்கிற நிலைக்கு திரு. ஜேம்ஸ் அவர்கள் வந்திருப்பது சரியல்ல......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): எப்பொழுது முடிப்பீர்கள் என்று சொல்லுங்கள்.



திரு. எம். சுரேந்திரன்: சொன்னால் இப்பொழுதே கூட முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): எப்பொழுது முடிப்பீர்கள் என்று கேட்டேன். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தாங்கள் சார்ந்திருக்கின்ற கட்சிதான் இப்பொழுது மத்தியிலே ஆட்சியிலே இருக்கிறது. ஆகையால் இந்தச் சட்டத்தை மத்தியில் பாராளுமன்றத்தில் கொண்டுவர அன்னார் தீர்மானம் போட்டு நிறைவேற்றுவதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்கின்ற கேள்வி, சரியான பதில் சொல்லவேண்டிய கேள்விதான். அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. இன்றைக்கு மத்தியிலே இருக்கிற அரசும், பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் நிலச் சீர்திருத்தங்கள் மட்டுமல்ல, பல திருத்தங்களை, சீர்திருத்தங்களைக் கொண்டுவரத் தயாராக இருக்கிறார்கள். அந்த வகையிலே தான் அரசியல் சட்டத்திலே 25-வது திருத்தம் கொண்டுவந்திருப்பதே இம்மாதிரியான காரியங்களைச் செய்வதற்காகத்தான் என்பதை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

மனிதனின் பகுத்தறிவுக்குப் பொருந்துகின்ற எந்தக் காரியத்தையும் செய்வதிலே தவறில்லை. மனிதன் வைதீகமாகவே என்றைக்கும் இருக்கமுடியாது. இன்றைக்கு நிலைமை மாறிவிட்டது, வைதீகத்தை வைத்துக்கொண்டிருப்பது வாழ்வுக்கு முரணாக அமைந்துவிட்டது. ஆகவே, இதுபோன்ற சீர்திருத்தங்களைக் கொண்டுவந்துதான் ஆக வேண்டும்.

இந்த மசோதாவானது ஒரு சாதாரண விஷயம்தான், பெரிய பிரச்சினையல்ல. கோயில் நிலங்களை எடுத்துக்கொள்வதாய் இருந்தாலும், மடங்களின் நிலங்களை எடுத்துக்கொள்வதாய் இருந்தாலும், மசூதியின் நிலத்தை எடுத்துக்கொள்வதாய் இருந்தாலும் அது தெய்வத்திற்கு விரோதமான காரியமல்ல. தெய்வத்திற்கு ஏற்படக்கூடிய

கெட்ட பெயரை ஓரளவிற்குத் தடுக்கக்கூடிய காரியம்தான். அதனுல்தான் சர்ச்சை வருகிறது, பேச்சு வருகிறது, கிளர்ச்சி வருகிறது. தெய்வத்தின் பெயரால் இது எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. வேதங்கள், சாஸ்திரங்கள், உபநிடதங்கள் சொல்கிற முறையிலேதான் தெய்வத்தை வணங்க வேண்டுமே தவிர, பொருளாதாரப் பிரச்சினைகளை தெய்வத்திற்குக் கொடுக்கக்கூடாது. இந்த அரசு முறையாக கவனம் செலுத்தி நிலத்திலே பலவாறு ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்ற நிலையை நாம் தாங்கிக்கொண்டிருக்கக் கூடாது. அதற்காக ஒரு மெஷினரியை ஏற்படுத்தவேண்டும். நிர்வாக இயந்திரம் முதலாளித்துவத்தின் நம்பிக்கையிலே வளர்ந்துவந்ததாக இருக்கிறது. அதனுல்தான் நாம் இந்த நிர்வாகத்திற்குப் பதிலாக வேறு ஒரு அமைப்புக் கொண்டு வருவதற்கு முனைந்து முயற்சிக்க வேண்டும். இந்த அரசு ஆங்காங்கே சிறிய சிறிய கமிட்டிகள் அமைத்து இதைப்பற்றிய உண்மையான நிலைமையை உணர்ந்து திருத்துவதற்கு முயற்சி செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மசோதாவின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்......

* * * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): * * * திரு. கணபதி அவர்கள் எழுப்பிய பிரச்சினை முழுவதையும் சபையின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாற்றுத் தலைவரவர்களே, நான் இது குறித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சரித்திரத்தைப்பற்றி ஆராயும்பொழுது ஒரு காலத்தில் அதிகாரம் படைத்த ரோமாபுரி சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்கள் இன்னொரு மதத்தினரை இம்சை செய்ததாக அறிகிறோம். இது பழங்காலத்திலிருந்து வந்தது. லட்சக்கணக்கான

---

*மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மக்களை சிலுவையிலே அறைவது, நெருப்பிலே கொளுத்துவது போன்ற நிகழ்ச்சிகளைச் சரித்திரத்திலே பார்க்கிறோம். இவைகளெல்லாம் மத மாச்சர்யங்களால் ஏற்பட்டவையாகும். இதெல்லாம் பழங்கதையாகிவிட்டது, ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் மற்ற மதத்தினரை வெறுப்பது, பொறுத்துக் கொள்ளாத தன்மை முதலியன அந்தக் காலத்திலேயிருந்தது என்று பார்த்தோம். ஆனுல் துரதிருஷ்டவசமாக வேறொரு முறையில் வேறொரு ரூபத்தில் அந்தத் தன்மை வந்திருப்பதைப் பார்க்கிறோம். அது எந்த முறையிலே என்றுல் இன்றைக்குப் புதிய மதம் ஒன்று உருவாகியிருக்கிறது. எந்த மதத்திலும் நம்பிக்கையற்ற தன்மையில் "நாத்திகம்" என்ற புது மதம், புதுக்கொள்கை உருவாகியிருக்கிறது.

நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னென்ன மதத்தை நாம் நேசிக்கிறோமோ, எந்தெந்த மதத்தின்மீது விசுவாசம் கொண்டிருக்கிறோமோ, நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறோமோ, எந்தக் கடவுளிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறோமோ அதைக் கடைப்பிடிக்கிறோம். ஆனுல் எந்தக் கடவுளிடமும் நம்பிக்கையில்லாதவர்கள், எந்தக் கொள்கையிலும், எந்தத் தத்துவத்திலும், எந்தச் சித்தாந்தத்திலும், நம்பிக்கையில்லாமல் இருப்பவர்களைப்பற்றி எந்த விதமான ஆட்சேபணையும் எனக்கில்லை, எந்தவிதமான தர்க்கமும் எனக்கில்லை. ஆனுல் நான் ஒரு மத விசுவாசியாக, சனுதனியாக இருப்பதை எந்த மதத்திலும் நம்பிக்கையில்லாமலிருப்பவர்கள் என்னுடைய மதச் சடங்குகளில், என்னுடைய மத உரிமைகளில், வழிபாட்டு முறைகளில், தலையிடுவது என்றுல் இதுதான் நாம் ரோமாபுரி சாம்ராஜ்யத்தில் கண்ட சகிப்பில்லாத தன்மையாகும். இதை நேரிடையாகச் சொல்வதற்குப் பதிலாக இக்காலத்தில் வளர்ந்தவர்கள், ஒரு அறிவின் திறனைக்கொண்டு இப்பொழுது வேறொரு மாற்று ரூபங்களில் மத நம்பிக்கைக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தி, அந்தக் கொள்கையைத் திணிக்கிறுர்கள். இந்தக் கொள்கை திணிப்புதான், இந்த வணக்க ஸ்தலங்களுக்குச் சொந்தமான சொத்துகளை அபகரிக்க வேண்டுமென்ற திட்டம் ஆகும். இந்தச் சகிப்பில்லாத தன்மையின் அடிப்படையில் எழுதுவதுதான் மார்க்க ஸ்தலங்களுக்கு, வணக்க ஸ்தலங்களுக்கு சொந்தமான சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற தத்துவம் என்பதை நான் உங்களுக்கு விளக்கிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 பிப்ரவரி 12

நான் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாட்டிலே ஏற்படும் நிலச்சீர்திருத்தத்தை நானும், எங்கள் கட்சியும் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். உண்மையிலேயே நிலம் உழுபவனுக்குத்தான் சொந்தமாக ஆக்கப்பட வேண்டுமென்பதில் சர்ச்சை இல்லை. ஆனால் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் நம்பிக்கை கொண்டிருக்கின்ற இஸ்லாமிய மதத்தில், நபி காலத்தில் சையத் அலி என்ற ஊழியருக்கு நிலம் கொடுக்கப்பட்டது. அவர் அனுபவிக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டது. ஆனால் அவர் பல அலுவல்கள் காரணமாக அந்த நிலத்தை உழாமல் இருந்து வந்தார். பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள், சையத் அலி அவர்கள் நிலத்தை உழாமல் வைத்திருந்ததால் அந்த நிலத்தைக் கைப்பற்றினார்கள். ஏனென்றால் உழுது பயனடைபவர்களுக்குத்தான் நிலம் சொந்தமாக இருக்க வேண்டுமே தவிர உழாது, தரிசாக வைத்திருப்பவர்களுக்கு அந்த நிலம் சொந்தமல்ல என்ற தாத்பர்யத்தை 1,400 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாமிய மதம் நிலைநிறுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் கட்டுப்பாட்டின் அடிப்படையில், அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் நான் இங்கே பேச ஆரம்பிக்கிறேன்.

ஒரு விஷயத்தை உணர வேண்டும். வசதியுள்ள ஒரு மனிதன், தன்னுடைய வாழ்க்கையிலே தான் நம்பிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கடவுளுக்கு, வணக்க ஸ்தலத்திற்காக ஒரு சொத்தை எழுதினான் என்றால் அந்தச் சொத்தைத் தூக்கியெறிவதற்காகக் கொடுத்ததா? வீணான காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டதா? மதத்தில் நம்பிக்கையற்றவர்கள் வேண்டுமானால் அது வீணாக்கப்பட்டு விட்டது என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் ஒரு மசூதிக்கு 20 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது என்றால் அந்தப் பள்ளி வாயிலைச் சேர்ந்தவர்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்களோ அத்தனைபேர்களுக்கும் அந்த 20 ஏக்கர் நிலம் சொந்தம் என்ற தத்துவத்தை ஏனோ மறுக்கிறார்கள். ஒருகோயிலுக்கு 100 ஏக்கர்கள் நிலம் இருக்கிறது என்றால் அந்தக் கோயிலிலுள்ள கடவுளை வணங்கக்கூடிய அத்தனை ஆயிரம் மக்களுக்கும் அந்த 100 ஏக்கர் சொந்தமாகிறது. எனவே அந்தச் சொத்து மொத்த பொருளாக, ஒரு கூட்டுச் சொத்தாக வருகிறதே தவிர இந்தக் காலத்திலே பேசப்படும் கூட்டுத் தத்துவங்களுக்கு இது மாறானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1973 பிப்ரவரி 12] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

அத்துடன் ஒரு விஷயத்தை கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முஸ்லீம் மக்களுக்கு, அவர்களது வணக்க ஸ்தலங்களுக்கு சில பல காரியங்கள் நடக்க வேண்டியதாக இருக்கிறது: உதாரணத்திற்கு அங்கே தொழுகை நடத்துவதற்கு இமாம் என்று ஒருவர் இருக்கிறார்கள். அவருக்கு உறுதுணையாக மதத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் வேலைகளைச் செய்வதற்கு இருக்கிறார்கள். பள்ளி வாயிலை சுத்தமாக வைத்துக்கொள்வது போன்ற வேலைகளைச் செய்வதற்கு இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சம்பளம் கொடுப்பது யார்? இவர்களுக்கு அன்றாடம் கொடுப்பதற்குப் பதில் சொத்தை ஏற்படுத்தி அதன்மூலம் வருகின்ற வருமானத்தைக் கொண்டு இந்த மசூதிகளை, வணக்க ஸ்தலங்களைப் பராமரிப்பதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

உண்மையிலேயே ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒருவருடைய கொள்கையை மத சம்பந்தமான விஷயங்களில் இன்னொருவரின்மீது திணிப்பது என்பது அரசியல் சாசனத்திற்கு விரோதமானது. அதை அனுமதிக்க முடியாது. அதை எந்தக் காலத்திலேயும் ஒப்புக்கொள்ள முடியாது என்று இந்தச் சட்டசபையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முஸ்லீம் சமுதாயம் 150 கோடி ரூபாய்க்கான சொத்துக்களை பலபேர்களின் கையில் இழந்திருக்கிறது. ஆனால் இருக்கின்ற கொஞ்சநஞ்சம் சொத்துக்களையும் ஒழுங்காக நாங்கள் பராமரிக்க முடியாத நிலையில், பராமரிப்பதற்குப் போதுமான பாதுகாப்பு சட்டங்கள் இல்லாத சூழ்நிலையில் நாங்கள் பல சிரமங்களுக்கு ஆளாகிறோம். இம்மாதிரியான சூழ்நிலையில் வணக்க ஸ்தலங்களுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பிடுங்கிக்கொள்வது என்பது உண்மையிலேயே நியாயத்திற்கு விரோதமாகும். கோயில் சொத்துக்களாக இருந்தாலும் சரி, சர்ச்சுகளின் சொத்தாக இருந்தாலும் சரி, பள்ளிவாயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களாக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட வணக்க ஸ்தலங்களுக்கு உரிய சொத்துக்களைப் பிடுங்கிக்கொள்வதை நான் இந்தச் சபையிலே பலமாக ஆட்சேபிக்கிறேன்.

மற்றொரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று, இப்படி 15 ஏக்கர் நிலங்களை ஒதுக்கிவிட்டால், அவர்களது குடும்பத்திலே 5 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், அதில் 2 பேர்கள் பெண்கள் என்றால், அந்தப் பெண்கள்

வீட்டில் வேலையைக் கவனித்துக்கொள்வார்கள். பாக்கியுள்ள 3 பேர்கள் மட்டும் உழ முடியுமா? அதற்கு 20, 25 ஆட்கள் நடவு நடுவதற்கு வேண்டும். பிறகு களையெடுப்பதற்கு ஆட்கள் வேண்டும். பிறகு அறுப்புக் காலத்தில் மற்றவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். அப்படி அந்த நிலத்தில் யார் யார் கை வைக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் நிலம் சொந்தம் என்ற தாத்பர்யத்தை, கொள்கையை கொண்டுவந்தால் என்ன ஆகும்? அதைப்புரிந்து கொள்ள விரும்புகிறேன். 5 பேர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை அந்த 5 பேர்கள் மட்டுமே பராமரிக்க முடியாது. மற்றும் 20 பேர்களின் உதவி தேவைப்படுமே. அந்த 20 பேர்களுக்கும் அந்த நிலத்தைத் துண்டுபோட்டுக் கொடுக்க முடியுமா? ஆகவே, ஒருவர் மற்றவர்களுக்குக் கொடுத்ததைப் பிரித்து வேறு சிலருக்கு வழங்குவது தான் ஏதோ மனித சமுதாயத்தில் பெரிய தத்துவத்தைக் கொண்டதாக இருக்கும் என்று கருதினால் அது ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்வதாகும், அது நியாயமற்றது, தர்மமற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே அரசு கொண்டுவந்திருக்கும் சட்டமே போதுமானவையாகும். சமதர்மத்தை நிலைநாட்டுவதற்கு அவைகளே போதுமானதாக இருப்பதால் இனியும் புதிதாக சட்டம் தேவையில்லை. குறிப்பாக மத உரிமைகளிலே தலையிடக்கூடிய இந்தச் சட்டம் நிச்சயமாகத் தேவையில்லை என்று கூறி இத்துடன் விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, திரு. மணலி அவர்கள் கொண்டு வந்துள்ள மசோதாவை ஆதரித்துப் பேசுகின்றேன். இந்த நிலச்சீர்திருத்தம் என்பது தேசீயக் கோரிக்கையாக, "நேஷனல் டிமாண்ட்" ஆக இன்றைக்குப் பெருமளவிற்கு நிலைத்து விட்டது. நிலச்சீர்திருத்தம் என்பது பொதுவாக நிலச்சீர்திருத்தம் என்றாலும், குறிப்பாக, ஓரளவிற்கு உழக்கூடிய முறையிலே எந்த அளவிற்கு வேண்டுமோ அதைவிட்டு, மீதியிருக்கும் நிலங்களை எடுத்து நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுப்பது என்பதுதான். நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகி, குறிப்பாகக் கிராமப்புறத்திலே இருக்கும் மக்கள் இன்றைக்கு வேலையில்லாமல் பலபேர் வேலைதேடி நகரங்களுக்குச் செல்வதும், நகரங்களில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்குப் போட்டியாகக் குறைவான சம்பளத்திற்கு வேலை செய்வதும் நாம் அறிந்ததே.



ஆகவே, அடிப்படையிலே தொழில் வளர்ச்சி இல்லாத காரணத்தால் நிலத்தை நம்பியே வாழ வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, இந்த நிலச் சீர்திருத்தம் ரொம்ப அவசியமாகிறது. 1950-ம் வருஷத்திலிருந்து நம்முடைய பாசன வசதிகளை எடுத்துக்கொண்டாலும் ஒரு போகத்தை இரு போகமாக மாற்றியதாலும் 20 பர்செண்ட் பூமிதான் அதிகப்படியாகக் கிடைத்தது. ஜனத்தொகை அதிகப்படியாக ஆகிக்கொண்டிருக்கும் நிலையில் நிலச் சீர்திருத்தத்தின் மூலம் உழக்கூடிய எல்லோருக்கும் நிலம் கொடுப்பது என்பது ஆகாது. ஓரளவு விவசாயிகளுக்கு அந்த நிலங்களைப் பிரித்துக் கொடுக்க முடியும். இதற்கு மேல் பாசன வசதியையும் அதிகரிக்க முடியாது. பூமியையும் நீட்ட முடியாது. ஆகவே, இது பர்மனென்ட் ரிடக்ஷன் தான். இதற்கு மேல் பூமியை நீட்ட முடியாது. தொழிலில் முன்னேற்றம் ஏற்பட்டு விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் தொழிலுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது பூமியை நம்பி இருக்கக்கூடிய நிலை குறையும். தொழில் அதிகமில்லாத நிலையில் இன்றைக்கு பூமி இல்லாதவனுக்கு வேலை இல்லை. பூமி இருக்கிறவனுக்குத்தான் வேலை இருக்கிறது.

இதையெல்லாம் அனுசரித்துத்தான் காங்கிரசானது தான் ஜெயித்தால் இந்தியா பூராவும் நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த அடிப்படையில்தான் 9 பேர் கொண்ட கமிட்டியை அமைத்தார்கள். அவர்களும் பல முக்கியமான தீர்மானங்களைக் கொண்டு வந்தார்கள். அதில் ஒன்று—"ஃபாமிலி என்ற டெபனிஷன் கூடாது—பிக்ஸடாக இருக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். இந்த மசோதாவில் கூட ஃபாமிலிக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருக்கிறது. ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றே இருக்கக்கூடாது, பிக்ஸடாக 15 ஏக்கர் என்று இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு ஆண் அதிகமாக இருந்தால் 2 ஏக்கர். காமராஜ் மாதிரி இருக்கக்கூடிய ஆட்களுக்கு 5 ஏக்கர் போதும். அந்த மாதிரி திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். 21(எ)ல் யாருக்கு வேண்டுமானாலும் பிரித்துக் கொடுக்கலாம் என்பதை ரத்து செய்ய வேண்டும். குத்தகைதாரர் பத்து வருஷம் தொடர்ந்து உழுதால் அவனுக்கே பூமியைச் சொந்தமாக்க வேண்டும்.

ஃபாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட் இருக்கிறது. பிரைவேட் ஃபாரஸ்ட்ஸ் $1\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் இருக்கிறது. ஏற்கனவே

ஃபாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட் இருக்கும்போது பிரைவேட் பாரஸ்ட்ஸ் என்று தனிப்பட்டவர்களிடம் ஏன் 1½ லட்சம் ஏக்கர் நிலங்கள் இருக்க வேண்டும்? அந்த நிலங்களையும் எடுத்து நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கலாம். இவ்வளவு சட்டங்களைச் செய்தும், 9 பேர் குழு அமைத்தும் 14 மாநிலங்களில் 3 மாநிலங்களில்தான் சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆந்திராவிலே முல்கிக்கு எதிராக தகராறு நடக்கிறது என்றால் நகர்ப்புற சொத்து வரம்பு கொண்டு வந்தது, நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்ததையெல்லாம் எதிர்க்கிறவர்கள் எல்லாம் அதிலே சேர்ந்து கொண்டு கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இதை அமல் செய்வதிலே கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஜில்லா மட்டத்தில், தாலூகா மட்டத்தில், கிராம மட்டத்தில் கமிட்டிகள் போட்டு அந்தந்தப் பகுதியில் இருக்கும் அதிகப்படியான நிலங்களை எடுத்து நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்தால்தான் உண்மையிலேயே அவர்கள் கைக்கு போய்ச் சேரும். வெறும் சட்டங்களால் ரிட், லிடிகேஷன் என்ற முறையில்தான் போய்க் கொண்டிருக்கிறது.

சர்க்காருக்கும் மடத்திற்கும் என்ன சம்பந்தம்? கோயிலை வேண்டுமானால் விட்டு விடுங்கள். மகமதியர் கோயிலாக இருந்தால் ஊதுவத்தி வேண்டும். இந்துக்கள் கோயிலாக இருந்தால் சாம்பிராணி வேண்டும். கிறிஸ்த்தவர்கள் கோயிலாக இருந்தால் விளக்கு வேண்டும். மெயின்டனன்சுக்குப் பணம் கொடுத்து விட்டால் போதுமானது. நிலம் மடத்திற்கோ வேறு எதற்குச் சார்ந்ததாக இருந்தாலும் உழுபவனுக்கு சொந்தமாக வேண்டும். கிராம மட்டத்திலும், ஜில்லா மட்டத்திலும் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டும், சட்டங்களை அமல்படுத்துவதில் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நண்பர் மணலி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மசோதாவை எதிர்த்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாலை

எனக்கு முன்னதாக தீர்மானத்தின் மீது உரையாற்றிய கம்யூனிஸ்டு நண்பர்கள் மடத்திற்குச் சொத்துக்கள் இருப்பது சாம்பிராணிக்காகவும், கிறிஸ்த்தவ ஆலயங்களுக்கு விளக்குக்காகவும் இருக்கிறது என்றார். தேவதைகள் கோபித்துக்கொள்ளாமல்



இருக்க வேண்டுமென்பதற்காக கோயில்களுக்குச் சொத்து வைத்திருக்கிறார்களோ என்ற கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். கிறிஸ்த்துவ ஆலயங்களுக்கு நிலங்கள் இந்த அடிப்படையில் சொந்தமாக வைக்கப்படவில்லை. வேறு பல காரணங்கள் இருக்கின்றன. இன்று மதச் சார்பற்ற ஜனநாயக அடிப்படையில் நாம் ஆட்சி செய்கிறோம். மதம் என்று சொன்னால் அது தனிப்பட்ட மனிதர்களின் சுதந்திரம் என்பதிலே ஐயப்பாடு இல்லை.

ஆக, மதத்தில் அரசாங்கம் தலையிடுவது அல்லது மதத்தைச் சார்ந்த காரியங்களில் அரசு தலையிடுவது என்றால் நிச்சயமாக அது அவர்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி அளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தில் கைவைப்பதற்கு ஒப்பாகும்.

தலைவர் மணலி அவர்கள் இதை இந்த மன்றத்தில் கொண்டுவருவதற்கு சில அடிப்படைக் காரணங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். உழுபவனுக்கே நிலம் சொந்தமாகவேண்டும், இந்த நாட்டில் உற்பத்தி பெருகவேண்டும், உழுபவனுக்கே பாதுகாப்பு இருக்கவேண்டும் என்ற கொள்கைகளின் அடிப்படையில் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படியென்றால் நிச்சயமாக அந்தக் கொள்கைகளை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

அப்படி அந்தக் கொள்கைகளை நான் ஆதரித்தாலும் கூட மதஸ்தாபனங்களுக்கு சொத்து இருக்கவேண்டும் என்பதற்காக சட்டத்தில் விதிவிலக்கு கொடுத்திருப்பதற்கு போதிய காரணங்கள் உள்ளன என்பதையும் இந்தத் தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கிறிஸ்த்தவ மதம் பரவலாக இருக்கிறது. முக்கியமான சிறுபான்மை சமுதாயமாக அது இருக்கிறது. கழிந்த பல ஆண்டுகளாக இந்த நாட்டில் அரசு செய்ய இயலாத காரியங்களை, அரசுக்கு செய்ய இயலாத பல சமூகச் சேவைகளை இந்த கிருத்தவ மதம் செய்துகொண்டிருந்தது என்பதை நாம் நன்கு உணருவோம். மதத்தைப் பொறுத்தவரையில் ஆலயங்கள் உள்ளன, அவற்றைப் பராமரிக்க பல ஊழியர்கள் இருக்கிறார்கள். அதற்காக பணம் தேவைப்படுகிறது என்றாலும் அதற்குச் சற்றும் குறையாத அளவில் கல்வித் துறையிலும், மருத்துவத் துறையிலும், தொழில் துறையிலும் கிருத்தவ மதத்தினர் அதிகமாக ஈடுபட்டு வந்துள்ளதை தமிழக மக்கள் அறிவர். இந்த நாட்டை ஆங்கிலேயன்

ஆண்டுவந்தபோது கிராமங்கள் அதிகக் கவனம் செலுத்தப்படாத நிலையில் இருந்தன. எனவே அங்கு கல்வி வசதிகள் ஏற்படாமல் இருந்தன. எனவே கிருத்தவ மிஷனரிகள் ஆங்காங்கு அவர்களுக்கு ஒருவேளை வசதியில்லாமல் இருந்தாலும் கூட மிகவும் கஷ்டப்பட்டு கிராம மக்களுக்கு கல்வி வசதிகளைச் செய்து கொடுத்தார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அன்று மிஷனரிமார்கள் கல்வித்துறையில் போதிய பொறுப்போடு சேவை செய்து வந்தார்கள், அதன் விளைவாகத்தான் நம் மாநிலம் இன்றையதினம் கல்வித் துறையில் மிகச் சிறப்போடு விளங்குகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு வந்த ஆட்சி கல்வித் துறையில் அதிகக் கவனம் செலுத்தியுள்ளது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இன்றுள்ள நிலைமைக்கு அன்று இருந்த மிஷனரிமார்கள் கல்வித் துறையில் செய்த சேவைதான் முக்கிய காரணம் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதைப் பொறுத்தவரையில், என் மாவட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் அதிகமாக ஆரம்பக் கல்வி அத்தனையையும் கிருத்தவ மதத்தினர்தான் நடத்திக் கொண்டிருந்தார்கள். அன்று கல்வி நிறுவனங்களுக்கு அரசாங்கத்திலிருந்து பெரிய கிரான்டோ அல்லது ஆசிரியர்களுக்கு ஊதியம் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிப்பதற்காக மிஷனரிமார்கள் சற்று சொத்து சம்பாதித்து வைத்திருக்கிறார்கள். அதிலிருந்து வருகிற வருவாயை கல்வித் துறைக்காக இன்றுவரையில் அவர்கள் செலவு செய்து வருகிறார்கள். ஆரம்பக் கல்வி பற்றிச் சொன்னேன். அதேபோன்றுதான் உயர்நிலைப் பள்ளிகளும்.

எங்கள் ஜில்லா சிறிய ஜில்லாவாக இருந்தாலும் அங்கு கிருத்தவ மதத்தினரால் நடத்தப்படக்கூடிய உயர்நிலைப் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. பல பிரிவுகளைச் சார்ந்தவர்களும் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறார்கள். அப்படி அவர்கள் கல்விச்சாலைகளை நடத்துவதால் அரசுக்கும் சிரமம் சற்று குறைகிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் அரசு ஒரு கல்லூரியைக் கூட நிறுவ முன்வரவில்லையென்றாலும் கூட மிகச் சிறந்த முறையில்



கிருத்தவக் கல்லூரிகள் பல செயல்பட்டு வருகின்றன. அதுபற்றி நான் கேட்கும்போது கல்வி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அங்கே தனியார் கல்வி நிறுவனங்கள் சிறந்த முறையில் இருக்கின்றன, ஆகவே அரசு ஒரு கல்லூரியை நிறுவத் தேவையில்லை என்று கூறுவார்கள். மதத்தின் சார்பில் நடத்தப்படுகிற கல்லூரிகள் அங்கு இருப்பதால் அரசுக்கும் சிரமம் அத்துறையில் குறைந்திருக்கிறது. அடுத்தபடியாக மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால் தமிழ் நாட்டில் மருத்துவத் துறையில் கிருத்தவ மதத்தினர் ஆங்காங்கு மருத்துவமனைகளை அமைத்து சிறந்த சேவை செய்து வருவதை நாடு நன்கு அறியும்.

வேலூரை எடுத்துக்கொண்டால் நம் தமிழ்நாட்டிலே உள்ள சிறந்த மருத்துவமனை அங்கு இருக்கிறது. அதேபோன்று எங்கள் மாவட்டத்தில் உள்ள நெய்யூர் மருத்துவமனை ஒன்று தென் இந்தியாவில் வைத்தே மிகச் சிறந்து விளங்கிற்று. அந்தச் சிறந்த மருத்துவமனையில் டாக்டர் சாமர்வெல் என்ற ஆங்கிலேய மருத்துவர், உலகப் புகழ்பெற்ற அவர்கள் அந்த மருத்துவமனையில் இலவசமாக பணியாற்றி வந்தார்கள்.

அதுமட்டுமல்ல, பல்வேறு கிராமங்களில் கிருத்தவ மிஷனரிமார்கள் மருத்துவ மனைகளை அமைத்து ஏழை எளியவர்களுக்கு இலவசமாக வைத்திய வசதி செய்து வந்தார்கள் என்பதையும் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அதேபோன்று காத்தரைன்பூத் போன்ற மற்ற ஆஸ்பத்திரிகளும் செயல்பட்டுவருகின்றன. இவ்விதத்தில் மருத்துவத் துறையிலும் நம் அரசுக்குள்ள சிரமம் சற்று இதனால் குறைகிறது.

எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால் கிருத்துவ மதம் மதத்திற்காக மட்டுமல்ல சமூக சேவையிலும், அரசாங்கம் செய்யவேண்டிய பல்வேறு துறைகளில் அரசுக்கு உறுதுணையாக நிற்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான். அப்படிப்பட்ட அந்த மதத்திற்கு ஒரு நூறு ஏக்கர்கள் நிலம் இருக்கிறதென்றால் அதிலிருந்து கிடைக்கிற வருவாயை வைத்துத்தான் இவற்றையெல்லாம் நடத்தி வருகிறார்கள். இது போக, தாராள மனம் படைத்த மக்களிடமிருந்தும் நன்கொடை பெற்று நடத்திவருகிறார்கள். ஆக அரசுக்கு உறுதுணையாக நின்று அரசு செய்யவேண்டிய பல வேலைகளை இந்த கிருத்தவ மிஷனரிமார்கள் செய்துவருகிறார்கள். இதுபோல் தொழில் துறையிலும் கூட,

தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அங்கு ஒரு தொழில் நிறுவனம் இருக்கிறது. ஆயிரக்கணக்கான பெண்களுக்கு, ஏழைப் பெண்களுக்கு ஒரு வேலை கொடுக்கிற லேஸ் இண்டஸ்ட்ரி அங்கு செயல்பட்டு வருவதன் காரணமாக அங்கு தொழில் வாய்ப்பு ஏற்படவும் வழி செய்கிறார்கள். அந்நிலையில் அவர்களுக்குச் சொந்த மாக உள்ள நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாய் இக்காரியங் களுக்காக சற்று உதவிகரமாக இருக்கிறது.

தலைவர் மணலி அவர்கள் கடவுளுக்கு நிலம் எதற்கு, கடவுள் சாப்பிடுமா என்று கேட்கக் கூடும். என்னைப் பொறுத்து கடவுள் சாப்பிடும் என்று நான் நம்பவில்லை. கடவுளுக்கு நிலம் தேவையில்லை. ஆனால் நான் இதுவரை கூறிய நல்ல காரியங்களுக்கு பணம் தேவைப் படுகிறது. அதற்காக ஏற்கனவே உள்ள நிலத்திலிருந்து வருவாய் வருகிறது என்றால் அந்த நிலத்தையே எடுத்து அப்புறப்படுத்துவது என்றால் அதனால் அரசுக்கு கஷ்டமும் தொல்லையும்தான் வருமே தவிர அந்த ஸ்தாபனங்களை அரசாங்கமே ஏற்று நடத்துவது என்றால் இப்போது செலவு செய்யப்படுகிற பணத்தை விட பத்து மடங்கு அதிகமாக அரசு செலவு செய்தாலும்கூட அவற்றை சரிவர செய்ய இயலாத நிலை ஏற்படும். ஆகவே மதத்திற்கு என்று இருக்கிற நிலங்களை எடுப்பதால் நிச்சயமாக நிலைமை மாறாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் இந்த நிலங்களை எடுத்து உழுபவர்களுக்குக் கொடுத்தால் நூறு ஏக்கர் நிலம் அங்கிருக்கிறது என்றால் 100 விவசாயிகளுக்கு, 100 குடும்பங்களுக்கு ஒருவேளை வாழ்வளிக்கக் கூடிய முறையில் அது இருக்கலாம்.

ஆனால் இப்போது இருக்கிற முறையில் மதத்திற்குச் சொந்தமாக சொத்து இருக்கிறது என்று சொன்னால், அது நான் சொன்ன இத்தனை நன்மைகளையும் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கிறது. அதை எடுத்து உழவர்களுக்கு கொடுத்தால் அதிகமான நன்மைகள் வரும் என்று சொன்னால் அதை நிச்சயமாக ஒத்துக்கொள்ள இயலாது. என்னைப் பொறுத்தவரையில், இந்த நிலங்களை எடுப்பதை விட பல் வேறு மதத்தினரிடமுள்ள நிலங்கள் நல்ல முறையில் சேவை செய்யப் பயன்படுகிறது என்கிற காரணத்தால் அந்த அமைப்பே, அந்த முறையே இருப்பது நல்லது என்று கருதுகிறேன். அந்த முறையில்



இந்தத் தீர்மானத்தை நான் வன்மையாக எதிர்த்து, இந்த நோக்கம் நல்ல நோக்கமல்ல என்பதைக் கூறி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* THIRUMATHI M. ALDA FOWLER: Mr. Chairman, Sir, I would like to say a few words this afternoon, on behalf of the Christian churches. They have come in for criticism this afternoon and I feel that a few words should be said on behalf of them. It is true that some of the Churches have lands attached to them. This might have been acquired or it might have been handed over as from a previous Government. Whether this is so or not, the purpose for which a church acquires lands, is not for the sake of a feeling of ownership or to surround it with possessions or to make itself rich. There is a purpose always when land is acquired by a church. You and I know that the pioneer of education and medicine was the Christian churlh. It was the church that started schools and spread them all over the country. It was the church that started hospitals and that was the purpose for acquiring lands and not for any other purpose.

To-day the church is poor. You may not think so. There may be a rich church or two and I do not know them. I only know poor churches. Their needs are great and it is the church that must meet the need. I speak of the church with which I am familiar. If there is poverty, the church must be there. If there is flood or famine, the church must rush to its aid and in order to meet the human needs, the church has to produce money also. It is not as if they get it from foreign missions, as is so erroneously conjectured by so many Members here. We have to get it in small ways, from Sunday schools and from little children who are taught by the church. To-day the church has shed all its old-fashioned ways and habits. It is alive to the needs of modern people in a modern world and you will find that the church has to meet this need. You will ask, how?

Instead of putting up new hospitals which the Government can look after, now the church is putting up workshops, institutions for training and so on and so forth, because the modern day needs have to be met. So, Sir, I would like to submit that this idea of the wealth of a church, according to the land it possesses, is

not a correct picture at all. The church has to use that land. There are many ways of giving something than parcelling out the land and giving it away. Well, that may be a good idea in some instances but speaking about the Christian churches, the land which is there must be utilised. It can be utilised in so many ways. So, I feel that a generous Government will know and will have faith enough to know that the modern-day needs will be met not necessarily by parcelling out the land and giving it away but by using it for institutions of research and in so many other ways as has been done in the past. I would ask you to think about this because there are more ways than one in being generous.

Thank you, Sir.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: தலைவரவர்களே, மணலியார் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நான் சில திருத்தங்களோடு ஒப்புக்கொள்ள விழைகிறேன். சோசலிச திட்டங்களை நான் என்றைக்குமே எதிர்த்தது இல்லை. ஒப்புக்கொள்கிற அளவுக்கு, ஆதரவு அளிக்க வேண்டிய அளவுக்கு ஆதரவு அளித்து இருக்கிறோம். அதைப்போலவே இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தையும் நாங்கள் இன்றைக்கு மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

நிலத்தை நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து பறித்து, அதைப் பங்கிட்டுக் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனையில்லை. ஒரே ஒரு திருத்தம் என்னவென்றால், மதத்திற்குச் சொந்தமானதை எடுத்துத் தருவதைப் பற்றித்தான். மதம் என்று சொல்கிற நேரத்தில், முஸ்லீம் மதம், ஹிந்து மதம், கிருஸ்துவ மதம் என்று பிரித்துப் பேச விரும்பவில்லை. அது யாருக்கும் தனியானது அல்ல. அதன் பேரில் பற்று உடையவர்கள், அதன் பேரில் அன்புடையவர்கள், சில சொத்துக்களை அல்லது தங்களுடைய பொருள்களை அதன் மீது எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி வைக்கிறபோது அந்த சொத்தை "பகத்" என்று சொல்வார்கள்—பகத் என்றால் ஒப்படைப்பது என்று பொருள்—இன்னின்ன காரியங்களுக்காக அந்தச் சொத்தை உபயோகிக்க வேண்டுமென்று சொல்வார்கள். அப்படிச் செய்வது வழக்கம். சிலர் விளக்கு வைப்பதற்காக என்று எழுதி வைப்பார்கள். சிலர் பூஜை நடத்துவதற்கு எழுதி வைப்பார்கள். கிருஸ்தவ ஆலயங்களுக்கும் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. முஸ்லீம் மதத்தில்



தர்காவிற்கு எழுதி வைக்கிறார்கள். அந்த நிபந்தனைகளின் அடிப்படையில் தான் அந்தச் சொத்துக்கள் எழுதி வைக்கப்பட்டன. அதைப் பொதுவுடைமை ஆக்குவது நல்லதல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

நான் இன்னொன்றும் சொல்கிறேன். அந்தப் பங்கில் பணம் சேர்ந்து விட்டது என்ற காரணத்திற்காக தனி மனிதர்கள் யாரும் எடுத்துக்கொண்டு போய் விடுவது இல்லை. பள்ளிக்கூடம் போன்றவற்றை கட்டிக்கொடுத்து இருக்கிறார்கள். அது பொதுமக்களின் நலனுக்குப் பயன்படுகிறது என்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள். அறநிலைய அமைச்சர் அவர்கள் கூட நன்கு இதை அறிவார்கள். அது போல் வாங்கப்படுகிற சொத்துக்களும் பொதுவான காரியங்களுக்சாகத்தான் செலவு செய்யப்பட்டு வருகிறது. கிருஸ்தவ சர்ச்சில் சேரும் பணத்தை மருத்துவ வசதி, கல்வி போன்றவற்றிற்குச் செலவு செய்கிறார்கள். முஸ்லீம் சமுதாயத்தில் அதிகம் சொத்து இல்லை. சொத்து சேர்த்துக்கொள்ள அங்கே வழியில்லை. கொஞ்சமாகத் தான் இருக்கிறது. அந்தச் சொத்துகள் கூட ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு பள்ளிக்கு, மதராஸாவிற்கு, மதச்சம்பந்தமான பாடம் போதிக்கும் பள்ளிகளுக்கும், வேறு சில காரியங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பொதுவுடைமையாக்க வேண்டுமென்று சொல்வது பொதுவுடைமை தத்துவத்தில் சேரும் என்று எனக்குத் தோன்றவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஆகவே, இந்தச் சட்டத்திலுள்ள இந்த மத சமபந்தமான நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிலங்களுக்கு விதி விலக்கு கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, நான் அதை மட்டும் எதிர்க்கிறேன் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் மணலி கந்தசாமி அவர்கள் கொண்டு வந்த உச்ச வரம்பு மசோதாவை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

இந்த மசோதாவில் உள்ள முக்கியமான அம்சங்கள் இந்த மன்றத்தில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அம்சங்கள். ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் உச்ச

வரம்பு இருக்கவேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டு ஒரு சட்டத்தை நாம் நிறைவேற்றினோம். அதே மாதிரியாக இன்று இந்த மசோதாவில் 15 ஏக்கருக்கு மேல் அந்தக் குடும்பத்தில் 5 பேருக்கு மேல் உள்ள ஒவ்வொரு நபருக்கும் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் வீதம், மாக்ஸிமம் அதாவது உயர்ந்தபட்சம் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் எந்தக் குடும்பத்திற்கும் இருக்கக்கூடாது என்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே ஏற்கனவே உழுபவனுக்குத் தான் நிலம் சொந்தம் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த நாட்டில் விடுதலைப் போராட்ட காலத்திலிருந்து, மகாத்மா காந்தியடிகள் முதற் கொண்டு அனைவரும் சொல்லிக்கொண்டு வந்திருக்கிற ஒரு கொள்கையாகும். அந்த அடிப்படையிலே நில உச்ச வரம்புச் சட்டத்தை நாம் எதற்காகக் கொண்டுவந்தோம்? அதற்கு முன்னால் காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்தில் எதற்காகக் கொண்டு வந்தார்கள்? அதற்குப் பிற்பாடு உச்சவரம்பு 30 ஏக்கர் என்று இருந்ததை நாம் 15 ஏக்கர் என்று ஏன் குறைத்தோம் என்பதையெல்லாம் நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நிலத்தை நம்பி வாழக்கூடிய பல லட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் தாங்கள் உழைக்கும் பலனை தாங்கள் அனுபவிக்க முடியாமல், நிலத்திற்குச் சொந்தக்கரரார் என்று உரிமை கொண்டாடக்கூடிய நிலச் சொந்தக்காரர்களோ அல்லது மடாதிபதிகளோ அல்லது கோவில்களோ, எந்தவிதமான அமைப்புகளாக இருந்தாலும் கூட அவர்கள் தான் அந்தப் பலனை அனுபவிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். நிலத்தில் பாடுபடக்கூடியவர்கள், காலை முதல் இரவு வரையில் குடும்பத்தோடு, சகதியோடு சகதியாக, மண்ணோடு மண்ணாக பாடுபடக்கூடியவர்கள் அவர்களுடைய உழைப்பின் பலனை அனுபவிக்க முடியாமல், ஆடுமாடுகளை விட, மிருகங்களை விட கேவலமான நிலைமையில் அவர்கள் நடத்தப்படுகிறார்கள். களத்தில் விளைந்த நெல்லை நிலத்தில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலச் சொந்தக்காரர் அல்லது மடாதிபதிகள், கோவில்கள் அல்லது அந்த நிலங்களுக்கு உரிமை கொண்டாடக்கூடிய ஸ்தாபனங்கள் தாங்கள் இன்னும் எடுத்துக்கொண்டு போவதை தடுக்கவில்லை. எங்களுடைய தலைவர் கொண்டு வந்த திருத்த மசோதாவில் இம்மாதிரி ஓட்டை உடைசல்களை அடைக்கக்கூடிய அம்சங்கள் தான் இருக்கின்றன.



எனக்குத் தெரிந்த ஒரு இடத்தில், எட்டையபுரம் ஜமீன்தாரிடத்தில் இன்னும் 10,000 ஏக்கர் நிலம் இருக்கிறது, அந்த நிலம் இன்னும் எடுத்துக்கொள்ளப்பட்டு பிரித்துக்கொடுக்கப்படவில்லை. காங்கிரஸ் காரர்கள் கொண்டு வந்த சட்டத்திற்குப் பிறகும் அப்படித் தான். இப்பொழுது தி.மு.க. அரசு வந்ததற்குப் பின்னாலும், 1967-வது ஆண்டுக்குப் பின்னாலும், 15 ஏக்கர் உச்சவரம்பு என்று சட்டம் கொண்டுவந்ததற்குப் பின்னாலும், மிச்ச நிலங்கள் எடுக்கப்பட்டு பிரித்துக் கொடுக்கப்படவில்லை. நிலத்தை நம்பியிருக்கக்கூடியவர்களுக்கு மிச்ச நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல. குத்தகைக்கு கொடுக்கப்பட்டதன் மூலம் அந்த நிலத்தில் பாடுபட்டுவரக்கூடியவர்கள், விவசாயம் செய்யக்கூடிய பல லட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கை எப்படியிருக்கிறது என்பது இந்த மன்றத்தில் அனைவருக்கும் தெரியும். பாடுபடக்கூடிய விவசாயிகள் களத்தில் நெல்லை அடித்துப்போட்டவுடன் 60, 40 என்று சொல்லக்கூடிய அளவில் கூட இல்லாமல், சில இடங்களில் இந்தச் சட்டமே போகாமல், 60 என்றிருப்பது 75 நிலச் சொந்தக்காரர்களுக்கு, 25 நிலம் சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு என்ற விகிதத்தில் கிடைக்கக்கூடிய நிலை இன்னும் நம்முடைய மாநிலத்தில் சில இடங்களில் இருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும். சென்னையை அடுத்தாற்போல் இருக்கிற செங்கற்பட்டு, மற்ற சில இடங்களிலும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டம் கொண்டுவந்ததன் நோக்கத்தை கருத்தில் கொள்ள வேண்டும். இந்தச் சட்டத்திலுள்ள அம்சங்களை அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். இதிலிருந்து விவசாயிகளை ஏமாற்றி, இதிலிருந்து தப்பித்துக்கொள்ள செய்யப்படும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும் என்பதுதான் நோக்கம். மேலுக்கு சட்டமாக இருந்தாலும் கூட, சட்டத்தினுடைய நல்ல அம்சங்களை அமல் நடத்த முடியாமல் பலவிதமான விதிவிலக்குகளின் கீழ் தப்பித்துக்கொள்வதற்கு ஓட்டை உடைசல்கள் இதற்கு முன்னால் உள்ள சட்டத்தில் இருந்தன. அது உங்களுக்குத் தெரியும். 15 ஏக்கர் என்று சொன்னோம். 15 ஏக்கர் என்று சொல்லக்கூடிய நேரத்தில் குடும்பம் என்பது ஒரு சிறு மைனர் என்றாலும் கூட, ஒரு குடும்பத்தில் 4 வயது பையன் இருந்தால் கூட, 2 வயதுப் பெண் இருந்தால் கூட, ஒரு குழந்தை இருந்தால் கூட, ஆளுக்கு 15 ஏக்கர் என்று பிரித்து பிரித்து வைத்து விட்டார்கள். ஒரு குடும்பம் என்றால் எப்படி இருக்கவேண்டும்

என்பதைத் தான் இந்தச் சட்டம் சொல்கிறது. குடும்பம் என்று சொன்னால் ஒரு கணவன், ஒரு மனைவி, மைனர் குழந்தைகள், கணவன் இறந்துவிட்டால் மனைவி குழந்தைகள் என்று கூறப்பட்டிருக்கிறது. பழைய சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டை உடைசல்களை வைத்துக் கொண்டு வீட்டிலே இருக்கிற அத்தனை பேர்களுக்கும், சிறு குழந்தைகள் அத்தனை பேர்களுக்கும் பிரித்து பிரித்து வைத்துவிட்டார்கள். அப்படி எழுதிவைத்துக்கொண்டு, வாரம், குத்தகை என்று வாங்கி வருகிறார்கள்.

மதிப்பிற்குரிய முஸ்லீம் லீக் உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். நான் அவர்களுடைய சில பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறேன். நபிநாயகம் குறிப்பிட்டிருக்கிறார்களாம், வட்டி வாங்குவது பாவம், வட்டி வாங்கக்கூடாது என்று. அப்படியிருக்கும்பொழுது குத்தகை வாங்குவது எப்படி நியாயமாகும்? வட்டி வாங்குவதைவிட, குத்தகை வாங்குவது கொடுமையாகும், அநியாயமாகும். அதர்மம் செய்வதற்கு நபிநாயகம் எப்படி உடந்தையாக இருக்க முடியும்? கடவுள் என்ற பெயரால், மடங்கள், கோவில்கள் என்ற பெயரால் உழைக்கக்கூடிய உழைப்பின் உரிமையை பறிப்பது எப்படி நியாய மாகும்? குத்தகை என்ற பெயரால் அவர்களிடமிருந்து பறிப்பதற்கு அப்படிப்பட்ட அதர்மத்தைச் செய்வதற்கு, தர்மம் செய்பவர்கள் எப்படி உடந்தையாக இருக்க முடியும்?

மடங்கள், கோவில்களில் தெய்வங்களை வழிபடட்டும், தெய்வத் தினிடத்தில் பக்தி செலுத்தட்டும். முகம்மதியர்கள், கிறிஸ்துவர்கள், ஹிந்துக்கள் அவரவர்கள் விரும்புகின்ற கடவுளை அவர்கள் வழி படட்டும். அவைகளுக்கு நிதிகளைக் கொடுக்கட்டும். ஒரு லட்சம் இருந்தால், 10 சதவிகிதம் அதாவது ரு. 10,000 கொடுத்துதவட்டும். ஆனால், மதத்தின் பெயரால், நிலத்தை வைத்துக்கொண்டு பாடுபடக் கூடிய விவசாயிகள் தங்களுடைய குடும்பங்களை நடத்த முடியாமல் அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து விளைவித்த நெல்லை குத்தகை என்ற பெயரால் பறித்துக்கொள்வது எப்படி நியாயமாகும். (திரு. லத்தீப் அவர்கள் எழுந்திருந்தார்) அவர்களுக்கு பேச சந்தர்ப்பம் இருக்கிறது; அப்பொழுது பேசட்டும். மதக்கோட்பாடுகளை நாங்கள் தடுக்கவில்லை. கோவில்களுக்கு போகக்கூடாது என்று சொல்லவில்லை. இம்மாதிரி பல மத ஸ்தாபனங்கள் நிலத்தை வைத்துக்கொண்டு தாங்கள் பாடுபடாமல், யாரோ ஒருவர் பாடுபட்டு,



அதுவும் பின்தங்கிய மக்கள் பாடுபட்டு, அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பலன் பூராவையும் அபகரித்துக்கொண்டு போவது அதர்மம் அல்லவா? தர்மம் செய்யக்கூடிய ஸ்தாபனங்கள் என்று சொல்லிக் கொண்டு இதைச் செய்யலாமா? அப்படிச் செய்வது நியாயம் ஆகாது. இந்த மசோதாவில் ஒப்புக்கொள்ளக் கூடிய பல அம்சங்கள் இருக்கின்றன. எந்தவிதமான விதிவிலக்கும் கூடாது. தமிழகத்தில் இன்று கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் எந்தவிதமான நிலமும் இல்லாமல் 28 லட்சம் மக்கள் வருஷம் ஒன்றுக்கு 200 நாள் மட்டும் தான் வேலை செய்ய முடிகிறது. அவர்கள் ஒரு வேளை சாப்பிடக்கூடியவர்கள் கிராமப்பகுதிகளில் 40 சதவிகிதம் இருக்கிறார்கள். சர்வே செய்தவர்கள் கிராமப் பகுதிகளில் ஒரு வருடத்தில் 200 நாட்களுக்குத் தான் வேலை செய்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அவர்கள் வாழ முடியாமல் குழந்தை குட்டிகளோடு பட்டினி கிடக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டுமென்றால், அதில் ஒகு பகுதி மக்களையாவது வாழவைக்க வேண்டுமென்றால், கரெக்டாக இந்த உச்ச வரம்பு சட்டத்தை அமல் நடத்த வேண்டும்.

பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு, ஒரு நபர் மட்டும் இருந்தால் அவருக்கு 5 ஏக்கர் தான், அவனுக்கு மனைவி இல்லை. குழந்தை இல்லை என்றால், தனி மனிதனுக்கு 5 ஏக்கர் போதும். அதற்கு மேல் இரண்டு பேர் இருந்தால் 10 ஏக்கர் போதும். ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு 15 ஏக்கர் தான் இருக்கவேண்டும். ஓட்டை உடைசல்களில் தப்பித்துக்கொண்டு போக வழி இருக்கக் கூடாது.

ஆளும் கட்சியினர் அப்பொழுது எதிர்க்கட்சியினராக இருந்த பொழுது, சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டை உடைசல்களை அடைக்கவேண்டும், அப்பொழுது தான் நிலம் மிச்சம் இருக்கும் என்று சொன்னார்கள். அவர்கள் வந்ததற்குப் பிறகும் அந்த ஓட்டை, உடைசல்கள் இருக்கத்தான் செய்கின்றன. இதில் உள்ள அம்சங்களெல்லாம் எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய அம்சங்கள். ஆகவே, எங்கள் தலைவர் அவர்கள் கொண்டுவந்த இந்த மசோதாவிற்கு ஆதரவு கொடுத்து மசோதாவை நிறைவேற்றித்தரவேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதாவை நிறைவேற்றினால், ஓரளவுக்கு பாடுபடக்கூடியவர்களின்

இன்னொருவர் அபகரிக்காமல் இருக்கிற நிலைமை ஏற்படும். பாடு படக்கூடிய விவசாயிகளுக்கு சொந்தமாக நிலம் கிடைக்க வழி
மாலை 6–30 ஏற்படும். அப்படி சொந்தமாவது மட்டுமல்ல, உற்பத்தி அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி ஏற்படும், வாங்கும் சக்தி அதிகரிக்கும். கிராம மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகரிக்கும். நிலத்தில் பாடுபடக் கூடிய ஏழை எளிய மக்களிடமிருந்து நிலச்சுவான்தார்களோ அல்லது வேறு ஒருவரோ அவர்களின் உழைப்பின் பலனை அபகரிக்கக்கூடிய நிலைமை மாறும்.

நீங்கள் இந்த நல்ல அம்சங்களை ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அந்த அடிப்படையில் பார்க்கப்போனால் கிராம மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டும் என்று சொன்னாலும், அவர்களுக்கு நல் வாழ்வு அளிக்கவேண்டும் என்று சொன்னாலும், இந்த உச்ச வரம்பு சட்டத்தை ஆதரித்து நிறைவேற்ற வேண்டும். இது நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற ஒரு மசோதா. சட்டத்தில் இருக்கிற ஓட்டை உடைசல்களில் புகுந்துகொண்டு யாரும் தப்பித்துக்கொள்ள வழி ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தோடு தான் இந்த நல்ல அம்சங்களைக் கொண்ட மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. கோவில்களுக்கும், மடங்களுக்கும் நிலம் தான் இருக்கவேண்டும் என்பது அல்ல. நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து, அந்தப் பணத்தை வைத்து கோவில் காரியங்களைச் செய்யலாம்.

அதுமட்டுமல்ல. அந்தக் கோயில் பக்தர்கள் மூலம் உண்டி வைத்து வசூல் செய்து கோயில் பணிகளை நிறைவேற்றலாம். திருப்பதியை எடுத்துக்கொண்டால் நாள் ஒன்றுக்கு உண்டி மூலம் எவ்வளவு வசூலாகிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். பக்தர்கள், தாங்கள் நம்பக்கூடிய கடவுள் மூலம் பலன் அடைந்தால் அதற்குத் தகுந்த காணிக்கை செலுத்தட்டும். அதை நாங்கள் தடுக்கவில்லை. பக்தர்களின் காணிக்கையைக் கொண்டு அந்த கடவுள் வீற்றிருக்கின்ற கோயில் நிர்வாகப் பணிகளை செய்துகொள்ளலாம். அதற்கு சொத்துக்கள் தேவையில்லை. எனவே, இப்போது கோயில் சொத்துக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற விதிவிலக்கு தேவையில்லை. நல்ல காரியங்களைச் செய்வதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமா வேண்டாமா என்பது வேறு விஷயம். நல்ல காரியங்கள் என்று சொன்னால் உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும்



என்பதுதான். மகாத்மா காந்தியடிகளும் அதையேச் சொல்லியிருக்கிறார். எனவே, அவருடைய கொள்கைகளை கடைபிடித்து வருகின்ற காங்கிரஸ் கட்சியினரும் இந்த மசோதாவை எதிர்க்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, எல்லாக் கட்சியினரும் இந்த மசோதாவை ஏக மனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவினுடைய நோக்கம் என்ன என்பதை, இதை முன் மொழிந்த நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முஸ்லீம் லீக் கட்சியின் தலைவரவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியது போல எந்த ஒரு சோஷலிச திட்டமாக இருந்தாலும், சட்டமாக இருந்தாலும் முஸ்லீம் லீக் கட்சி அந்தச் சட்டத்தை ஆதரிக்கத்தான் செய்யும். சோஷலிச கொள்கையை சாதாரணமாக ஒரு அரசியல் தத்துவமாக மட்டும் இல்லாமல் வாழ்க்கையின் தத்துவமாகவும் தங்கள் மார்க்கத்தின் அடிப்படையாகவும் ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் முஸ்லீம்கள். அந்த அடிப்படையிலே இந்தச் சட்டத்தை—இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தை—நிலத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டும் என்ற இந்தச் சட்டத்தை கொண்டுவந்தால் முஸ்லீம் லீக் கட்சி நிச்சயமாக ஆதரிக்கும். ஆனால் அதே நேரத்தில் இங்கே சில கருத்துக்கள், முக்கியமான நோக்கம் சமய நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் விதிவிலக்கை அகற்றிவிட வேண்டும் என்பது. ஆனால் விதிவிலக்கு அகற்றப்பட வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினை இப்போது தான் ஏற்பட்டது என்பதல்ல. அண்மையில்கூட இந்த மன்றத்திலே நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால், கூட்டாய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, கூட்டாய்வுக் குழுவில் அது ஆராயப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. கூட்டாய்வுக் குழுவின் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், கூட்டாய்வுக்குழு தமிழ்நாடு முழுவதும் முக்கிய இடங்களுக்குச் சென்று, பொதுமக்களையும், இதிலே அக்கறை கொண்ட மற்றவர்களையும் சந்தித்து அவர்கள் கருத்தினை அறிந்து, அதன்பிறகு, சமய நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேறி இப்போது ஒருசில மாதங்கள்தான் ஆகின்றன. இந்த நிலையிலே இந்தப் புதிய திருத்தச் சட்டத்தை மணலி கந்[illegible]

அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். என்னுடைய நண்பர் திரு. சுரேந்திரன் அவர்கள் பேசும்போது பல தத்துவார்த்த ஆராய்ச்சிகளை செய்தார்கள். அந்த ஆராய்ச்சிகளுக்கு நான் செல்ல விரும்பவில்லை.

மத ஸ்தாபனங்கள் என்றால், கோயில்கள், சர்ச்கள், மசூதிகள் எல்லாமே அதில் அடங்கும். அந்தக் கோயில்களிலே என்ன செய்கிறார்கள். அங்கே ஒரு மூல விக்கிரகம் இருக்கிறது என்றால், அந்த விக்கிரகம் கோயிலுக்கு வந்திருக்கிற வருமானத்தை சாப்பிட்டு விடுகிறது என்றில்லை. ஆனால் அந்தக் கோயிலிலிருக்கிற ஒரு பெரிய கலாச்சாரத்திற்கு, ஒரு பெரிய தத்துவத்திற்கு விளக்கம் தருவதாக இருக்கிறது. அந்த விளக்கங்களை ஏற்றுக்கொண்டிருக்கிற மக்கள், தாங்கள் வாழ்க்கையிலே கடைபிடிக்கக்கூடிய கருத்துக்கள், தங்கள் நம்பிக்கைகள் இருக்கிற ஒரு மையமான இடத்திலே கூடுவதற்கு, தங்களுடைய பெருமைகளை நிலைநாட்டுவதற்கு கோயில் போன்றவைகள் பயன்படுகின்றன. ஆகையால்தான் நான் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாகப் பேசினாலும், மசூதிகளுக்கு மட்டும், சர்ச்சுகளுக்கு மட்டும், கோயில்களுக்கு மட்டும் என்று பேசாமல் எல்லா மத நிறுவனங்களுக்கும் அத்தகைய விதிவிலக்கு வேண்டுமென்று நான் பேசுகிறேன்.

பல மத ஸ்தாபனங்களை நிறுவியவர்கள், அவர்கள் ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தை கடைப்பிடிப்பவர்களாக இருந்தாலும் அவர்களுடைய வரலாற்றை, அவர்கள் ஆற்றியப் பணிகளை—ஆற்ற வேண்டிய நற்பணிகளை நாம் பார்த்தால்—கல்வித் துறையிலே அல்லது மற்றத் துறைகளிலே—சமுதாயத்தில் அத்தகைய அமைப்புகளால் மிகவும் போற்றத்தகுந்த காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இந்துக் கோயில்களாக இருந்தாலும், மடங்களாக இருந்தாலும் அவைகள்கூட பல வகைகளிலே சமுதாயத் தொண்டு செய்துகொண்டுதான் இருக்கின்றன. சர்ச்சுகளை எடுத்துக்கொண்டால், கல்வித் துறையிலே அவர்கள் நற்பணிகள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அறியலாம். மசூதிகளில் எந்த விதமான விக்கிரகமும் இல்லை என்றாலும் அவை முஸ்லிம்களுடைய புனித ஸ்தலமாக, அவர்களின் பெருமைக்குரிய இடங்களாகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற தத்துவத்தை எடுத்துக்காட்டக்கூடிய இடமாக மசூதிகள்



விளங்குகின்றன. முஸ்லீம் மக்கள் வழிபடுகின்ற ஒரே தெய்வம், ஒரே பரம்பொருள், ஒரே கடவுள்—எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் இறைவன் என்று சொல்வார்களே, அதேப்போன்று அந்த மசூதியிலும் இருப்பதாக நம்புகிறார்கள். ஆகவே, மசூதி என்பது அந்த சமுதாயத்தின் பெருமைகளை, அந்த மார்க்கத்தின் பெருமைகளை விளக்கும் ஒரு மையமாக இருப்பதால், அதை அவர்கள் ஒரு சிறந்த இடம் என்று கருதுகிறார்கள். ஆகையினாலே அந்த இடத்தை அவர்கள் பாதுகாக்க விரும்புகிறார்கள்.

இப்போது இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து மணலி கந்தசாமி அவர்கள் பேசிய கருத்துக்களைப் பற்றி இன்று காலையிலே கூட நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். கேரள நாட்டிலேகூட, நம்முடைய வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் திரு. அச்சுதமேனன் பொதுவாக மக்களுக்குப் பயன்படக்கூடிய சமய நிறுவனங்களுக்கு பல்வேறு விதிவிலக்குகளைத் தந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த உரிமையை அரசியல் சட்டம் நமக்குத் தந்திருக்கிறது. இந்தப் பாதுகாப்பைத் தந்திருக்கிறது. சாதாரணமாக இன்றைக்கு மத சார்பற்ற நாடு என்று—செக்குலரிசம் என்று சொன்னால் இந்த நாட்டிலே எந்த மதமும் இருக்கக்கூடாது; அல்லது எந்த மதத்திற்கும் பாதுகாப்பு இருக்கக்கூடாது; அவைகளுக்கு எந்த விதமான பொருளாதார அபிவிருத்தியும் இருக்கக்கூடாது என்பதல்ல, அது செக்குலரிசம் அல்ல.

It does not mean that the State as such abhors the very presence of religion. It really means that the State, as such; does not indentify itself with any of the existing religions without exhibiting its animosity or disapproval of any religion.

என்றுதான் செக்குலரிசத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஒரு சிலரால் சில குறிப்பிட்ட விஷயங்களுக்காக எழுதி வைக்கப்பட்ட சொத்துக்களை எடுத்துக்கொள்வதோ அல்லது அவைகளுக்கு இருக்கும் விதிவிலக்குகளை அகற்றிவிடுவதோ கூடாது. எந்த வகையினாலும் மத நிறுவனங்களின் நிர்வாகப் பணிகளுக்கும், மற்ற காரியங்களுக்கும் ஊறு விளைவிக்கக்கூடாது. ஆகையினால் அவைகளுக்கு இருக்கும் விதிவிலக்குகளை அகற்றக் கூடாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 பிப்ரவரி 12

நான் இந்த விவாதத்தின் கடைசியில் பேசுவதற்குக் காரணமே நண்பர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்ட ஒருசில கருத்துக்களுக்கு என்னுடைய விளக்கத்தை அளிப்பதற்காகத்தான். குறிப்பாக அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இஸ்லாமிய சமயத்தில் நபிகள் நாயகம் சல்லாஹு சுலேஹி ஒசல்லம் அவர்கள் வட்டி வாங்குவது கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார் கள். வட்டி வாங்குவது தடை செய்யப்பட்ட ஒன்று. அப்படியானால் குத்தகையை எப்படி ஆதரிக்க முடியும் என்று கேட்டார்கள். முஸ்லீம்கள் எல்லாம் நபிகள் நாயகம் சல்லாஹு சுலேஹி ஒசல்லம் அவர்கள் கற்பித்த புனித மார்க்கத்திலே நடக்கிறவர்கள். குத்தகை வாங்குவது கூடாது என்கின்ற கருத்திலே அவர்கள் சொல்லியிருக்கா விட்டாலும் அந்தமாதிரியான கருத்து உருவாகலாம் என்ற காரணத் திற்காக இந்த விளக்கத்தை நான் அளிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

சாதாரணமாக, சமூக நீதி வேண்டும். எந்த ஒரு காரணமாக இருந்தாலும் அந்த சமூக நீதிக்காகத்தான் நாம் சட்டங்களை இயற்று கிறோம். திரு. அழகர்சாமி அவர்கள் முஸ்லீம்கள் எப்படி குத்தகை பெறமுடியும் என்று தன்னுடைய பேச்சிலே குறிப்பிட்டார்கள். ஒருவன் "ஹயர் பர்ச்சஸ்"-சில் ஏதோ ஒரு குறிப்பிட்ட காரியத்திற் காக "லவ்டு ஸ்பீக்கர்" ஒன்றை வாங்குகிறான் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு கூலியாக அல்லது வாடகையாக பணம் கொடுக்கிறான். அப்படி பணம் கொடுக்காமல் இருந்தால் அந்த லவ்டு ஸ்பீக்கர்காரன் அதைப் பயன்படுத்தியவனை வென்றுவிடுவான்; அவனைத் தின்றுவிடுவான். அதேபோல டாக்சியிலே செல்லும் போது, எம்.எல்.ஏ. ஆஸ்டலிலிருந்து ஏறி, பெரம்பூரிலே போய் இறங்கிவிட்டு, டாக்சிகாரனுக்குப் பணம் கொடுக்காமல் போய்வா என்றால் அவன் டாக்சியில் போனவனை சும்மா விட்டுவிடமாட்டான். ஏனென்றால் டாக்சியில் செல்பவர்களிடம் பணம் வாங்கித்தான் அவன் வாழவேண்டும். அதுதான் அவன் ஜீவனம். அதனால் அவன் வாடகை வாங்குகிறான்.

ஒருவன் ஒரு காரியத்தைச் செய்தால் அதற்கு அவனுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும். அந்த வகையில்தான் அது செய்யப்படுகிறது. ஆனால் அது சுரண்டலாக இருக்கக் கூடாது. அவர்கள் கேட்கக் கூடிய பறிப்புகள், அந்த ஊதியம் மற்றவர்களை சுரண்டக் கூடிய



[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 பிப்ரவரி 12

வகையிலே இருக்கக் கூடாது. சமூக நீதியின் அடிப்படையிலே அமைந்திருக்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான் காரியத்தைச் செய்யவேண்டுமென்று நம்முடைய நபிகள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் முஸ்லீம் லீக் ஆகிய நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். "வட்டியை ஏன் எதிர்க்கிறீர்கள், இதை ஏன் ஆதரிக்கிறீர்கள்" என்கிறார்கள்.

To get interest on the money given to a persou who is needy, who gets it because he does not have any money, is wrong; you should not get anything as a profit or as a return from that needy person. Therefore, it is a usurious act and we do abhor getting interest from such persons who are poor and needy.

ஆனால் இவைகளை எல்லாம் நாம் இந்த அடிப்படையிலே பார்க்க வேண்டும். அதாவது சமூக நீதியின் அடிப்படையிலே தான் நாம் உண்டாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நிலச் சீர்திருத் தத்தை நாங்கள் எதிர்க்கிறோம் அல்லது இங்கே இருக்கிற மற்றத் திட்டங்களை எதிர்க்கிறோம் என்பதல்ல. எனக்குத் தெரியும், பல கோயில்கள், பல மசூதிகள், பல இந்து கோயில்களிலேகூட பல நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். பல பாடசாலைகளை அவர்கள் நடத்து கிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற மார்க்கத்தை அவர்க ளுடைய நாகரீகத்தை நாட்டிலே பரப்புவதற்கு, மக்களிடையே அந்த எண்ணங்களை வெளியிடுவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த எண்ணத்தின் அடிப்படையிலே தான் "டோணர்ஸ்" சொத்துக்களை கொடுக்கிறார்கள்: அதற்கு மாறுதலாக நீங்கள் திட்டத்தை வகுப்பீர் களானால் மார்க்க விஷயத்திலே தலையிட்டீர்கள் என்ற குற்றச் சாட்டிற்கு உள்ளாவீர்கள்.

நான் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களை அன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன், நீங்கள் சொல்லுகிற அந்த வாதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். சமூக நீதி இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். மதம் என்று சொல்லி, கோயில்களுக்கு நிலம் என்று சொல்லி, மசூதிகளுக்கு நிலம் என்று சொல்லி, சர்ச்சுக்கு நிலம் என்று சொல்லி, இந்த நிலங்கள் எல்லாம் அதன் வருவாய்கள் எல்லாம் தனிப்பட்டவர்களின் வாழ்வை வளர்க்கப் பயன்படுமானால்

அது கண்டிக்கத் தகுந்தது. வேர் அறுக்கத் தகுந்தது என்பதை நாங்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறோம். அப்படிப்பட்ட அநீதிகளை நாங்கள் ஆதரிப்பவர்களாக இருக்கமாட்டோம்.

ஆனால், நீங்கள் ஒரு இடத்திலே நீதி செய்வதற்கு, ஒருவருக்கு நல்ல வழியைக் காட்டச் செல்லும்பொழுது நிச்சயமாக அது மற்றவர்களுக்கு அநீதியாக இருக்கக் கூடாது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் கொண்டு வந்த இந்தச் சட்டத்தின் உட்கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் விரும்புகின்ற இந்தச் சமுதாய நீதியை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக நிலச்சட்டம் வேண்டும், நிலத்திற்கு உச்ச வரம்பு வேண்டும் என்பதை நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்திலே நான் அன்போடு அவர்களை கேட்டுக்கொள்வேன், மற்றவர்களையும் அருள் கூர்ந்து கேட்டுக்கொள்ளுகிறேன், மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய, மைனாரிட்டி மதத்தினருக்கு பாதகங்கள் ஏற்படும் வழியிலே நீங்கள் அருள் கூர்ந்து தலையிடாதீர்கள். அது ஒரு இடத்திலே நீதியைப் பெறச் சென்று இன்னொருவருக்கு அநீதியை பெறக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கிவிடும் என்பதால் நாம் அதைச் செய்யக் கூடாது.

சென்ற தொடர் கூட்டத்திலேயே உச்சவரம்புச் சட்ட திருத்தத்தின்போது மிக நல்ல முறையிலே உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் ஆராயப்பட்டு, அதிலே உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள்கூட கலந்து கொண்டார்கள். அவர்கள்கூட மற்றவர்களின் கருத்தைக் கேட்டார்கள்; தமிழ்நாட்டிலே இருக்கிறவர்களின் கருத்தைக் கேட்டார்கள். சட்ட மன்றத்தின் கருத்தைக் கேட்டார்கள், பிறகு தான் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மத நிறுவனங்களின்மீது கை வைக்காதீர்கள் என்ற கருத்தைச் சொல்லி, மற்ற எல்லாத் திட்டங்களையும், சமுதாயத்திற்கு நீதி கொடுக்கக் கூடிய சோஷலிச திட்டங்களை நாங்கள் ஆதரிக்கிறோம். மத நிறுவனங்களிலே மட்டும் தலையிடாது, மற்ற விஷயங்களைச் செய்ய எங்களுடைய ஆதரவு எப்பொழுதும் உங்களுக்கு உண்டு என்று சொல்லிக் கொள்கிறேன்.



திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, மணலி கந்தசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நிலத்திற்கு உச்ச வரம்பு வேண்டும் என்ற அளவிலே மாத்திரம் ஏற்றுக்கொள்ளலாமே தவிர கோயில் நிலங்கள், மடத்தினுடைய சொத்துக்கள் இவைகளை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகின்ற ஒன்றை நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. காரணம், இங்கே பலர் பேசியதைப் பார்க்கும்போது முஸ்லீம் சகோதரர்கள் பேசியபொழுது, வக்ஃப் போர்டுக்கு இருக்கக்கூடிய நிலத்தை எல்லாம் எடுத்துக் கொண்டால் என்ன நஷ்டம் ஆகும் என்பதை எல்லாம் சொன்னார்கள். என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்பொழுது கிறித்துவ மதத்தைச் சேர்ந்த நிலத்தை எடுத்துக்கொண்டால் அதனாலே என்ன நஷ்டங்கள் ஏற்படும் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அப்படியே தான், இந்து மதத்தைச் சேர்ந்த கோயில்களையும், மடத்தையும் சேர்ந்த நிலத்தை எடுத்துக் கொண்டால், அதிலே இருக்கிற கஷ்டங்கள் பல இருக்கின்றன.

கோயில்கள், மடங்கள் போன்றவைகளின் சொத்துக்களில் நாம் தலையிடுவதே தவறு என்றுதான் நான் அழுத்தந் திருத்தமாக கூறுகிறேன். காரணம், இந்த மடங்களுக்கு எழுதி வைக்கிற சொத்துக்கள், கோயில்களுக்கு எழுதி வைக்கிற சொத்துக்கள் இவை எல்லாம் குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக வேண்டி எழுதி வைக்கப்படுகின்றன. அதைத் தொடர்ந்து அந்த ஸ்தானங்களுக்கு வாரிசாக வருகிறவர்கள், மடத்தைச் சேர்ந்தவர்கள் அந்தச் சொத்துக்களை பராமரிக்க வேண்டும். சுவாமிகளுக்கு மூன்று கால பூஜை செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வேறு இருக்கிறது. கடவுள்மேல் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம்.

கடவுள் சிலைகள் கோயில்களிலே இருக்கின்றன. அதற்கு மூன்று கால பூஜை கோயில்களிலே நடந்து கொண்டு தான் வருகிறது. அந்த மூன்று கால பூஜை நடப்பதற்கு ஓரளவு அந்த நேரத்திலே வருகிற நெல்லையோ, வருவாயையோ வைத்து நடத்தி வருகிறார்கள். கோயில்களிலே அர்ச்சகர்கள் இருக்கிறார்கள். பல கோயில்களிலே அந்த அர்ச்சகர்களுக்கு "கட்டளை" என்று கொடுக்கப்படுகிறது.

வராது என்று கேட்டார்கள். கோயில் நிலங்கள் எல்லாம் அரசு எடுத்துக்கொண்டு அதற்கு ஏற்ற காம்பன்சேஷன் கொடுத்து விட்டால் நல்லதுதானே என்றார்கள். கொடுக்கக்கூடிய காம்பன் சேஷன் எவ்வளவு என்று கொடுப்பார்கள் அந்த நிலங்களுக்கு. அந்த நிலத்திலே இருந்து வரக்கூடிய வருவாய் எவ்வளவு, உண்டியல் வைத்தால் அதிலே இருந்து வரக்கூடிய வருவாய் எவ்வளவு என்று ஆராய்ந்து பார்த்தால், திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்கு வரக் கூடிய அளவிலே இங்கே கிடைக்காது என்றுதான் கூறவேண்டி யிருக்கும்.

நம்முடைய கோயில்களிலே வரக்கூடிய வருவாயில் பல நல்ல காரியங்களையும் செய்கிறார்கள். திருப்பதியிலே கல்லூரி கூட ஏற்படுத்தியிருக்கிறார்கள் அந்த கோயிலின் வருமானத்திலிருந்து, ஹெல்த் ரிசார்ட் போன்று பல கட்டடங்கள் பில்கிரீம்ஸ்களுக்கு கட்டிக் கொடுக்கிறார்கள். எனவே, கோயிலின் நிலங்களை நாம் எடுத்து விடுவோமானால், இந்தக் காரியங்கள் எல்லாம் தடைபட்டுவிடும். அப்படியே இதை எடுத்துக்கொண்டால் எத்தனை பேருக்கு அந்த நிலங்களை பங்கிட்டு கொடுக்க முடியும் என்பதைத்தான் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏதோ இவைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு கொள்கையின் பேரிலே கூறினாலும், ஜீசஸ் கிரைஸ்ட் மாதிரி அதிகமான பேர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்க முடியாது. ஏதோ சிலருக்குத்தான் பங்கிட்டுக் கொடுக்க முடியும். தமிழ்நாட்டில் உள்ள பல மடங்களைப்பற்றி எனக்குத் தெரியும். நிலத்தில் வரக்கூடிய நெல்லை வைத்துக்கொண்டுதான் பலருக்கு தினந் தோறும் சாப்பாடு போடுகிறார்கள். குருபூஜை செய்கிறார்கள். இன்னும் சித்த வைத்தியசாலை, அனாதை விடுதிகள், பள்ளிகள் ஆகிய வற்றை எல்லாம் நடத்தி வருகிறார்கள். கிறித்துவ கோயில்களை எடுத்துக்கொண்டாலும் டேனிஷ் மெஷின், ஸ்காட்டிஷ் சர்ச் ஆகிய வற்றுக்கு இண்டர்நாஷனல் டிரஸ்ட் இருக்கிறது. நல்ல சமூகப் பணிகளை எல்லாம் செய்து வருகிறார்கள். வக்ஃப் போர்டும் அப்படித்தான். இப்படி நடக்கிற பல நல்ல காரியங்கள் இந்த மசோதாவின் மூலம் தடைப்பட்டுப்போகும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இதை எதிர்ப்பதோடு, எந்த மத ஸ்தாபனமாக இருந்தாலும் அரசு அதில் தலையிடாமல் இருப்பது நல்லது என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.



திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, தனியார் மசோதா விவாதிக்கப்படுகிற இந்த நாளில் மசோதா எண் 17/1972-இன் பேரில் இவ்வளவுபேர்கள் கலந்துகொண்டமைக்கு சந்தோஷப்படுகிறேன். மணலியும், நாங்களும் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதன் நோக்கத்தை நான் தெளிவுபடுத்த விரும்பு கிறேன். இந்த மசோதாவுக்குப் பின்னால் இன்னும் சில மாறுதல்கள் கூடச் செய்ய வேண்டியிருக்கும். அரசே அத்தகைய மாறுதல்களுக்கு திருத்தம் கொண்டுவரலாம். மசோதாவின் நோக்கத்தை எடுத்துக் கொண்டால்,

" Absentee land-lordism is abolished for ever ; tenant is given his option to purchase the land comprised in his holding at a very reasonable price; tenant is granted fixity of tenure and the safeguard not to be evicted under any circumstances ; small land-holders are protected from their land; ceiling limit to which a person or family is entitled to hold is reduced; exemption granted under the present Act is totally removed except in the case of the Government lands; and ways and means are provided for disposal of the land to the landless poor ".

என்பவையாகும். ஆனால், இந்த விவாதத்தில் அதிகமாக வந்த விஷயம் இந்த தர்ம ஸ்தாபனங்களுக்கு, மத ஸ்தாபனங்களுக்கு இருக்கக்கூடிய நிலங்களைப் பற்றியதாகும். எனக்கு முன்பு பேசியவர் களது கருத்தைப்போல—இதிலே அவற்றுக்கு உள்ள நிலங்களை எடுக்கவேண்டும் என்பது கருத்தல்ல. இந்தக் காரியங்களையெல்லாம் செய்ய அந்த மத ஸ்தாபனங்களுக்குப் பணம் இருந்தால் போதும். பணமாக அவர்கள் வைத்துக்கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்வது பற்றி யாருக்கும் ஆட்சேபணை இல்லை. இன்றைய காலக் கட்டத்தில் இந்த மத ஸ்தாபனங்கள் எல்லாம் நிலப்பிரபுக்களாக இருக்கவேண்டுமா என்பதைத்தான் நாம் யோசிக்க வேண்டும். மத ஸ்தாபனங்களையே ஒழிக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் கொண்டுவந்தவர்கள் யாரும் நினைக்கவில்லை. சொல்லவும் இல்லை. இந்த மத ஸ்தாபனங்களை நிலப்பிரபுக்களாக நீடிக்கவிடுவதால் பல இடைஞ்சல்கள் விளைவிக்கும் அமைப்பாக இருக்கக்கூடாது என்பது தான் என் கருத்து.

சில உதாரணங்களைக் காட்டலாம் என்று நினைக்கிறேன். அரசின் சார்பில் பதில் சொல்கிறபோது மடங்கள், பிற மத ஸ்தாபனங்கள்

ஆகியவற்றுக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். நான் சேகரித்திருக்கிற வரையில் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு 40 ஆயிரம் ஏக்கரா நிலம், இன்னும் பல லட்சத்திற்கு கட்டடம், நகைகள், பங்குகள் எல்லாம் இருக்கின்றன. தருமபுரம் ஆதீனத்திற்கு 50 ஆயிரம் ஏக்கரா நிலம் இருக்கிறது. 27 கோயில்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. வருடத்திற்கு 5 லட்சம் வருமானம் வரக்கூடிய வைதீசுவரன் கோயில் இந்த ஆதீனத்திற்கு உட்பட்டதுதான். திருப்பனந்தாள் ஆதீனத்திற்கும் 20 ஆயிரம் ஏக்கரா. அதிகமாக ரொக்கம் இருக்கிறது. ரொக்கத்தை வட்டிக்குக் கொடுத்து நமது சட்டத்திற்கு மீறிய வட்டிகூட வாங்கி வருகிறார்கள். இன்னும் நாங்குனேரி ஜீயர் மடம், திருக்குறுங்குடி ஜீயர் மடம், இன்னும் திருச்செந்தூர் ஆலயம், நெல்லையப்பர் ஆலயம் ஆகியவற்றுக்கு எல்லாம் நிலங்கள் இருக்கின்றன. இராமநாதபுரம் குன்றக்குடி மடத்திற்கு ஆயிரம் ஏக்கரா இருக்கிறது. இதுபோல பல விவரங்களைக் கொடுக்க முடியும்.

இப்போது நான் சொல்வதை நீங்கள் வேறுவிதமாக நினைக்கக் கூடாது. தில்லை நடராஜரையும், ஸ்ரீரங்கம் ரங்கநாதரையும் பீரங்கி வைத்துப் பிளக்கும் நாள் எந்நாளோ என்கிற அளவில் அன்றைக்கு, இன்று ஆளும் கட்சியில் இருக்கும் பலர் பேசியிருக்கிறார்கள். அதன் நோக்கம் இந்தக் கோயில்களையே பிளக்க வேண்டும் என்பதல்ல. அவற்றினால் சமுதாயத்தில் ஏற்படுகிற தவறான காரியங்கள் தடுக்கப் படவேண்டும் என்பதுதான்.

இன்றையதினம் தமிழகத்தில் இருக்கக்கூடிய கத்தோலிக்க ஸ்தாபனங்களுக்கு நாலாயிரம் ஏக்கரா இருக்கும். அதுபற்றிக்கூட ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன். மதுரை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான வருடமாக விவசாயம் செய்து கொண்டிருந்த விவசாயிகளை இந்த கத்தோலிக்க ஸ்தாபனத்தார் வெளியேற்ற முற்பட்டது குறித்து பெரிய கிளர்ச்சியே நடைபெற்றதை இந்தச் சபை அறியும்.

இன்னும் வஃக்ப் போர்டுகளுக்கு நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதே அந்த ஸ்தாபனத்திற்குத் தெரியாது. அதன் நிர்வாகம் பற்றியும் நாம் அறிவோம். முன்பு ஒருமுறை நமது அறநிலைய



அமைச்சரே சொல்லியிருக்கிறார். கோயில்களுக்குள்ள நிலங்களை யார்யார் அனுபவித்து வருகிறார்கள் என்பதைக் கண்டு அறிந்து அவற்றை மீட்டு வருகிறோம் என்பதாக. அது நல்ல ஏற்பாடு.

இன்றைய தினம் இந்த தர்ம ஸ்தாபனங்களுக்கு இதுபோல இருக்கக்கூடிய சொத்துக்கள் ஒழுங்காக எந்த தர்ம காரியத்திற்காக வைக்கப்பட்டதோ அதற்காகப் பயன்பட்டால்கூடப் பரவாயில்லை. ஒரு சிலர் அனுபவித்துக்கொண்டிருக்கிற நிலையைத்தான் பலயிடங்களில் பார்க்க முடியும். யார் மனத்தையும் புண்படுத்த வேண்டும் என்பதில்லை. கெட்ட காரியங்களைச் செய்பவர்கள் சில நல்ல காரியங்களையும் செய்யக்கூடும். தமிழுக்கு மடங்கள் பல தொண்டு செய்கின்றன. காசிக்குப்போனால் திருக்குறளை இந்தியில் அச்சிட்டும் தமிழில் அச்சிட்டும்கூட விநியோகம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்கிறார்கள் என்று சொன்னாலும் அந்தக் காரியங்களைச் செய்வதற்காக இந்த நிலத்திலிருந்து வருமானம் பெற வேண்டுமென்ற நிலை இல்லை. ஆகவேதான், பொதுவாக தெருப் பாடகன் ஒருவன் சொன்னதை இங்கே கூறவிரும்புகிறேன். "அண்ணாந்து பார்க்கிற மாளிகை கட்டி, அதிலே ஒரு ஓலை குடிசை கட்டி பொன்னன் என்று பெயரிட்டால் இந்த பூமி சிரிக்கும். இந்த பூமியை அனுபவித்துக்கொண்டிருக்கிற அந்த சாமியும் சிரிக்கும்" என்று தெருப் பாடகன் ஒருவன் பாடியிருக்கிறான். இப்படி சாமியும் சிரிக்கிற நிலையிலே தன்னுடைய பெயரிலே நிலத்தை வைத்து பக்கத்திலே இருக்கிற விவசாயிகளும் கஷ்டப்படக்கூடாது என்ற நிலைமையிலேதான் நான் இதைச் சொல்கிறேன்.

இன்றைக்குத் தவறுகள் செய்வதெல்லாம் சாதாரணமாக இருக்கலாம். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், இந்தத் திருத்தங்கள் ரொம்ப காலத்திற்கு முன்னால் வந்திருக்கவேண்டும். அப்படி தவறு வருகிற காலத்தில், தவறு சிறிதாக இருக்கிற காலத்தில் திருத்திக்கொள். தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்துவிட்டால் அதற்குப் பரிகாரம் தேடு என்று சிறுவர்களுக்குச் சொல்வதுண்டு. லெனின் அவர்கள் சொன்ன கருத்தைத்தான் பட்டுக்கோட்டை கல்யாணம் அவர்கள் ஒரு பாட்டாகவே பாடியிருக்கிறார். இப்படி ஒரு திருத்தம் ரொம்ப நாளைக்கு முன்பே வந்திருக்க வேண்டும். இன்றைக்கு நிலச் சீர்திருத்த திட்டத்திலே இருக்கவேண்டிய சில அடிப்படையான கருத்துக்களை மணலி அவர்கள் தன்னுடைய

குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கு உட்பட்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுவாக, இந்த மாதிரி தனியார் மசோதா தயாரிப்பது சுலபம் அல்ல, மசோதா தயாரிப்பது ரொம்ப சிரமம்தான். பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற முறையிலே நாங்களெல்லாம் ஒரு மசோதா தயாரித்து நாடாளு மன்றத்திலே கொண்டு வந்தோம். அப்பொழுது அமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். பாராட்டியதோடு இந்த மாதிரி மசோதாவைக் கொண்டு வந்துவிடுவோம் என்று சொல்லி, அந்தச் சட்டத்தை 3 வருடத்திற்குப் பிறகுதான் கொண்டுவந்தார்கள். அப்படி இல்லாமல், இங்கு இம்மாதிரியான Constructive Suggestions ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கொடுக்கக்கூடியவர்களை, அதுவும் விவசாய சங்கத்திலே இருக்கக்கூடிய தலைவர்களை எல்லாம் ஒன்றாகக் கூட்டித்தான் இந்த மசோதாவை இப்படி திருத்தினால் குறிப்பாக உச்ச வரம்புக்குப் பிறகு கண்டிப்பாக மிச்சம் கிடைக்கக்கூடிய நிலையிலே இருக்கும் என்றுதான் இப்பொழுது இதைக் கொண்டுவந்திருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையிலே எந்த ஒரு மத ஸ்தாபனத்தையும் நாம் தனிப்படுத்த வேண்டியதில்லை. அதிலே இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் எதிர்ப்பதிலே தயக்கம் காட்டுவார்கள். ஆகவே அவர்களது நிலத்தை மட்டும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் சொல்லவில்லை. என்னுடைய கட்சியும் அதை ஏற்றுக்கொள்ளாது. இந்து மதத்தோடு சேர்ந்திருக்கக்கூடிய அந்த சொத்துக்களை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அல்ல. சாதாரணமாக திருவனந்தபுரம் ராஜா ஆளக்கூடிய காலத்திலே பத்மநாபசாமிதான் ஆளுகிறார், ராஜா ஆளவில்லை, ஆகவே சாமிக்கு நிலம் எழுதி வைக்கலாம் என்று அப்பொழுது எழுதிவைத்துவிட்டார்கள். ஆனால், அது ஜாஸ்தியாக இல்லை. இங்கு நம்மிடம் அதிகமாக இருக்கிறது. ஆனால் அந்தக் காலத்திலே இருக்கக்கூடிய வருமானத்தைவிட அதிகமாகத்தானே கோயில்களுக்கெல்லாம் இப்பொழுது பணம் வருகிறது. செல்வாக்கு உள்ளவர்கள் பணத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், எத்தனை காலத்திற்கு வேண்டுமானாலும் பூஜை நடத்துங்கள்? அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று



இன்றைக்கு அமைப்பு மாறிக்கொண்டு வருகிறது. பேரறிவு கொண்டு எல்லாவற்றையும் மாற்றிக்கொண்டிருக்கிற இந்தக் காலத்திலே ஒரு ரிலிஜியஸ் சென்டிமென்ட் என்று வைத்துக்கொண்டு இதை தொடக் கூடாது என்று சொன்னால் அது சரியல்ல. அதற்காக ஒரு டிரஸ்டு வைத்துக்கொண்டு, அதனுடைய நோக்கங்கள் நன்மையாக இருக்கும் என்று சொன்னால் அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையிலே விதிவிலக்கு அளிக்கக்கூடிய காலத்திலே அந்த விதமான பாதுகாப்பு கொடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவை இந்த முறையிலே பார்த்து அரசும் அதற்கு ஆதரவு அளித்து தகுந்தபடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரு புதிய மசோதாவைத் தயாரித்து, இந்த மன்றத்தின் ஒப்புதலுக்காக கம்யூனிஸ்ட் கட்சிப் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் பேசிய பொழுது, மனம் திறந்து பேசினார்கள் என்பதற்காக நான் அவரை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் பேசும் பொழுது சொன்னார், இந்த அரசு செய்த நல்ல காரியங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் இந்த அரசு கொண்டு வந்திருக்கிற பல்வேறு திருத்தங்களையும் எடுத்துச் சொல்லி, "அவைகளை எல்லாம் நான் பாராட்டுகிறேன், அவைகளையெல்லாம் உள்ளபடியே புகழ்கின்றேன், நன்மை அடைகின்றவர்களை நான் காண்கின்றேன், இந்த அரசு இன்னும் கொஞ்சம் சிந்திக்கவேண்டும், இது புதுமை, இன்னும் அல்லவா செய்யவேண்டியிருக்கிறது. அதோடு இதையும் சேர்த்து செய்யுங்கள். நான் கொண்டு வந்துவிட்டேன் என்பதற்காக இதை எதிர்க்க வேண்டாம்" என்று அவர்கள் சொன்னார்கள். அவர் கொண்டு வந்துவிட்டாரே என்பதற்காக நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், அதிலே இருக்கிற பிரச்சினைகள் பற்றி சிறிது விளக்கம் மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, தமிழ் நாட்டில் நிலச்சீர்திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று நீண்ட நெடுநாட்களாக எல்லா அரசியல் கட்சிகளும் பேசிக்கொண்டு வருகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் 1960-ம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் [illegible]

[திரு. ப. உ. சண்முகம்] [1973 பிப்ரவரி 12

யாரும் நிலம் வைத்திருக்கக் கூடாது என்று அப்போதிருந்த அரசு ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுதே, அதற்கு முன்பிருந்தே இப்படி ஒரு சட்டம் வரப் போகிறது, இந்த சட்டம் எப்படி இருக்கும் என்பதைப்பற்றியெல்லாம் நாட்டிலே விவாதித்திருக்கின்றார்கள், இந்த அவையிலும் பேசப் பட்டது. இறுதியில் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த நிலச் சீர்திருத்தச் சட்ட வரைவு கொண்டு வரப்பட்டதற்குப் பிறகு அது பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அந்தப் பொறுக்குக் குழுவில் நானும் உறுப்பினராக இருந்து அதனுடைய விவாதங்களில் கலந்து கொண்டேன் என்பதை இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குப் பிறகு அந்தச் சட்டம் இந்த மன்றத்திலே கொண்டுவரப்பட்டது. அப்பொழுது மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும் இன்றைய முதலமைச்சர் அவர்களும் மற்றைய அங்கத்தினர்களும் பேசும்பொழுது அந்த உச்ச வரம்பு சட்டத்திலே இருந்த பல்வேறு ஓட்டைகளையெல்லாம் எடுத்துத் தெரிவித்தோம். ஆனால், அப்போதிருந்த அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. என்னை யாரும் தவறாகக் கருதமாட்டார்கள் என்று நம்பி ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக அப்பொழுது கொண்டு வரப்பட்ட சட்டம், அப்பொழுது கொடுக்கப்பட்ட விதிவிலக்குகள், என்னைப் பொறுத்த வரையிலும் தனி நபருடைய சொத்துக்களுக்காகக் கொடுக்கப்பட்ட, கொண்டு வரப்பட்ட விதிவிலக்கு என்று நான் பகிரங்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இதனால், யாரையும் குற்றம் சொல்வதாகக் கருத வேண்டாம். அந்தச் சட்டத்தின் விதிவிலக்குகளைப் பார்க்கும்போது அதுதான் நமக்குப் பிரதிபலிப்பாகத் தெரிகிறது. தனி நபருடைய சொத்தைப் பாதுகாக்கின்ற திருத்தமாகத்தான் அது தெரிகிறது. எனக்குத் தெரிந்த வரையிலும் இந்த நாட்டிலும், வெளி நாட்டிலும் கூட சோஷலிச சமுதாயத்தைப் பேசுகின்ற அரசு இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. ஆனால் இங்கு நிச்சய மாக அப்படி நிறைவேறியது. தனி நபருடைய சொத்தைப் பாது காப்பதற்காக ஒரு சட்டத்தை மன்றத்திலே நிறைவேற்றினார்கள். எதை உத்தேசித்து சட்டம் நிறைவேற்றப்பட்டது என்று சிலபேர் கேட்கக்கூடும்.



1973 பிப்ரவரி 12] [திரு. ப. உ. சண்முகம்]

உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். அதிலே கொடுக்கப் பட்டிருக்கின்ற விதிவிலக்குகளிலே ஒன்று, கரும்புத் தோட்டத்திற்குக் கொடுக்கப்பட்டிருப்பது. யாராவது கரும்பு ஆலைகளுக்கு, அந்த ஆலைகளுக்குத் தேவையான கரும்பு வளர்ப்பதற்கென்று நிலம் வைத்திருப்பார்களானால் அரசாங்க அனுமதி பெற்று எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் பெற்று, கரும்பு ஆலைக்குக் கரும்பு கொடுக் கிறோம் என்று கூறலாம் என்று அதற்கு விதிவிலக்கு வைத்திருந் தார்கள். தலைவர் அவர்களே, தங்கள் மூலம் இந்த அவையினருக்கு ஒன்றை நான் ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டிலே வாழ்கிற ஒரு மனிதர் கோரியதற்காக அந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இங்கு வாழ்கிற 4 கோடி மக்களில் வேறு யாரும் அந்த விதிவிலக்கு கோரவும் இல்லை, அனுமதிக்கப்படவும் இல்லை. தனி மனிதருடைய சொத்தைப் பாதுகாப்பதற்காக இப்படி ஒரு விதி விலக்கு அன்றைய உச்ச வரம்புச் சட்டத்திலே வைக்கப்பட்டது பெரிய ஓட்டை, இப்படிப் பல்வேறு ஓட்டைகள் அந்தச் சட்டத்திலே இருந்தன. அந்த ஓட்டைகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று அன்றையதினம் நாங்கள் எல்லாம் வலியுறுத்தினோம்.

முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதையே குறைத்து வைக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் பொதுக் கூட்டங் களிலே மட்டும் அல்ல, இதுபோன்ற மன்றங்களிலேயும் 1962-ம் ஆண்டு, 1967-ம் ஆண்டு தேர்தல் அறிக்கைகளிலேயும் அதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறது. 30 ஸ்டாண்டர்டு ஏக்கரையே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைப்போம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அந்த நில உச்ச வரம்புச் சட்டம், மற்ற சட்டங்களில் இருக்கிற ஓட்டைகளை அடைப்பதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வோம் என்று 1962-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே தெளிவாக எடுத்துத் தெரிவித்து இருக்கிறோம். ஆட்சிக்கு வந்தபிறகு நிறைவேற்றி யிருக்கிற சட்டங்கள், நாம் எடுக்கின்ற முயற்சிகள் அந்த ஓட்டைகளை அடைப்பதற்கான வழியில் இருக்கின்றன. அதற்காகப் பல முயற்சிகளை எடுத்திருக்கிறோம்.

பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் இந்தச் சட்டத்தை அறிமுகப் படுத்தும்பொழுது சொன்னார்கள், நீங்கள் முயற்சிகளே எடுக்கவில்லை

யென்று சொல்லவில்லை, கலைஞருடைய ஆட்சியில் எல்லா முயற்சிகளையும் செய்திருக்கிறீர்கள், பாராட்டுகிறேன். இன்னும் மேற்கொண்டு செய்யவேண்டுமென்று சொல்லி பல கருத்துக்களை இங்கே சொன்னார்கள். அப்படிப் பேசும்பொழுது இந்த மசோதாவிலே இருக்கிற பல கருத்துக்களைப்பற்றிப் பேசினார்கள். நான் அதிலே இருக்கிற முக்கியமான கருத்துக்களைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

நிலத்திற்கு உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைப்பதைவிட 5 ஏக்கர் என்று வைக்கலாம் என்பதும், அதிக பட்சம் 20 ஏக்கருக்கு மேல் இருக்கக்கூடாது என்பதும் அவர்கள் சொல்லி வந்த முக்கியமான வாதங்களாகும். 20 ஏக்கருக்கு மேல் கூடாது என்று அவர்கள் சொல்வது ஒருவேளை அவர்கள் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கருதி சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். சாதாரண ஏக்கர் என்று கருதித்தான் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இன்னொரு உறுப்பினர் என்று நினைக்கிறேன், அவர்கள் சொன்னார்கள். ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற வார்த்தைக்கே இடம் இருக்கக்கூடாது என்ற முறையிலே சொன்னார்கள். இரண்டுபோகம் விளைகிற பூமியாக இருந்தால் 5 ஏக்கர் ஆக இருக்கலாம் என்று சொன்னார்கள்.

நிலச் சீர்திருத்தங்களைக் குறித்து ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அதிலே நம்முடைய தமிழ்நாட்டு முதல் அமைச்சர் அவர்களும் இடம் பெற்றிருந்தார்கள். அந்தக் குழுவின் கூட்டத்திற்கு அவர்கள் செல்வதற்கு இயலாத நிலைமையில் நான் அந்தக் கூட்டத்திற்குச் சென்றேன். விவாதத்தில் கலந்து கொண்டேன். தமிழ்நாட்டிலே இருக்கிற நிலச்சீர்திருத்தச் சட்டங்களைப்பற்றியெல்லாம் கருத்துக்கள் கேட்கப்பட்டன. தமிழ்நாட்டின் சார்பிலே அதற்கான கருத்து விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டன.

விதிக்கப்படுகிற வரியை அடிப்படையாக வைத்துக்கொண்டு உச்சவரம்பை வைத்திருக்கிறோம் என்று சொன்னேன். அந்த வரியை நம்பி எப்படி அதைச் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். மண்ணைத் தரவாரியாகப் பிரித்து இருக்கிறோம். மண்ணிற்கு ஏற்றாற்போல்தான் விளைச்சல் இருக்கும். எனவே விளைச்சலுக்கு ஏற்றாற்போல்தான்



வரியிருக்கிறது என்று சொன்னேன். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய முறையை அவர்களும் மராட்டியத்தைச் சார்ந்த முதலமைச்சர் திரு. நாயக் அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். நாம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். அந்தக் குழு சொன்ன யோசனை 10 ஏக்கர் முதல் 18 ஏக்கர் வரை—இருபோக பூமியாக இருக்க வேண்டும்—இருக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதோடு அவர்கள் நிற்கவில்லை: 10 முதல் 18 ஏக்கர் என்பது 54 ஏக்கர் வரை இருக்கலாம்; ஒரு குடும்பத்திற்கு அதிக பட்சம் 108 ஏக்கர் இருக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நாம் அந்த வகையிலே அதைவிட அதிகமாகச் சலுகை தரவில்லை என்று சொன்னோம். தமிழ்நாட்டில் சில இடங்களில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது 12 சாதாரண ஏக்கருக்குச் சமமாக இருக்கிறது. 12 ஏக்கர்கூட 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாக இருக்கிறது. சில இடங்களில் 60 சாதாரண ஏக்கர் 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாக இருக்கும். மத்திய அரசு 10 ஏக்கர் என்று வைத்திருப்பதை நாம் 12 ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். மத்திய அரசு அதிகபட்ச அளவு 54 ஏக்கர் என்று வைத்திருப்பதை நாம் 60 ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். ஒரு குடும்பத்திற்கு 108 சாதாரண ஏக்கர் தான் வைத்துக்கொள்ளலாம் அல்லது ஏதும் விளையாத பூமியாக இருந்தால் இன்னும் சலுகை தரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் 120 ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று வரம்பு வைத்திருக்கிறோம்.

திரு. மணலி கந்தசாமி அவர்கள் சொல்லியிருக்கிற யோசனை 5 ஏக்கராகக் குறைக்க வேண்டுமென்பது. அதன்மூலம் பொருளாதார வளத்தைப் பெருக்க முடியும், கண்ணீரும் கம்பலையுமாய் இருக்கின்ற தமிழ்நாட்டு மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு அது ஒரு பெரிய சாதனையாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் சொன்னதற்குப் பிறகு நான் அதிகாரிகளிடம் புள்ளிவிவரங்கள் சேகரித்தேன். தமிழ்நாட்டிலே யார் யார் எவ்வளவு எவ்வளவு நிலம் வைத்திருக்கிறார்கள் என்று கேட்டேன். அவர்கள் ஹெக்டேரில் கொடுத்ததை நான் ஏக்கராக ஆக்கிச் சொல்கிறேன். சாதாரண ஏக்கர் $1\frac{1}{4}$ ஏக்கருக்குக் கீழ்—அதாவது அரை ஹெக்டேருக்குக் கீழ்—நிலம் வைத்திருப்பவர்கள் 27,32,691 பேர்கள். $1\frac{1}{4}$ ஏக்கரிலிருந்து

$2\frac{1}{2}$ ஏக்கர் வரையில் நிலம் வைத்திருப்பவர்கள் 16,73,262 பேர்கள். $2\frac{1}{2}$ ஏக்கரிலிருந்து 5 ஏக்கர் வரையில் நிலம் வைத்திருப்பவர்கள் 10,54,269 பேர்கள். 5 ஏக்கரிலிருந்து 10 ஏக்கர் வரையில் நிலம் வைத்திருப்பவர்கள் 5,84,687 பேர்கள். 10 ஏக்கரிலிருந்து 20 ஏக்கர் வரையில்—சாதாரண ஏக்கரில் சொல்கிறேன்—நிலம் வைத்திருப்பவர்கள் 2,47,021 பேர்கள். 20 ஏக்கரிலிருந்து 30 ஏக்கர் வரையில்—சாதாரண ஏக்கரில் சொல்கிறேன்—நிலம் வைத்திருப்பவர்கள் 1,23,828 பேர்கள். 30 ஏக்கருக்கு மேலே நிலம் வைத்திருக்கிறவர்கள் 85,842 பேர்கள். ஆக, தமிழ்நாட்டிலே சிறு சிறு நிலம் வைத்திருக்கிறவர்கள்தான் நிறைய பேர்கள் இருக்கிறார்கள், ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அதுவும் 5 ஏக்கருக்குக் கீழே வைத்திருப்பவர்கள் 77 சதவீதம் பேர்கள் இருக்கிறார்கள். 5 ஏக்கருக்குக் கீழே உள்ளவர்கள்தான் அதிகமானவர்கள். அவர்கள் சொல்லலாம். பல பினாமிகள் இருக்கின்றன என்று சொல்லலாம். பல பெரிய நிலச்சுவான்தார்கள் யார் யார் பெயரிலோ நிலங்களை சட்டப்படி காட்டிவிட்டு தங்கள் சொந்த அனுபவத்தில் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லலாம். பல இடங்களில் அப்படி இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். பினாமிதாரர்களை ஒழிப்பது எப்படி? அதற்காகத்தான் குத்தகைதாரர்கள் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து யார் யார் குத்தகைதாரர்களாக இருக்கிறார்களோ அவர்கள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்ற முறையிலே, அதிகாரிகளை அதற்காக மாவட்டத்திற்கு மாவட்டம் நியமித்து இருக்கிறோம். தாலுகாவிற்குத் தாலுகா, கிராமத்திற்குக் கிராமம் உள்ள குத்தகைதாரர்களைப் பதிவுசெய்து, இன்றையதினம் அவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 60 ஆயிரம் பேர்கள் ஆகும். தமிழ்நாட்டில் இதைவிட அதிகமாகவும் இருக்கலாம். பல பேர்கள் அஞ்சி இருக்கக்கூடும். அதற்காகத்தான் பதிவேட்டுச் சட்டம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்து எவ்வளவு எளிதாக பதிவு செய்ய முடியுமோ அவ்வளவு எளிதாக சட்டத்தைத் திருத்தி பாதுகாப்புக் கொடுக்கிறோம். 5 லட்சத்து 60 ஆயிரம் பேர்கள் இன்றையதினம் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பட்டாதாரருக்கும், யாராக இருந்தாலும், ஏற்கனவே இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டதற்கிணங்க ஒரு பட்டா பாஸ் புக் தயாரிக்கப்பட்டு கொடுக்கக்கூடிய முறையிலே, சென்ற மூன்று,



நான்கு மாதங்களுக்கு முன்னதாக பரமக்குடியிலே அந்த விழாவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அந்த பாஸ் புத்தகத்தில் எவ்வளவு நிலம் அவருக்குச் சொந்தம், தண்ணீர் தீர்வை எவ்வளவு, நிலத் தீர்வை எவ்வளவு, சர்வே நம்பர் என்ன, எவ்வளவு கடன் வாங்கி இருக்கிறார், எப்பொழுது தீர்வை கட்ட வேண்டும், என்பனபோன்ற முழு விவரங்களும் அடங்கியிருக்கும். அப்படிப்பட்ட பாஸ் புத்தகம் ஒவ்வொரு பட்டாதாரருக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையிலே அரசாங்கத்திற்கு அதன் விலை 1 ரூபாயாக ஆகியிருந்தாலும், நம்முடைய முதல்வர் அவர்கள் தெரிவித்ததற்கிணங்க, அதை 50 பைசாவுக்கு அவர்களுக்குக் கொடுத்துவிட்டு அடுத்த தடவை கிஸ்தி, நிலவரி அவர்களிடமிருந்து வசூலிக்கும்போது அதையும் சேர்த்து வசூலித்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. யார் யார் எல்லாம் பட்டாதாரர்களாக இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் கூப்பிட்டு கூப்பிட்டு அந்தப் புத்தகத்தைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கமாகும்.

72 லட்சம் பாஸ் புத்தகங்கள் வரையில் தேவை இருப்பதால்—அச்சடித்துக்கொண்டே இருக்கிறார்கள்—விரைவில் அவற்றை அனுப்பி வைக்க முடியும். அச்சாக அச்சாக புத்தகங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. அதிகாரிகள் தந்துள்ள தகவலின்படி இன்னும் 3, 4 மாதங்களுக்குள் பாஸ் புத்தகங்கள் கொடுக்கிற வேலை பூர்த்தியாகிவிடும் என்று தெரிகிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் பினாமிதார்களை ஒழிப்பதில் இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்பதைக் காட்டுவதற்காகத்தான். நிலத்தை வைத்துக்கொண்டு சுரண்டுவதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது, ஒத்துக் கொள்கிறோம். யாருக்கும் ஆட்சேபனையில்லை. நாம் இப்பொழுது நிர்ணயித்திருக்கிற 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேலும் குறைக்க வேண்டுமா? குறைக்க வேண்டுமென்று சொல்வது கம்யூனிஸ்ட் கட்சியின் வாதம். தேவையில்லை என்பது எங்களுடைய வாதம். இப்பொழுதிருக்கிற உச்சவரம்பே போதும். இந்த 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்றதற்குப் பிறகு இதை அமலாக்கினால் எவ்வளவு நிலம் கிடைக்கும் என்பதற்குக்கூட புள்ளி விவரங்களைச் சேகரிக்கச் சொன்னோம். ஏற்கெனவே இருந்த 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்பதன்கீழ் வந்தால் 53,000 ஏக்கர்கள் "சர்ப்ளஸ்"—ஆக

கிடைக்கும் என்று போடப்பட்டது. இப்பொழுது அரசு கொண்டு வந்திருந்த பல்வேறு திருத்தங்களுக்குப் பிறகு எவ்வளவு கிடைக்கும் அதிகபட்சம் உபரி நிலம் என்று பார்த்ததில் 96,000 ஏக்கர்கள் கிடைக்கும் என்று புள்ளி விவரங்களை அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். 96,000 ஏக்கர்களை எடுக்கின்ற அளவிற்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று நாம் சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம். இதை அமலாக்கி, அந்தச் சட்டத்தின்மூலம் நிலத்தை எடுப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பது நிலத்தில் பாடுபட்டவர்களுக்கு, நிலத்தின் அருமை பெருமைகள் நன்றாகத் தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

இந்தச் சட்டத்தில் இருக்கும் சிக்கல்கள் புரிந்தவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். இது அவ்வளவு சுலபமானது அல்ல. நீதிமன்றத்திற்குப் போகிறார்கள், அவர்களைத் தாண்டி வர வேண்டும். அப்படியே நீதிமன்றத்திற்குப் போகவில்லையென்றாலும், கொடுக்க வேண்டிய கால வரம்பு, நோட்டீஸ்கள் எல்லாம் கொடுத்துத்தான் எடுக்க வேண்டும். 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்சவரம்பின் கீழுள்ள அதிகபட்ச நிலத்தை இன்னும் முழுமையாக எடுக்கவில்லை. அதை முடிக்க வேண்டும். அதை எடுத்து முடித்ததற்குப் பிறகு இதைப்பற்றி வேண்டுமென்றால் யோசிக்கலாம். மேற்கொண்டு குறைப்பதைப்பற்றி யோசிக்கலாம். குறைக்காமல் இப்படியே இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. காலம் வரும் பொழுது, குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் குறைக்கலாம். குறைக்க வேண்டுமென்று சொல்பவர்களுக்கு என்னுடைய பதிலாக அது ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில் நிலங்களை அதிகமாக எடுக்க வேண்டும். விதிவிலக்கே இருக்கக்கூடாது என்று சிலர் சொல்கிறார்கள். ஏற்கெனவே இருக்கும் விதிவிலக்குகளை நீக்கிக்கொண்டு வருகிறோம். ஆனால் கல்வி, அறநிலையங்கள், ஆலயங்கள், அறங்கள் இவற்றின் பெயரால் வைக்கப்பட்ட நிலங்களுக்கு விலக்கு இருந்தது. கல்விக்கு என்று ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு ஒரு வரம்பை வைத்திருக்கிறோம். ஒரு கல்லூரியாக இருந்தால் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம், உயர்தரப் பாடசாலையாக இருந்தால் எவ்வளவு நிலம் வைத்திருக்கலாம் என்று வரம்பை நாம் நிர்ணயித்திருக்கிறோம். அந்த வரம்பை நிர்ணயித்திருப்பதால் அதிக நிலத்தை மேற்கொண்டு அங்கிருந்து எடுப்பதற்கு இயலாது. ஏற்கெனவே அந்த வரம்பைக் கொண்டு வந்திருக்கிறோம்.



ஆனால் பொதுவாக வாதிடப்பட்டது. இன்றைக்கு எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஏனென்றால் எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அறத்திற்கு என்று நிலமே தேவையில்லை, கோயிலுக்கு நிலம் எதற்கு? ஆண்டவன் தொழுகையை ஆட்சேபிக்கவில்லை, ஆனால் நிலத்தை வைத்துக் கொண்டுதான் தொழ வேண்டுமா? என்று தெரிவித்தார்கள்.

முஸ்லீம் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பேசும்பொழுது, " நாங்கள் அந்தக் கருத்தை எற்றுக்கொள்ளத் தயாராயில்லை. இந்தச் சொத்துக்கள் இருக்கத்தான் வேண்டும். ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆண்டவனுக்கு உள்ள சொத்து அல்ல. அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்கள் பலர் இருக்கிறார்கள், அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு இந்தச் சொத்துக்கள் இருக்க வேண்டும் " என்ற கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்கள், கிறித்துவ மக்களுக்கும் சேர்த்தே வாதாடினார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் இந்து மக்களுக்காக வாதாடினார்கள் என்று கருதுகிறேன், இதைப்பற்றிக் கூறும்பொழுது இந்தச் சொத்துக்களை எடுக்கவே கூடாது என்று சொன்னார்கள். புது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த—மன்னிக்கவும்—இந்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சுரேந்திரன் அவர்கள் பேசும்பொழுது நிலம் கூடாது, எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள்கூட சொன்னோம், அனந்த நாயகி அம்மையார் அவர்களைப் பேசுங்கள் என்று சொன்னோம். அவர்களுடைய கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலில் இருந்தேன். ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள். ஆனாலும் கூட அவர்களின் கருத்தை மாற்றிக்கொண்டிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஒருவேளை கருத்தை மாற்றிக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் நான் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நாங்கள் வேறு இடத்திற்கு வந்திருக்கிறோமே தவிர வேறு கட்சிக்குப் போய் விடவில்லை, எங்களுக்குள் பிரிந்த இடத்திற்குத்தான் வந்திருக்கிறோம்

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே கொள்கை இருக்கிறது, அந்தக் கொள்கையிலிருந்து பிரளமாட்டேன், மாற மாட்டேன் என்று சொல்கிறார்களா அல்லது அந்தக் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. சுரேந்திரன் அவர்கள் கூறிய கருத்தை ஏற்றுக்கொள்கிறார்களா, அப்படி ஏற்றுக்கொண்டு ஆலயங்களுக்கு நிலமே தேவையில்லை என்று சொல்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. ஆலயங்களுக்கு நிலமே தேவையில்லை என்பதை அம்மையார் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். ஆலயங்களுக்கு நிலம் வேண்டும், எடுக்கக்கூடாது என்று இதே மன்றத்தில் அழுத்தந்திருத்தமாக வாதாடி இருக்கிறார்கள். அதை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமாகிவிட்டது. இன்னும் ஐந்து நிமிடங்கள்தான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஐந்து நிமிடங்கள் போதாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் பதிலோடு முடித்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த மன்றத்தில் ஏற்கனவே அம்மையார் அவர்கள் பேசும்பொழுது மிகவும் வலுவோடு பேசியிருக்கிறார்கள். இந்த நிலங்களை எடுக்கக்கூடாது, ஆலயங்களுக்குச் சொந்தமாக இருக்கும் நிலங்களை எடுக்கவே கூடாது, அப்படி எடுப்பதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அப்பொழுது இந்த மன்றத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் சொன்னார், அம்மையார் அவர்கள் இவ்வளவு பிற்போக்கான கருத்தை எப்படிக் கொண்டார் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை, காலம் வளர்ந்து கொண்டிருக்கிறது, அம்மையார் அவர்கள் பிற்போக்கு வாதியாக இருக்கிறாரே என்ற கருத்தை இந்த மன்றத்தில் ஒரு உறுப்பினர் சொன்னார். அப்பொழுது அம்மையார் அவர்கள் சும்மா இல்லை. சீறி எழுந்தார்கள். "Sir, I take strong objection to the word பிற்போக்கு" என்று சொன்னார்கள். பிற்போக்கு என்று சொல்வதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன், நான் பிற்போக்குவாதி அல்ல என்பதாகச் சொன்னார்கள். யார் அந்த உறுப்பினர் என்று புத்தகத்தைப் பார்த்தால்



ஆச்சரியமாக இருக்கிறது. பிற்போக்கு என்று பேசியவர் இப்பொழுது அவர்கள் இருக்கும் கட்சிக்குத் தலைவராக இருக்கும் நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள்தான். அதை அம்மையார் தான் எதிர்த்தார்கள். எனக்குத் தெரிய வேண்டும். அவர்கள் இடம் மாறியிருந்தாலும் பிற்போக்காக இருக்கிறார்களா அல்லது முற்போக்காக இருக்கிறார்களா என்று அதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்டோம், பேசுங்கள் என்று சொன்னோம். ஆனால் நான் பேசத் தயாராக இல்லை, சொன்ன கருத்து அப்படியே இருக்கும் என்ற பாணியிலேயே என்னவோ அப்படியே விட்டு விட்டார்கள்.

ஆலயங்களுக்கு உள்ளவைகளில் எவ்வளவு எடுக்க வேண்டும், எவ்வளவு நிலம் இருக்கும் என்ற சர்ச்சை எழுந்தது.

திரு. எம். சுரேந்திரன் : அம்மையார் அவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டார்கள் என்றால் இந்த அமைச்சரவையும் தங்கள் கருத்தை மாற்றிக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நண்பர் திரு. சுரேந்திரன் அவர்கள் மாற்றிக்கொண்டதைப்போல் நாங்கள் எங்கள் கட்சியை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. எங்கள் கருத்தையோ, ...யையோ இடம் மாற்றிக்கொள்ளப் பழக்கப்பட்டவர்கள் அல்ல. ஆகவே, அதற்குத் தயாராக இல்லை.

ஆலயங்கள், மசூதிகள், சர்ச்சுகளுக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்ற புள்ளி விவரத்தைப் பார்த்தால் கோயில்களுக்கு இருக்கும் நிலம் 1.55 லட்சம் ஆகும். மசூதிகளுக்கு இருக்கும் நிலங்கள் 4,955 ஏக்கர் நிலங்களாகும். சர்ச்சுகளுக்கு இருக்கும் நிலங்கள் 5,159 ஏக்கர் ஆகும். ஆலயங்களுக்கு இருக்கும் நிலங்கள் இவ்வளவுதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் டிரஸ்ட் நிலம், அறத்தின் பெயரால் எவ்வளவு நிலம் இருக்கிறது என்று கணக்குப் பார்த்தால், பொதுவாகத் தமிழ்நாட்டில் 1,73,440 ஏக்கர்கள் ஆகும். நாம் டிரஸ்டிலே கொண்டுவந்த கட்டுப்பாட்டின் மூலம் உபரி என்று நாம் எடுக்கப்போகும் நிலங்கள், தோராயமாக 25,000 ஏக்கர்கள் இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த 25,000 ஏக்கர்களை எடுக்கப்போகிறோம்.

[திரு. ப. உ. சண்முகம்] [1973 பிப்ரவரி 12

இங்கே ஆலயங்களுக்குச் சொந்தமான நிலத்தை எடுப்பதா இல்லையா ? இதை மத்தியக் குழு ஆலோசனை செய்தபொழுது.......

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, மைசூரில் இருக்கும் மடங்களுக்கும், ஆந்திராவில் இருக்கும் மடங்களுக்கும் இங்கே எவ்வளவு பூமி இருக்கிறது என்று சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனியாகச் சொன்னால் நான் விவரம் சேகரித்துச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். மைசூர், ஆந்திரா ஆகிய வெளி மாநிலங்களில் உள்ள மடங்களுக்குச் சொந்த மான பூமி எவ்வளவு இருக்கிறது என்று தனியாகக் கேட்டால் சொல் கிறேன். இப்பொழுது எவ்வளவு என்ற கணக்கு என்னிடத்திலே இல்லை. பின்னால் வேண்டுமானால் சேகரித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிக முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றி அமைச்சரவர்கள் விவரம் சொல்லிக்கொண்டிருப்பதால் அவர் களுடைய பிரசங்கத்தைத் தொடர்ந்து அடுத்த நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.ப. 7 00 திருமதி த. ந. அனந்தநாயகி : 96,000 ஏக்கர்கள் உபரியாகக் கிடைக்கும் என்றால், $1\frac{1}{4}$ ஏக்கருக்குக் கீழேயிருக்கும் 27 இலட்சம் பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சப்-மார்ஜினல் ஃபார் மர்ஸ் என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

அப்படி என்றால் 96,000 ஏக்கர் சர்ப்ளஸ் வருகிறது. ஆகவே, $1\frac{1}{2}$ ஏக்கருக்குக் கீழே இருக்கும் பட்டாதாரர்களுக்கு எகனமிக்ஸ் ஹோல்டிங்ஸ் கொண்டு வர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

திரு. நா. வீராசாமி : அமைச்சர் வேண்டுமானாலும் இப்போது பேசி முடித்து விடலாம். திரு. மணலி கந்தசாமி அவர்கள் தொடர்ந்து இன்னொரு நாள் பேசலாம்.



1973 பிப்ரவரி 12]

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு கிளாரிபிகேஷன். இடையில் குறுக்கிட வேண்டாமென்று பேசாமல் இருந்தேன். 1960 சட்டத்தில் ஓட்டை கள் இருந்தன. அது தனி நபர்களுக்காகச் செய்யப்பட்டது என்று சொன்னார்கள். இப்போது இருக்கும் சட்டத்திலும் ஓட்டைகள் இருக்கின்றன என்றும் சொன்னார்கள். அப்படியானால் தனி நபர் களுக்காக அந்த ஓட்டைகள் வைக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஜேம்ஸ் அவர்கள் இப்படி வந்து அகப்பட்டுக் கொள்ளுவார் என்பது தெரியும். தனி நபருக் காகச் சட்டம் இயற்றிய அந்த அதிசயம் இந்தியாவிலேயே இந்த மன்றத்தில்தான் நடைபெற்றிருக்கிறது. நாங்கள் கொடுத்திருக்கின்ற விதிவிலக்குகளில் எங்கே தனி மனிதனுக்குப் பாதுகாப்புக் கொடுத் திருக்கிறோம்? அப்படிக் கொடுத்திருந்தால் ஊழல் புகார் பட்டியலில் அதுவும் சேர்ந்து போயிருக்குமே.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்த மனிதர் யார் என்று இந்த மன்றத்தில் சொல்லுவதில் அமைச்சர் அவர்களுக்கு ஆட்சேபணை உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவர் அன்று பண்டித ஜவகர்லால் நேரு வந்து கலந்து கொண்ட ஆவடி காங்கிரஸ் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றிய திரு. வி. எஸ். தியாகராசன் அவர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : திருவாரூர் கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்பட்ட ஊழலின் காரணமாக அவரை ராஜினாமாச் செய்யச் சொல்லி அவர்மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டீர்களே, அவர்தானே.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டோம் என்று சொல்லுவது மேடைப் பேச்சிற்குப் பயன் படுமே தவிர வேறு ஒன்றுக்கும் பயன்படாது. நான் சொல்லுகிற உண்மையைச் சட்டத்திலிருந்து எடுத்துச் சொல்லுகிற ஆதாரத்தை மறுக்க யாராலும் முடியாது. எப்படியோ அன்று அப்படி நடந்து விட்டது. மேலும் என்னுடைய பேச்சை அடுத்த தொடரில்

வைத்துக் கொள்ளுகிறேன் என்று கூறி இத்துடன் என்னுடைய பேச்சை நிறுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தச் சட்ட முன் வடிவின் மீதான விவாதத்தை தொடர்ந்து அடுத்த தனியார் அலுவல்கள் நாளில் வைத்துக் கொள்ளலாம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். அனைவருக்கும் நன்றி. வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 7-33 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## (7) பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

39. Notification issued with G.O. Ms. No. 2633, Home, dated the 13th October 1972, in regard to grace time for the payment of tax in respect of Stage Carriages and Public Carriers ordinarily kept in this State for the quarter ending 31st December 1972. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1931 (*Tamil Nadu Act III of* 1931)].

40. Notification issued with G. O. Ms. No. 1006, Housing, dated the 26th June 1972, making the Tamil Nadu State Housing Board, Finance (Floating of Public loan) Rules, 1972. [*Laid on the Table of the House under section* 160(4) *of the Tamil Nadu State Housing Board Act*, 1961 (*Tamil Nadu Act* 17 *of* 1961)].

### B. *Reports, Notifications and other Papers.*

@ 19. The Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 1 of 1973).

@ Despatched to Members on 9th February 1973.



## இணைப்பு.

*[249-ஆம் பக்கத்தில் 124-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]*

### விவர அறிக்கை.

யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் நான்கு தமிழ் நாட்டில் தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் 1957–58 முதல் செயல்பட்டு வருகின்றன. தொடக்கம் முதல் 1964-ஆம் ஆண்டுவரை இந்நோயினால் பாதிக்கப் படக்கூடிய 3 லட்சம் மக்களுக்கு நோய்த் தடுப்புப் பணியை ஒவ்வொரு பிரிவும் மேற்கொண்டது. 1964-ஆம் ஆண்டிலிருந்து 1968-ஆம் ஆண்டுவரை இந்நோயினால் பாதிக்கப்படக்கூடிய 3.50 லட்சம் மக்களுக்கு நோய்த் தடுப்புப் பணியை ஒவ்வொரு பிரிவும் மேற்கொண்டது. 1968 முதல் 3.75 லட்சத்துக்குக் குறையாத மக்களுக்கு ஒவ்வொரு பிரிவும் நோய்த் தடுப்புப் பணியை மேற்கொள்கிறது. இவ்வாறாக இப்பிரிவுகள் இம்மாநிலத்தில் மொத்தம் 15 லட்சம் பேர்களுக்குப் பணி செய்கின்றன.

2. இப்பிரிவுகள், கொசு உற்பத்தியாகும் இடங்கள், நீர் தேங்கியுள்ள இடங்கள் ஆகியவற்றில் கொசு மருந்து தெளிப்பதன் மூலம் முறையான கொசு ஒழிப்புப் பணியைப் புரிந்து வருகின்றன. சாக்கடைக்கால்கள் கட்டுவது போன்ற சிறுகட்டுமான நடவடிக்கைகளையும் இவை மேற்கொள்கின்றன. இவற்றுடன் நலக்கல்வி நடவடிக்கைகளும் கூடவே நிறைவேற்றப்படுகின்றன. யானைக்கால் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் என்று தெரியவந்தவர்கள் சிகிச்சை பெறுவதற்காக அண்மையில் உள்ள மருத்துவ மனைகளுக்கு அல்லது மருந்தகங்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

3. அண்மையில் எட்டுப் புதிய யானைக்கால் நோய்க் கட்டுப் பாட்டுப் பிரிவுகளை விழுப்புரம், கடலூர், காஞ்சீபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை, சென்னை மாநகராட்சி ஆகிய இடங்களில் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் மேலே சொல்லப்பட்டுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள நுண்ணுயிர் கொசுக்களின் அடர்த்தியைக் குறைத்தல், உள்ளாட்சி மன்றங்களில் உள்ள மருத்துவ அலுவலர்கள், அரசு மருத்துவ அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் யானைக்கால் நோய் சிகிச்சைக்கானத் தனி மருத்துவமனைகளை நிறுவுதல் ஆகியவை மூலம் கொசு ஒழிப்புப்

பணியை முனைப்பாக்கும். அவை நகர்ப்புறங்களில் யானைக்கால், நோய் பரவியுள்ளது குறித்தும் ஆய்வு செய்யும். மேலும் நகர்ப்புறங்களில் நோய் கண்டுள்ளதாகத் தெரியவந்தவர்களை சிகிச்சையளிக்கப்படுவதற்கு வேண்டி மருத்துவமனைகள்/மருந்தகங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பிவைக்கும். அவை நகர்ப்புறங்களைச் சுற்றி 5 கல் தொலைவுவரை உள்ள கிராமங்களிலும் யானைக்கால் நோய் பரவியுள்ளது குறித்து ஆய்வுசெய்யும். அங்கு நோய் கண்டிருப்பதாகத் தெரியவந்தவர்களுக்கு "டைஇதைல் கார்போநைஜன்" (ஹெட்ரஜன்) மாத்திரைகளை வழங்குவதன் மூலம் உடல்நல ஆய்வாளர் Health Inspector உதவியாளர் Assistant ஒருவர் ஆகியோர் அடங்கிய சிகிச்சையளிக்கும் குழுவால் சிகிச்சையளிக்கும்.

4. புதிய எட்டுப் பிரிவுகளை அண்மையில் ஏற்படுத்திய தோடல்லாமல், ஏற்கனவே இருந்த நான்கு பிரிவுகளும் அண்மையில் கூடுதலான பணியாளர்கள் அமர்த்தப்பட்டு விரிவுப்படுத்தப் பட்டுள்ளன. இதனால் இந்த நான்கு பிரிவுகள் முன்னைவிட சிறப்பாகச் செயலாற்றும்.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

### செவ்வாய்க்கிழமை, 1973 பிப்ரவரி 13.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### ஓட்டல் தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம்

*** 143 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மயிலை உட்லண்ட்ஸ் ஓட்டல், சென்னை பிராட்வே அம்பீஸ் கேப் ஆகிய ஓட்டல்களில் முறையாக பிராவிடண்டு நிதித்திட்டம் அமுலாக்கப்பட வில்லை என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் மயிலை உட்லண்ட்ஸ் ஓட்டலில் முறைப்படி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. அம்பீஸ் கேப்பைப் பொறுத்தவரை இத்திட்டம் டிசம்பர் 1970 வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதன் பின்னர் அந்த நிறுவனம் அதை அமுல்படுத்தத் தவறியதால் அது கட்டவேண்டிய வைப்பு நிதியை வசூலிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இந்த அம்பீஸ் கேபில் கடந்த இரண்டாண்டு காலமாக பிராவிடெண்ட் பண்டு பிடிக்கப்படாமல் இருக்கிறது; அது தொடர்ந்து பிடிக்கப்படுவதற்கும், ஏற்கெனவே அவர்கள் கட்டாத பணத்திற்கு பெனல்டி வசூலிக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தீவிரமான நடவடிக்கைதான் எடுக்கப்பட்டு வந்திருக்கிறது. மேலும் நடவடிக்கை எடுப்பதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை.

[1973 பிப்ரவரி 13

## Entertainments Tax

* 145. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken by the Government to check Entertainment Tax evasion ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைமீது விவரமான அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

## மீன் பதனிடும் நிலையங்கள்

* 144 வினா—**திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் பதனிடும் நிலையம் தமிழ்நாட்டில் தற்போது எத்தனை இடங்களில் உள்ளன ?

(இ) தஞ்சை மாவட்டத்தில் அதுபோன்ற நிலையங்கள் ஏதேனும் அமைக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) விவர அறிக்கையொன்று @@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

## Sale price of arrack

* 146 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have fixed the sale price of arrack in the shops.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சாராயத்தின் மொத்த விற்பனை விலை அரசினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடைகளில் சில்லரையில் விற்கும் விலை நிர்ணயிக்கப்படவில்லை..

---

@ 590—593-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 594—596-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1973 பிப்ரவரி 13]

## நாதசுர இசைக்கருவிகள் தயாரிப்பு

* 147 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நாதசுர இசைக்கருவி செய்யும் தொழிற்கூடம் தற்போது எங்கெங்கு உள்ளன ?

(இ) அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கட்கு அரசு ஏதேனும் உதவி வழங்கியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) நாதசுர இசைக்கருவி செய்யும் தொழிற்கூடம் எதுவும் அரசுத் துறையிலும் தொழில் கூட்டுறவுத் துறையிலும் இயங்கவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, இந்த நாயன இசைக் கருவிகள் தமிழகத்தின் பண்பாட்டை விளக்குவதாக இருப்பதால் அரசு அதற்கு ஊக்கமளித்து தனியார் துறையிலோ அல்லது அரசுத் துறையிலோ ஓரிரண்டு இடங்களில் உற்பத்தி செய்ய இனியேனும் ஆவன செய்ய முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தனியார்த் துறையில் தஞ்சை மாவட்டத்தில் தேரழுந்தூரில், நரசிங்கம்பேட்டையிலும் நாயனம் உற்பத்தி செய்கிறார்கள்.

**திரு. என். கிட்டப்பா:** தனியார் துறையில் உற்பத்தி செய்கின்ற அத்தகைய நிறுவனங்களுக்கு அரசு ஏதேனும் மானியத் தொகையோ, உதவித் தொகையோ, கடன் தொகையோ அளித்து வருகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படி அவர்கள் முன்வந்து கேட்பார்களானால் பரிசீலிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Nadaswaram is one of the best of fine-arts which has developed to a great extent in Tamil Nadu. The people who are following this are poor. Will the Hon. Minister give an assurance that sufficient grant will be given to these people to develop the art ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது உற்பத்தி செய்வது பற்றிய கேள்வி. கலைஞர்களுக்கு உதவித் தொகை அளிப்பதுபற்றி முதலமைச்சரவர்களைக் கேட்க வேண்டும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** நாதசுர இசைக் கருவிகளுக்கு வெளி நாடுகளில் அதிகமான கிராக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த வகையில் தமிழக அரசே பொறுப்பேற்று நாதசுரக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடத்தை அமைக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒரு பெரிய தொழிற்கூடம் அமைக்கும் அளவுக்கு இதற்கு விற்பனை வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஆங்காங்கு பழமையான தொழிலாக இதைக் கொண்டிருப்பவர்களுக்கு வேறு எந்தவித மான உதவியாவது தேவையாக இருக்குமானால் அதுகுறித்து அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

### தென்னார்க்காடு மாவட்டத்தில் கிடைக்கும் கறுப்புக் கற்கள்

* 148 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்தில் குன்னம் அருகே கிடைக்கும் கறுப்புக் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** இப்படிப்பட்ட கறுப்புக் கற்கள் நம் நாட்டில் கிடைப்பதை நல்ல முறையில் பாலிஷ் செய்தால் கட்டடங்கள் பளபளப்பாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அப்படிப் பாலிஷ் செய்யும் தொழிற்சாலைகள் ஜப்பானில் இருக்கின்றன. இங்கேயும் அம்மாதிரி அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா ? அல்லது இனிமேலாவது அரசு அதுகுறித்து ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வெளியே நாம் கற்களை அனுப்பாமல் நம் மாநிலத்திலேயே அதை பாலிஷ் செய்யக்கூடிய அளவில் சிறு சிறு தொழிற் சாலைகளை நடத்தி வருகிறார்கள். இன்னும் அதைத் தொடங்க யாராவது முன் வந்தால் அதற்கு உதவி செய்யலாம்.

**திரு. எம். இராதாகிருட்டிணன் :** வடார்க்காடு மாவட்டத்தில் தண்டாரம் பட்டு பஞ்சாயத்து யூனியனில் இப்பேர்ப்பட்ட கறுப்புக் கற்கள் இருக்கின்றன. அவை தேவை என்று யாராவது விண்ணப்பித்திருக்கிறார்களா ? அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வடார்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது. யார் யார் அதிலே மனுப் போட்டு அனுமதி பெற்றிருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. எஸ். முருகையன் :** இந்தக் கறுப்புக் கற்களை வெளி மாநிலங்களில் இருந்து வந்து எடுத்துக் கொண்டு போகிறார்கள். அதையாவது தடை செய்து இந்த மாநிலத்திலுள்ள அதுபோன்ற தொழில் செய்பவர்களுக்குக் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அண்மையில் இதுபற்றி பரிசீலித்து தமிழ்நாட்டில் இதைக் கொண்டு தொழில் செய்யத் தொடங்குபவர்களுக்குத் தான் இதை க்வாரியிங் செய்கிற அனுமதி தரப்படவேண்டுமென்று ஒரு விதியை நம் அரசு பிறப்பித்திருக்கிறது.

### நாரணமங்கலம் சாலை

* 149 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் வில்லியநல்லூரிலிருந்து மணல்மேடு வரை உள்ள பாதையில் நாரணமங்கலம் அருகே கப்பிச்சாலை போடும் பணி இன்னும் நிறைவேற்றப்படாததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இச்சாலையை மேம்பாடு செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** மாயூரத்திலிருந்து நாரணமங்கலம் வழி மணல் மேடு செல்லும் வழி நான்கு மைல் தூரத்திற்குக் குறைவாக இருக்கிறது. இதில் ஒரு மைல் நீளத்திற்கு நாரணமங்கலம் பகுதியில் சாலை இல்லாததால் போக்கு வரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது என்ற அடிப்படையில் அதை விரைந்து செயல்படுத்த அரசு ஆலோசிக்குமா என்று அறியவிரும்புகிறேன். அதோடுகூட அதை ஊராட்சி ஒன்றியம் செய்யவேண்டியிருக்கிறது என்று கருதுகிறேன். அந்த ஒன்றியத்திற்கு அத்தகைய அறிவிப்பை அரசு உடனடி யாக அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் இது ஒன்றியச் சாலை. அது நான்கு கிலோமீட்டர் நீள முள்ளது. Under the Intensive Agricultural Development Programme in Thanjavur, Tiruchi and South Arcot அதில் சேர்ப்பதற்

கான குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் அந்த ஒன்றியத்திற்குத் தெரிவிக்கப்பட்டு தேவையான மேல்பாடு நடவடிக்கைகள் எடுக்க உத்தரவு இடப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** இந்தச் சாலையை அமைப்பதற்காக அங்கு கப்பி கொட்டப்பட்டு சுமார் இரண்டாண்டுக் காலமாக அது வீணாகிக் கொண்டிருக்கிறது. எனவே அதை நினைவுபடுத்தி அரசு துரிதமாக அந்தச் சாலையை அமைப்பதற்கு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது பஞ்சாயத்து யூனியன் சாலை. அவர்கள்தான் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் யூனியனுக்கு தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

## குட்டை அமைப்புத் திட்டங்கள்.

*** 150 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் S.F. No. 151 செட்டிபாளையம் கிராமத்தில் குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) பல்லடம் தாலுக்கா செட்டிபாளையம் கிராமத்தில் சர்வே நெ. 151-ல் ரூ. 51,900 செலவில் ஒரு குட்டை கட்டும் திட்டம் செயற்பொறியாளர், பொள்ளாச்சி அவர்களிடம் பரிசீலனையில் உள்ளது.

*** 151 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிபாளையம் கிராமம், சின்னாண்டிபாளையத்திற்கு அருகில் உள்ள குட்டையின் கரையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) இத் திட்டத்திற்கான ஆய்வு தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.



## கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண்மைக் கருவிகள் வழங்கல்.

*** 152 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குத் தேவையான வண்டிப்பட்டைகள், அச்சு, கொழுக் கலப்பை இரும்புகளும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஆம்.

**திரு. தி. பொன்னுமலை :** விவசாயிகளுக்கு இப்போது ஒரு வண்டி கட்ட வேண்டுமென்றால் ரூ. 1,000, ரூ. 1,500 ஆகிறது. சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஒரு வண்டி கட்ட ரூ. 500 ஆக இருந்தது. அப்போது நெல் விலை க்விண்டாலுக்கு ரூ. 45 என்றிருந்தது. இப்போது அது ரூ. 150 ஆகிறது. எனவே கூட்டுறவு முறையில் விவசாயிகளுக்குச் சகாய விலையில் அவர்களுக்கு வேண்டிய வண்டிப்பட்டைகள், அச்சு போன்ற வண்டி கட்டுவதற்கு வேண்டிய சாமான்களை வழங்குவதற்கு அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உறுப்பினர் அவர்கள் பகுதியில் இதற்கென்று தனியாக கூட்டுறவு சங்கம் இல்லை என்று கருதுகிறேன். அப்படி கூட்டுறவு சங்கம் அமைக்க முன்வந்தால் அரசாங்கம் அதற்கான ஆதரவைக் கொடுக்கும்.

**திரு. என். கிட்டப்பா :** கூட்டுறவுத் துறையில் இம்மாதிரி நிறுவனங்கள் இயங்குவதாக அறிவித்தார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய நிறுவனங்கள் ஏதாவது இயங்குகின்றனவா? அப்படி இயங்கவில்லை என்றால் கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் ஒன்றிரண்டு முக்கியமான இடங்களில் அத்தகைய நிறுவனங்களை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கீழ் தஞ்சையில் இப்படிப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் இயங்குகின்றனவா என்ற விவரம் இப்போது இல்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதும் 38 கூட்டுறவு சங்கங்களில் இப்படிப்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான கருவிகள் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகின்றன. 1970-71-ல் இந்த 38 கூட்டுறவு சங்கங்களிலிருந்து ஏறத்தாழ ரூ. 17,61,000 அளவிற்கு பெருமானமுள்ள கருவிகள் விநியோகிக்கப்பட்டன.

[1973 பிப்ரவரி 13

திரு. மு. சண்முகம்: கூட்டுறவுத் துறையில் விவசாயப் பொறியியல் சேவா சங்கங்கள் என்று ஏற்படுத்தப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன? அவை செயல்பட அரசாங்கத்திலிருந்து எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த என்ஜினியரிங் கூட்டுறவுகள் இப்படிப்பட்ட கருவிகளைச் செய்து விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டும் என்பது இந்தக் கூட்டுறவின் நோக்கங்களில் ஒன்றாகும். அவைகள் இன்னும் இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளவில்லை. தேவையான இடங்களில் ஏற்றுக் கொள்வார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த 32 கூட்டுறவுச் சங்கங்களில் எவ்வளவு லாபத்தில் ஓடுகின்றன? எவ்வளவு எண்ணம் நஷ்டத்தில் ஓடுகின்றன என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார்: இதற்கான புள்ளிவிவரங்கள் இப்போது என் கைவசம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப் படும்.

திரு. என். கிட்டப்பா: இம்மாதிரி 32 கூட்டுறவு நிறுவனங்கள் இயங்குவதாகக் கூறப்பட்டது. அந்த 32-ல் தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு இயங்குகின்றன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மொத்த விவரம் என்னிடம் இருக்கிறது. 32 அல்ல 38. The total is 38 and the amount distributed to these societies for these implements is Rs. 17.16 lakhs. மொத்த விவரம்தான் இருக்கிறது இப்போது. தனியாக விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

**தமிழ்நாடு நிலவள வங்கி ஊழியர்கள்.**

*159 வினா— திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நிலவள வங்கியிலும் மாநிலமெங்கும் அதன் கிளைகளிலும் வேலை செய்யும் ஊழியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எத்தனை பேர் நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்றனர்?



1973 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, சென்னையில் 90 பேரும், அதன் 11 கிளைகளில் 206 பேரும் வேலை செய்கின்றனர்.

(இ) சென்னை வங்கியில் வேலை செய்யும் 90 பேர்களில் 68 பேர்களும், அதன் 11 கிளைகளில் வேலை செய்யும் 206 பேர்களில் 140 பேர்களும் நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்றனர்.

திரு. கே. எ. வகாப்: இவர்களை நிரந்தரம் செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? எங்களை நிரந்தரம் செய்யவேண்டுமென்று நிரந்தரம் செய்யப்படாதவர்கள் கோரிக்கை ஏதாவது விடுத்திருக்கிறார்களா? அதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த வங்கிக்கு தனி பை-லாஸ் இருக்கின்றன. ஸ்பெஷல் பை-லாஸ், தனி விதிகள் இருக்கின்றன. அதன்படி ஒரு ஆண்டு காலம் பயிற்சியான ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதை மீறி ஏதாவது நடைபெறுமானால் அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அதைக் கவனித்து ஆவன செய்யப் படும்.

திரு. என். கிட்டப்பா: இந்த நில வள வங்கியில் பணியாற்றுகிற பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொள்கிற செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த வினா தமிழ்நாடு நிலவள வங்கி ஊழியர்கள் பற்றியது. அரசாங்க ஊழியர்களும் அதில் ஃபாரின் சர்வீஸ் என்ற அளவில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த ஊழியர்களுக்கு யூனியன் அமைக்கிற உரிமை இருக்கிறதா? அவர்கள் யூனியன் அமைத்துக்கொண்டு தங்களுடைய குறைகளை தீர்த்துக்கொள்வது பொருத்தமாகயிருக்காதா என்ற விவரங்களைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: யூனியன் ஒன்று இருக்கிறது. அது எப்படிச் செயல்படுகிறது என்பதற்குத் தனிக் கேள்விபோட்டால் முழு விவரமும் சொல்கிறேன். ஆனால் யூனியன் இருக்கிறது.

**திரு. ஆர். பாந்தாமன் :** அரசு ஊழியர்கள் வாங்குகிற சம்பளத்தின் அடிப்படையில் இவர்களுடைய சம்பளமும் அமைய வேண்டும் என்று அவர்களுடைய கூட்டத்தில் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்களே, அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்.** இந்த வங்கியானது ஒரு நிறுவனம். அதன் ஊழியர்கள் கொடுக்கக்கூடிய கோரிக்கைகள், அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு அந்த வங்கிக்கு உள்ளதாகும். அதில் தீர்க்கப்படாதது ஏதாவது இருக்குமானால் அது நம் லேபர் மினிஸ்டர் அவர்களுக்கு வந்து சேரும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படக் கூடிய அளவிற்கு இங்கு சென்னையில் ப்ராஞ்சுகளில் உள்ள ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது நான் சொன்னதெல்லாம் சென்னையில் உள்ள ஸ்டேட் லாண்ட் டெவலப்மெண்ட் பாங்க் பற்றியது. யூனியன் ஒன்று இருக்கிறது. அவர்கள் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதாவது இருக்குமானால், அவை தீர்க்கப்படாமல் இருக்குமானால் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு அவர்களிடம் வந்து சேரும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த நில வள வங்கி ஊழியர்களுக்கும் ஒன்று போல் ஊதியத்தைக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். அரசாங்க ஊழியர்கள், பெறுகிற ஊதியத்தை விட, அந்த ஊழியர்கள் அங்கே வங்கியில் பணியாற்றினால், அந்த ஊழியர்களுக்கு ஒரு மாத சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ப. முத்துசாமி :** தலைவரவர்களே, மாநில நில வள வங்கியின் கிளையில் 3 ஆண்டுகளாகப் பணியாற்றியும் லீகல் அசிஸ்டெண்ட்ஸ் என்ற ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கின்றனர். அவர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ? அது பற்றி பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அது இந்த அரசின் கவனத்திற்கு வந்தாக வேண்டும். லீகல் அசிஸ்டெண்ட் என்பவர்கள் அந்த வங்கியின் ஊழியர்கள் தானா என்பதை முதலில் முடிவு செய்யவேண்டும். அந்தப் பிரச்னையை ஆராய்ந்து முடிவு செய்யப்படுமானால், அந்த வங்கியின் ஊழியர்கள் என்று சொல்லப்படுவார்களானால், அப்போது அவர்களுக்கு ஏதாவது கோரிக்கைகள் இருக்குமானால் அதை கவனிக்கும் பொறுப்பு என்னுடையது அல்ல. அது தொழிலாளர் நல அமைச்சர் செய்ய வேண்டியது.

### சென்னை சமஸ்கிருத கல்லூரிக்கு மானியம்

*141 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மயிலாப்பூரில் உள்ள சமஸ்கிருத கல்லூரிக்கு தமிழ்நாடு அரசு மானியம் ஏதேனும் வழங்கியிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். ஆண்டுக்கு சுமார் 8,000 ரூபாய் அளவில் மானியம் வழங்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, வடமொழியாகிய சமஸ்கிருதத்திற்கு அளிக்கப்படும் மானியத்தைப் போல், தமிழ் அல்லாத பிற மொழிகள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகளுக்கு அரசு ஏதேனும் மானியத் தொகை வழங்குகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பிற மொழி என்கிற வகையில் தமிழ் மொழிக்குத்தான் பல கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றிற்கு மானியங்கள் தரப்படுகின்றது. வேறு மொழிக் கல்லூரிகள் இருப்பதாகத் தெரியவில்லை. சமஸ்கிருதக் கல்லூரிக்கு ரூ. 8,000 வழங்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Tamil Nadu has produced great Sanskrit scholars like Vedantha Desika and Appayya Dikshithar. Kanchipuram was the centre of Sanskrit learning for centuries with international reputation. Sanskrit has given us much, and has absorbed, assimilated a lot from us. The affinities between Sanskrit and Dravidian languages are unavoidable and inseparable. So may I know from the Hon. Minister for Education whether he would grant more funds for the encouragement of this language?

[1973 பிப்ரவரி 13

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நாம் அளிப்பது மட்டுமல்லாமல், மத்திய அரசும் மானியம் அளித்து வருகிறது. சமஸ்கிருத மொழியை வளர்ப்பதற்காக மத்திய அரசின் சார்பில் ஒரு வாரியம் அமைக்கப்பட்டு, அது நிதி உதவி வழங்கி வருகிறது. அவர்கள் அளிக்கும் நிதி தவிர, புத்தகங்கள், கருவிகள், தளவாடங்கள் வாங்குவதற்கும் மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அதையும் சேர்ந்து, மாநில அரசும் தேவைப்படுகிற அளவுக்கு மானியம் வழங்குகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சமஸ்கிருதம் தவிர வேறு அன்னிய மொழி இருப்பதாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். அரபு மொழிக் கல்லூரிகள் இருக்கின்றன. வேலூரில் பாக்கியாத்து சாலிஹாத கல்லூரி, நீடூரில் அரபிக் கல்லூரி, லால்பேட்டையில் அரபிக் கல்லூரி இருக்கின்றது. அவற்றிற்கு மானியம் கேட்டால் கொடுக்க அரசு முன் வருமா ? அது பற்றி பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரம் இல்லை. அதற்கு இப்போது மானியம் வழக்கப்படுகிறதா இல்லையா என்று தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் அதன் முழு விவரம் அறிந்து சொல்ல லாம்

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, உயர் தனிச் செம்மொழி என்ற அடிப்படையிலும், இந்தியக் கலாசாரத்தின் பெட்டகமாக விளங்குகிறது என்ற அடிப்படையிலும், சமஸ்கிருதத்திற்கு தனிச் சலுகை கொடுக்க மைய அரசாங்கம் முன்வந்திருக்கிறது.. அந்த அடிப்படையில் தமிழும் ஒப்புக் கொள்ளப்படுகிற காரணத்தால், தமிழுக்கும் அது போல் நிதி உதவி தர வேண்டுமென்று நமது அரசு மைய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது தனியாக கவனிக்கப் படவேண்டிய ஒன்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்விகள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சென்னை மைலாப்பூரில் உள்ள சமஸ்கிருதக் கல்லூரிக்கு எந்த அடிப்படையில் மானியம் கொடுக்கிறார்கள். அங்கே படிக்கும் பட்டதாரிகள் எப்படிப்பட்ட வேலைகளுக்கு அனுப்பப் படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?



1973 பிப்ரவரி 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர் களுக்கு ஆண்டுக்கு எவ்வளவு செலவாகிறது என்ற கணக்கின் அடிப்படையில் பார்த்து அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குப் பார்க்கிறபோது ரூ. 6681 லிருந்து ரூ. 8212 வரை செலவாகியிருக்கிறது. அதனால் தான் சுமார் ரூ. 6,681 லிருந்து ரூ. 8,212 வரை செலவாகியிருக்கிறது. அதனால் தான் சுமார் ரூ. 8,000 வரை கொடுக்கிறோம். அதிலே சிரோன்மணி படித்தவர்கள் களாகவும், அது சம்பந்தமான நிறுவனங்களில் பணியாற்றும் வாய்ப்புப் பெறு பவர்களாக இருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அந்தக் கல்லூரியில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை மாணவர்கள் படிக்கின்றார்கள் ? அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்களா ? வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் பெரும்பாலும் படிக்கிறார்கள் என்று தெரியவருகிறது. முழுவிவரம் என்னிடத்தில் இல்லை. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சிரோன்மணி வகுப்பில் 20 மாணவர்கள் பயின்று வருகி றார்கள். அதைத் தவிர மத்திய அரசு சார்பாக வைக்கப்பட்டுள்ள வேத பாஷ்யா, ஜோதிஷ்கா வகுப்புகளிலும் மாணவர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு என்ற எண்ணிக்கைக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி கேட்டால் முழு விவரம் கொடுக்கப்படும்.

## குடிநீர் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு

* 142 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 5—8—1971-ல் நடந்த வடார்க்காடு மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்தில், தற்போது ஊராட்சி மன்றங்களில் அமைக்கப்படும் குடிநீர் திட்ட பம்பு செட்டுகளுக்கு முன் பாதுகாப்புத் தொகை விலக்களித்து மின் இணைக்கும் தொகை, மின்சாரக் கட்டணச் சலுகை அளிக்கும்படி கோரி அரசை கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த முடிவென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மின் இணைக்கும் தொகை மேலும் முன் பாதுகாப்புத் தொகை இவைகளைக் கட்டுவதில் இருந்து ஊராட்சிகளுக்கு விலக்குத் தர இயலாது என்றும் வேளாண்மை விசையேற்றங்களுக்குச் சலுகை கட்டணம் விதிக்கப்

படுவதுபோல் குடிநீர் விசையேற்றங்களுக்கு சலுகை அளிக்க தக்க காரணம் எதும் இல்லை என்றும் மின்வாரியம் தெரிவித்துள்ளது. இந்த முடிவு மாவட்ட ஆட்சியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, கிராமங்களில் வருவாய் சரியான நிலையில் இல்லாத காரணத்தாலும், மக்களுக்கு குடிநீர் அவசியமானது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தாலும், அப்படிப்பட்ட வேலைகள் தாமதம் ஆகாமல் இருப்பதற்கும் அந்தச் சலுகை அளிப்பதற்கும் அரசு மேலும் ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்ட குழுவினர் போட்ட தீர்மானம் மின்வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி வேளாண்மைத் துறையில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு அந்த மின் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. ஊராட்சி மன்றங்களின் சார்பாக அமைக்கப்படும் விசையேற்றங்களுக்கு அது ஒரு அமைப்பாக இருக்கிறது, வேறு விதத்தில் மானியம் பெறுகிறது என்பதால், அதற்குச் சலுகை தருவது பொருந்தி வராது என்பதால், மின்வாரியம் அதற்குச் சலுகை அளிக்க முன் வரவில்லை.

## விமானம் மூலம் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தல்

*154 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் தமிழகமெங்கும், ஹெலிகாப்டர் மூலமும், சிறிய விமானம் மூலமும் எத்தனை ஏக்கருக்கு பூச்சி மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது?

(இ) விமான மூலம் தெளிக்கப்படுவதை எதிர்த்து விவசாயிகளிடமிருந்து அரசுக்கு கோரிக்கை எதும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில், விமானம் மூலம் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும் திட்டத்தின் கீழ், ஹெலிகாப்டர் மூலமும் நிலையான இறக்கைகள் பொருந்திய விமானம் மூலமும் மருந்து தெளிக்கப்பட்டது.



| பயிர்வகை. | 1970–71. | 1971–72. |
|---|---|---|
| | (ஏக்கர் லட்சத்தில்.) | |
| வேர்க்கடலை .. .. | 1·025 | 4·410 |
| நெல் .. .. | 5·889 | 4·625 |
| பருத்தி .. .. | 0·057 | 0·768 |
| உருளைக்கிழங்கு .. .. | 0 003 | 0·768 |
| மொத்தம் .. | 6·974 | 9·803 |

(இ) ஆம். இவ்வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கு உழவர்களிடம் ஒப்புதல் தனித்தனியே பெறப்படவில்லையென்று சில உழவர்கள் முறையீடு செய்துள்ளனர்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, பல லட்சக்கணக்கான ஏக்கர்களுக்கு அடித்து இருப்பதாகக் கணக்குச் சொல்கிறார்கள். அதனால் நாம் கணக்கெடுத்த நிகர பலன் கிடைத்து இருக்கிறதா என்பதை அரசாங்கம் ஆராய்ந்தது உண்டா? அதன் பலன் குறைவு தான் என்றும், விவசாயிகள் ஹெலிகாப்டர் மூலம் தெளிப்பது அதிகமான பலனைத் தரவில்லை என்றும் கூறுகிறார்கள் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. அந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த விமானம் மூலம் மருந்து தெளிக்கும் திட்டம் 1961-62-ம் ஆண்டில் துவங்கப்பட்டு 1971-72-ம் ஆண்டு வரையில் நடைபெற்று வந்தது. 1961-62 லிருந்து விவசாயிகளுக்கு சரியான பலன் கிடைத்து இருக்கிறது என்ற காரணத்தால் தான் ஆண்டுதோறும் அது அதிகமாக்கப்பட்டு இறுதியில் சென்ற ஆண்டு 9803 ஏக்கருக்கு தெளிக்கப்பட்டது. விவசாயிகள் அதன் மூலம் பலன் பெற்று இருக்கிறார்களா என்று உணவு உற்பத்தியைக் கணக்குப் பார்த்தால், 1961-62 முதல் 1971-72 வரை பார்த்தால் பலன் கிடைத்து இருக்கிறது என்பது நன்கு தெரியும். பெரும்பாலான விவசாயிகள் நன்மை பெற்று இருக்கிறார்கள். ஒரு சிலர் எப்படி தெளிக்கப்படுகிறது என்பதை நாங்கள் பார்க்கவில்லை என்று சொல்லப்பட்ட காரணத்தாலும், தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயப் பெருமக்கள் பல பேர் உயர் நீதி மன்றத்திற்குச் சென்று, நாங்கள் எல்லாம் எங்களுடைய நிலங்களை குத்தகைக்கு விட்டு இருக்கிறோம், குத்தகைதாரர்

களிடத்தில் தான் பணம் வசூல் செய்யவேண்டுமென்றும், நிலச்சொந்தக்காரர்களிடத்தில் வசூல் செய்யக் கூடாது என்றும் வழக்கு தொடுத்து இருக்கிறார்கள். இன்னும் அது முடிவடையாமல் அப்படியே இருந்து கொண்டு இருக்கிறது. இதற்கிடையில் அந்தக் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலனை செய்து, சென்ற ஆண்டு தமிழக அரசு ஒரு முடிவு எடுத்தது. விவசாயிகளிடமிருந்து அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தோ, அல்லது ஊராட்சி மன்றங்களிலிருந்தோ தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது செய்யப்பட்டாலும், விவசாயிகளுக்கு அது போதிய மன நிறைவை ஏற்படுத்தவில்லை என்ற காரணத்தால், கிரௌண்ட் ஸ்பிரே அவர்களே தெளித்துக்கொள்வது என்று முடிவு எடுத்து, 1972-73-ல் விமானம் மூலம் தெளிக்கும் முறையைக் கைவிடுவது என்று முடிவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் பலன் அடைந்து இருக்கிறார்களா என்று கேட்டார்கள். பலன் அடைந்து இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 1972-73-ல் சுமார் 10 லட்சம் ஏக்கருக்கு இம்மாதிரி விமானம் மூலம் தெளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஒரு
மு.ப. 9-30 ஏக்காராவுக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது? அதற்கு முந்திய வருஷம் கொடுத்ததிலிருந்து அதிகமாகக் கொடுக்கப்பட்டதா, அல்லது அவ்வளவு தான் கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆரம்ப காலத்தில் இருந்து பிக்ஸட் விங் அல்லது ஹெலிகாப்டர் மூலம் தெளிக்கப்பட்டு வந்ததற்கு ரூ. 8, 10 என்ற அளவில் கொடுக்கப்பட்டு வந்தது. சென்ற ஆண்டு விமானக் கம்பெனி அத்தனை பேர்களும் ஒரு யூனியனாக சேர்ந்து அவர்கள் அதிகத் தொகை வேண்டும், இப்பொழுது பெட்ரோல் விலை அதிகமாகியிருக்கிறது, மற்ற செலவும் அதிகமாகியிருக்கிறது என்று கூட்டாக இருந்து மனுப் போட்டிருந்தார்கள். அதைக் குறைக்கவேண்டும் என்று சொல்லி வேளாண்மைத் துறை இயக்குனர் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி கடைசியில் ஒரு முடிவு செய்தார். ரூ. 11 கொடுப்பது என்று முடிவு செய்து, அதன்படி தெளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தெளிப்பு நடக்கிற இடங்களில் இருக்கிற ஃபாலோ லாண்ட்ஸ் கணக்கிடப்பட்டிருந்ததா? அப்படியிருந்தால் அதன் விவரம் என்ன? அதுமட்டுமல்லாமல் அமைச்சர் அவர்கள் உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொன்னார்கள். எத்தனை சதவிகிதம் உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதையும் தெரிவிப்பார்களா?



**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து தான் செய்தோம் என்று நான் முதலிலே குறிப்பிட்டேன். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அவைகள் அரசுக்கு வந்து, வேளாண்மைத் துறை மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. புகார்கள் வந்தது பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக 'என்னுடைய நிலத்தில் நான் இன்னும் பயிர் செய்யவில்லை. என்னுடைய நிலத்தில் ஒரு பகுதியிலே வாழை இருக்கிறது, ஒரு பகுதியிலே கரும்பு இருக்கிறது. ஆனால், மொத்தமாக தெளித்துவிட்டு, எல்லோருக்கும் சேர்த்து நெல் விவசாயிகளிடம் வசூல் செய்கிறார்கள் என்ற குறைபாடு வந்தது. அவைகளையெல்லாம் பரிசீலித்த பிறகு அது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உற்பத்தி அளவைப் பற்றி சொன்னார்கள். 58 லட்சம் டன் உற்பத்தியிலிருந்து சென்ற ஆண்டு 73 லட்சம் டன் உற்பத்தி அதிகமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, சில விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து புகார்கள் வந்ததன் பேரில் விமானம் மூலம் மருந்து தெளிப்பது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு மாறாக கிரௌண்டு ஸ்ப்ரேயர் மூலம் மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். கிரௌண்டு ஸ்ப்ரேயர் மூலம் மருந்து தெளிப்பதில் அந்த நோயை அறவே போக்கிவிட முடியாது. காரணம், ஒருவர் மருந்து அடிக்காவிட்டாலும் கூட அந்த நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது. சென்ற வருஷம் எங்கள் பகுதியில் கடலைப் பயிர் அது போல் அழிந்துவிட்டது. ஆகவே, யாருடைய புகாரையும் எதிர்பார்க்காமல், யாருடைய ஆதரவையும் எதிர்பார்க்காமல், அரசாங்கம் கண்டிப்பாக விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதற்கு வருங்காலத்தில் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்பொழுது கோவை மாவட்டத்திலிருந்தும், வேறு சில மாவட்டங்களிலிருந்தும் பூச்சி மருந்து ஆகாய விமானத்தின் மூலம் தெளிப்பதை நிறுத்தியது தவறு என்று எங்களுக்கு மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதாவது கம்பளிப்பூச்சியினால் வேர்க்கடலை அதிகமாகப் பாதிக்கப்படும். அதற்காக ஆங்காங்கு நாம் தீவிர திட்டத்தின் மூலம் எப்படியும் அடித்துத் தீரவேண்டும் என்று சொல்லி இந்த ஆண்டு 50,000 ஏக்காராவுக்கு திட்டமிட்டு, 22,000 ஏக்கருக்கு இதுவரையில் தெளிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல ஒருவர் தெளிக்காமல் போனால் கூட, பூச்சி பரவிடும். இருந்தாலும், பெரும்பாலானவர்

களுடைய கோரிக்கையை ஏற்று, அது நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த ஆண்டு எப்படியும் வேர்க்கடலைக்கு தெளிக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கு ஒரு லட்சம் ஏக்கருக்கு தெளிக்கலாம் என்ற குறிப்பு இருக்கிறது. இருந்தாலும், தீவிர திட்டத்தின் கீழ் அங்கெல்லாம் கிரௌண்டு ஸ்ப்ரேயர்களின் மூலம் தெளிப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டு, இந்த ஆண்டு இப்பொழுது அவர்களிடம் விடப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய அதிகமான ஸ்ப்ரேயர்களை வாங்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. பழுதடைந்த ஸ்ப்ரேயர்களை பழுதுபார்ப்பதற்கும் தீவிர திட்டம் தயாரிக்கப்பட்டு, அதுவும் செயல்முறையில் இருந்துவருகிறது. எனவே, அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அங்கத்தினர்கள் முழு முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அரசின் சார்பில் வேறு பல உதவிகளும் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

**திரு. கோ. இளங்கோவன் :** விமான மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அதற்குரிய தொகை வசூலை நிறுத்திவைக்கவில்லை. நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் நான் சொல்லவில்லை. ஆனால் 2, 3 ஆண்டுக்கான தொகைகளை ஒரே தவணையில் கட்டவேண்டிய தொல்லைக்கு விவசாயிகள் ஆளாகியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து 2, 3 தவணைகளில் வசூலிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் தெளிக்கப்பட்டிருப்பதற்கான இந்தத் தொகை வசூலுக்காக கெடுபிடி செய்யப்படவில்லை. 1961-ம் ஆண்டிலிருந்தே அப்படிப்பட்ட நிலைமை இருந்து வருகிறது. விவசாயிகள் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள், அதுவும் குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில், உழுகின்ற விவசாயிகள்தான் கொடுக்கவேண்டுமே தவிர, தாங்கள் கொடுக்க முடியாது என்று அவர்கள் சொல்லிவருகிறார்கள். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆகையினால் வசூல் நிறுத்தப்பட்டிருக்கிறது. 1970-71, 1971-72-ம் ஆண்டுகளைப் பொறுத்தது அல்ல இது. அதற்கு முன்னால் தெளிக்கப்பட்டு, வசூல் செய்யப்படாமல் இருக்கின்ற தொகை இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கு முடிந்தபிறகு அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** விமானம் மூலம் மருந்து தெளித்ததற்கு விவசாயிகள் தரவேண்டிய பாக்கித் தொகை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வசூலில் கெடுபிடி செய்யப்படுகிறது என்று இன்னொரு உறுப்



பினர் குறிப்பிட்டார்கள். விமானம் மூலம் மருந்து தெளிப்பதற்கு விவசாயி களிடம் ஒப்புதல் வாங்கி, இம்மாதிரி மருந்து தெளிக்கப்படும், இவ்வளவு ரூபாய் தரவேண்டும் என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு செய்யப்பட்டதா? 1971-72-ல் கிட்டத்தட்ட 10 லட்சம் ஏக்கர்களுக்கு மருந்து தெளிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. அதை ஒட்டி நமக்கு ஆகியிருக்கிற செலவு எவ்வளவு? விவசாயிகளிடமிருந்து வருகின்ற தொகையைக் கொண்டு நமது செலவை ஈடு கட்ட முடியுமா? இதில் நஷ்டம் ஏற்படுமா அல்லது லாபம் ஏற்படுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பூச்சி மருந்து தெளிப்பது இதுவரையில் என்பது தனியாக ஒரு விவசாயிடத்தில் ஒப்புதல் வாங்கி பொறுத்ததல்ல தெளிக்கப்படவில்லை. 1970-71, 1971-72-ம் ஆண்டுகளை மட்டும் இது. இந்தத் திட்டம் 1961-62-ல் துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இதற்கு விவசாயிகளிடமிருந்து ஒப்புதல் வாங்கப்படவில்லை. ஆனால், ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பினால், அந்த ஒன்றி யங்களைச் சேர்ந்த நிலங்களுக்கு பூச்சி மருந்து தெளிப்பது என்ற முறையில் செய்யப்பட்டது. ஒரு ஒன்றியம் எங்களுக்கு தேவையில்லை என்று மறுத்து விட்டால் அதை நிறுத்திவிடுவது என்ற அடிப்படையில்தான் 10 ஆண்டு கால மாக பூச்சி மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. சில ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியிருந்தாலும்கூட, சில ஊராட்சி மன்றத் தலைவர்கள் அதை எதிர்த்து, ஊராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றிவிட்ட காரணத்தி னாலேயே நாங்கள் அதை ஒப்புக்கொள்ள முடியாது என்கின்ற முறையில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். தனியாக விவசாயிகளிடத்தில் ஒப்புதல் வாங்கவில்லை. அதற்குப் பிறகு எந்த ஊராட்சி ஒன்றியங்கள் அப்படி தீர்மா னங்கள் நிறைவேற்றி அனுப்பவில்லையோ, அந்த ஊராட்சி மன்றங்களில் உள்ள நிலங்களுக்கு மருந்து தெளிப்பதில்லை என்ற அடிப்படையில் தொடர்ந்து நாங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். 1970-71-ம் ஆண்டில் தெளிக்கப்பட்டிருக்கிறது. 10 லட்சம் ஏக்கராவுக்கு நாம் இதைத் தெளித் திருக்கிறோம். நாமாக இதற்கு தீர்மானம் போடுவதில்லை. ஊராட்சி ஒன்றி யங்கள் தீர்மானம் நிறைவேற்றி, அது வேளாண்மைத் துறை இயக்குநருக்கு வந்து, அவர்கள் பரிசீலனை செய்து, அந்தப் பகுதியை அவர் பார்வையிட்டு, அதற்கு அங்கீகாரம் அளித்து அரசுக்கு அனுப்பினால் அதற்குச் பிறகு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இதுதான் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மத்திய சர்க்கார் ஒரு ஆண்டுக்கு இவ்வளவு ரூபாய் பூச்சி மருந்துக்காக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, வேர்க்கடலை, பருத்தி போன்ற பல பயிர்களுக்கு கொடுப்பது என்றும், அவர்கள் எவ்வளவு ஏக்கர்களுக்குக் கொடுப்பது

என்றும் நிர்ணயிக்கிறார்கள். சென்ற ஆண்டு 10 லட்சம் ஏக்கருக்கு கொடுக்கிறோம் என்று உறுதி அளித்தார்கள். முதலில் 6 லட்சம் என்றார்கள், பிறகு 7 லட்சம் கொடுக்கிறோம் என்றார்கள். தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அதிகமாக முயற்சி எடுத்துக்கொள்ளப்படுவதால், பிற மாநிலங்களுக்குக் கொடுப்பதை தெளிக்காமல் இருப்பதையெல்லாம் கூட நம்முடைய மாநிலத்திற்கு சென்ற ஆண்டு கொடுத்ததின் காரணமாக ஏறத்தாழ 9,08,000 ஏக்கருக்கு நாம் தெளித்திருக்கிறோம். மத்திய அரசு ரூ. 11-ல் ரூ. 7 கொடுக்கிறது. மத்திய அரசு கொடுக்கின்ற தொகை போக மீதித் தொகையை தமிழக அரசு பூச்சி மருந்து, மற்றவைகளுக்கு 15 சதவீதம் உதவித் தொகை அளித்து வருகிறது. அதற்குப் பிறகு அந்தத் தொகையை தற்சமயம் நிறுத்தி விட்டார்கள். அதற்குப் பிறகு விவசாயிகளிடமிருந்து ஏறத்தாழ ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 13, ரூ. 11 என்ற தரத்தில் வசூல் செய்யவேண்டிய நிலைமை இருந்தது. ஒவ்வொரு விவசாயியும் ஏறத்தாழ ரூ. 13 வரையில் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருந்தது.

### கதர் வாரியத்தில் உள்ள ஊழியர்கள்

* 155 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

காதி போர்டில் கதர் இயக்குநரால் பணி வரன்முறைப்படுத்தப்படாமல் உள்ள ஊழியர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தற்சமயம் 250-க்கும் குறைவான நபர்களின் பணி இன்னும் வரன்முறைப்படுத்த வேண்டியுள்ளது.

**திரு. கே. எ. வகாப்:** இவ்வளவு அதிகமான பேர்களுக்கு இன்னும் பணி நிரந்தரமாக்கப்படாததற்கான காரணம் என்ன? அவர்களிடம் இருந்து கோரிக்கை வந்தும், அது இன்னும் கவனிக்கப்படாமல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மொத்தம் 249 பேர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. இதிலே பணியாற்றக்கூடியவர்களின் தகுதிகளை வகைப்படுத்தி, அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். மொத்தம் 3,000 பேர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருந்ததில், இப்போது 249 பேர்கள் தான் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அதிலும் 38 பேர்களுக்கு இப்போது சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது,



**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், அவர்களுடைய பணிகள் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்பாகவே டெயிலரிங் யூனிட் மூடப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த யூனிட்டையும் திறந்து அதிலே பணியாற்றுகிறவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதுபற்றிய விபரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 250 பேர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு பின்னே வந்தவர்கள்—ஜூனியர்கள் பணி நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்களா? என்ன காரணத்தினால் இவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அவர்கள் திடீரென்று ஒரு புதுக்கேள்வியைப் போடுகிறார்கள். மொத்தம் 249 பேர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. 1967-க்கு முன்னால் 3,000 பேர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருந்தார்கள். 1967-க்குப் பின்னால் சட்டம் கொண்டுவந்து உடனடியாக 1891 பேர்களை நிரந்தரமாக்க வகை செய்திருக்கிறோம். இப்போது நிரந்தரமாக்கப்பட வேண்டியவர்கள் 249 பேர்கள்தான். அதிலே 35 வகைப்பட்டவர்கள்—டைப்பிஸ்ட், அசிஸ்டன்ட், பியூன் போன்ற பிரிவில்—இருக்கிறார்கள். எந்தெந்த பிரிவில் எத்தனை பேர் என்ற விபரம் தெரியவில்லை. விரைவிலே அவர்களுடைய தகுதிகள் அடிப்படையில் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இன்னும் 249 பேர்கள்தான் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே 38 பேர்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். அதிலே பெண்கள் எத்தனை பேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** பெண்கள் எத்தனை பேர், ஆண்கள் எத்தனை பேர் என்ற விபரம் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அங்கே இருக்கின்ற சேல்ஸ் செக்ஷனில் இருக்கின்ற பெண்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது மாதந்தோறும் இவ்வளவுதான் சம்பளம் என்று கொடுக்கப்படுகிறதா? அப்படியானால் அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் ஏற்கெனவே தெரிவித்தபடி 1967-க்குப் பிறகுதான் பணிகளுக்கான தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு, சட்டம் கொண்டுவந்து, நிரந்தரமாக்கப்பட்டு வருகிறார்கள். இன்னும் சிலருக்கு அதாவது சில பணிகளுக்கு சட்டம் செய்யப்பட வேண்டும். அதற்கும் சட்டம் கொண்டுவந்து, படிப்படியாக தகுதியின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

**சென்னை--செங்கை மாவட்ட பணைப்பொருள் கூட்டுறவு சம்மேளனம்.**

* 156 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-செங்கை மாவட்ட பணைப்பொருள் கூட்டுறவு சம்மேளனத்திற்குப் பனந்தோப்பு வாங்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு அதற்காக எவ்வளவு பணம் கொடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) அரசு அதற்காக சென்னை-செங்கை மாவட்ட பணைப்பொருள் கூட்டுறவு சம்மேளனத்திற்கு பண உதவி ஒன்றும் செய்யவில்லை.

**திரு. கே. ஏ. வகாப்:** அரசு பண உதவி செய்யவில்லை என்று சொன்னார்கள். அப்படியானால் அந்தக் கூட்டுறவுச் சங்கம் தானாகவே பனந்தோப்புகளை வாங்க திட்டமிட்டிருக்கிறதா? இதுவரையில் ஏதாவது வாங்கியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அது தோப்பு ஒன்றும் வாங்கவில்லை. வாங்குவதற்காக ஸ்ரீபெரம்புத்தூர் தோப்பை பார்வையிட்டது. அதன் சொந்தக்காரர்கள் அதற்கு அதிக விலை கேட்கிறார்கள். விலை அதிகமாக இருப்பதால் மேற்படி சங்கத்தின் அதிகாரிகள் போய் எஸ்டிமேட் போட்டு சொன்னார்கள். ஆனால் உடைமைக்காரர்கள் அதற்கும் அதிகமாக விலை கேட்பதால் அது கைவிடப்பட்டிருக்கிறது.

## *Night service express buses*

* 157. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to introduce luxury coaches as night service buses on routes hitherto not covered in various parts of Tamil Nadu; and

(b) if so, the details thereof?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) இரவிலோ பகலிலோ ஓடுகின்ற விரைவுப் பேருந்துகள் அனைத்தும் சிர்வசதிப் பேருந்துகளாகும். அரசுப் போக்குவரத்துத் துறை தற்போது 26 வழித்தடங்களில் இரவு நேர விரைவுப் பேருந்துகளை நடத்தி வருகின்றது. இந்த வழித்தடங்கள் தமிழ் நாடு முழுவதையும் இணைப்பதைத் தவிர இங்கிருந்து பெங்களூருக்கும், மத்திய ஆட்சிப் பகுதியான புதுச்சேரிக்கும் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தருகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இரவு நேரங்களில் போகக்கூடிய பஸ்கள் சில சமயங்களில் காட்டுப் பகுதிகளிலே ரிப்பேர் ஆகி நின்றுவிடுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் பிரயாணிகள் தங்குவதற்கு ஏற்ற வகையில் கட்டடங்கள் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இரவு நேரங்களிலே செல்லும் விரைவுப் பேருந்துகள் காட்டுப் பகுதிகளிலே நின்று விட்டதாக தகவல் இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள் அப்படி இரவு நேரங்களில் காட்டுப் பகுதிக்கு போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதா என்று தெரியவில்லை. காட்டுப் பகுதியில் அத்தகைய வசதியை ஏற்படுத்த முடியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நாங்கள் எல்லாம் கூட்டத்தில் பேசிவிட்டு திரும்பி வரும்போது காட்டுப் பகுதிகளில் பஸ்கள் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் குறிப்பாக பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்த அகால நேரங்களில் பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அப்படி காடுகளிலே ஏதாவது பஸ்கள் நின்றுவிடுமானால் அடுத்து வருகின்ற பஸ்களிலே ஏற்றிச் செல்ல வசதி இருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களுக்கும் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், அடுத்து வரும் பேருந்துகளிலே அழைத்துக்கொண்டு வரலாம்.

**திரு. நா. வீராசாமி:** நம்முடைய அரசாங்கம் இரவு நேரங்களிலே விடுகின்ற விரைவுப் பேருந்துகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. நிறைய லாபமும் வருகிறது. ஆயினும், இன்னும் அதிகமான பஸ்களை விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இரவு நேர விரைவுப் பேருந்துகளிலிருந்து வருவாய் அதிகமாக கிடைக்கிறது. ஆனால் வருவாயை மட்டும் பார்த்து பேருந்துகளை விடுவது

என்பது இயலாது. அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் பொதுமக்களிடம் இருந்து வரும் கோரிக்கையின் பேரிலோ அல்லது நமது துறையின் அதிகாரிகளின் பரிந்துரைகளின் பேரிலோ புதிதாக விரைவுப் பேருந்துகள் விடப்படும்.

**திரு. எம். இராதாகிருட்டிணன் :** தலைவரவர்களே, சில நேரங்களில் விரைவுப் பேருந்துகள் காட்டுப் பகுதிகளிலே நின்றுவிடுகின்றன. அப்படிப் பட்ட நேரங்களில் பிரயாணிகள் ஓய்வு எடுத்துக்கொள்கின்ற வகையிலே அந்தப் பகுதிகளில் ஒரு டெண்ட் போட்டுக் கொடுத்தால் வசதியாக இருக்கும். அதற்கு ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கனம் உறுப்பினர் அவர்கள் தெரி வித்ததைப் போல புகார் ஏதும் வரவில்லை. போகின்ற இடங்களில் 'காம்ப்' போடுவதுபோல போகவேண்டும் என்று அரசாங்கத் துறையிலே இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இப்போது செல்கின்ற இரவு நேர விரைவுப் பேருந்துகள் 'லக்சுரி கோச்சு'களாக இல்லை என்று தெரிகிறது. ஆகவே, விரைவுப் பேருந்துகளை லக்சுரி கோச்சுகளாக மாற்றும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நம்முடைய விரைவுப் பேருந்துகள் இந்த லக்சுரி கோச்சு வகையைச் சேர்ந்தவைதான். இதைவிட இன்னும் கொஞ்சம் வசதியான முறையில் 'டூரிஸ்ட் லக்சுரி கோச்சு'கள் இருக்கின்றன. அரசாங்கம் இப்போது அப்படிப்பட்ட இரண்டு பேருந்துகளை தயாரிக்க யோசனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சரவர்கள் பதில் சொன்னபோது, விரைவுப் பேருந்துகள் வசதியான லக்சுவரி கோச்சுகளாக இருக்கின்றன என்று சொன் னார்கள். அந்த வண்டிகளிலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இரண்டு சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த சீட்டுகளில் ஒருவர் தான் உட்கார முடிகிறது. இருவர் இருப்பதற்கு வசதியாக இல்லை. ஆகவே சீட்டுகளை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சட்டமன்ற உறுப்பினர்கள் பெரு மைக்குரியவர்களே தவிர பெருத்தவர்கள் அல்ல என்பது என் கருத்து. இப் போது விரைவுப் பேருந்துகளின் மூலம் அதிகமான லாபம் வருவதால், பயணி களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில், முன்பு 58 சீட்டுகளாக இருந்தது இப்போது 48 சீட்டுகளாக—அதாவது 2/2 என்ற முறையில் குறைக்கப்பட் டிருக்கிறது. ஆகவே, இப்போது நல்ல வசதியாக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** அரசாங்க விரைவுப் பேருந்துகளுக்கு 2/2 என்ற முறையில் சீட்டுகளை அமைத்திருப்பதைப்போல எல்லா பஸ்களுக்கும் அந்த ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசாங்கம் அதை கொள்கை அளவில் ஏற்று செயல்பட்டு வருகிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** இந்த இரவு நேர விரைவுப் பேருந்துகளில் பயணி கள் தூங்கிக்கொண்டே செல்வதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தூங்குவதும் தூங்காததும் பயணி களைப் பொறுத்தது.

**திரு. எம். தேவராசன் :** தனியார் துறையினரால் கோவைக்கும் பெங்க ளூருக்கும் இரவு சொகுசு பஸ்கள் விடப்படுகின்றன. அதையெல்லாம் ஒழித்துவிட்டால் அரசாங்க பஸ்களுக்கு இன்னும் அதிகமான லாபம் வரும். ஆகவே அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவைகளைத் தடை செய்யவோ அல்லது ஒழிக்கவோ வேண்டிய தேவை இல்லை. அந்த சொகுசு பஸ்களை நாமே எடுத்துக்கொள்ளலாம் என்று சட்டம் வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது விரைவுப் பேருந்துகள் வழியிலே நின்றுவிட்டால் அடுத்து வருகின்ற பேருந்து களில் ஏறிச்செல்ல வசதி இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு மாறான சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. திண்டிவனத்திலே ஒருமுறை பஸ் நின்றுவிட்ட தனால் பயணிகள் மிகவும் சிரமப்பட்டது (மணியடிக்கப்பட்டது) எனக்குத் தெரியும். அப்படி பிரயாணிகள் சிரமப்படாமல், அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவாவது அங்கே ஒரு விடுதி கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற் பட்டதாக அரசாங்கத்திற்கு தகவல் இல்லை. கிட்டத்தட்ட ஒரு மணி, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு பேருந்து வரக்கூடிய வகையிலே இப்போது வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டமாதிரி பேருந்து எதுவும் வராமல் பயணிகள் கஷ்டப்பட்டதாகத் தெரிய வில்லை. இருப்பினும் திண்டிவனத்தில் பயணிகள் ஓய்வு எடுத்துக்கொள்வதற் காக ஒரு விடுதியை அமைக்கலாம் என்று அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் அது ஓய்வு எடுத்துக்கொள்வதற்கே அல்லாமல் பஸ் பிரேக்டவுன் ஆகும் என்பதற்காக அல்ல,

**திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை :** சென்னையில் இருந்து நாகர்கோயிலுக்கு கிளம்புகிற மின்வேக துரித பஸ்கள், சென்னையைவிட்டுக் கிளம்பினால் விழுப்புரம் போய்த்தான் நிற்கின்றன. அங்கும் சரியான முறையில் உணவு உட்கொள்ள வசதி இல்லாத காரணத்தினால் நாகர்கோயில் போகிற பயணிகள் கிட்டத்தட்ட 16 மணி நேரம் பட்டினி கிடக்க வேண்டிய நிலைதான் இருக்கிறது. அப்படியன்றி நடுவில் நிற்கும் இடங்களில் பயணிகள் உணவு உட்கொள்ள நல்ல உணவு விடுதியையும் ஏற்படுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் உணவு விடுதி சரியாக இல்லை என்பது விழுப்புரத்திற்கே இழுக்கு. இது போன்ற மின்னல் வேக துரித பஸ்கள் உணவுவிடுதி வசதியுள்ள இடங்களில் தான் நிறுத்தப்படுகின்றன. ஆனால், யார் யாருக்கு என்ன ருசியான உணவு தேவை என்பது அவர்களுடைய தனி பிரச்னை. இதுபோல் மின்னல்வேக துரித பஸ்கள் நிற்கும் இடங்களில் எல்லா வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டி உணவு விடுதியை ஏலத்திற்கு விடலாமா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** விழுப்புரத்தில் இருக்கிற ஓட்டல் யாருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய நிலைமையில் இல்லை. ஆகவே அங்கே நல்லதொரு ஓட்டல் ஏற்பட தக்க வசதி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இது ஒருவருடைய சுவையைப் பொறுத்த கேள்வி. பஸ்ஸைப் பொறுத்த கேள்வி அல்ல.

**திரு. நா. வெ. குருசாமி :** மதுரையில் இருந்து குமிழிக்கும், திண்டுக்கல்லில் இருந்து குமிழிக்கும் நடுவில் தேனீ போன்ற வியாபார ஸ்தலங்கள் இருக்கிற காரணத்தினால் இரவு நேரங்களில் பஸ்விட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தேவைப்படுமானால் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதனைப் பரிசீலனை செய்யும்.

**திரு. நா. வீராசாமி :** இரவு நேர பஸ்களில்—இரயில் ஸ்லீப்பர்கோச் போட்டிருப்பதுபோல—ஒரு ஸ்லீப்பர்கோச்சையும் இணைத்தால்—இரண்டு பங்கு கட்டணம் கூட வாங்கலாம்—வருவாயும் பெருகும், பயணிகளுக்கு வசதியாக இருக்குமே, இதுபற்றி பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நீண்டதூரப் பயணத்திற்கு வசதியாக இரயிலும், அருகில் உள்ள நகரங்களுக்கு, கிராமங்களுக்கு எல்லாம் போக வசதியாக பஸ் போக்குவரத்தும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த பஸ்களில் படுக்கையைப் போட்டு—நான்கு இருக்கைகளை எடுத்துக்கொள்வது மக்களுக்கு நன்மை தரக்கூடியதாக இருக்காது.



**திரு. த. சோலையா :** மதுரைக்குப் போகிற அரசாங்க பஸ்ஸின் கட்டணத்திற்கும், தனியார் பஸ் கட்டணத்திற்கும் வித்தியாசம் இருக்கிறதே இதைக் குறைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** வெகுதூரம் போகிற பஸ்களில் ஸ்லீப்பர் வசதி அமைக்க முடியாது என்றாலும் புஷ்பாக் சீட்டுகளை அமைத்தால் அது பார்ஷல் ஸ்லீப்பரைப்போல இருக்குமே, இதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அங்கத்தினர் அவர்களது யோசனைப்படிதான் பரிட்சார்த்தமாக நீண்டதூர பஸ்களுக்கு புஷ்பாக் சீட் அமைப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

**திரு. தி. பொன்னுமலை :** இந்த துரித பேருந்து வண்டிகளில் சேலத்தை விட்டால் ஆத்தூரில்தான் என்பதுபோல குறிப்பிட்ட இடங்களில்தான் ஏற முடிகிறது. . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதற்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. அடுத்த கேள்வி 158.

## சென்னை--பழனி பேருந்து வழித்தடம்

* 158 **வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து திருச்சி, கரூர், பள்ளப்பட்டி வழியாக பழனி வரை செல்லும் துரித பேருந்து தடம் ஒன்று ஏற்படுத்தக் கோரி பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசின் நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) சென்னையை பள்ளப்பட்டியுடன் இணைக்கும் ஒரு புதிய நேரடி விரைவு வண்டி வழித்தடம் ஒன்றை அல்லது அதற்குப் பதிலாக திருச்சிராப்பள்ளி, கரூர், பள்ளப்பட்டி ஆகிய ஊர்கள் வழியாக சென்னை-பழனி வழித்தடம் ஒன்றை ஏற்படுத்துமாறு கோரி, பள்ளப்பட்டி வணிகர்கள் சங்கத்திடமிருந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்கு முறையீடு ஒன்று வந்தது.

(இ) பயணிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததால் இக்கோரிக்கைகளை நிறைவேற்றத் தேவையில்லை. ஆகவே இக்கோரிக்கைகள் மறுக்கப்பட்டன.

[1973 பிப்ரவரி 13

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** வழித்தடமே இல்லாதபோது பயணிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தினால் என்பதாக எப்படி பதில் சொல்ல முடியும் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. பள்ளிப் பட்டினைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் சென்னையில் இருக்கிறார்கள். சென்னைக்கும் பள்ளிப்பட்டுக்கும் பஸ்விட்டால் இந்த வழித்தடம் மிகவும் இலாபகரமாக இருக்கும். ஆகவே, இனியாவது இதனைப் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்த வழித்தடம் இலாபகரமானதாக இருக்கும் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். பரிட்சார்த்தமாக விடுவதுபற்றி அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்தான் பயணிகளைச் சேர்த்துத்தரவேண்டும்.

### அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கான இடம்

* 159 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க பஸ்களில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் சீட்டுகளை பஸ்ஸின் முன் பகுதிக்கு மாற்றவேண்டும் என்கிற ஆலோசனை ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கு உரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பெண்களுக்கென்று தனியாக சீட் ஒதுக்கப்படுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? ஏன் ஒதுக்கக் கூடாது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பெண்களுக்குத் தனியிடம் பின்னால் ஒதுக்கப்படுகிறது. அவர்கள் இப்போது முன்னுக்கு வரவேண்டும் என்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆண்கள் நின்று பயணம் செய்ய வசதியுள்ளதுபோல பெண்களும் நின்று பயணம் செய்ய வசதி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அண்மையில் கட்டப்பட்ட பேருந்துகளில் இந்த வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



1973 பிப்ரவரி 13]

**திரு. என். கிட்டப்பா:** பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுவது போல ஆண்களுக்கும் பாதுகாப்பு அளிக்க தனி பஸ்களைவிட அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பாதுகாப்பு பலஹீனமானவர்களுக்குத்தான் தேவை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பாண்டியன் போக்குவரத்து பஸ்களில் பெண்களுக்கு வலது பக்க சீட்டுகள் எல்லாம் ஒதுக்கிவைக்கப்படுவதுபோல இங்கும் ஒதுக்கித்தர ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அதைத்தான் நான் குறிப்பிட்டேன். பல்லவா போக்குவரத்தில் உள்ளதுபோல ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. எம். தேவராசன்:** சென்னையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் பஸ் கண்டக்டர்கள் திணறுவது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அது உண்மை அல்ல என்று என்னால் மறுக்க இயலாது.

### கோவில் அறங்காவலர்களாக உள்ள பெண்கள்

* 160 வினா—**திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் கோவில்களில் பெண்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) ஒரு விவரப் பட்டியல்@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** 84 கோயில்களில் பெண்களுக்கு அறங்காவலர் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி சட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆலயத்திற்கும் 5 பேர்கள், 3 பேர்கள் அறங்காவலர்கள் இருக்கிற இடங்களில் எல்லாம் ஒருவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று செய்திருக்கிறோமோ அப்படி ஒரு பெண் அறங்காவலரும் இருக்கவேண்டும் என்று செய்ய முன்வருவார்களா?

---

@ 597—604-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தாழ்த்தப்பட்டவர்கள் கோயில்களுக்கே போகக்கூடாது என்கிற நிலை நம் நாட்டில் இருந்தது. அவர்களுக்கு சமுதாயத்தில் சம அந்தஸ்து அளிக்கப்படாமல் இருந்தது. ஒருகாலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைக் கோவிலுக்குள் அனுமதிக்கவே போராட்டம் நடத்தியது எல்லாம் நமக்கு நினைவிருக்கும். அதன் காரணமாக நாம் அவர்களைக் கட்டாயமாக அறங்காவலராக நியமிக்க சட்டம் கொண்டுவந்தோம். பெண்களைப் பொறுத்தவரை நம் நாட்டில் அவர்கள் கோவிலுக்குள் போவதற்கு எவ்விதத் தடையும் இருந்ததில்லை.

**திரு. நா. வீராசாமி:** அம்மன் கோவிலுக்கு பெண்களை டிரஸ்டிகளாகவும், அப்பன் கோயில்களுக்கு ஆண்களை டிரஸ்டிகளாகவும் நியமிக்க நமது அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அப்படியானால் அம்மையப்பன் கோவிலுக்கு யாரை நியமிப்பது என்பது தெரியவில்லை. (சிரிப்பு)

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இந்த கோயில்களிலே 5 டிரஸ்டிகள் இருக்கக்கூடிய எல்லா ஆலயங்களிலும் ஒரு பெண்ணை கட்டாயமாக தர்மகர்த்தாவாக நியமிக்கவேண்டுமென்ற யோசனையை அரசாங்கம் செயலாக்குமா? காரணம், பெண்களுக்கு இருக்கிற அக்கறை ஆண்களுக்கு இருக்காது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை. ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல, தாழ்த்தப்பட்ட மக்கள் கீழ்நிலையிலே இருக்கிற காரணத்தாலேதான் கோயில்களிலே அவர்களுக்கு முக்கியமான இடம் தரவேண்டுமென்று நியமிக்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, பெண்களைவிட ஆண்கள்தான் புத்திசாலிகள் என்று அவர்களே ஏற்றுக்கொள்கிற நிலைமையில் பெண்களை நியமிக்காமல் ஆண்களை நியமிக்க அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

(விடை இல்லை.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (அ) சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த பி.பார்மஸி வகுப்பு மாணவர்கள் வகுப்புக்கு வராமை குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானங்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சட்டப் பேரவை 42-வது விதியின் கீழ் " the serious situation arising out of the strike by the students of B. Pharmacy class in Madras and Madurai Medical Colleges since 5th February 1973 for alleged failure to enforce prior assurance " என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த பி.பார்மஸி மாணவர்கள் மதுரையிலே இருக்கக்கூடிய கல்லூரியிலும், சென்னையிலே இருக்கக்கூடிய கல்லூரியிலும் தான் இருக்கிறார்கள். மதுரையில் 150 பேரும் சென்னையில் 150 பேரும் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள், இப்படி பி.பார்மஸி படித்து பாஸ் செய்தபிறகு, பார்மஸிஸ்ட்டுகளுக்கு முறை இடம் கொடுக்காமல் சில கெமிஸ்ட்ரி கிராஜுவேட்டுகளை வேலைக்கு எடுக்கிறார்கள். சர்க்காருடைய நிறுவனங்களிலே கூட நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம். ஆகவே, குறைந்த அளவு உள்ள எங்களுக்கே அந்த உத்தரவாதம் இல்லாமலிருக்கிறது, அதை அளிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள்.

அவர்கள் ஏற்கெனவே 5—2—1973-ம் தேதியன்று முதலமைச்சருக்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஹெல்த் மினிஸ்டர் அவர்களைச் சந்தித்ததாகவும், அப்படிச் சந்தித்தபொழுது அவர் சில வாக்குறுதிகள் கொடுத்ததாகவும் அந்த வாக்குறுதிகள் இன்றைக்கு அமுல் நடத்தப்படவில்லையென்றும் சொல்லப்படுகிறது. அவர்களோடு மட்டும் நிற்காமல், இன்றைக்குக் காலையில் வந்திருக்கிற செய்திகளைப் பார்க்கும்போது, பி.பார்மஸி மாணவர்களுக்கு ஆதரவாக, சென்னையிலே இருக்கக்கூடிய மாணவர்கள் கூட வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்று சொல்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே, குறைந்தபட்சமாக இருக்கக் கூடிய மாணவர்களாகிய அவர்களுக்கு, எந்த அளவுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதோ அதற்குரிய முறையிலே உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது என்ற காரணத்தால், அரசு கொஞ்சம் சிம்பத்தெட்டிக்காக, கொஞ்சம் அனுதாபமான முறையிலே இதைக் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனிக்கவில்லையென்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே, அந்த முறையில் ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்களுக்கும், இனிமேல் பயிற்சி பெறப்போகிறவர்களுக்கும் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற அந்த முறையிலேதான் ஏதாவது பா

காப்புக் கொடுக்கவேண்டும். அந்தப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டால் இந்தக் குறை வந்திருக்காது. ஆகவே, இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கான நிலையிலே அரசு சரியான உதவியைக் கொடுக்காமலிருப்பதால்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டி இருக்கிறது.

மெடிக்கல் காலேஜிலே இருக்கக் கூடிய பி.பார்மஸி மாணவர்கள் எந்த முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள் என்ற விவரத்தையும் எந்த முறையிலே அவர்கள் வேலையிலே சேர்க்கப்படுகிறார்கள் என்ற விவரத்தையும் அவைக்குத் தெரியப்படுத்த உதவியாக இருக்கும் என்ற முறையிலேதான் இந்த அவையை ஒத்திவைத்து இதை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், மருத்துவக் கல்லூரியிலே உள்ள மருந்து கலப்பாளர் பிரிவில் பட்டம் பெறுவதற்குப் பயிற்சி பெறுகிற மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வது காரணமாக அந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள்.

ஒரு உண்மையை அவர்கள் உணரவில்லையென்று நான் கருதுகிறேன். அமைச்சரே உறுதிமொழி கொடுத்தார் என்று அவர் தெரிவித்தார். இது வரையிலே உறுதிமொழி என்று எந்த ஒரு மொழியும் நான் அவர்களுக்குச் சொன்னதில்லை. ஆனால் எந்த ஒரு பிரச்சினையை மாணவர்கள் என்னிடத்திலே கொண்டு வந்தாலும் அதுபற்றி விரிவாகப் பரிசீலிக்கப்படும், ஆராயப்படும் என்று தெரிவித்திருக்கிறேன்.

அனுதாபத்தோடு பரிசீலிக்கவேண்டுமென்று அவர் சொன்னதைப் பொறுத்தவரையில் இந்தக் கழக அரசைப் பொறுத்தவரையில், எந்த ஒரு பிரச்சினையிலும் எந்த அளவுக்கு அரசால் முடியும், அல்லது தனியார் துறையாலே முடியும் என்றாலும் அதற்கு எந்த அளவுக்கு உதவமுடியும் என்று எண்ணிப் பார்க்கிற காரணத்தால், பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தேன். பரிசீலிக்கப்படும் என்று சொன்னது 'அஷ்யூரன்சாகிவிடும்' என்று சொன்னால், இனி என்ன சொன்னாலும், பரிசீலிக்க முடியாது என்று சொல்லவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்படும்.

சில மாதங்களுக்கு முன்னால் இந்த மாணவர்களுக்குப் போதுமான அளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லையென்று என்னிடத்திலே தெரிவித்த பொழுது, அடுத்த ஆண்டில் அதிக மாணவர்களை சேர்க்காமலிருக்க ஒரு



முயற்சி இந்தத் துறையிலே நடைபெற்றது. அந்த முறையிலே சென்னையிலே இருக்கிற தலைமை பொது மருத்துவமனையை ஒட்டிய கல்லூரியில் பார்மஸி வகுப்பு நடத்தப்படுவது, அந்தக் கல்லூரியினுடைய வளர்ச்சிக்கு அதை பி.ஜி. இன்ஸ்டிட்யூட்டாக உயர்த்துவதற்கு ஏற்றதாக இல்லையென்ற காரணத்தால் அந்த வகுப்பை வருகிற ஆண்டிலிருந்து நிறுத்தலாம் என்று ஆலோசித்த பொழுது, அதே மாணவர்கள்—டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரியும் —அந்த வகுப்பை நீங்கள் நிறுத்தக் கூடாது, நிறுத்தினால் நாங்கள் ஸ்டிரைக் செய்யவேண்டி இருக்கும், அடுத்த ஆண்டும் மாணவர்களைச் சேர்க்கவேண்டும். இட வசதி இல்லையென்று சொன்னால், கீழ்ப்பாக்கத்திலே உள்ள மருத்துவக் கல்லூரியில் வைத்துக்கொள்ளலாம் என்று மாணவர்கள் கேட்டதன் காரணமாக அதற்கு இசைந்தோம். ஒரு பக்கம் மாணவர்கள் வகுப்பை நடத்த வேண்டும் என்கிறார்கள். இன்னொரு பக்கம் அங்கு படித்து வருகிற அனைவருக்கும் வேலை தரவேண்டும் என்கிறார்கள். இல்லையானால் படிப்பதை நாங்கள் நிறுத்துவோம் என்கிறார்கள். அரசாங்கம் படிப்பை நிறுத்தக் கூடாது. படிக்கிற அனைவருக்கும் கட்டாயம் வேலை கொடுக்கவேண்டுமென்று கோருகிறார்கள். இப்படிப்பட்ட முரண்பட்ட வேண்டுகோளினை ஒட்டி டாக்டர் ஹாண்டே அவர்களும் தங்கமணி அவர்களும் அதிக அக்கறையோடு விஷயங்களைத் தெரிவித்தார்கள். மேலும் சில பாடத்துறைகளில் Non-medical post-graduate course படித்தவர்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு இல்லையென்றநிலையினால் சிலகாலத்திற்கு அந்தப் படிப்பு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல்தான் இங்கேயும் இதைப் படிக்கிறவர்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு இல்லையென்று வருமோ என்று எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. ஆகவே அதே முறையிலேதான் இதையும் குறைக்கலாம் என்ற ஆலோசனை நடத்தினோம்.

அடுத்து, ஏற்கனவே இந்த மாணவர்கள் தங்களுடைய வேண்டுகோளைத் தெரிவித்தபொழுது அரசாங்கம் விரிவாகப் பரிசீலனை செய்திருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் குறைக்கிற ஆலோசனையையும் எதிர்ப்பது எப்படி நியாயமாகும்?

Pharmacy graduates alone to be appointed in Pharmacy departments of Government. என்ற முறையிலே ஒரு வேண்டுகோளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

"The absorption of Pharmacy gradnates alone in pharmaceutical industries in public sector like B.C.G. Laboartory, Guindy, Cinchona Department, Naduvattam, and Pasteur Institute, Coonoor

featured in the representation made by B. Pharmacy students in
1969 also and it continues. It was pointed out that graduates in
science with chemistry as main, chemical engineering or chemical
technology with practical experience in manufacture of drugs and
also recognised post-graduates in pharmacy and pharmaceutical
chemistry as competent technical staff for manufacture of drugs
under Rules 71 and 76 of the Drug and Cosmetic Rules 1945 and
that it will not therefore be possible to appoint pharmacy graduates
alone and exclude all others mentioned above. It was suggested
that pharmacy graduates may be given preference, if necessary,
after amending the service rules.

மேற் கூறியவாறு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கிண்டி
இன்ஸ்டிடியூட் ஆப் வாட்டர் அனலிசிஸ் பகுதியில் இதுவரையிலே பி.எஸ்ஸி.
கெமிஸ்ட்ரி தகுதி உடையவர்கள் எடுக்கப்பட்ட இடத்திலேகூட புதிய
ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

'proposals for amending the Rules to provide for the appoin-
ment of Pharmacy Graduates as Laboratory Assistants in the King
Institute are received and they will be processed for issue
of orders in consultation with the Public Department and Tamil
Nadu Public Service Commission'.

என்ற முறையிலே தலைமைச் செயலகத்திலும் ஒரு பணியிலே ஏற்கனவே
சொல்லப்பட்ட தகுதியையுடையவர்களுக்குப் பதில் வேறு தகுதியுடையவர்
கள் நியமிக்கப்பட வேண்டுமானால் அதை பப்ளிக் இலாகா ஏற்றுக்கொள்ள
வேண்டும், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற
நிலைமை இருக்கிறது. அமெண்டிங் தி ரூல்ஸ் என்பது போன்ற காரியங்களை
அரசு கவனித்தாக வேண்டும். அவர்களுடைய வேண்டுகோள் ஒவ்
வொன்றும் பரிசீலிக்கப்படுகிறது. அரசாங்கம் அவற்றைப் பரிசீலிக்கத் தவற
வில்லை.

பார்மசி கிராஜுவேட் பயிற்சி எதற்காகப் பெற்றார்கள் என்பதை நாம்
சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மருந்து நிறுவனங்களிலே அவர்களை
நியமிக்கவேண்டுமென்ற கருத்தும் சொல்லப்பட்டது. நாட்டில் மருந்துகளைத்
தரமுள்ளவையாக உற்பத்தி செய்வதற்காகவும், மேலும் அந்தத் துறை
யில் பல வளர்ச்சிகளைக் காணுவதற்காகவும், பல ஆராய்ச்சிகளை நிகழ்த்துவதற்
காகவும் அவர்கள் இடம் பெறவேண்டும் என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டு
வருகிறது.



பி.பார்மசி படித்தவர்கள், எம்.பார்மசி தகுதிபெறக்கூடிய அளவுக்குப்
பட்ட மேல் துறை பயிற்சி பெறவேண்டுமென்ற கருத்து எடுத்துச் சொல்லப்
பட்டு, அந்தப் படிப்பை ஏற்படுத்துவதற்கு சென்னைப் பல்கலைக்கழக சிண்டி
கேட் அதைப்பற்றி பரிசீலித்து வருகிறது.

ஆல் இந்தியா மெடிக்கல் கவுன்சில் என்ற கவுன்சில் இருக்கிறது. அதைப்
போன்றே சென்னையிலே மெட்ராஸ் பார்மசி கவுன்சில் என்ற கவுன்சில் இருக்
கிறது. இந்தப் படிப்பை ஏற்கச் செய்யவேண்டுமென்ற முறையிலே கருத்துத்
தெரிவிக்கப்பட்டு, அந்த வகையிலே அதைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள்
வந்து பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம்
வலியுறுத்திக்கொண்டிருக்கிறது.

ஆனால் மாணவர்களுக்கு இவற்றையெல்லாம் புரிந்துகொள்வதற்கு
மனம் இல்லை. அரசியல்வாதிகளுக்குப் புரிந்துகொள்கிற சக்தியுண்டு. ஆனால்
அதை அவர்கள் பயன்படுத்தவேண்டும். மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வ
தால் மேலும் பிரச்னை அதிகமாகுமே தவிர எளிதாகப் பரிகாரம் காண
முடியாது. தொழிலாளர்கள், தொழிற் சங்கங்களில் தங்களுடைய நியாயமான
வலிவைக் காட்டுவதற்காக, ஒருமித்த உணர்வோடு பேரம் செய்து தங்களுக்கு
வேண்டிய நன்மைகளைப் பெறுவதற்கு வேலைநிறுத்தம் பயன்படலாமே தவிர
மாணவர்கள் பேரம் பேசுகின்ற முறையும், அரசாங்கத்தைத் தங்களுக்கு
எதிர்க் கட்சியாக அவர்கள் பாவிக்கின்ற தன்மையும், எடுத்தவுடனே வேலை
நிறுத்தம் செய்தால்தான் அரசாங்கம் கவனிக்கும் என்ற தவறான கருத்தும்
கொண்டிருப்பார்களானால் அது நிச்சயம் அரசியல்வாதிகளுக்கு வேண்டு
மானால் இலாபமாக இருக்கலாமே தவிர மாணவர்களுக்கு அதனால் நன்மை
ஏற்படாது.

பல் மருத்துவப் படிப்பு படிக்கும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்யப்
போகிறார்கள் என்பதை நேற்றைய தினம் நான் பார்த்தேன். படித்தவர்
களுக்கு எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும், படித்தவர்களுக்கு வேலை
தேடித் தரவேண்டும் அரசாங்கம் என்றால் படிக்காதவர்களுக்கு யார் வேலை
தேடிக் கொடுப்பது? படித்தவர்களுக்குத்தான் வேலை தேடிக்கொடுக்க
வேண்டும் அதுதான் ஒரு முற்போக்கு அரசாங்கத்தின் கொள்கை என்று
யாரும் கருதிவிட முடியாது. படிக்காதவர்களையும் அரசாங்கம் கவனிக்க
வேண்டியிருக்கிறது.

தொழிற் பயிற்சி, மருத்துவப் பயிற்சி, இன்னும் பல பயிற்சிகளைப் பெறு
வதற்கு அரசாங்கம் மாணவர்களுக்குப் போதுமான வசதிகளைச் செய்து
தருகிறது அதுமட்டுமல்ல, கடன் திட்டத்தின் மூலமாக உதவிகளையும் செய்து

தருகிறது என்பதை மறந்துவிடுதல் கூடாது. இந்த நிலையில் மாணவர்களுக்கு உதவி செய்வதில் அரசாங்கம் போதுமான அளவில் ஒத்துழைக்கும்போது மாணவர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். இந்த ஆல்டுகூட எட்டு இடங்களிலோ அல்லது 10 இடங்களிலோ பல் மருத்துவ மனைகள் ஏற்படுத்தி வேலைவாய்ப்பை அதிகரிக்க அரசு பரிசிலனைசெய்து வருகிறது. பார்மசிஸ்டு கட்கு போஸ்ட் கிராஜுவேட், பட்டப் படிப்புத் துறையை ஏற்படுத்துவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய டீன் அவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் இதைத் தவிர மருந்து உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. இவற்றிற்கெல்லாம் அரசாங்கத்தின் நிதி நிலைமை இடம் கொடுக்க வேண்டும்.

அரசாங்கத்தினுடைய அனுதாப உணர்ச்சி மாணவர்கள்பால் உண்டு. இந்த நிலையில் மாணவர்கள் வேலைநிறுத்தத்தை வலியுறுத்துகின்ற மனப் போக்கு நல்லதல்ல. அப்படிப்பட்ட மனப் போக்குக்கு வலிவூட்டக் கூடிய வகையில் திரு. தங்கமணி அவர்கள் தங்களுடைய தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் சுருக்கமாகத்தான் விளக்கங்களைத் தந்திருக்கிறேன். இதிலே உள்ள விவரங்கள் முழுவதையும் தரவேண்டுமென்றால் ஒரு மணி நேரமாவது ஆகும். வேண்டுமானால், இதனுடைய ஒரு பிரதியை நான் அவர்களுக்கு வழங்கத் தயாராக இருக்கிறேன். அவர்கள் ஆலோசனை சொல்வார்களானால் அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த எம் பார்மசி 1973-லே ஆரம்பிக்கப்படும் என்று சொன்னீர்களே, அது ஆரம்பிக்கப்படுமா? ஜாப் ஆப்பர் சூனிடிஸ் ஏற்படுத்துவதற்காக ஆஸ்பத்திரிகளில் மேனுபேக்சரிங் யூனிட்ஸ் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னீர்களே, அதைப்பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அவர்களை புட் அனலிஸ்டு ஆக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கொடுத்திருக்கிறீர்களே, அதைப்பற்றி தெரிவிக்கவில்லை. அதையும் தெரிவிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகத் தான் சொன்னேன். விளக்கமாகச் சொல்வதாக இருந்தால் அதிகமான நேரம் ஆகும்.





சென்னைப் பல்கலைக் கழக இசைவுபெற்று பி.ஜி. கோர்ஸ் ஆரம்பிப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆஸ்பத்திரிகளில் டிரக்ஸ் உற்பத்தி செய்வதற்கு 200 படுக்கையுள்ள மருத்துவ மனைகளிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் டிரக் கன்ட்ரோல் சரியாக இருக்காது, இரண்டு பெரிய இடங்களிலே ஏற்பாடுத்தினால்தான் நல்லது. பத்து இடங்களில் ஏற்படுத்தினால் மருந்து தயாரிப்பிலே விளைவு விபரீதமாக ஆகும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆகவே, இரண்டு இடங்களிலே "கம்ப்ளீட்லி கன்ட்ரோல்டு" என்ற முறையிலே அவற்றை ஏற்படுத்தினால் நல்லது என்ற முறையிலேதான் அது ஆலோசனையிலே இருந்துகொண்டிருக்கிறது.

லிக்கர் இன்ஸ்பெக்டர்கள் நியமிப்பதுபற்றிச் சொன்னார்கள். அப்படி அவர்களை நியமிக்கவேண்டுமானால் குறைந்தது எட்டு ஆண்டுக்காலம் பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. அந்த அளவுக்குப் பயிற்சி இல்லாதவர்களை எப்படி அந்தத் துறையிலே இடம்பெறச் செய்வது? அதுவும் பரிசீலிக்கப்பட வேண்டுமானால் காலம் தேவைப் படுகிறது.

சில பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு காலமும், பொருளும் தேவையும் இருக்கிறது. மருந்து நிறுவனங்களை ஏற்படுத்த பொருள் தேவைப்படுகிறது. இவையெல்லாம் கவனிக்கப்படும். ஆகவே வேலைநிறுத்தம் நல்லதல்ல என்ற கருத்தை—திரு. தங்கமணி அவர்களே சொன்னால் நான் நன்றி தெரிவித்திருப்பேன், ஆனால் அவர்களுக்கு அப்படிப் பேசிப்பழக்கமில்லை—அவர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்வது மாணவர்கள் வேலைநிறுத்த நோக்கத்தைக் கைவிட வேண்டும் என்பதுதான். இந்த நிலையில் திரு. தங்கமணி அவர்கள் தங்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்தவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதி இதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

### (ஆ) இராயபுரம் கடற்கரைப் பகுதியில் மீனவர்கள் தாக்கப்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு. என். மருதாசலம் அவர்கள் சட்டப் பேரவை விதி 42-ன்கீழ், 7—2—1973 அன்று இராயபுரம் கடற்கரைப் பகுதியிலே மீன் பிடித்துவந்த மீனவர்களை ஒரு கூட்டம் தாக்கியிருக்கிறது. மீனவர்களுக்கு உதவியாக வந்த அரிசன மக்களை அடித்து

இருக்கிறார்கள். இதனால் மீனவர்கள், பொதுமக்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டு இருக்கின்ற அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, இராயபுரம் கடற்கரையிலே மீனவர்கள் கூட்டுறவு முறையிலேயும், தனியார் துறையிலேயும், சர்க்கார் துறையிலேயும் மீன் பிடிக்கிறார்கள். அப்படி தனியார் துறையிலே மீன் பிடிக்கும் மீனவர்களை நீங்கள் மீன்களை கொண்டுவந்து வெளியே விற்கக் கூடாது என்று சொல்லி, சில மீனவ முதலாளிகள் தங்களுடைய சொந்த இலாபத்திற்காகக் காரியங்களைச் செய்கிறார்கள். அந்தத் தனியாரிடத்திலே இருந்து மீன்களை யாரும் வாங்கக் கூடாது என்று அவர்களைத் தடுத்து நிறுத்தி, தகராறு செய்கிறார்கள். அதன் பிறகு மீனவர்கள் ஊர்வலமாகச் சென்று அமைச்சர் அவர்களுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் விண்ணப்பித்துள்ளார்கள். அதன் பிறகும் அந்த மீனவர்கள் மீன்களை கொண்டுவந்து வெளியே விற்கக் கூடாது என்று தகராறு செய்து, சாதாரண ஹரிஜனப் பெண்களை அடித்துத் துன்புறுத்தி பாதரட்சையால் அடித்து, சேலைகளை எல்லாம் உரித்திருக்கிறார்கள் என்று அவர்கள் தங்களுடைய ரிப்போர்ட்டிலே கூறியிருக்கிறார்கள். ஆகையாலே இந்த மீனவர்களுக்குள்ளே ஒரு பெரிய தகராறு செய்து கொள்வதற்கு இந்த மீனவ முதலாளிகள் முனைந்திருக்கிறார்கள்.

இப்படித் தகராறு செய்வதை நான் விரும்பவில்லை. அந்த முறையிலே அரசாங்கம் இதுவரை அந்த மனிதர்களின் பேரில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காததுகுறித்து விவாதிக்க, இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மருதாசலம் அவர்கள் 7—2—1973 ஆம் தேதியன்று இராயபுரம் கடற்கரையிலே மீனவ மக்களிடையே கலவரங்கள் ஏற்பட்டது என்றும், அந்த நேரத்தில் ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த பெண் செருப்பால் அடிக்கப்பட்டு மான பங்கம் செய்யப்பட்டதாக இங்கே கூறினார்கள். நான் முதலிலேயே, அதை உண்மைக்குப் புறம்பான செய்தி என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அங்கே கலவரம் ஏற்பட்டதற்குக் காரணம் கடந்த மாதம் 28 ஆம் தேதிக்கு முன்னால் இருந்தே சிறு படகுகளை வைத்திருப்பவர்களுக்கும், அதாவது 30 அடி, 32 அடி படகுகளை வைத்திருப்பவர்களுக்கும், அரசாங்கக் கடன் பெற்று



பெரிய படகுகளை வைத்திருப்பவர்களுக்கும்—அதாவது 36 அடி, 38 அடி, 40 அடி என்ற படகுகளை வைத்திருப்பவர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டு வந்திருக்கிறது. மீனவர்கள் இல்லாத இந்த இரண்டு சமுதாயத்தைச் சேர்ந்த சமூகத்தினரிடையே சச்சரவு ஏற்பட்டு வந்திருக்கிறது. இந்தப் பெரிய படகுகளில் நீண்ட தூரம் சென்று மீன்பிடிக்கிறார்கள். அதிகமாகப் பிடித்து வந்து விரைவிலேயே கடற்கரையிலே கொண்டுவந்து அதிக விலைக்கு விற்றுவிடுகிறார்கள். சிறு படகுகளிலே இருப்பவர்கள் வீசும் வலைகளை அறுத்துவிடுகிறார்கள், அவர்கள் படகுகளிலே வேலை செய்பவர்களுக்கு அதிகப்படியான ஊதியம் தருகிறார்கள், வசதிகளையும் செய்து கொடுக்கிறார்கள் என்பதே சிறு படகுகளை வைத்திருப்பவர்கள் கொடுத்திருக்கும் புகார். இதனாலே சிறிய படகுகளை வைத்திருப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை வைத்துத்தான் பெரிய படகுக்காரர்கள் கொண்டு வரும் மீனைக் கடற்கரையிலே யாரும் வாங்கக் கூடாது, அவர்களும் விற்கக் கூடாது என்ற ஒரு சமூகக் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். இதனாலேதான் அங்கே சில சச்சரவுகள் அவ்வப்பொழுது எழுந்து வருகின்றன.

அவர்களை எல்லாம் மீனளத் துறையின் இயக்குநர் அவர்கள் இரு தரப்பினரையும் கூப்பிட்டுப் பேசி ஒரு சுமுகமான முடிவு காண்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தகராறுகள் எத்தனையோ முறை அவர்களுக்குள்ளே எழுந்திருக்கிறது. அப்பொழுது அவர்களுக்குள்ளே எழும் பூசல்களைத் தவிர்க்க ஒரு குழு அமைத்திருக்கிறோம். அந்தக் குழுவிலே அந்த வட்டார சட்ட மன்ற உறுப்பினரும், மீனளத் துறையின் அதிகாரிகளும், மீனவத் தலைவர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குழுக்கள் ஆங்காங்கே இருக்கின்றன. அந்தக் குழுக்கள்தான் கட்டு மரம் என்றால் 3 மைலுக்கு அப்பால் சென்று மீன்பிடிக்க வேண்டும், சிறிய படகு என்றால் 6 மைலுக்கு அப்பால் சென்று மீன் பிடிக்கலாம், பெரிய படகுகள் என்றால் 12 மைலுக்கு அப்பால் சென்று பிடிக்கலாம் என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள். இந்த எல்லையை மீறுகிறவர்களைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ அவ்வப்பொழுது ஏற்படும் பூசல்களைத் தீர்த்து சமாதானத்தை ஏற்படுத்தவோ இந்தக் குழுக்கள் இருக்கின்றன.

இத்தனையையும் மீறித்தான் இன்றைக்கு இந்தச் சச்சரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. 7—2—1973 ஆம் தேதி நடைபெற்ற சிறு பூசலிலே ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் தாக்கப்படவில்லை. இது போலீஸ் இலாக்காவுக்கும் வந்திருக்கிற செய்தியாகும். அதுவேதான் மீனளத் துறையிடமிருந்து வந்திருக்கிற செய்தியுமாகும். நான்கூட அங்கே இருக்கின்ற

மீனவத் தலைவர்களையும் இதுபற்றிக் கேட்டேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை இந்தப் பூசலில் சேர்த்து விடுவது சரியானதில்லை என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுதும் அப்படிப்பட்ட இரு குழுக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பெரிய படகுகளை வைத்திருப்பவர்கள் மகாபலிபுரத்திற்கு அப்பாலே சென்று மீன்களைப் பிடித்துவந்து விற்கட்டும் என்கிறார்கள். அதற்குப் பெரிய படகுகளை வைத்திருப்பவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. எனவே, அவர்களை எல்லாம் மீண்டும் கூப்பிட்டுப் பேசுகிறோம். நாளைக்குக்கூட அவர்கள் கருத்துக்களைச் சொல்லவிருக்கிறார்கள். சுமுகமான முறையிலேதான் இதற்கு ஒரு தீர்வு காண முடியும். சட்டப்படி இதிலே வேறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை.

7—2—1973 அன்று எந்தவித ஒரு கலவரமும் நடைபெற்றுவிடவில்லை; ஏதோ ஒருவரை மற்றொருவர் அடித்திருக்கிறார்கள். அவ்வளவுதான். அதிலே போலீஸ் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல், பெண் மக்களின் சேலையை உரிந்து அவமானப்படுத்தப்படும் நிலைமை இந்த அரசாங்கத்திலே ஏற்படாது என்று சொல்லி, இந்த அவசரத் தீர்மானம் அவசியமற்றது என்பதைத் துணைத் தலைவருக்குக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி, இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

**(இ) தமிழ் நாட்டிலிருந்து தோல் ஏற்றுமதி செய்வதை ஒருமுகப்படுத்த இந்திய அரசு செய்த முடிவும் அதனால் ஏற்பட்டுள்ள விளைவும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, உறுப்பினர் லத்தீப் அவர்கள் 42-ஆவது விதியின்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது—

'I hereby move that the business of the House do stand adjourned to discuss a matter of urgent public importance, viz., the adverse economic effects arising out of the decision of the Government of India to canalise the Leather Exports from the State of Tamil Nadu and the consequential effects of the said canalisation upon the economy of Tamil Nadu.'



**Thiru M. A. LATHEEF**: Mr. Deputy Speaker, Sir, the tanning industry is one of the premier industries of our State. There are about 400 units of tanning industries in our State but mostly they are run only as cottage and small-scale industries. Only six out of 400 units of tanning industries are modernised and fully mechanised. Therefore, still the tanning industry, even though it is a premier industry of Tamil Nadu, is in the nascent stage of modernisation and mechanisation. Under such circumstances, the recent decision of the Government of India to canalise the export of leather goods from Tamil Nadu has basically affected the industry and as a consequence of this canalisation, the industry has been disturbed very much. How it attracts the attention of the Government of Tamil Nadu is to be viewed from a proper perspective and it is only from that point of view, I move that the business of the House should be adjourned to discuss this very important matter of public importance. It has posed a great problem to the economy of Tamil Nadu.

Now, the tanning industry in the year 1971-72 has earned foreign exchange to the extent of Rs. 60 crores and in the year 1972-73 it has gone up to a sum of about Rs. 100 corres. Therefore, because of the efforts of the small tanners, the foreign exchange capacity is gradually increasing. When there has been a proper initiative and proper resourcefulness on the part of the tanners to produce more and to export more, the decision of the Government of India on the 15th December 1972 has shocked them very much and most of the small tanners have stopped their tanning activities, thereby rendering the people in the industry unemployed......

**Mr. DEPUTY SPEAKER**: Be brief and quick. . . .

**Thiru M. A. LATHEEF**: Sir, I must say what is the economic implication. In so far as it affects the economy of the State, I would like to draw the attention of this House and also the Government of Tamil Nadu to this matter so that this problem is properly dealt with and relief given to the tanners in time. Otherwise the tanning industry will come to its natural death.

I submit that 80 per cent of the exports are made from Tamil Nadu. In this industry there are about 1 lakh of people employed directly and about 5 lakhs of people are incidentally employed spread over, throughout the country in the matter of buying raw hides. Most of the raw hides are to be purchased not only in Tamil Nadu but throughout India. Now the tanning industry has drawn the attention of many people in other States and the idea of tanning and setting up tanning industry has gone into the minds of several people in other States. There are potential competitors in buying raw hides. Unless and until we give a fair price for raw hides, we will not be able to get sufficient stock from other States. This interference by Government of India has produced a meloncholic effect and sad attitude on the tanners and that is why they have stopped tanning here. . . . . .

MR. DEPUTY SPEAKER: You need not go into details. It is enough if you give some outlines.

THIRU M. A. LATHEEF: My idea is to bring to the attention of the House......

MR. DEPUTY SPEAKER: You forget one thing. You are creating a new precedent. Tomorrow some other hon. Member will claim the same privilege.

THIRU M. A. LATHEEF: This has resulted in closure of many tanning industries. It has affected the foreign exchange capacity and led to potential unemployment and also the taxes to our Government by way of sales tax. That is why it has posed a problem to tanners in Tamil Nadu.

This industry is not fully mechanised, modernised and it is still run as small-scale industry. So, it is not proper on the part of the Government of India to ask these tanners to export through the State Trading Corporation or some other agency to be appointed by Government and ask them to pay certain commission. Thereby a burden is cast on these tanners and such a thing will retard the progress and spontaneous development of this industry. It has affected the tanners here and had given a vital blow to the economy of Tamil Nadu. I would like that this matter is properly represented to the Government of India.



In this connection I want to thank the Hon. Chief Minister and Minister for Industries for representing this to the Hon. Prime Minister of India. I express my heart-felt thanks to them......

MR. DEPUTY SPEAKER: Mr. Latheef. I find there is no necessity to bring in the adjournment motion. You are thanking the Ministers. Why should you bring in an adjournment motion then? You have already taken 15 minutes.

THIRU. M. A. LATHEEF: So far as representation is concerned, I thank them. Regarding the second part, i.e. that the Government of India had not yet to conceded to our representation that this Government should impress them on the necessity to desits from this act......

MR. DEPUTY SPEAKER: While bringing an adjournment motion, you must impress upon the House and the Speaker how this matter is very important and how the Government has failed in its duty.

THIRU M. A. LATHEEF: If I were to put it categorically I have to say that the Tamil Nadu Government has failed to take effective steps in preventing the Government of India from this sort of interfering with the tanning industry here, thereby creating adverse effets on our economy, retarding its progress and blocking the resources of the State, I want to impress the urgency of the problem on Government, I want the business of the House should be adjourned so that it could be taken for discussion by the House.

மாண்புமிகு திரு .செ. மாதவன்: தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே தோல் பதனிடும் தொழிலும், தோல் ஏற்றுமதி வணிகமும் பண்டைநாள் தொட்டு மிகவும் நல்லமுறையிலே நடைபெறுவதையும், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் அதிலே சம்பந்தப்பட்டிருப்பதையும் நாடு அறியும். இந்தப் பிரச்னையைப் பற்றி ஒற்றி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் என்னென்ன விவரங்கள் சொல்லப்பட வேண்டுமோ அத்தனை விவரங்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; நான் அரசின் தரப்பிலே என்ன பதில் சொல்ல வேண்டுமோ அதையும் சேர்த்துத் தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நன்றியும் கூறிவிட்டார்கள். அரசாங்

கத்திற்கு நன்றி கூறியதற்குப்பிறகு, அரசு தவறு செய்திருக்கிறது அல்லது பொறுப்பைத் தட்டிக் கழித்திருக்கிறது என்று கடைசியாக, தலைவரவர்கள் சுட்டிக்காட்டிய காரணத்தால், சேர்த்துச் சொன்னார்கள்.

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தின் முக்கியத் தொழிலைப்பற்றி, கோடிக்கணக்கான ரூபாயை வெளிநாட்டுச் செலாவணியாகப் பெற்றுத்தருகின்ற ஏற்றுமதி வணிகத்தைக் கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினையைப் பற்றி மத்திய அரசு அவசரமாக எடுத்த முடிவைத் தமிழக அரசைக் கலந்துகொண்டு எடுத்திருந்தால் பொருத்தமாக இருக்கும் என்பதுதான் இந்த அரசின் கருத்தாகும். இதை பிரதம மந்திரியவர்களிடத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுத்துக் கூறினார்கள். திடீரென்று இந்த முடிவை எடுப்பதைவிட இந்தத் தொழிலைப்பற்றி ஆராய், ஏற்றுமதி, இங்கேயுள்ள உள்நாட்டுத் தொழிலுக்கு மூலப்பொருள் தேவை பற்றி, இரண்டு பிரச்சினைகளைப்பற்றி ஆராய டாக்டர் சீதாராமய்யா தலைமையில் குழு அமைக்கப்பட்டு சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அதையொட்டி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தமிழக அரசின் சார்பாக மத்திய அரசிடம் சொல்லியிருக்கிறோம். இதையொட்டிச் சில சமாதான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து இந்தப் பிரச்சினை இப்பொழுது ஓரளவிற்குத் தணிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி, இதற்குமேல் இதை விவாதிக்கத் தேவையில்லை என்ற என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயிண்ட் ஆஃப் இன்பர்மேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** குறிப்பிட்ட அளவிற்கு வெளிநாடுகளுக்கு தோல் ஏற்றுமதி செய்ய அதிகாரம் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையே அந்த உறுப்பினரவர்களிடம் சொல்லிக் கேட்டிருக்கலாம். மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி இதற்கான அனுமதியை மறுக்கிறேன்



## 3. அறிவிப்புகள்.

### (அ) பேரவை நடவடிக்கை குறித்து வானொலி தவறாகச் செய்தி ஒலி பரப்பியதாகக் கூறப்பட்டது குறித்து வானொலி நிலையத்தினர் அனுப்பிய விளக்கம் குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்தப் பேரவையில் டிசம்பர் மாதம் 11-ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மந்திரிசபையின்மேல் கொண்டுவரப்பட்ட நம்பிக்கைத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துக் கொண்டிருந்த பொழுது, அகில இந்திய வானொலியில்,—சென்னை நிலையத்தின் மாநிலச் செய்திகளில் பேரவையின் நடவடிக்கைகள்—அவர்கள் பதில் அளித்துக்கொண்டிருக்கும் பொழுது, முடிந்து விட்டதாகத் தவறாக அறிவித்து விட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இங்கே ஒரு குற்றச்சாட்டைக் கிளப்பினார்கள். அது குறித்து அகில இந்திய வானொலி நிலையத்திற்கு நம்முடைய சட்டமன்றத் துறையிலிருந்து எழுதப்பட்டது. அவர்கள் அதற்கு விளக்கம், பதில் தந்திருக்கிறார்கள். "இந்த விவாதம் முடிந்துவிட்டதாக நாங்கள் அறிவிக்கவில்லை" என்றும், "முதலமைச்சர் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார் என்று மட்டும்தான் சொன்னோம்" என்ற விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். இந்த விளக்கத்தை இந்தப் பேரவையின் சார்பில் ஏற்றுக் கொண்டு, அதற்காக வானொலி நிலையத்தாருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் உண்ணா நோன்பு கிளர்ச்சி குறித்து

THIRU R. PONNAPPA NADAR: Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, 'the continued hunger strike from the middle of January 1973 by the overaged trained teachers of Kanyakumari District who were before the Collectorate resulting in the arrest of the persons concerned and that the condition of some of them were reported to be very serious and that it is a matter of grave concern.' Sir, the Hon. Minister may kindly make a statement.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலை வாய்ப்பில்லாத ஆசிரியர்கள் நாகர்கோயிலில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்துக்கு முன்பு சில நாட்களாக உண்ணு நோன்பு கிளர்ச்சி நடத்தி வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டிலும் பள்ளிகளில் அதிகப்படியாகச் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு கூடுதலான ஆசிரியர் பதவிகளுக்கு ஒப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சென்ற ஆறு ஆண்டுகளில் மட்டும் ஏறக்குறைய 33 ஆயிரம் ஆசிரியர் பதவிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1972-73-ஆம் ஆண்டிலும் ஏறக்குறைய 3,600 புதிய பதவிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதற்கும் வழங்கப்பட்டுள்ள இப்பதவிகள் உரிய அளவில் கன்னியாகுமரிக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

இந்நிலைமைகளை விளக்கி, கல்வித் துறை அதிகாரிகளும் மாவட்ட ஆட்சியாளரும், கிளர்ச்சி செய்து வரும் ஆசிரியர்களிடம் எடுத்துக் கூறிய பின்பும் இக்கிளர்ச்சி தொடர்ந்து நடந்து வருவது வருந்தத்தக்கது. கன்னியாகுமரியை பொறுத்தவரையிலே வேலை வயது உச்ச வரம்பைத் தாண்டிவிட்ட ஆசிரியர்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படலாமா என்பது குறித்து அரசு பரிசிலனை செய்து வருகிறது. ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது அவர்கள் வயதையும் மனதிற்கொண்டு, பல ஆண்டுகளுக்கு முன்பு தேறியவர்களுக்கும் முன்னுரிமை அளிக்க முடியுமா என்பது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரும் பரிசீலித்து வருகிறார். இந்நிலைமைகளை மனதிற்கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் கிளர்ச்சி நடத்தி வரும் ஆசிரியர்கள் தங்கள் கிளர்ச்சியை உடனடியாக நிறுத்திவிட்டு சுமுகமான சூழ்நிலையில் முடிவு காண ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னால் ஒரு கேள்விக்கு விடையளிக்கும்போது சொன்ன கருத்தின் அடிப்படையில் அவர்கள் உண்ணு நோன்பைக் கைவிட்டிருக்கிறார்கள். கழிந்த சில மாதங்களாகத் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. பலரும் 30 வயதைத் தாண்டியிருக்கும் காரணத்தால் அவர்களைப் போட முடியாத நிலை இருக்கிறது. அப்படி 30 வயதைத் தாண்டியவர்களுக்கு விலக்கு அளித்து அவர்களை வேலையில் வைத்துக் கொள்ள அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வயது வரம்பைத் தாண்டிவிட்டவர்களுக்கு சலுகை அளிக்கப்படுவது பற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. தக்க முடிவு விரைவில் எடுக்கப்பட முயற்சிக்கப்படும்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : Mr. Deputy Speaker, under Rule 21 (3) of the Legislative Assembly Rules, I move—

"That Item (2) in the original Agenda and item (3) in the Supplemental Agenda under Government Bills be taken up before item (1) in the Agenda for today".

DR. H. V. HANDE : Sir. . . .

MR. DEPUTY SPEAKER : It is only for change of order of the business. . .

DR. H. V. HANDE : The motion is before the House. We are prepared to accept it provided we are given an assurance that we will also be given 10 or 15 minutes to discuss before it is referred to a Select Committee. We have got certain points to put before the House.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : This is only changing and taking items (2) and (3) before item (1).

MR. DEPUTY SPEAKER : Just we are changing the serial order.

The motion was put and carried.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/73.)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/73)-ஐ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

---

* 1973 பிப்ரவரி 12-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு 1973-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/73)



மாநில உச்ச மட்டம்—அப்பெக்ஸ்—வங்கியில் பணியாற்றுகின்ற ரிசர்வ் வங்கியில் அனுபவம் பெற்ற அதிகாரிகளை நாம் ரிசர்வ் வங்கியின் சம்மதத்துடன் நியமிக்கிறோம். தமிழக அரசு நியமிக்கிறது. அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் மானேஜிங் டைரக்டர்—நிர்வாக இயக்குநர் என்று அழைக்கப்பட வேண்டுமென்றும், அவர்களுக்கு நிர்வாகக் குழுவில் இடம் கொடுக்க வேண்டுமென்றும் ரிசர்வ் வங்கி கோரி இருக்கிறது. அதற்கு இணக்கமாக ஏறத்தாழ எட்டு வரிகளைக் கொண்ட சிறு திருத்தம் தேவைப்படுகிறது. இதில் அதிகார மாற்றம் இல்லை. பெயர் மாற்றம் மட்டுமே இருக்கிறது. இது சர்ச்சைக்குரிய காரியமும் அல்ல. எனவே, இதை ஆய்வுக்கு எடுத்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இச் சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

**(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73)-ஐ பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தம் இசைவை அளித்துள்ளார்கள்.





### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

**(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73).**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவை * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும் கொண்ட) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க் கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்றத் தெரிந்தெடுக்கப் படுகிறார்கள் :—

1. திரு. பழனிவேல்ராஜன்.
2. திரு. என். கணபதி.
3. திரு. சொ. காவேரிமணியம்.
4. திரு. துரைமுருகன்.
5. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்).
6. திரு. என். ராஜாங்கம்.
7. திரு. கே. பி. கந்தசாமி.
8. திரு. கே. பழனிவேலன் (வரகூர் தொகுதி).
9. திரு. ஆ. பரந்தாமன்.
10. திரு. எம். சுப்பிரமணியன்.
11. திரு. செ. கந்தப்பன்.
12. திரு. கே. எல். கோதண்டராமையா.
13. திரு. இ. எல். தியாகராஜன்.
15. திருமதி த. ந. அனந்தநாயகி.
15. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
16. திரு. கே. கந்தசாமி.
17. திரு. கே. டி. கே. தங்கமணி.
18. திரு. எம். ஏ. லத்தீப்.

* 1973 பிப்ரவரி 12-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

19. டாக்டர் எச். வி. ஹாண்டே.

20. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.

இந்தத் தீர்மானத்தை மன்றத்தினுடைய ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கோருகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி இந்த மன்றத்திலே பல்வேறு அரசியல் கட்சிகளின் கருத்துக்களைத் தெரிந்து செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே பெரும்பாலும் கட்சித் தலைவர்கள் எல்லாம் இதிலே அங்கம் பெற்றிருக்கிறார்கள். தமிழ் நாட்டில்தான் இன்றைக்கு நம்முடைய அரசியல் வாழ்வை மக்கள் மன்றத்தில் தூய்மையான வாழ்வாக நிரூபித்துக் காண்பிப்பதற்கு ஒரு வாய்ப்புத் தரும் வண்ணம் இச்சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே பல்வேறு கருத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்துக்கள் எப்படி எப்படி மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற செய்திகளை எல்லாம் இந்தப் பொறுக்குக் குழுவின் முன்னால் ஆலோசிக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கருத்தாகும்.

இன்றைக்கு ஜனநாயக ஆட்சியில் ஒருவரையொருவர் குற்றம் சொல்லுவதை விட மக்கள் மன்றத்திலே அரசியலில் ஈடுபட்டிருக்கின்ற தலைவர்களிடத்தில் நம்பிக்கை ஏற்பட, ஒரு நாணயமான அரசியலை நடத்திச் செல்லுகிறோம் என்பதை நிரூபிக்க இது வாய்ப்பாக இருக்குமென்றுதான் நான் கருதுகிறேன். இந்த மசோதாவிலே நாம் விரும்புகின்ற அத்தனையும் இல்லாவிட்டாலும் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் ஆலோசித்து என்னென்ன கருத்துக்களை அவர்கள் இணைத்துக் கொள்ளச் சொல்லுகிறார்களோ அத்தனையையும் இணைத்துக் கொள்ள அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் திறந்த மனத்துடன் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரை உயர்நீதிமன்ற நீதிபதி அளவில் ஒருவரைப் போட்டுவிடுகின்ற காரணத்தால் இதற்குத் தனிப் பெருமை சேர்க்கப்பட்டிருக்கிறது என்றுதான் கருதுகிறேன். இந்த சட்டமுன்வடிவைப் பொறுத்தவரை நீண்ட விவாதம் தேவையில்லை என்று கருதுகிறேன். பெரும்பாலும் குழுவிலே அங்கம் வகிக்கின்றவர்கள் சட்ட மன்றத்தில் பேசுவது வாடிக்கையல்ல.

அதல்லாமல் அரசாங்கத்தின் கொள்கையை இதில் அப்படியே ஏற்க வேண்டும் என்பது எங்கள் பிரச்னை அல்ல. எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்துதான் இந்தச் சட்டத்தை உருவாக்கவேண்டுமென்று கருதுகிறோம்.



இந்தச் சூழ்நிலையை எல்லாம் எண்ணிப் பார்த்து அடுத்தாற்போல் ஒரு முக்கியமான மசோதாவை நிறைவேற்றவேண்டும், இன்று கடைசி நாள் என்பதை எண்ணிப் பார்த்து இதில் யாருமே பேசாது இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி வைப்பார்களேயானால் மிக விரைவில் இந்த மசோதாவினை முடித்துக்கொண்டு அடுத்த மசோதாவிற்குச் செல்ல வாய்ப்பிருப்பதால் எல்லோரும் இதை ஏற்று பொறுக்குக்குழுவிற்கு விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் 139 (1)-வது விதிக்கிணங்க இச்சட்டமுன்வடிவின் பொறுப்பிலுள்ள மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் உறுப்பினராக நான் நியமிக்கிறேன்.

### (5) அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

### (அ) அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Deputy Speaker, Sir, I move—

'That item III—Government Motion be taken up before item (1) under 'Government Bills'.

The motion was put and carried.

### (ஆ) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்கீழ் விவர அட்டவணைக்கான வரைவுத் திருத்தம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/71) 431 (3) பிரிவின்கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்களால், மேற்படி சட்டத்தின் II -ஆம் விவர அட்டவணையை மாற்றிச் செய்யக் கருதப்பட்டுள்ள கீழ்க் காணும் வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

### வரைவுத் திருத்தம்.

"1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/71), II -ஆம் விவர அட்டவணையில் உள்ள இரண்டாவது வரம்பு அட்டவணையில் 17 (1) விதியில் IX -வகுப்பு நிபந்தனையின் கீழ்க்கண்டுள்ள என்பதும் அதன் தொடர்பான பதிவுகளும் நீக்கப்பட வேண்டும்."

## 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்கீழ் விவர அட்டவணைக்கான வரைவுத் திருத்தம்



தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியினுல் தொழில் வரி விதிக்கப் படுவதற்காக, 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/1971) II ஆம் விவர அட்டவணையின் 17 (1)-வது விதியிலும், மேற்படி சட்டத்தின் 132-வது பிரிவிலும், வரி வீதங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்படி விதியை ஒட்டி ரூ. 600-க்கு மேற்பட்டும் ரூ.1,200-க்கு உட்பட்டும் அரை ஆண்டு வருவாய் பெருவோர் ஒன்பதாம் வகை வரி விதிப்புத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ரூ. 3 என்ற பேரளவுத் தொகைக் குட்பட்டு, அரை ஆண்டு தொழில் வரி விதிக்கப்படும்.

மதுரை மாநகராட்சி மன்றம் 25—9—1971 நாளிட்ட தனது 514-வது தீர்மானத்தில் அரை ஆண்டிற்கு ரூ. 1,200-க்கு குறைவாக வருவாய் பெறும் எல்லா நபர்களுக்கும் (அரசிதழ் பதிவுபெறு அரசு ஊழியர் உட்பட) தொழில் வரி விதிப்பாகிய ரூ. 2-லிருந்து, 1972-73-ம் ஆண்டு முதல் விலக்களிக்க அரசைக் கேட்டுக்கொண்டது.

இது குறித்து பரிசீலித்தபின்னர், சென்னை மாநகராட்சியின் இதுபோன்ற கோரிக்கை ஒன்று ஏற்கனவே ஏற்கப்பட்டுள்ளதால், 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் II -ம் விவர அட்டவணையில் 17 (1) வது விதியில் ஒன்பதாவது வகையைச் சேர்ந்தவர்களுக்குத் தொழில் வரி விதிப்பினின்று 1—4—1972 முதற்கொண்டு விலக்களிக்க அச்சட்டத்தின் 116 ஆம் பிரிவு மூன்றும் விலக்கின்கீழ் அரசு அனுமதி அளித்தது. மேற்படி ஆணையைத் தொடர்ந்து, அவர்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கு ஏற்றவாறு 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் II-வது விவர அட்டவணையில் 17 (1) வது விதியைத் திருத்த தற்போது கருதப்பட்டுள்ளது. அதற்குச் சட்டமியற்ற வேண்டியது அவசியமில்லை. ஆனால், அதற்குப் பதிலாக 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 431 (5) பிரிவின் கீழ் மேற்படி சட்டத்தின் II -வது விவர அட்டவணையில் திருத்தக் கருதியுள்ள வரைவுத் திருத்தம் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைக்கப்பட்டு அவற்றின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

இதற்கிணங்க நான் இதற்கு அவையின் ஒப்புதலை வேண்டுகிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**





### 3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

**(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1973).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஓர் அறிவிப்பு.

'தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்டமுன்வடிவுவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1973) பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

**(இ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்-ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 1/73).**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, " தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப் படுத்தல் சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/73)-ஐ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று கோருகிறேன்.

தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலுள்ள அத்தனை உறுப்பினர்களும் ஏகமனதாக வரவேற்கக்கூடிய மசோதா என்பதை நான் நன்கு அறிவேன். இந்த மசோதா இதுவரையில் இல்லா அளவிற்கு வரலாற்றுச் சிறப்புப் பொருந்தியது, புதுமைக் கருத்துக் களைக் கொண்டது, புரட்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என்று சொன்னால் அது மிகையாகாது. வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு புதிய முதலாளி வர்க்கத்தை இல்லாமல் செய்வது இம்மசோதா. பஸ் முதலாளி என்ற வார்த்தையே தமிழ்நாட்டில் இனி இடம் பெறாது, தமிழ் அகராதியிலும் பஸ் முதலாளிகள் என்ற வார்த்தைகளுக்கு இடம் இல்லாமல் ஆக்குகிற அளவிற்கு வரலாற்றுச் சிறப்பினை இந்த மசோதா பெற்றிருக்கிறது என்பதை நாம் நன்கு உணர்வோம்.

---

* 1973 பிப்ரவரி 12-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விடுதலை நாள் வெள்ளி விழாவில் இந்த அருமையான திட்டத்தை அறிவித்தார்கள். பேருந்துகளை, பொதுவாக பயணிகள் பேருந்துகளை நாட்டுடைமையாக்கவேண்டுமென்பது நல்லதொரு கொள்கையாகும். இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் பயணிகள் பயணம் செய்கிற விமானப் போக்குவரத்தானாலும் சரி, புகை வண்டிப் போக்குவரத்தானாலும்சரி அவை ஏற்கனவே மக்களுடைமையாக்கப் பட்டு விட்டன. ஆனால் சாதாரண மக்கள், பெரும்பாலான மக்கள் பயன் படுத்துகிற பேருந்துகளைப் பொறுத்தவரையில் கடந்த முப்பது ஆண்டுகளாக அதை மக்களுடைமையாக்கவேண்டும் என்று பேசப்பட்டும்கூட மக்க ளுடைமையாக்கி இருக்கிறோமா என்றால் இந்தியத் துணைக் கண்டத்திலே இதுவரையில் 30 சதவிகிதம் தான் நாட்டுடைமையாக்கியிருக்கிறார்கள். தமிழ கத்தைப் பொறுத்தவரையில் 1967 வரையில் அது 15 சதவிகிதத்துக்கும் கீழே இருந்தது. 1967-ம் ஆண்டுக்குப் பிறகு கழகம் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்த பின்னர்தான் அது 30 சதவிகிதம் என்ற அளவிற்கு இன்றையதினம் நாம் அதில் ஒரு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம்.

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் முப்பது ஆண்டுகளாக நாட்டுடைமையாக்கவேண்டும் என்று சொல்லி வந்தும்கூட 30 சதவிகிதத் துக்குத்தான் வந்திருக்கிறோம். ஆகவே முழுவதையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்றால் இன்னும் எவ்வளவு ஆண்டுக்காலம் பிடிக்கும் என்பதை இம்மன்றத்திலுள்ள அத்தனை கட்சித் தலைவர்களும் நன்கு அறிவர். இதை உணர்ந்துதான் இதற்கு ஒரு கால வரையறை நிர்ணயிக்கவேண்டுமென்று, இதை வளர்த்துக்கொண்டு போவது கூடாது என்ற நல்ல சமதர்ம நோக்கத் தோடு நமது கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை, ஐந்தாண்டுகளுக்குள் எல்லாப் பேருந்துகளையும் மக்களுடைமையாக்கவேண்டும் என்று மிகத் தெளிவாக எடுத்துச்சொன்னார்கள்.

அது மட்டுமல்ல. இந்த மசோதாவை நான் வரலாற்றுச் சிறப்பு மிக்க மசோதா என்று ஏன் சொன்னேன் என்றால் இந்த வரலாற்றை கலைஞர் அவர்களின் கழக அரசு உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவர்களையும் நாம் இந்த நேரத்தில் மறந்துவிட முடியாது. குறிப்பாக நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும், அவர்களுடைய பெருந் தலைவர் காமராஜர் அவர்களுக்கும் நாம் உண்மையில் நன்றிசெலுத்த பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில் அவர்கள் காலத்தில் இதை மக்களுடை மையாக்கிவிட்டிருப்பார்களேயானால் நிச்சயமாக இந்த வரலாற்றுச் சிறப்பினை நாம் இன்றையதினம் பெற்றிருக்கமுடியாது. அந்த வகையில் அவர்கள் உதவி





செய்திருக்கிறார்கள் என்று எண்ணும்போது இந்த நேரத்தில் அவர்களுக்கு நான் நன்றி செலுத்தாமல் இருக்கமுடியாது. நாம் மக்களுடைமையாக்குவது மக்களுக்கு தெரிந்துவிடாமல் போயிருக்கும். ஆனால் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது ஒவ்வொருவருக்காக புது ரூட்கள் ஏற்படுத்தி தனியார்களுக்கு கொடுத்து நாடு முழுவதும் தெரிகிற அளவிற்கு ஒரு ஏற்பாட்டினைச் செய்து அப்படியும்கூட நமக்கு ஒரு நன்மையைத் தேடித் தந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நாம் அவர்களை மறந்துவிடுவோமேயானால் நாம் நன்றி காட்டத் தவறிவிட்டோம் என்ற குற்றத்திற்கு ஆளாகிவிடுவோம். ஆகவேதான் வரலாற்றுச் சிறப்புமிக்க மசோதா இது என்இ எடுத்துக் கூறினேன்.

இந்தியாவிலேயே நாம் கொண்டு வந்திருக்கும் சட்டம், ஒரு புதுமையான சட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே மத்திய அரசிலாகட்டும், இதர மாநில அரசுகளில் ஆகட்டும், அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டங்களில் எல்லாம் வழித் தடங்களை மட்டும்தான் எடுத்துக் கொள்வார்கள். ரூட்டை மட்டும்தான் எடுத்துக் கொள்வார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் நாம் அந்தப் பேருந்துகளையும் எடுத்துக்கொள்கிறோம். அந்தப் பேருந்துகளில் அன்றாடக் கூலிகளாக, ஆதரவு அற்றவர்களாக, நிலையில்லாதவர்களாக வாழ்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களையும் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு வாழ்வில் ஒரு நிம்மதி கொடுக்கவும் இந்தச் சட்டத்தின்மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. ஆகையால்தான் இந்தச் சட்டம் இதுவரையிலும் எந்த மாநிலத்திலும் கொண்டு வரப்படாத, கொண்டு வர முடியாத ஒரு அருமையான, புதுமையான சட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதிக்கம் எங்கேயிருந்தாலும் அது அகற்றப்படவேண்டும், ஆதிக்கம் அற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம் என்பதை திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் செயல்படுத்தி வருகிறது என்பதற்கு சான்றாக, எடுத்துக் காட்டாக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலில் தொடங்கிய போராட்டம் 'மும்முனைப் போராட்டம்'. இந்தச் சட்டத்தின் மூலம் முதலாளித்துவத்தை எதிர்த்து நாம் மும்முனைகளில் போராடுகிறோம். முதலாளித்துவத்தை இனி

வளர விடக்கூடாது என்பதற்காக புதிய ரூட்டுகளை, வழித் தடங்களை இனி யாருக்கும் புதிதாகக் கொடுப்பது இல்லையாது என்ற முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. இது முதல் கட்டம். வளர்ந்துவிட்ட முதலாளித்துவத்தை குறைக்க வேண்டாமா என்று எண்ணுகிறபோது, அது இரண்டாவது கட்டமாக இருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட வழித் தடங்களுக்கான அனுமதியை இனி புதுப்பிப்பது இல்லை என்பதாகும். இதை அழிக்க வேண்டாமா என்று நீங்கள் கேட்பீர்களானால் அது மூன்றாவது கட்டமாக வருகிறது. அதற்காகத் தான் மாவட்டத்திற்கு மாவட்டம் அந்தப் பயணிப் போக்குவரத்தை அரசு மேற்கொள்ளுகிறது. ஆகவே, இந்தச் சட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், தமிழக அரசைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் ஒரு பெரிய மும்முனைப் போராட்டம், முதலாளித்துவத்தை தடுக்கும் ஒரு பிரிவாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இவ்வளவு சிறந்த முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட இந்தச் சட்டத்தில் நீண்ட விவாதத்திற்கு இடம் இருக்காது என்று நினைக்கிறேன். ஏனெனில் எல்லா அரசியல் கட்சிகளும், சுதந்திராக் கட்சி உள்பட, பஸ்கள் தேசிய உடைமையாக்கப்படவேண்டும், அந்தப் பயணப் போக்கு வரத்து மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய வகையில் அமைய வேண்டுமென்ற வகையில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரில் இதுபற்றி விரிவாக விவாதித்து இருக்கிறோம். ஆகவே ஏன் தேசியமயமாக்க வேண்டு மென்ற கொள்கையில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்கத் தேவை யில்லை. ஆனால் எப்படிச் செய்வது என்பதில் சில ஆலோசனைகளைச் சொல்ல மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இடம் உண்டு. ஆனால் எப்படிச் செய்வது என்பதில் ஆரம்பித்துவிட்டு, ஏன் செய்தோம் என்ற நிலைமைக்குக் கொண்டு போய் விடக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக நாம் மக்கள் உடைமையாக்குவது என்ற காரணமே, மக்கள் நன்மையை மதித்து, புதிய வழித்தடங்களை அதாவது வருவாய் வராது என்று தெரிந்திருந்தும், மக்கள் நன்மைக்கருதி போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்கும், கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்வதற்கும், அதே நேரத்தில் சமுதாயத்தில் புற்று நோயாக இருக்கும் கருப்புப் பணத்தை தடுப்பதற்காகவும், ஒழிப்பதற்காகவும், பாட்டாளிகளைப் பாதுகாப்பதற்கும்,



அரசுக்கு வரிபோட்டு வரக்கூடிய வருவாயைக் காட்டிலும், நல்ல வருவாயைத் தேடித்தரக்கூடும் என்ற அடிப்படையிலும் தான் இந்தக் கொள்கையை இன்றைய தினம் மசோதாவாக ஆக்கிக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இந்த மசோதாவை இன்னும் எந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம், இன்னும் எப்படியெல்லாம் திருத்தங்கள் கொடுத்து இந்தச் சட்டத்தை நல்ல சட்டமாக, சிறந்த சட்டமாக கொண்டு வரலாம் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆலோசனை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I move the following amendment :—

'That the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 1 of 1973) be referred to a Select Committee of the Assembly consisting of . . Members. (Names of Members will be furnished later).

The amendment was duly seconded.

THIRU N. K. PALANISWAMY : Sir, I move the following amendment :—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of . . . Members (. . . Members from the Assembly and . . . Members from the Council) to consider the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 1 of 1973) and that the following Members of this House be selected to serve on the Joint Select Committee (Names of Members will be furnished later)."

The amendment was duly seconded.

MR. DEPUTY SPEAKER : The amendment given notice of by the hon. Member, Thiru James, is identical and so it is disallowed.

(திரு. நட. சிவசாமி—தலைமை)

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்த பஸ்கள் தேசிய மயக்கொள்கையை ஆதரித்தபோதிலும், இதை விட இன்னும் முக்கியமான தொழில்களை அரசு [illegible] தேவையான தொழில்களை [illegible] வற்புறுத்திக் கேட்டு [illegible]

[திரு. என். கே. பழனிசாமி] [1973 பிப்ரவரி 13

கொள்கிறேன். உதாரணமாக இன்றைக்கு பஸ்களை எடுத்துக்கொண்டால் பஸ்ஸுக்கு சீட் பிக்ஸட்டாக இருக்கிறது. அதற்கு ரேட்டும் பிக்ஸட்டாக இருக்கிறது. ஆகவே, பஸ்ஸைப் பொறுத்தவரையில் அதிக லாபம் வரும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் பஞ்சாலைகளை எடுத்துக்கொண்டால் கோடிக்கணக்கான ரூபாய் லாபம் வரும். அந்த பஞ்சு வியாபாரத்தில் ஒரு பாரம் வாங்கி விற்றால் ஒரு பாரத்திற்கு ஆயிரம் ரூபாய் கூட லாபம் வரும். இப்படிப்பட்ட லாபம் தரும் தொழில்களை தேசியமயமாக்க வேண்டும். காரணம், அந்த வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அது ஜனங்களுக்கு சுலபமாகக் கிடைக்காத வகையில் முடக்கிவிடுகிறார்கள். அல்லது ரேட்டை ஏற்றி விடுகிறார்கள். அதேபோல் சர்க்கரை ஆலை முதலாளிகளும் செய்கிறார்கள். ஆகவே, பஞ்சாலைகளையும், சர்க்கரை ஆலைகளையும் அரசுடைமையாக்கும் திட்டத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மசோதாவில் 5 ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ன காரணம் இதற்கு என்று தெரியவில்லை? முதன்முதலில் நீலகிரியில் இருக்கும் பேருந்துகளை எடுத்துக்கொள்வது என்று இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக தருமபுரி மாவட்டத்தில் இந்தத் திட்டம் அமல் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 5 ஆண்டுகாலம் கழித்துத்தான் சென்னைக்கு இந்தத் திட்டம் அமுல் நடத்த முடியும். எந்த அடிப்படையில் இந்த முறை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை. அது மட்டுமல்ல. 4 மாதத்திற்கு ஒரு முறை அவர்கள் லைசென்சு ரினியூ செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பஸ் ஓனர்களை மிரட்டக்கூடிய ஒரு மசோதாவாக இருக்கிறது. இதை ஏன் ஒரேயடியாக எல்லா ஜில்லாக்களிலும் அமலுக்குக் கொண்டு வரவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஏனென்றால் சர்க்கார் பெருத்த நஷ்ட ஈடு எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. 10,000 ரூபாய் வருகிறது என்றால் செக்யூரிடியாகப் பாதியும், பாக்கி பணமாகவும், இன்ஸ்டால்மென்ட் மூலமாகவும் கொடுக்க வாய்ப்பிருப்பதால் ஏன் இதை ஒரேயடியாக எல்லாயிடங்களுக்கும் எடுத்துக் கொள்ள அரசு முன் வரவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன்.



1973 பிப்ரவரி 13] [திரு. என். கே. பழனிசாமி]

இந்தச் சட்டத்திலே ஸ்டேஜ் காரேஜுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டி
ருக்கிறது. யார் வேண்டுமானாலும், டூரிஸ்ட் பஸ் ஓட்டலாம், நாடு பூராவும்
இஷ்டம் போல் ஓட்டிக்கொள்ளலாம் என்று இந்தச் சட்டத்தின் மூலம் இடம
ளிக்கப்பட்டிருக்கிறது. இந்த முறை தேசியமயக் கொள்கைக்குப் பொருந்
தாத ஒன்று என்று சொல்லிக்கொள்கிறேன். இது பல ஊழல்களைக் கொண்டு
வரும். ஆகவே, இந்த மசோதாவிலே டூரிஸ்ட் பஸ்களையும் சேர்த்துக்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு விதிவிலக்கு கொடுக்கக்
கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நஷ்ட ஈடு கொடுக்கும் முறையில் இன்றையதினம் பாராளுமன்றத்தில்
அரசியல் சட்டத் திருத்தம் 25-வது மீது விவாதம் நடந்துகொண்டிருக்கக்
கூடிய நேரத்தில் அவசர அவசரமாக டி.வி.எஸ்., ஏ.பி.டி. போன்ற கம்பெனி
களுக்கு மார்க்கட் பிரைசுக்கு நஷ்ட ஈடு கொடுத்து இருக்கிறோம். அவர்கள்
தேசியமயமாக்கப் போகிறோம் என்று தெரிந்துகொண்டு புதிய டயர்களை
கழற்றி விட்டு பழைய டயர்களைப் போட்டு மோசமான நிலையில் கொடுத்து
விட்டு பணத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். ஆனால் சிறு சிறு பஸ்
முதலாளிகளுக்கு நாமினல் பிரைஸ் தான் கொடுத்திருக்கிறார்கள். மார்க்கட்
வேல்யு கூட இல்லாமல் போனாலும், புக் வேல்யு கொடுத்து இருக்கலாம். அது
கூட இல்லாமல் நாமினல் வேல்யு தான் கொடுத்து இருக்கிறோம். 4 சதவீதம்,
5 சதவீதம், 7 சதவீதம் என்று மாடலுக்குத் தகுந்த மாதிரி நிர்ணயிக்கப்பட்டு
இருக்கிறது. இப்படிக்கொடுத்தால் டயர் விலை கூட கிடைக்காது அந்தப்
பஸ்களுக்கு என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த பஸ்களை 2-3 பேராக
சேர்ந்து வாங்கியிருக்கிறார்கள். அல்லது கடன் பெற்று வாங்கியிருக்கிறார்கள்.
அடமானம் வைத்து வாங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறையில் இருப்
பதால் அவர்களுக்கு அதிக நஷ்டஈடு கொடுப்பது நல்லது. 10 கோடி ரூபாய்
அதிகமாகச் செலவானாலும் பரவாயில்லை, அந்த நஷ்டஈட்டை அதிகப்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சோஷலிசம் கொண்டு வந்து சோஷலிச அப்ரோச் இதிலே இருக்கவேண்டும்
என்பதற்காகத் தான் நான் சொல்கிறேன். சோஷலிச அப்ரோச் என்பது
இமே இருப்பவர்களுக்கு அதிகமாக நஷ்ட ஈடு கொடுத்து, அதிகமாக பல
வைத்திருப்பவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக நஷ்ட ஈட்டைக் குறைத்துக்
குறைத்துக் கொடுத்து, அந்த முறையிலே இதை மாற்றி அமைக்கவேண்டும்.
காரணம், 2, 3 பேர்கள் பஸ்களை வாங்கி நடத்துகிறார்கள். அவர்களுக்கு இது

கட்டுபடியாகாது. அந்த முறையிலே அவர்கள் பஸ்கள் பூராவையும் எடுத்துக் கொண்டு, அவர்களுக்குக் கொஞ்சம் நஷ்ட ஈடு கொடுத்தால் மிகவும் பாதிக்கப் படுவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. நஷ்டஈடு நிர்ணயிக்கக்கூடிய பொறுப்பு ஒரு ஆபீசரிடம் விடப்பட்டிருக்கிறது. நேகோஸியேஷன் அடிப்படையில் அவர் நிர்மாணம் செய்வது என்று இருந்தால், அந்த ஆபீஸர் ஒரு பஸ்ஸுக்கு ரூ. 10,000 என்று சொல்லலாம், இன்னொரு பஸ்ஸுக்கு ஒரு லட்சம் ரூபாய் என்று சொல்லலாம். வேண்டாதவர்களுக்கு நஷ்ட ஈட்டைக் குறைத்து, வேண்டியவர்களுக்கு அதிக மாக நஷ்டஈடு கொடுக்கக்கூடிய முறை ஏற்படும். ஆகவே, இந்த நஷ்ட ஈட்டைப்பற்றி தீர்ப்புச் சொல்லக்கூடிய பொறுப்பு ஒரு கோர்ட்டிடம் தான் ஒப்ப டைக்கப்படவேண்டும். அதை ஒரு தனி அதிகாரியிடம் விடக்கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. பஸ்களை எடுத்துக்கொள்ளும்போது பஸ் முதலாளிகள் ஏற்கனவே பஸ்களை அடமானம் வைத்திருந்தாலும் சரி, வட்டிக்குப் பணம் கடன் வாங்கியிருந்தாலும் சரி, வட்டித் தொகையையோ அடமானத் தொகை யையோ பஸ் முதலாளிதான் கட்டவேண்டும், சர்க்கார் ஒன்றும் தராது, சர்க்கார் பஸ்ஸை மட்டும்தான் எடுத்துக்கொள்வார்கள் என்று இந்த மசோ தாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையாகவே பஸ்களை எடுத்துக்கொள் வதில் ஆட்சேபணை இல்லை. ஆனல், பஸ் முதலாளிகள் அடமானம் வைத்திருக் கிற தொகையையும், வட்டித் தொகையையும் சர்க்கார் கொடுத்துவிட்டு பஸ்களை எடுத்துக்கொள்ள வேண்டும். பஸ் ஓனர் ஃப்ரீயாக இருக்க வேண்டும். அப்படிச் செய்து பஸ்களை எடுத்துக்கொள்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும்.

இந்த பஸ்களில் வேலை செய்யக் கூடியவர்கள், டிரைவர்கள், கண்டக்டர்கள் நிரந்தரமாக்கப்படாமல், ரூ. 2, 3 என்று தினக் கூலிக்கு ஓட்டுகிருர்கள். இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட் ஆக்டின்கீழ் யார் டிரைவர், கண்டக்டர்களாக இருக்கிருர்களோ அவர்களைத் தான் இந்தக் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள் வார்கள், இவர்கள் எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள். நிலைமை அப்படி யாளுல் இந்த டிரைவர், கண்டக்டர்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இந்த ஷரத்தை எடுத்துவிட்டு, யார் பஸ்களை ஓட்டுகிருர்களோ, யார் கண்டக்டர்களாக இருக்கிருர்களோ, அவர்களையெல்லாம் வேலைக்கு எடுத்துக்



கொள்ள வேண்டும். இன்னும் ஃபோர்மென், புரோக்கர், அதாவது பிராயாணி களை கூப்பிடுகிறவர்கள், போன்றவர்களையும் சேர்த்து வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா:** இங்கே மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை ஆதரித்து என்னு டைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட் டில் ஒரு எழுச்சி ஏற்பட்டிருக்கிறது, மக்களிடையே மக்கள் சோஷலிச சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்பதிலே ஆர்வம் உள்ளவர்களாக இருக் கிருர்கள், அதிலே மிகுந்த அக்கறை காட்டிவருகிருர்கள். இந்த நேரத்தில் பஸ் சொந்தக்காரர்களுக்காக யார் வாதாடினுலும், பஸ்கள் நாட்டுடைமையாக் கப்படுவதை தடுத்து நிறுத்தும் முயற்சியில் யார் ஈடுபட்டிருந்தாலும், அவர் களுடைய நல்லெண்ணத்தில் மக்கள் நிச்சயம் சந்தேகப்படுவார்கள் அவர்கள் யாராக இருந்தாலும் என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சிறிய பஸ் சொந்தக்காரர்களைப்பற்றி குறிப்பாக குறிப்பிட்டார்கள். அந்தச் சிறிய பஸ் சொந்தக்காரர்களுக்கு இந்தத் தொழிலில் லாபம் கிடையாது, அவர்களுக்கு நஷ்டம் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் அதிகமாக வாதாடினுர்கள் அவர்களுக்காக. சிறிய பஸ் சொந்தக்காரர்கள் என்று சொல் லப்படுபவர்கள் எப்படி உருவாக்கப்பட்டவர்கள் என்பதை நாம் கொஞ்சம் எண்ணிப்பார்க்கவேண்டும். அரசாங்கத்தின் சட்டத்தை ஏமாற்றுவதற்கும், வருமான வரி சட்டத்தை ஏமாற்றுவதற்கும்தான் அவர்கள் உருவாக்கப்பட்டி ருக்கிருர்கள். பெரிய பஸ் முதலாளிகள், பெரிய பஸ் சொந்தக்காரர்கள் வரு மான வரியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக வருமான வரியைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக தங்களிடமிருந்து பஸ்களை பல பேர்களுக்கு பிரித்து மாற்றி அமைத்துக்கொண்டார்கள். அதன்மூலம் வருமான வரியை ஏய்த்தார்கள். அதன்மூலம் அவர்களுக்கு கறுப்புப் பணம் சேர்ந்திருக்கிறது. அதேமாதிரி தான் 5 பஸ்களுக்கும் குறைவாக இருப்பவர்களுக்கு அதிக மார்க் கொடுப்பது என்று அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தது. அந்த சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அதன்மூலம் நிறைய ரூட்களை வாங்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக பெரிய பஸ் முதலாளிகள் தங்களிடமிருந்த பஸ்களையெல்லாம் 5 பஸ்களுக்குக் குறைவாக பிரித்து எழுதிவைத்துக்கொண் டார்கள்.

[திரு. ஏ. எம். இராஜா] [1973 பிப்ரவரி 13

அதே போல் தான் நாம் உச்ச வரம்புச் சட்டம் 1971-ல் கொண்டு வந்திருக்கிறோம். 10 பஸ்களுக்கு மேல் யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது, எந்த ஒரு தனி நபரும் 10 பஸ்கள் வரையில் தான் வைத்துக்கொள்ளவேண்டும், அதற்கு மேல் யாரும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சட்டம் கொண்டுவந்ததன் காரணமாக, ஒருவர் தான் 40 பஸ்களை வைத்துக்கொள்வதற்கு எப்படி வசதி செய்து கொள்ளவேண்டும் என்பதற்காக, 10, 10 பஸ்களாக பாகப்பிரிவினை என்ற பெயரால், பல கம்பெனிகளாக மாற்றி அமைத்துக்கொண்டு, 2, 3, பஸ் கம்பெனிகளை வைத்துக் கொண்டு ஒவ்வொன்றின் மூலம் பல புதிய ரூட்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இப்படி 10 பஸ்கள் என்ற நிலையையே உடைத்து எறிந்து சட்டத்தை ஏமாற்றி, 10 பஸ்களுக்கும் அதிகமாகவே பலரும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி உருவாக்கப்பட்டவர்கள் தான் இந்தச் சிறிய பஸ் சொந்தக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள். எனக்குத் தெரியும். ஆகவே, இந்தச் சிறிய பஸ் சொந்தக்காரர்களுக்காக நாம் வாதாடுவதும், அவர்களுக்காக நாம கண்ணீர் வடிப்பதும் நிச்சயம் நியாயமாக இருக்க முடியாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சிறிய பஸ் சொந்தக்காரர்கள் எத்தனை பேர் இந்த நாட்டில் இருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற பஸ் சொந்தக்காரர்கள் என்று கூறப்படுபவர்களே 1,300 பேர் தான் அந்த 1,300 பேர்களில் சிறிய பஸ் சொந்தக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் 500 பேர் தான் இருக்கிறார்கள். இதிலும் உண்மையாகவே சிறிய பஸ் சொந்தக்காரர்கள் என்பவர்களை நாம் தேடித்தேடி பார்ப்போமேயானால் 50 பேர் கூடத் தேறமாட்டார்கள். இந்த 50 பேருக்காக 4½ கோடி மக்களின் நன்மைக்காகக் கொண்டுவரப்படுகிற இந்தச் சட்டத்தைத் தடுத்து நிறுத்துவது முறை தானா, நியாயம் தானா? இல்லை. கொஞ்சம் எண்ணிப் பார்க்கவேண்டும் 4½ கோடி மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய இந்தச் சட்டத்தை சாதாரணமாக 50 பேர்களுக்காகக் கைவிட முடியுமா?

நான் ஒரு உதாரணத்தைக் கொண்டு இதை விளக்க விரும்புகிறேன். ஒரு கால்வாய் வெட்டுவதாக வைத்துக்கொள்வோம். அந்தக் கால்வாய் வெட்டுவதன் மூலம் அந்தப் பகுதி நல்ல வளம் அடையப்போகிறது, அதன் மூலம் அந்தப் பகுதி மக்கள் நல்ல பலன் அடையப்போகிறார்கள். ஆனால், கால்வாய் வழியில் இருக்கிற சிறிய நிலச்சொந்தக்காரர்கள் பாதிக்கப்படத் தான் செய்வார்கள். அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக நாம் கால்வாய் வெட்டாமல் விட்டுவிட முடியுமா? கால்வாய் வெட்டாமல் விடுவது புத்திசாலித்



1973 பிப்ரவரி 13] [திரு. ஏ. எம். இராஜா]

தனமாக இருக்குமா என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். சிறு நிலச் சொந்தக்காரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக எப்படி கால்வாயை வெட்டுவதை நிறுத்துவதில்லையோ அதே போல் தான் 50 பேர்களுக்காக, சிறிய பஸ் சொந்தக்காரர்கள் 50 பேர் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக 4½ கோடி மக்களுக்கு நன்மை பயக்குகின்ற இந்தச் சட்டத்தை கைவிடாமல் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். அதன் மூலம் தான் இந்த நாட்டிலே நாம் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதிலே அக்கறை காட்டுகின்றோம், தமிழ் நாட்டு சட்டமன்றம் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது என்ற பெருமையை நாம் பெற முடியும். அந்த முறையில் நாம் இதில் கொஞ்சம் கூட சலுகைகாட்டக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், 50 பஸ் சொந்தக்காரர்களும் நாட்டு மக்களின் நலனுக்காக தாங்களாகவே தியாகம் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ்களை நாட்டுடைமையாக்குவதன் மூலம் சுமார் 50,000 தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள். அவர்கள் குடும்பங்கள் நல்ல முறையில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும். அவர்களுக்கு பிராவிடெண்டு பண்டு, போனஸ் போன்றவைகளெல்லாம் கிடைக்க இருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த பஸ்களில் வேலை செய்பவர்கள் அன்றாட கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் இல்லை. அவர்கள் ஏழைகள் எப்பொழுதுவேண்டுமானாலும் அவர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்படலாம் என்ற அவல நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் வருவதன் மூலம் 50,000 தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட இருக்கிறார்கள். 50,000 தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப் படுகிறார்கள் என்றால், 50,000 குடும்பங்கள் வாழ்வதற்கு இந்தச் சட்டம் வழி செய்கிறது என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சிறிய பஸ் முதலாளிகளைப்பற்றி மற்றொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஏதோ அவர்கள் ஒன்றுமில்லாதவர்கள், ஏழைகள் வசதியற்றவர்கள் என்று குறிப்பிட்டார்கள். அதில் உண்மையே கிடையாது. அவர்களே வழக்கு மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். சிறிய பஸ் முதலாளிகள் என்று கூறப்படுபவர்கள் மிகப் பெரிய வசதி படைத்தவர்களாகத் தான், பணக்காரர்களாகத் தான் இருக்கிறார்கள்.

[திரு. எ. எம். இராஜா] [1973 பிப்ரவரி 18

இந்திய உபகண்டத்தில் 55 கோடி மக்கள் இருக்கிறார்கள். இந்த 55 கோடி மக்களிலும் ஏறக்குறைய 1/3 பாகம் 16½ கோடி மக்களுடைய வருமானம் மாதம் ஒன்றுக்கு 24 ரூபாய்தான், இதை நான் சொல்லவில்லை. ஐந்தாண்டுத் திட்ட விவர அறிக்கை தெளிவாகக் காட்டுகிறது. இந்த 55 கோடி மக்களிலே வருமான வரி கட்டக்கூடியவர்கள் எத்தனை பேர் என்று பார்த்தால் 19 லட்சம் பேர்கள். அதிலும் 10 ஆயிரம் ரூபாய்க்குமேல் வருமானம் வரக்கூடியவர்கள் எத்தனை பேர் என்று பார்த்தால் 6¼ லட்சம் பேர் வருகிறார்கள். 55 கோடி மக்களில் 20 ஆயிரம் ரூபாய்க்குமேல் வருமானம் வரக்கூடியவர்கள் 2¼ லட்சம் பேர்கள்தான்.'

இந்தச் சிறிய பஸ்முதலாளிகள் என்று சொல்லப்படக் கூடியவர்களின் வருமானம் என்ன? ஒரு பஸ்ஸுக்குச் சொந்தக்காரருக்கு 20 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான வருமானம் வருகிறது. இதை நான் சொல்வதாக யாரும் நினைக்கவேண்டாம். வழக்கு மன்றத்திலே அவர்கள் அப்படி வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்கள். சிறிய பஸ்முதலாளிக்கு ஒரு பஸ்ஸுக்குச் சொந்தக்காரருக்கு ஆண்டு ஒன்றுக்கு 20 ஆயிரத்துக்கு அதிகமாக லாபம் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 3 பஸ்கள் வைத்திருப்பவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 60 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. இந்த நாட்டின் 55 கோடி மக்களிலே 20 ஆயிரம் ரூபாய்க்கு வருமான வரி கட்டக்கூடியவர்கள் 2¼ லட்சம் பேர்கள்தான். அவர்களிலே ஒருவராக இருக்கக்கூடிய இந்தச் சிறிய பஸ் முதலாளிகள் பணக்கார ஏழைகளா? அவர்களுக்கு நாம் கருணை காட்டவேண்டுமா? அவர்களுக்காக நாம் கண்ணீர் வடிக்க வேண்டுமா? அப்படியானால், இந்த நாட்டிலே ஜனநாயக சமதர்மத்தை எப்படி உருவாக்க முடியும் என்பதை எல்லாம் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், கண்ணொளி இழந்தவர்கள் மீண்டும் கண்ணொளி பெறுவதற்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நிதி திரட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வாழ்க்கை வாழ்வதற்கு வேண்டிய ஒரு வழியைக் காட்ட வேண்டும் என்று இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே நலிந்துகொண்டிருக்கிற பல இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். இப்படி இருக்கிற இந்த நாட்டிலே ஆண்டு ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் வருமானம் பெறுகின்றவர்கள் ஏழைகள் என்றால், அவர்கள் வசதியற்றவர்கள் என்றால், உண்மையிலேயே ஏழைகள் வசதியற்றவர்கள் யார்? அப்படிப்பட்டவர்களுக்காக வாதாடுபவர்களைப் பற்றி, அவர்களுடைய எண்ணம் என்ன என்பதைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை.



1973 பிப்ரவரி 13] [திரு. எ. எம். இராஜா]

நேற்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூடக் கேட்டார்கள். இந்த நாட்டிலே வருமானம் வரக்கூடிய வேறு தொழில்கள் ஏராளம் இருக்கின்றன என்று சொன்னார்கள். திரு. பழனிசாமி அவர்களும் அதைப்பற்றிச் சொன்னார்கள். சர்க்கரை ஆலை, பஞ்சாலை இவைகளையெல்லாம் முதலிலே எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அப்படி சர்க்கரை ஆலைகளையும் பஞ்சாலைகளையும் எடுத்துக்கொண்ட பின்னால்தான் பஸ்களை எடுத்துக்கொள்ள வேண்டுமா? அவைகளை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் இதை எடுத்துக்கொள்ளக் கூடாதா? அப்படிச் சொல்வது இந்த பஸ்முதலாளிகளுக்காக வாதாடுவதே அல்லாமல் வேறொன்றும் அல்ல என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். பஸ்களை உடனடியாக தேசியமயமாக்கவேண்டுமென்று அவர்களுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தால் அதிலே ஆச்சரியம் இல்லை, ஏனென்றால் அவர்கள் கொள்கை அது. எல்லாம் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று நாட்டுடைமையிலே நம்பிக்கை வைத்திருப்பவர்கள், சர்க்கரை ஆலைகளையும் பஞ்சாலைகளையும் பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்று தீவிரமாகப் பேசியவர்கள் இன்று பஸ் முதலாளிகளுக்காக வாதாடுகிறார்கள் என்றால் அவர்களைப் பற்றி என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. ஆகவே, திரு. தங்கமணி அவர்கள் . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்தச் சட்டம் பாசான உடனே தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா பஸ்களையும் எடுத்துக்கொள்ளலாமா என்பதற்கு உறுப்பினர் அவர்களின் பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்த மசோதாவில் குறிப்பிட்டிருக்கிற சிறு பஸ் முதலாளிகள் பற்றி மாண்புமிகு அங்கத்தினரின் கருத்து என்ன?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சிறு பஸ் முதலாளிகளைப் பொறுத்தவரை, நான் நிச்சயமாகச் சொல்லமுடியும். ஒரு பஸ் வைத்திருப்பவர்கள், அவர்கள் அந்த பஸ்ஸை வைத்துக்கொண்டுதான் வாழ்க்கை நடத்தக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் பஸ்களைத் தேசியமயமாக்குவதாக இருந்தால் அவர்களுக்கு குறைந்தது ஒரு லட்சம் ரூபாய் கொடுப்போம். இரண்டு பஸ்களாக இருந்தால் ஒரு லட்சம் எண்பதாயிரம் இருக்கும். மூன்று பஸ்களாக இருந்தால் ஒரு லட்சத்து எண்பதாயிரத்துக்கு கொஞ்சம் அதிகமாக இருக்கும். அதற்குமேல் வருகின்ற பஸ்களுக்கு எல்லாம், மேலே மேலே

போகப்போக நஷ்ட ஈட்டுத் தொகை குறைந்துகொண்டே வரும். இதிலே பஸ்களுக்கு எத்தனை வருஷம் என்று பார்க்கக்கூடாது. பஸ்களின் எண்ணிக் கையின் அடிப்படையில் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படியானல் உச்சவரம்பு சட்டம் வந்தபோது அதை ஏற்றுக்கொண்டீர்களே. இப்போது இந்தக் கருத்தைச் சொல்கிறீர்கள். சிறிய பஸ் முதலாளிகள் என்று சொல்கிறபோது, சிலர் பினமி முறையில் வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. 20,000 ரூபாய்க்கு மேல் அவர்களுக்கு வருமானம் வருகிறது. அப்படிப்பட்டவர்களுக்குச் சலுகை காட்டவேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்களா ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பினமியைப் பொறுத்தவரையில் இப்போது அந்தப் பிரச்சனை இங்கே எழவில்லை. மூன்று பஸ்களும் அதற்குக் குறைவாக வும் இருக்குமானல் நஷ்ட ஈடு அதிகமாகக் கொடுக்கவேண்டும். இன்றைக்கு நான் உறுதியாகச் சொல்கிறேன். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் நீங்கள் எல்லா பஸ்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் ஜில்லா வாரியாக எடுத்துக்கொள்வதாக இருந்தால், எங்கள் ஜில்லா முதலிலே வரவேண்டும். அவர்கள் ஜில்லா பின்னலே வரவேண்டும் என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்படும். இதைப்பற்றி நான் ஏற்கெனவே தெரிவித்திருக் கிறேன். The road is thrown open and it becomes a source for corruption and nepotism அது வரும் என்று ஏற்கெனவே நான் தெரிவித் திருக்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** துணைத் தலைவரவர்களே, இந்த சிறிய பஸ் முதலா ளிகளுக்கு அதிகமான நஷ்டயீடு கொடுக்கவேண்டுமென்று திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். சிறிய பஸ் முதலாளிகள் மார்வாடிகளிடம் கடன் வாங்கித்தான் இந்தத் தொழிலையே நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு நஷ்டம் ஏற்படாத அளவுக்கு மார்வாடி களிடம் கடனைப் பெற்றப் பணத்தையாவது கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது.

**திரு. என். கே. பழனிசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், டி. வி. எஸ்., ஏ. பி. டி. போன்ற பெரிய நிறுவனங்களுக்கு அதிகமாக நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது. சிறு பஸ் முதலாளிகளுக்குக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. இதுதான் சோஷலிசமா ?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** இது ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.





**திரு. ஏ. எம். இராஜா :** பொதுவாக வட்டிக்குக் கடன் கொடுக்கப்படு கிறது என்றால், அவர்கள் வாழ்க்கையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர் களாக வசதியற்றவர்களாக இருந்தால் மார்வாடிகள் பெருந்தொகைகளைக் கடனைக் கொடுக்க மாட்டார்கள். இந்தச் சிறு பஸ் முதலாளிகள் கடன் வாங்கியிருக்கிறேன் என்று சொல்லி, தங்களிடம் இருக்கின்ற கறுப்புப் பணத்தை பயன்படுத்துவதற்காகச் செய்யும் ஒரு தந்திரம் இது. அதனுல் அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்து காணப்படுகிறார்கள். இதையெல்லாம் தெரிந்துதான் மார்வாடிகள் கடன் கொடுக்கிறார்கள். இரண்டு வட்டி மூன்று வட்டி என்று இருந்தாலும் கடன் வாங்குகிறார்கள் என்றால் அதிலே நிறைய லாபம் வருகிறது என்பதை மிகச்சாதாரணமானவர்கள் கூடத் தெரிந்து கொள்ளலாம். பொதுவாக பஸ் முதலாளிகள் யாரைப் பார்த்தாலும் அவர்கள் வாழ்க்கை செழிப்பானதாகத் தான் இருக்கிறது. அந்த வாழ்க்கை அவர் களுக்கு எப்படி வருகிறது ? தொழிலே அதிக லாபம் வருகிறது. ஆகையால் அப்படி வாழமுடிகிறது. ஆகவே அவர்களுக்கு நாம் கருணை காட்டக் கூடாது; கருணை காட்டவேண்டிய அவசியம் இல்லை.

இன்னென்றையும் இங்கே தெரிவித்தார்கள். நம்முடைய அரசு கொடுக் கின்ற நஷ்டயீடு மிகக் குறைவு என்று சொன்னார்கள். ஆனல் வருமான வரிச் சட்டத்தின்படி ஒரு பஸ்ஸுக்கு ஒரு சதவீதம் தான் நஷ்டயீடு கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனல் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் 5 சதவீதம் கொடுத்திருக்கிறார்கள். இது அதிகம் இல்லையா ? ஒரு சதவீதம் கொடுத்தால் போதும் என்று வருமான வரிச் சட்டத்தில் இருந்தும், நம்முடைய அரசு 5 சதவீதம் கொடுத்திருப்பது போதாதா ? இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னல் அது நியாயமா ? நீதியா ? அதேநேரத்தில் தேய் மானம், ரிப்பேர் செலவு என்றெல்லாம் கணக்குக் காட்டி, இருக்கிறார்கள். அந்தக் கணக்குகளைப் பார்த்தால், அது அந்த பஸ் விலையைவிட 2 மடங்கு 3 மடங்கு அதிகமாக இருக்கும்.

அடுத்து, ஆண்டு ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் லாபம் வருகிறது. 12 ஆண்டு காலத்திலே 2½ லட்சம் வரும். அது விலையைப்போல 2 மடங்கு 3 மடங்கு கூடுதலாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு இப்போது கொடுக் கின்ற நஷ்டயீட்டுத் தொகையே அதிகம். இதை இன்னும் குறைத்துக் கொடுக்க வேண்டும். அதையும் உடனடியாக நாம் கொடுத்துவிடக் கூடாது. அதை 20 வருஷ 'பாண்ட்' ஆக் கொடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பஸ்களை நாட்டுடைமை ஆக்குவதன் மூலம் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிறோம். அப்படிக் கொடுப்பதன் மூலம் இந்த நாட்டிலே இருக்கிற சாதாரண
மு. ப. 11-30 மக்களின் வாழ்க்கைத் தரம் மாறுவதில்லை. பஸ் முதலாளிகள் என்று சொல்லப்படுகிற அவர்கள் முதலாளித்துவத்திலே இருந்து கொஞ்சம்கூட பாதிக்கப்படுவதில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

ஒரு நாட்டிலே உண்மையான சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டுமானால், அமையுமானால் அங்கே இருக்கிற உடல் நலமுள்ள அத்தனை மக்களும் உழைத்துத் தான் சாப்பிட வேண்டுமென்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக முடியாதவரையில் அந்த நாட்டிலே சோஷலிச சமதர்மம் ஏற்பட முடியாது. இந்த நிலை ஏற்படத் தக்க வகையிலே இந்த அரசிற்கு அதிகாரம் இருக்கிறதா என்றால், அதிகாரம் கிடையாது என்று தான் சொல்லுவேன். இந்த அதிகாரம் இந்தியப் பேரரசிடம் இருக்கிறது. திருமதி இந்திரா காந்தி அவர்கள் தன்னிடத்திலே இருக்கும் பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்து இந்த நாட்டிலே தேசிய உடைமை ஆக்கும் சொத்துக்களுக்கு நஷ்டஈடு கொடுக்கக் கூடாது என்ற ஒரு நிலையினைச் செய்தால் தான் வறுமையை இந்த நாட்டிலே போக்க முடியும் வெறும் ஸ்லோகத்தினால் "வறுமையே போ" என்பதால் வறுமையைப் போக்க முடியாது என்று சொல்லி, இந்தச் சட்டத்தை வரவேற்று எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பற்றிப் பேசும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். சமுதாயத்திலே ஓர் அங்கமாக இருக்கின்ற இந்த பஸ் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் முதலாளித்துவத்தை வளர்க்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள், ஆகையால் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் பொழுது அவர்களின் மீது எந்தவிதமான கருணையையும் காட்டக் கூடாது என்ற ஒரு கருத்திலே அவர்கள் பேசினார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக் கொள்வேன். அவர்கள் யாராக இருந்தாலும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து அந்தச் சட்டத்திலே ஒரு பெரிய சமுதாய மாற்றத்தினையும் அதன் வாயிலாக ஒரு பெரிய பொருளாதாரப் புரட்சியினையும் ஏற்படுத்துகின்ற நாம், அந்தச் சட்டத்தினால் ஒரு சாரார் அவர்கள் என்ன தான் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களுடைய அடிப்படையான வாழ்க்கை, அவர்களுடைய அடிப்படையான தொழில், அவர்களுடைய அடிப்படையான பொருளாதாரம் பாதிக்கப்படாத வகையிலே அமைத்துத் தருவது தான் சிறந்த





சோஷலிச தத்துவமாக இருக்கும் என்பது என்னுடைய வாதம். யாருக்கும் கருணை காட்டக் கூடாது என்று சொல்லுவதை என்னைப் பொறுத்தவரையில் நான் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். யாராக இருந்தாலும் கருணை, காட்ட வேண்டும். கருணை, யார் யாருக்கு தேவைப்படுகிறதோ அவர்கள் மீது எல்லாம் கருணை காட்டவேண்டும். அத்தகைய முறையிலே தான் இன்றைக்கு கருணையின் அடிப்படையிலே அமைந்திருக்கிற "கருணாநிதியின் சர்க்கார்" கருணையைக் காட்ட வேண்டிய சர்க்காராக இருக்கிறது.

பாதிக்கப்படுகிறவர்கள் கருணை வேண்டும் என்று கேட்டால் அவர்களுக்கு கருணை தேவைப்படுகிறது என்ற காரணத்தினால் தான் கருணையை கேட்கிறார்கள். அப்படி கேட்கின்ற பொழுது சமூக நீதியின் அடிப்படையில் அந்தக் கருணை அவர்களுக்குத் தேவையாகத் தான் இருக்கிறது என்ற ஒரு நிலை இருக்குமானால் அவர்களுக்கு அந்தக் கருணையை நாம் காட்ட வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். கருணை இல்லை என்று மறுக்க முடியாது.

இந்தச் சிறு தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களைப் பற்றி உறுப்பினர் ராஜா சொன்னார்கள். இந்த ஏழை பணக்காரர்கள் அல்லது பணக்கார ஏழைகள் என்று வர்ணித்தார்கள். அவர் மேலும் சொன்னார், ஒரு பஸ்ஸை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு 20,000 ரூபாய் வருஷத்திற்கு இலாபம் வருகிறது என்றார்கள். இருக்கலாம். நான் கூட அந்தத் தொழிலிலே நேரடியாக இல்லா விட்டாலும் அந்தத் தொழிலிலே சம்மந்தப்பட்டவர்களோடு சம்மந்தம் கொண்டிருப்பதால் அதனுடைய தெளிவுகளை பார்த்திருக்கிறேன். ஒரு பஸ்ஸை வைத்து நடத்தக் கூடியவர்கள் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பேசுவார்களேயானால், இதற்கு ஒரு தெளிவு ஏற்படும் என்று நினைக்கிறேன். அவர்கள் எல்லாம் பேசவேண்டும்; பேசாமல் இருக்கக் கூடாது. 20,000 ரூபாய் இலாபம் ஒரு பஸ்ஸுக்கு வந்து அவர்கள் இதை நடத்திக் கொண்டிருந்தால் நிச்சயமாக 20,000 ரூபாயிக்கு அதிகமாகவும் கிடைக்கலாம்—இவைகள் எல்லாம் புத்தகக் கணக்குகள் தான். 20,000 ரூபாய் இலாபம் என்று புத்தகத்திலே எழுதிவிட்டால் போதாது. "வாட் ஈஸ் தி எக்ஸ் பெண்டிச்சர்" என்று பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. இராமச்சந்திரன் : ஒரு பஸ்ஸை வைத்திருப்பவர்களுக்கு 20,000 ரூபாய் இலாபம் வருகிறது என்று நாங்கள் சொல்லவில்லை. ஒரு பஸ்ஸை வைத்திருப்பவரின் உண்மையான வருவாய் என்ன என்று எங்களுக்குத் தெரியாது. ஒரு பஸ்ஸை வைத்துக்கொண்டு இருப்பவர்கள் வருமான வரி அதிகாரிகளிடம் "அசஸ்டு இன்கம்" எங்களுக்கு 20,000 ரூபாய் வருகிறது

என்று சொல்லி அதை வைத்து ஏற்கனவே இந்த மன்றத்திலே பஸ் தேசியமயக் கொள்கையின் அடிப்படையில் 75 மைலுக்கு மேலுள்ள வழித் தடங்களை எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று சொன்ன பொழுது அதை எதிர்த்து கோர்ட்டுக்கு போனார்கள். இப்பொழுது தான் அதிலே கோர்ட்டு தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த கோர்ட்டிற்கு போட்ட தஸ்தாவேஜிலே எழுதியிருக்கிறார்கள் எங்களுக்கு 20,000 ரூபாய் ஒரு பஸ்ஸினால் "அவுட் இன்கம்" என்று, எனவே, பஸ் ஆப்பரேட்டர்கள் சொன்னது தான், எங்களுக்குத் தெரியாது.

திரு. எம். ஏ. லத்தீப்: அதைத் தான் நான் புத்தகக் கணக்கு என்று சொன்னேன். அந்தத் தொகைக்கு மேலாகக் கூட இருக்கலாம். இதிலே எக்ஸ்பென்டிச்சர் என்ன என்று நாம் பார்க்க வேண்டும் பஸ் தொழிலை நடத்துபவர்களுக்கு ஒவ்வொரு நாளும் எவ்வளவு ஸ்பேர் பார்ட்ஸ் தேவைப்படுகிறது, அவர்கள் வருஷத்திலே எவ்வளவு டயர் வாங்க வேண்டியிருக்கிறது. இவைகளை எல்லாம் அவர்கள் எப்படி சமாளித்து வருகிறார்கள் என்பதை கவனித்தாக வேண்டும்.

அதே நேரத்திலே, இன்றைக்கு தமிழ் நாட்டிலே சிறு பஸ் முதலாளிகள் என்று சொல்லப்படுபவர்கள் எப்படி எல்லாம் இந்தத் தமிழகத்தை நடத்தி வருகிறார்கள் என்று பார்த்தால், அதிலே 90 சதவிகிதத்தினர் மார்வாடிகளிடம் கடன் வாங்கித் தான் அத் தொழிலை நடத்தி வருகிறார்கள். சாதாரணமாக ஏழையாக இருக்கிறவன் வேறு தொழில் எதுவுமில்லை என்று பஸ் கம்பெனியிலே மேனேஜராக வேலை செய்து கொண்டு இருக்கிறான். பிறகு தானே ஒரு சிறு பஸ் தொழிலை நடத்த வேண்டுமென்று நினைத்தால் அரசாங்கத்திற்கு ஒரு விண்ணப்பம் செய்து, அவர்கள் ஒரு பெர்மிட் கொடுத்தால் அதை வைத்துக் கொண்டு மார்வாடி இடத்திலே பணம் வாங்கி அவன் தன்னுடைய தொழிலை நடத்துகிறான். இப்படி ஒவ்வொரு வருஷமும் அவர்கள் மார்வாடிக்கு கொடுக்கின்ற பணம் எவ்வளவு என்பதை 20,000 ரூபாய் இலாபம் வருகிறது என்று சொல்லுகிறவர்கள் தெரிந்திருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை.

இதே நேரத்திலே எவ்வளவு சர்சார்ஜ் கட்டுகிறார்கள் ஒவ்வொரு மாதத்திலேயும் என்று நினைத்துப் பார்த்தால் நிச்சயமாக அவர்கள் எவ்வளவு கஷ்டத்திலே இந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். நான் சொல்லுவதெல்லாம் என்னவென்றால் இந்தச் சட்டத்திலே இருக்கிற பல அம்சங்களை ஆராய நான் இங்கே இருந்து பேசவில்லை. நான் கேட்டுக்கொள்வது எல்லாம் ஒரு நல்ல திட்டத்தை கொண்டு வரும்பொழுது ஒரு குறிப்பிட்ட மக்கள் அதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்



என்றால் அவர்கள் எல்லாம் சுரண்டல்காரர்கள், பணக்காரர்கள் எனவே அவர்கள் ஒழிக்கப்படவேண்டும். அவர்கள் மீது கருணை காட்டக் கூடாது என்ற நிலையிலே ஒரு பிரச்சினையை அணுகும் பொழுது நிச்சயமாக நாம் எதை விரும்புகிறோமோ அதைச் சாதிக்க முடியாது.

ஆகையாலே நான் கேட்டுக்கொள்வது அவர்களுடைய உண்மையான பிரச்சினைகளை நீங்கள் நல்ல முறையில் புரிந்துகொண்டு அவர்களுக்கு எந்த விதமான பாதகங்களும் வாழ்க்கையிலே ஏற்படாத வகையிலே காரியத்தைச் செய்யவேண்டும். அரசு செய்யும் அதே காரியத்தை "டிவிஷன் ஆப் லேபர்" என்று சொல்லுவார்கள். யாருக்காக இந்தக் காரியங்களைச் செய்கிறோம். சமுதாயத்திலே மாற்றம் வேண்டும், சமுதாயத்திலே பொருளாதார புரட்சி வரவேண்டும், சமுதாயத்திலே நீதி வேண்டும், சமுதாயத்திலே ஒருவர் சுரண்டல்காரராகவும், மற்றொருவர் சுரண்டப்படுபவராகவும் இருக்கக்கூடாது, சமுதாயத்திலே இருக்கும் வாய்ப்புகளையும், வசதிகளையும், செல்வத்தையும் ஒரு சிலர் தங்களுடைய கையிலே தேக்கி வைத்துக் கொண்டு அதனால் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் வாழக்கூடாத நிலைமையிலே இருக்கக்கூடாது என்பதற்காகத்தானே இதை எல்லாம் செய்கிறோம்.

Natural resources, national resources and national income should be distributed equitably.

எல்லோருக்கும் அந்த நீதி கிடைக்கின்ற வகையிலே, வாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே, வசதி கிடைக்கின்ற வகையிலே அவை மாற்றப்படவேண்டும், பங்கீடு செய்யவேண்டும் என்கின்ற அடிப்படையிலே தான் சோஷலிச சமதர்மமும் பொது உடைமைத் தத்துவமும் இருக்கிறதே தவிர, இந்தப் பணக்காரர்கள் ஒழிக்கப்படவேண்டும் என்ற நிலைமையிலே நாம் பிரச்சினையை அணுகக் கூடாது என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்தில் உள்ள நெளிவு, சுளுவுகள் எல்லாம் என்ன என்ன என்கிற பிரச்சினையை விவாதத்திற்கு நான் எடுத்துக்கொள்ளத் தயாராய் இல்லை. இதன் அடிப்படைத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டாலும் இதில் உள்ள பல அம்சங்கள் நன்றாக ஆராயப்படவேண்டியவைகளாக இருக்கின்றன. இதை அப்படியே நிறைவேற்றுவது பற்றி ஆட்சேபணையில்லை. எங்களைப் போன்ற வக்கீல்களுக்கு இப்படிச் செய்வதுதான் நல்லதாக இருக்கும். ஆனால் அரசாங்கம் ஒரு முக்கிய பிரச்சினைபற்றி சட்டம் கொண்டுவருகிறபோது அந்தச் சட்டத்தில் உள்ள பிரச்சினைகள்பற்றி எல்லாம் நுணுக்கமாக ஆராயப்படவேண்டும். ஆகவே இதில் உள்ள பிரச்சினைகளை எல்லாம் ஆராய்ந்து நல்லதொரு முடிவெடுக்க

இந்த மசோதா கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பப்படவேண்டும் என்கிற வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பரந்தாமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொருளாதாரம் ஒரேயிடத்தில் குவிந்துவிட்டது என்கிற குற்றச்சாட்டு இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்து வருகிற மாபெரும் குற்றச்சாட்டாகும். இதற்கெல்லாம் காரணம் யார்? தமிழ்நாட்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரிடத்தில் செல்வம் குவித்துவிட்டதற்கு யார் காரணம்? இதைப் பார்க்கிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்தில் அமர்வதற்கு முன்னால் நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் பொருளாதாரம் நாட்டில் உள்ள எல்லா மக்களிடத்திலும் பகிர்ந்திருக்கக்கூடிய திட்டங்கள் எதையும் போடாததுதான் என்கிற குற்றச்சாட்டை யாரும் மறுக்க முடியாது. இந்தக் குறைபாட்டைப் போக்குகின்ற முயற்சியிலேதான் டாக்டர் கலைஞர் அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தச் சட்டத்தை இந்தப்பேரவையில் கொண்டுவந்திருக்கிறார்கள். இதைப் பாராட்டி வரவேற்க நாம் எல்லாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் பஸ் சொந்தக்காரர்கள் யாராக இருக்கிறார்கள் என்பதை ஆராயவேண்டும். பஸ் முதலாளிகள் தான் ஆலை அரசர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். சினிமாத் தியேட்டர்களின் அதிபர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். பல கடைகளைத் தமிழ்நாட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஒருசிலரிடத்தில்தான் தமிழ்நாட்டின் பொருளாதாரம் குவிந்துகிடக்கிறது என்பதை உணர்ந்து இதைப் போக்குகின்ற முறையில் தான் தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பஸ்களை எல்லாம் தேசியமாக்க வேண்டுமென்று பலர் இங்கேயே பேசியிருக்கிறார்கள். மராட்டிய மாநிலம், குஜராத் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் 90 சதவீதமே தேசியமாக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் பல மாநிலங்களில் இல்லாத அளவுக்கு தமிழகத்தில்தான் நூற்றுக்கு நூறு தேசியமாக்கப்பட்டிருக்கிற பணியை நமது அரசு வெற்றிகரமாகச் செயல் படுத்தியிருக்கிறது என்கிற போது நாம் இதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட பாராட்டத்தக்க செயலுக்கு பொதுவுடைமைத் தத்துவத்தைப் பேசுகின்றவர்களிடம் இருந்து எதிர்ப்பு வருவதுதான் வியப்பாக இருக்கிறது. அரசாங்கம்



ஒரு பக்கம் பஸ்களை விட்டுக்கொண்டிருக்கிறபோது, தனியார்களையும் மற்றொரு பக்கம் பஸ்களை விட அனுமதிப்பது

There will definitely be pilferage and to avoid the pilferage, this is the only method and that is to nationalise completely. இந்த அடிப்படையில்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக்கொண்டு வந்தார்கள். மத்தியில் இதற்கு விரிவான சட்டம் இல்லை. மாநிலங்களிலும் வேறு எங்கும் விரிவான சட்டம் இல்லை. இந்த நிலையில்தான் நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இது மிகமிகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

கடைசியாக தொழிலாளர்களைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். தனியார் பஸ்களை தேசியமயமாக்குகிறபோது தனியார் பஸ்களில் பணியாற்றி வருகிற ஊழியர்களையும் அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக்கொள்கிற வகையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். தனியார் பஸ்களில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களையும் பணியில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற எனது தாழ்மையான கருத்தைத் தெரிவித்து வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. மணலி. சி. கந்தசாமி: தலைவரவர்களே, எல்லா பஸ்களையும் தேசிய மாக்கும் இந்தச் சட்டத்தைப்பற்றி எனது சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

இந்த கால கட்டத்தில் தேசியமாக்குவது என்பது நாட்டுக்கு நல்லது என்பதை யாரும் மறுக்க முடியாது. நிச்சயமாக இந்தக் கொள்கையை யாரும் மறுக்கவும் மாட்டார்கள். இதுபோல பஸ்களை எல்லாம் உடனடியாக தேசிய மாக்கிவிடுவதுதான் சோஷலிசம் என்பதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. பொருளாதாரம் குவிந்திருக்கிற பல முக்கியமான இடங்கள் தமிழ்நாட்டில் வேறு இல்லையா? அவற்றை எல்லாம் எடுத்துக்கொள்கிற முயற்சி தோன்றியதா? அவற்றை எல்லாம் எடுத்த பிறகு இதற்கும் வந்திருக்கிறோம் என்றால் இது வரவேற்கக்கூடியதாகவே இருக்கும். எப்படியோ இந்தச் சட்டம் வந்துவிட்டது, ஆளும் கட்சியினர்களின் பார்வை இந்தப் பக்கம் விழுந்துவிட்டது. இதைக் கொண்டுவரத்தான் போகிறார்கள். ஆயினும் இதுபற்றி சில அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே சொல்வது என்னவென்றால், அவசரச் சட்டம் கொண்டு வந்தார்கள். இப்பொழுது சட்டம் வந்திருக்கிறது. இதை 5 வருஷத்திலே எடுப்போம்

என்று சொல்வதிலே அர்த்தம் இல்லை. அது பல்வேறு விதமான சந்தேகங்களை ஏற்படுத்தும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நீங்கள் படிப்படியாக, ஜில்லாவாரியாக எடுப்பதற்குப் பதிலாக நான் ஒரு ஆலோசனை கூறுகிறேன். ஆலோசனையை யோசித்துப் பாருங்கள். அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று சொல்லவில்லை. நீங்கள் ஏற்கனவே முடிவெடுத்துவிட்டீர்கள். முதலில் 5 பஸ்ஸுக்கு மேல் 10 பஸ் வைத்திருப்பதை எடுத்துக்கொள்ளுங்கள். முதல் ஆண்டு எடுங்கள். அதற்கு பிறகு 3-க்கு மேல் 5-க்குள் வைத்திருப்பதை எடுங்கள். பிறகு 2 பஸ், பிறகு 1 பஸ் என்று எடுத்தால் உள்ளபடியே உங்களைப்பற்றி பலபேர் அவதூறு கூறுவதற்கு இடம் இருக்காது. அது சிறு பஸ்காரர்களுக்கு நியாயம் வழங்குவதற்கு உதவியாக இருக்கும். இதை நீங்கள் ஒத்துக்கொண்டால் தான்உண்டு. நான் ஒன்றும் வற்புறுத்த முடியாது.

முதல் ஆண்டிலே 10-லிருந்து 7 பஸ் வைத்திருப்பவர்கள், அடுத்தது, 7-லிருந்து 5 பஸ் வைத்திருப்பவர்கள். அடுத்தது 5-லிருந்து 3 பஸ் வைத்திருப்பவர்கள். அடுத்தது, 2, அடுத்தது 1 என்று வைத்தால் நலமாக இருக்கும். ஜில்லாவாரியாக என்று சொன்னால், எங்களுடைய ஜில்லாவிற்கு எந்த வருஷம் என்று தெரியவில்லை. எம்.எல். ஏக்களை பிராணனை வாங்கிவிடுவார்கள், 5-வது வருஷம் எடுக்கச் சொல்லுங்கள் என்று. நாங்கள் உங்களிடம் காவடி எடுத்துக் கொண்டு வரவேண்டும். அப்பொழுதுதான் நீதி அடிப்படையிலே, நியாய அடிப்படையிலே நீங்கள் பஸ் முதலாளிகளைப் பார்ப்பவர்கள் ஆவீர்கள். அந்த அடிப்படையிலே எடுப்பது தான் நியாயம். பஸ்ஸை எடுப்பது தவறில்லை. அதேபோல எல்லா லாரிகளையும் எடுத்திருக்கலாம். லாரிகளை ஏன் எடுக்கக் கூடாது.? சட்டம்தான் கொண்டு வருகிறீர்கள், தெளிவாகக் கொண்டு வாருங்கள். போக்குவரத்துத் துறை பூராவையும் சர்க்கார் எடுக்கிறது என்று சொன்னால் இன்னும் மகிழ்ச்சியாக நான் வரவேற்கிறேன். 'பப்ளிக் யுட்டிலிட்டி சர்வீஸ்' என்ற முறையிலே அனைத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும். நான் ஏற்கனவே சொன்னபடி, முதலிலே 10 பஸ், பிறகு 7 பஸ், பிறகு 5 பஸ், பிறகு 3 பஸ், என்று வைத்திருக்கக்கூடிய நிறுவனங்களிடமிருந்து எடுத்துக்கொண்டால், உங்கள் மீது குற்றம் கூறுவதற்கு வழி இருக்காது.

அடுத்து, டி.வி.எஸ்ஸுக்கு, ஏ.பி.டி.-க்கு, ஸ்.ஆர்.வி. எஸ்ஸுக்கு எந்த அடிப்படையிலே காம்பன்சேஷன் கொடுத்தீர்களோ அந்த அடிப்படையிலே இவற்றிற்கும் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். 20%, 10% என்று . . . .





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு பெரியவர் மணலி அவர்கள் குறிப்பிட்டதைப்போல அதே அடிப்படையில்தான் இந்த ஷெடியூல் போடப்பட்டிருக்கிறது.

திரு. மணலி சி. கந்தசாமி : அந்தக் கம்பெனிகளிலும் பல பஸ்கள் வைத்திருந்தார்கள். அப்போதைக்கப்போது புதுப்பித்துக்கொண்டுதான் அதை ஓட்டிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு கொடுத்தீர்கள் போன்ற விவரங்களையெல்லாம் அவை மேஜை மேல் வைத்தால் எங்களுக்குக் கூட உதவிகரமாக இருக்கும்.

இன்றைக்கு நஷ்டஈடு கொடுக்கிறோம் என்று சொல்லி குழப்பத்திற்கு வழியில்லாத விதத்திலே நடவடிக்கை எடுக்கவேண்டும். நஷ்டஈட்டைக் குறைவாகக் கொடுத்து அவர்கள் வாழ வழியில்லாது செய்து விடாதீர்கள். எங்களுடைய தலைவர் சொல்கிற மாதிரி ஒரு பஸ் வைத்திருக்கிறவர்களுக்கு அதிக காம்பன்சேஷன், அதிக பஸ் வைத்திருப்பவர்களுக்குக் குறைந்த காம்பன்சேஷன் என்ற அளவிலே நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

அடுத்து, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அது பெரிய பிரச்சினையாக வரும். அதைச் சாதாரணமாக நினைக்காதீர்கள். இப்பொழுது தொழிலாளி என்ற வியாக்கியானத்திற்கு உட்படாத நிலையில் பலர் இருப்பதால் அது பெரிய பிரச்சினையாக வரும். அதன்காரணமாக அன்எம்பிளாய்மென்ட் அதிகரிக்கும், டிரைவர், கண்டக்டர் மாத்திரம் தொழிலாளி என்று நினைக்காதீர்கள். ஒரு பஸ்ஸை சுற்றி 20 பேர் இருப்பார்கள். தொழிலாளர் சட்டப்படி, அதனுடைய வியாக்கியானத்திற்குள் வராமல் அவர்கள் எல்லாம் இருப்பார்கள். ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்கனவே இருக்கிற இந்தக் காலத்தில் இது கட்டாயம் அதிகம் ஆகக் கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, அதைப்பற்றி ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு அதே போல், அந்தக் கம்பெனிகள் வைத்திருக்கக் கூடிய ஒர்க் ஷாப்புகளையும், அவர்கள் வைத்திருக்கக் கூடிய டையர் டிரேடிங் போன்றவற்றையும் அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகளை வைத்து அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், ஏற்கனவே ஏ.பி.டி., டி.வி.எஸ். போன்ற பெரிய பஸ் முதலாளிகளிடமிருந்தும் அந்த ஒர்க்ஷாப்புகளை, எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பெரிய முதலாளிகளாக ஆகக்கூடிய வாய்ப்புகள் இருக்கும்.

ஆகவே இன்று எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளுங்கள். படிப்படியாக, ஒவ்வொரு பஸ் வைத்திருப்பவர்கள் கடைசியிலே வரக்கூடிய முறையில் இதைச் செய்வது, மிகவும் நிதானமாகச் செய்வது, அதற்கு நீங்கள் முன்வரவேண்டும். அப்படி வந்தால் சந்தேகத்திற்கு இடமிருக்காது.

நீங்கள் நியாயமாகச் செய்யலாம். இருந்தாலும் அரசியல் உலகத்திலே பல்வேறு கட்சிகள் இவற்றைப்பற்றியெல்லாம் வியாக்கியானம் செய்வதற்கு நீங்களே இடம் கொடுத்து விடாதீர்கள் என்று கூற விரும்புகிறேன். சட்டத்திலே தெளிவாகச் செய்யுங்கள் என்ற அடிப்படையிலே சொல்கிறேன். எங்கள் கட்சி இதைப் பரிபூரணமாக ஆதரிக்கிறது. இப்படி, நான் கூறியமுறையில் இவையெல்லாம் வலுப்படுத்தப்பட்டால் இன்னும் வலிவாக இருக்கும்.

இந்த மசோதாவோடு நின்று விடாமல் இன்னும் பல்வேறு துறைகளிலே தமிழ் நாட்டினுடைய வாழ்வைக் கவ்விக்கொண்டு வருகிற துறைகளிலேயும் தேசியமயத்தைப் புகுத்துங்கள். நீங்கள் அப்படிச் செய்யாவிட்டால், நாங்களே அந்த மாதிரி மசோதாக்களைத் தயார் செய்து கொண்டு வரப்போகிறோம் என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று சபையின் முன்பு விவாதிக்கப்படுகின்ற பஸ் தேசியமயமாக்கப்படுகிற மசோதாவை பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று இந்த மசோதாவைப் பற்றிக் கூறும்போது இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இவ்வளவு துணிச்சலாகக் கொண்டு வராத நிலையில், நம்முடைய மாநிலத்தில் குறிப்பாக இன்றைய அரசியலில் நெருக்கடியான கட்டத்தில் இருந்துகொண்டிருக்கிற ஆட்சியாளர்கள் மீது, பயங்கரமான குற்றச்சாட்டுகளை, உண்மையல்லாத போதிலும்கூட, அவைகளை வைத்து, இவ்வளவு நெருக்கடியைக் கொடுக்க வேண்டுமென்ற அளவுக்கு அரசியல் கட்சிகள் எல்லாம் சதி செய்து கொண்டிருக்கிற நேரத்தில், எதையும் துச்சமென மதித்து மக்களுடைய நலனே தங்களுடைய திட்டமாக இருக்கவேண்டுமென்று நினைத்து இந்த நல்ல ஒரு திட்டத்தை சோஷலிச நோக்கோடு கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தை வரவேற்கிற நேரத்தில் தமிழக அரசை நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று பல பேர்கள் பாராட்டினார்கள். சிலர், நமது அரசியல் பெரியவர் மணலி அவர்கள் உட்பட, உள்நோக்கு இருப்பதற்கு இடம் அளிக்கக் கூடாது, சந்தேகமற்ற முறையில் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். சிக்கலான



நிலையை நீக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு அவருடைய கருத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய அரசியல் சூழ்நிலையில், தமிழகத்தைப் பொறுத்த அளவில், சோஷலிசத் திட்டத்தை, ஏன் இன்றைய அகில இந்திய ரீதியிலே பார்க்கும்பொழுது, இந்திரா காங்கிரஸ் ஆளுகிற மாநிலத்தில்கூட இந்தத் திட்டத்தைக் கொண்டுவரவில்லை. நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள்கூட ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய கட்சி ஆதரவோடு நடந்துகிற மாநிலங்களில்கூட, இப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டுவராத நிலையில் இங்கே கலைஞரது அரசு இருக்கிறது என்று நான் சொல்கிறேன்.

* * * *

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அதைப்பற்றிப் பேச வேண்டாம். ஏற்கனவே அதைப்பற்றிப் பேசவேண்டாமென்று சொல்லிவிட்டோம். திருப்பி அதை ரிப்பீட் பண்ணவேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட ஆணையிடுகிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** இதை நான் சொல்வதற்குக் காரணம் நல்ல திட்டங்கள் வருகிறபொழுது, எதிரிகளிடம் இருக்கிற நல்ல பண்புகளைப் பாராட்டுகிற அளவுக்கு, தமிழன் வாழ்ந்தான் என்ற அளவோடு வாழவேண்டுமென்பதற்காகத்தான். அரசியல் காரணங்களுக்காக, நல்லபல திட்டங்களாக இருந்தாலும், எதிர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக எதிர்ப்பது, மிஸ்லீட் செய்வதாக ஆகும் என்ற காரணத்திற்காக நான் குறிப்பிடுகிறேன். அரசு சில தவறுகளைச் செய்தால் அதைக் கண்டிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அப்பொழுதுதான் உண்மையான ஜனநாயக மாபுகளை நாம் பாதுகாக்க முடியும். அதே நேரத்தில் நல்ல திட்டங்களை நாம் பாராட்டினால்தான், நல்ல திட்டங்கள் என்று அவர்கள் பாராட்டுகிறார்கள், ஆகவே இன்னும் செய்ய வேண்டும், நமக்கு ஆதரவு இருக்கிறது என்று ஆட்சிப் பீடத்தில் இருக்கிறவர்களுக்கு உற்சாகம் இருக்கும் என்ற நிலையை வற்புறுத்தி அடுத்த கருத்துக்குச் செல்ல விரும்புகிறேன். இப்பொழுது எல்லாவற்றையும் தேசியமயமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். எனது கட்சியின் சார்பாக, லாரி எங்கெங்கு அதிகமாக வைத்திருக்கிறார்களோ, அவைகளைக்கூட தேசியமயமாக்கவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. ஜெ. ஜேம்ஸ்] [1973 பிப்ரவரி 13

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேருந்துகளை நாட்டுடைமையாக்கியபொழுது பணியாற்றிய தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் தொழில் வாய்ப்பு, வேலைவாய்ப்புக் கொடுக்கவில்லை. இப்பொழுது வந்திருக்கின்ற மசோதாவால் கிட்டத்தட்ட 6 லட்சம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்படுவார்கள். 6 லட்சம் பேர்களுக்கு மாற்று வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். ஏற்கனவே கண்டக்டர்கள், டிரைவர்கள், க்ளீனர்கள் ஆக இருக்கிறவர்களைத்தவிர அதையொட்டி இணைந்த தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இந்தச் சட்டம் வருவதால் அந்தத் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு இந்தச் சட்டத்தில் ஏற்பாடு இருக்கவேண்டும். இன்றைக்கிருக்கிற நேல்ஸ்படி தனியார் துறையிலே இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் அரசாங்கத்தில் தொழில் கொடுப்பதற்கு வழியில்லை. சட்டம் குறுக்கே வந்துசேரும். அந்த நிலையிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். இந்த இக்கட்டான நிலையை மாற்றுவதற்கு எத்தனை தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுவார்களோ அத்தனை பேர்களுக்கு மாற்றுத் தொழில் அவரவர்கள் கல்வி, திறமை இவற்றிற்கேற்றாற்போல் கொடுக்கவேண்டுமென்ற முறையில் இதிலே வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காம்பன்சேஷனைப் பொறுத்தவரையில் ஒரு பஸ் வைத்துக்கொண்டிருக்கின்றவர்களுக்கு ஒரு ஆண்டு கழிந்துதான் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு பஸ்ஸை வைத்துக்கொண்டு தனது ஜீவனத்தைக் கழித்துக்கொண்டு இருக்கிற, பஸ் தொழிலை விட்டுவிட்டால் அவர் இன்னொரு தொழிலை ஏற்றுக்கொள்வதற்கு அந்த ஒரு ஆண்டுக்காலத்தில் அவன் முதலுக்கு எங்கே போவான்? ஒரு பஸ்ஸை வைத்துக்கொண்டு இருப்பவன், மார்வாடியிடம் கடன் வாங்கியிருப்பான் அல்லது தனியாரிடம் ரேகையில்லாமல் கடன் கேட்டிருப்பான். இந்த நிலைமையிலே அவன் மாற்றுத் தொழிலைத் துவங்குவதற்கு முதலுக்கு எங்கே போவான்? ஆகவே ஒரு வருட காலம் என்று தள்ளிப் போடாமல் ஒரு பஸ், 2 பஸ்கள் வைத்திருக்கின்றவர்களுக்கு நஷ்ட ஈட்டை உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே நாம் நாட்டுடைமையாக்கிய பஸ்களைப் பொறுத்தவரையில் நிர்வாகம் எவ்வளவு சீர்கேடான நிலைமையிலே நடைபெறுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு ஒரு டிவிஷனிலே



1973 பிப்ரவரி 13] [திரு. ஜெ. ஜேம்ஸ்]

100 பஸ்கள் இருக்கின்றன என்றால் அதிலே 50 பஸ்கள் நல்லமுறையிலே ஓடுவ
தில்லை, ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாத காரணம், இன்னும் பல காரணங்கள் இருப்
பதால் 100-க்கு 50 பஸ்கள் ஒர்க்ஷாப்பில் அடைக்கப்பட்டிருக்கின்றன. இதனால்
பயணிகளுக்கு வசதிக்குறைவுகள் ஏற்படுகின்றன, பல்வேறு நஷ்டங்கள்
ஏற்படுகின்றன. அதையெல்லாம் இப்பொழுது நான் கூறுவதற்கில்லை.
இப்பொழுது இருக்கிற நிர்வாகமே சரியில்லையென்றால் அத்துணை பஸ்களையும்
நாட்டுடைமையாக்கிவிட்டபிறகு நிர்வாகம் எப்படியிருக்குமோ என்ற ஐயப்பாடு
இருக்கிறது. நிர்வாகத்தைச் சீராக்குகின்ற பொறுப்பு அமைச்சருக்கு இருக்
கிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதற்கு
என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பது இந்த மசோதாவில் இல்லை.
எக்ஸ்-சர்விஸ்மென் பஸ்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்கு
எல்லாம் என்ன ஏற்பாடு இதிலே செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள்
கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இன்று ஊர்திகளைக்
கையகப்படுத்தும் மசோதாவிலே ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்
படுகிறேன்.

நான் முன்னாலே சட்டசபையிலே பேசும்பொழுது 10 பஸ்களுக்கு மேலே
இல்லாத முறையில் உச்சவரம்பு வையுங்கள் என்று சொன்னேன். அன்றைக்கு
அதை ஒத்துக்கொள்ளாதவர்கள் இன்றைக்கு பத்து பஸ்களுக்குக் குறைந்த
அளவிலே வைத்திருக்கின்றவர்களையும் பெரிய முதலாளிகள் என்று கருதி
இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த
திரு. மணலி கந்தசாமி அவர்கள் சொன்னது மாதிரி இதைவிடப் பெரிய பணக்
காரர்கள், திமிங்கலங்கள் உங்கள் கண்ணுக்கு இன்னும் படாமலே இருப்பதைப்
பார்த்தால்—தனிக் காரணம் என்னவோ தெரியவில்லை—இதிலே மட்டும் தேசிய
மயமாக்குவதில் இவ்வளவு அக்கறை ஏன் காட்டுகிறீர்கள் என்பதும் புரிய
வில்லை.

ஒரு பஸ் இருந்தாலும் அதையும் கையகப்படுத்த வேண்டுமென்று சொல்
வதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், இந்தச் சட்டம் போட்டப்
பட்டிருப்பதையெல்லாம் பார்த்தால் உங்கள் உள்ளக் கிடக்கையைப் புரிந்து
கொள்ள முடிகிறது. ஐந்து ஆண்டுகளுக்குள் எல்லாவற்றையும் தேசியமய
மாக்கிவிடுவோம் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு அவசரம் அவசரமாக

[திரு. கே. கந்தசாமி] [1973 பிப்ரவரி 13

அது மட்டுமல்ல, இன்றைக்கு எல்லா பஸ்களும் பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன், பல்லவா கார்ப்பரேஷன் போன்ற கார்ப்பரேஷன்கள் மூலமாக எடுக்கப்பட்டிருந்தாலும், பல பேருந்துகள் ஓர்க்ஷாப்புகள் இல்லாத நிலையில், ரிப்பேர் ஆகாமல், பாழடைந்து, சீர் செய்யப்படாத நிலையில், ரிப்பேர் செய்யப் படாத நிலையில் இருப்பதை, வேலைக்கு, பயனுக்கு உகந்ததாக இல்லாமல் இருப்பதை நான் காணுகிறேன். ஆகவே ஓர்க்ஷாப்புகளையும் உடனடியாகத் தேசியமயமாக்கவேண்டும். அப்படிச் செய்வதன்மூலமாக, இந்தக் கம்பெனி களைத் திறம்பட நடத்தி, மக்களுக்குச் சேவை செய்யும் ஸ்தாபனமாக அவற் றைப் பயன்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் சினிமாப்பட தொழிலையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்து அரசுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, பஸ்களை நாட்டுடைமை ஆக்குகின்ற இந்த மசோதாவை கொள்கை அளவில் நான் வரவேற்று எனது சில கருத்துக் களை கூறவிரும்புகிறேன்.

குறிப்பாக சிறு பஸ் வைத்திருப்பவர்களைப்பற்றி இங்கே கூறினார்கள். இந்த மசோதாவில் பாதிக்கப்படக்கூடியவர்கள் மொத்தம் 1300 என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதில் ஒரு பஸ் வைத்திருக்கின்றவர்கள் ஏறத்தாழ 300 பஸ் ஆப்பரேட்டர்கள் இருக்கிறார்கள். எனக்கு முன்னதாக உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. ஏ. எம். ராஜா அவர்கள் ஒரு பஸ்ஸை வைத்துக் கொண் டிருக்கிறவர்களுக்குக்கூட இன்றைக்கு ரூ. 20,000 ஆண்டு ஒன்றுக்கு வருவாய் இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு பஸ் வைத்திருந்தாலும்கூட அவரையும் நாம் பஸ் முதலாளி என்று அழைக்கக்கூடிய துர்ப்பாக்கியமான சூழ்நிலையில்
ந. ப. இருக்கிறோம் என்பதைப் பார்க்கிறோம். சாமானியரான நம்முடைய
12-00 முதலமைச்சர் ஆட்சியிலே ஒரு பஸ் வைத்திருக்கிறவர்கள் எல்லாம் முதலா ளிகள் என்றால் தமிழ்நாட்டிலே ஆண்டொன்றுக்கு லட்சக்கணக்கில் வருவாய் பெறுகின்ற சினிமா நடிகர்கள், பட முதலாளிகள், பஞ்சாலை அதிபர்கள், தோட்ட உரிமையாளர்கள், சர்க்கரை ஆலை முதலாளிகள் இவர்கள் எல்லாம் முதலாளிகள் அல்ல என்பது அவர்களுடைய கருத்தா? ஒரு பஸ் வைத்திருக் கிறவரையே முதலாளி என்று கூறுகிற அரசாங்கம் நான் ஏற்கனவே கூறிய அந்தப் பட்டியலிலே இருக்கிறவர்களை என்ன பெயரிட்டு அழைப்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.



1973 பிப்ரவரி 13] [திரு. ஜே. ஜேம்ஸ்]

சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண் டிருக்கின்ற அரசாங்கம் முதற் கட்டமாக ஏன் அவர்களிடத்தில் போகவில்லை என்று கேட்க விரும்புகிறேன். நாட்டுடமைத் திட்டத்தை நாங்கள் வரவேற் கிறோம். அமைச்சர் அவர்கள், இதுவரையிலே அதை அமல் செய்யாததற்கு தலைவர் காமராஜுக்கு நன்றி கூறுகிறேன் என்று சொன்னாலும்கூட அந்தத் திட்டத்தை ஆரம்பித்தது காங்கிரஸ் ஆட்சிதான் என்பதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் ஆட்சி தொடங்கிய திட்டத்தை நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்களேதவிர சமுதாய சமத்துவத்திற்கு அடிப் படையான திட்டம் எதையும் இந்த ஆட்சி செய்யவில்லை என்பதை மாண்பு மிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் இந்த நேரத்திலே கொண்டு வர விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்திலே ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த எந்த மாவட்டங்களிலே எத்தனை பேருந்துத் தடங்கள் இருக்கின்றன, எத்தனை பஸ்களை நாட்டுடைமையாக்கப் போகிறோம் என்ற பட்டியல் எல்லாம் இருக்கிறது. எந்த எந்த மாவட்டங்களிலே இருக்கின்ற பஸ்களை நாட்டுடைமையாக்கப் போகிறோம் என்ற ஒரு முறை இந்த மசோதாவிலே வகைசெய்யப்படவில்லை. நான் கூறுவதெல்லாம், திரு. மணலி கந்தசாமி அவர்கள் கூறியதைப்போல, ஒரு அடிப்படையைக் கையாண்டால்தான் நலமாக இருக்கும். ஒரு பத்து பஸ்கள் வரையிலும் முதலாவதாக நாட்டுடைமையாக்கவேண்டும், அடுத்ததாக 7, பிறகு படிப்படியாகக் குறைந்துகொண்டுவந்து 1, 2 என்ற வரிசையில் நாட்டுடமை யாக்கினால் நல்லது என்றும் அப்படிச் செய்வதால்தான் ஊழல் புகார்களுக்கு வழியிருக்காது என்றும் சொன்னார்கள். உண்மையிலேயே நான் அந்தக் கருத்தை வரவேற்கிறேன்.

ஒருவேளை அவர்கள் சொல்லிய அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள அரசாங் கத்திற்கு வழியில்லை என்று சொன்னால் அதற்கான ஒரு மாற்றுக் கருத்தை நான் சொல்கிறேன். இந்தச் சட்டத்திலே முதலாவதாக என்ன மாவட்டம், அடுத்து என்ன மாவட்டம் என்ற முறையிலே வரிசைப்படுத்தி நாட்டுடமையாக்க வேண்டுமென்ற வழிவகை இந்தச் சட்டத்திலே இடம் பெறவேண்டும். ஏற்கனவே நாட்டுடமைத் தத்துவத்தை அமல்படுத்துவதற்காக முதன்முதலாக கன்னியாகுமரி மாவட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதையொட்டி இருக்கிற நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொள்ளலாம். அதையொட்டி இருக்கிற இராம நாதபுரம் மாவட்டத்தைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்ற இப்படிப்பட்ட முறையைக் கையாண்டால் ஊழல் புகார்களுக்கு இடம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 பிப்ரவரி 13

கொண்டுவந்தீர்கள். ஐந்து வருடம் கேட்டிருந்தீர்கள். மாவட்டம் மாவட்ட மாக எடுக்கப்போகிறோம். பொறுக்குக் குலுக்கு வேறு போகக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் அவசரச் சட்டம்போட்டு இதுதான் பொங்கல் பரிசு என்று கொண்டுவந்ததின் அர்த்தமே புரியவில்லை. ஏதோ அவசரச் சட்டம் போட்டு ரொம்பத் தீவிரமாக வேலைசெய்து விட்டோம் என்று மக்களை ஏமாற்றுவதற்காகத்தான் இதைச் செய்து இருக்கிறார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. நாளை காலைக்குள், ஓடுகின்ற அத்தனை பஸ்களும், சுமார் எண்ணாயிரத்தைச் சொச்சம் பஸ்களும் எடுக்கப்படும், 14-ஆம் தேதி யிலிருந்து தனி நபர் பஸ் ஓட்ட மாட்டார் என்று சொல்லுமளவில் சட்டத் தைக் கொண்டுவந்திருந்தால் அதில் பொருள் இருக்கும். ஐந்து வருஷங்களில் படிப்படியாக எடுப்பதற்கு அவசரச் சட்டம் என்று கொண்டுவந்தால் என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை. நீலகிரிக்காரன் மட்டும் என்ன தவறு செய்தானோ தெரியவில்லை. அவன்மீது என்ன கோபமோ? பொங்கல் பரிசு என்று சொன்னார்கள். அடுத்த மாவட்டத்திற்கு எப்பொழுது வருமோ? இதையெல்லாம் யோசிக்கக் காத்திருக்கிறோம். ஏனென்றால் இது அவசரச் சட்டம் என்று போட்டு, பொங்கல் பரிசு என்று விளம்பரத்திற்காக வந்த சட்டமாக இருக்கிறதேதவிர சமதர்மத்தை உள்ளடக்கியதாக, நாளைக்கே அத்தனை பஸ்களையும் எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னால் அதில் அர்த்தம் இருக்க முடியும். அப்படிச் செய்து அதற்காக விளம்பரம் தேடினால் நன்றாக இருக்கும். ஐந்து வருஷங்களில் படிப்படியாக ஆக்குவதற்கு ஏன் இந்த அவசரச் சட்டம் என்று புரியவில்லை.

அடுத்தபடியாக, எடுத்துக்கொள்ளக்கூடிய முறையைப் பார்க்கலாம். சின்ன ஜில்லாவிலிருந்து பெரிய ஜில்லாவிற்கு வரப்போகிறார்கள். அதுதான் சமதர்ம அடிப்படையில் வரக்கூடிய சட்டமா? பெரிய முதலாளிகளிடமிருந்து சிறிய முதலாளிகளுக்கு வருகிறோம் என்று சொன்னால் அதை சமதர்மத்தின் அடிப் படையில் செய்வதாகச் சொல்லலாம். அவசரச் சட்டம் போடுவது, ஏதாவது ஒரு வழியில் ஆரம்பிக்க வேண்டுமென்று நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பித்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் முடியும் என்று சொன்னால் அது ஏதோ கணக்குப்போடக்கூடிய மாணவன் போடுவது மாதிரி இருக்கிறதேதவிர சமதர்மக் கொள்கையைப் பற்றி யோசித்துக் கொண்டு வந்திருக்கிறார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இந்த பஸ்களைக் கையகப்படுத்தும் பொழுது பணக்காரர்களுக்கு எவ்வளவு சலுகைகளைத் தந்திருக்கிறார்கள், சிறிய முதலாளிகளுக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். இந்த பஸ்களைக் கையகப்படுத்தும்பொழுது 50 பஸ்களுக்கு மேல் வைத்திருந்தால்



1973 பிப்ரவரி 13] [திருமதி த. ந. அனந்தநாயகி]

என்ன, ஒரு பஸ் வைத்திருந்தால் என்ன, அத்தனை பஸ்களுக்கும் ஒரே சட்ட மாகக் கொண்டுவந்து கையகப்படுத்தியிருக்கலாமே. 50 பஸ்களுக்குமேல் உள்ள பஸ் முதலாளிகளுக்குச் சாதகமான சட்டத்தை 1971-லே கொண்டுவந்துவிட்டு, 1 பஸ், 2 பஸ்காரர்களுக்கு, இல்லாத சட்டத்தையெல்லாம் போட்டு இன்றைக்குக் கொண்டு வருவதைப் பார்க்கும்பொழுது நீங்கள் எவ்வளவு தீவிர மான சமதர்மவாதிகள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. சட்டசபையில் வேண்டுமானால் எண்ணிக்கையை வைத்து நாங்கள்தான் சமதர்மவாதிகள் என்று சொல்லலாம். 1971-ஆம் ஆண்டில் 50 பஸ்களுக்கு மேல் வைத்திருப் பதைக் கையகப்படுத்த வேண்டுமென்ற சட்டத்தைக்கொண்டு வந்து சலுகை களைக் கொடுத்திருக்கிறார்கள். எடுக்கப்படும் பஸ்களுக்கு மார்க்கெட் வேல்யூ என்று கொடுத்து இருக்கிறார்களே, அப்படி ஏன் இவர்களுக்குப் போடவில்லை. நேற்றுகூட முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், டி.வி.எஸ்.-க்கு 125 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு, எ.பி.டி.-க்கு 67 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு என்றெல்லாம் சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு பெரிய பெரிய பணக்காரருக்கும் 125 இலட்சம், 67 இலட்சம் என்று கொடுத்துவிட்டு, அவர்கள் மறுவாழ்வு பெறும் முறையில் அரசாங்கத்தின் பணத்தைக் கொடுத்துவிட்டு, அங்கேயிருக்கும் 1 பஸ், 2 பஸ்காரர்களுக்கு 10,000 ரூபாய் கேஷ் கொடுப்பது என்றால் அது நியாயமா? பெரிய முதலாளிகளுக்கு இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்துவிட்டு, சாதாரண சிறிய முதலாளிகளுக்கு 1 பஸ், 2 பஸ் வைத்திருப் பவர்களுக்கு, In one lumpsum, not more than Rs. 10,000 will be paid என்றால் அங்கே இலட்சக்கணக்கான ரூபாய்களில் பணக்காரர்களுக்கு மறுவாழ்வு, இங்கே சிறு பஸ் முதலாளிகளுக்கு 10,000 ரூபாய் கேஷ் கொடுப்பது என்றால் எவ்வளவு சமதர்மம்? இதை மக்கள் வெளியே புரிந்து கொண்டிருக்கிறார்கள். பெரும் பெரும் முதலாளிகளுக்கு ஒரு சமதர்மம், சிறுசிறு முதலாளிகளுக்கு ஒரு சமதர்மமா? (மணியடிக்கப்பட்டது) இன்னும் டைம் கொடுங்கள். நிறைய பாயிண்ட்ஸ் இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி)**: பஸ் முதலாளிகளும் டைம் கேட்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: நீங்கள் போட்டிருக்கும் சட்டத்திலே 10 வருஷங்களுக்கு மேல் உள்ள பஸ்களாக இருந்தால் 7 சதவிகிதம், 3 சத விகிதம், 5 சதவிகிதம் என்றெல்லாம் கணக்குப் போட்டிருக்கிறீர்கள். 1962-ஆம் ஆண்டு மாடலாகக் கூட இருக்கலாம். ஆனால் அதன் 'ரன்னிங் கண்டிஷனை'ப் பார்க்கவேண்டும். அவைகளுக்குப் புதிய டயர்கள்போட்டு, எல்லாவிதமான உறுப்புகளையும் பழுதுபார்த்து நல்லமுறையில் வைத்திருக்கலாம். ஆகவே

இன்றைக்கிருக்கக்கூடிய ரன்னிங் கண்டிஷனைப் பார்த்து மார்க்கெட் வேல்யூ போட்டு பணம் கொடுக்கவேண்டும். அதைவிட்டு 60-லே யிருந்து ஆரம்பித்து நஷ்ட ஈட்டைக் கணக்கிட்டுக் கொடுப்போம் என்று சொன்னால் அவர்களுக்கு 5,000 ரூபாய்கூடக் கிடைப்பது கஷ்டம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அவர்கள் அப்படி சிலபேர் செய்வதையும், பஸ்கள் வாங்கிப் போடுவதையும் அந்தந்த ஆண்டு வருமான வரிக் கணக்கில், வருவாய்ச் செலவிலே காண்பித்து வருமான வரியிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களும் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்களோ இல்லையோ. ஆனால் நீங்கள் பெரிய முதலாளிகளுக்கு இலட்சக்கணக்கில் ரூபாய்களைக் கொடுத்துவிட்டு, சிறிய முதலாளிகளுக்கு இப்படிச் செய்வது மாத்திரம் நியாயமா? இதுதான் சமதர்மம் என்று யாராவது ஏற்றுக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பெரிய முதலாளிகளுக்கு இலட்சக் கணக்கில் கொடுத்துவிட்டு சாதாரண சிறிய முதலாளிகளுக்குக் குறைவாகக் கொடுக்கலாமா என்று கேட்கிறார்கள். அதற்குக் காரணம், பெரிய முதலாளிகளிடத்தில் அதிக பஸ்கள் இருந்தன, சிறிய முதலாளிகளிடத்தில் அவ்வளவு பஸ்கள் இல்லை என்பது ஒன்று. இரண்டாவது, மார்க்கெட் வேல்யூ அந்தச் சட்டத்தில் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அப்பொழுது இந்திரா காங்கிரஸ் கட்சிக்குப் போனார்களோ என்னவோ தெரியவில்லை. அரசியல் சட்டம் 25-வது திருத்தம் அப்பொழுது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே மார்க்கெட் வேல்யூ என்று போடப்பட்டிருந்தது என்பதையும், ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது மார்க்கெட் வேல்யூவைவிடக் குறைவு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் அப்பொழுதே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். ஏன் இவ்வளவு அவசரம் அவசரமாகச் செய்ய வேண்டும், 25-வது திருத்தம் கொண்டு வந்து முடிந்ததற்குப் பிறகு கொடுக்கலாம் என்று சொன்னேன். ஆனால் அதைக் கேட்காமல் அவசரம் அவசரமாக மார்க்கெட் வேல்யூ என்று போட்டுக் கொடுத்துவிட்டு இதற்குச் சாக்கு வேறு சொல்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு எந்த அடிப்படையிலே



நஷ்ட ஈடு தரப்பட்டிருக்கிறதோ அதே அடிப்படையிலேதான் இந்தச் சட்டத்திலேயும் அதற்கான ஷெட்யூல்கள் போடப்பட்டிருக்கின்றன. டி.வி.எஸ்., ஏ.பி.டி., இராமன் அண்ட் இராமன் அவர்களுக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறோமோ, அவர்கள் சாதாரணமான முதலாளிகளானாலும் சரி, பெரிய முதலாளிகளானாலும் சரி கவலையில்லை. அரசாங்கத்தின் பணத்தைக்கொண்டு பஸ்களை நாம் வாங்கி நடத்துகிறோம். அதில் பெரிய முதலாளி, சின்ன முதலாளி என்ற இந்த வித்தியாசம் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** போடப்பட்ட ஷெட்யூல் ஒன்று. பிறகு மார்க்கெட் வேல்யூ கொடுக்கப்பட்டது. இவர்களுக்கும் மார்க்கெட் வேல்யூ போடுங்கள். அப்படிக் கொடுத்தால் ஆட்சேபணை இல்லை. அவர்களுக்கு இலட்சம் இலட்சமாகக் கொடுத்து விட்டு இவர்களுக்கு ஏன் இப்படிச் செய்ய வேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, 125 இலட்சம் ரூபாய்க்கு வாங்கினார்கள், 67 இலட்சம் ரூபாய்க்கு வாங்கினார்கள் என்று சொல்லும்பொழுது அவர்கள் எத்தனை பஸ்கள் வைத்திருந்தார்கள் என்பதை அம்மையார் அவர்கள் குறிப்பிடுவதற்கு விட்டுவிடுகிறார்கள். ஏதோ ஒரு பஸ்ஸை எடுத்துக்கொண்டு டி.வி.எஸ்.ஸுக்கோ அல்லது ஏ.பி.டி.-க்கோ 120 லட்சம் அல்லது 67 லட்சம் கொடுத்து விட்டார்கள் என்று யாரும் தவறாக நினைக்கக்கூடும். டி.வி.எஸ்-இடமிருந்து எடுக்கப்பட்ட பஸ்கள் 300-க்கும் மேற்பட்டவை என்பதையும், ஏ.பி.டி.-யிடமிருந்து எடுக்கப்பட்ட பஸ்கள் 100-க்கும் மேற்பட்டவை என்பதையும் மறந்துவிடக்கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அது தெரியும். ஆனால் அங்கே கொடுக்கப்பட்ட காம்பன்சேஷன் வேறு. இங்கே கொடுக்கப்படும் காம்பன்சேஷன் வேறு என்பதைத் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நாங்கள் எங்களுடைய நிலையைத் தெளிவாக்க முடியாமைக்கு வருந்துகிறேன். டி.வி.எஸ். ஆனாலும் சரி, ஏ.பி.டி. ஆனாலும் சரி எந்தக் கம்பெனி என்று பார்ப்பதில்லை. அவர்களுடைய வண்டிகள் ஐந்தாண்டுகளுக்குள்ளாக இருந்தால் வண்டிக்கு மூன்றில் இரண்டு பங்கு 'அக்விசிஷன் காஸ்ட்' என்று கொடுத்திருக்கிறோம். அதற்குமேல் 6 ஆண்டு, 7 ஆண்டு, 8 ஆண்டு என்று 12 ஆண்டு வரையிலே உள்ள வண்டிகளுக்கு

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 பிப்ரவரி 13

'டெப்ரிஷியேட்டட் வேல்யூ' 3½ மடங்கு என்று சொல்லி அதைக் கொடுத்திருக்கிறோம். இதே அடிப்படையிலே இந்த ஷெட்யூலிலேயும் போட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தில் போடப்பட்ட ஷெட்யூல், எந்த விதத்தில் காம்பன்சேஷன் கொடுத்தோமோ அந்த விகிதத்தைத்தான் போட்டிருக்கிறோம். மார்க்கெட் வேல்யூ என்று சட்டத்திலேயிருந்தாலும் அவர்களுக்கு ஏராளமான தொகையைக் கொடுத்துவிட்டோம் என்று சொல்வது சரியல்ல. பஸ்களைப் பொறுத்த வரையில் இதற்கு முன் இருந்த சட்டமாக இருந்தாலும், இந்தச் சட்டமாக இருந்தாலும் சரி, நிர்ணயிக்கப்பட்ட விகிதம் ஒரே விகிதம்தான்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சட்டத்திலே ஒன்றைப்போட்டுவிட்டு அமெண்ட்மெண்ட்டிலே எப்படிக் கொடுத்தீர்களோ எனக்குத் தெரியாது. இந்தச் சட்டத்திலேயும், அந்தச் சட்டத்திலே இருப்பது மாதிரி மார்க்கெட் வேல்யூ என்று போட்டிருந்தால் சாதாரண முதலாளிகளும் நன்மை பெறுவதற்கு வழியிருக்கிறது.

இந்தச் சட்டத்திலே பஸ் முதலாளிகள் ஆபீஸ் வைத்திருந்தால், சிறிய ஒர்க்ஷாப் வைத்திருந்தால் அத்தனையும் எடுத்துக்கொள்ளலாம். ஒரு ஊரில் 20 ஆப்பரேட்டர்கள் இருந்தால், 4 பஸ், 3 பஸ்களுக்கு ஒரு ஒர்க்ஷாப் வைத்திருந்தால், அந்த 20 ஆப்பரேட்டர்களிடம் இருப்பவைகளையும் எடுக்க வேண்டுமா? நீங்கள் ஒரு சென்ட்ரல் ஒர்க்ஷாப்பை, பெரிய ஒர்க்ஷாப்பை வைத்துக்கொள்வதில் அர்த்தம் இருக்கிறது.

இருபது பஸ்காரர்களிடமிருந்து பஸ்களை எடுத்துக் கொள்ளும்போது அவர்கள் வைத்திருக்கிற சிறு சிறு ஒர்க்ஷாப்புகள் அத்தனையையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதில் அர்த்தம் இல்லை. அந்த ஒர்க்ஷாப்பிலிருந்து என்ன லாபம் வந்துவிடப் போகிறது? அரசாங்கம் தனியாக ஒரு சென்ட்ரல் ஒர்க்ஷாப் வைத்துக் கொள்ளலாம்.

சில பஸ் முதலாளிகள் வீட்டில் ஆபீஸ் இருக்கிறது. ஆபீசை எடுத்துக் கொள்ளுவது என்றால் Is it socialistic approach வீட்டையும் சேர்த்து எடுத்துக் கொள்ளுவது போல் சட்டத்தில் போட்டிருக்கிறார்கள். உங்களுக்குத் தேவை பஸ்கள். அதற்கு மேல் ஒர்க்ஷாப்பையும் வீட்டையும் மற்றும் எல்லாவற்றையும் அபகரிக்கும் சட்டமாக இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.



1973 பிப்ரவரி 13] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அந்த பஸ் ஆப்பரேட்டர்ஸ அக்கவுண்ட் புக்ஸ் எல்லாவற்றையும் கொண்டு வந்து கொடுத்து விட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். பஸ்களைப் பொறுத்த வரை உள்ள கணக்குகளை, விவரங்களை மாத்திரம் கொடுக்க வேண்டுமென்று இருக்க வேண்டுமே தவிர, உங்களுடைய நோட்டுப் புத்தகங்கள் அத்தனையையும் தூக்கிக் கொண்டு போகிறோம் என்று அரசாங்கம் கூறினால் பின்னால் இன்கம் டாக்ஸ் அதிகாரிகள் போன்றவர்களுக்கு விவரங்களைக் கொடுக்க முடியாத நிலை ஏற்படும். அரசாங்கத்திடமிருந்து பிறகு அந்த நோட்டுகளை வாங்குவதும் கஷ்டமாகி விடும். யானை வாயில் போன கரும்பு போல்தான் அரசாங்கத்திடம் கொடுத்தது ஆகிவிடுகிறது. ஆகவே, தேவையானவற்றை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும்.

இனிமேல் ரினியூவல் செய்ய வேண்டுமென்றால், கொடுக்க மாட்டோம் என்கிறார்கள். ஐந்து வருஷத்தில் படிப்படியாக எடுக்கப் போகிறீர்கள். 3 வருஷத்திற்கு ரினியூவல் கொடுத்தால் என்ன? நீங்கள் அவற்றை எடுத்துக் கொள்ளும் வரையில் ரினியூவல் கொடுங்கள். டெம்பரரி பர்மிட்டுக்காக நான்கு மாதத்திற்கு ஒரு முறை அமைச்சர்களையும் அதிகாரிகளையும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? டெம்பரரி பர்மிட் இருந்தால் டைமிங்கை எக்ஸ்டென்ட் செய்ய முடியாது. ரூட்டை பொதுமக்கள் சவுகரியத்திற்காக எக்ஸ்டென்ட் செய்ய முடியாது. சட்டப்படி அதற்கு அதிகாரம் இல்லையென்று உயர்நீதி மன்றமே சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆகவே, படிப்படியாக எடுத்துக் கொள்ளும் நிலையில் குறிப்பிட்ட காலத்திற்கு ரினியூவல் கொடுக்க வேண்டும்.

டிரான்ஸ்பர்கள் அலவ் பண்ணுவதில்லை என்று சொல்லுகிறார்கள். சட்டத்தின் படி பிள்ளைகள் வாரிசாக இருக்கக்கூடிய நிலையில் தகப்பன் செத்து விட்டால் செத்தவன் பெயரிலேயே ஓடிக் கொண்டிருக்கக் கூடிய நிலை ஏற்படும். இப்படி பல சிக்கல்கள் இந்தச் சட்டத்திலே இருக்கின்றன. பல பணக்கார பஸ் முதலாளிகள் இருக்கலாம். பத்து பஸ்களுக்கு கீழே வைத்திருப்பவர்கள் இருக்கலாம். எல்லோருக்கும் ஒரே மாதிரியான முறையில் இதைக் கொண்டு வராமல் பல செருகல்களை வைத்து கொண்டு வந்திருப்பதைப் பார்க்கும்போது சந்தேகமாக இருக்கிறது என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மு. சுருளிவேல்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவின் மீது பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் கூறுவேன்—இந்த

முற்போக்கான, புரட்சிகரமான, வரலாற்றுச் சிறப்புமிக்க சோஷலிச சமுதாயத்தை நோக்கி நடைபோடுகின்ற இந்த மசோதா தமிழ் நாட்டினுடைய எந்த அரசியல் சூழ்நிலையில் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் நம்முடைய முதலமைச்சராக இருக்கக்கூடிய எங்களுடைய தானைத் தலைவராக, இலட்சிய தீபமாக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்களும் இந்த முற்போக்கான மசோதாவை எந்தச் சூழ்நிலையிலே கொண்டுவந்திருக்கிறார்கள்? தங்களை நோக்கி எந்த அளவுக்கு கீழ்த் தரமான, கேவலமான அரசியல் கணைகள் வீசப்பட்ட சூழ்நிலையிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எந்த இயக்கம் தன்னை வளர்த்ததோ, எந்த இயக்கத்தின் தொண்டர்கள் தனக்கு உல்லாசமான வாழ்க்கையைத் தேடித் தந்தார்களோ அந்த உல்லாசமான வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ஓடுகாலியாக மாறிவிட்டவர்களும், கம்யூனிச சித்தாந்தத்தை சமாதிக்கு அனுப்பிவிட்டு அந்தச் சமாதியின் மீது நின்று கொண்டு இந்திரா காந்தியின் ஏஜண்டாக அரசியல் நடத்துகிற இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு . . . .

**திரு. க. சுப்பு:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். போடி சுருளிவேல் அவர்கள் 'இந்திய கம்யூனிஸ்டு கட்சி இந்திரா காந்தியின் ஏஜண்டாக பணியாற்றுகிறார்கள்' என்று கூறுவது ஒழுங்கு முறைக்கு உட்பட்டதா? இப்படிச் சொல்லுவதானால் ஒவ்வொருவரையும் பற்றி நானும் சொல்ல முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதே போன்று 'திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ஓடுகாலிகள்' என்று சொன்னதையும் எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'ஓடுகாலிகள், ஏஜண்டுகள்' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

**திரு. மு. சுருளிவேல்:** தமிழகத்தின் முதலமைச்சரைப் பிற்போக்காளர் என்றும், ஏழைகளை மதிப்பதில்லை, புறக்கணிக்கிறார், முதலாளிகளின் உற்ற



நண்பராக இருக்கிறார் என்றெல்லாம் மேலே குறித்த இரண்டு அரசியல் கட்சிகளும் திட்டமிட்டு நாட்டிலே பிரசாரத்தை முடுக்கி விடுகிற நிலையிலும் எங்களுடைய தானைத் தலைவர்

"போற்றுவோர் போற்றட்டும்
புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும்
தொடர்ந்து சொல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்
எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்"

என்ற தத்துவத்தை தாரக மந்திரமாகக் கொண்டு 'பிற்போக்காளர், முதலாளி' என்று அழைக்கப்பட்ட போதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைத் தத்துவத்தை பொருளாதாரக் கொள்கையை நிறைவேற்றுகின்ற வகையில் பல்வேறு கட்டங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டமாக இன்றைய மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

முன்னாலே பேசிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த பெரியவர் மணலி அவர்களும் மற்றைய உறுப்பினர்களும் இதில் சிலபல மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இந்த மசோதாவைத் தாக்கல் செய்கின்ற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏன் இது வரலாற்றுச் சிறப்பு மிக்க மசோதா என்பதைக் குறிப்பிட்டார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திலே இன்றையதினம் சோஷலிசம் பேசி அதன் மூலம் நாடாளுமன்றத்தில் அதிகமான பெரும்பான்மை பெற்ற கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலும் கூட நிறைவேற்றாத சட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கிறோம்.

குஜராத்தில் இல்லையா என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த தங்கமணி அவர்கள் கேட்டார்கள். குஜராத்தில் இருப்பது இந்திரா காங்கிரசைச் சார்ந்த அமைச்சரவை. தன்னுடைய கட்சித் தோழர்கள் ஆளுகின்ற, அச்சுதமேனன் முதலமைச்சராக இருக்கின்ற கேரளத்தைச் சுட்டிக்காட்ட முடியாத நிலையில் கே. டி. கே. அவர்கள் இருக்கிறார்கள். நீண்டகால அரசியல் பாரம்பரியத்தில் வந்தவர்கள் பரிதாபத்திற்குரிய முறையில் இருக்கிறார்கள். குஜராத்தில் கூட பரந்தாமன் அவர்கள் சொன்னது போல் 90 சதவிகிதந்தான் தேசியமயமாக்கி இருப்பதாகக் கூறினார்கள். நாம் பேருந்துகளை தேசியமயமாக்கி இருக்கிறோம். ஒர்க்ஷாப்புகளை தேசியமயமாக்கி இருக்கிறோம், ரூட்டுகளை தேசியமயமாக்கி இருக்கிறோம். அதில் பணியாற்றிய ஊழியர்கள் அனைவரையும் அரசாங்கத்தினுடைய ஊழியர்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

[திரு. மு. சுருளிவேல்] [1973 பிப்ரவரி 13

அங்கே, வெறும் வழித் தடங்களை மாத்திரந்தான் எடுத்திருக்கும் சூழ்நிலை இருக்கிறது.

இதுவரை இதற்கு எதிராக யாரும் சொல்லவில்லை. எனக்குப் பின்னால் பேசக்கூடிய மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் நிச்சயமாக இதை எதிர்த்துப் பேசுவார்கள். பொதுத் துறை என்பது அவர்களைப் பொறுத்த வரை கசப்பு மாத்திரை. தனியர் துறை மூலமாகத்தான் சமுதாய நீதியை வழங்க முடியும் என்ற தத்துவத்தைக் கொண்டிருப்பவர்கள் டாக்டர் ஹாண்டே அவர்கள். பொதுத் துறை என்றாலே வீண் விரயம், மக்கள் வரிப் பணத்தை வீணாக்குவது, திறமைக் குறைவு, ஊழல் என்றெல்லாம் குற்றம் கூறுபவர்கள் அவர்கள்.

ஆனால் இன்றையதினம், குறிப்பாக மதுரை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் சொல்கிறேன்; பாண்டியன் போக்குவரத்துக் கழகம்—நான் கம்பீரமாக நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறேன்—பொதுத் துறையின் வெற்றிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது. டி.வி.எஸ். இடமிருந்து நாம் எடுத்தபோது 346 பஸ்கள், 134 வழித்தடங்கள், 2,202 ஊழியர்கள் இவற்றைப் பெற்றோம். 6—2—1972-ல். ஆனால் இன்றைய நிலை என்ன என்று பார்த்தால் 414 பஸ்கள், 184 வழித்தடங்கள், 3,410 ஊழியர்களை கொண்டு வெற்றி நடைபோடுகிறது. பாண்டியன் போக்கு வரத்துக் கழகம். இதை பொதுத் துறை என்றால் விரயமாகும் என்று சொல்லக் கூடிய நண்பர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பி.ப. 12-30 இலாபம் வராது, நிச்சயமாக நஷ்டம்தான் வரும் என்று தெரிந்தும் 45 வழித்தடங்களை பி.ஆர்.ஸி. ஏற்று இன்று நடத்திக் கொண்டு வருகிறது. 23 கிராமங்களில், அதாவது பேருந்துகளையே காணாது இருந்த கிராமங்களுக்கு இன்றையதினம் பி.ஆர்.ஸி. பேருந்துகளை ஓட்டிக்கொண்டிருக்கிறது. மக்களின் நன்மைக்காக, கிராம மக்களின் நன்மைக்காக, இருபது ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட கிராம மக்களின் பொருளாதார நிலை உயர வேண்டும் என்பதற்காக, பேருந்துகள் கிராமங்களில் செல்வதன் மூலம் அவர்கள் மற்றப் பகுதிகளோடு தொடர்பு கொண்டு வியாபாரம் முதலியவை செய்து தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று பி.ஆர்.ஸி. அந்தக் கிராமங்களுக்கு பேருந்துகளை ஓட்டிக்கொண்டிருக்கிறது. அதனால் ஏற்படக்கூடிய நஷ்டம் ரூ. 38 லட்சம். இது எதிர்பார்க்காத ஒன்றல்ல. எதிர்பார்த்ததுதான். இந்த 38 லட்சம் ரூபாய் நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டும் இந்த ஆண்டு பி.ஆர்.ஸி. எத்தனைய



1973 பிப்ரவரி 13] [திரு. மு. சுருளிவேல்]

வருமானத்தைக் காட்டியிருக்கிறது என்றால் வருமானத்தையும் செலவினத் தையும் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ ஒரு.கோடி ரூபாய் நிகர வரு மானம். இந்த 38 லட்சம் ரூபாய் நஷ்டத்தையும் சரிக்கட்டி ஒரு கோடி ரூபாய் அளவிற்கு பி.ஆர்.ஸி. நிகர வருமானத்தைப் பெற்றிருக்கிறது என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மக்களுக்கு நன்மை பயக்கிற எக்ஸ்ப்ரஸ் சிட்டி பஸ்களை, வசதிமிக்க வண்டி களை பி.ஆர்.ஸி. ஆரம்பிக்கப் போகிறது. சிறிய பஸ் முதலாளிகளைப் பற்றி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களும் முதலைக் கண்ணீர் வடித்தார்கள். இவர்கள் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கலாம் என்று கூறினார்கள். இந்த பஸ் முதலாளிகள் எப்படி உரு வாக்கப்பட்டார்கள்? பத்து பஸ்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சட்டம் கொண்டுவந்தவுடன் எந்த அடிப்படையில் குற்றஞ்சாட்டினார் களோ அதற்கு மாறாக நின்று எப்படியும் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவரும் மசோதாவை எதிர்க்கவேண்டும் என்ற ஒரே நோக்கோடு எதிர்த்து வருகிறார்கள். (மணியடிக்கப்பட்டது.) வருமான வரியை ஏமாற்று வதற்காக பஸ்களை பிரித்து வைத்து எழுதி வைக்கவில்லையா? ரூட்டுகளுக்கு மனு செய்யும்போது மார்க்ஸ் வாங்குவதற்காக பிரித்து எழுதி வைக்கவில்லையா? பஸ் சீலிங் சட்டத்தை ஏமாற்ற பிரித்து வைக்கவில்லையா? சாதாரண ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள் தங்கள் சாதாரண தேவைகளை நிறை வேற்றிக் கொள்ளமுடியாமல் தத்தளிக்கும்போது சிறிய முதலாளிகளுக்காக இவர்கள் வாதாடுகிறார்கள். சாதாரண ஏழை மக்களுக்காக, பாட்டாளி மக்களுக்காக இருக்கிறோம் என்று ஒப்பாரி வைக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இன்று யாருக்காக வாதாடிக் கொண்டிருக்கிறார்கள்? சிறிய முதலாளி களுக்காக வாதாடுகிறார்கள். காப்பிக்கு சர்க்கரை இல்லை என்ற நிலையிலிருப் பவர்கள் பலர், கஞ்சிக்கு உப்பில்லை என்ற நிலையிலிருப்பவர் பலர் ஏன் கஞ்சியே இல்லை என்ற நிலையில் இருக்கக்கூடிய ஏழை மக்களுக்காகத்தான் இந்த ஆட்சி பீடத்தில் எங்கள் கட்சியினர் இருக்கிறார்கள். சிறிய பஸ் முதலாளிகளைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. அடுத்த ஊழல் குற்றச்சாட்டுப் பட்டி யலுக்கு கே. டி. கே. அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள்... (மணியடிக் கப்பட்டது).

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை இங்கு அறிமுகப்படுத்தி ஆற்றிய உரையை வார்த்தைக்கு வார்த்தை நான் வரவேற்கிறேன்.

மிக அருமையான திட்டத்தினை பல்வேறு நிர்பந்தங்களுக்கிடையில் அவர்கள் துணிச்சலோடு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்று சின்ன முதலாளி, பெரிய முதலாளி என்று பார்க்கும்போது டாட்டாவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிர்லா சின்ன முதலாளி, ஹென்றி போர்ட்-டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது டாட்டா சின்ன முதலாளி. ஆனால் கொள்கை என்ற முறையில் எடுத்துப் பார்க்கும்போது ஊர்திகளை, ஒப்பந்த ஊர்திகள் உட்பட எல்லா ஊர்திகளையும் நாட்டுடைமையாக்கும் திட்டம் பல்வேறு நல்ல திட்டங்களுக்கு வழி வகுக்கிற ஒன்றாகும். உடனடியாக சோஷலிசம் இதனால் வரவில்லை என்றாலும் நாங்கள் இதை வரவேற்கிறோம். 'நான்-காப்பிடலிஸ்டிக் பாத்'தில் நாட்டை வழி நடத்திச் செல்வதில் இது ஒரு மைல் கல்லாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

பல நிர்பந்தகளுக்கிடையே இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். வேறு நிர்பந்தங்களுக்கு அடிபணிந்துவிடாமல் இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஊழல்களுக்கு இடம் கொடுக்காமல் இதை உடனடியாகக் கொண்டுவரவேண்டும். சட்டம் வருகிறது என்று தெரிந்தவுடன் வேறு பெயருக்கு மாற்றிக்கொள்ளவில்லையா? பினாமி டிரான்ஸாக்ஷன்ஸ் நடக்கவில்லையா? ஜோதி விலாஸ் என்பதை ஜோதி சீதாராம் என்று மாற்றியமைக்கவில்லையா? பினாமி டிரான்ஸ்சாக்ஷன்ஸ் எவ்வளவோ நடைபெற்றிருக்கின்றன. வேறு பல நிர்பந்தகளுக்கு ஆட்படாமல் இதை உடனடியாக நிறைவேற்றவேண்டும். நாங்கள் கொடுத்திருக்கிற செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்கிற திருத்தத்தைக் கூட நாங்கள் வற்புறுத்தப் போவதில்லை. இந்த மசோதாவை பொறுத்தவரையில் அரசாங்கம் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

வொர்க்ஷாப்பை எடுத்துக்கொள்வதையும் நான் வரவேற்பேன். நல்ல என்ஜின்களை எடுத்து லாரியில் போட்டு விடுகிறார்கள். ஆகவேதான் மணலி அவர்கள் சொன்னார்கள் லாரிகளையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று. கையகப்படுத்துவது என்றால் போக்குவரத்துத் துறை முழுவதையும் நாம் நாட்டுடைமையாக்கவேண்டும். எனவே லாரிகளும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும்.

ஒரு கருத்தை மட்டும் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். பழனிசாமி அவர்கள் தொழிலாளர்கள் பாதிக்கப்பட விடக் கூடாது என்று சொன்னார்கள். வழித்தடங்கள் மட்டுமல்லாமல், பஸ்களை எடுத்துக் கொள்வது மட்டுமல்லாமல்,





தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது ஆறுதலாக இருக்கிறது.

நாட்டுடைமையாக்கப் போகிறோம் என்று தெரிந்தவுடன் பல முதலாளிகள் ஏற்கனவே பணியாற்றி வரும் தொழிலாளர்களை வெளியே அனுப்பிவிட்டு தங்களுக்கு வேண்டியவர்களை உள்ளே நுழைத்துக் கொள்ளும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. பதிவேடுகளில் இல்லாத பலர் இன்று பணியாற்றி வருகிறார்கள். எனவே இப்போது பணியாற்றி வருகிறவர்கள், ஏற்கெனவே பணியாற்றி வருகிறவர்கள், இந்த மசோதா வருவதற்கு முன்பே பணியாற்றிவந்த தொழிலாளர்களுக்கு ஆதாவு கொடுக்கும் முறையில் அவர்களை வெளியே அனுப்பிவிடாமல் அவர்களை எடுத்துக்கொள்ளும் முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும், விதிகள் வகுக்கும்போது அதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பணியாற்றிவரும் தொழிலாளர்கள் நிச்சயமாக இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழியை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களானால் தொழிலாளர்களுடைய ஆதாவு இதற்கு பரிபூர்ணமாக இருக்கும்.

சிறிய முதலாளிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் வக்கீல்கள் கூடத்தான் இதனால் பாதிக்கப்படுவார்கள், பலபேர்களுக்கு வழக்குகள் கிடைக்காது போய்விடும் நிலை ஏற்படும். அப்படிப் பார்க்காமல், நல்ல திட்டங்களைக் கொண்டுவந்தால் அதை ஆதரிக்க மாட்டோம் என்று சொல்லாமல் அவரவர்களுடைய ஆலோசனைகளை வழங்கவேண்டும். இந்தத் திட்டத்தை மேலும் செழுமையாக்கி நடைமுறையில் கோளாறுகள் வாாமல் எப்படி நடத்துவது என்பதற்கான ஆலோசனைகளைக் கொடுக்கவேண்டும்.

பல்வேறு நிர்பந்தகளுக்கு இடையே இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. வேறு நிர்பந்தகளுக்கு அடிபணிந்து விடாமல் இதை விரைவில் நிறைவேற்ற வேண்டும். பொறுக்குக் குழுவிற்குக் கூட விடாமல் உடனடியாக இதைச் சட்டமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலாளிகள் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் தனித்தனியாகவும், கூட்டாகவும் சந்தித்து இதைத் தாமதப்படுத்தவேண்டும், அவர்களுக்கு சாதகமான சில விதிகளை இதில் நுழைக்கவேண்டும் என்று முயன்று வருகிறார்கள். அவர்களுக்கு கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. கிராம மக்களுக்கு பயன் பட வேண்டும், கிராமங்களுக்கு பேருந்துகள் செல்லவேண்டும் என்றால் முதலாளிகள் கிராமங்களுக்கு பஸ்கள் விடுவதற்கு மறுக்கிறார்கள். அவர்கள் இலாபத்தை மட்டுமே குறியாகக் கொண்டிருக்கிறார்கள். இலாபம் [illegible]

என்றால் பஸ் விடுவதில்லை. [illegible] என்ற முறையில் இதை அவர்கள் நினைப்பதில்லை. இலாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படுகிறார்கள்.

நாம் [illegible] கிராமங்களுக்கு பஸ்கள் செல்ல உதவிகரமாக இருக்கும். இதுபற்றி ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்சில் குறிப்பிட்டிருப்பதை சரி என்று ஏற்றுக்கொள்கிறோம். முதலாளிகளின், மற்றவர்களின் நிர்பந்தத்திற்குப் பணிந்து விடாமல் இதை உடனடியாக சட்டமாகவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதோடு லாரிப் போக்குவரத்தையும் நாட்டுடைமையாக்கவேண்டும் என்று கூறி, இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று, [illegible] முடித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்.)

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I rise to support the amendment moved on behalf of our Party that this Bill be referred to a Select Committee for the following reasons.

I am afraid if the Hon. Minister has already made up his mind to see that this Bill is rushed through, nobody can help it. If he is in a mood to take the various sentiments expressed by Meimbers of all groups in this House in order to produce a proper legislation, I think it is imperative to refer this Bill to a Select Committee.

I do not know how this Bill was drafted. This Bill, I am afraid, is a re-draft of the Ordinance. Under what circumstances such an Ordinance was promulgated, I do not know. Whatever it is, I am forced to express my grief on the floor of the House that this has been very, very badly drafted. This Bill bristles with a number of imperfections and lacuna. The object of this Bill, is, in my opinion, neither straightforward, honest and scientific socialism nor does it encourages small-scale industries. I therefore plead that if this Bill is referred to a Select Committee, we can discuss things more harmoniously and in a much temperate climate. The Government have stated that they are not in a hurry and that they are going to nationalise it district after district but the way in which he bill has been drafted shows that they are in at hurry and it is rather funny.

Sir, this Bill will be struck down in a court of law and this is a challenge I am throwing in this House because it is drafted in haste with a number of legal lacuna adn contradictions and it is totally



contrary to the principles of natural justice and it is also *ultra vires* of the Constitution. Article 39 (*c*) of the Constitution says—

'that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment'.

This is part of the Directive principles enumerated in Part IV of the Constitution. They should avoid concentration of wealth and means of production. Now, I would like to know whether this Bill avoids concentration of wealth. It does not. I would like to be enlightened on this point.

Another point is, are we seriously believing that one-bus operator and two-bus operators are big capitalists? I can understand the arguments advanced by some of the protaganists and supporters of the Bill. Let us assume that they are capitalists. But I would like to know honestly, are we encouraging small-scale industries in this State and in this country? In the Punjab and Haryana they have prospered because they have encouraged small-scale industries and let us be frank to admit it and let there be a party politics in this matter. Are we not sending Ministers and others to Haryana to find out how they have developed small-scale industries. Are we going to nationalise small-scale industries. By suddenly nationalising State Transport, you will be throwing out a large number of people on the streets. How are the people going to be benefited? The Hon. Chief Minister has stated "மண்ணைத் தாக்கி வாரிவிடுவது" I do not want to use such strong expression. There may be a lot of mud-slinging against the Government and I would caution the Hon. Chief Minister and the Government to be careful about the future. I myself may indulge in mudslinging later on if any complaint comes to me and I cannot guarantee it . . .

(உறுப்பினர் திரு. எஸ். ஆறுமுகம் முதல் வரிசையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லே.

DR. H. V. HANDE : Now I come to clause 6 of the Bill and the three expressions used there have rather frightened me. Firstly, sub-clause (a) says—

'where the amount can be fixed by agreement it shall be determined in accordance with such agreement.'

Agreement between whom? Is it agreement between the concerned Minister and the party concerned or between the department concerned and the party concerned or between the transport secretary and the party concerned or between the Collector and the party concerned ? What is that agreement ? So, this is a dangerous expression.

The sub-clause (b) says—

'where no such agreement can be reached, the Government shall appoint as arbitrator . . .'

Who is the arbitrator. I would like to know. You are giving such fantastic powers in the hands of the arbitrator that he can have 'leva thevi' with the owner. In which Act is there such a provision?

Then sub-clause (c) says—

'the Government may, in any particular case, nominate a person having expert knowledge as to the nature of the acquired property to assist the arbitrator.

'and where such nomination is made, the person interested may also nominate an assessor for the same purpose.'

Now, you have introduced into the hands of the assessor a large amount of power which can be expanded or contracted. That is another thing which has frightened me and it may lead to dangerous complications. Now the hon. Member, Thirumathi Jothi Venkatachellum, says that that is elastic. So I request the Government to look into this aspect of the matter.



Even in the case of Income-tax, persons who earn about Rs. 1 lakh are taxed at a higher percentage and those with an income of Rs. 50,000 and less, at a lesser percentage and those with small income are completely exempted. Here it is the reverse.

In this connection, I wish to point out that in the case of T.V.S. and other big companies, three months' notice was given with regard to nationalisation of their transport. As a member of the Communist Party of India has stated, a lot of time was given to them to dispose of their unwanted vehicles, etc. Ceaser's wife should be above suspicion.

Then there is mention in the Bill about the market value and the book value. For instance, if the market value is Rs. 25,000 after five years the market value come down to Rs. 20,000 and the book value will be only Rs. 5,000. So, every year the market value will come down. This aspect of the matter has to be looked into by the Government.

Then, a reference has been made about the profit earned by the Pandiyan Roadways Corporation. The T.V.S. complex was taken over by the Government entirely and therefore there was a tremendous amount of efficiency injected into the Roadways Corporation and they could earn a profit. It will take some time for the Government to destroy the efficiency of the Roadways Corporation.

As regards profit, I want to know how much income-tax was paid by the T.V.S. before the Government take-over. In this connection, I want to point out that 80 per cent of the income-tax is given back to the State. So, the question of profitability is completely exploded. With regard to efficiency, where is the efficiency? It is cimpletely lacking in Government transport. By saying this I am not going to lose a single vote because I know the feeling of the bus passengers in my constituency. I will get more votes than lose votes. I am not cocerned with the politicians but I am concerned with my constituents. In my constitutency out of one lakh of people, 50,000 people use nationa-lised transport. Out of 50,000, 45,000 go on abusing Government.

They were abusing at the time of Thiru R. Venkataraman. They are now abusing the present Minister. In other words the discontentment they have got while travelling in the bus with difficulty is reflected on the Minister.

"இந்த அமைச்சரின் போக்குவரத்து இலாகா இப்படித்தான் இருக்கும்" என்று சொல்வார்கள்.

The entire travelling public in the buses are dissatisfied. I will not at all be unpopular in saying this. In fact my constituency consist of workers of B. & C. Mills and I will go and say to them 'I have represented to the Hon. Minister the difficulties you are experiencing in the buses because of mismanagement of road transport by Government'. I can boldly say that. There is no fear for me.

The P.W.D. Minister had been Trasport Minister for some time. He knows the difficulty of the travelling public. How many accidents? How many breakdowns? Irregular timings, improper maintenance, lack of avenues for participation of employees because of non-introduction of incentive scheme all these lead only to discontentment among workers. The driver is given Bus A today. Tomorrow he is switched on to some other bus. In the matter of breakdown, many do not know what happens actually. I know this on authority. Suppose there is breakdown of carburettorin a particular bus. That bus will have to be taken to some other bus where there has been breakdown of tyre.

MR. DEPUTY SPEAKER: The hon. Member has taken more time already.

DR. H. V. HANDE: There are not many members participating from our side. I may not also participaite too much in the clause by clause discussion. Anyhow I shall finish in ten minutes.

I would like the Hon. Minister to know what is happening? Are all the workers satisfied with the working of nationalised transport? I have now proved 100 per cent that it is not efficient, that the travelling public are too much dissatisfied. I have exploded the argument that nationalisation has resulted in the buses running



efficiently. Profitability also, it is 'zero'. On behalf of workers I can say that everything is not quite all right. They say:—

"இப்படியெல்லாம் நடக்கிறது, சார் உங்களுக்குத் தெரியாது."

THE HON. THIRU S. RAMACHANDRAN: The time is precious, Sir. The hon. Member can speak the same thing when the Transport Demand comes during the budget session. I do not know how what he is talking is relevant to the Bill?

DR. H. V. HANDE: I will explain how it is relevant.

MR. DEPUTY SPEAKER: I am not supposed to advise the hon. Member. But. . .

DR. H. V. HANDE: The Hon. Minister was asking how it was relevant. He mentioned two arguments, viz., profitability and efficiency, for nationalisation. Those two arguments I am exploding. So it is more relevant. I shall finish quickly.

The stage fares have increased only after the nationalisation has come. Of course, it is unpleasant for the Hon. Minister to hear me. But you cannot avoid it. I will have to say facts, especially when persons are packed like sardines in buses. So, I have exploded both the arguments, efficiency and profitability.

I have a memorandum with me submitted by workers themselves and not by 'mudalaligal'. I have taken two full days to go through everything contained in that memorandum. I have prepared a small note. Do you know what will happen because of this measure? Three to four lakhs of workers will be completely thrown out. In every small town, there may be a small workshop. They say:

நன்றாக இருந்தோம், ஏதோ சிறிய தொழில் நடத்திக் கொண்டிருந்தோம். வந்தார்கள் இந்தப் புண்ணியவான்கள். நடுத் தெருவில் நிற்கிறோம்.

By this, you are destroying it. By this Act itself, you will be throwing out so many people from employment. What about ancillary industries? Automobile spare parts shops, small-scale industries, small tyre retreading companies, these will be affected by this Government measure, can you give jobs for all of them?

Small-service stations, motor repair workshops, in each town and villages, சிறிய சிறிய ஊரிலே electrician shop, small tinkers, painters, welders, radiator repairer, etc., all these will be affected. They all depend on this for their livelihood. What will happen if they are affected? Their wives and children will be thrown out in the streets. What I speak here will be a matter of solace to them. They will vote for me thinking that here is a man speaking about us in the House. Carpenters, seats' stiches, tube vulcanisers, watchmen, tyre retreaders, etc., will be affected.

What are you going to do? You will publish tenders and the rich man will be benefited by submitting the tender. That will be the result. Your socialism benefits the rich. My socialism will benefit these poor people I had named, small tubes and tyre sellers, glass fitters, cobblers, etc. Do you know that these people will be thrown out of employment? I speak on behalf of them.

Finally I come to another question. Article 39 (c) states that the State shall in particular direct its policy towards securing that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment. In the case of T.V.S. and A.B.T. section 15 (3) of the 1971 Acquisition Act provided that all of them will be taken over. But in section 20 (3) of this Act, a proviso is added that only certain number will be taken up. For taking up a Manager, there must be 13 buses. So the managers of all small operators will loss their jobs.

I had already mentioned about how small men like iron smiths, spring setters, body builders, gear box, clutch disc, clutch plate setters, etc., would be affected. So this Act would result in several thousands of people being thrown out of employment.

Clause 1 (3) applies to all stage carriages and contract carriages operating in this State on 14th January 1974. Obviously this will not only to idle buses. I am not an expert but operator. But the departmental instructions seem to be not to allow transfer of idle buses. The operators of even jeeps are not allowed to transfer. He must keep the idle bus till Government takes it over after two or three years. What a funny thing? Clear clarification is necessary on this point.



Next, how is the list regarding take-over drawn? Is there any priority list? First is Nilgiris. Next we do not know which will come? Has it been indicated? Thirumathi Anandanayaki, whispers that it is there on the Schedule. All right. But now much time are you going to take? When you are going to take two or three years, why this hurry for this Bill. That is what I want to ask the Hon. Minister.

Why do you want to take the workshops? There will be small workshops and why do you want to take them over? For instance, if you want to take them over first in the Dharmapuri district, how are you going to do that? Like Allaudin's Lamp are you going to produce miracles?

Again clause 19 (3) makes provision for only employees who are taken up by corporations. What about other employees? How are you going to provide them with employment.

Section 9 (5) of the T.V.S. and A.B.T. Acquisition Act provided for an interim payment of 25 per cent of the compensation. No such provision is in this Bill. Clause 19 (2) decides the properties to be acquired. The appeal under clause 19 (3) is over and the arbitrator gives his award under clause 6 and the appeal against the same provided by clause 12 to the High Court is over. The scheme for determining the compensation and payment is calculated to reduce the operator to the complete mercy and discretion of the executive and department.

Finally, in the Statement of Objects and Reasons appended to the Bill, it is stated that this Bill had been brought forward to avoid unhealthy competition. Who is responsible for the unhealthy competition? It is the Department, it is the Government and it is the Minister who gives routes and they are responsible for it. I am surprised that such a fundamental and basic knowledge of law is not exhibited properly in this Bill. I also wish to point out that with regard to the opening or closing of routes, private operators have no say in the matter and so they cannot be accused of indulging in wasteful competition. If there is wasteful competition, who is to be held responsible? It is only the Regional

பி.ப. 1-00 Transport Authority who is giving permits. I am speaking subject to correction by an expert in the field. This is shocking. The State Transport has not attained perfection and efficiency to the extent the private operators have attained.

I do not want to take much time of the House and I think I have given a very clear picture of the lacunae in the Bill and I have tried to reduce the discussion to a purely academic level.

இது ஊழல் நிறைந்த ஒரு மசோதா ஆகும். இந்த ஊழல் நிறைந்த மசோதாவை ஏன் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்.

I hope and trust the the Hon. Minister will carefully consider it and see that the Bill is referred to a Select Committee. I am in the least bothered about the bus operators. In fact I am antogonistic towards them and I had abused most of the operators personally on the ground that they invariably supported the party in power. Fortunately for us, politics in Tamil Nadu is completely bereft of bus operators.

இந்த மசோதாவினால் இப்போது அந்த பஸ்களிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக இந்த திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் டிப்டி ஸ்பீக்கர், சார், ஏற்கெனவே பல உறுப்பினர்கள் இந்த மசோதாவைப்பற்றித்தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பஸ் தேசியமயமாக்குவது சம்பந்தமாக இதற்கு முன்னால் சென்ற 1971-ம் ஆண்டு வந்த மசோதாவைப் பார்த்தால் அதிலே எங்கள் கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம். 1943-ம் ஆண்டிலேயே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பஸ்கள் பூராவையும் தேசியமயமாக்க வேண்டுமென்று அப்போது அமைக்கப்பட்ட கமிட்டியிலே எங்கள் கருத்துக்களை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இப்போது இந்த பஸ் தேசிய மயமாக்கப்படும் விஷயத்தை இவ்வளவு காலதமதமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது தான் எங்கள் குறை. இப்போது நீங்கள் கொண்டு வந்திருப்பது எந்த நோக்கத்தில் என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. அந்த நோக்கத்திற்குள் நான் செல்லத் தயாராக இல்லை. இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த



மசோதாவிலே இருக்கக்கூடிய ஊனங்களையும், நல்ல அம்சங்களையும் மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

In the Satement of Objects and Reasons it is stated ஒரு முக்கியமான விஷயம் 'Operation of the contract carriages have led to a lot of abuse. Many of the contract carriages have been functioning like stage carriages resulting in unhealthy competition. It has therefore, become necessary to nationalise them also.' என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இங்கே பேசிய உறுப்பினர்கள் தங்கள் கவனத்தை அதிகமாகச் செலுத்தியிருப்பதாகத் தெரியவில்லை.

தேசியமயமாக்கப்பட்ட பஸ்களை எல்லாம் எப்படி நல்லமுறையிலே இயக்குவது என்பதை அறிந்து சொல்ல ஒரு கமிட்டி அமைத்தார்கள். அந்தக் கமிட்டியிலே நானும் ஒரு உறுப்பினர். ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டிலே வரக்கூடிய வருமானத்தில் பெரும்பகுதி 'ஆம்னி' பஸ்களால் குறைந்துவிடுகிறது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி அந்த ஆம்னி பஸ்களை எல்லாம் ரத்து செய்தார்கள். ஆனால் அவர்கள் ஹைகோர்ட்டிலே வழக்குத் தொடர்ந்து ஆம்னி பஸ்கள் ஓடலாம் என்றும் அதற்குச் சில விதிகளையும் வைத்துத் தீர்ப்பும் வழங்கப்பட்டது. ஆனால் இன்றைக்குப் பார்த்தால் ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டுக்குப் போட்டியாக எல்லா இடங்களிலும் இந்த ஆம்னி பஸ்கள் போய்க்கொண்டிருக்கின்றன. அவற்றை எப்படித் தடுக்கலாம் என்று யோசனை செய்யப்பட்டது. அப்படி யோசிக்கின்றபோதுதான் காண்ட்ராக்ட் பஸ்களை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தமாதிரி ஒரு கருத்து வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

இரண்டாவதாக, பஸ்களைத் தேசியமயமாக்குவது என்பதை ஒரு அவசரச் சட்டமாகக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னால் அதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அடுத்தக் கூட்டம் வரும்வரை பொறுத்துக்கொள்ள முடியாது; உடனடியாக எல்லா பஸ்களையும் தேசியமயமாக்கவேண்டும் என்று சொல்லி, அவசரமாகச் சட்டத்தைக் கொண்டுவந்து, சட்டம் பாஸான அடுத்த நாளிலேயே பஸ்களை எல்லாம் எடுத்துக்கொள்வதாக இருந்தால் அதுதான் அவசரச் சட்டமாகும். அதை நாங்கள் வரவேற்போம். ஆனால் அதற்கு மாறாக அவசரச் சட்டம் என்று கொண்டுவந்து, அதன்படி சில பஸ்களை முதலில் எடுத்துக்கொள்வது, அதன் பின் படிப்படியாக ஐந்தாண்டுக் காலத்திற்குள் எல்லாப் பஸ்களையும் எடுத்துக் கொள்வது என்றிருந்தால் இது ஒரு அவசர சட்டமாகாது. இதிலே என்னுடைய கருத்தைத் தெளிவாகச் சொல்கிறேன்.

எப்படி பஸ் பெர்மிட் கொடுப்பதில் ஊழல் ஏற்பட்டதோ அதைப்போலதான் பஸ்களைத் தேசியமயமாக்குவதிலும் ஊழல் மலிந்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனுல்தான் பொறுக்குக் குழுவுக்குச் சென்று இது காலதாமதம் ஆகக்கூடாது என்ற கருத்திலே சொல்லிக்கொள்கிறேன், 4-வது பாராவிலே On and from such date as may be specified என்பதற்குப பதில் On and from the date of the Act என்று இருக்கவேண்டும். எல்லாப் பஸகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கவேண்டும். 'ஷெட்யூல்' ஒன்று அபாலிஷ் செய்யப்பட வேண்டும். இருக்கக்கூடிய மொத்த கான்ட்ராக்ட் காரேஜ்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இருந்தால் வரவேற்கத்தக்கதாகும். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்ததாக, இதிலே 16-வது பிரிவைப் பார்த்தால் அது எனக்குக் கொஞ்சம் பயமாக இருக்கிறது. Grant of temporary permits to operators. என்று சொல்லும்போது, அதை நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். நாம் பஸ்களை எல்லாம் எடுத்துவிடுவது என்று வருகிறபோது டெம்பரரி பெர்மிட் எதற்காகக் கொடுக்கவேண்டும்? ஏற்கெனவே நாம் 75 மைல்களுக்கு மேலே செல்லக்கூடிய பஸ்களை எடுத்தபோது அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போய், பின் சுப்ரீம் கோர்ட்டுக்கும் போய், அதன் பின்னுல் அரசாங்கம் பிறப்பித்த உத்தரவு சரியானதுதான் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னுல் இந்த மசோதாவிலே டெம்பரரி பெர்மிட் வழங்க வகை செய்யப்பட்டிருப்பதில் பொருளில்லை. ஆகவே, டெம்பரரி பெர்மிட் வழங்குவது என்பதை எடுத்துவிட வேண்டும். இனி எல்லா பஸ்களையும் எடுத்துக்கொள்வது என்று சொல்லும்போது, ஏன் தர்மபுரி மாவட்டம், நீலகிரி மாவட்டம் என்று விட்டு வைக்கவேண்டும்? ஏன் டெம்பரரி பெர்மிட் கொடுக்கவேண்டும்? இந்த முரண்பாடுகள் இருப்பதால் 16-வது பிரிவு நமது நோக்கத்தை மீறக்கூடியதான, நாம் அஞ்சத்தக்க விதமான ஒரு பிரிவாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல. 20(3)-வது பிரிவை எடுத்துக்கொண்டால் அது தொழிலாளர் சம்பந்தமாக இருக்கிறது. ஏற்கெனவே ஒவ்வொரு பஸ்ஸுக்கும் டிரைவர், கண்டக்டர் இருக்கிருர்கள், ஒரு பஸ்ஸுக்கு 'எஃபிஷியன்ஸிக்காக' இரண்டுபேர், மூன்றுபேர் போட்டிருப்பார்கள். ஆகவே, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் வரையறை இல்லாமல், ஒரு பஸ்ஸுக்கு 2½ தொழிலாளர்கள் இருந்தாலும், 3½ தொழிலாளர்கள் இருந்தாலும் எல்லோரையும் எடுத்துக்



கொள்ளவேண்டும். இல்லையென்ருல் ரிட்ரஞ்ச்மென்ட் ஏற்பட்டு, அன்எம்பிளாய்மென்ட் பிராபிளம் அதிகமாகும். We should not create unemployment. ஆகையால் தொழிலாளர்களுக்கு காம்பன்சேஷன் கொடுப்பதைப்பற்றி யோசிக்காமல் எல்லாத் தொழிலாளர்களையும் எடுத்துக் கொள்வதற்கு வகை செய்யவேண்டும்.

அடுத்து, இந்த பஸ்களுக்கு காம்பென்சேஷன் கொடுப்பதைப் பற்றி எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே 12 பஞ்சாலைகளை நாம் தேசியமயமாக்கியபோது என்ன கொள்கையை கடைபிடித்தோமோ அதே மாதிரி முறையை பஸ்களை எடுத்துக்கொள்ளும்போதும் கடைபிடிக்கவேண்டும். ஒருவருக்கு 20 பஸ்கள் இருந்தால் அதற்குத் தகுந்த முறையிலே கொடுக்க வேண்டும். 10 பஸ்கள் இருந்தால் அதற்குத் தகுந்தமாதிரி கொடுக்கவேண்டும். ஒரு பஸ், இரண்டு பஸ் என்று வைத்திருக்கிறவர்களுக்கு அந்த அடிப்படையிலே பார்த்தால் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பதாகத் தோன்றும். அப்படிப்பட்ட சிறு பஸ் முதலாளிகள் கஷ்டமான நிலையில்தான் இருக்கிருர்கள். நான் அந்த முதலாளிகளுக்கு ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். ஏதோ அவ்வப்போது 300, 400 ரூபாய் கையிலே வருகிறது என்று நினைத்து ஏமாந்துவிடாதீர்கள். சீக்கிரத்திலே ஏமாற்றம் அடையக்கூடிய நிலை உருவாகிவிடும். கேரளத்திலே அப்படி உருவாக்கப்பட்டிருக்கிறதைப் பற்றிச் சொன்னேன்.

கேரளத்தைப் பொறுத்தவரையிலே சிறு பஸ் முதலாளிகளுக்கு அதிகமாகக் காம்பன்சேஷன் கொடுத்திருக்கிருர்கள். அவர்களைப்போல இங்கேயும், ஒரு பஸ் வைத்திருப்பவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கலாம்; இரண்டு பஸ் வைத்திருப்பவர்களுக்கு 1½ லட்சம் ரூபாய் கொடுக்கலாம்; மூன்று பஸ் வைத்திருப்பவர்களுக்கு 2 லட்சம் ரூபாய் கொடுக்கலாம். இப்படி ஒன்று, இரண்டு, மூன்று பஸ்கள் வைத்திருப்பவர்களுக்கு, மற்ற விவகாரங்களைப் பற்றிப் பார்க்காமல் இந்தமாதிரியாகக் காம்பன்சேஷன் கொடுக்கவேண்டும். இப்படி மலே போகப்போக அதிகமாக பஸ் வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்கும் விகிதம் குறைத்துக்கொண்டே வரவேண்டும். அப்படிச் செய்தால்தான் சோஷியல் ஜஸ்டிஸ் இருக்கும். ஆகவே, அது ஒரு சோசியல் ஜஸ்ட்டிஸ்சாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

ஏற்கனவே நாம் செய்த தவறு வேறு இருக்கிறதே. நான் அன்றைக்குக் கொடுத்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை நீங்கள். டி.வி.எஸ்., எஸ். ஆர். வி. எஸ்., ஏ. வி. டி., பஸ்களை எடுக்கும் பொழுது அந்தப்போட்டி

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 13

இருக்கும் ஒர்க்ஷாப்பையும் எடுக்கவேண்டும் என்று சொன்னோம். அப்படி
நீங்கள் எடுக்கவில்லை. அதே மாதிரி இங்கே சிறு ஆப்பரேட்டர்ஸ்ஸுக்கு
எவ்வளவு பெரிய ஒர்க்ஷாப் இருக்கும் என்று தெரியவில்லை. மற்றும் எவ்வளவு
அன்சிலரி இன்டஸ்ட்ரிஸ் இத்தொழில் சம்பந்தமாக இருக்கின்றன. அவற்றிலே
பணிபுரியும் தொழிலாளர்களின் பிரச்சினை வரும்பொழுது அவர்களின் பிரச்சி
னைகளுக்கு இந்தத் தேசியமயம் பரிகாரம் கண்டதாக அமையவேண்டும். நாம்
எடுத்த நடவடிக்கையின் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கி
னோம் என்ற குற்றச்சாட்டிற்கு இடம் இருக்கக் கூடாது. பல பேர் தொழிற்சா
லைகளை வைத்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கவனத்தில் கொள்ள
வேண்டும்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

இன்னொரு விஷயம், நாம் தேசியமயம் ஆக்கும் பொழுது ஏற்கனவே
பி. ஆர். சி. இருக்கிறது. பி. ஆர். சி. பக்கத்திலே இருக்கக் கூடிய சிறு பஸ்களை
எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கொள்கை ரீதியாக முடிவு எடுத்தோம்.
அதைச் செயல்படுத்தாமல், இன்னமும் இந்த அரசு ஏன் தயங்கிக் கொண்டிருக்
கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதே போல், பொள்ளாச்சிக்குப் பக்கத்
திலே ஓடுகிற சிறு பஸ்ஸுகளை எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று
கொள்கை ரீதியாக முடிவு எடுத்தோம். அதுவும் இன்றைக்கு நிறைவேற்றப்
படாமல் இருக்கிறது. ஆகவே, பி. ஆர். சி. க்கு பக்கத்திலே இருக்கக் கூடிய
பஸ்ஸுகளை பி. ஆர். சியிலே சேர்ப்பதற்கும், பல்லவா ரோட்வேசை ஒட்டி
இருக்கக்கூடிய பஸ்ஸுகள் பல்லவாவிற்கு போவதற்கும் ஆவன செய்ய
வேண்டும். இந்த முறையிலே நாம் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு
கிறேன்.

கடைசியாக ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த பஸ்
தேசியமயம் ஆக்கும் பிரச்சினையே இங்கிலாந்து நாட்டிலே எப்படி வந்தது
என்றால், சிறு பஸ் முதலாளிகள் எல்லாம் ஸ்டிரைக் செய்து, அன்றைக்கு
இதைக்கொண்டு வந்தார்கள். அன்றைக்கு பார்லிமெண்டிலே நடந்த விவாதத்
தைப் பார்த்தால் We will not allow the small operators to hold
the country to ransom என்று கூறியிருக்கிறார்கள். ஆக, இந்த முறையில்
பஸ்ஸுகளை தேசியமயம் ஆக்க வேண்டுமென்று காரியங்களைச் செய்தார்கள்.
இப்பொழுது எல்லா பஸ்ஸுகளையும் "இலண்டன் பாசன்ஜர் டிரான்ஸ்
போர்ட்டிலே" தான் வைத்திருக்கிறார்கள். நம்முடைய கொள்கையின் ரீதியாக
இப்படிச் சிறு, சிறு முதலாளிகள் உருவாகி அவர்களுக்கு எந்தவித நஷ்டமும்



1973 பிப்ரவரி 13] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இல்லாத நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகத் தான் அவர்களுக்குக் கணிச
மான நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும், அதே நேரத்திலே பஸ்களையும்
படிப்படியாக எடுக்கவேண்டும் என்ற கொள்கையும் இருக்கிறது. It is the
very nagation of nationalisation. நாங்கள் சோஷலிச சமுதாயத்தை
என்று இந்த ஆட்சியினர் சொல்லும்பொழுது 5 ஆண்டு காலத்திலே படிப்படி
யாக பஸ்களை நேஷனலைசேஷன் செய்வோம் என்பதையும் ஒத்திட்டுப்
பார்த்தால், சோஷலிசத்திற்கும் இதற்கும் எந்தவிதமான சம்மந்தமும்
இடையாது என்று நான் நினைக்கிறேன். போக்குவரத்துத்துறையை அரசே
ஏற்று நடத்தவேண்டும் என்பதும், அதிலே வரும் இலாபத்தைத் தனியாருக்குக்
கொடுக்கக்கூடாது என்பதிலேயும் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்கக்
கூடாது. வெளிநாடுகளிலே, அதுவும் சோஷலிச நாடுகளிலே போய்ப்பார்ப்
போமானால் நிலைமை நமக்கு நன்றாகப் புரியும். வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர்
என்னிடம் சொன்னார், உங்கள் நாடு பின்தங்கிய நாடாமே, பஸ்ஸுக்காக
பிரயாணிகள் செலுத்தும் கட்டணத்தைக் கூடத் தனிப்பட்டவர்கள் பெற்று
அனுபவிக்கும் நிலைமை இருக்கிறதாமே என்றார். எனவே, அது ரெயில் போக்கு
வரத்து என்றாலும், ரோடு போக்கு வரத்து என்றாலும், விமானப் போக்கு
வரத்து என்றாலும் கப்பல் போக்குவரத்து என்றாலும் அது எல்லாம் தனியார்
கையிலே இருக்கக்கூடாது என்பதிலே அபிப்பிராய பேதமே கிடையாது.
அந்த அடிப்படையிலே தான் இந்த மசோதாவை நாம் பார்க்கவேண்டும்.
இந்த மசோதாவை இன்னும் கொஞ்சம் முறையாகத் தயாரிக்க வேண்டும்.
நம்முடைய "லா டிபார்ட் மெண்ட்" இன்னும் நன்றாகச் செயல்பட வேண்டும்.
It has to be toned up கடைசியிலே அது செலக்ட் கமிட்டிக்குப்
போனாலும் அது உருப்படியாகுமா என்பதிலே எனக்கு நம்பிக்கையில்லை.
There must be precision அது வள, வள என்று
நீண்டுகொண்டே இருக்கிறது. இங்கே வரும் பில்களை பொறுத்த வரையில்
வள, வள என்று இருப்பது பொருத்தமில்லை.

இந்த பில்லிலே கூட பல பகுதிகள் பலவிதமான அர்த்தம் கொடுக்கும்
வகையிலே செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இது எல்லாம் திருத்தி அமைக்
கப்பட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. இருந்தாலும் கொள்கை ரீதியாக
ஏற்றுக்கொண்டு, இதைச் சர்க்காராலே அமல் நடத்தப்பட வேண்டுமென்று
கேட்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to offer
some remarks regarding this Bill.

So far as nationalisation is concerned, our party supports nationalisation of buses, which are public utility services and such nationalisation is a welcome measure. There is no difference of opinion regarding that. But this Bill is something like a Damocle's sword as it were, and which operator would be affected is a matter which will have to be considered. The pivot of power is concentrated in the executive and executive power is likely to be used against those against whom the executive has got some axe to grind. Those people would be victimised. That is the point I am going to stress.

There are some drastic provisions in this Bill and this may be a replacement of the ordinance but ordinance will have to become law and there is no point in our arguing that this should be referred to a Select Committee. However much we may argue for it, the Government with its majority here would not yield to that. That is a foregone conclusion. I do not want to emphasise that aspect. But it would be better if the whole matter is discussed threadbare in the Select Committee so that the views of various political parties may be canalised and appropriate decisions taken. What are the salient provisions is the next point I am going to urge.

I refer to clause 4 of the Bill which deals with vesting of stage carriages, contract carriages, etc., in the Government. It says—

'It shall vest in the Government absolutely and free from all encumbrances and such property referred to in this sub-section which vests in the Government shall, by force of such vesting, be freed and discharged from any trust, obligation, mortgage, charge, lien, hire-purchase agreement or otherwise and all other encumbrances of transactions affecting such property; and any attachment, injunction or decree or order of any court restricting the use of such property in any manner shall be deemed to have been withdrawn; and any person interested shall have no claim to or in relation to such property, except a claim to the amount in respect of such property under this Act. : "

Sir, this would be opening the floor-gates of litigation. Of course, the Government have got powers to vest all property but when compensation is paid, the rights of the bus opeartors which accrued previously, that is prior to the date on which the Act is deemed to have come into force, will have to be safeguarded.





Also, there may be rights of other intermediaries which will have to be safeguarded under the law. If there are bogus rights, the Government need not listen to it. For instance, in the case of land acquisition, all the parties concerned are entitled to a share in the amount of compensation. Similarly, the amount of compensation that is determined for an operator can be equitably apportioned among the various persons concerned. So, it would be better and well advised that all legal safeguards are taken.

The next point is regarding principles and methods for determination of compensation. The 25th Amendment of the Constitution gives wide powers.

Now I refer to clause 6. If there is agreement, there is nothing to say about it. But where there is no agreement, an arbitrator will have to be appointed and the Government can nominate an arbitrator and the party interested may also nominate an assessor. These are the salient provisions that have been incorporated in clause 6 of the Bill.

Sir, the principles are set forth and how the compensation will have to be worked out is also given in the Schedule. The compensation would vary from 4 per cent to 85 per cent–which is the optimum–depending upon the number of years. These are guiding principles which the arbitrator will have to take note of. If these principles are to be borne in mind, why should other matters be delegated as is provided for in clause 32 (a) of the Bill ? There is excessive delegation of power under the rule-making powers and I think such wide rule-making powers should not be left in the hands of the executive. These powers should be incorporated in the provisions of the Bill itself so that there shall not be any room for any complaint against any officer or any arbitrator who is likely to be appointed. That is the reason why the hon. Member, Thiru James, has given notice of an amendment that the arbitrator should be the District Judge. So, it would be better if a District Judge is appointed as an arbitrator, because a seniormost person who has got a lot of experience would be in a position to deliver the goods and discharge his functions fearlessly irrespective of the pressure that would be put by the operators or by the other side.

Another point which has been referred to by the Hon. Member, Thirumathi Anandanayaki, is with regard to the payment of compensation. If the compensation does not exceed Rs. 10,000 it would be paid in one lumpsum. In other cases it would be paid in three equal annual instalments. Why not increase the amount from Rs. 10,000 to Rs. 20,000 so that the people who are affected, at least the small operators, will get the amount in a lumpsum which would enable them to start alternative industries ? That is a matter which the Government will be well advised to consider.

The next point is regarding workers. The details regarding the number of workers like drivers, conductors and supervisors who would become employees of the Corporation have been given in clause 20 of the Bill. In this conection, I want to point out that in our district many persons who had put in many years of service in the private motor companies before nationalisation, did not get employment, and whereas persons who had put in a lesser number of years of service and under-qualified got employment. So, my submission is that all those persons who are now working in the private transport companies should be provided with employment and there should be no discrimination whatsoever. It may be that some persons who have been employed by the management, may not possess the requisite technical qualifications, experience and knowledge but their rights would have to be protected. I think when the whole legislation is implemented, care would be taken to look into the various aspects of the matter.

The next point is with regard to clause 28 which bars the jurisdiction of civil courts. Of course, it has become a fashion of the day to bar the jurisdiction of the civil courts. In this connection, I wish to point out that the officers who are to deal with this matter, should act with utmost care and caution so that their award or orders will not be questioned in civil courts. Of course, the officers are also ordinary humanbeings and they are liable to have the weakness of humanbeings. When such an important legislation is being enacted, why should the jurisdiction of the civil courts be barred ? The jurisdiction of the civil courts should, on no account, be taken away. I would once again reiterate that in the matter of the implementation



of the Bill, care and caution should be exercised and the provisi-
ons of the Bill should not be used against the persons who have
been supporting the Opposition Parties. If there are victimised,
there would be discontent in the country. With these obser-
vations, I generally welcome the Bill.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): மன்ற அனுமதி பி.ப.
யுடன் இன்றைய அலுவல் முடியும்வரை நேரத்தை நீடிக்கிறேன். 1-30.

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த மசோ
தாவை பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்றார்கள்
என்றே நான் கருதுகிறேன். குறிப்பிட்ட ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும்
அவர்கள் இங்கே திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான்
முதலாவதாக நஷ்ட ஈடு என்பதைப்பற்றி ஒரு விளக்கத்தை அளித்துவிடுவது
பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். நஷ்ட ஈட்டைப் பொறுத்த
வரையில் முதலிலே நஷ்ட ஈடு என்றால், நஷ்டம் இருந்தால் தான் ஈடு செய்ய
வேண்டும். ஆனால் பஸ் தொழிலைப் பொறுத்தவரையில் நஷ்டம் இருக்கிறது
என்று யாரும் சொல்வதற்கில்லை. ஆகவே, ஈடு செய்ய வேண்டுமென்பதே நாம்
கூடுதலாக கொடுப்பது என்பதை நாம் கவனத்திலே கொள்ளவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நஷ்டம் இல்லையென்று சொன்னார்கள்.
சின்ன சின்ன பஸ்காரர்களெல்லாம் மார்வாரியிடம் ரூ. 2 லட்சம், ரூ. 3 லட்சம்
கடன் வாங்கிதான் பஸ் ஓட்டுகிறார்களே தவிர, லாபத்தை வைத்துக்கொண்டு
ஓட்டுகிறார்கள் என்று சொல்வது தவறு. கடன்கொடுத்தவர்கள் வீட்டிலே
வந்து நிற்பார்கள். நீங்கள் பஸ்ஸை எடுத்துக்கொண்டு விடுவீர்கள். அவர்கள்
கடன் கொடுக்கும் பொழுது, ½ ஏக்கர், 1 ஏக்கர் என்று பாண்டிலே கையெ
ழுத்து வாங்கியிருக்கிறார்கள். ஆகவே. அவர்களுக்கு நஷ்டம் இல்லையென்று
சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொல்வதைப் போல் இருந்தால் இந்த சட்டத்தை ஆப்பரேட்டர்கள் மகிழ்ச்சி
யாக வரவேற்பார்கள் என்று தான் நான் கருதுகிறேன். ஆனால் 900 பேர்
கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அதிலிருந்தே தெரிகிறது உண்மை.

பொதுவாக, சாதாரணமாக, ஒரு பஸ் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் கிலோ
மீட்டர் ஓடும் என்று நாம் கணக்கிடுகிறோம். அப்படி பார்க்கிறபொழுது, ஒரு
பஸ் 5 ஆண்டுகளுக்கு 5 லட்சம் கிலோமீட்டர் சாதாரணமாக ஓடும். ஒரு பஸ்

5 ஆண்டுகள், நல்ல நிலைமையிலே, கண்டிஷனிலே இருக்கும் என்று நாம் நிர்ணயிக்கிறோம். அது ஒரு காலவரையறை. அதற்குப் பின்னாலே அதை மாற்றியமைப்பதோ, திருத்தி அமைப்பதோ, ரிப்பேர் செய்வதோ, வேறுவகையிலோ, சாதாரணமாக அதை ரிப்பேர் செய்து ஓட்டுகிறார்கள். அதனால்தான் இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் ஆண்டு ஒன்றுக்கு 30 சதவீதம் தேய்மானம் தருகிறார்கள். 5 ஆண்டுகளான பஸ்கள் தேய்மான விகிதத்திலே மட்டும் 85 சதவிகிதத்தை ஓனர்கள் வைத்துக்கொள்ள முடியும். இப்பொழுது 5 ஆண்டுகளான பஸ்களுக்கு 59 சதவீதம் வேறு காம்பன்சேஷன் தருகிறோம். அப்படிப் பார்க்கிறபொழுது பஸ்ஸை மாற்றுவதற்கு வேண்டிய தேய்மான செலவையும் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், தரப்போகிற 59 சதவீதத்திலும் ஏன் அதிலேயும் 6 மாதத்திலிருந்து 5 ஆண்டுகள் வரை என்று நிர்ணயித்திருந்ததில் 85 சதவிகிதத்திலிருந்து 59 சதவிகிதம் என்று நாம் தருகிறோம். ஆகையினாலே எந்தவிதமான பாதகமும் இல்லை.

கூடுதலாக சர்வீஸ் அளித்த வண்டிகளை, குறிப்பாக 14 ஆண்டுகள் ஓடிய வண்டிகளை எடுத்துக்கொண்டால், அவை ஓட்டுவதற்கு லாயக்காக இருக்குமா என்பது ஒரு பிரச்சினை, 98.9 சதவிகிதத்தை தேய்மானமாக ஏற்கனவே பிடித்து வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் மேலும் நஷ்டஈடு தருகிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே கிரயத்தைப் பெற்றுக்கொண்டு விட்டார்கள், அதற்கும் மேலே நாம் தருகிறோம் என்பது தான் பொருள். 14 ஆண்டுகள் கழித்து பஸ்களுக்கு என்ன விகிதாசாரம் என்று பார்ப்போமானால் முதல் ஆண்டுக்கு 30 சதவிகிதம் என்று குறைத்தால் இரண்டாவது ஆண்டுக்கு 70 சதவிகிதம் என்றும் மூன்றாவது ஆண்டுக்கு 40 சதவிகிதம் என்றும், மூன்றாவது ஆண்டுக்கு 30.43 சதவிகிதம் என்றும் நான்காவது ஆண்டுக்கு 24.1 சதவிகிதம் என்றும், ஐந்தாவது ஆண்டுக்கு 16.9 சதவிகிதம் என்றும், ஆறாவது ஆண்டுக்கு 11.9 சதவிகிதம் என்றும், ஏழாவது ஆண்டுக்கு 11.9 சதவிகிதம் என்றும், எட்டாவது ஆண்டுக்கு 8.4 சதவிகிதம் என்றும், ஒன்பதாவது ஆண்டிலே 5.9 சதவிகிதம் என்றும், பத்தாவது ஆண்டிலே 4.2 சதவிகிதம் என்றும், 11 வது ஆண்டிலே 3 சதவிகிதம் என்றும், இந்த வகையிலே வருகிறது. ஆகவே, நாம் இங்கே நிர்ணயித்திருக்கிற சதவிகிதமானது, அதை விடக் கூடுதலாக, அதுவும் குறிப்பாக பழைய வண்டிகளைப் பொறுத்தவரையிலே புக் வால்யூவைப் போல 3½ மடங்கு கூடுதலாகக் கொடுத்திருக்கிறோம். அது கூட, நாம் ஏற்பாடு செய்தது கூட இதுவென்று நாங்களாக கணக்குப் போட்டதல்ல.



இதற்கு முன்னாலே 50 பேருந்துகளுக்கு மேல் உள்ள நிறுவனங்களை நாட்டுடமை யாக்குகிற நேரத்தில், டி.வி.எஸ்., ஏ.பி.டி., எஸ்.ஆர்.வி.எஸ், ராமன் அண்ட் ராமன் ஆகிய கம்பெனிகளில் பழைய வண்டிகளை அவர்கள் என்ன விலைக்கு விற்றார்கள் என்பதையும் பார்த்து, அந்த அளவுபற்றி அவர்களோடு பேசி, வெளி விலையும் இல்லாமல், புக் வால்யூவும் இல்லாமல்—அப்பொழுது அரசியல் சட்ட 25-வது திருத்தம் வரவில்லை—3½ மடங்குக் கொடுத்தால் எல்லா வகையிலும் போதும் என்பதை அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால்தான் பழைய வண்டிகளுக்குப் புக் வால்யுவைவிட, இன்கம் டாக்சிலே இருக்கிற வால்யூவைவிட 3½ மடங்கு அதிகமாகக் கொடுக்கிறோம். அதற்காகத்தான் அவற்றை ஷெடியூலிலேயே கொடுத்துவிட்டோம். இன்றைக்கு ஷெடியூலிலே இருப்பதுதான் மார்க்கெட் வால்யூ. தமிழ் நாட்டிலே மாக்கெட் இல்லை என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். வெளி விலையென்று தெளிவாகவே போட்டிருக்கிறோம். ஏன் விளக்கமாகப் போட்டிருக்கிறோம் என்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல ஒரு பஸ்ஸுக்குக் கூடுதலாகக் கொடுத்துவிட்டார்கள், இன்னொரு பஸ்ஸுக்குக் குறைவாகக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடும். எதற்கெடுத்தாலும் மார்க்கெட் வால்யூ மாறுகிறது என்று சொல்லக்கூடும். ஆகவே, எதை மார்க்கெட் வால்யூ என்று நாம் கருதுகிறோமோ அதையே ஒரு ஷெடியூலாகப் போட்டால் அதிகாரிகளோ மற்ற யாருமோ தவறு செய்யமுடியாது. compensation care be fixed by agreement. என்று இருக்கிறது. ஆகவே இஷ்டப்படி பிக்ஸ் பண்ணலாம் என்று சொன்னார்கள். அப்படி முடியாது. ஏனென்றால், ஷெடியூலில் இருக்கிற ரேட்டுக்குத்தான் அவர்கள் உடன்பாட்டிற்கு வரவேண்டும், வரமுடியும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் அரசாங்கப் போக்குவரத்து பஸ்களை எடுத்துக்கொண்டால், 45 பஸ்களை எடுத்து அண்ணா போக்குவரத்துக் கழகம் என்ற அமைப்பை சேலத்திலே அமைத்திருக்கிறோம். 45 பஸ்களுக்கு காம்பன்சேஷன் கொடுப்பதற்கு வால்யூ போட்டோம். புக் வால்யூ ரூ. 6 லட்சம் தான் வருகிறது. ஆனால் போடப்பட்டிருக்கிற இந்த விலைப்படி, கிட்டத்தட்ட ரூ. 16 லட்சம் வருகிறது. ஆகவே, புக் வால்யூவைவிட இதுதான் உண்மையானது என்பதை நாம் உணர்ந்துகொள்வோமானால், பெரிய கம்பெனிகளுக்குக் கொடுத்திருப்பதையும் பார்ப்போமானால், மார்க்கெட் வால்யூ என்று போடுவதைவிட ஒவ்வொரு வண்டிக்கும் இவ்வளவு வால்யூ என்று சட்டசபையே தீர்மானித்துவிட்டால் அதற்குப் பின்னால் எந்தவிதமான சங்கடமும் இருக்காது என்பதற்காகத்தான் இதைத் தெளிவாகப் போட்டிருக்கிறோமே தவிர வேறல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 பிப்ரவரி 13

அடுத்தபடியாக, இந்த சட்டத்திலே தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை பற்றி சொன்னார்கள். இந்த சட்டத்தைப் பொறுத்தவரையிலே நீலகிரி மாவட்டத்திலே நாம் இதை அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டோம். அங்கு இருக்கிற எல்லா தொழிலாளர்களையும் எடுத்துகூட்டிப் பார்த்தோம். நாம் போட்டிருக்கிற விகிதத்திற்குக் குறைவாகவே அது வருகிறது. ஒரு பஸ்ஸுக்கு இவ்வளவு பேர் என்று அனுமதி அளிக்கிறோமோ அந்த விகிதத்திலேதான் போட்டிருக்கிறோம். நடைமுறையிலே இருப்பதைப் பார்த்துத்தான் போட்டிருக்கிறோம். ஆகவே, இந்த சட்டத்தின்மூலம் வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று சொல்லமுடியாது. வேலை வாய்ப்புகள் நிறைய இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அது கூடும். இதை நம்பி இருக்கிறவர்கள், சிறு சிறு தொழிற்சாலை வைத்திருந்தவர்கள் எல்லாம் நசித்துப்போர்வார்கள் என்ற கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த தொழில் புரிந்தவர்கள் வெறும் பஸ்ஸுக்கு மட்டும்தான் ரிப்பேர் செய்கிறார்கள் என்று நண்பர்கள் கூறினர். லாரிகள் இருக்கின்றன, டாக்சிகள் இருக்கின்றன, ஆட்டோ ரிக்ஷாக்கள் இருக்கின்றன. இன்னும் பலவற்றை தேசியமயமாக்காமலே இருந்து கொண்டிருக்கிறோம். அவைகளையெல்லாம் ரிப்பேர் செய்வதற்குக் கூட இந்தப் பணிமனைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நாம் மறைத்தோ, மறந்தோ பேசுவது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். பொதுவாக, பொதுத் துறையிலே சரியாக நடைபெறுவதில்லையென்று சொன்னார். அதை முதலிலே சொல்லிவிட்டு பிறகு சட்டத்திற்குப் போகலாமென்று கருதுகிறேன். நாம் எடுத்து நடத்துகின்ற நிர்வாகம் சீராக அமைந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அதே நேரத்தில், நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு அது வரவில்லை யென்று சொல்வார்களானால் நான் ஏற்றுக்கொள்வேன். நம்முடைய நாட்டுடைமைப் போக்குவரத்துத் துறையிலே ஒரு பகுதி பல்லவன் போக்குவரத்துக் கழகம். ஒரு பகுதி அரசாங்கக் கழகமாக வைத்திருக்கிறோம். சென்ற ஆண்டு அதில் ரூ. 30 லட்சம் நஷ்டம். பல்லவா போக்குவரத்துக் கழகத்திலே சென்ற ஆண்டு ரூ. 1 கோடி நஷ்டம். இந்த ஆண்டு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே ரூ. 50 லட்சம் நஷ்டம் வரும். அரசாங்கத்துறையிலே இந்த ஆண்டு ரூ. 1 கோடி லாபம் வரும் ஆக மொத்தத்தில் ரூ. 50 லட்சத்திற்கு லாபம் அளிக்கக் கூடிய வகையில் நாம் போருந்துகளை வைத்திருக்கிறோம் என்று பார்க்கிற பொழுது பொதுத் துறையிலே வைத்துக்கொண்டால் எதுவும் சீர்கெட்டுப் போய்விடும் என்று சொல்வது நியாயம் அல்ல.



1973 பிப்ரவரி 13] [திரு. ச. இராமச்சந்திரன்]

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். கோட்டிலே அடிப்பட்டுப் போகும் என்ற சாபத்தைக் கொடுத்தார்கள். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் கெடுவதற்கு இன்னும் கொஞ்ச நாள் பொறுங்கள் என்று சொன்னார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சாபம் அல்ல, ஒரு எச்சரிக்கை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மிக்க நன்றி. எச்சரிக்கை கொடுத்திருக்கிறேன் என்று சொன்னார். அந்த பாண்டியன் போக்குவரத்து கழகத்தை நாம் எடுத்தபிறகு நல்ல முறையிலே நடந்து வருகிறது. முதலாளிகளுக்குத் தரவேண்டிய காம்பன்சேஷனுக்காக அவர்களிடமிருந்து நாம் பஸ்களை எடுத்து நடத்தி செலவுபோக மிச்சப் பணத்திலே, 20 லட்சம் ரூபாய்கள் கொடுத்திருக்கிறோம். அதைப்போலவேதான் சோழன் போக்குவரத்துக் கழகத்திற்காக எடுத்த பஸ்களுக்காக 11 லட்சம் ரூபாய் நஷ்ட ஈட்டிற்காகக் கொடுத்திருக்கிறோம். சேரன் போக்குவரத்துக் கழகத்திற்காக நாம் எடுத்த பஸ்களுக்காக 5 லட்சம் ரூபாய் காம்பன்சேஷனைக் கொடுத்திருக்கிறோம். இதுவரையிலும் பொதுத் துறையிலே, இந்தியாவினுடைய வரலாற்றில் பஸ்களை எடுத்தபிறகு அதிலே சம்பாதித்து மிச்சப் பணத்திலே அந்த முதலாளிகளுக்குக் கொடுத்தது இல்லை என்பதை உணர்வார்களானால் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவதன்மூலமாக எவ்வளவு வருவாய் அரசாங்கம் பெறமுடியும் என்பதற்கான ஒரு சிறந்த கணக்கை அது காட்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசியபொழுது, மாவட்டம் மாவட்டமாகப் போவதைவிட பஸ் உரிமையாளர்களின் எண்ணிக்கையை வைத்து எடுத்துக்கொண்டு வந்திருக்கலாமே என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்து பரிசீலிக்கப்படாத கருத்தல்ல ஏற்கனவே பரிசீலிக்கப்பட்ட கருத்துத்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தாமன் அவர்கள் கூறியதைப்போல் தனியார் துறையையும் அரசாங்கத் துறையையும் ஒன்றாகச் சேர்த்துவைத்துக் கொண்டு நடத்துகின்றபோது உள்ள சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

75 மைல்களுக்கு மேற்பட்ட பேருந்து வழித்தடங்களை நாம் ஏற்று நடத்த வேண்டுமென்று தீர்மானம் போட்டு அமல்நடத்தும் பொழுது அவர்கள் 70 மைல் வரையிலும் வருவார்கள். நாம் ஏற்று நடத்துவதை எதிர்த்து கோர்ட்டிற்குப் போவார்கள். இப்படிப் பல்வேறு பிரச்னைகளும், சூழ்நிலைகளும் வந்ததன் விளைவாகத்தான் இன்றைக்கு நாம் ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக் கொண்டு அந்த மாவட்டத்தில் உள்ள எல்லா வழித் தடங்களையும் எடுத்துக்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 பிப்ரவரி 13

கொண்டு அதன்மூலம் எல்லாக் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதியை திட்டமிட்டுச் செய்வதற்கு இயலும். அது மட்டுமல்லாமல் தனியார் போட்டிகள், விபரீத விளையாட்டுகள் இவையெல்லாம் நிச்சயமாக இருக்காது என்ற நிலையிலேதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். மாவட்டம் மாவட்டமாக எடுத்துக்கொள்வதைப்பற்றி ஏற்கனவே தலைமை நீதிமன்றம் வரையிலும் சிலர் போய் தலைமை நீதிமன்றமும் அது சரியான கொள்கைதான் என்று எடுத்துக் கூறியிருக்கிறது. மாவட்ட வாரியாக நாம் எடுத்துக் கொண்டால், 200 பஸ்களை வைத்து நடத்திக்கொண்டிருந்த போக்குவரத்தை அதே டிரிப்களை, அதே ஷெட்யூல்களை வைத்து 150 பஸ்களை மட்டும் வைத்துக்கொண்டே நாம் நடத்திவிட முடியும். அதன்மூலம் பொருளாதார முன்னேற்றம், சிக்கனத் தன்மை, தீமையான, தேவையற்ற தனியார் தொந்தரவுகள் எல்லாம் நீங்கிவிடும், அது மட்டுமல்ல, நம்முடைய கண்காணிப்பிலே அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் போக்குவரத்து சீரடைந்துவிடும். மக்களுக்குப் பேருதவி அளிக்கும். தேசிய மயமாக்கும் கொள்கையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நாம் எடுத்துக்கொண்ட வழித்தடங்களை, பஸ்களை நல்ல முறையிலே நடத்த முடியும் என்பதை நிரூபித்தால்தான் மக்களுடைமைத் தத்துவத்திலே ஒரு நல்ல நம்பிக்கை ஒளிவிடும்.

எல்லாவற்றையும் எடுத்துவிடுங்கள் என்று சொல்வார்கள், அப்படிச் சொல்வது எளிது. சொல்லுதல் யார்க்கும் எளிது. ஆனால் நடைமுறையிலே செய்கின்ற பொழுது ஏற்படுகிற நிலைமைகளைப் பார்க்கவேண்டும். 'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்று சொல்வார்கள். குறைந்த வழித் தடங்கள் உள்ள மாவட்டத்தை முதலில் ஏன் எடுத்தீர்கள் என்று கேட்டார்கள். அதிகமான வழித் தடங்கள் உள்ள மாவட்டத்தைத் தானே எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆங்காங்கே பல கம்பெனிகள் உருவாகியிருக்கின்றன. ஒரு சில கம்பெனிகள் 200, 300 பஸ்கள் உடையனவாக இருக்கின்றன. ஆயிரம் பஸ்கள் ஓடக்கூடிய மாவட்டங்களும் இருக்கின்றன. ஆயிரம் பஸ்கள் ஓட்டக்கூடிய கம்பெனியை எடுப்பதாக வைத்துக்கொண்டால் 1,000 பஸ்களை எடுத்து சேரன் போக்குவரத்துக் கழகத்திடம் கொடுத்தால் அது குருவித் தலையிலே பனங்காயை வைப்பதுபோல்தான் இருக்குமே தவிர, எதிர் பார்க்கும் நன்மை கிடைக்காமல் போகலாம். ஏனென்றால் அந்த அளவுக்குத் தேவையான, ஸ்டோர்கள், பணிமனைகள், கருவிகள் முதலியவை பெற்றிருந்தால்தான் அந்த முறையிலே எடுத்துக்கொள்வது சிறந்ததாக இருக்கமுடியும். குறைவாக வழித் தடங்கள் உள்ள நீலகிரி மாவட்டத்தை ஏன் முதலில் எடுத்து இருக்கிறோம் என்றால், நீலகிரி மாவட்டம் ஒரு மலைப் பாங்கான இடம், அங்கே எடுத்திருக்கிறோம் என்றால் அங்கேயுள்ள பல் முதலாளிகளுக்கு ஓரே ஒரு



1973 பிப்ரவரி 13] [திரு. ச. இராமச்சந்திரன்]

ரூட்டிலேதான் நல்ல வருமானம் வருகிறது. அதனுடைய பல கிராமங்களுக்கு வழித்தடங்களை நாம் அனுமதித்தாலும்கூட பஸ்கள் அங்கே போய்வருவதில்லை நீலகிரி சட்ட மன்ற உறுப்பினர் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். நாம் பஸ் களை மேற்கொண்டபொழுது பஸ்கள் அங்கேயில்லை, ஓர்க்ஷாப்பிலே அடைந்து கிடந்தன.

தனியார்கள் பஸ்களை ஓட்ட வில்லையென்றால் யாரும் கவலைப்படுவதில்லை, யார் கண்ணுக்கும் படுவதில்லை. ஆனால் அரசாங்க பஸ்கள் ஓடவில்லையென்றால் எல்லோர் கண்களுக்கும் தெரியும். நல்லதுதான். மக்களுக்குச் சேவை செய் கிற துறையில் பொதுத் துறையில் ஒருவிழிப்புணர்ச்சி இருக்கவேண்டும். அரசாங்கத் துறையில் இருந்தாலாவது டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் எடுத்துச்சொல்ல, ஓட்டுங்கள் என்று சொல்ல வாய்ப்பு இருக்கிறது. தனியா ரிடத்தில் இருந்தால் அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை அந்த வகையிலாவது அவர் கள் இதைப் பாராட்டியிருக்கவேண்டும். ஏடுத்த தடங்களையெல்லாம் நடத்து வதற்கு, நடத்துவதற்கு மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் போக்குவரத்து வச திகளைச் செய்துதருவதற்கு, இந்த வாய்ப்பை இந்தத் திறனை நிச்சயமாக தமிழ் நாட்டிலே உருவாக்கமுடியும். ஒரு மாவட்டத்திலே பஸ்களை எடுத்தால், மற்ற மாவட்டங்களிலே போய் கடைசி காலத்திலே காலம் தள்ளலாம் என்று பஸ் முதலாளிகள் எண்ணுவார்கள். ஆனால் அதற்காக திட்டங்களைக் குறைசொல் வது சரியல்ல.

வழித்தடங்களின் எண்ணிக்கையை வைக்காமல் அருகருகே உள்ள மாவட் டம் மாவட்டமாக கன்னியாகுமரியில் எடுத்திருக்கிறீர்கள் என்றால் அதற்கடுத் தபடி திருநெல்வேலி மாவட்டம் சென்னையில் எடுத்துவிட்டால் அடுத்தபடியாக செங்கற்பட்டு மாவட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று திரு. ஜேம்ஸ் அவர்களும் பொன்னப்ப நாடார் அவர்களும் குறிப்பிட்டார்கள். அப்படிச் செய்திருந்தால் இதைவிட பெரிய பழிபாவம் எங்களுக்கு வந்திருக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை வழித் தடங்கள் இருக்கின்றன என்ப தைப் பார்க்கவேண்டும். நீலகிரி மாவட்டத்தில் எடுத்துக்கொண்டால் அதற்க டுத்ததாக அதிகமாக உள்ள எண்ணிக்கை உள்ள மாவட்டம் தர்மபுரி மாவட்டம் என்று பஸ் ஆப்பரேட்டர்களைப் போய்க் கேட்டாலே சொல்வார்கள், போய்க் கூடக் கேட்கவேண்டியதில்லை, அவர்களே வந்துசொல்வார்கள். ஆகவே இதிலே எந்தவிதமான அன்செர்ட்டன்டிக்கும் நிச்சயமற்ற தன்மைக்கும் இதிலே இடமில்லை. எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் முதலமைச்சர் அவர்கள், அமைச்சரவை முடிவுக்கு வந்திருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 பிப்ரவரி 13

இன்னென்றையும் சொன்னார்கள். எல்லாத் தொழில்களும் இன்னும் எடுக்காமல் இருக்கும்பொழுது கேந்திரத் தொழில்களையெல்லாம் விட்டுவிட்டு இதைப் போய் ஏன் நாட்டுடைமையாக்கவேண்டுமென்று பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் கேட்டார்கள், இது ஒரு சோஷலிசமா என்று கேட்டார்கள். அந்தக் கருத்தை நான் அந்தப் பெரியவரிடமிருந்து எதிர்பார்க்கவேயில்லை. மக்களுக்குப் பயன்படக்கூடிய தொழிலை தனியாரிடத்திலே விட்டுவைக்கக் கூடாது என்பதுதான் முக்கியம். பெரிய ஆலை இருக்கலாம். சர்க்கரை ஆலை இருக்கலாம், அதை எடுத்தால் மக்களுக்குத் தெரியாது. அதன்மூலம் பப்ளிக் யுடிலிடி சர்வீஸ் எப்படி ஆகும் என்பதைப் பார்க்கவேண்டும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் தஞ்சையில் இன்னும் தனியார்கள் மின்சார நிறுவனங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் அவர்களை ஒன்றும் செய்யவில்லையே ? மக்களுக்கு நன்மை தரக்கூடிய தொழில்களை. . .

திருமதி த. ந. அனந்தநாயகி : தஞ்சாவூரிலே மின்சாரம் கொடுப்பதை 8 பேர்களிடத்தில் தனியார்களிடத்திலே விட்டுவைத்திருக்கிறீர்கள். அது ஒரு கேந்திரமான தொழில்தானே, ஏன் எடுக்கவில்லையே என்றுதான் திரு. மணலி அவர்கள் கேட்டார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆகவே, மக்களுக்குத் தேவையான தொழிலைத்தான் சராசரி மனிதர்களுக்குத் தேவையான பயன்படக்கூடிய தொழிலைத்தான் எடுப்பதிலே அரசாங்கம் அதிக அக்கறை காட்டவேண்டும். 1944-ஆம் ஆண்டிலே பயணிகள் பேருந்துகளை தேசிய மயமாக்கவேண்டுமென்று போஸ்ட்-வார் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கமிட்டியிலே தீர்மானம் போட்டார்கள். நாம் இப்பொழுது 1973 லே இருக்கிறோம். 30 ஆண்டுக் காலத்திலே 30 சதவிகிதம் தான் முன்னேறியிருக்கிறோம் என்றால் ஆண்டொன்றுக்கு ஒரு சதவீதம் தான் ஆகிறது. இந்த ரேட்டிலே சென்றால் முழுமையும் எடுப்பதற்கு இன்னும் 70 ஆண்டுகளாவது ஆகும். நாம் ஒரு புதிய முதலாளிகளின் வர்க்கத்தை, எனக்கு முன்னால் பேசிய நண்பர் கூறியதுபோல, தேவையற்ற முதலாளி வர்க்கத்தை உருவாக்க வேண்டியது அவசியந்தானா என்பதைப் பார்க்கவேண்டும்.

இந்தத் தொழிலை ஏன் இப்பொழுது எடுக்கவேண்டும், மற்ற தொழில்கள் இல்லையா ? இப்படிப் பேசியவர்கள் இந்திரா காங்கிரஸ்காரர்களும், வலது கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும்தான். ஒரு வேளை அவர்கள் ஆளுகின்ற மாநிலங்களிலே இது வரவில்லையே அதற்குள் இங்கே என்ன அவசரம் என்று இப்படிக் கேட்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அதைப்பற்றி



1973 பிப்ரவரி 13] [திரு. ச. இராமச்சந்திரன்]

நீங்கள் கவலைப்பட வேண்டாம். அண்டை மாநிலமான கேரளாவின் போக்கு
வரத்து அமைச்சர்கூட இந்த பில்லின் ஒரு காப்பியை வாங்கிக்கொண்டிருக்கி
றார்கள். அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்கள். ஆகவே, தைரியமாக
நீங்கள் இதைப் பாராட்டலாம். தேசியமயமாக்குவது நியாயம் என்று நீங்கள்
தைரியமாகச் சொல்லலாம். அந்தக் காரணத்தையொட்டி நாம் ஆளுகின்ற
மாநிலங்களில் இன்னும் ஆக்கவில்லையே, இவர்கள் ஆக்கிவிட்டால் அதையெல்
லாம் கேட்பார்களே என்பதற்காக கொண்ட கொள்கையைக் குறை சொல்வது
பொருத்தமாக இராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வட்டிக் கடைக்காரர்களைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலை
வரவர்கள் சொன்னார்கள். வட்டிக்காரர்கள் கடன் கொடுப்பது பஸ்ஸுக்கு
மட்டுமா கொடுக்கிறார்கள் ? அவர்களுக்கு எது எதிலே கொள்ளைவட்டி கிடைக்
கும் என்று நினைக்கிறார்களோ அதற்கெல்லாம் கடன் கொடுக்கிறார்கள். ஹையர்
பர்சேஸ் என்றால் என்ன ? உற்பத்தியாளர்களுக்கும், அதைப்பயன்படுத்துபவர்
களுக்கும் ஏற்பட வேண்டிய ஒப்பந்தம். தேசிய வங்கிகளைப் பொறுத்தவரை
யில் புதிய பஸ்களுக்கு மூன்றாண்டுகள்வரையில்தான், கடன் கொடுக்கிறார்கள்.
திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற அளவிற்கு இங்கே காம்பன்சேஷன்
பிரிவுகள் இருக்கின்றன. எங்கேயோ இருந்துகொண்டு யாரிடத்திலேயோ
பஸ்ஸை வாங்கிக்கொண்டு, அந்த பஸ்ஸைத் தன்பெயரிலே வைத்துக்கொண்டு,
இடைத்தரகராக, அந்த பஸ்சிலே தன் பெயரிலே வசூல் செய்யும் பணத்தை
வட்டியாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சமூக விரோதமானது,
அதற்கு இந்தச் சட்டத்திலே நிச்சயமாக இடம் இருக்காது, இருக்கவும்கூடாது,
என்பது அரசாங்கத்தின் கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

சிறிய பஸ் முதலாளிகளைப்பற்றி இங்கே பேசினார்கள். அதிலே மாண்புமிகு
உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்பொழுது பெரிய நிர்ப்பந்தத்திற்கு
இடையே வந்தது என்று சொன்னார்கள். எனக்கு ஒருவகையிலே மகிழ்ச்சி.
எவ்வளவோ நிர்ப்பந்தகளுக்கிடையில் அவர்கள் இந்தச் சட்டத்தைப் ஆதரித்
துப் பேசியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்வதற்குக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஏனென்றால் அவர்களுக்கிருக்கிற நிர்ப்பந்தத்தைப் பார்த்
தால் எனக்கிருக்கிற நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்
புகிறேன்.

சிறிய முதலாளிகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள்
ஏற்கனவே எடுத்துச் சொன்னதைப்போல முதலிலே சிறு முதலாளிகள் யார்
என்று பார்க்க வேண்டும். [illegible] பிரச்சினை. [illegible]

கிருக்கும் சட்ட அமைப்புகளின்படி சாதாரணமாக பெரிய பஸ் கம்பெனிகளாக வைத்திருக்கிறவர்கள்கூட சிறு முதலாளிகளாக ஆகின்ற நிலைமை இருக்கிறது. 5 பஸ்களுக்கு மேல் போய் விட்டால் புதிய வழித்தடங்களைப் பெறமார்க் கிடைக்காது. ஆகவே, 3 பஸ், 2 பஸ், 1 பஸ் என்றே வைத்துக் கொள்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள், பஸ்களுக்கு உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது, பினாமி இருக்கிறது என்று அரை மணி நேரம் வாதாடினார்கள் என்று கருதுகிறேன்.

இன்கம் டாக்சைப் பொறுத்தவரையில், எனக்கு முன் பேசியவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனிப்பட்டவர்களுக்கு ஒரு வருவாய் வரம்பை வைத்திருக்கிறார்கள். பிரித்து வைத்து எழுதினால் அந்த வருவாய் வரம்பிற்குள்ளேயே வந்துவிடும், நாமே அனுபவிக்கலாம் என்று பிரித்து எழுதுகிறார்கள். பத்து பஸ்களுக்கு உச்சவரம்பு கொண்டு வந்திருப்பதால், அடுத்தபடியாக 5-க்கும் கொண்டு வந்து விடுவார்களோ என்று முதலிலேயே தீர்மானம் செய்து பிரித்து எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி எழுதி வைத்தும்கூட, ஒரு பஸ் ஆப்பரேட்டர்களுக்கு கருணை காட்டக்கூடாது என்பது நோக்கம் அல்ல.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசும்பொழுது முதலமைச்சரவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு கருணைக்கு அவர்கள் நிதி என்று சொன்னார்கள். கருணைக்கு அவர்கள் நிதிதான். ஆனால் கருணைக்கும் சலுகைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை உறுப்பினரவர்கள் அறிவார்கள். கருணை காட்ட வேண்டிய இடம் எது என்பதைப் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட 50,000 குடும்பங்கள் அன்றாடக் கூலிகளாக, நிரந்தரமற்ற நிலைமையிலே, இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கேயாவது விபத்து ஏற்பட்டால் அவர்கள் குடும்பத்திற்கு பிராவிடண்ட் ஃபண்ட் கிடையாது, கிராஜுடி கிடையாது. அவைகள்தான் நம்முடைய கவனத்தை ஈர்க்கப்பட வேண்டிய குடும்பங்களே தவிர இந்தச் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்தால் தப்பித்துக் கொள்பவர்கள் யார் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று ஓரளவிற்கு வருவாய் வரக்கூடிய துறையையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்த பஸ்ஸைக்கொண்டுதான் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதல்ல. பல்வேறு தொழில்களைச் செய்கிறார்கள். உதாரணமாக விவசாயம் செய்பவர்களாக இருக்கலாம், அல்லது வேறு பணிமனைகளை வைத்திருப்பவர்களாக இருக்கலாம், இன்னும் மற்ற மற்றத் தொழில்களிலே இருக்



கலாம். அப்படியே இல்லை என்றாலும்கூட நான் ஏற்கனவே சொன்னதைப் போல, நாம் போட்டிருக்கிற நஷ்ட ஈடு ஆண்டுக்காண்டு அவர்கள் தேய்மானச் செலவு என்று எடுத்துக்கொண்டாலும் மேலும் 3½ மடங்கு அதிகம் வரும் அளவில் போட்டிருக்கிறதே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏதோ சிறிய பஸ் முதலாளிகளைக் கவனிக்கத் தவறிவிட்டோம் என்று சொல்வது சரியல்ல, முதலாளிகளில் சிறிய முதலாளி, பெரிய முதலாளி என்று பிரிப்பது எந்த வகையிலே பொருந்தும் என்று தெரியவில்லை. அந்த வகையிலே சட்டத்தை மாற்ற வேண்டுமென்று சொல்வது சரியல்ல. நாம் அரசின் பணத்தைக் கொண்டு பெறுவது பஸ்களைத்தானே தவிர, பஸ் முதலாளிகளை அல்ல. பார்க்க வேண்டியது பஸ்ஸைத்தானே தவிர, பஸ் முதலாளிகளைப் பார்க்க வேண்டுமென்றால் இந்த பஸ் முதலாளி வேண்டியவர், அந்த பஸ் முதலாளி வேண்டாதவர் என்ற பிரச்னை எழுந்தால் எந்தவிதமான பதிலும் சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், கணக்குக் கேட்க முடியாது என்று. கணக்குப் புத்தகத்தைக் கேட்டால் கொடுக்க மாட்டோம் என்று பஸ் உரிமையாளர்கள் சொல்கிறார்கள், ஏன் கணக்கு கேட்கிறீர்கள் என்று சொன்னார்கள், நல்லவேளையாக, கணக்கு கேட்கக் கூடாது என்பதை இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒத்துக்கொண்டதைப் பாராட்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கணக்குக் கேட்டால் பயப்படுகின்றவர்கள் நீங்கள் என்பது தெரியும். ஆனால் இங்கு கணக்கு புத்தகம் என்று வரும் பொழுது அடுத்த செஷனிலே கேட்கிறார்கள். ஆனால் மற்ற புத்தகங்களை ஏன் எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நஷ்ட ஈடுபற்றி மிகவும் சாமர்த்தியமாகப் பதில் சொல்கிறார்கள். சிறு முதலாளிகளிடம் பஸ்களை எடுக்கிறீர்கள். அவர்களுக்கு மொத்தமாக நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுத்து விடுங்களேன், அவர்கள் வேறு தொழில் ஆரம்பிப்பதற்கு வசதியாக இருக்கும். இன்றைக்கு 10,000 ரூபாய்க்குக் குறைவாகக் கொடுப்பது என்றால்தான் மொத்தமாகக் கொடுப் போம், இல்லையென்றால் 3 தவணை இன்ஸ்டால்மெண்ட்சில் கொடுக்கப் போகிறோம் என்றால் அது சரியா? பெரிய பெரிய முதலாளிகளுக்கெல்லாம் இலட்சக் கணக்கில் கொடுத்துவிட்டு, சிறு முதலாளிகளுக்கு இப்படிச் செய்யலாமா? [illegible] அவர்கள் வேறு தொழில்களுக்கும் மொத்தமாகக் கொடுத்துவிட்டால் [illegible] பதில் சொன்னால் பரவாயில்லை. [illegible]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்தச் சிறிய பஸ் முதலாளிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற வகையிலே, ஏதோ அவர்கள் முறையாகக் கணக்குகளை வைக்காமல் விட்டார்கள், அல்லது கணக்கே இல்லை என்று சொன்னால், அதற்காகக் காலதாமதம் செய்யக் கூடாது என்பதற்காக ஓரிஜினலாக என்ன விலைக்கு வாங்கினார்களோ, ஆண்டின் அடிப்படையிலே வைத்து அந்த வகையிலே பணத்தை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்பதற்காக இந்த நஷ்ட ஈட்டிலே இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இங்கே இதற்கு நிதி ஆதாரத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் தேசியமயமாக்கும் இந்தக் காரியத்திற்காக நாம் வங்கிகளிடமிருந்து வேண்டிய நிதியை ஏற்பாடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே போதுமான நிதியும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். எனவே, ஒரு பஸ் ஆபரேட்டர் 2 பஸ் ஆப்பரேட்டர் என்றாலுமே கஷ்டப் பட்டால் அவர்களுக்கு உடனடியாக காம்பன்சேஷன் கொடுப்பதிலே அரசுக்கு சிக்கல் இருக்காது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் பேசும்பொழுது

Is it socialistic approach?

என்று கேட்டார்கள். எனக்கேகூட கொஞ்சம் ஆச்சர்யம்தான். ஏனென்றால் இதே மன்றத்தில் முன்பு நடைபெற்றது அவர்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். 1959-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ஆம் தேதி இங்கே தனி நபர் தீர்மானமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தப் பேருந்துகளையெல்லாம் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற தீர்மானம் வந்தது. அப்பொழுது நிதியமைச்சராக மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் இருந்தார்கள்

Is it Socialistic approach

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் 1959-ஆம் ஆண்டு இந்த பஸ்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்று நீண்ட நேரம் பேசியிருக்கிறார்கள். அப்பொழுது மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால்

Is it socialistic approach?

இது 19-ஆம் நூற்றாண்டு சோஷலிசம், 16-ஆம் நூற்றாண்டு சோஷலிசம், 20-ஆம் நூற்றாண்டு சோஷலிசம் அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதை, நம்முடைய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினர் இப்பொழுது சொல்லும்பொழுது இவர்கள் அந்த நிலைக்குப்





போய்விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. நாம் நடத்தாமல் தனியாரிடம் விட்டுவிடுவதுதான் சோஷலிசமா? திரு. சி. சுப்பிரமணியம் அப்படித் தான் சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இக்கொள்கையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது இது ஒரு அர்த்தநாரீஸ்வரர் கொள்கை என்று குறிப்பிட்டுவிட்டு அர்த்தநரீஸ்வரர் என்றால் மகானுக்கு மகாத்மியத்தைச் சேர்க்குமே தவிர, மக்களுக்கு நன்மை சேர்க்காது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்தை நம்முடைய பாரத கம்யூனிஸ்டு கட்சியினர் எப்படிச் சொன்னார்கள் என்று புரியவில்லை. இதுதான் சோஷலிஸ்டிக் அப்ரோச் என்றால் அந்த சோஷலிசம் இந்தச் சர்க்காருக்குத் தேவையில்லை. இந்தச் சர்க்கார் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய சமுனடிபிக் சோஷலிசத்தை, விஞ்ஞான சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெளிவாகக் கூற விரும்புகிறேன். மேலும் இந்த மசோதாவிற்கு எந்த வகையான திருத்தமும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களால் கொடுக்கப்படாத காரணத்தால் இந்த மசோதாவை நிறைவேற்றி உடனடியாக இந்த நல்ல காரியத்தைச் செய்ய ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அன்று திரு. சி. எஸ். அவர்கள் அர்த்தநாரீஸ்வரர் கொள்கையைக் கொண்டிருந்தாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது இருக்கிற தொழிலமைச்சர் அவர்கள் ஜாயிண்ட் செக்டார் ஜாயிண்ட் செக்டர் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றாரே அது அர்த்தநாரீஸ்வரர் கொள்கை இல்லையா? அதற்கு என்ன விளக்கம்?

**திரு. என். கே. பழனிசாமி:** நான் சொன்னது எல்லா மாவட்டங்களிலும் சிறு முதலாளிகளுக்கு உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்பதுதான். இது அதிகப்படியான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். நான் என்னுடைய திருத்தத்தை சோஷலிசம் அல்ல என்று சொல்லவில்லை. வலியுறுத்தவில்லை.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு ஷரத்து வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

MR. DEPUTY SPEAKER : Now we will take the Bill clause by clause.

Clauses 2 to 5 were put and carried.

*Clause 6.*

MR. DEPUTY SPEAKER : The motion is—

"That Clause 6 do stand part of the Bill."

THIRU J. JAMES : Sir, I move the following amendment :—

"In sub-clause 1 (b) of Clause 6, for the words "a person who is, or has been, or is qualified for appointment as, a District Judge;" substitute the words "a Judicial Officer not below the rank of a District Judge."

THIRU R. PONNAPPA NADAR : Sir, I second the amendment.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் தேவையில்லை. டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் இருக்க வேண்டுமென்று அவர் சொல்லுகிறார். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாக இருக்கக் கூடியவர்தான் நியமிக்கப் படுவார் என்று விளக்கமாகப் போடப்பட்டிருக்கிறது. அவருடைய கருத்து ஏற்கனவே சட்டத்தில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : செக்ஷன் 6 ஆனது நஷ்ட ஈடு கொடுக்க வகை செய்யப் பட்டிருக்கும் செக்ஷன். நஷ்டயீட்டை எந்த முறையில் தீர்ப்பது? அக்ரிமெண்டின் ஏற்பாடு செய்யலாம் என்பது ஒரு முறை. அக்ரிமெண்டுக் கொடுப் பதற்குள்ள வாய்ப்பு வரவில்லை என்று சொன்னால் அதற்காக ஆர்பிட்ரேட்டரை நியமித்து அவர் எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்வார் என்று சப்-கிளாஸ் (பி)ல் வகை செய்திருக்கிறார்கள். ஆர்பிட்ரேட்டரை எந்த [illegible]



முறையில் நியமிப்பது என்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத் திருக்கிறேன். அரசாங்கம் தானாக ஒரு நஷ்ட ஈடு கொடுக்கிறது, அதிலே கருத்து வேறுபாடு இருந்தால் நிச்சயமாக அதை நீதிமன்றம் முடிவு செய்வது தான் நியாயம். நீதிமன்றத்தில் நீதிபதி முடிவு செய்வதற்கும் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற நபர் முடிவு செய்வதற்கும் நிச்சயமாக வித்தியாசம் இருக் கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக் கிறேன். ஒரு நபருக்கு போதுமான நஷ்ட ஈடு கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும் கூட, 25-வது அரசியல் திருத்தத்திற்குப் பின்னால் ஒரு தொகை தான் உரியது என்று சொன்னாலும் கூட, வழங்குகின்ற முறையில் நீதி வேண்டு மென்பதை வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே, அரசாங்கம் நியமிக்கின்ற தனி நபருக்குப் பதிலாக டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அளவில் நீதிமன்றத்தில் தீர்ப்பு பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கூறி என்னுடைய திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம்-6 (பி)ல்—

'where no such agreement can be reached, the Government shall appoint an arbitrator a person who is, or has been, or is qualified for appointment as, a District Judge.'

என்று இருக்கிறது. இதில் அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது? 6(இ)ல்—

'the arbitrator shall ... ... in making the award, . shall have regard to the circumstances of each case and the provisions of the Second Schedule so far as it is applicable ...'

என்று இருக்கிறது. காம்பன்சேஷனைப் பொறுத்தவரை ஷெட்யூல் இருக்கிறது. பேசி இதுதான் அட்டவணை போட்டிருக்கிறோம். காம்பன்சேஷனை டிஆர்ஓ போன்ற அதிகாரிகளைக் கொண்டு கொடுக்கிறார்கள். கட்டடமாக இருந்தால் பி.டபிள்யூ.டி. அதிகாரிகளைக் கொண்டு கொடுக்கிறார்கள். இப்படி அது அதற்கு உண்டான பிரிவிலிருந்து கொடுக்க வகை செய்யப்பட்டிருக்கிறது.

There is a Schedule. In so far as it is applicable only he can decide.

திரு. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

பிரிவுகள் 7 முதல் 33 வரை, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, "இச்சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றவேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

THIRU E. S. THIAGARAJAN : Sir, I press for a division (Then the bell rang).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, 'ஆம்' என்போர் அதிகம் என்று அறிவிக்கப்பட்டது.

THIRU E. S. THIAGARAJAN rose.

THIRU R. PONNAPPA NADAR : Sir, there is no voice against it. Ayes would have it.

DR. H. V. HANDE : Sir, on a point of order.

THIRU N. VEERASWAMY : Sir, at the time of voting there is no point of order.

DR. H. V. HANDE : Usually the convention is that only an hon. Member, who opposes the motion would demand a division. But here a mischievous device is being used and I charge the ruling party for doing so. Only a Member opposing the motion can ask for a poll * *

THIRU V. KRISHNAMOORTHY : Sir, the words used by the Hon. Member, Dr. Hande, should be expunged.

DR. H. V. HANDE : Why should it be expunged ?

THIRU V. KRISHNAMOORTHY : Are we here to hear all these rubbish things?



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்று தெரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் மேடையில் பேசவில்லை, சட்ட சபையில் பேசுகிறீர்கள். ஒவ்வொரு நேரத்திலும் அதை மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள். சட்டசபையின் அமைதியை நீங்கள் கெடுக்கிறீர்கள். பேரவைத் தலைவரின் நடவடிக்கைகளை எதிர்க்கிறீர்கள் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது சரியானதல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன * வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

DR. H. V. HANDE : How can you expunge it ? . .

MR. DEPUTY SPEAKER : The Chair can do it.

(Some hon. Members : Sir down).

* * *

DR. H. V. HANDE :

THIRU R. PONNAPPA NADAR : Sir, I can understand the Hon. Deputy Speaker asking hon. Members to resume but I cannot understand why Members should be so touchy and sensitive and ask other hon. Members to sit down. That is not a healthy practice. . .

(DR. H. V. HANDE rose.)

MR. DEPUTY SPEAKER : You please sit down.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் என்ன அன்பார்லிமென்டரி எக்ஸ்ப்ரஷன்ஸ் யூஸ் செய்தேன் ?

THIRU R. PONNAPPA NADAR : We shall not be touchy and we shall not use the words which would wound the feelings of others. I would once again appeal to the hon. Members of the House, on behalf of our party, that such incidents should not be repeated because a point of order has been raised and it is for the Chair to give a ruling . . . .

(THIRU V. KRISHNAMOORTHY rose.)

MR. DEPUTY SPEAKER : Please resume your seat. I am not allowing any point of order.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

As on 31st March 1971—

(1) Thiru K. R. Ramalingam.
(2) Thiru K. M. Kathiravan.
(3) Thiru K. Kandasamy.
(4) Thiru Sowdi S. Soundara Bharathi.
(5) Thiru V. Thavamani Thevar.
(6) Thirumathi V. P. Palaniammal.
(7) Thiru M. Marimuthu.

21. Four Returns of Assets as on 31st March 1972 submitted to the House by the Hon. Members of the Legislative Council.

22. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly (*vide* names below)—

As on 31st March 1972—

(1) Thiru V. M. Abdul Jabbar.
(2) Thiru S. Alagarsamy.
(3) Thiru K. Rajamanickam.
(4) Thiru K. R. Ramalingam.
(5) Thiru K. Kandasamy.
(6) Thiru J. Karunainathan.
(7) Thiru A. Karuppiah.
(8) Thiru Kadher Batcha (alias) Vellaichamy.
(9) Thiru V. Kartheesan.
(10) Thiru Sowdi S. Sounlara Bharathi.
(11) Thiru V. Thavamani Thevar.
(12) Thiru T. C. Thimmaraya Gounder.
(13) Thiru S. M. Durairaj.
(14) Thiru N. K. Palanisamy.
(15) Thirumathi V. P. Palaniammal.
(16) Thiru V. Palanivelu.



(17) Thiru K. Balakrishnan.
(18) Thiru C. Manniappan.
(19) Thiru R. Manickavasakam.
(20) Thiru A. R. Marimuthu.
(21) Thiru M. Marimuthu.
(22) Thiru R. R. Munusami.
(23) Thiru M. A. Latheef.
(24) Thiru S. Vadivel.
(25) Thiru C. G. Viswanathan.

@ 23. The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 2 of 1973.)

@ 24. The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973 (L.A. Bill No. 3 of 1973.)

---

@ Despatched to Members on 12th February 1973.

Dr. H. V. HANDE : You are * * *

நான் சொன்னதை எல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்வது எந்தவிதத்தில் நியாயம்?

(Many Hon. Members rose to speak)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் பேசிக்கொண்டிருக்கும் போது உட்காருங்கள் என்று சொன்னால் உட்காரவேண்டும். அதற்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் எப்போதும் விதிவிலக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். செயரைப் பார்த்து * * என்று சொல்வது . .

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். நான் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் எழுந்து நின்று பேசக்கூடாது. (டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆக்ஷன் எடுங்கள்) நான் ஆக்ஷன் எடுக்காததற்குக் காரணம் பத்திரிகைகளில் வரட்டும், நாட்டுக்குத் தெரியட்டும், இந்தப் பேரவைக்கு நீங்கள் எவ்வளவு மதிப்பு கொடுக்கிறீர்கள் என்பது மக்களுக்குத் தெரியட்டும் என்பதற்காகத்தான் அதே நேரத்தில் பேரவை உறுப்பினர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒருவர் வரம்பு மீறிப் பேசுகிறார் என்றால் அது என்ன என்பதைத் தெரியப்படுத்தாமல் குறுக்கிட்டுப் பேசுகிறீர்கள். தயவுசெய்து அப்படிப்பட்ட ஸ்டாண்டை எடுக்கக்கூடாது. டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசிய வார்த்தைகளில், நான் குறிப்பிடும் இந்த * வார்த்தைகளை பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

(Dr. H. V. HANDE : It is nothing but * * *

டாக்டர் ஹாண்டே உட்கார்ந்து கொண்டு * * என்று சொல்லக்கூடாது. உங்கள் காண்டக்ட்டைவிட, * * * கிடையாது.

Dr. H. V. HANDE : This is * *

Mr. DEPUTY SPEAKER : I name the hon. Member. He should withdraw from the House.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



Dr. H. V. HANDE : I am very glad that you have given this ruling. This is * *

(Dr. H. V. Hande then withdrew from the House)

Thiru R. PONNAPPA NADAR : Sir, one hon. Member need not be named. There is no use in our continuing to be here when an hon. Member is named. So, we are staging a walk-out.

(Then the Members belonging to the Congress (O) party staged a walk-out).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கு உச்சரித்த சில வார்த்தைகளை * * * பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். அவை பத்திரிகைகளிலோ, வானொலியிலோ, வேறு பிரசுரங்களிலோ வெளியிடப்படக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விடுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தக் கூட்டத்தொடர் இன்று இத்துடன் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 26—2—1973, திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் தொடரும். 26—2—1973 காலை 10 மணி வரை இந்த அவையை ஒத்திவைக்கிறேன். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-19 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

### 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

**Nil**

### B. *Reports, Notifications and other papers.*

20. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly (*vide* names below) :—

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

## இணைப்பு-1.

[460-ம் பக்கத்தில் 145-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

### விவர அறிக்கை

தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் 6-வது பிரிவின்படி அனுமதிச் சீட்டு பெறாமல் கேளிக்கை நிகழ்ச்சிக்கு எவரும் அனுமதிக்கப்படக்கூடாது. அனுமதிச் சீட்டு அல்லது இலவச அனுமதிச் சீட்டு இன்றி கேளிக்கை நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு எவரேனும் அனுமதிக்கப்படுவர் சேயானால், மேற்படி 6-வது பிரிவை மீறி அவ்வாறு அனுமதித்த அந்த கேளிக்கை நிகழ்ச்சியின் உரிமையாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவர், தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தாமல் ஏய்க்கும் கேளிக்கை நிகழ்ச்சிக்குச் சொந்தக்காரர் ஆகியோர் மாஜிஸ்ட்ரேட் ஒருவரினால் குற்றவாளியெனத் தீர்மானிக்கப் படுவதின் பேரில் அத்தகைய ஒவ்வொரு குற்றத்திற்காவும் ரூ. 500 வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவராவர்.

2. கேளிக்கை நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில், அனுமதிச் சீட்டு இலவச அனுமதிச் சீட்டு இன்றி எவரேனும் காணப்படுவாராயின், அவர் அந்நிகழ்ச்சியின் உரிமையாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவருக்குத் தெரிந்து அல்லது அவரது சம்மதத்துடன்தான் அனுமதிக்கப்பட்டதாக மெய்ப்பிக்காவிடில், மாஜிஸ்ட்ரேட் ஒருவரினால் குற்றவாளியெனத் தீர்மானிக்கப் படுவதன் மேல், ரூ. 100 வரையில் அபராதம் விதிக்கப்படத் தக்கவராவார்.

3. மேற்படி விதித் துறைகளை செயற்படுத்துவதற்காக, அனுமதிச் சீட்டு அல்லது இலவச அனுமதிச் சீட்டு இன்றி அரங்கிற்குள் காணப்படுபவருக்கு தண்டனை விதிப்பது தொடர்பான தமிழ்நாடு 1936-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் விதித் துறைகள் பற்றி, முக்கியமான இடங்களில், தங்களது சொந்த செலவில் விளம்பரப் பலகைகளை வைக்குமாறு திரைப்பட அரங்குகளின் சொந்தக்காரர்கள்—கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். திரைப்பட அரங்கின் சொந்தக்காரர்கள், பின்வரும் தமிழ் விளம்பரத்தையும் வெளியிடுகின்றனர் :—

" கேளிக்கை வரிச் சட்டப்படி—

(1) ஒவ்வொருவரும் டிக்கட் கேட்டு வாங்க வேண்டும்.

(2) தங்களிடம் தரப்பட்ட டிக்கட்டின் பாதியைக் காட்சி முடியும் வரை வைத்திருக்க வேண்டும்.

—கேளிக்கை வரிக் கமிஷனர் "



4. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரி, விதிகளின் 22-வது பிரிவின்படி, கேளிக்கை நிகழ்ச்சியின் உரிமையாளர், அனுமதிச் சீட்டினை பொது மக்களுக்கு வழங்குவதற்கு முன்னர் அதன் முதற் பிரதியிலும் எதிரீட்டப் பிரதியிலும் கேளிக்கை வரி அதிகாரியின் அலுவலக முத்திரையைப் பொறித்துவாங்க வேண்டும். மேலும், அவர் படிவம் II பதிவேட்டின் எல்லாப் பக்கங்களிலும் கேளிக்கை வரி அதிகாரியின் அலுவலக முத்திரையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த முத்திரையின்கீழ் அந்த அதிகாரி தேதியுடன் தனது கையொப்பமிட வேண்டும். இந்தப் படிவங்களே ஒவ்வொரு காட்சியிலும் விற்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளின் கணக்கை எழுதுவதற்குப் பயன் படுத்தப்படவேண்டும்.

5. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக, அவசியமான பணியாளர்களுடனும் வண்டிகளுடனும் கேளிக்கை வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்கும் தனிக்குழு ஒன்று மாநிலத்தில் செயல்படுகிறது. இவர்கள், கேளிக்கை நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களுக்கு திடீரெனச் சென்று சோதனையிட்டு வரி ஏய்ப்பைக் கண்டு பிடிக்கின்றனர்.

6. கேளிக்கை வரி செலுத்தாமல் மறைத்தல் அல்லது ஏய்த்தலைக் கண்டு பிடிக்க உதவக்கூடிய தகவல் கொடுக்கக்கூடிய தனிப்பட்ட நபர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒன்று உள்ளது. இத்திட்டம் 1—10—1974 வரையில் நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7. திரைப்பட அரங்கு உரிமையாளர்கள் போலி முத்திரைகளை பயன் படுத்துவதைத் தடுப்பதற்காக, ஒவ்வொரு கேளிக்கை வரி அதிகாரிக்கும் கேளிக்கை வரி அதிகாரிகள் முத்திரைகள் ஆறு வழங்கப்பட்டுள்ளன. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக உரிய காலத்திற்கு ஒருமுறை மாற்றிக்கொள்வதற் காக சில குறியீட்டுச் சொற்கள் ஒவ்வொரு முத்திரையிலும் இருக்கும்.

8. வரி ஏய்ப்பையும் முறைகேடுகளையும் கண்டுபிடிப்பதற்காக வணிகவரி அதிகாரிகள் அனைவரும் அவரவர் ஆட்சி வரம்பெல்லைக்குள் உள்ள அரங்குகளுக்குச் சென்று சோதனையிட வேண்டும் என்று சென்னை மாநகரில் உள்ள வணிக வரி அதிகாரிகள் அனைவருக்கும் உத்திரவிடப்பட்டுள்ளது. வணிக வரி அதிகாரிகள், ஒவ்வொரு திங்களும் வருவாய்த்துறைக்கு அறிக்கை அனுப்புகின்றனர். வருவாய்த் துறை வாரியம், இது தொடர்பாக வணிக வரி செய்த பணியை ஆய்வு செய்து அரசுக்கு மாதாந்திர அறிக்கை அனுப்புகிறது. அரசும் இவ்வறிக்கையைப் பரிசீலித்து தேவையானபொழுதெல்லாம் உரிய ஆணைகள் பிறப்பிக்கிறது.

9. மேலும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பதவி தரத்திற்குக் குறையாத வருவாய்த் துறை அதிகாரிகள், தலைமைக் காவலர் பதவித் தரத்திற்குக் குறையாத காவல் துறை அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி மன்றத்தைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் திரைப்பட அரங்குகளைச் சோதனையிட அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்.

According to section 6 of the Tamil Nadu Entertainments Tax Act, 1939, no person shall be admitted to an entertainment without a ticket. If any person is admitted to any place of entertainment without a ticket or pass, the proprietor of such entertainment or any person employed by him who has admitted the person in contravention of section 6 and the proprietor of any entertainments who fradulantly evades payment of any tax due under the Tamil Nadu Entertainment Tax Act, 1939, shall, on conviction by a Magistrate be liable in respect of each such offence to a fine which may extend to five hundred rupees.

2. Any person, who is found without a ticket or pass in any place of entertainment, shall, unless he proves that he was admitted to such place with the knowledge or connivance of the proprietor or any person employed by him, on coviction by a Magistrate, be liable to a fine which may extend to one hundred rupees.

3. In order to give effect to the above provisions, the proprietors of cinema theatres have been requested to put at their cost, advertisement boards at prominent places regarding the penal provisions of Tamil Nadu Entertainments Tax Act, 1939, in respect of a person found in the theatres without a ticket or a pass. A slide with the following version in Tamil is also exhibited by the operators of the cinema house.

“கேளிக்கை வரிச்சட்டப்படி.—

2. ஒவ்வொருவரும் டிக்கட் கேட்டு வாங்கவேண்டும்.

2. தங்களிடம் தரப்பட்ட டிக்கட்டின் பாதியை காட்சி முடியும்வரை வைத்திருக்கவேண்டும்.

—கேளிக்கைவரி கமிஷனர்”.



4. According to rule 22 of the Tamil Nadu Entertainments Tax Rules, 1939, the proprietor of an entertainment has to get the foils and counterfoils of the tickets impressed with the official seal of the Entertainments Tax Officer before issue of the tickets to the public. The proprietor should also get all the pages of the Form II Register sealed with the officials seal of the Entertainments Tax Officer with his dated signature appended below the seal and use only such forms for accounting the tickets sold at every show.

5. In order to check the evasion of tax, a special squad for detection of evasion of Entertainments Tax is working in the State with necessary staff and vehicles. They are making surprise inspections of the places of entertainments and detect evasion of tax.

6. There is a scheme for the grant of rewards to private persons whose information leads to unearthing of suppression or evasion of entertainments tax. The continuance of the scheme has been sanctioned up to 1st October 1974.

7. In order to prevent the use of counterfeit seals by the proprietors of cineme theatres, each Entertainments Tax Officer has been supplied with six Entertainments Tax Officer's seals, each with certain code words for changing at appropriate intervals to check evasion.

8. All Commercial Tax Officers in the City of Madras have been instructed to make periodical inspection of the theatres in their respective jurisdiction in order to unearth evasion of tax and find out irregularities. The Commercial Tax Officers are submitting report every month to the Board of Revenue. The Board of Revenue reviews the work done by the Commercial Tax Officers in this regard and submits monthly periodical report to Government. The Government also reviews the report and suitable orders are passed whenever necessary.

9. Further, officers of the Revenue Department, not lower in rank than a Revenue Inspector, Officers of the Police Department, not lower in rank than a Head Constable, and Executive Authorities of the Local Bodies have been empowered to inspect cinema theatres.

## இணைப்பு 2

[460-ம் பக்கத்தில் 144-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

தமிழ்நாட்டில் மீன் பதனிடும் நிலையங்கள் உள்ள இடங்களின் பட்டியல்—

1. துறைக்குச் சொந்தமான நிலையங்கள்.

(1) சென்னை அருகே எண்ணூர் (செங்கற்பட்டு மாவட்டம்)
(2) தூத்துக்குடி (திருநெல்வேலி மாவட்டம்)
(3) மண்டபம் (இராமநாதபுரம் மாவட்டம்)

2. தனியார் துறை—

(1) திருவாளர்கள் சதர்ன் ஸீஃபுட்ஸ் பிரைவேட் லிமிடெட்
மாண்டியத்கோர்ட்,
மாண்டியத் சாலை, சென்னை-8.

(2) திருவாளர்கள் சதர்ன்ட்ராலிங் கம்பெனி,
16, மாண்டியத் சாலை, சென்னை-8.

(3) திருவாளர்கள் வாக் இன்டர் நேஷனல்,
15, மாண்டியத் சாலை, சென்னை-8.

(4) திருவாளர்கள் மீரு இண்டர்நேஷனல்,
100, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை,
சென்னை-10.

(5) திருவாளர்கள் இண்டோ ஐஸ்லாண்டிக்ஃபிஷரீஸ் (பிரைவேட்) லிமிடெட், 41, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

(6) திருவாளர்கள் இண்டோ மரைன் ஏஜென்சிஸ்,
ராயபுரம், சென்னை-13.

(7) திருவாளர்கள் ஈஸ்ட் கோஸ்ட் மரைன் பிராடக்ட் (பிரைவேட்)
15, மாண்டியத் சாலை, சென்னை-8.

(8) திருவாளர்கள் ஈஸ்டர்ன் சீ ஃபுட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்,
எண்ணூர் கடற்கரை நெடுஞ்சாலை, திருவொற்றியூர்,
சென்னை-19.

(9) திருவாளர்கள் ராணி எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்,
72, சிமெட்ரி சாலை, சென்னை-21.



(10) திருவாளர்கள் ஃபார்ட்சூன் ஃபிஷரீஸ் (பிரைவேட்) லிமிடெட்,
80, இரண்டாவது பெருஞ்சாலை,
காந்திநகர், சென்னை-20.

(11) திருவாளர்கள் ஓரியண்ட் மரைன் பிராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பாம்பே மியூசுவல் பில்டிங் (ஆறுவது தளம்),
சென்னை-1.

(12) திருவாளர்கள் ஜே. எம். தாமஸ் & கம்பெனி,
மனை எண் 24.
88/89, சூரியநாராயண செட்டி தெரு, சென்னை-13.

(13) திருவாளர்கள் ஜார்ஜ் மெய்ஜோ,
தபால்பெட்டி எண் 5,
கடலூர்-3.

(14) திருவாளர்கள் கார்டெல் சீஃபுட்ஸ்,
தபால்பெட்டி எண்-17,
கடலூர்-3.

(15) திருவாளர்கள் அமெக்ஸ்ஃபிஷரீஸ்,
141/142, வால்டாக்ஸ் சாலை,
சென்னை-1.

*List of places where fish processing plants are located in Tamil Nadu.*

*I. Departmental plants*—

1. Ennore near Madras (Chingleput District).
2. Tuticorin in Tirunelveli District.
3. Mandapam in Ramanathapuram District.

*II. In the Private Sector*—

1. M/s. Southern Sea Foods Private Limited,
Montieth Court,
Montieth Road, Madras-8.
2. M/s. Southern Trawling Company,
No. 16, Montieth Road,
Madras-8.

*List of places where fish processing plants are located in Tamil Nadu.*—cont.

II. *In the Private sector*—cont.

3. M/s. Vak International,
   No. 15, Montieth Road,
   Madras-8.
4. M/s. Meena International,
   No. 100, Poonamallee High Road,
   Madras-10.
5. M/s. Indo-Icelandic Fisheries (Private) Limited,
   No. 41, Linghi Chetty Street, Madras-1.
6. M/s. Indo-Marine Agencies (Tamilnad),
   Royapuram, Madras-13.
7. M/s. East Coast Marine Products (Private) Limited,
   No. 15, Montieth Road, Madras-8.
8. M/s. Eastern Sea Foods Exports Private Limited,
   Ennore Coastal High Road,
   Tiruvottiyur, Madras-19.
9. M/s. Rani Exporters Private Limited,
   No. 72, Cemetry Road, Madras-21.
10. M/s. Fortune Fisheries Private Limited,
    No. 80, Second Main Road,
    Gandhinagar, Madras-20.
11. M/s. Orient Marine Products Private Limited,
    Bombay Mutual Buildings (6th Floor),
    Madras-1.
12. M/s. J. M. Thomas and Company,
    Plot No. 24, 88/89, Suryanarayana Chetty Street,
    Madras-13.
13. M/s. George Maijo,
    Post Box No. 5,
    Cuddalore-3.
14. M/s. Cordel Sea Foods,
    Post Box No. 17,
    Cuddalore-3.
15. M/s. Apex Fisheries,
    No. 141/142, Wall Tax Road,
    Madras-1.



## இணைப்பு 3

[487-ம் பக்கத்தில் 160-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

**பெண்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள கோவில்களின் விவரப் பட்டியல்.**

| தொடர் எண்ணும், கோயில்களின் பெயரும். (1) | பெண் தர்மகர்த்தாவின் பெயர்கள். (2) |
|---|---|
| 1 திரு. சுகவனேஸ்வரர் ஆலயம், சேலம். | திருமதி ஜே. குப்பம்மாள். |
| 2 திரு. நெல்லையப்பர் தேவஸ்தானம், திருநெல்வேலி. | திருமதி வாமசுந்தரம், சிவ சுப்பிரமணியம். |
| 3 திரு. நாச்சியாரம்மன் மற்றும் மாரியம்மன் ஆலயங்கள், மே. புலியூர், திருக்கோயிலூர், தென் னூற்காடு. | திருமதி பி. தனகோடி அம் மாள். |
| 4 திரு. சொக்கநாதசாமி ஆலயம், ஆல்வாய் கிராமம், உடையார் பாளையம், திருச்சி. | திருமதி நாகம்மாள். |
| 5 திரு. ஆபத்துகாத்த விநாயகர் மற்றும் திரு. சுப்ரமணியசுவாமி ஆலயங்கள், ஜெயங்கொண்ட சோழபுரம், உடையார்பாளையம். | திருமதி கருணாநிதி அம்மாள். |
| 6 திரு. பூமிகாவலபெருமாள் ஆலயம் தாழனடி, தவலை வட்டம். | திருமதி எம். இசக்கி அம்மாள் |
| 7 திரு. வெற்றிவேல் விநாயகர் ஆல யம், தேரூர். அகஸ்தீஸ்வரம் வட்டம். | திருமதி பி. வள்ளியம்மாள். |
| 8 திரு. முகுந்தம்மன் ஆலயம், சிரங்கம் மாள் தெரு, பழைய வண்ணாரப் பேட்டை, சென்னை-21. | திருமதி லட்சுமி காந்தம்மாள். |
| 9 திரு. கும்மாளம்மாள் ஆலயம், கும்மாளம்மன் கோயில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-21 | திருமதி லட்சுமி காந்தம்மாள். |
| 10 திரு. தர்மராஜா ஆலயம், நெ. 72, அண்ணாபிள்ளை தெரு, சென்னை-1 | திருமதி எஸ். கலைசெல்வி. |

| தொடர் எண்ணும், கோயில்களின் பெயரும். (1) | பெண் தர்மகர்த்தாவின் பெயர்கள். (2) |
|---|---|
| 11 திரு. ஸ்ரீநிவாசபெருமாள் ஆலயம், வெள்ளாள தெரு, புரசவாக்கம், சென்னை-7. | ராஜப்பாரதி. |
| 12 திரு. எல்லம்மன் ஆலயம், எஸ். எம். வி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. | லட்சுமி சம்பந்தம். |
| 13 திரு. கற்பக விநாயகர் ஆலயம், மார்ஷல் ரோடு, எழும்பூர், சென்னை. | திருமதி பி. கிருஷ்ணவேணி அம்மாள். |
| 14 திரு. சுவர்ண விநாயகர் ஆலயம், 273, மின்ட் தெரு, சென்னை-1. | திருமதி பட்டம்மாள். |
| 15 திரு. காசிவிஸ்வநாதசாமி ஆலயம், 27/28 கிருஷ்ணப்ப நாயக்கன் டான்க் தெரு, சென்னை-1. | திருமதி கன்னியம்மாள். |
| 16 திரு. செல்வ விநாயகர் என்கிற இல்லைகாட்டு விநாயகர் ஆலயம், 136/137 வாத முத்தையப்பன் தெரு, சென்னை-1. | திருமதி கமலம்மாள். |
| 17 திரு. கன்னியம்மன் ஆலயம், 10, நாராயணசாமி தோட்டத் தெரு, முத்தையால்பேட்டை, சென்னை-1. | திருமதி நாகம்மாள். |
| 18 திரு. கோடும்பாடி அம்மன் ஆலயம், 4/78 பிராட்வே, சென்னை-1. | திருமதி பழனியம்மாள். |
| 19 திரு. ரேணுகாபரமேஸ்வரி ஆலயம், 90, மின்ட் தெரு, சென்னை-1. | திருமதி என். எல். வசந்தா. |
| 20 திரு. ஏகவல்லியம்மன் ஆலயம், எழுகிணறு. | திருமதி வடிவாம்பாள். |
| 21 திரு. முத்துமாரியம்மன் ஆலயம், 17, புரசவாக்கம், சென்னை. | திருமதி பார்வதியம்மாள். |
| 22 திரு. கந்தஸ்வாமி ஆதி மொட்டையம்மன் ஆலயம், 18 கந்தஸ்வாமி கோயில் தெரு, கொசபேட்டை, சென்னை-12. | திருமதி அங்கம்மாள். |
| 23 திரு. தண்டு துலுகாந்தம்மாள் ஆலயம், 1/282, மின்ட் தெரு, சென்னை-1. | திருமதி லட்சுமி அம்மாள். |



| தொடர் எண்ணும், கோயில்களின் பெயரும். (1) | பெண் தர்மகர்த்தாவின் பெயர்கள். (2) |
|---|---|
| 24 திரு. வரதராஜப்பெருமாள் ஆலயம், கூத்தியாராம்பேட்டை, சீர்காழி வட்டம். | திருமதி எம். கணேஸ்பாய். |
| 25 திரு. அனுமார் கோவில், சீர்காழி வட்டம். | திருமதி கிருஷ்ணம்மாள். |
| 26 திரு. தினசாரி கோதாந்திரக்கட்டளை, திரு. விக்ரம் நாராயணப் பெருமாள் கோயிலுடன் இணைந்தது, காடளன்கோவில், சீர்காழி வட்டம். | திருமதி வி. அம்புஜத்து அம்மாள். |
| 27 திரு. துவாதிசிக் கட்டளை, திரு. கோதண்டராமஸ்வாமி கோவிலுடன் இணைந்தது, நல்லூர், சீர்காழி வட்டம். | திருமதி காமு அம்மாள். |
| 28 திரு. வா ஆஞ்சநேயசாமி ஆலயம், பட்டத்துறை, சீர்காழி வட்டம். | திருமதி எஸ். பார அம்மாள். |
| 29 திரு. ட்சணபுரீஸ்வரர் ஆலயம், தலைச்சாங்காடு, மாயவரம் தாலூகா. | திருமதி எம். பட்டம்மாள். |
| 30 திரு. ரெங்கவிஜய ராமானுஜ கூடம் நந்தவனக் கட்டளை, திரு. ஆமருவிப்பெருமாள் கோவிலுடன் இணைந்தது, தேரழந்தூர், மாயவரம் வட்டம். | திருமதி செங்கமல தாயாரம்மாள். |
| 31 திரு. கோஸ்திரி கட்டளை, வெள்ளலால் கோவில், மாயூரம் வட்டம். | திருமதி எம். செல்லம்மாள். |
| 32 திரு. இரண்டாம் காலக்கட்டளை, ஸ்ரீலெட்சுமிநாராயணப்பெருமாள் கோவிலுடன் இணைந்தது, தேரழுந்தூர் வட்டம், மாயூரம். | திருமதி சாரதாம்பாள். |
| 33 திரு. மழவேந்திரநாதஸ்வாமி ஆலயம், பாபாராஜபுரம், கும்பகோணம் வட்டம். | திருமதி எஸ். ஜானகி அம்மாள். |
| 34 திரு. செல்லபெருமாள் அய்யனார் ஆலயம், குடிதாங்கி, கும்பகோணம் வட்டம். | திருமதி சிசு பாப்பா. |

| | தொடர் எண்ணும், கோயில்களின் பெயரும். (1) | பெண் தர்மகர்த்தாவின் பெயர்கள். (2) |
| --- | --- | --- |
| 35 | கால சந்திக்கட்டளை சேர்ப்பு ஸ்ரீகாசி விஸ்வநாதஸ்வாமி ஆலயம், கும்பகோணம் வட்டம். | திருமதி தையல்நாயகி ஆச்சி. |
| 36 | திரு. சூடிக்கொடுத்தாழ்வார் ஆலயம், கடைத்தெரு, கும்பகோணம் நகர். | திருமதி ஆர். ரெங்கநாயகி அம்மாள். |
| 37 | திரு. சுப்பிரமணியஸ்வாமி ஆலயம், புதுச்சேரி, கும்பகோணம் வட்டம். | திருமதி செண்பகத்தம்மாள். |
| 38 | திரு. மாரியம்மன் கோயில், பாண்டமங்கலம், நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம். | திருமதி சோ. மங்களம். |
| 39 | திரு. சுகவனேஸ்வரர் கோயில், சேலம் நகர், வட்டம். | திருமதி ஜெ. குப்பம்மாள். |
| 40 | திரு. காசிவிஸ்வநாதஸ்வாமி மற்றும் செல்வவிநாயகர் கோயில்கள், வாழப்பாடி, சேலம் மாவட்டம். | திருமதி சொர்ணம்மாள். |
| 41 | திரு. மாரியம்மன் வகையறா கோயில்கள், கோவேரிப்பட்டி, ராசிபுரம் வட்டம், சேலம் மாவட்டம். | திருமதி நவநீதம்மாள். |
| 42 | திரு. சென்னகேசவப் பெருமாள் வகையறா கோயில்கள், தப்பக்குட்டை, சங்ககிரி வட்டம். | திருமதி ரா. கமலம். |
| 43 | திரு. புதிய காசிவிஸ்வநாதஸ்வாமி கோயில், பாண்டமங்கலம், நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம். | திருமதி மங்களத்தம்மாள். |
| 44 | திரு. கந்தசுவாமி கோயில், காளிப்பட்டி, திருச்செங்கோடு வட்டம், சேலம் மாவட்டம். | 1 திருமதி சிவகாமசுந்தரியம்மாள்.<br>2 திருமதி விசாலாட்சி அம்மாள்.<br>3 செல்வி சரஸ்வதி.<br>4 செல்வி அம்பிகா. |



| | தொடர் எண்ணும், கோயில்களின் பெயரும். (1) | பெண் தர்மகர்த்தாவின் பெயர்கள். (2) |
| --- | --- | --- |
| 45 | திரு. அருணேஸ்வரர் கோயில், ஸ்ரீ லட்சுமிநாராயணசாமி கோயில், காரியாமங்கலம், தர்மபுரி மாவட்டம். | திருமதி சிப்பம்மாள். |
| 46 | திரு. செல்லியம்மன் கோயில், அகரம், கிருஷ்ணகிரி வட்டம். | திருமதி மாணிக்கம்மாள். |
| 47 | திரு. சுப்பிரமணியசாமி கோயில், அகரம், கிருஷ்ணகிரி வட்டம். | திருமதி பாஞ்சாலை அம்மாள். |
| 48 | திரு. செல்லியம்மன், திம்மராயசாமி வகையறா கோயில், கொண்டமாண்டப்பட்டி, கிருஷ்ணகிரி வட்டம். | திருமதி முத்தம்மாள். |
| 49 | திரு. செல்லியம்மன், விநாயகர், பட்டாளம்மன், கோயில், ஆவத்துவாடி, அகரம் அஞ்சல், கிருஷ்ணகிரி வட்டம். | திருமதி நாகம்மாள். |
| 50 | திரு. திம்மராயசாமி கோயில், தெட்டஹள்ளி, கிருஷ்ணகிரி. | திருமதி மங்களம்மாள். |
| 51 | திரு. கோதண்டராமசாமி கோயில், நந்திமங்கலம், ஓசூர் வட்டம். | திருமதி கௌரம்மாள், க/பெ. வெங்கடசாமி கவுண்டர். |
| 52 | திரு. சீனிவாசப்பெருமாள் கோயில், வாலாசா வட்டம், வட ஆற்காடு மாவட்டம். | திருமதி பி. கிருஷ்ணவேணி அம்மாள். |
